241

# இந்து தேச சரித்திரம்

மூன்றும் பாகம்—ஆங்கில இந்தியா.

[ஆங்கிலேயர் வருகை முதல் கி. பி. 1805—வரை]

அண்ணமலைச் சர்வகலாசாலை சரித்திரப் பேராசிரியர்
ராவ்சாஹிப். C. S. ஸ்ரீநிவாஸாச்சாரியார் M.A., அவர்களும்

விசயநகரம் மகாராஜா கல்லூரிச்சரித்திரப் பேராசிரியர்
காலஞ்சென்ற M. S. ராமஸ்வாமி ஐயங்கார் M.A., அவர்களும்

ஆங்கிலத்தில் எழுதியதன்

## தமிழ் மொழிபெயர்ப்பு

மொழிபெயர்ப்பாளர்:

திருவல்லிக்கேணி ஹிந்து உயர்தரப்பள்ளி உதவியாசிரியர்
வித்வான். C. ஜெகந்நாதாச்சாரியார், M.A. (Hist.)
M A. (Tamil), L.T., P. O. L.

[Proficient in 'South Indian Languages and Literatures in their bearing on Ancient Indian History and Culture' and in 'Modern India and the West'.]

42
N443

ஸ வரதாச்சாரி & கம்பெனியர்ர்
16, மவுண்ட் ரோட், சென்னை

# இந்து தேச சரித்திரம்

மூன்றும் பாகம்—ஆங்கில இந்தியா.

[ஆங்கிலேயர் வருகை முதல் கி. பி. 1805—வரை]

அண்ணமலைச் சர்வகலாசாலை சரித்திரப் பேராசிரியர்

ராவ்சாஹிப். C. S. ஸ்ரீநிவாஸாச்சாரியார் M.A., அவர்களும்

விசயநகரம் மகாராஜா கல்லூரிச்சரித்திரப் பேராசிரியர்

காலஞ்சென்ற M. S. ராமஸ்வாமி ஐயங்கார் M.A., அவர்களும்

ஆங்கிலத்தில் எழுதியதன்

தமிழ் மொழிபெயர்ப்பு

மொழிபெயர்ப்பாளர்:

திருவல்லிக்கேணி ஹிந்து உயர்தரப்பள்ளி உதவியாசிரியர்

வித்வான். C. ஜெகந்நாதாச்சாரியார், M.A. (Hist.)

M.A. (Tamil), L.T., P. O. L.

[Proficient in 'South Indian Languages and Literatures in their bearing on Ancient Indian History and Culture' and in 'Modern India and the West'.]

# முன்னுரை

ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் கம்பெனியார் ஆங்கிலத்தில் பிரசுரித்த இந்து தேச சரித்திரத்தில் 'ஆங்கில ஆட்சிக் காலத்'தின் முற்பகுதியின் மொழிபெயர்ப்பேயாகும் இது. அந்த ஆங்கிலப் பதிப்பின் முகவுரையில் சரித்திர நூலறிஞராகிய ஹிராஸ் கூறியுள்ளபடி, 'அவ்வாங்கிலப் பதிப்பு உயர்தரப் பள்ளி மாணவர் நிலைக்கேற்ற தொன்றன்று' என்பது தெளிவு. அன்றியும், அவரே "இந்து தேச சரித்திரத்தில் இப்பகுதியே மிகக் கடினமானது' என்றும் முகவுரையில் குறித்துள்ளார். இவ்வுண்மைகளை மனத்திற்கொண்டு கூடிய வரையில் இம்மொழிபெயர்ப்பை S. S. L. C. பரீட்சை மாணவர் நிலைக்கேற்பப் பயன்படு முறையில் எளிய இனிய தமிழ் நடையில் யான் அமைத்துள்ளேன். மொழிபெயர்க்குங்கால், இயன்ற வரையில் பிழையின்றி யாவருக்கும் விளங்கும் வார்த்தைகளையே உபயோகித்து, மூலத்தின் பொருள் நயங்கள் சிதைவுறுதபடி எழுதியுள்ளேன். சில விடங்களில் கருதிய பொருள் நன்கு விளங்குதற்காக வழக்காற்றுச் சொற்களையும் ஏறிட்டெழுதியுள்ளேன். இந்நூலில் சேர்க்கப்பட்டிருக்கும் கால அட்டவணை கற்போர்க்குப் பெரிதும் பயன்படுமென்பது ஒருதலை. தமிழ்த்தாயிடத்துக் கொண்ட பேரன்பினால், அவளது சிறுபிச் சிறுவிரற்குக் காலாழியாயிட்ட இச்சிறு மொழிபெயர்ப்பையும் அறிஞருலகம் போற்றுமென்பது எனது நம்பிக்கை.

இந்த மொழிபெயர்ப்பில் எனக்கு உதவி புரிந்த திருவாளர். C. திருநாராயணன் M.A.,L.T., அவர்களுக்கு என் மனமுவந்த நன்றி என்றும் உரித்தாகுக.

திருவல்லிக்கேணி,
சென்னை : 18-9-44

C. ஜகந்நாதாச்சாரியார்.

# பொருளடக்கம்

முன்னுரை

அத்தியாயம்

1. இந்தியாவில் ஆங்கிலேயடச்சுக்காரர்களின் வியாபார முயற்சிகளும், பிரெஞ்சுக்காரர்களின் அதிகாரத்தொடக்கமும் ... 1—14

பகுதி. 1. ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் முதன் முதல் மேற்கொண்ட முயற்சிகள் 1

,, 2. ஆர்ச்சிலகோவில் ஆங்கில - டச்சுப் போட்டி ... 5

,, 3. இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்கள் ... 10

2. ஆங்கிலக் கம்பெனியின் வளர்ச்சி 1746 - வரை 15—35

பகுதி. 1. ஸ்டுவர்ட் வம்ச முதல்அரசர்களின் ஆட்சியில் கம்பெனியின் ஏற்றத்தாழ்வுகள் ... 15

,, 2. இந்தியாவில் கம்பெனி ஸ்தாபனங்களின் வளர்ச்சி ... 17

,, 3. 1708-ஆம் வருஷத்திய ஐக்கியத்தின் வரையில் கம்பெனியின் வரலாறு 24

,, 4. ஆங்கிலேயர்க்கும் பிரெஞ்சுக்காரர்க்கும் ஏற்பட்ட போட்டிக்கு முன்னிருந்த நிலைமை 29

3. தென்னிந்தியாவில் ஆங்கில - பிரெஞ்சுப் போட்டி - முதல் நிலை (1746—1751). ... 35—46

பகுதி. 1. ஆஸ்டிரிய வாரிசுப் போர் இந்தியாவில் பரவுதல். (1744-48) ... 35

,, 2. இருதிறத்தினர்க்கும் போரினால் விளைந்த பயன்கள். ... 39

,, 3. பிரெஞ்சுக்காரர்களின் வெற்றிகள் (1749—1751) ... 43

4. ஆங்கில -பிரெஞ்சுப் போட்டி—இரண்டாம் நிலை : (1752 - 1755.) ... 47—63

பகுதி. 1. திருச்சிராப்பள்ளியில் பிரெஞ்சுக்காரரின் அபாயம் (1752 — 54).—கர்நாடகத்தின் நிலைமை. ... 47

,, 2. கோடியுவும் புதுச்சேரி சமாதானமும்—டுப்ளே சாதித்த காரியங்கள். ... 51

,, 3. தக்காணத்தில் புஸ்ஸியிருத்தல் — திருச்சிராப்பள்ளியில் நிகழ்ந்த விவகாரங்கள். 56

5. வங்காளத்தில் புரட்சி : தென்னிந்தியாவில் பிரெஞ்சுக்காரர் இறுதியில் தோல்வியடைதல் (1757—1761). ... 64—84

பகுதி. 1. வங்காளத்தில் புரட்சி (1756-57) — பிளாசி 64

,, 2. வங்காளத்தில் கிளைவின் முதலரசாங்கம் (1757-60)-மீர் ஜாபரின் ஆட்சி 70

,, 3. தென்னிந்தியாவில் பிரெஞ்சுக்காரர் இறுதியிலடைந்த தோல்வி [1758 - 1761). ... 74

6. புரட்சியும் மாறி மாறி வந்த நவாப்புக்களும் (1760 - 1765) 84—100

பகுதி. 1. புரட்சியும் மாறி மாறி வந்த சுவாபுக்களும் (1760 - 1763). ... 84
,, 2. கிளைவின் இரண்டாம் முறை ஆட்சி (1765 - 1767). ... 90
,, 3. வங்காளத்தில் ஊழலாட்சி (1767-1772) 98

7. சென்னையில் ஆங்கிலேயரது வரலாறு : கர்நாடக மூக், மைசூரும் ... 100—116
பகுதி. 1. சென்னை அரசாங்கத்தின் கஷ்டங்கள் 100
,, 2. முதல் மைசூர் யுத்தம் (1767—69): ஹைதரின் எழுச்சி. 103
,, 3. கர்நாடக தஞ்சாவூர் விவகாரங்கள் ... 107
,, 4. இரண்டாவது மைசூர் யுத்தம் (1780-84) 111

8. வங்காளத்தில் வாரன் ஹேஸ்டிங்ஸ் ... 117—153
பகுதி. 1. ஹேஸ்டிங்ஸ் வங்காளத்தின் கவர்னர் (1772—74) ... 117
,, 2. பார்லிமெண்டார் கம்பெனி ஆட்சியில் தலையிடுதலும் ஒழுங்குமுறைச் சட்டமும் 124
,, 3. ஹேஸ்டிங்ஸும் ஆட்சி முறையும் ... 129
,, 4. மராட்டியர்கள் : அவர்கள் ஆங்கிலேயரோடிட்ட முதல் யுத்தம் ... 136
,, 5. ஹேஸ்டிங்ஸின் ஆட்சி முடிவு—அவரது குற்ற விசாரணை ... 144

9. காரன்வாலிஸ் பிரபுவும் ஸர் ஜான் ஷோரும் (1786—1798): 153—185
பகுதி. 1. மக்பர்ஸன் ஆட்சியும் பிட் இந்தியச் சட்டமும் 153
,, 2. காரன்வாலிஸும் புறத்துறை விவகாரங்களும். ... 158
,, 3. காரன்வாலிஸின் அரசியல் நிர்வாக சீர்திருத்தங்கள் - சாசுவதநிலவரி ஏற்பாடு 166
பகுதி. 4. ஸர் ஜான் ஷோரின் அரசியல் முறைமை - மராட்டியத் தலைவர்களின் கூட்டுறவு (1793—98) 175

10. வெல்லெஸ்லி பிரபுவும் (1798-1805)—ஸர் ஜார்ஜ் பார்லோவும் (1805-1807) ... 185—225
பகுதி. 1. வெல்லெஸ்லியும் துணைபுரி உடன்படிக்கை முறையும்—திப்புசுல்தானோடு போர் புரிதல். 185
,, 2. கர்நாடகத்தையும் தஞ்சாவூரையும் சேர்த்துக் கொள்ளல்—சென்னை இராஜதானி இறுதியில் உருவாக்கப்படல். ... 195
,, 3. சேர்த்துக் கொண்ட இதர நாடுகள்—வெல்லெஸ்லி செய்த இதர காரியங்கள். ... 202
,, 4. பேஷ்வின் உடன்படிக்கையும் மராட்டியரோடிட்ட போரும்—வெல்லெஸ்லி வேலையைவிட்டு நீங்குதல். ... 207
,, 5. காரன்வாலிஸும் பார்லோவும் (1805-07)-வெல்லெஸ்லியின் நோக்க முறையை மாற்றியமை. ... 218

சரல அட்டவணை 226

# இந்துதேச சரித்திரம்

## மூன்றும் பாகம்

*தற்கால இந்தியா (ஆங்கிலேயர் வருகை முதல் தற்காலம் வரையில்)*

---

## அத்தியாயம் 1

*இந்தியாவில் ஆங்கிலேய டச்சுக்காரர்களின் முயற்சிகளும், பிரெஞ்சுக்காரர்களின் அதிகாரத் தொடக்கமும்*

**பகுதி 1 : ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் முதன்முதல் தூத்தீசையில் மேற்கொண்ட முயற்சிகள்.**

இதற்கு முன்பாகத்துப் பதினேராம் அத்தியாயத்தில், இரண்டாவது பிலிப்பின்கீழ் கி. பி. 1580-இல் ஸ்பெயின் தேசத்தோடு போர்த்துகல் தேசமும் சேர்க்கப்பட்டதால், போர்த்துகீசியருடைய அதிகாரம் இழக்கே விரைவாகக் குன்றியது என்று குறிக்கப்பட்டுள்ளது. ஸ்பெயின் சம்பந்தப்பட்ட ஐரோப்பிய விவகாரங்களிலெல்லாம் போர்த்துகலும் தலையிட்டது; மேலும் பிராடெஸ்டண்டு மதத்தைச் சார்ந்த தேசங்களாகிய இங்கிலாந்து, ஹாலந்து இவைகளோடு ஸ்பெயின் செய்த போர்களில் போர்த்துகலும் ஈடுபட்டது. ஆங்கிலேயர் எலிஸபெத் மகாராணியாரை இந்தியாவோடு வியாபாரம் போக்குக்காக அனுமதிக்க விண்ணப்பித்தனர்; டச்சுக்காரரும் தமது மன்னரிடம் இம்மாதிரியே உரிமை வேண்டினர். எலிஸபெத் ராணியார் கடல் யாவருக்கும் பொது உடைமையென்றும், அதனை எந்நாட்டினரும் நற்பயன்காணப் பயன்படுத்திக்கொள்ளலாமென்றும் துணிவுடன் வெளியிட்டார். இஃது இங்ஙனே, ஸ்பெயின் போர்த்துகல் தேசங்களைச் சார்ந்த கடல்களில் காணப்படும் டச்சுக் கப்பல்கள் அனேத்தையும் கவருமாறு பிலிப் ஆணை பிறப்பித்தார். டச்சுக்காரரும் அதற்கு மாறுக எதிர்த்தனர். டிரேக் என்ற கிழ்ந்த ஆங்கில மாலுமி † மகெலன் மார்க்கமாக ஸ்பெயின் தேசத்தினர் பெற்றிருந்த வியாபாரத் தனி உரிமையை வெற்றியுற எதிர்த்தார்; இந்த டிரேக் 1580-இல் கடல் வழியாக உலகமுற்றும் சுற்றிக்கொண்டு நன்னம்பிக்கை முனைவழியாக இங்கிலாந்திற்குத் திரும்பினவர்; 1582-இல் ஆங்கிலேயர்

**ஆங்கிலேயரும் டச்சுக்காரரும் போர்த்துகல் ஸ்பெயின் தேசங்களை எதிர்த்து நிற்றல்.**

† Magellan Route.

முதன்முதல் கடல்மூலம் நன்னம்பிக்கைமுனையை அடைய விரும்பினர். 1588-இல் ஸ்பெயின் தயாரித்த † ஆர்மடா என்ற பெரிய கப்பற்படை ஆங்கிலேயரிடம் தோற்றது. இத்தோல்வி ஆங்கிலேயரது துணிச்சலை மேலும் ஊக்கியது. முதன்முதல் இந்தியாவை யடைந்த ஆங்கிலேயன் ‡ ரால்ப் பிட்ச் என்பவன். அவன் 1591-இல் திரும்பி வந்து, போர்த்து சியர் செல்வம் திரட்டிய வரலாறுகளை ஏடுத்துரைத்தான். அதே ஆண்டில் ¶ லங்காஸ்டர் என்னும் தலைவன் நன்னம்பிக்கைமுனையைச் சுற்றிவந்து, குமரி முனையைக் குறுகிப் பின் மலேயா தீபகற்பத்தை அடைந்தான். 1595-இல் § ஹூட்மன் என்பவர் தலைமையின்கீழ் ஒரு டச்சுக் கப்பற்படை கிழக்கிந்தியத் தீவுகளை (சுமத்திரா, மலேயா ஆர்ச்சிபிலகோ) அடைந்தது. இந்தக் கப்பற்படைக்கு ✞ வான் லின்ஸ்சோடன் என்பவர் வேண்டிய உதவி புரிந்தார். இவர் கிழக்கில் சில்லாண்டுகள் தங்கி யிருந்தவர்; இவர் தாம் கண்டறிந்தவைகளைப்பற்றி வெளியிட்டுள்ளார். இவ்வெளியீடு, இந்தியாவொடும் ஏனைய கிழக்குப் பிரதேசங்களோடும் கப்பற் போக்குவரத்து செய்பவர்க்குச் சிறந்த வழிகாட்டியாகும். ஹூட்மனுக்குப்பின் பல டச்சுக்காரர்கள் தங்கள் கப்பற்படைகளுடன் வரலாயினர். இங்ஙன் 1601-க்குள்ளேயே மகெலன் ஜலசந்தி மார்க்கமாகவோ நன்னம்பிக்கைமுனை மார்க்கமாகவோ இந்த டச்சுக்காரர்கள் பதினேந்து பிரயாணங்கள் செய்துவிட்டனர்.

**கிழக்கு அடைய அவர்கள் முதலில் செய்த முயற்சிகள்.**

லங்காஸ்டரின் தலைமையின்கீழ் வந்த கப்பற்படை நிகோபார், பினாங் தீவுகளை அடைந்தது; அது திரும்பின மூவாண்டுகளுக்குள், மேற்கொண்ட மற்றொரு முயற்சி வீணாயிற்று. 1599-இல் மீண்டும் பிரயாணம் செய்ய எண்ணமிட்டனர். ஆனால் அப்போது ஸ்பெயின் தேசத்தோடு இங்கிலாந்து சமாதானத்தை நாடி யிருந்ததால், அதற்கு இடையூறு விளைக்குமென்று எலிஸபெத் அஞ்சவே, அந்தப் பிரயாணம் விடு பட்டது. மறுபடியும் 1601-இல், லங்காஸ்டர் இரண்டாந்தரம் ஒரு கப்பற்படையுடன் கிழக்குக்கு வந்தான். இதற்குள் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி * ஒரு $ அரசப் பட்டயத்தின் ஆதரவினால் நிறுவப்பட்டது. அது "இலண்டன் நகர

**ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் தோற்றம். (1599-1600)**

---

† Armada. ‡ Ralph Fitch. ¶ Captain Lancaster. § Houtman
✞ Van Linschoten. $ Royal Charter.

* கிழக்கிந்தியக் கம்பெனியானது பாதுகாப்புள்ள் செய்யப்படும் பெருத்த கப்பல் வியாபார வகை (Type of armed Seatrade) யினின்று கிளைத்ததாகும். இது எலிஸபெத் காலத்திய கப்பல் முயற்சிகளின் கட்டைப் பருமனாகும். இதற்குமுன் எற்பட்டது லவாண்ட் (Levant) அல்லது துருக்கி கம்பெனி எனப்படும். கிழக்கு இந்திய கம்பெனியை முன்னோடச் செய்தவர்களில் பலர் லவாண்ட் கம்பெனியில் வேலையிலிருந்தவர்கள். இதற்குக் கிழக்கிந்திய கம்பெனியின் முதல் கவர்னராகிய சர். தாமஸ் ஸ்மித் (Sir Thomas Smythe) என்பவரே எடுத்துக்காட்டாவர். ஆங்கிலேயக் கம்பெனியை நிறுவியதற்கு முக்கிய காரணங்கள் பின்வருமாறு:—(1) ஸ்பெயினது நடைமுறையாலும் போர்களினாலும் ஆண்ட் வெர்பின் (Antwerp) வியாபாரம் குன்றவே ஆங்கில வியாபாரத்துக்கு முட்டுப்பாடு உண்டானது. (2) ஸ்பெயின் தேசத்தினர் ஜிப்ரால்டர் ஜலசந்தி மார்க்கத்தில் வரவொட்டாமல் தடுக்கவே, லவாண்ட் கரையொடு வியாபாரஞ்செய்யப் புதுமார்க்கம் கண்டு பிடிக்க வேண்டியதாயிற்று. இதனால் ஆங்கிலேய லவாண்ட் கம்பெனியின் சீர்மை ஒடுங்

வியாபாரிகளும் கவர்னரும் ஒன்றிய கிழக்கிந்திய வியாபாரச் சங்கம்" எனப் பெயர்பெற்றது. இந்து பஸிபிக் மஹா சமுத்திரங்களின் வழியாக, ஸ்பெயின் போர்த்துகல் தேசத்தினர் வசமுள்ள பிரதேசங்கள் நீங்கலாக, அச்சங்கம் வியாபாரம் செய்யும் தனி உரிமை பெற்றது.

1599-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் இக்கம்பெனியின் முதற் கூட்டம் நடைபெற்றது. 1600-ஆம் வருடத்திய கடைசி தினத்தன்று மகாராணியார் பட்டயத்தில் கையொப்ப மிட்டனர்; கம்பெனியை மேற்பார்வையிடும் பொறுப்பு, வருஷந்தோறும் கம்பெனியின் பங்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 24 அங்கத்தினர்க ளடங்கிய ஒரு கமிட்டியினிடமும், அக்கமிட்டியாரால் நியமிக்கப்பட்ட சபைத் தலைவரிடமும் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் காலவாய்ப்பு சரிவர அமையவில்லை; முதற்பணம் இழப்பும் அரிதாயிற்று. 1601-ஆம் வருஷத்திய பிரயாணத்துக்கு வேண்டிய வைகளைத் தயாரிப்பதற்கே மிக்க கஷ்டம் விளைந்தது. 1604-இல் ஸ்பெயினுடு சமாதானம் ஏற்பட்டபோதிலும், இந்திய வியாபாரத்தில் ஆங்கிலேயருக்குள்ள பங்குரிமையை அது ஒப்புக்கொள்ளவில்லை.

**தனி வியாபார காலப் பகுதி.**

முதன்முதலில் கம்பெனி தனித்தனியாகவே கப்பல்களைச் செலுத்தி வியாபாரம் செய்தது. ஒவ்வொரு † தனி வியாபாரமும் முதலுக்குப் பணமீந்த ஒரு சிறு குழுவினரால் நடத்தப்பட்டது. அதனாலேற்பட்ட இலாப நஷ்டங்களைத் தங்களுள் பங்கிட்டுக்கொண்டபின் அக்குழுவினர் தாமாகவே அவ் வியாபாரத்தை நிறுத்தினர். இத்தகைய முறைமை 1612-வரை நிலவியது; ஆனால், இந்தியா வெகு தொலைவில் இருப்பதாலும், வியாபாரத்தை முடிவு கட்டுவதில் ஏற்பட்ட காலதாமதத்தாலும் இந்தத் தனித்தனி வியாபாரங்கள் ஒன்றை யொன்று அடுத்தடுத்து வரலாயின. இது ஒரு குறைபாடாகும். ஏனெனில், ஏக காலத்திலேயே பல ஏஜெண்டுகள் வியாபாரஞ்செய்யத் நேரிட்டபடவே, அவர்கள் ஒருவரோடொருவர் போட்டியிட்டுப் பகைமைகொண்டு சண்டையிடலாயினர். 1612-க்குப் பிறகு ‡ கூட்டுப்பங்கு முறைமை மேற்கொள்ளப்பட்டது. இம்முறைமைப்படி குறிப்பிட்ட வருடங்கள்வரை பல வியாபாரப் பிரயாணங்களைத் தொடர்பாகச் செய்வதற்குக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. ஆயினும் இக்கூட்டுப்பங்குமுறைமையாளரும் தனிப்பட்ட வியாபாரத்தைப்போலவே, இலாபங்களைப் பங்கிட்டபின் தத்தம் வியாபாரங்களை நிறுத்திவிட்டனர். இம்முறையிலும் பல வியாபாரங்கள் அடுத்

**நிலையற்ற கூட்டுப் பங்குமுறை.**

---

† Separate Voyages ‡ Principle of Joint-Stock.

யைத்து. (3) கத்தோலிக் தேசங்களோடு தேசிய சமய வெறுப்புக் கொண்டமை; லின்ஸ்சோடன், பிட்ச் இவர்கள் செய்த பிரயாண வரலாற்றுப் பதிப்புகள் கிழ்திசை வியாபாரத்தால் உண்டாம் செல்வப் பெருக்கை வெளிப்படுத்தியமை; அநேக செல்வம் நிறைந்த போர்த்துகீயக் கப்பல்கள் பிடிபட்டமை. (See W. W. Hunter—A History of British India, Vol. I. Chap. VI. The Cambridge History of India, Vol. V. Chap. IV. Ralph Fitch, by J. Horton Ryle; and W. R. Scott: The Constitution and Finance of English, Scottish and Irish Joint-Stock Companies to 1720, Vol. II, Section V, Division I, pp, 89, et seq; and Ballard: Rulers of the Indian Ocean.)

தடுத்து மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு கூட்டுறவும் தன்னலியன்ற வரை பணம் சம்பாதிக்கப் பார்த்தது. நீடிய பெருமுயற்சியை மேற்கொள்ளத் தக்க வசதிகள் கிடைக்கவில்லை.*

ஆங்கிலேயருடைய முயற்சிகள் வீணுயினமை போலவே, டச்சுக்காரரும் இந்தியாவிற்கு வடகிழக்கு மார்க்கமாக வருவதற்குச் செய்த முயற்சிகள் பயனற்றுப் போயின. பின்பு வான்ஹூட் மீன் ஒரு கப்பற்படையோடு வந்தான். அவனது முயற்சி வெற்றிபெறவே, 1602-இல் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி தோன்றியது. அது இந்தியாவோடு வியாபாரம் செய்தற்கு ஏற்பட்ட பல கம்பெனிகளின் ஐக்கியத்தாலாகியது. இந்த ஐக்கிய டச்சுக் கம்பெனி பெருத்த முதற் பணத்தையும் தக்க வசதிகளையும் கொண்ட பலத்த சங்கமாகும். இதற்கு ஹாலந்தின் † ஸ்டேட்ஸ் ஜெனரல் ஊக்கமோடு உதவி புரிந்தது § இது ஹாலந்து தேச மந்திரியாகிய ‡ ஓல்டன்பார்னவெல்ட் என்பவரால் வலிவுற்றதது. இதற்கு 21 வருஷங்கள் கிழக்கொடு வியாபாரம் செய்யும் தனியுரிமை அளிக்கப்பட்டது. டச்சு அரசியல், கம்பெனியின் டைரக்டர்களைத் தனக்கு அடங்குமாறு செய்து, அதன் கணக்குக்களை மேற்பார்வையிட்டது. மேற்றும் பிறநாடுகளைப் பிடிப்பதற்கும் குடியேற்றத்திற்கும் கம்பெனிக்கு அதிகாரம் அளித்தது. இவ்விதமாக ஆரம்பத்திலேயே டச்சுக் கம்பெனி சண்டையிடவும், சமாதானம் செய்யவும், அயல்நாட்டுக்கப்பல்களைக் கவரவும், குடியேற்றம் செய்யவும், கோட்டைகள் கட்டவும், நாணயங்கள் அடிக்கவும் உரிமை பெற்றது. ஆதலால் அது வியாபாரத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. டச்சுக்காரரின் தேசியவுணர்ச்சி, ஒற்றுமை, சுயேச்சைகளுக்கு இக்கம்பெனியே சான்றாகும்.

**டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியும், அதன் வலிமையும்.**

இதற்கு மாறுக ஆங்கிலக் கம்பெனி சில பிரத்தியேக வியாபாரிகளின் கூட்டினால் எளிய முதலொடு நடத்தப்பட்டது; ஆங்கில அரசும் நல்லுதவி புரியவில்லை. தனிப்பட்ட வியாபாரப் பிரயாணங்களாலும், சாசுவதமற்ற கூட்டுறவுமுறைமையாலும் விளையும் தீங்குகளுக்கு அது உள்ளாயிற்று. அரசப் பட்டயத்தால் மிக நெருக்கப்பட்டது; அடிக்கடி அரசும், பிரிவிகவுன்சிலும் அதன் விவகாரங்களில் தலையிட்டன. பெரும்பாலும் ஒவ்வொரு பிரயாணத்திற்கும் போதிய முதல் இல்லை; 1605 முதற்கொண்டே ¶ **'கள்ள வியாபாரிகள்'** எனப்படுவோரால் விபத்து நேரத்தொடங்கியது; இவர்கள் கம்பெனியின் தனி உரிமைக்கு மாறுகத் தான்தோன்றியாக வியாபாரஞ்செய்தனர். இவர்களிற் பெரும்பாலோர் மேற்கொண்ட பலவகைக் கொள்ளைகளால் ஆங்கிலேயரிடத்து இந்தியர் வைத்திருந்த மதிப்பு குறைந்தது.

**ஆங்கிலக் கம்பெனியை விட இதன் மேன்மை**

---

* See Hunter Vol. I, pp. 275-76 and 365; and Beckles Willson—Ledger and Sword Vol. I, pp. 67 and 101. † States-General. ‡ Oldenbarnevelt. § The Cambridge History of India, Vol V PP 28-29; and Moreland: From Akbar to Aurangzib: Chap I. Sec 2: "1608 முதல் டச்சுக் கப்பற்படைகள் சண்டை செய்யவும் வியாபாரம் செய்யவும் வெளிக்கிளம்பின.....முதலில் போர்த்துகீசியரோடு போட்டு கொண்டு வியாபாரம் செய்து வந்த டச்சுக்காரர்கள் (இது முதற்கொண்டு) அவர்களின் வியாபாரத்தினின்றும் ஒட்டத் திராளித்தனர்." ¶ Interlopers.

கம்பெனியின் அமைப்பு முறையும் பல ஊழல்களைக் கொண்டது. தனிப்பட்ட வகையிலோ, கூட்டுறவு வகையிலோ வியாபாரம் செய்ய முன் வந்தவர்கள் கம்பெனி டைரக்டர்களோடு சச்சரவிட்டனர்; கம்பெனிக்கும் கட்டணம் செலுத்தும் குழுவினர்க்கும் ஒன்றிய மனப்பான்மை இல்லை.

**ஆங்கிலக் கம்பெனியின் குறைபாடுகள்**

கம்பெனி மேற்கொண்ட முறைகளில் பல—உதாரணமாக, நாட்டினின்று பொன்னை ஏற்றுமதி செய்து செல்வத்தை வரவழைச்செய்தல் போல்வன—உறுதியாக எதிர்த்துப் பழிக்கப் பட்டன. ஆங்கிலக் கம்பெனியின் பட்டயம் அரச விருப்பாளர்களின் சூழ்ச்சிகளால் காக்குண்டது; அன்றியும், அரசு அளித்த வியாபார உரிமைப்பத்திரங்களைப் பெற்ற ஸ்காட்லாந்து தேசத்தினர், ஆங்கிலக் கம்பெனியின் பட்டயம் தம்மைக் கட்டுப்படுத்த வில்லை எனக் கூறி அதனைப் பயனில்லையாக்கினர்.

## பகுதி 2: ஆர்ச்சிபிலகோவில் ஆங்கில—டச்சுப் போட்டி.

1603 முதல் போர்த்துகீசியருடைய அதிகாரத்தை ஒழிக்க டச்சுக்காரர்கள் பகிரங்கமாகத் தொடங்கினர். இவர்கள் போர்த்துகீசிய கப்பற் படைகளைத் தோற்கடித்து, அவர்களது அநேக வியாபாரக் கப்பல்களைக் கைப்பற்றி, ஆர்ச்சிபிலகோவில் நடக்கும் வாசனைத் திரவிய வியாபாரத்தில் தனி உரிமை பெற எண்ணினர். ஏனெனில், இந்திய வியாபாரம் அவ்வளவு உயர்வாகக் கருதப்படவில்லை. இலவங்கம் ஜாதிபத்திரி, ஜாதிக்காய் இவைகளின் வியாபாரத்தில் தனி உரிமை பெறுவதே இவர்களது அடிப்படையான கொள்கையாகும். போட்டியிடுதலால் போட்டியிடும் அனைவரும் அழிந்தொழிகின்றன ராதலின், ஆங்கிலேயரை எப்படியாவது † ஸ்பைஸ் தீவுகளில் வரவொட்டா வண்ணம் டச்சுக்காரர் தடுக்க முயன்றனர். ‡ 1610-க்குள் ஆர்ச்சிபிலகோவில் டச்சுக்காரர் தலை

**வாசனைத் திரவிய வியாபாரத்தில் டச்சுக்காரரின் தனி உரிமை**

---

† Spice Islands. ‡ மூர்லாண்டு (Moreland) சொல்வதாவது:—"தற்காலத்தில் வாசனைத் திரவிய வியாபாரத்தைப் பற்றிச் சிறிதேனும் ஆசியாவில் கேட்கப்படாதிருப்பு, அவ் வியாபாரத்திற்கு எவ்வளவு சிறப்பு ஒரு காலத்து இருந்தது என்பதை நோக்கித் தற்காலத்தில் சரித்திரம் கற்போர் அதிசயிக்கலாம். நம் நாட்களில் வாசனைத் திரவியங்களே ஆசியா ஐரோப்பாவிலிடை நிலவியவியாபார இணைப்புக்குக் காரணமாகும். குளிர்காலத்தில் உபயோகப்படும்படி. சேகரித்துவைத்த மாமிசங்களைக் கெட்டாமல் பாதுகாக்க மிளகு, இலவங்கப்பட்டை, இலவங்கம், ஜாதிபத்திரி, ஜாதிக்காய் முதலியவைகளுக்குப் பெருத்த கிராக்கி ஏற்பட்டது; தவிரவும், அக் காலமக்கள் அவைகளை மிக விரும்பினர்; இவ்வனைத மேல்நாட்டு விவசாய மாறுதல்களாலும், குளிர்கால முழுதும் புதிய மாமிசங்கள் கிடைக்குமாறு செய்த ஏற்பாடுகளாலும், சமையல் முறையில் ஏற்பட்ட மாறுதல்களாலும், வாசனை யூட்டிய பண்டங்களுக்குப் பதிலாகத் தித்திப்பு வகைகளைப் புகுத்தியதாலும், வாசனைத் திரவியங்களுக்கிருந்த கிராக்கி சிறிது சிறிதாகக் குறைந்தது. இவ்வனைத்தும் ஏற்பட்ட கிராக்கி மாறுதலே டச்சுக் கம்பெனியின் இலாபக் குறைவிற்கு ஏதுவாகும் என்று 18-ஆம் நூற்றாண்டு ஆசிரியன்மார் கூறுவர். டச்சுக்காரரின் வாசனைத் திரவியத்துத் தனி உரிமையின் மதிப்பும் குறைவுபட்டது; எவ்வினும், நம்முடைய காலமாகிய 17-ஆம் நூற்றாண்டு முடியவும் அதற்குச் சிறிது பின்பும், உலக வியாபாரத்தில் இந்தத் தனி உரிமையும் ஒரு முக்கியஸ்தானத்தை வகித்து வந்தது. இந்தத்தனி உரிமையைப் பெறுவதில் ஏற்பட்ட பெருத்த பணச்செலவு ஒரு பெரிய நல்ல சேமதனமாகக் கருதப்பட்டது." பக்கம்—21.

"மொலுக்கஸ்தீவின் வாசனைத் திரவிய வியாபாரம் இந்திய உலகிற்கு அளிக்கப்பட்ட ஒரு பெரும் பரிசாகக் கருதப்பட்டது."—P. Geyl in the chapter on 'The Dutch in India,' in the Cambridge History of India, Vol. V. P—81.

யோங்கி கின்றனர். இந்தியாவிலும் அவர்கள், சோழமண்டலக்கரை (கிழக்குக்கரை)யில் மசூலிப் பட்டினத்திலும் பிற விடங்களிலும், பண்டக சாலைகளை அமைத்தனர். அவர்களுக்குப் போர்த்துகீசியர் எதிரிகளாயினர்; சுமத்ரா, ஜாவாத்தீவுகளோடு வியாபாரத்திலிறங்கிய ஆங்கிலேயரும் கொடிய விரோதிகளாயினர். போர்த்துகீசியரிடமிருந்த கப்பற்பலம் குன்றிய போதிலும் அவர்கள் கைக்கொண்ட நிலப் பகுதிகள் அவர்கள் வசமே யிருந்தன. ஆங்கிலேயர் மனவுக்கத்தில் குறைவற் றிருப்பினும், போகிய முதலில்லாமையாலும், தாய் நாட்டுதவி கன்று கிடைக்கப் பெறுமையாலும் தவித் தனர். ஜேம்ஸ் (I) அரசன் தன் மகனுக்கு ஸ்பெயின் தேசத்தரசன் மகளை மணம் புரிவிப்பதில் பெரு விருப்பினனாய் ஹாலந்தோடு வெளிப்படையாகப் பகைமை பாராட்டினன். அன்றியும், 1609-இல் ஸ்பெயின் தேசத்தவரோடு டச்சுக்காரர் சமாதானம் செய்து கொண்டதால், அவர்கள் (டச்சுக்காரர்கள்) ஆங்கிலேயரோடு ஸ்பைஸ் தீவுகளில் தீவிரமாகப் போட்டியிட அவகாசம் கிடைத்தது.

**வாசனைத் திரவிய வியாபாரத்தில் ஆங்கில—டச்சுப் போட்டி.**

ஐரோப்பாவில் இங்கிலாந்தும் ஹாலந்தும் சமாதானத்துடனிருக்கக் கீழ்திசையில் அவைகளுக்குள் தொலையாப் போர் நடந்து வந்தது. 1614-இல் இருதிறத்தினரும் தமக்குள் உள்ள சச்சரவை நிறுத்தச் சம்மதித்தனர். அவரவர்கள் ஜெயித்த இடங்களும், கண்டுபிடித்த இடங்களும் அவரவர்க்குச் சொந்தமானவையென்றும், போர்த்து கல் ஸ்பெயின் தேசங்களோடு இடும்போரில் இருதிறத்தினரும் ஒரு சேரக் கலந்துகொள்ளவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் இந்த † இணக்கம் பலனளிக்கவில்லை. ஏனெனில், 1619-இல் ஆங்கிலேயர் தங் களுக்குப் பிரதிகூலமாகவே டச்சுக்காரரோடு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று. இந்த ஒப்பந்தத்தின்படி சோழமண்டலக்கரையி லுள்ள ‡ பழவேற்காட்டொடும் ஜாவாதீவொடும் செய்யும் வியாபாரத்தில் பங்குரிமையும், மொலுகஸ்தீவின் வாசனைத் திரவிய வியாபாரத்தில் மூன்றி லொருபங்குரிமையும் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. ஆங்கிலேயர் கிழக்கி லுள்ள டச்சுக்கோட்டைகளின் காவலரது பராமரிப்புக்காகப் பணம் செலுத்தவேண்டும்; இதனால் ஆங்கிலேயர் தம் அழிவைத் தாமே தேடினர் டச்சுக்காரரோ ஜனத்தொகையிலும் கோட்டைக்காவலிலும் ஆங்கிலேயரி னும் சிறந்திருந்ததனால் அவர்கள் ஆர்ச்சிபிலகோவில் ஆங்கிலேயரை அவ மதிக்கலாயினர்.

**1619-இன் ஒப்பந் தம் பலனற்றுப் போதல்**

கீழ்திசையிலிருந்த டச்சுக் கவர்னர்களில் முதன்முதல் சிறப் புற்றிருந்த § பியரிபூத் (1610-14) என்பவர் ஜாவா முதல் மொலுகஸ் வரை டச்சு இராஜ்ஜியத்தைப் பரப்பிப் பலப்படுத்தினர். அவருக்குப் பின் வந்தவர் மொலுகஸ்தீவில் ஆங்கி லேயர் பரவொட்டா வண்ணம் பெரிதும் முன்றனர். அவர் ஏடெனினும், அரபிக்கரையோரத்திலும் பண்

**ஆர்ச்சிபிலகோவில் டச்சுக்காரரது ஆதிக்கம் வலியுறல்**

†Compromise. ‡ Pulicat § Pierre Booth.

டகசாலைகளை அமைத்துச் சென்கடலோடு வியாபாரம் தொடங்கினர். மூன்றாவது, கவர்னராயிருந்தவர் டச்சுக்கோட்டைகளைப் பலப்படுத்தி ஆங்கில வியாபாரத்தை எங்கும் ஒடுக்கினர். இத்தகைய நிலைமையில் மொலுகஸ் வியாபாரத்தில் ஆங்கிலேயருக்கு ஒரு பங்கு கிடைப்பது அரிதாயிற்று. தாம் விரும்பியபடி சுந்தாஜலசந்தியில் பலத்த குடியேற்ற நாட்டை அமைப்பதும் அவர்களுக்கு இயலாதாயிற்று*. டச்சுக்காரர் தாமே முதலில் இத்தீவுகளில் குடியேறினரென்றும், ஆர்ச்சிபிலகோவிலுள்ள தலைவர்களோடு வியாபார ஒப்பந்தங்கள் செய்துகொண்டனரென்றும் பாத்தியதை கொண்டாடினர். ஆதலால், அவர்களுக்கு நிகராக ஆங்கிலேயரும் தங்கள் பாத்தியதையை நிலைநாட்டிப் போட்டியிட்டபோது இருவருக்குள் பகைமை மூண்டது. அதன் பயனாக, அம்பாய்ன படுகொலை நிகழ்ந்தது. அதற்குப்பின் ஸ்பைஸ் தீவுகளில் ஆங்கில வியாபாரம் அடியோடு ஒழிந்தது.

**கவர்னர் கோயன்**

டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளின் கவர்னராகிய **கோயன்** என்பவர் (1618—23; 1627—29) படாவியா பட்டணத்தை அமைத்து ஒரு பலத்த அரசியலை நிறுவினர். இலாபகரமான கரையோர வியாபாரத்தையும், ஐரோப்பாவோடு ஒழுங்குபட்ட பெருத்த வியாபாரத்தையும் நடத்த ஏற்பாடு செய்தார். ஆல்புகர்க்கைப் போல இவரும் அதிமுக்கியமான இடங்களைக் கைக்கொண்டு கோட்டை முதலிய காவல்கள் அமைப்பதிலும், சுதேசத் தலைவர்களுடன் சமாதானம் செய்துகொள்வதிலும் உள்ள நன்மைகளை உணர்ந்தார். ஹண்டர் என்ற ஆசிரியர் இவரது ஆற்றலையும், செயல்களையும் நோக்கி இவரை ஆல்புகர்க், டேப்ளே, வாரன்ஹேஸ்டிங்ஸ் இவர்களுக்குச் சமமாகக் கருதுகின்றனர்.

**போட்டியின் உன்னதநிலை—அம்பாய்ன படுகொலை (1623)**

மொலுகஸ்களின் தெற்கேயுள்ள அம்பாய்ன தீவுக்கூட்டத்து வாசனைத் திரவிய வியாபாரத்தில் ஆங்கிலேயர் பங்குரிமை கேட்டது கோயனுடைய எண்ணங்களுக்குப் பெருந்தடையாயிற்று. ஏனெனில், இத்தீவுகளின் தென்மேற்குப் பாகத்தைக் கடல்மூலம் நேரே எளிதில்தடையக்கூடும்; பின்பு அங்கிருந்து ஆங்கிலேயர் மலாக்கா சுந்தா ஜலசந்திகளின் உதவியில்லாமலேயே ஆர்ச்சிபிலகோவின் எல்லாப் பாகங்களையும் அடைந்து டச்சுக்காரரின் அதிகாரத்தையே மாற்றிவிட முடியும். மற்றும், ஆங்கிலேயர் சுந்தா ஜலசந்தியின் அருகாமையிலிருந்த ஒரு கோட்டைக்குப் பாத்தியதை கொண்டாடியது, ஜாவாவிலுள்ள

---

* டச்சுக்காரர் மலாகா ஜலசந்தியையும், சுமத்ரா, மலேயா தீபகற்பத்திற்கு இடையிலுள்ள குறுகிய வணிகுடாவையும் தம் கைக்கொண்டனர். பின்னும் சுந்தா ஜலசந்தியைத் தன் அடிப்படுத்திப் பாண்டம் (Bantam—இது ஜாவாவின் வட்மேற்கு மூலையிலுள்ளது) ராஜாவோடு சமாதானத்தை நாடி, அவனிடமிருந்து (ஜாவாவின் வடகரையிலுள்ள) ஜகாட்ரா (Jacatra) நிலப்பகுதியைப் பெற்றனர். அங்கிலப் பகுதியில் 1619-இல் படாவியா (Batavia) என்ற நகரத்தை அமைத்தனர். இந்த படாவியாவே இழக்கே அவரது தலைமை பீடமாய்த் திகழ்ந்தது. மலாகா, சுந்தா ஜலசந்திகளின் மூலமாகத்தான் ஆர்ச்சிபிலகோவுள் பிரவேசிக்கச் சாத்தியமாகும். மொலுகஸ்தீவில் முக்கிய வியாபாரஸ்தலமாகிய டெர்னேட்டைக் (Ternate) கைப்பற்றினர். மற்றும், 1618-இல் தென்மொலுகவில் இலவங்கத்திற்குப் பெயர்போன அம்பாய்ன (Amboyna) தீவும் இவர் வசமாயிற்று.

டச்சுத் பண்டகசாலைகளுக்கு ஆபத்தாயிற்று. ஆதலால், கோயன் **பாண்டம்** (Bantam) என்ற நகரை அழித்து, 1621-இல் ஆங்கிலேயர் ஜாவாவை அறவே விட்டுச் செல்லும்படி செய்தான். ஆங்கிலேயர் அம்பாய்னாவோடு செய்துவந்த வியாபாரத்தையும் நிறுத்த எண்ணங்கொண்டு, அவன் அம்பாய்னாவிலிருந்த டச்சுப் பண்டகசாலைத் தலைவனுக்கு ஆங்கிலேயரைத் 'தக்கபடியும் பின்வாங்காமலும் தாமதியாமலும்' தண்டிக்குமாறு இரகசியத் கட்டளை யிட்டான். இதனால் அங்கிருந்த ஆங்கிலேய வியாபாரிகள் அவ்விடத்தைப் பிடிக்கச் சூழ்ச்சி செய்வதாகக் குற்றஞ் சாட்டப்பட்டதோடு, தங்கள் குற்றத்தைத் தாமே ஒத்துக்கொள்ளுமாறும் துன்புறுத்தப்பட்டனர்; அவர்களில் பத்துபேர் கொலையு மூண்டனர். இந்த அம்பாய்னா படுகொலை (1623)க்குப் பிறகு ஆங்கிலேயர் ஆர்ச்சிபிலகோவை அடியோடு விடுத்தனர்; இனி, டச்சுக்காரர்களுக்கு இத் தீவுக்கூட்டம் முற்றிலும் யாதொரு எதிரியும் இல்லை.

**ஆங்கிலேயர் இந்தியாவோடு திருப்தியடைதல்**

ஸ்பைஸ் தீவுகளிலிருந்து துரத்தப்பட்ட ஆங்கிலேயர் தமது நோக்கத்தை இந்தியாவின்மீதே செலுத்தி அதன் கரையோரங்களில் குடியேற்றம் செய்தனர். வெகு காலமாக, ஆங்கிலேயர் சுமத்ராவில் * பென்கூலன், பாண்டம் என்ற விடங்களில் குடியேறியிருந்தனரேனும், அவர்கள் ஆர்ச்சிபிலகோவில் டச்சுக்காரருக்கு அரசியலிலும் வியாபாரத்திலும் இருந்த மேன்மையை ஆக்ஷேபிக்கவில்லை. பின்பு நெபோலிய யுத்தத்தின்போதுதான் ஜாவாவைத் தம் வசமாக்கினர். இப்படியாக, இந்து மஹாசமுத்திரத்தில் போர்த்துகீசியரடைந்த மேன்மை, கிறிஸ்தவநாடுகள் இஸ்லாம் நாடுகளின்மேல் அடைந்த வெற்றியை ஒருவாறு குறிப்பதாகக் கொள்ளலாம். அப்படியாயின், அந்தப் போர்த்துகீசியரைத் தொடர்ந்து வந்த டச்சுக்காரரும் ஆங்கிலேயரும் வியாபாரத்திலடைந்த வெற்றி, வட ஐரோப்பாவிலுள்ள பிராடெஸ்டண்டு நாடுகள் தென் ஐரோப்பாவிலுள்ள கத்தோலிக் நாடுகளின் மீதடைந்த வெற்றியைக் குறிப்பதாகும். இஃது இங்ஙனமெ, வெற்றியுற்ற வட ஐரோப்பிய பிராடெஸ்டண்டு நாடுகளுக்குள்ளேயே (டச்சுக்காரர் ஆங்கிலேயர்) வாணிகப்பொருளீட்டம் கருதிச் சண்டை நேரிட்டது. இந்தப் பொருளீட்டப்போரும் ஆர்ச்சிபிலகோவின் இலாபகரமான வாசனைத்திரவிய வியாபாரத்தினுலேற்பட்டதேயன்றி, இந்திய வியாபாரத்தினுலன்று என அக்காலத்துக் கருதப்பட்டது. இப்போரில் ஹாலந்து அடைந்த வெற்றி ஒரு சிறந்த உண்மையை விளக்குவதாகும்.

**டச்சு வெற்றியால் வெளிப்பட்ட உண்மை**

அது யாதெனில், மிக்கவருவாயும் தக்கவசதிகளும் மட்டற்ற தேசாபிமானமும் உடைய நாடொன்று குறைந்த வருவாயும், மெலிந்த வசதிகளும், தாய் நாட்டு உதவியின்மையும் உடைய வேருெரு நாட்டின்மீது வெற்றிகொள்ளும் தன்மையதே. இவ்விதமாக டச்சுக்காரர் தொகையிற் சிறியராயினும் தளரா ஊக்கத்தினுலும் சிறந்த கட்டுப்பாட்டினுலும் மூன்றும் முறையிட்ட இப் போரிலும் வெற்றியுற்றனர். எனவே ஆங்கிலேயர் வியாபார இலாப

* Bencoolen

மனிப்பதில் தாழ்வாகக் கருதப்பட்ட இந்தியாவொடு திருப்தியடையவேண்டியதாயிற்று*.

சிலகாலம் வரை இங்கிலாந்தில் டச்சுக்காரரின்மீது ஆத்திரோஷம் இருந்து வந்தது. ஆனல் சில இராஜீயகாரணங்களை முன்னிட்டு முதலாவது ஜேம்ஸ்ரும், முதலாவது சார்ல்ஸ்ரும் ஹாலந்தோடு பகைமைகொள்ளாமல் நட்பாயிருந்தனர். பின்பு †க்ராம்வெலின் வல்லரசில்தான் டச்சுக்காரர் கள் அம்பாய்ஞபடுகொலைக்கு ஈடுசெய்ய நேரிட்டது.

இந்தியாவில் சில காலம்வரை டச்சுக்காரரது வலிமை மிகவிரைவாக ஓங்கியது. 1603-இல் அவர்களுடைய கப்பற்படை ‡கோவாவையே முற்றுகையிட்டது. இரண்டு வருஷங்களுக்குப் பிற்கு மசூலிப்பட்டினத் தில் ஒரு நிரந்தர பண்டகசாலையை நிறுவினர். பிறகு மதராஸின் வடக்கே யுள்ள பழவேற்காட்டில் மற்றொரு பண்டகசாலையை நிறுவிக் காவல் களமைத்து அதனை ஒரு முக்கிய வியாபார ஸ்தல மாக்கினர். 1659-இல் நாகப்பட்டினத்தைப் போர்த்து கீசியரிடமிருந்து கைக்கொண்டனர். 1638 முதல் 1658-க்குள் டச்சுக்காரர் போர்த்துகீசியரை அடி யோடு இலங்கைத் தீவினின்று துரத்திவிட்டனர். நாகப் பட்டினம், இலங்கைத் தீவினை அடுத்திருப்பதால் அதனைச் சோழமண்டலக் கரையில் தமது தலைமையிடமாகக்கொண்டனர். குஜராத் கரையிலும் பண்டகசாலைகள் வைக்கப்பட்டன. 1653-இல் வங்காளத்தில் ஹூக்ளி நதியை அடுத்துள்ள §சின்ஸுராவிலும் அவர்களுக்கு இடம் கிடைத்தது. சில வருஷங்களுக்குப் பிறகு கொச்சியும் கிடைத்தது. சிலோனிலும் மலையாளக்கரையிலும் போர்த்துகீசியர் முன்னடைந்திருந்த பெருமையை டச்சுக்காரர் இப்போது எளிதில் அடைந்தனர். சிலோனில் அவர்கள் ¶கண்டிராஜாவோடு சிநேகங்கொண்டு 18-ஆம் நூற்றாண்டு முழுவதும் தங்கள் ஆதிக்கம் குன்றுதபடி பார்த்துக்கொண்டனர். ஆனல் இந்தியா வின் பிற இடங்களில் அவர்களது ஆதிக்கம் தலையோங்கிற்றில்லது.

**இந்தியாவிலும் இலங்கைத் தீவிலும் டச்சுக்காரரின் அதிகார வளர்ச்சி**

இந்தியாவில் டச்சுக்காரர் தமது கப்பற்படையையே நம்பியிருந்தனர்; 17-ஆம் நூற்றாண்டுப்போர்களில் அவர்களுடைய கப்பற்படை வலிமையே அவர்களது பகைவரை ஏக்கமுறச் செய்தது. ஆனல் டச்சுக்காரர் தங்கள் கப்பற்படையையும், கோட் டைக் காவலர்களையும் சம்ரக்ஷிக்க மிகுந்த பணச் செலவு செய்யவேண்டியிருந்தது. டச்சு உத்தியோகஸ்தர்கள் நிகழ்த்திய பிரத்தியேக வியாபாரமும், பலவந்தமாகத் தனி உரிமை பெற்று நிகழ்த்திய வியாபாரமும் பெருங்கேட்டை விளைவித்தன. 18-ஆம் நூற்றாண்டுத் தொடக் கத்திலேயே டச்சுக் கப்பற்படை சீர்குலையத் தலைப்பட்டது; ஆங்கிலேயர் அவரிடமிருந்து ‘ஔவலிவுறுமுறை’யைக் கையாண்டனர். அந்நூற்றாண் டில் டச்சுக்காரர்கள், ஆங்கிலேய பிரெஞ்சுக்காரர்களைக் காட்டிலும்

**அவர்களின் வீழ்ச்சி**

---

* Vide Hunter, Vol. I, Introduction pp. 3—5. † Cromwell ‡ Goa.
§ Chinsurah ¶ Kandy ₱ Policy of ‘the Strong arm’.

தாழ்ந்த நிலையை எய்தினர். இந்தியாவில் டச்சுக்காரரது ஆதிக்கம் அறவே அழிந்தொழிந்ததைப்பற்றிப் பின்னர்க் கூறப்படும்.

**ஆர்ச்சிபிலகோவில் அவர்களது அதிகாரம்**

ஆர்ச்சிபிலகோவில் டச்சுக்காரர்கள் ஐரோப்பாவோடு செய்யும் வாசனைத்திரவிய வியாபாரமுற்றிலும் தனி உரிமை பெற்றிருந்தனர். அன்றியும், அவர்கள் கரையோர வியாபாரத்தைப் பெருக்கினர். அவர்கள் மிகவும் மேன்மையான ஆட்சி முறையையும் ஏற்படுத்தினர். மிக்க பலனளிக்கும் * தோட்டவரிசைகளையமைத்து, அடிமைகளை வேலைக்கு அமர்த்தி அவர்களிடமிருந்து கொடுமையாக வேலை வாங்கினர். இவ்விதமாக, அவர்கள் போர்த்துகீசியரும் ஆங்கிலேயரும் கண்டறியாத ஒரு வாணிபச்செல்வாக்கை யடைந்தனர்.

## பகுதி 3 : இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்கள்

**கீழ்திசையில் பிரெஞ்சுக்காரரின் முதன் முயற்சிகள்**

போர்த்துகீசியரையும் ஆங்கிலேயரையும் பார்த்துப் பிரெஞ்சுக்காரர்களும் கீழ்திசையில் முயற்சிசெய்ய அவாக் கொண்டனர். கீழ்திசைநாடுகளைத் தேடிக்காணப் பல கம்பெனிகளை நிறுவுவதை † நான்காம் ஹென்றி (1589—1610) என்ற அரசன் ஆதரித்தான் ; ‡ பதின்மூன்றாம் லூயியின் (1610—1643) மந்திரியாகிய § **கார்டினல் ரீச்லு** என்பவர் ¶ மடகாஸ்கரிலும் அதனைச்சார்ந்து தம் வசமுள்ள தீவுகளாகிய ₰ போர்போன் ** மொரீஷஸிலும் குடியேற்றம் செய்வதற்காக ஒரு கம்பெனியை ஆதரித்தார். முடிவில் அந்த யோசனை நிறைவேறவில்லை. இந்தியாவோடு வியாபாரஞ்செய்ய முதல் பிரெஞ்சுக் கம்பெனி 1664-இல் ஸ்தாபிக்கப்பட்டது ; †† பதினான்காம் லூயியினுடைய மந்திரியாகிய ‡‡ **கோல்பர்ட்** என்பவரே அக்கம்பெனிக்கு அநேக சிறப்புரிமைகளைக் கொடுத்து அதனை ஆதரித்தார். அரசன் அக்கம்பெனிக்கு மடகாஸ்கரின் மீதும், மற்றும் அது ஜெயித்துச் சேர்க்கக்கூடிய நாடுகளின் மீதும், சர்வாதிகாரம் கொடுத்தான். இங்கிலாந்தில் வர்த்தகர்கள் கொஞ்சங் கொஞ்சமாய் அரசினிடமிருந்து சிறப்புரிமைகளைப் பறித்துக்கொள்ள வேண்டியிருக்க, பிரான்ஸிலோ அரசனே இஷ்டமில்லாத மக்களை

**பிரெஞ்சு இந்தியக் கம்பெனி ஸ்தாபனம் (1664)**

வியாபாரஞ் செய்யப் பலவந்தப் படுத்தவேண்டியதாயிற்று. எத்தனை வியாபாரிகளும் முன்வராமையால், பிரபுக்களே முதற்பணத்தில் பெரும்பாகம் கொடுக்கவேண்டியதாயிற்று. அரசியற் பதவியை வகித்தவர்கள் தொடக்கத்திலிருந்தே வர்த்தகக் கழகங்களை சம்பாதித்து அவைகளுக்கு ஊக்கமளிக்கவேண்டியிருந்தது.

---

* Array of Plantations.
§ Cardinal Richelieu.
** Mauritius.
† Henry IV.
¶ Madagascar.
†† Louis XIV.
‡ Louis XIII.
₰ Bourbon.
‡‡ Colbert.

மடகாஸ்கரில் குடியேற்றஞ்செய்து, அதனை இந்தியாவிற்குச் செல்லும் வழியில் தங்குமிடமாகக் கொள்வதே பிரெஞ்சுக் கம்பெனியின் முதன்மை யான நோக்கமாகும். ஆனால் அவ்வெண்ணத்தை விரைவில் விட்டுவிட நேர்ந்தது. அங்கு முன்னரே குடியேறி யிருந்த சிலரும் போர்போன், மொரீஷஸ் தீவுகளுக்கு மாறும்படி யாயிற்று. மொரீஷஸும் போர்போனெடு சேர்ந்து பலமும் அடைந்தது.*

மடகாஸ்கரில் குடியேற்றம்

1667-இல் டச்சுக்கம்பெனியின் வேலையிலமர்ந்து அனுபவ முதிர்ந்த † **கேரன்** என்பவர் தலைமையின்கீழ் ஒரு கப்பற்படையைக் கோல்பர்ட் இந்தியாவிற்கு அனுப்பினர். கேரன் சூரத்திலும் மசூலிப்பட்டினத்திலும் பண்டகசாலைகளை நிறுவினர். கோல்கொண்டா சுல்தானிடம் பிரெஞ்சு சரக்குகளுக்கு ஏற்றுமதி இறக்குமதி வரியில்லாதபடி தனிச்சிறப்புரிமையும் பெற்றார். அவர் பிரெஞ்சு வியாபாரம் தலையோங்குவதற்குக் ‡ கடல் சார்ந்த காவல் நிலையமொன்று அவசியமென்பதை உணர்ந்தார். கண்டி ராஜாவினால் எதிர்க்கப்பட்ட டச்சுக்காரரிருந்த சிலோனையும் பிரெஞ்சு சுக்காரரின் வசமாக்கக் கேரன் ஆலோசித்தார். ஒரு பிரெஞ்சு சேனை டச்சுக்காரர்களை அத்தீவிலிருந்து துரத்த முயன்றது; அது § திரிகோண மலையை 1672-இல் கைப்பற்றியது; சென்னைக் கருகேயுள்ள ¶ ஸான் தோமையும் முற்றுகையிட்டுப் பிடித்தது. ஆனால் போகிய உதவிப்படை யின்மையால் பிரெஞ்சுக்காரர் இவ்விடங்களை வெகுகாலம் தங்களிடம் வைத்துக்கொள்ள இயலவில்லை. எனினும் மீண்டும் டச்சுக்காரர் அவை களைக் கைப்பற்றினர்.

கேரன்

பிரெஞ்சுக் கம்பெனி கேரனைத் திரும்பியழைத்தபின் அவனது ஓ இலெப்டினண்டாகிய †† **பிராங்காய் மார்டின்** என்பவர், ஸான்தோமி லிருந்து துரத்தப்பட்டு வந்து புகுந்த பிரெஞ்சுக் காரர்களுக்குத் தங்குமிடம் அளிக்க விரும்பினர். அவர் பீஜபூர் சுல்தானுக்கடங்கிய கீழ்க் [கரையோர] முள்ள] கர்நாடகத்தின் கவர்னராயிருந்த **ஷெர்கான் லோடியுடன்** கலந்து பேசி, அவனிடமிருந்து கட லூருக்கு வடக்கே 15 மைல் தூரத்தில் கரையோரத் தில் ஒரு நிலப்பகுதியைப் பெற்றார் (1674). இதுவே பாண்டிச்சேரி என வழங்கும் புதுச்சேரியாகும். இது விரைவில் பெருகிச் செல்வாக்குடன் திகழ்ந்தது. இது பருவக்காற்றுகளின் கொடுமையால் அலைக்கப்படாத விடத்தில் அமைந்துள்ளது. ஆங்குத் துறைமுகம் ஆழமின்மையால் சண்டைக்கப்பல்கள் அணுகா; மற்றும், இவ்விடம் உள்நாட்டுச் சந்தை களுடன் சுலபமாய்ப் போக்குவரவு செய்யச் சாதகமாயமைந்துள்ளது.

பிராங்காய் மார்டின் புதுச் சேரியைப் பெறுதல் (1674)

---

* முதன் முதலில் போர்த்துகியர் மொரீஷஸில் குடியேறிப் பின்னர் அதனை விடுத் தனர்; பிறகு டச்சுக்காரரும் குடியேறி அவ்வாறே விடுத்தனர். 1649-இல் போர்போன் பிரெஞ்சுக்காரர் வசமாயினும், அவர்கள் அங்கு முதன்முதல் குடியேறச்செய்த முயற்சி வீணாயிற்று.

† Caron ‡ Maritime Stronghold § Trincomale ¶ San Thome
ʾ Lieutenant †† Francois Martin

அக்காலப் போர்களால் சுதேச ராஜ்ஜியங்கள் அழிந்துபட்டு ஓல் மிட்டுக்கிடப்ப அவைகளுக்கிடையே புதுச்சேரியோ வளர்ந்துவரலாயிற்று.†

**புதுச்சேரியின் வளர்ச்சி**

சிவாஜி கர்நாடகத்தை 1677-இல் தாக்கினபோது மார்டின் புதுச்சேரியைக் கர்க்கப் பெரிதும் முயற் சிக்க வேண்டியதாயிற்று. சிவாஜி அருகாமையி லிருந்த வேலூர், ஆரணி, செஞ்சிக்கோட்டைகளைப் பிடித்து ஷெர்கான் லோடியைத் தோற்கடித்தான். பிறகு, பிரெஞ்சுக்காரர் பீஜப்பூர் கவர்ன ருடன் நட்பாகிய காரணத்தினால் ஏறிட்டுச் சிவாஜி புதுச்சேரியைத் தாக்கு வதாகப் பயமுறுத்தினான். மார்டின் சிவாஜிக்கு உடனே பணி வதாயும், வியாபாரஞ்செய்ய அவனது அனுமதிபெற மிருந்த பண மும் செய்வதாயும் கூறிப் புதுச்சேரியை அச்சமயம் காப்பாற் றினான். மற்றும் தன்னிஷ்டம்போலச் சர்வாதிகாரம் செலுத்தக் கூடிய இடத்தைப் பெற்றுப் பல கிடங்குகளைக் கட்டிக் கோட்டைகளையும் அமைத்தான். ஆனால் இங்ஙன் புதுச்சேரியை வளமுறச் செய்ததே விரைவின் அதற்கு அபாயம் விளைப்பதாயிற்று. 1672 முதல் 1713 வரை எப்பொழுதும் பிரெஞ்சுக்காரரோடு சண்டையிட்டு வந்த டச்சுக்காரர், புதுச்சேரிமீது கண்வைத்து 1693-இல் அதனைப் பிடித்து ஆறுண்டுகள் தங்கள் வசமே கொண்டிருந்தனர். அவர்கள் புதிதாகக் காவற் சுவர்களை எழுப்பினர். அவ்விடத்தை அக்காலத்து இந்தியாவிலுள்ள ஐரோப்பியக் குடியேற்ற ஸ்தலங்களுக்குள் மிகவும் பலத்த கோட்டைக் காவற் சிறப்புடையதாக அமைத்தனர். ஆனால், 1697-இல் நடந்த ‡ ரிஸ்விக் உடன்படிக்கையின்படி அவர்கள் புதுச்சேரியைக் கோட்டைக் க்வல்க ளோடு அப்படியே பிரெஞ்சுக்காரருக்குத் திருப்பிக் கொடுத்துவிடநேர்ந்தது.

**டச்சுக்காரரால் புதுச்சேரி பிடிபடல் (1693)**

1699-இல் புதுச்சேரியை மார்டின் திரும்பக் கைக்கொண்டபின் அதனை வளமுறச் செய்தலில் மீண்டும் தொடங்கினன். 1701-இல் புதுச் சேரி கீழ்திசையிலுள்ள பிரெஞ்சுக் குடியேற்ற விடங் களுக்கெல்லாம் தலைமையிடமாய் விளங்கியது ; மார்டின் இந்தியாவில் பிரெஞ்சு டைரக்டர்-ஜெனர லாக நியமிக்கப்பட்டான். 1706-இல் அவன் இறப்பதற்குமுன், தனது நேர்மைக்கும் நட்பாடற்கும் சுதேச மன்னர்களால் பெரிதும் போற்றப்பட்ட தோடு கடைசில் தவறுது வாணிபஞ் செய்பவன் என்ற புகழும் பெற்றான். இவ்விதமாக, அவன் சுதேச மன்னர்களிடையே அடிகோலிய நட்பினல் தான் அவனுக்குப் பின்வந்தவர்களில் பிரசித்திபெற்ற டூப்ளே என்பவர் இந்தியாவில் ஒரு பிரெஞ்சு இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க ஏதுவாயிற்று.

**மார்டினின் செயல்கள்**

புதுச்சேரி நன்கு வளர்ச்சியுற்றதற்கு மாறுக, இந்தியாவின் இதர இடங்களில் பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கு க்ஷீணித் தது. 1714-இல் அவர்கள் சூரத்திலிருந்த பண்டக சாலையைக் கைவிட நேர்ந்தது ; மசூலிப்பட்டினத்தி லிருந்த பண்டகசாலையோ செழித்தோங்கவில்லை ;

**இதர இடங்களில் பிரெஞ்சு ஸ்தாப னங்களின் அழிவு**

† Malleson-History of the French in India (New Edition), 24. ‡ Ryswick.

1688-இல், மொகலாய சக்கரவர்த்தியிடமிருந்து பிரெஞ்சுக்காரர் பெற்றுக் குடியேறிய (ஹூக்ளிநதியின் மீதிருக்கும்) சந்திரநகரும், ஆங்கிலேயரது கல்கத்தாவுக்கும் டச்சுக்காரரது சின்ஸுராவுக்கும்முன் மின்மினிபோ லொடுங்கியது.

1664-இல் பதினைன்காம் லூயி பிரெஞ்சுக் கம்பெனிக்குக் கொடுத்த ஐம்பது வருடத் தனி உரிமை,* மார்டின் இறந்த எட்டாண்டுகட்குப் பின் மூடிவடைந்தது. இதற்கு முன்பேயே கம்பெனியின் செல்வாக்குக் குறைய ஆரம்பித்தது. இன்னும் பத்து வருடகாலத்துக்குத் தங்கள் வியாபார உரிமைகளை நீட்டிக்கப் பட்டயம் பெற்றிருந்த போதிலும், டைரக்டர்கள் இந்தியாவிற்கு வர்த்தகக் கப்பல்கள் அனுப்ப இயலாதிருந்தனர். ஆனல் அச்சமயம், ஸ்காட்லாந்து தேசத்தவராகிய † லா என்பவர் ஒரு தக்க உபாயம் கூறினர். அவர் கிழக்கு மேற்குக்களிலுள்ள பெரிய பிரெஞ்சுக் கம்பெனிகளை யெல்லாம் 'இண்டீஸ் கம்பெனி' என்ற பெயருடன் ஒன்று சேர்த்து, அதற்கு அபரிமிதங்கள் அநேக உரிமைகளைக் கொடுக்கவேண்டுமென்று வெளியிட்டார். இப்புது கம்பெனியின் பங்குகளுக்குப் பெரும்மதிப்பேற்பட்டதெனினும், இவ்விதத ‡ விலைப் பெருக்கத்தைத் தொடர்ந்து ஒரு நெருக்கடியும் விரைவில் உண்டாயிற்று; இந்நெருக்கடியின் பயனக, முழுய பிரெஞ்சுக் கம்பெனியே 1720-இல், § சாசுவத இண்டீஸ் கம்பெனி என்ற புதுப் பெயர் பூண்டு முற்றிலும் வியாபாரச் சங்கமாகித் தொழில் நிகழ்த்தி வந்தது.

**புதிய இண்டீஸ் கம்பெனி**

இப்புதிய கம்பெனி ஊக்கத்துடன் தொழில் நிகழ்த்தியது. தளர்வுற்ற புதுச்சேரியை மீண்டும் நன்னிலைபெறச் செய்யமுயன்றது. அக்காலத்து ¶ லெனுர் என்ற சாதுரிய வியாபாரி புதுச்சேரியின் கவர்னராக விருந்தார். அவர் பிரெஞ்சுக்காரர் பட்ட கடனைத் திருப்பிக் கொடுத்துச் செல்வாக்கை நிலைநாட்டினர். லெனுரின் காலத்தில் புதுச்சேரி குடிவளம் பெருகியது. வாணிபமும் ஓங்கியது. **மருவிப்பட்டினம், கள்ளிக்கோட்டை, மாஹி, ஏனம்** என்ற விடங்களில் பண்டகசாலைகள் நிறுவப்பட்டன. 1724-இல், மாஹியில் ஒரு கோட்டை கட்டப்பட்டது. எங்கும் வாணிபம் துரிதமுடன் கலை யெடுத்தது. லெனுருக்குப் பிறகு 1735-இல் கவர்னராய் வந்த ‡ டூமா என்பவர் சாதுரியமும் முன்யோசனையும் விவேகமும் உள்ளவர். அவர் சமாதான முறைகளைப் பின் பற்றிப் பிரெஞ்சு அதிகாரத்தைப் பரவச் செய்ய எண்ணினர். இவர் காலத்தில்தான் பிரெஞ்சுக்காரர்களுக்கும் முகலாய சக்கரவர்த்திகளின் பிரதிநிதிகளாக உரிமை கொண்டாடிய கர்நாடக நவாப்புகளுக்கும் நெருங்கிய சிநேகம் ஏற்பட்டது. திருச்சிராப்பள்ளியின் கவர்னராயும் அப்போதாண்டு வந்த நவாபின் மருமகனுமான **சந்தாசாஹிப்** என்பவன் தஞ்சாவூர் ராஜ்யத்தின் கரையோரத்திருந்த காரைக்காலைப் பிரெஞ்சுக்காரருக்காக 1739-இல் கைப்பற்றினன்.

**கவர்னர் லெனுர் 1720; 1726—35**

**கவர்னர் டூமா (1735—41)**

---

* Fifty years' Monopoly. † Law. ‡ Boom. § The Perpetual Company of the Indies. ¶ Lenoir. ‡ Dumas.

1698-இல், செஞ்சியை மராட்டியர்களிடமிருந்து ஔரங்கசீப்பின் தளகர்த்தனான *ஸுல்பிகார்கான் பிடித்த பிறகு, †தாவுத்கான் என்ற பட்டாணிய இராணுவ வீரனைக் கர்நாடக அரசியலைக் கண் காணிக்கும்படி நியமித்தான். அவனுக்குப் பின்

**கர்நாடகத்தின் நிலைமை**

‡ஸாதத்துல்லாகான் என்பவன் அப்பதவிக்கு வந்தான். 1723-இல் தக்காணத்தில் தன் அதிகா ரத்தை நிலைநாட்டிய §நிஜாமுல்முல்க், சாதத்துல் லாவை அப்பதவியில் நிலைபெறச் செய்தான். 1732-இல் சாதத்துல்லா இறந்த பிறகு, அவனது மருகனான ¶தோஸ்து அலி அப்பதவியை வகித் தான். அப்போது, நாயக்கவரசர்கள் ஆண்டுவந்த மதுரை திருச்சிராப் பள்ளியில் அரசவரிசை குறித்துச் சச்சரவு ஏற்பட்டது. அதுவே தக்க சமயமெனக் கொண்டு தோஸ்து அலியின் மருமகனான சந்தாசாஹிப் திருச்சிராப்பள்ளியைக் கைப்பற்றி நவாபின் பெயரில் ஆண்டு வந்தான் (1736). இதனைக் கண்ட நவாபும் அவன் பிள்ளையும் சந்தாசாஹிப்பின் மீது பொறாமை கொண்டனர். சந்தாசாஹிப்போ புதுச்சேரியிலிருந்த பிரெஞ்சுக்காரருடன் நெருக்கம் பாராட்டி வந்தான். பின்பு, கூடுதலாகவே விருந்த மராட்டிய ராஜ்யமாகிய தஞ்சாவூரின் விவகாரங்களில் தலையிட்டுக் காரைக்காலைக் கைப்பற்றிப் பிரெஞ்சுக்காரருக்குக் கொடுத்தான்: அவர் கள் உடனே அங்குக் கோட்டைகள் கட்டி அதனைப் பலப்படுத்தினர்.

**நவாப்புகளி டையே பிரெஞ் சுக்காரரது செல் வாக்கின் பெருக்கம்**

இப்படியிருக்க, 1740-இல் ||ரகுஜிபான்ஸ்லே என்ப வர் ஒரு மராட்டிய சேனையுடன் வந்து கர்நாடகத் தைப் பாழ்படுத்தி, நவாப் தோஸ்து அலியைச் சண்டையிட்டுக் கொன்றான்; அப்போது நவாப்பின் குடும்பத்தினரையும் சந்தாசாஹிப்பின் குடும்பத் தினரையும் பிரெஞ்சுக் கவர்னரே பாதுகாத்து உதவினர். மேலும், மராட்டிய ரகர்த்தன் புதுச்சேரியைத் தாக்குவதாகப் பயமுறுத்தியபோது அவர் சிறிதும் பின்வாங்காது அவனைச் சாந்தப்படுத்தி அனுப்பிவிட்டார். இவ் விதமாக, அவர் பிரெஞ்சுக்காரரின் கவுரவத்தைப் பலருமறியச் செய்தனர். அவருக்கு முகலாய சக்கரவர்த்தி உயர்ந்த ஒரு மன்ஸப்பையும் நவாப் என்ற பட்டத்தையும் அளித்தார். இஃது இங்ஙனமாக, மராட்டியர் திருச் சிராப்பள்ளியை முற்றுகையிட்டுப் புது நவாபான **ஸப்தர் அலியின் தூண்டுதலின்படி சந்தாசாஹிபைக் கைதியாக்கி னர். கர்நாடகம் இத்தகைய நிலைமையிலிருக்கும் போதுதான், 1741-இல் டூப்ளே புதுச்சேரிக்குக் கவர்னராக வந்தார். டூப்ளேவுக்கு இந்தியாவில் மிக்க அநுபவமுண்டு. இவர் சந்திரநகரில் பல்லாண்டுகள் தலைவராயிருந்து அதன் செல்வாக்கையும் வாணிபத்தையும் அபிவிருத்தி செய்துள்ளார்.

**டூப்ளே புதுச்சேரி கவர்னராதல் (1741)**

---

* Zulfikar Khan. † Daud Khan. ‡ Sadat-ullah Khan. § Nizam-ul-Mulk ¶ Dost Ali. || Raghuji Bhonsle. ** Safdar Ali.

# அத்தியாயம் 2.

## ஆங்கிலக் கம்பெனியின் வளர்ச்சி—1746 வரை

### பகுதி 1: ஸ்டுவார்ட்வம்ச முதலரசர்களின் ஆட்சியில் கம்பெனியின் ஏற்றத்தாழ்வுகள்

கம்பெனி தன் ஆரம்பத்திலேயே இங்கிலாந்திலும் வெளியிடங்களிலும் பல கஷ்டங்களுக்குள்ளாயிற்று. இதனால் முதலாம் ஜேம்ஸினிடம் பலர் பல தடவைகள் முறையிடவேண்டிய தாயிற்று.

**முதலாம் ஜேம்ஸும் கம்பெனியும்**

அவர் 1609-இல், கம்பெனிக்கு ஒரு புதுப்பட்டயம் அளித்தார். அதனுள், இந்திய வியாபாரம் தேசத்திற்கு இலாபகரமாயில்லாமற்போனால் மூன்று வருஷ நோடீஸ் கொடுக்கப்பட்டு உரிமைகள் யாவும் பறிக்கப்படும் என்று கண்டிருந்தது. கம்பெனி விரும்பியபடி அம்பாய்னா படுகொலைப் பழிக்குப் பழிவாங்க ஜேம்ஸ் தயங்கினர். அவருக்குப்பின் வந்த முதலாம் சார்ல்ஸும் டச்சுக்காரரை நீட்டித்து எதிர்க்க முற்படவில்லை. இங்கிலாந்தில் அரசன்மேல் பொது மக்கள் கொண்டிருந்த கோபத்தினால் அவர்களுக்கு டச்சுக்காரர் மீதிருந்த வெறுப்பும் மறையலாயிற்று. அன்றியும், இந்திய வியாபாரத்தில் அனைவரும் ஈடுபட ஒரு கிளர்ச்சியும் தோன்றிற்று. இதனால் 1628-இல் கம்பெனி காமன்ஸ் சபையினரைத் திருப்தி செய்ய ஓர் விண்ணப்பம் செய்யவேண்டியதாயிற்று. அவ்விண்ணப்பத்தில் ஹாலந்து ஸ்பெயின் தேசங்களின் அதிகாரத்தை வளரவொட்டாமல் தடுக்கக் கம்பெனியின் வியாபாரத் தனியுரிமை பெரிதும் பயன்படுகின்றதென்றும், அவ்வுரிமை இங்கிலாந்துக்குப் பல நன்மைகளை விளைப்பதென்றும் குறிக்கப்பட்டிருந்தது. இதனால், காமன் சபையினர் திருப்தி செய்யப்பட்டனரெனினும், கம்பெனி அரசனது பிரீதியை இழக்கவும் துணியவில்லை. அரசனே பார்லிமெண்டு உதவியின்றியே ஆளத்தொடங்கினன். அவன், 1635-இல் ஒரு புதுக்கம்பெனிக்குப் † (கோர்ட்டனின் சங்கம்) பட்டயம் அளித்தான். அதன்படி இந்திய வியாபாரத்தில் அதற்குப் பங்குரிமை யளிக்கப்பட்டது. அரசனும் இப்புதுக்கம்பெனி முயற்சியில் இரகசியமாக ஈடுபட்டான். ஆயினும், இம்முயற்சி வீணாயிற்று. இதனால், பழைய கம்பெனியின் வியாபாரமும் குன்றியது.

**கம்பெனி விவகாரங்களில் முதலாம் சார்ல்ஸின் மனதிலை**

இப்படியிருப்பவே, பழைய கம்பெனி அரசனால் தன் கஷ்டங்கள் நிவர்த்தியாகாதென்றெண்ணி, ‡ நீடித்த பார்லிமெண்டினிடத்தில் முறையிடத்துணிந்தது. அது, தான் பெற்ற வியாபாரத்தனி உரிமையே நியாயம் எனச் சாதித்து ஒரு விண்ணப்பமிட்டது. (ஜூன், 1641). அப்போது நிகழ்ந்த உள்நாட்டுப்போரினால் கம்பெனி மிக்க தாழ்ந்தநிலை எய்தியது; அது இந்தியாவிலிருந்த ஏழுபண்டகசாலைகளை எடுத்துவிடத் தீர்மானித்தது. ஆனால்,

**உள்நாட்டுப்போரும் கம்பெனியும்**

† Courten's Association ‡ Long Parliament

1647-இல் * **கோகேன்** என்னும் கவர்னரின் உதவியினால் கம்பெனியானது தனது வியாபாரத் தனிவுரிமைகளையும், அவ்வியாபாரத்தால் நாட்டிற்கு விளையும் நன்மைகளையும் பார்லிமெண்டையே. அங்கீகரிக்கும்படி செய்தது.†

**க்ராம்வெலின் நோக்க முறை**

க்ராம்வெல் இங்கிலாந்தின் கிழக்கே தம்வசமுள்ள பிரதேசங்களில் ஆங்கிலேயர் வசிக்கவும் தடங்கலின்றி வியாபாரஞ் செய்யவும் உடன்பட்டனர். க்ராம்வெல் இந்தியவியாபாரத்தைத் தேசீய தனமாகக் கருதினார். மேலும் க்ராம்வெல், கிழக்கில் ஆங்கில வியாபாரத்தை வரையறுத்து நிலைநிறுத்த வெண்ணி, § பஷிரங்க வியாபாரத்தையும், ¶ நியமனவியாபாரத்தையும் தடைசெய்தார். 1657-இல் அவர் இந்தியவியாபாரம் ஒரு ஐக்கிய நிரந்தரக் கூட்டுப்பங்குடைய தனி உரிமைக் கம்பெனியால்தான் நடத்தப்படவேண்டுமென்று தீர்மானித்து அக்கம்பெனிக்குச் சிறந்த பட்டயமொன்றும் அளித்தார். இந்தப் பட்டயம் அக்கம்பெனிக்குப் புத்துயிரும் புத்துருவும் ஊட்டியது ‡.

**1657-இல். அளிக்கப்பட்டயம்.**

க்ராம்வெலின் பட்டயம் கம்பெனிக்கு நிரந்தரமான கூட்டுமுதலை யளித்தது. அன்றியும், கள்ள வியாபாரிகளுக்கும் கலகம் விளைக்கும்

---

Cockayne.

† சார்ல்ஸின் பொய்யுரிமை வாதங்களும் அற்பசூழ்ச்சிகளும் ஆங்கில மக்களையும் கம்பெனியையும் சலிப்படையச் செய்தன. ஆங்கில மக்கள் போரிட்டுத்தீரத் துணிந்தது போல, கம்பெனியும் பார்லிமெண்டிற்கு முறையிட்டுத்தீரத் துணிந்தது. (1641-இலும் 1645-இலும்). இம்முறையீடு, முன்னதன் (மக்கள் போர்த்துணிவின்) வியாபார சம்பந்தமாகத் தோன்றிய உருவெளியெனலாம்.

§ Open trade. ¶ Regulated trade.

‡ க்ராம்வெல், ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் டச்சுக்காரர் வெற்றியுறுதலையும்; நாம் போர்த்துகீசியரோடு இந்தியா நிமித்தம் கொண்ட சம்பந்தங்கள் பம்பாய்க் கரையில் நிலவிய சுதேச வழக்கங்களோடு கட்டுண்டு கிடந்ததையும்; அம்பாய்ஞ படுகொலைக்கு சற்று செய்யப்பட்ட விதத்தையும் கண்ணுற்றார். அவர் ஆங்கிலேயர் கிழக்கில் சுயேச்சையாக வியாபாரஞ் செய்வதில் போர்த்துகீசியரை உடன்படுமாறு செய்தார்; அம்பாய்ஞ படுகொலைக்காகப் பல நாட்களாக மறுத்துவந்த கஷ்ட ஈட்டை டச்சுக்காரர் கட்டிக் கொடுக்குமாறு செய்தார். அவர் மேற்திசையில் ஆங்கிலேயரது போராட்டத்தையும், தாழ்வையும், ஏக்கத்தையும் பார்த்தார்; பார்த்த பின்பு, அவர்களே 'நமக்குப் பிற்காலத்துப் பெரும்பேறு கிட்டப்பது திண்ணம்' என்ற நம்பிக்கை கொள்ளுமாறு அவர்களே னன்னிலேபெறச் செய்தார். இந்திய வியாபாரம் அரசனது அதீனத்திலும், அவனால் நியமிக்கப்பட்டோருடைய அதீனத்திலும் பிரத்தியேகமாக இருப்பதென்றன்று என்றும், அது ஆங்கில மக்களனேவரது பொறுப்பிலுவட்டியதென்றும், அம்மக்களின் சாதுரியத்தினாலும் பலத்தினாலுமே அது பாதுகாக்கப்பட்டுவேண்டுமென்றும், ஒரு சிறந்த உண்மையை முதன் முதலறிந்த ஆங்கிலப் புரவலர் இவரே.

அவர் ஆங்கிலேயர்க்கும் இந்தியர்க்கும் இடையேயுள்ள பலாபலன்களை 1657-இல் ஐக்கியப்படுத்தினர். இந்த ஐக்கியம் பின்னல் ஐம்பதாண்டுகள் சென்றபின் பார்லிமெண்டில் தோன்றிய புகழ்பெற்ற ஐக்கியத்தை முந்தியே சுதேசி செய்ததாகும். மத்திய கால வியாபாரச் சங்கத்தினின்று சிதறிப்போன ஒரு சிறு பருதியென்னலாம்படிருந்த ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி, அவசரப் பட்டயத்தால், தற்காலத்தில் கூட்டுப்பங்கு முறையில் கடைபெறும் கம்பெனிகளுக்கு முதற் குறியாய் இலங்கியது. மேலும் சில்லாண்டுகள் வரை வளர்க்கப்பட்டுப் பின்பு அழியும் கட்டங்களுக்குப் பதிலாக, இடையறாது பெருகித் தனே விருத்தியாகும் பெருத்த மூலதனம் வாலாயிற்று. (Hunter Vol. II pp. 102. and 141)

வாணிபச் சங்கத்தார்க்கும் மாருக, கம்பெனியின் வியாபாரத் தனியுரிமையை அது பலப்படுத்தியது. இந்தப் பட்டயத்தால் கொடுக்கப்பட்ட அதிகாரங்களே, பல சுதேசமன்னர்களின் ஆட்சியின் கீழுள்ள கிழக்குப் பண்டக சாலைகளைக் கண்காணித்துப் பராமரிப்பதற்கும்; பிற ஐரோப்பியரின் போட்டி, கடற் கொள்ளை, கள்ள வியாபாரம் இவற்றை அறவே யொழிப்பதற்கும் உறுதியான அடிப்படைகளாயின. இவ்வாறு, இப் பட்டயத்தின் பலத்த ஆதரவினுல் கம்பெனி தனது பண்டகசாலைகளையும் வியாபாரத்தையும் விருத்தி செய்யும் பெருமுயற்சியில் தலைப்பட்டது.

## பகுதி 2: இந்தியாவில் கம்பெனி ஸ்தாபனங்களின் வளர்ச்சி.

**சூரத் பண்டக சாலையும் (1612) ஆங்கிலேயரது கடல் வெற்றிகளும்**

ஆங்கிலக் கம்பெனி முதன்முதல் பம்பாய்க் கரையில் தனது ஸ்தாபனங்களை யமைத்தது. 1612-இல் சூரத்தில் ஒரு பண்டகசாலை கட்டப்பட்டது. அதே ஆண்டில் * **காப்டன் பெஸ்ட்** என்பவர் கீழ் வந்த ஆங்கிலக் கப்பற் படையொன்று † சூரத் ரேவில் போர்த்துகீசியரை நன்கு முறியடித்து வெற்றிபூண்டது; இதனுல் போர்த்துகீசியரது புகழ்சான்ற கப்பற்பலம் அழிந்தது. இதற்கு முன்னமேயே ‡ **காப்டன் வில்லியம் ஹாக்கின்ஸ்** என்பவர் [இவர் கீர்த்திபெற்ற ஜான் ஹாக்கின்ஸ் என்ற கப்பற் கொள்ளைக்காரனின் மருமகனுவர்] கம்பெனி மூன்றுந்தர மனுப்பிய கப்பற்படையொடு இந்தியாவுக்கு வந்து, 1609-இல் ஆக்ராவை யடைந்து முகலாய சக்ரவர்த்தியான ஜஹாங்கீரிடமிருந்து வியாபாரஞ் செய்ய அனுமதி பெறப் போர்த்துகீசியரது இடையூறுகளுக்கிடையே பெரிதும் முயன்றார். 1615-இல் பேரூக்கங் கொண்டெழுந்த போர்த்துகீசிய கப்பற்படையானது ஓட்டம் பிடிக்குமாறு § **காப்டன் டவுன்டன்** என்பவர் ¶ ஸ்வாலி ரேவில் அதனைத் தோற்கடித்தார்; இதனுல் டையுவிலிருந்து கோவாவுக்குப் போக்குவரத்து தடைபட்டுப் போயிற்று. இந்த வெற்றியால் சூரத்திலும் காம்பே வளைகுடாவிலும் நிகழ்ந்துவந்த வியாபாரம் ஒருவாறு ஆங்கிலேயரது கைகண்ட பலனுய்க் கிரும்பியது, இப்படியிருக்க, முதலாம் ஜேம்ஸினிடமிருந்து ராஜதூதனுக ஈ **ஸர் தாமஸ் ரோ** அனுப்பப்பட்டார். அவர் 1616-இல் ஆக்ராவில் மகாமுகலாயர் முன்னிலையில் தோன்றி, இரண்டாண்டுகளுக்கு மேல் அரச சமூகத்தில் தங்கியிருந்தார்; வெகுகால தாமதத்தோடு பல இழுக்கடிப்புக்களுக்குள்ளாகிய பின்பு, சூரத்தில் சுங்கமின்றி வியாபாரஞ் செய்வதற்கும் உள்நாட்டில் தடையின்றிப் பிரயாணஞ் செய்வதற்கும் அனுமதி பெற்றார்.

**ரோவின் தூதினுல் விளைந்த நற்பயன்கள் (1615-18)**

ரோவின் சாதுரியத்தாலும் விவேகத்தாலும் முகலாயர் ஆங்கிலேயரிடம் வைத்த மதிப்பு பன்மடங்கு அதிகரித்தது; அவர்கள் அகமதாபாத்திலும், தபதி நதிக்கரையிலுள்ள புர்ஹான்பூரிலும், ஆக்ராவிலும் பண்டக சாலைகளை யமைக்கவும் யோசனை செய்தனர்: மற்றும் போர்த்து

---

* Captain Best. † Surat Roads. ‡ Captain William Hawkins. § Captain Downton ¶ Swally Roads. ஈ Sir Thomas Roe.

கியரைக் கொச்சியிலிருந்து துரத்தவும், அவர்கள் மலபாரில் செய்து வரும் வியாபாரத்தை யழிக்கவும் பெரிதும் முயன்றனர்.

**தூதிற்குப்பின் ஏற்பட்ட முன்னேற்றம்**

1622-இல் சூரத்திலிருந்த ஆங்கிலேயர் ஒரு கப்பற்படையுடன் சென்று ஆர்மஸ்ஸைப் பிடித்தனர். பின்பு, காம்பே வளைகுடாவினின்று போர்த்துகீசியரை அடியோடு ஓட்டினர். இவைகளால், முகலாயர் ஆங்கிலேயரைக் கடற்காப்பாளர்களென்றும், மெக்காவுக்கு யாத்திரையாகச் செல்லும் கப்பல்களின் பாதுகாப்பாளர்களென்றும் கருதினர். சூரத் வெகுசீக்கிரத்தில் செழித்தோங்கிக் கீழ்திசையிலுள்ள ஆங்கில ஸ்தாபனங்களுக்கெல்லாம் தலைமையிடமாய்த் திகழ்ந்தது. 1654-இல், ஆங்கிலேயர் தடையிலா வியாபாரஞ் செய்யலாமென்று போர்த்துகீசியரே ஒப்பந்தம் செய்ய நேர்ந்தது. இஃது இப்படியாக, சூரத்திலேயே ஒரு பண்டகசாலையிருந்தும், டச்சுக்காரர் குஜராத்தில் கேட்பாரற்றுக் கிடந்தனர்.

ஆனல் சூரத்தின் வாழ்வு விரைவில் தாழ்ந்துபோயிற்று. ராஜபுதனத்திலும் தக்காணத்திலும் ஏற்பட்ட தொந்தரவுகளினலும், நாட்டில் பரவிய கொடியபஞ்சத்தினலும், மற்றைய காரணங்களினலும் அதன் வியாபாரத்தில் ஒரு பெருத்த தளர்ச்சி ஏற்பட்டது. பழைய நன்னிலையை மீண்டும் அடைவதற்கு வெகு காலமாயிற்று. 1657-இல், இந்தியாவில் ஆங்கிலேயரது ‡ ராஜதானி என்னுமாறு ஏற்படுத்தப்பட்டது இது ஒன்றே; அப்போது மதராஸ் ஒரு கீழ்ப்பட்ட ஏஜென்ஸி நிலைமையில் வைக்கப்பட்டது. பம்பாய் தன்னினுமோங்கும்வரை சூரத் இராஜதானியாகவே நிலவியது. "முகலாயப் பேரரசின் பொருளாக்கத்தில் ஆங்கிலேயர், விரைவிலடைந்த நிலைமையைச் சூரத் விளக்குவதாகும்; ஆங்கிலேயர், பேரரசின் வருவாய்க்கு மூலகர்த்தர்களாகவும், கடற்கரைக்காவற்காரர்களாகவும், மெக்காவுக்குச் செல்லும் கடல்மார்க்கத்தைக் காக்கும் நோன்துக்காரர்களாகவும் விளங்கி, நாளடைவில் சுதேச ஆட்சிகளின் விவகாரங்களைச் சரிப்படுத்துபவர்களாக முன்னேறினர் * ".

**பம்பாய் கிடைத்தல்**

இரண்டாம் சார்ல்ஸ் போர்த்துகீசிய மன்னன் மகளை மணந்தபோது அவளுக்குச் சீதனமாகப் பம்பாய் கொடுக்கப்பட்டது. 1667-இல் கம்பெனி சார்ல்ஸினிடமிருந்து பம்பாயைப் பெற்றது. இங்கிழச்சியையொட்டிப் பல சம்பவங்கள் தொடர்ந்தன. மேற்குக்கரை மையத்தில் அமைந்திருக்கும் அதன் அமைப்பே, நன்னே உடையோர்க்கு அப்பிரதேசக் கடற்கரையோர வியாபாரம் முழுவதையும் அளிக்கும் தரத்ததாயிருந்தது; மேலும், அது முகலாய சாம்ராஜ்ய எல்லைக்குப் புறம்பேயுள்ளது; அதனை எதிர்க்காதவாறு கோட்டைகளமைத்துக் காப்பது எளிது. நெடுங்காலமாக ஆங்கிலேயர் அதனை அடைய விரும்பினர்கள். போர்த்துகீசிய மன்னனுக்கும் அதன் விசேஷம் அதனைத் தான் கொடுத்தபின்புதான் தோன்றியது.

† Ormuz. • ‡ Presidency.

* Hunter Vol. II, p. 68. சூரத் இராஜதானியாயிருக்கும் கௌரவத்தை யிழந்த போதிலும், 18-ஆம் நூற்றாண்டுவரை அது ஒரு பண்டகசாலையாகமேன்மையுற்றிருந்தது.

1664-இல் சூரத் சிவாஜியால் முதன் முதல் கொள்ளையடிக்கப்பட்ட போது, ஆங்கில வியாபாரிகள் தமது பண்டகசாலைகளை வெகு தைரியத்துடன் காப்பாற்றினர். இவர்களது தைரியத்தையும் சலிப்பின்மையையும் கண்ட ஔரங்கசீப் இவர்களைப் பெரிதும் பாராட்டினன். சூரத் பண்டகசாலையின் பிரஸிடென்டாகிய † **ஆக்ஸென்டன்** என்பவர்தான் பம்பாயின் வளர்ச்சிக்காக முதன்முதல் கிளர்ச்சியோடு எழுந்தவர். அவர் அத்தீவில் கோட்டைக் காவல்களமைத்து அதன் அரசியல் முறையை யொழுங்கு படுத்தினர்; சூயஸ்கால்வாய் வெட்டப்படுதற்கு முன்னமேயே, பம்பாய் தன் பூகோள அமைப்பினாலேயே இந்தியாவுக்குத் திறவுகோலாயிலங்கும் என்ற உண்மையை அவர் கண்டார். அவருக்குப் பின் வந்த ‡ **ஜெரால்ட் ஆங்கியர்** (1669—1677) என்பவரே பம்பாயின் பெருமைக்கு நிஜமான காரணபூதராவர். அவர் டச்சுக்காரரும், கடற்கள்ளரும், § அபிஸீனிய சித்திகளும், கொங்கணப் பிரதேசத்து மராட்டியரும் கலியாதவாறு பம்பாயைத் தைரியமாகக் காப்பாற்றினர். அவர்காலத்து, பம்பாய் ஒரு சிறந்த கப்பல் நிலையமாகியது; மராட்டியரிடமிருந்தும் கடற்கள்ளரிடமிருந்தும் கப்புவதற்குப் புகலிடமாயும் உதவியது. ஆங்கியர் இறந்த பின்பு, அதன் மேன்மை ஒடுங்கியது. மற்றும் ¶ **கிக்வின்** * என்பவனது இராணுவ கலகத்தாலும், கடற்கள்ளரின் சூறைகளாலும், கள்ள வியாபாரிகளின் தொந்தரவுகளாலும் அது பீடிக்கப்பட்டது. அன்றியும், ¥ **ஸர்ஜான்சைல்ட்** கவர்னராயிருந்த காலத்து ‡ ஆங்கிலேயர் பேதமையால் முகலாயப் பேரரசோடு சண்டையிட்டதனாலும் பம்பாய் வாட்டமடைந்தது.

**பம்பாய் இராஜதானியாகப் படல் (1687)**

1687-இல் சூரத் அல்லாமல் பம்பாயே மேற்கு பிரெஸிடென்ஸியின் தலைமையிடமாய் விளங்கினும், அது ஸமஸ்திதியிலே கிடந்தது. அதனையடித்துள்ள ** கண்டேரித்தீவோ, மராட்டிய கடற் கள்ளனை §§ **கன்ஹோஜி ஆங்கியர்** என்பவன் வசமிருந்தது. போதாததற்கு 1691-இல் ஏற்பட்ட ஆங்கிலேய புதுக்கம்பெனியின் போட்டியினால், பழைய கம்பெனி ஸ்தாபனங்களின் வியாபாரம் தடைபட்டது. மூன்று இராஜதானிகளுள்ளும் பம்பாயே, 18-ஆம் நூற்றாண்டின் முற்பாதி முற்றும் அதிக தளர்ச்சி நிலையை யடைந்திருந்தது.

**மசூலிப்பட்டினம்**

கிழக்குக் கரையில், முதன் முதலேற்பட்ட ஆங்கிலேய பண்டகசாலை மசூலிப்பட்டினத்திலாகும் (1613); ஆனால் டச்சுப் போட்டியினால் ஆங்கில வியாபாரம் ஊறுபட்டது. 1628-இல், கொஞ்சகாலமாக அப்பண்டகசாலை விடுபட்டுக் கிடந்தது; பின்பு, 1632-இல் கோலகொண்டா சுல்தான் ஆங்கிலேயர்க்குப் * பொன்பர்மான் (உத்தரவு) அளித்த பிறகுதான், அவர்கள் அதனை மீண்டும் தன்னிலைபெறச் செய்தனர். 1639-40-இல், மதராஸ் ஏற்பட்ட

† Oxenden ‡ Gerald Aungier § Abyssinian Sidis ¶ Keigwin ¥ Sir John Child ** Khanderi §§ Kanhoji Angria. * Golden Firman.

* See R. and O. Strachey: Keigwin's Rebellion.

தனால், மசூலிப்பட்டினப் பண்டகசாலை சிறிது மெலிவுபடினும், அதன் விசேஷமும் மதிப்பும் சிறிதேனும் குறையவில்லை.

1628-இல், மசூலிப்பட்டினத்தைச் சிறிது காலம். நீக்கிருந்தபோது, ஆங்கிலேயர், டச்சுக்காரர் குடியேறிய பழவேற்காட்டுக்கு வடக்கேயுள்ள

**ஆர்மகான்**

* ஆர்மகானில் தங்கியிருந்தனர்; அது துரிதமான வியாபாரத்திற்கு ஏற்ற இடமல்லதாதலின் அதனைக் கைவிட நேர்ந்தது: எனினும், அதற்கு ஒரு விசேட மூண்டு: அது யாதெனில், ஆங்கிலேயர் இந்தியாவில் முதன்முதல் பெற்றுக் கோட்டை கட்டிய இடம் இதுவே யாகும்.

மசூலிப்பட்டினத்து ஆங்கில வர்த்தகசாலையின் மன்கிராலோசனைச் சபையின் அங்கத்தினரான † **பிரான்ஸிஸ் டே** என்பவரை வர்த்தகஞ் செய்வதற்குச் சௌகரியமாயுள்ள ஒரு புதிய இடத்தைத் தேர்ந்தெடுக்குமாறு கட்டளையிட்டனர்; அவர் போர்த்துகீசியர் குடியேறிய ஸான்தோமைப் பார்வையிட்டனர். [இது ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு மூன்று மைல் தெற்கே யுள்ளது.] இங்கிருந்து உள்நாட்டோடு துரிதமான வியாபாரம் நடந்துவந்தது. இதற்கு வடக்கே மூன்று மைல் தூரத்திலுள்ள மதராஸ் பட்டினம் என்ற கிராமமிருந்த இடத்தை டே தேர்ந்தெடுத்தார். பின்பு, விஜயநகரை இறுதியிலாண்ட அரச பரம்பரையைச் சேர்ந்த சந்திரகிரி அரசனின் பிரதிநிதியாகப் பழவேற்காடு முதல் ஸான்தோம் வரையுள்ள கடற்கரைப் பகுதியை யாண்டுவந்த சுதேச நாயக்கனிடமிருந்து இவ்விடத்தில் வர்த்தகம் செய்ய அனுமதி பெற்றார். இங்கு, டே ஒரு கோட்டை கட்டத்தொடங்கி, 1640-இல், ஸெயின்ட் ஜார்ஜ் என்ற மஹானின் பேர் கொண்ட சுபதினத்தில் கட்டிமுடித்தார். ஆதலின், அது ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டை என்றே வழங்கப்பட்டது. சுதேசமன்னர்க்குள் சண்டைகளும், போர்த்துகீசியரோடு ஸான்தோமில் அடிக்கடி சண்டைகளும் நிகழ்ந்த போதிலும், இக்குடியேற்றம் விரைவில் செல்வாக்கிலும் ஜனத்தொகையிலும் பெருகியது.

**மதராஸ் ஏற்படல் (1639—1640)**

1652-இல், மதராஸ் பட்டினம் (இது சென்னைப்பட்டினம் எனவும் படும்) ஒரு பிரெஸிடென்ஸி யாக்கப்பட்டது: இத்தனை காலமாக, சுமத்ராவிலுள்ள பாண்டம் நகருக்குக் கீழ்ப்படிந்திருந்தது போலல்லாமல், இப்போது இது சுயேச்சையாய் விட்டது: சிறிது காலம் தள்ளிவைக்கப்பட்டுப் பின்பு இப்புதிய பதவியே சாசுவதமாக்கப்பட்டது. 1658-இல், வங்காளக்குடாக் கடற்கரையிலிருந்த வர்த்தகசாலைகளெல்லாம் அதன் அதிகாரத்திற் குட்பட்டன. இவ்விதமாக, மதராஸ் ஆங்கிலேயரது முதல் பிரஸிடென்ஸியாகவும், முதல்கோட்டையிடமாகவும், வங்காள விரிகுடாவில் தலைமை வர்த்தகசாலையாகவும், இந்திய ஐரோப்பிய சரக்குகளின் பிரதான சந்தையாகவும் இலங்கியது. "தென் கிழக்கிந்தியாவில் சுதேச அரசர்களின் சண்டைகளினின்றும் ஐரோப்பிய

**மதராஸ் இரண்டாஜானி (பிரஸிடென்ஸி) யாதல்**

---

Armagaon. † Francis Day.

வியாபாரத்தைக் காப்பாற்றுவது மிக அவசியமாதலால், 'காவல்களோடு கூடிய வர்த்தகசாலை' நிருபண முறைமை' மேற்கொள்ளப்பட்டது. இம் முறைமைக்கு மதராஸே சான்றாகும்.'' *

**மதராஸ் விரைவில் வளர்ச்சியுறல்**

1660-க்குப் பிறகு, மதராஸ் இடமுடன் வளரத் தொடங்கியது. சாமர்த்தியமுள்ள † வின்டர், ‡ ஸ்ட்ரெயின்ஷாம் மாஸ்டர் போன்ற கவர்னர்கள், 'கோலகொண்டா சுல்தான் விதித்த கொடிய பலாத்கார ஓரிகளினின்றும் அதனைக் காப்பாற்றினர். அச்சுவந்தான் அதனது அக்கம்பக்கங்களை அக்காலத்து ஆண்டுவந்தான். மேலும், அது பிற ஐரோப்பியர் போட்டியினின்றும் காக்கப்பட்டது. நாளடைவில் அங்கு § ஒரு நகர பரிபாலனசபை ஏற்படுத்தப்பட்டது : சென்னையின் பரப்பும் செல்வாக்கும் அதிகரித்தன. 1676-இல், சிவாஜி கர்நாடகத்தின்மேல் படையெடுத்த போதும், சிறிதுபிறகு, முகலாயர் செஞ்சிப் பகுதியைக் கைப்பற்றிய போதும், அது சாமர்த்தியமாய் சண்டையினின்று விலகிக்கொண்டது. 1690-இல் மராட்டியரிடமிருந்து கடலோருக்குருகேயுள்ள தேவாம்பட்டினம் (ஸெயின்ட் டேவிட் கோட்டை) கிடைத்தது. தாமஸ் பிட் (1698—1709) என்னும் கவர்னர் இதன் செல்வாக்கைப் பெருக்கினர். அவர்க்குப்பின் வந்தவர்கள் கம்பெனி வியாபாரத்தையும், இந்தியக் குடிகளின் க்ஷேமத்தையும் உயரச் செய்தனர்.

**வங்காளத்தில் ஆங்கிலேயர் குடியேற்றங்களின் முதல் நிலை (1633—63)**

வங்காளத்தில் ஆங்கிலேயர் குடியேறிய வரலாற்றைப் பல தெளிவான பகுதிகளாகப் பகுக்கலாம். 1633-இல், பாலஸோரில் முதன்முதல் ஆங்கில பண்டகசாலை யமைக்கப்பட்டதற்கும், 1663-இல், நவாப் ஷயிஸ்டா கான் அந்த இராஜதானியின் முகலாயப் பிரதிநிதியாய் வந்ததற்கும் இடைப்பட்ட ஆண்டுகளில், ஆங்கில வர்த்தகசாலைகள் சமாதானமாகவே வியாபாரத்தை நடத்திவந்தன ; அது வேறு எதையும் நாடவில்லை. அக்பர் காலத்து வங்காளம் ஹூக்ளி, ஓரிஸ்ஸா இவைகளில் நிலைநாட்டப்பட்ட முகலாய ஆதிக்கமே அவைகளுக்குப் பாதுகாப்பளித்தது. பாலஸோரேயன்றி, 1651-இல், ஹூக்ளியிலும் பண்டகசாலை யொன்று அமைக்கப்பட்டது. காளிம் பஜார், பாட்னா இடங்களில் கீழ்தர ஏஜென்ஸிகள் தோன்றின. ஹூக்ளியில் போர்த்துகீசியரும் டச்சுக்காரரும் ஆங்கிலேயருக்கு எதிராகப் போட்டியிட்டனர் : மேலும் அரகான், சிட்டகாங் கரையோரத்தில் பல கோட்டைகளைக் கட்டிய போர்த்துகீசிய கடற்கள்ளரின் கொள்ளைகளாலும் ஆங்கிலேயர் துன்புற்றனர். 1645-இல் ¶ **கேப்ரியல் பௌடன்** என்ற ஆங்கில இரணவைத்தியன் முகலாயப் பேரரசின் குடும்பத்தினர்க்குச் சிகிற்சை செய்யச் சூரத்திலிருந்து ஆக்ராவுக்கு அனுப்பப்பட்டான். அவன், முகலாய சமூகத்தில் சிறந்த செல்வாக்கடைந்தான். வங்காளப் பிரதிநிதியா

---

* For the early growthof Madras, See Love-Vestiges of Old Madras, Vol. I and Mrs. F. E. Penny : Fort St. George; and C. S. Srinivasachari—Historical Sketch of Madras in The Official Handbook of the Corporation of Madras.

† Winter. ‡ Streynsham Master § Municipal Corporation.

¶ Gabriel Boughton.

பிருந்த ஷுஜா இளவரசனின் பிரதிக்குப் பாத்திரனானன் : ஷுஜாவினிட மிருந்து, ஆங்கிலேயர் வங்காளம் முழுவதும் துறைமுகவரியும் பிறவாணிப வரிகளும் இல்லாதவாறு வர்த்தகம் செய்ய அனுமதி பெற்றனர். அவர்கள் அக்காலத்தில் பெரிதும் கிடைத்த வெடியுப்பு, பட்டு, சர்க்கரை இவைகளில் பெரும்பாலும் வியாபாரஞ் செய்தனர். 1657—58-இல் ஏற்பட்ட † வார்சுரிமைப் போரில் ஷுஜா தோல்வியுற்று, அவனுக்குப் பதிலாக, ஔரங்கசீப்பின் நம்பிக்கைக்குரிய நளகர்த்தர்களிலொருவனிய நவாப் மீர் ஜும்லா வங்காளப் பிரதிநிதியானன். அவனுட்சியில் ஆங்கிலேயர் நிலைமை தாழ்வுற்றது; அவர்கள் தங்கள் சரக்குகளுக்காகப் பாரவரிகள் செலுத்த நேர்ந்தது; அவர்கள் அதற்கு மறுத்தபோது 'நாட்டினின்று அறவே ஓட்டப்படுவீர்' என்று பயமுறுத்தப்பட்டனர்.

**இரண்டாம் நிலை (1663—1685): முகலாயரின் நிலைமை**

நவாப் ஷயிஸ்டாகான் வங்காளப் பிரதிநிதியாயிருந்தபோது (1663-85) ஆங்கிலேயர், சிட்டகாங் அரகான் இடங்களிலுள்ள தூடற்கள்ளர்களால் துன்புறுதிருந்தனர் : எனினும், முகலாய உத்தியோகஸ்தர்களின் நிர்பந்த வரிகளுக்கு ஆளாகியே யிருந்தனர். அச்சமயம் இங்கிலாந்தில் வங்காளச் சரக்குகளுக்கு—முக்கியமாகப் பட்டுக்கும் வெடியுப்புக்கும்—ஒரு பெருத்த தேவை யேற்பட்டது. வங்காளக் குடியேற்றங்களைப் பல நடவைகள் ஒழுங்குபடுத்த நேர்ந்தது; ஆயினும், மதராஸிலிருந்து அவைகளைக் கண்காணிப்பது வெகு சிரமமா யிருந்தது; ஹூக்ளியில் ஏஜெண்டாயிருந்த (1681—85) ‡வில்லியம் ஹெட்ஜெஸ் என்பவர் கள்ள வியாபாரிகளையொழிக்கவும், முகலாய உத்தியோகஸ்தர்களின் நிர்பந்த வரிகளை நீக்கவும் பெரிதும் முயன்றனர். ஆங்கிலேயரை ஆதரிப்பதாக முகலாயர் அளித்த வாக்குத்தத்தங்கள் பயனற்றனவென்றும், முகலாயப் பிரதிநிதியால் ஆங்கிலேயரைக் கேட்டினின்றும் காப்பாற்ற முடியாதென்றும் அவர் உணர்ந்தார். அவர் யாதேனு மொரு சௌகரியமுள்ள இடத்தைக் கைப்பற்றி, ஆங்குக் கோட்டைகளமைக்கவும் § தீர்மானித்தார். ஹூக்ளி நதியின் முகத்துவாரத்திலுள்ள ¶ ஸௌகர்தீவில் ஒரு காவல் நிலையமும் அமைக்க எண்ணினர்.

**மூன்றும் நிலை (1685—1690) ஆங்கிலேயர் ஒரு காவல் ஸ்தாபன மமைக்கத் தீர்மானித்தல்**

---

* வங்காளம் 'பல நேசத்தார்க்கும் கவர்க்கம்' எனப்படும் : அதன் வியாபாரத்தைப் பார்ப்போர்ஸ், வின்ஸோடன், பிரான்ட் போன்ற பல யாத்திரிகர்கள் புகழ்ந்துள்ளனர். அதன் வியாபார வரலாற்றை—Balakrishna : Commercial Relations between India and England (1601—1750); Moreland : India from Akbar to Aurangzib and The Diaries of Streynsham Master (Ed. by R. Temple : Indian Records Series)—இவை கொண்டறிக.

† The Succession War.

‡ William Hedges.

§ "நாம் நம்மைப் பாதுகாத்துக்கொள்ளல் வேண்டும்; நாம் இந்திய அரசாட்சியொடு மாறுபடல் வேண்டும்; நாம் யாதேனும் ஒரு சௌகரியமான இடத்தைக் கைப்பற்றி அங்குக் காவல்களமைக்க வேண்டும்." ஹெட்ஜெஸ் கோட்டையின் இன்றியமையாமையை மைரக்ட்டர்கள் உணருமாறு செய்தான் : C. R. Wilson : Early Annals of the English in Bengal, Vol. I, pp. 88—9.

¶ Saugor.

1686-இல் டைரக்டர் சபையினர் அறிவுகேட்டினுல் முக்ல்யச்சக்கர் வர்த்தியோடு போரிடத் துணிந்து ஒரு பெரிய கப்பற்படையொடு பிறவற்றை யும் வங்காளத்தை எதிர்க்க அனுப்பினர். ஹுக்ளி நகரில் ஆங்கிலேய ரிருப்பது அவர்களுக்கே ஆபத்தாகும். மற்றும், ஸௌகர்தீவிலோ சிட்டகாங்கிலோ தாங்கள் எண்ணியபடி காவல் நிலையமொன்றமைக்க வும் இயலவில்லை.* இங்ஙனுக, முகலாயரிடமிருந்து தப்பிவந்த † ஜாப் சார்ணுக் என்பவர் பலவிடங்களை நீண்டகாலம் பரீட்சித்தபின்பு, 1687-இல், ஹுக்ளி நதியின் கீழைக்கரையில் தற்போது கல்கத்தா‡ இருக்கு மிடத்தைத் தெரிந்தெடுத்தார். சார்ணுக் § 'கல்கத்தாவின் தந்தை' என்ற புகழ் படைத்தார். அவர் அவ்விடத்து ஒரு பண்டக சாலையை அமைக்கப் ¶ ஃபோர்மான் (உத்தரவு) ஒன்றைப் பெறுவதற்கு முகலாயப் பேரரச ருடன் பேசிப் பல உபத்திரவங்களுக்காளாகி இறுதியில் அதனைப் பெற்றார்.

**சார்ணுக்கும், கல்கத்தா ஏற்படலும் (1690)**

1690-இல், சார்ணுக் கல்கத்தாவிலேயே வசிக்கலானுர் அடுத்த ஆண்டில், ஆங்கிலேயர் ஒரு சொற்ப வருடாந்தரக் கட்டணம் செலுத்திய பின்பு வங்காளத்தில் வியாபாரஞ் செய்யலாம் என்று பேரரசரிடமிருந்து அனுமதிபெற்றார்.

**நான்காம் நிலை: கல்கத்தா வளர்ச்சி யுறல்**

ஆங்கிலேயர் கல்கத்தாவிலேயே தங்குவதாக நிச்சயித்த சில வருடங்களுக்குப் பின்பு, அவர்கள் அநேக கஷ்டங்களை யனுபவிக்க நேர்ந்தது. 1693-இல் சார்ணுக், தாம் மேற்கொண்ட நீட்டித்த பிரயாசைகளால் அலுத்துப்போய் இறந்து போனுர். 1696-இல் முகலாயப் பிரதிநிதியிடமிருந்து ஆங்கிலேயர் தாங்கள் குடியேறிய இடத்தில் காவல்களமைக்க அனுமதிபெற்றனர். அடுத்த ஆண்டில் பண்டகசாலையைச் சுற்றிக் கோட்டைச்சுவர்களையும் கொத்தளங் களையும் கட்டினர். 1700-இல் மதராஸுக்கு உட்படாது கல்கத்தா ஒரு தனி இராஜதானியாக அமைக்கப்பட்டது. இப்புது இராஜதானியின் கவர்னர்கள், அக்காலத்தில் இங்கிலாந்தில் ஆண்டுவந்த அரசன் பெயரையே பின்பற்றி இங்கெழுப்பிய கோட்டைக்குப் ₱ போர்ட்டு வில்லியம் எனப் பெயரிட்டுக் காவல்களைப் பலப்படுத்தினர். மற்றும், முகலாய சக்கரவர்த்தி

---

* இப்படிப்பட்ட நிலைமையில், ஆங்கிலேயர்க்கு வங்காள வியாபாரத்தை முற்றிலும் விட்டு விடுவதோ அல்லது போரிட்டத் துணிவதேயன்றி வேறுவழியில்லை. சூரத்திற் குப் பதிலாகப் பம்பாயை இராஜதானியாக்கியதே, முகலாயர் நலியிட்டினின்று தப்புவ தற்குச் செய்த முதல் முயற்சியாகும்.

† Job Charnock.

‡ கல்கத்தா மூன்று சிராமங்களின் சேர்க்கையாலாகியது: அவற்றுள் ஒன்றுயை சுதநுடியென்பது ஆற்றின் கிழக்குக்கரையிலிருப்பதால் மேற்குக்கரையிலிருந்து வரும் முகலாயத்துருப்புக்களால் அணுகமுடியாது: மேலும், அவ்விடம் கிழக்குத்தெற்குப் பக்கங்களில் சதுப்பு நிலங்களால் சூழப்பட்டிருக்கும்; அதனருகில் ஆறு ஒரு நீண்ட ஆழமான தேக்கத்தை அகழ்ந்துள்ளது: அலேப் பெருக்கத்தின் போது அதனுள் அக் காலப் பெருங்கப்பல்கள் சென்று வந்தன: அதுவே தற்போதைய கல்கத்தா துறை முகமாகும்.

§ The Father of Calcutta. ¶ Firman. ₱ Fort William.

பஹாதர்ஷாவும் (1707—12) அவனது பிரதிநிதி † மூர்ஷித்கூலி கானும் ஆங்கிலேயரது உரிமைகளை உறுதிப்படுத்தினர். அவைகளை ஆங்கிலேயர் பெற்றுத் தடையுருமேன்மையும் இடையரு அமைதியும் ஏற்படும் நற் காலத்தை நோக்கிய வண்ணமிருந்தனர்.††

**பகுதி 3 : 1708-ஆம் வருஷத்திய ஐக்கியத்தின் வரையில் கம்பெனியின் வரலாறு.**

இனி, இங்கிலாந்தில் கம்பெனியின் அதிர்ஷ்டதசைகளை நோக்குங்கால் ‡ ஸ்டுவர்ட்மன்னர்ஸ்தாபனத்தால் அதற்கு ஏற்பட்ட* நன்மைகளை நாம் கவனித்தல் தகும். டைரக்டர்கள் வரவர அரசன் பக்கமாகவே மனங்கொண்டனர். அவர்களுக்கு இரண்டாம் சார்ல்ஸ—ம், இரண்டாம் ஜேம்ஸ—ம் பல அனுகூலங்களைச் செய்து உரிமைகளையும் ஈந்தனர். அவர்கள், கள்ளவியாபாரிகளுக்கும், இந்தியாவோடு § தடையிலா வியாபாரஞ் செய்யவேண்டுமென ஓலமிட்டவர்களுக்கும் எதிரிடையாகக் கம்பெனியைவிடாமல் ஆதரித்தனர். சார்ல்ஸ், பம்பாய் தீவின்ட் ஹெலினா போன்ற நிலப்பகுதிகளைக் கொடுத்ததுமல்லாமல், தனது 1661, 1683-ஆம் வருஷத்திய பட்டயங்களால் கம்பெனிக்கு நாணயமடிக்கவும், கோட்டைகளையும் துருப்புக்களையும் சுவாதீனங்கொள்ளவும், போரிடவும் சமாதானஞ் செய்துகொள்ளவும், ஆங்கில ஸ்தாபனங்களில் நியாயம் வழங்கவும் உரிமைகள் கொடுத்தான். ஸ்டுவர்ட் மறுஸ்தாபன காலத்திய ஆங்கில மக்கள் பட்டுத்துணிகளையும் ஆபரணங்களையும் பெரிதும் விரும்பியதனால், இந்தியாவோடு கம்பெனி செய்துவந்த பட்டு காலிகோ வியாபாரத்தைப்பற்றிக் குறைகூறியவர்களெல்லாரும் வாயடங்கினர். அரசன் டச்சுக்காரருக்கு எதிராகவே எப்போதும் கம்பெனியை ஆதரித்து வந்தான். அன்றியும், அரசன் ஆங்கில பிரஞ்சு போர்த்துகீசிய கப்பற்படைகளை ஒன்று சேர்த்து, டச்சுக்காரரின் ஆதிக்கத்தை ஆப்ரிக்காவிலும் இந்துமகாசமுத்திரத்திலும் ஒழிக்கவும் முயன்றான்.

**கம்பெனிக்கு அரசன் ஆதரவளித்தல் (1660-1687)**

கம்பெனி வியாபாரம் வரவர மேலோங்கவே, அநேக விரோதிகள் கிளம்பினர். முன்னிலிருந்த கூட்டு மூலதனம் அதிகரிக்கவில்லை. கிடைத்த இலாபங்களனைத்தையும் சொற்ப தொகையினராய பங்குதாரர்களே எடுத்துக்கொண்டனர். மற்றைய வியாபாரிகள் அவர்கள்மேல் பொருமையுற்றனர். 1670-க்குப் பிறகு, கள்ளவியாபாரிகளிற் சிலர் இந்து மகாசமுத்திரத்தில் மீண்டும் தோன்றினர். ஆங்கிலேயர் குடியேறிய இடங்களிலோ குழப்பங்கள் ஏற்பட்டன. 1680-இல் இந்தக் கஷ்டங்கள் மேலிட்டன. கம்பெனியின் தனியுரிமை எந்தச் சட்டத்தினடியாகத் தோன்றியது? என்று கள்ள வியாபாரிகள் ஆட்சேபித்தனர். டைரக்டர்களின் தலைவராகிய ¶ சர்ஜோஷுவா சைல்ட் என்பவர் விரோதிகளை யொடுக்கிக் கம்பெனியை முற்றிலும் ¥ டோரிசுங்கமாக ஆக்கினர்.

**பலவீதங்களில் கம்பெனிக்கு ஏற்பட்ட பிரதி கூலங்கள்**

---

* Bahadur Shah. † Murshid Kuli Khan.

†† For the early growth of Calcutta, see C. R. Wilson: Early Annals of the English in Bengal, and Stewart History of Bengal, Sec. V

‡ Restoration. § Free Trade ¶ Sir Joshua Child ¥ Tory

கள்ளவியாபாரிகளுக்கு மாருகக் கம்பெனிக்குப் புதிய உரிமைகள் அளிக்கு மாறு அரசனைத் தூண்டினர். கள்ளவியாபாரிகள், 'அத்தகைய உரிமை களையளிக்க அரசனுக்கு என்ன அதிகாரமுண்டு?' என்று வாதித்தனர். அப்போது அவர், கம்பெனியின் பட்டயம் * அரசனது பேரதிகாரத்தினால் பயிலுவதென்றும், அதனது தனியுரிமைகள் முறையற்றவையல்ல என்றும் நியாயத்தீர்ப்பு பெற்றார்.

இத்தீர்ப்பின் ஆதரவினால் சைல்ட் கள்ளவியாபாரிகள் மீது போர் தொடங்கியபோது, அவர்கள் சுத்தம் செய்வதற்கு நியாயம் கிடைக் காமையறிந்து, கப்பற்கொள்ளைக்காரர்களாகமாறி,

**கள்ள வியாபாரிகள்**

வெளிப்படையாகக் கொள்ளையடிக்க ஆரம்பித்த னர். இதனால் ஆங்கிலேயரின் கிழக்கில் கொண்ட மதிப்புகுன்றியது. இங்ஙனமாக, † கிட், ‡ ஹாண்ட், § ஆவெரிபோன்ற அஞ்சாநெஞ்சினரான கடற்கள்ளர்கள்¶ தோன்றி இந்தியக் கடல்தரங் களிலே பல துணிகரச்செயல்களைப் புரிந்தனர். இந்தியாவிலுள்ள கம்பெனி உத்தியோகஸ்தர்களிற் பலர் கள்ளவியாபாரிகளுக்கு உதவியும் பக்சாத் தாபம் காட்டியும் வந்தனர்; அவர்களில் மிக்கதுணிவு படைத்தவர் தாமஸ் பிட் என்பவர். இவர், பின்பு மதராஸ் கவர்னராயிருந்து பெருந்தன்மை யாகச் சேவகமும் புரிந்தார்.

இங்ஙனிருக்க, இங்கிலாந்தில் கம்பெனியின் கூட்டு மூலதனத்தில் சிறு தொகையினராகிய பங்குதாரர்களும் அவர்களது சந்ததியார்களுமே தனி யுரிமைகொண்டாடுகின்றனரென்றும், இதரமக்கள் கம்பெனியில் சேர்வதற்கு வசதியில்லையென்றும்,

**கம்பெனிக்கு எதிராகக் கிளைத்த பிற ஆட்சேபனைகள்**

நாட்டில் உற்பத்தியாகும் சரக்குகளை கம்பனிக் துணிகளுக்கு எதிராகக் காலிகோவும் பஞ்சுத்துணி களுமே கம்பெனியால் இறக்குமதி செய்யப்படுகின்றனவென்றும் ஆட்சே பனைகள் தோன்றின. இத்தனை ஆட்சேபங்களிருப்பினும், ஸர் ஜோஷுவா சைல்ட் இரண்டாம் ஜேம்ஸினிடமிருந்து, 1686-இல் ஒரு புதுப்பட்டயம் பெற்றார். அது, ஸிவில் ராணுவ அதிகாரங்களையும், நாணயமடித்து வழங்கும் உரிமையையும், கள்ள வியாபாரிகள் சுதேசமன்னர்கள் இவர் களையடக்கப்படைகளெழுப்பும் உரிமையையும் கொடுத்தது.

இரண்டாம் ஜேம்ஸ் ஓட்டம் பிடித்தபின் மூன்றாம் வில்லியம் பட்டத் திற்கு வந்தான். அப்போது கம்பெனிக்கு எதிரிடையாகவெழுந்த இளர்ச்சி முழுமூர்மாயிற்று. 1690-இல் பார்லிமெண்டு கமிட்டி யொன்று கூடிற்று. அது செல்வாக்குள்ள கள்ள வியாபாரிகளின் முயற்சியினீடுபட்டுப் பார்லிமென்டு சட்ட மொன்றால் ஒரு புதிய கம்பெனிக்கு இந்திய வியாபாரம் செய்யப் பட்ட மளிக்கத் தீர்மானித்தது. அடுத்த ஆண்டில், ஓ விக்குகளின் ஆதரவின்

**போட்டிச்சங்கம் தோன்றுதல் (1691)**

---

* King's Prerogative.

† Kidd ‡ Hand § Avery. ஓ Whigs

¶ இக்கட்டம் கள்ளரின் விவரத்தையறிய-Biddulph: The pirates of Malabar and S. C. Hill Notes on Piracy in the Indian Ocean—in the Indian Antiquary 1923 et seq, (supplement) பார்க்கவும். ஆங்கிலேயரும் இக்கட்ற கள்ளரால் கடுத்துன்பமுற்றனர்.

கீழ் *டௌகேட்சங்கம் என்ற பெயருடன் ஒரு புதுச்சங்கம் ஏற்பட்டது. பழைய கம்பெனியின் சீர்கேட்டையும் சிறுமையையும் கண்ட பார்லிமென்டு, அதனை யொழிக்கவும், புதுச்சங்கத்திற்குப் பட்டயமளிக்கவும் வில்லியமிடம் விண்ணப்பித்தது. ஆதலின், தீவிர எதிர்ப்புக்களுக்கிடையே, சைல்ட் பெருத்த லஞ்சம் கொடுத்துப் பழைய கம்பெனிக்கு 1693-இல் ஒரு புதுப் பட்டயம் பெற்றார். இதனால் நாடெங்கும் கலவரம் ஏற்பட்டது. எந்தத் தனியுரிமையும் அளிக்க அரசனுக்கு எவ்வித அதிகாரமுமில்லையென்றும், பார்லிமென்ட் சட்டமொன்றினாலேயே அத்தனி யுரிமைகள் ஏற்படல் வேண்டுமென்றும் கூக்குரலிட்டனர். 1694-இல் காமன்ஸ் சபையினர் "பார்லிமென்ட் சட்டத்தால் தடைசெய்யப்பட்டாலன்றி, மற்றைப்படி, இங்கிலமக்களனைவரும் இந்தியாவொடும் கிழக்கு நாடுகளொடும் சமவுரிமையுடன் வியாபாரஞ் செய்யலாம்" என்று ஒன்றிய மனத்தினராய் முடிவுகட்டினர். இத்தீர்மானம் கம்பெனியின் தனியுரிமையை அறக்களைந்தது: மேலும், தனியுரிமைப் பட்டயங்களை யளிக்க அரசனனுபவித்துவந்த பேரதிகாரத்தையும் சாய்த்தது. ஆனால், இத்தீர்மானத்தின்படி வியாபாரஞ் செய்ய ஒருவரும் முன்வரவில்லை; எனவே பழைய கம்பெனியின் பட்டயம் பலனளிப்பதில், பாதொரு குறையும் நேர்ந்திலது.

**காமன்ஸ் சபையின் தீர்மானம் (1694)**

1695-இல் அரசன் அனுமதி பெற்று ஸ்காட்லாந்திய பார்லிமென்டு, ஸ்காட்லாந்திய கிழக்கிந்தியக்கம்பெனியொன்றை நிறுவியது: ரிஸ்விக் சமாதானத்திற்குப் பிறகு (1697) அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொணர்ந்தது: அதன்படி, அரசாங்கத்திற்கு 20 லட்சம் பவுன் கடன் கொடுக்க உதவிய சந்தாதாரர்களனைவரும் †கிழக்கிந்திய வியாபாரப் பொதுச் சங்கத்தினராவர்: ஒவ்வொருவரும் தாம் செலுத்திய தொகைக்கேற்பத் தனியே வியாபாரஞ் செய்ய உரிமையுடையருமாயினர். பழைய கம்பெனி தனது விவகாரங்களை மூன்று வருஷங்களுக்குள் முடிவுகட்ட வேண்டுமென்றும், அது இந்தியாவொடு 1701ஆம் செப்டம்பர் மீ முடிய வியாபாரஞ் செய்யலாமென்றும் உத்தரவளிக்கப்பட்டது. பொதுச் சங்கத்துக்குப் பணம் கொடுத்தவர்களிற் பெரும்பாலோர் டௌகேட் சங்கத்தின் அங்கத்தினராவர்; எனினும், பழைய கம்பெனி தன் பொக்கிஷதாரின் பேரினால் புதுக்கம்பெனியின் மூலதனத்தில் காற்பகுதிக்குமேல் செலுத்திவிட்டது. இங்ஙனம் மிகத்தந்திரமாகப் பழைய கம்பெனி, புதுக்கம்பெனியின் முக்கிய சொந்தக்காரனாய்விட்டது; பார்லிமென்ட் சட்டமொன்று இப்புதுக் கம்பெனிக்கு அரசப்பட்டயமும் அளித்தது.

**பார்லிமென்டு புதுக்கம்பெனியைத்தோற்றுவித்தல் (1698)**

ஆயினும், இந்த நிலைமையிலும் பழையகம்பெனி தைரியமிழக்கவில்லை. புதுக்கம்பெனியோ, தனது மூலதனம் முழுவதையும் அரசாங்கத்திற்குக் கடனுகக் கொடுத்தது; அதனது சந்தாதாரர்கள் தாமாகவே சொந்தமாக வியாபாரஞ் செய்யலாம். போதிய முதல் தொகை யில்லாமையால் கப்பல்களை யனுப்ப அதனால் இயல்வில்லை: இந்தியாவில் அதற்கு ஸ்தாபனங்களோ ஏஜென்ஸி

**இரு கம்பெனிகளின் நிலைமை**

* Dowgate Association. † General Society Trading to the East Indies.

களோ கிடையா. இதனல் "பார்லிமென்ட் பழைய கம்பெனிக்குப் பெரிய ஊறுண்டாக்கி அதனைப் பலவீனப்படுத்தியதோடன்றி, மற்றொரு புதுக் கம்பெனியையும் பிறவி நொண்டியைப்போல் தோற்றுவித்தது" என்று கருதினர்.

இவ்வாறிருக்க, பழைய கம்பெனிக்கு விரைவில் நற்காலம் ஏற்பட்டது. அது தன் தனியுரிமையை யிழப்பினும், அரசனும் பார்லிமென்டும் சட்டமொன்றினல் அதனை அழியாதவாறு நிலை நிறுத்தினர். 1700-இல் நடந்த பார்லிமென்ட் தேர்தலின் போது வாதமிட்ட பல் பிரசினைகளில், இந்திய வியாபாரமும் ஒன்றாகும். பின்னர்க்கூடிய புதிய பார்லிமென்டில், இருகம்பெனியாரும் மிகுதியாக இடம் பெற்றிருந்தனர். அரசனும், பல நாட்களாகப் பேச்சு நிகழ்ந்து வந்த ஐக்கியத்தின் நன்மைகளைப் பற்றி இருகம்பெனியார்க்கும் ஞாபகமூட்டினன். இப்படியிருக்க, இருகம்பெனியின் ஊழியர்களும் இந்தியாவில் ஒருவரோடொருவர் போட்டியிட்டுச் சண்டை செய்தனர்; ஆதலால் இருகம்பெனியாரின் வியாபாரங்களும் ஒழுங்கீன மடைந்தன: மற்றும், இருகம்பெனியாரும் தத்தம் வியாபாரங்களுக்குப் பிரெஞ்சுப்போர்க்கப்பல்களால் இடையூறு விளையுமென்றெண்ணி, 1702இல், *ஸ்பெயின் வார்சுப்போர் தொடங்குமுன், ஐக்கியத்திற்குச் சம்மதித்தனர். அந்த ஐக்கியப்படி, இருகம்பெனியின் முதற் பணமும் †பலனற்றுக் கிடக்கும் முதற் பொருளும் ‡ஐக்கியக் கம்பெனிக்குக் கொடுக்கப்படல் வேண்டும்.§

**அவைகளின் ஐக்கியத்திற்கு முன் நிகழ்ந்த உபக்கிரமங்கள்**

இது நிற்க; இருகம்பெனியின் ஊழியர்களும் இந்தியாவில் அடங்காப் பிடாரிகளாய் சண்டையிட்டுவந்தனர். பலத்த ஐரோப்பிய விரோதிகளிலாமையாலும், டச்சுக்காரரின் ஆதிக்கம் அழிந்தமையாலும், முகலாயப் பேரரசு ஒடுங்கியமையாலும், இவர்கள் நிலைத்திருந்தனர்; இல்லையேல், இருநிறத்தினரும் அழிந்து போயிருப்பர். ஆயினும், அக்கால நிலைமையை நோக்கின், முகலாயர்களின் கொடுமைகளாலும் வரி நிர்ப்பந்தங்களாலும் ஆங்கில வியாபாரம் பெருங்கேடடைந்தது. புதுக்கம்பெனியும் பேதைமையால் பழைய முறையையே பொட்டி மூன்று இராஜதானிகளை நிறுவி, அவைகளில் பிரஸிடெண்டுகளை ¶'அரசனின் ஆட்சித்தலைவர்' என்ற பட்டப் பெயருடன் அமைத்தது. உடனே, இந்தப் பிரஸிடெண்டுகளுக்கும் பழைய கம்பெனியின் கவர்னர்களுக்கும் பகிரங்கமாகவே சண்டைகள் ஏற்பட்டன. வங்காளத்திலும் மதராஸிலும் கவர்னர்கள் பிரஸிடெண்டுகளை அவமானப்படுத்திப் பணியுமாறு செய்தனர். ஆனல் பம்பாயில் பழையகம்பெனிக்கு ஒரு பெருத்த அபஜயம் ஏற்பட்டது. இப்படி

**அவைகளின் ஊழியர்கள் இந்தியாவில் சண்டையிடல்**

---

* War of Spanish Succession. †Dead Stock. ‡United Company.

§ இந்த ஐக்கியத்தினல் இருகம்பெனிக்கும் இலாபம் ஏற்பட்டது. இருகம்பெனிகளின் மூலதனம் மதிப்பில் பன்மடங்கு உயர்ந்தது; இந்த ஐக்கியத்தினலேற்பட்ட கைகண்ட பலனுகும். இத்தகைய நன்மைகள் ஏற்பட்ட போதினும் **ஐக்கிய கம்பெனியானது** யாதொரு தொழில் முதல் (Working Capital) இல்லாத குறைவோடு செயல்புரிய வேண்டியிருந்தது. அது பெரும்பாலும் கனக்குரிய நிலப்பகுதிகளின் வருமானத்தையே நம்பியிருந்தது.

¶ King's Consuls.

யிருக்கப் புதுக்கம்பெனியானது,* **ஸர்வில்லியம் நார்ரிஸ்** என்ற ராஜதூதுவனை இந்தியாவுக்கு அனுப்பியது. அவன் பெருந்தொகையை வீண் செலவிட்டு ஔரங்கசீப்பின் சமூகத்திற்கு வந்தான். ஆனால் அவனால் சக்கரவர்த்திக்கு நல்லெண்ணம் பிறப்பிக்கமுடியவில்லை. அதற்கு மாறுக, ஔரங்கசீப், தமது கப்பல்களைக் கொள்ளையடித்ததற்கு, ஆங்கிலேயரே முக்கிய காரணமாவர் என்று வெளியிட்டு, நார்ரிஸின் கம்பெனிக்கு வியாபாரஞ் செய்ய யாதொரு பரிசமனும் கொடுக்க மறுத்தனர். இதனாலால், இந்தியாவிலுள்ள ஐரோப்பிய வியாபாரிகளெல்லோருக்குமே கேடுவிளைந்தது†.

**நார்ரிஸின் தூது, 1702**

இந்த ஐக்கியக் கம்பெனியைச் செவ்வனே தொழில் நிகழ்த்துமாறு செய்வது கடினமாயிருந்தது. இந்தியாவிலுள்ள அக்கம்பெனியின் ஊழியக் காரர்களைச் சமாதானப்படுத்துவதும் கஷ்டமாயிருந்தது. 1702-ஆம் வருடத்திய **ஐக்கியத்தின்படி** "இருகம்பெனிகளின் பிரத்தியேக விஷயங்களைக் கவனிக்க டைரக்டர்களின் சபைகளிரண்டும், ஐக்கிய கம்பெனிக்காகச் மானேஜர்களது உயர்தர சபையொன்றும்" ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இவைகள் செவ்வனே தொழில் நடத்தவில்லை. எககாலத்திலிருந்த இரண்டு டைரக்டர் சபைகளும் உபத்திரவமாயிருந்தன. ஆதலின், அரசாங்கம் இரண்டு கம்பெனிகளையும் ஐக்கியப்படுத்தியதுமல்லாமல், அவைகளுக்குள் உள்ள பேதங்களையும் சச்சரவுகளையும் **கோடால்பின்** என்ற பிரபுவினிடம் விண்ணப்பிக்குமாறும், அவரது மத்தியஸ்தத்தின் வழியே நிற்குமாறும் செய்தது. இதையொட்டிப் பார்லிமென்டில் ஒரு சட்டமும் கொண்டுவரப்பட்டது; 1708-ஆம் வரு செப்டம்பர் மீ 29-ஆம் தேதியன்று கொடால்பின் தீர்ப்புச் சொல்ல, அது அங்கீகரிக்கப்பட்டது. பழையகம்பெனி தனது பட்டயங்களை யொப்புவித்துப் புதுக்கம்பெனியோடு இரண்டறக்கலந்தது. இப்படிச் சேர்ந்த கம்பெனிக்கு §**ஐக்கிய கிழக்கிந்தியக் கம்பெனி**, என்று பெயர். இந்த ஐக்கியக்கம்பெனி, அரசாங்கத்திற்கு 30 லட்சம் ரூபாய் கடனுகக் கொடுத்துள்ளது. 1726-க்குப் பின் மூன்று வருஷ நோட்டீஸ் கொடுக்கும் வரையிலும், அதன் கடன் தொகையை அரசாங்கம் பூரணமாய்த் திருப்பிக்கொடுக்கும் வரையிலும் அதன் உரிமைகளை முடிவுகட்டக்கூடாது. இந்த ஐக்கியம் சிக்கனமானதும் மனமொருமித்ததும் தன்னலமுடையதுமாகும். இருகம்பெனிகளிலும் முக்கியஸ்தர்களாயிருந்தவர்களே ஐக்கியக் கம்பெனியிலும்

**கோடால்பினது தீர்ப்பும் 1708ஆம் வருடத்திய ஐக்கியமும்**

---

* Sir William Norris. † Superior Court of Managers ¶ Award.

‡ இப்படிப்பட்ட பல்வேறுபடுவதற்குக் காரணங்கள் யாவையெனில்—இந்தியாவிலும் இங்கிலாந்திலும் இருகம்பெனியின் ஸ்திரமற்ற நிலையேயும். அவைகளுக்குள் கண்டையும், ஆங்கிலேயர் செய்த கப்பற் கொள்ளைகளுக்குக் கம்பெனி ஊழியர்களே முகலாய சுவர்னர்கள் பொறுப்பாளிகளாக்கியமையும் ஆகும். இந்தவே உபத்திரவங்களுக்குமேல், ஔரங்கசீப்பின் முதுமையால் முகலாய சாம்ராஜ்யத்தில் உள்நாட்டுப்போர் நிகழும்போலிருந்தது. (See H. Das: The Embassy of Sir William Norris). மேலும், பழைய கம்பெனி மேல் பொறுமைகொண்ட டச்சுக்காரர் இப்புதுக் கம்பெனியைக் கிளப்பிவிட்டனரென நினைவில் அதற்கேற்ப மூன்றும் வில்லியம் டச்சுக்காரரிடம் கொண்ட அனுதாபத்தை ஆதாரமாகக் கூட்டினர்.

§ The United East India Company.

முக்கியஸ்தர்களாயினர். இப்படியாக, "பழைய கம்பெனியைப் புதுக் கம்பெனி அமுக்கி விட்டதாகத் தோன்றும்; அக்காலக் கொள்கையும் அத்தன்மையதே: ஆனால் சரித்திர வாயிலாக நோக்கின் உண்மையில் பழைய கம்பெனியின் தொடர்பே காணப்படும்."*

**ஐக்கியத்தினாலேற் பட்ட விசேஷங்கள்**

இந்த ஐக்கியத்தினால் கம்பெனி வலுவடைந்தது: இனி, கம்பெனியை எளிதில் ஒழித்துவிட ஒரு மந்திரிச் சபைக்கு மியலாது: ஒரு நூற்றாண்டு வரையில் கம்பெனியின் அக்கறைகளும் அரசாங்கத்தின் அக்கறைகளும் ஒன்றுகவேயிருந்தன. இந்த ஐக்கியத்தின் பின்னர் அமைதியோடு முன்னேற்றம் ஏற்பட்டது: அக்காலத்து, பலவகைச் சக்திகளும், சாதனங்களும் பெருகின. அதனால்தான் ஆங்கிலேயர் பின்பு பிரெஞ்சுக் காரரை வெல்லமுடிந்தது. "இந்த ஐக்கியம் இந்தியாவில், ஆங்கிலேயர்க்கு ஒரு புதிய காலாரம்பத்தைச் செய்தது: அவர்கள் முன்னமேயே கோட்டைக் காப்புச்சேனைகளையும், வருமானங்களையும், நிலப்பகுதிகளையும் பெற்றிருந்தனர்.....† பண்டகசாலைக்காலம் இறுதியடைந்தது. இனி, பின்னுக்குப் போதலில்லை. இந்தியாவில், குமரி முதல் இமயம் வரை ஏகாதிபத்தியம் கொள்வோமென்ற உத்தேசம் அக்கால ஆங்கிலேயர்களுக்குக் கிட்டுதற்கரியதொன்று மிருப்பினும், அவர்கள் அத்தகைய ஏகாதிபத்திய மார்க்கத்தில் காலூன்றினர் என்பது தெளிவு."‡

## பகுதி 4 :—ஆங்கிலேயர்க்கும் பிரெஞ்சுக்காரர்க்கும் ஏற்பட்ட போட்டிக்கு முன்னிருந்த நிலைமை.

1723-க்குப்பின், முகலாய ராஜ்யம் நன்கு சிதறுண்ணலாயிற்று: இதனால் ஆங்கில வர்த்தகசாலைகள் ஏற்பட ஏதுவாயிற்று. இவ்வர்த்தகசாலைகள் சுதேச மன்னர்களை எதிர்க்கும் வலியுடையனவாயிருந்தன. இப்படியிருக்க, மராட்டியர் ஹிந்துஸ்தானத்திலும் தென்னிந்தியாவிலும் பெரும் பாகத்தைப் பாழாக்கியமையால் கலவரம் ஏற்பட்டது. மற்றும், நாதர்ஷா ஆமதுஷா படையெழுச்சிகளால் இக்கலவரம் பின்னும் அதிகமாயிற்று. ஆங்கிலேயர் சம்பந்தம்கொண்ட வங்காள சுர்நாடக நவாபுகளும், தக்காண நிஜாமும் தத்தம் நாடுகளிலுள்ள பிற ஐரோப்பிய வர்த்தகரோடு நட்புக் கொண்டனர்: ஏனெனில், அவ்வர்த்தகர்கள் இவர்களுக்கு ஆயுதங்களை புதவியும், சுங்கவரிகள் செலுத்தியும் வந்தனர். இங்கு இங்ஙனக, இங்கிலாந்தில் புதிதாகவந்த ஈஸ்ஓவர்வமிசம் அரசேற்றது; அது அமைதியைப் பரப்பி, வாணிபத்தை விரைவிலோங்கச் செய்தது- இதனால், கிழக்

---

* Beckles Wilson: Ledger and Sword. Vol. II pp. 38—39.

† Factory Period.

‡ Hunter: History of British India, Vol. I, pp. 383 - 384.

கிழக்கிந்திய மன்றத்திலும், (East India House) கிழக்கிந்தியக்கிவுகளிலுமுள்ள உத்தியோகஸ்தர்கள் உயரிய நோக்கங்களைக் கொண்டனர். புளுவின் ஆண்டுக்குறிப்புகளால் (Bruce's Annals: Letter Book, Feby. 1701). கம்பெனிக்கும் அதன் ஊழியர்களுக்குமிடையேயிருந்த கடிதப்போக்குவரத்தில் ஒழுங்குமுறை ஏற்பட்டதென்றும், அம்முறைப்படியே 1701-க்குப் பின் நடந்து வந்ததென்றும் தெரிகிறது.

இந்தியக் கம்பெனிக்கு நன்மைகள் ஏற்பட்டன. இந்திய வியாபாரத்தில் அது பெற்றிருந்த தனியுரிமையைப் பார்லிமெண்ட் 1733-வரை நீட்டித்ததுடன், அதற்குக் கள்ளவியாபாரிகளைக் கைப்பற்றவும் அதிகாரம் கொடுத்தது. அரசாங்கமும் ஐரோப்பிய விரோதிகளிடமிருந்து கம்பெனியை ஆதரித்தது. இப்படியிருப்ப 1717-இல், ஆஸ்டிரியா ஏக்கரவர்த்தியால் *ஆஸ்டெண்ட் கம்பெனி உண்டாக்கப்பட்டது. இந்தக் கம்பெனிமேல், பிழக்கிந்தியக் கம்பெனி பொருமை கொண்டது. அது, இங்கிலாந்து பிரான்சு ஹாலந்து மூன்றற்கும் உடன்படிக்கை செய்துவைத்து, அதன் மூலம் ஆஸ்டிரியா சக்கரவர்த்தியையே அவரது கம்பெனியை முடிவுகட்டுமாறு செய்ய யத்தனித்தது. 1727-இல், ஆஸ்டெண்ட் கம்பெனி கொஞ்சகாலம் வரையில் நிறுத்தப்பட்டு, நாலாண்டுகட்குப்பின் அடியோடு ஒழிக்கப்பட்டது. இந்த ஆஸ்டெண்ட் கம்பெனி ஹூக்ளி கரையிலுள்ள † பங்கிபஜார் நிலும், சென்னைக்கடுத்த ‡ கோவளத்திலும் ஸ்தாபனங்கள் அமைத்தன. ஆனால், ஆங்கிலேயரும் டச்சுக்காரரும், பங்கிபஜாரிலுள்ள ஸ்தாபனத்தை அழிக்குமாறு வங்காள நவாபைத் தூண்டினர்; கோவள ஸ்தாபனமோ தானுகவேயழிந்தது. ஆஸ்டெண்ட் கம்பெனியாரை ஆங்கிலேயர் ஒழிக்காமல் ஓங்குமாறு விட்டிருப்பின் நலமாயிருந்திருக்கும்; ஏனெனில், அக்கம்பெனியார் ஆங்கிலக்கம்பெனியைக்காட்டிலும் பிரெஞ்சு டச்சுக்கம்பெனிகளிடம் அதிக பகைமை பாராட்டினர்: எனவே, வியாபாரப் போட்டியில், பிரெஞ்சு டச்சுக்கம்பெனிகள் ஆங்கிலக்கம் பெருகவாறு மட்டந்தட்டி, இக்கம்பெனியார் சமநிலையில் போட்டியிட்டிருப்பர்.

**ஐக்கியத்திற்குப் பின் கம்பெனியின் வளர்ச்சி**

**ஆஸ்டெண்ட் கம்பெனி**

1726-இல், முதலாம் ஜார்ஜ் கம்பெனிக்குப் புதுப் பட்டய மொன்றளித்தான். அதன்படி அதன் தனியுரிமை உறுதி செய்யப்பட்டது. அன்றியும் மிக்க அதிகாரங்கள் கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டன. பிறகு, பார்லிமெண்ட் தானளித்தபட்டயத்தை 1766-வரை நீட்டித்தது; ஆனல் முடிவுகட்டுதற்கு வழக்கப்படி மூன்று வருஷ நோடீஸ் கொடுக்கப்படல் வேண்டும். 1742-இல் ஆஸ்திரிய வாரிசுப் போரில் இங்கிலாந்து தலையிட்டபோது, கம்பெனியானது அரசாங்கத்திற்குப் பத்து லட்சம் பவுன் கொடுப்பதாக ஒப்புக்கொண்டது; ஆனல் அது 1780 வரையில் தன் வியாபாரத் தனியுரிமை நீட்டிக்கப்படல் வேண்டுமென்றும், அவ்வாண்டிலும் அத்தனியுரிமை யொன்றே முடிவுறல் வேண்டுமேயன்றித் தான் வியாபாரச் சங்கமாயிருக்கும் நிலைமை அழிந்துபடக் கூடாதென்றும் நிபந்தனைகளிட்டது.

**இங்கிலாந்தில் கம்பெனி மேன்மேலும் வலிவடைதல்**

வங்காளத்தில், நவாப் மூர்ஷித் கூலிகான் (1704-1725) ஆங்கிலேயரது செல்வத்தையும் செல்வாக்கையும் கண்டு பொருமை கொண்டபோதினும் கல்கத்தா கிடமுடன் வளரத்தொடங்கியது. ஆங்கிலேயர் 1713-இல் முகலாயச் சக்கரவர்த்தி § பரூக்ஸியரிடம் ¶ ஜான் சூர்மன் என்பவனைத்

*The Ostend Company. † Banki-bazaar. ‡ Covelong.

§ Farruk-Siyar. ¶ John Surman.

தூதனுப்பி, ஒரு பர்மாணைப் பெற்றனர். அது, ஆங்கில விவகாரங்களில் நவாப் தலையிடக்கூடாதென்றும், அவர்களது உரிமைகள் இருந்தபடியே யிருக்க வேண்டுமென்றும் கட்டளை பிறப்பித்தது. இதனால் ஆங்கிலேயர்வியாபாரத்தில் விருத்தியடைந்தனர்; கரையோர வியாபாரம் பெரும்பாலும் அவர்களது கைவசமாயிற்று: அவர்கள் சந்திரகரிவிருந்த பிரெஞ்சுக்காரரோடும் சின்ன ராஜாவிலிருந்தடச்சுக்காரரோடும் விரோதமின்றியிருந்தனர்: மேலும், முர்ஷித் கூலிகானுக்குப்பின் நவாபாகவந்த ஷுஜா கானுடன் (1725-39) நட்பாடினர். 1740-இல், பிஹாரின் உதவி கவர்னராயிருந்த **அலிவர்திகான்** கலகஞ்செய்து ஷுஜாகானின் மகனைக் கொன்று தானே வங்காள நவாபாயினன். அவன் ஐரோப்பிய ஸ்தாபனங்களுக்குக் கொடுமை விளைக்காமல் அவர்களது உரிமைகளை மதித்தனன். மேலும் சிறிது காலத்தில், ஆங்கிலேயர் நாட்டின் பல பாகங்களை யாளுவரென்றும் அவன் முன்னமே அறிவித்தான். அவன் பேரார் அரசனைய **ரகுஜிபான்ஸ்லே** என்னும் மராட்டியனது பலபடையெழுச்சிகளால் துன்புற்றான்; பான்ஸ்லே ஒரிஸ்ஸாவைப் பிடித்து வங்காளத்தின்மேல் அடிக்கடி படையெடுத்தான்; ஒருதரம் மூர்ஷிதாபாத்தையே கொள்ளையிட்டான். இத்தகைய மராட்டியப் படையெழுச்சிகளில் ஒன்றின்போதுதான் கல்கத்தாவிலிருந்த ஆங்கிலேயர் நகரைச்சுற்றி ஓர் அகழியெடுக்க நவாபினிடமிருந்து அனுமதி பெற்றனர். அது, இப்போதும் * மராட்டிய அகழி எனப்படுகிறது. கல்கத்தா ஜனத்தொகையிற் பெருகினும் அதனது கோட்டை வலிகுன்றிக் கிடந்தது. 1756-இல் அலிவர்திகான் இறக்க, அவன் பேரப் பிள்ளையாகிய **ஸிராஜ் உத்தௌலா** நவாபாயினன். வங்காளத்திலிருந்த ஆங்கிலேயரோ டச்சுக்காரர் பிரெஞ்சுக்காரர் இவர்களின் செயல்களினும், நவாப் முகலாயசக்கரவர்த்தி அவர்களின் செயல்களுக்குப் பெரிதும் அஞ்சினர்.

**கல்கத்தாவின் வளர்ச்சி**

**வங்காள நவாபுகளின் கீழ் (கல்கத்தாவின் நிலைமை)**

பம்பாயில் ஆங்கிலேயரது நிலைமை மிகவும் மெலிவுற்றிருந்தது. **கன்ஹோஜி அங்கிரியாவின்** உபத்திரவம் ஓய்ந்தபாடில்லை; அவன் கண்டோரித்தீவை இன்னும் தன்வசங்கொண்டு பம்பாயை அடிக்கடி பயமுறுத்தி வந்தான். அவன் கரையோரமாகத் தெற்கே கொச்சிவரையில் சூறையாடினன்; சூரத், கார்வார், டெலிசேரி, † அஞ்சென்கோ முதலிய இடங்களிலுள்ள ஆங்கிலக் கீழ்கள எஜென்ஸிகளை ஊறுபடுத்தினன். இவை போதாவென்று ‡ மஸ்கெட்டிலுள்ள அராபிய கடற்கள்ளர்கள் தொந்தரவு விளைத்தனர். 1729-இல் கன்ஹோஜி அங்கிரியா இறந்துபோயினும் அவன்பின் வந்தோர் பகைமைபாராட்டியே வந்தனர். எனினும், சிறிதுகாலத்திற்குப்பின்பு, ஆங்கிலேயரது நிலைமை விருத்தியடைந்தது; அவர்கள், 1739-இல் போர்த்துகீயரிடமிருந்து பேஸீன ஐயித்தபேஷ்வாவொடு, ஒரு நட்புடன்படிக்கை செய்துகொண்டனர்.

**பம்பாயின் நிலைமை**

* Maratha Ditch. † Anjengo ‡ Muscat.

மதராஸ் கல்கத்தா இவைகளைக்காட்டிலும் பம்பாய் கோட்டைக் காவல்களிற் சிறந்திருப்பினும், அது மூன்று இராஜதானிகளுக்குள் மிக பலங்குன்றியிருந்தது. அங்கிரியாவின் ஆதிக்க அழிவின் வரலாறும், அவனது கோட்டையாகிய விசயதுர்க்கத் ‡ (கிரியா) தைப் பேஷ்வாவொடு சேர்ந்து முற்றுகையிட்டவரலாறும் பின்னர்க் கூறப்படும். நாளடைவில், ஆங்கிலேயர் தமக்கு நேர்ந்த ஆபத்துக்கள். ஒவ்வொன்றும் நீங்கப் பெற்றனர்: அங்கிரியாவின் ஆதிக்கமும், §சித்திகளின் எதிர்ப்பும் ஒழிந்தன. குஜராத்திலும் சூரத்திலுமிருந்த முகலாய அதிகாரம் 1730-க்குப் பின் மராட்டியர்களால் சிதறுண்டுபோயிற்று; பேஷ்வாக்களோ ஆங்கிலேயருக்குச் சிநேகிதராயினர்.

தென்னிந்தியாவில், ஆங்கிலேயர்க்கும் பிரெஞ்சுக்காரர்க்கும் போர் தொடங்குவதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்னரே, மதராஸ் பலத்திலும் செல்வாக்கிலும் அபிவிருத்தியடைந்தது. அந்நகரம் அக்கம் பக்கங்களிலுள்ள பல கிராமங்களின் சேர்க்கையால் பரிணமித்தது. அதன் நகரபரிபாலன சபை 1727-இல் திருத்தியமைக்கப்பட்டது. அதற்குப் பெரும்பாலும் வியாபாரத்தினால் வருஷத்திற்கு 30,000 பவுன் வருமானம் வந்தது. இவ்வாறு, இந்த ஆங்கில இராஜதானி ஒருவருமறியாமல் படிப்படியாகப் பலம்பெற்று வருவதை அக்காலத்துக் கர்நாடகத்தில் சண்டையிட்டுவந்த சுதேச மன்னர்கள் கவனியாதிருந்தனர். ஆனாலும், ஆங்கிலேயர் வசம் அதிக நிலப்பகுதிகள் இல்லை; கிழக்குக்கரையில் ஆங்கிலேயர் காலிட்ட இடங்கள் மதராஸைத் தவிர, செயிண்ட் டேவிட் கோட்டையும், அதனை யடுத்த கடலூரும், விசாகப்பட்டினத்திலும் மசூலிப்பட்டினத்திலுமுள்ள பண்டக சாலைகளுமாகும்.

**மதராஸின் வளர்ச்சி (1698-1746)**

1739-இல் மராட்டிய சகுஜீபான்ஸ்லேயின் படை யெழுச்சியால் கர்நாடகம் பெரிதும் கலக்கமுற்றது. கர்நாடகத்தைப்பற்றிய சம்பவங்களை நன்கு அறிதற்கு, 1698-இல் மராட்டியரிடமிருந்து முகலாயர் செஞ்சியைக் கைப்பற்றிய செய்தியினின்று தொடங்குவோம். தெற்கே முகலாய சேனாதிபதியாயிருந்த ஸுல்பிகார்கான் கர்நாடக ஆட்சியைத் தாவுத்கான் என்ற தைரியமுள்ள பட்டாணிய வீரனிடம் ஒப்படைத்தான். ஔரங்கசீப் இறந்த பின்பு, ஸுல்பிகார்கான் ஹிந்துஸ்தானத்திற்குத் திரும்பியபோது, தக்காணமுற்றும் தாவுத்கான் கண்காணிப்பிலே வைக்கப்பட்டது. அவன், கர்நாடகத்தைக் கவனிக்கத் தன் உத்தியோகஸ்தர்களிலொருவனுகிய சாததுல்லாகானை நியமித்தான். 1723-இல், தக்காணத்தில் நிஜாமுல்முல்க் தனது பேரதிகாரத்தை நிலை நாட்டியபோது, அவனால் சாததுல்லா நவாபாக்கப்பட்டான். 1732-இல், சாததுல்லா இறக்கவே, அவன் மருகனுகிய தோஸ்துஅலி நவாபாயினன். தோஸ்து அலியின் மருமகனுகிய சந்தாசாஹிப் என்பவன் ஆற்றல் வாய்ந்தவன்; அவன், நாயக்கராஜ்யமாகிய திருச்சிராப்பள்ளி மதுரை யிவைகளில் பட்டத்திற்காக ஏற்பட்ட சண்டையைக் கண்டு, இதுவே தக்க சமய

**கர்நாடகத்தின் வரலாறு (1698-1744).**

‡ Gheria. the Sidis

மென்று கொண்டு, திருச்சிக்கோட்டையைப் பிடித்து நாயக்க வமிசத்தை யொழித்துத் தானே நவாபின் பேரில் அப்பகுதி முற்றும் ஆளத்தொடங்கினன் (1736). மற்றும், செல்வம் படைத்த சிறிய மராட்டிய ராஜ்யமாகிய தஞ்சாவூரும், அதனை ஏற்படுத்திய வெங்கோஜியின் வமிசத்தினரால் ஆளப்பட்டுவந்தது. (இந்த வெங்கோஜி புகழ்பெற்ற சிவாஜியின் மாற்றாந்தாயின்மகனவன்).

**நவாப் சாதத்துல்லாகானின் வமிசத்தினர்**

சந்தாசாஹிப் எப்போதும் பிரெஞ்சுக்காரருடன் சிநேகமாகவிருந்தான்: தஞ்சாவூரில் பட்டத்திற்காக ஏற்பட்ட சண்டையில் கலந்து கொள்பவன்போல் நடித்துக் காலைக் கால் துறையுகந்ததைக் கைப்பற்றி அதனைத் தன் நண்பனும், புதுச்சேரி கவர்னருமாகிய மோவுக்குக் கொடுத்தான்.

**சந்தாசாஹிப்**

நாதர்ஷா பணியெடுத்தபோது, நிஜாம் மூல்முல்க் டில்லிக்குச் சென்றிருக்கும் சமயம் பார்த்து, பாஜிராவ் பேஷ்வா ஔரங்காபாதின்மேல் படையொடு சென்றார்; அப்போது பிரார் தலைவனாகிய மருஜீபான்ஸ்லே கர்நாடகத்தின் மேல் பெரும் படை யெடுத்து வந்தார். தோஸ்து அலி மராட்டிய சேனை வெள்ளத்தைத் தடுக்க முயன்றான். ஆனால் சண்டையில் கொல்லப்பட்டான்: மராட்டியர் நாடு முற்றும் பரவி, மதராஸ் புதுச்சேரிப் பக்கங்களில் பயம் விளைத்தனர். தோஸ்து அலியின் மகனான ஸப்தர் அலி நவாபாயினான். அவன் தன் மைத்துனனாகிய சந்தாசாஹிபினிடம் பொறுமை கொண்டு, திரும்பிச் செல்லும் மராட்டியரை அவன் மேல் பாயும்படி தூண்டினன். ஆகலின், அவர்கள் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டனர்: சந்தாசாஹிப் சிறிது எதிர்த்தபின் சரண்புகுந்தான்: அவன் கைதியாய்ப் பிடிக்கப்பட்டு சடாராவில் எட்டாண்டுகள் இருந்தான். (1741). இவ்விதம், பிரெஞ்சுக்காரர் ஒரு சிறந்த நண்பனை இழக்க நேர்ந்தது. *குத்தியைச் சேர்ந்த முராரி ராவ் என்ற துணிகர குணமுள்ள மராட்டிய வீரன் திருச்சிராப்பள்ளிக்குக் கவர்னராக நியமிக்கப்பட்டான்.**

**மராட்டிய படையெழுச்சி 1740-41**

சிறிது காலத்திற்குப் பின்பு, அரண்மனையில் நேர்ந்த கலகமொன்றில் ஸப்தர் அலி கொலையுண்டபோனான்: அவன் மகனிய சிறிய பையன் பட்டத்துக்கு வந்தான். அச்சமயம், டில்லியிலிருந்து தக்காணத்திற்குத் திரும்பிய நிஜாம் கர்நாடகத்தை ஒழுங்கு படுத்தவும் தன் பேரதிகாரத்தை நிலை நாட்டவும் பெருத்த படையெழுச்சியை மேற்கொண்டான். எல்லோரும் அவனுக்குப் பணிந்தனர்: மராட்டியார்கூட அவனெதிர் நிற்கவாற்றாது திருச்சிராப்பள்ளியை விட்டுப்போயினர். கர்நாடகத்தின் அரசச் சிறுவனை நிஜாம்முல்முல்க் உரிமையுள்ள நவாபாக அங்கீகரித்தான்;

**கர்நாடகத்தில் குழப்பம்**

---

* Gooty.

** இச்சம்பவங்களைப்பற்றி முற்றும் அறிவதற்கு Elphinstone : Rise of the British Power in the East: ed. by Colebrooke ; Chap. III and M. Wilks : Historical Sketches of South India (2nd ed.) Vol. I பார்க்கவும்.

ஆனல், அச்சிறுவன் சிக்கிரத்தில் கொலையுண்டு போனன். நிஜாம் பேரரி காரியாதலால், உடனே அன்வருதீன் நவாபாக நியமித்தான்: அவன் வடசர்க்கார் பிரதேசத்திலுள்ள சிகாகோலின் கவர்னரா யிருந்து, பின்பு நவாபாகிய சிறுவனுக்கு ரக்ஷகனுகவு மிருந்தான். (1744).

நிஜாமின் படையெழுச்சி

இந்த அன்வருதீன் தான், ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் போர் தொடங்கிய போது நவாபாய் ஆட்சிபுரிந்தவன். கர்நாடகத்தில் குழப்பம் ஏற்பட்ட இந்த வருஷங்களில் † பென்யான் என்பவர் மதராஸ் கவர்னராயிருந்தார்: அவருக்குப்பின், 1744-ஆம் ஜூன் மார்ச்சுமீ ‡ நிகொலஸ் மார்ஸ் என்பவர் கவர்னராஞர். மார்ஸ் கவர்னரான உடனே, ஐரோப்பாவில் இங்கிலாந்தும் பிரான்சும் போரிலிறங்கியுள்ளன என்ற செய்தி சென்னைக்கு எட்டியது. ஆனல், சென்னையிலிருந்த ஆங்கிலேயர், தூர நடக்கும் ஐரோப்பியவீரகாரியங்களைக்காட்டிலும் அருகேநடக்கும் மராட்டிய கர்நாடக விவகாரங்களைப்பற்றியே விசாரப்பட்டனர். அவர்கள் தங்களது வியாபாரத்தையும் ஸ்தாபனங்களையும் பற்றியே கவலையுற்றிருந்தனர். இன்னும் சுதேச மன்னரது பொருமைக்குப் பாத்திரமாகவில்லே. ஆயுதச் செய்கைகளால் அடைக்கூடிய புகழைப் பெற இன்னும் ஆசை வைக்கவில்லே."

அன்வருதீன் நவாபாதல் 1744

ஆங்கிலேயரது இந்திய வியாபாரமானது, தொடக்கத்திலேயே தனக்கு முன்னிருந்த டச்சு போர்த்துகீசியரது வியாபாரங்களைப் போலவே, இந்தியர்களது வியாபாரத்தையும் கப்பலேற்றுமதிகளையும் ஒடுக்குமாறு அமைந்தது. கரையோர வியாபாரமும், அயல் நாட்டுடன் புரிந்த வியாபாரமும் பெரும்பாலும் இந்தியர் கையினின்று நழுவி விட்டன. நாளடைவில், அதனலேற்பட்ட நஷ்டம் அதிகப்பட்டது. இங்கிலாவின் அயல் நாட்டு வியாபாரம் ஐரோப்பியர்வசம் மாறும் இந்த இயக்கத்தில், முதன் முதல் டச்சுக்காரரே பரிபூர்ணமான செய்கைகளே மேற்கொண்டனர். ஆங்கிலேயர் அவர்களைப் பின்பற்றினர்.† "அடிக்கடி யேற்பட்ட சூறைகளாலும், கொள்ளேகளாலும், கடற்போர்களாலும், ஐரோப்பியர் தமக்குள்ளும் ஆசிய மன்னர்களோடும் ஆய்காங்குக்கொண்ட பகைமையாலும், இந்திய வியாபாரிகளும் கப்பல்வணிகரும் பயமுற்றனர். வியாபாரத்தில் தனியுரிமை பெறவும், முக்கிய வியாபாரப் பொருள்களின் விற்பனே வாய்கள்களைத் தம் கைக்கொள்ளவும் கடின உபாயங்கள் மேற்கொள்ளப்பட்டதனல் நிச்சயமாகப் பிரதிகூலம் ஏற்பட்டது. இதனல், இந்தியரும், பொதுவாக ஆசியாவிலுள்ளோரனேவரும் இலாபகரமான அயல்நாட்டு வியாபாரத்தினின்று விலக்கப்பட்டனர். மற்றும், சொற்ப சுங்க வரிகளிற் காட்டிய சலுகையும், *கடப்பு வரிகளில்லாமையும், வழியிலுள்ள பல ஆயத்துறைகளின் வரித்தொந்தரவுகளில்லாமையும் ஈண்டுக் கவனிக்கத்தக்கன. இங்ஙனேற்பட்ட மூன்றுவித காரணங்களால் இந்திய

கம்பெனி வியாபாரத்தால் இந்திய வியாபாரத்திற்கும் கப்பலேற்றுமதிக்கும் நேர்ந்த விளைவுகள்

† Benyon. ‡ Nicholos Morse.

† Balakrishna Commercial relations pp. 138—4. * Transit duties.

வியாபாரிகள் உள்நாட்டு வியாபாரத்தோடு நிற்க வேண்டியதாயிற்று."† கம்பெனியினது வியாபாரக் கப்பலேற்றுமதி வளர்ச்சிகளால், இந்திய வியாபாரமும் கப்பலேற்றுமதியும் தீங்குறினும், இங்கிலாந்தின் கப்பல் வாணிபம் பெரிதும் வலுவுற்றது.

# அத்தியாயம் 3

## தென்னிந்தியாவில் ஆங்கில-பிரெஞ்சுப் போட்டி

### முதல் நிலை 1746—1751

### பகுதி 1. ஆஸ்டிரிய வாரிசுப் போர் இந்தியாவில் பரவுதல் (1744-48)

1741-இல் டூப்ளே புதுச்சேரி கவர்னராஞர்; இதற்கு முன்பு சந்திர நகரின் தலைவராகப் பல்லாண்டுகளிருந்து அதனை வளமுறச் செய்தார். தானே சொந்தமாக வியாபாரஞ் செய்து பெரும் பொருளீட்டினர்; பிரெஞ்சுக் கம்பெனியின் அபிவிருத்திக்காகத் தம் சொந்த பணத்தையே கொடுத்துதவினர். சந்திர நகரிலிருந்த போது, டூப்ளே, திறமை வாய்ந்த புத்தி கூர்மையுள்ள மாதை மணந்தனர்; அவள், டூப்ளே யோசனைகளுக்கு உடந்தையாயிருந்தனள்; அவள் மிக்க தந்திரசாலி; அதிகாரம் வகிப்பதிலேயே ஆர்வமிக்கவளாதலின், அவள தனது மிகுமிஞ்சிய கபட யுக்திகளால் கணவனது நற்பெயரைக் கெடுத்தாள்.*

**டூப்ளேயின் கவர்னராட்சி**

கர்நாடக விவகாரங்கள் மிகவும் சீர்கெட்டிருப்பதை டூப்ளே கண்ணுற்றார். புதுச்சேரியோ ஆபத்திற்கிடமாயிருந்தது. கடல் பக்கமாகப் பிற ஐரோப்பிய மெதிர்ப்பினும், நிலப்பக்கமாகப் பலத்த இந்திய சுதேசாதிகார மெதிர்ப்பினும், அது கண்ணைக் காத்துக்கொள்ளத் தக்க நிலையிலில்லை. டூப்ளே கவர்னரானபோது, புதுச்சேரி கழிந்த மராட்டியப் படையெழுச்சியினாலும், கொடிய பஞ்சத்தினாலும் மிகவும் வருந்துவதைக் கண்டார். அவர், குடியேற்ற ஸ்தாபனங்களை ஒழுங்கு படுத்தவும், நாட்டிலுள்ள இந்திய மன்னர்களின் மதிப்பையும் பிரீதியையும் சம்பாதிக்கவும் பெரிதும் முயன்றார். கம்பெனி டைரக்டர்கள் காவல்களமைப்பதில் பணச் செலவு செய்ய வேண்டாமென்று ஆணையிட்டும், டூப்ளே அதனைப் பொருட்படுத்தாது புதுச்சேரியில் கடல் பக்கமாகக் கோட்டைக் காவல்களமைக்கத் தொடங்கினர். அதற்காகத் தம் சொந்த பணத்தையும் கொடுத்தார். பிரெஞ்சுக்காரரின் சிறந்த சிநேகிதர்களாயிருந்த தோஸ்து அலியின் வமிசத்தினரை விலக்கிவிட்டு அன்வருதின் வமிசத்தினர் அரசேற்றபோது, டூப்ளே புது நவாபின் தயையைச் சம்பாதிக்க வெகு சிரத்தையுடன் முயற்சித்தார்.

**அவர் புதுச்சேரியைப் பலப்படுத்தல்**

1740-இல் ஐரோப்பாவில் ஆஸ்டிரிய வாரிசுப் போர் தொடங்கிற்று; ஐரோப்பாவில், இங்கிலாந்திற்கும் பிரான்ஸுக்கும் மூண்ட பகைமை இந்தியாவிலும் அவரவர் குடியேற்றங்களில் பரவுமென்று அடுத்த ஆண்டு முதலில் ஒரு வதந்தி யேற்பட்டது. ஆங்கிலேயர் அப்படிப்பட்ட எண்ணத்தை

† Balakrishna commercial relations. pp. 163-4.

* See Diary of Ananda Ranga Pillai (1736-61)—Eng. Trans. Vol. V pp. 347-48.

வரவேற்றனர் : ஏனெனில், அத்தகைய போர் நிகழின், பிரெஞ்சுக்காரரது அதிக்கிரமத்தை யொழிக்க ஆங்கிலக்கப்பற்படையும் துருப்புக்களும் உதவி செய்யும். ஆனால், பிரெஞ்சுக் காரரோ ஆங்கிலேயரோடு சண்டை யேற்படு மென்றே கருதவில்லை. அவர்கள் ஸ்தாபனங்களிற் பெரும்பாலன நன்கு காவல் செய்யப்படவில்லை. டுப்ளே பாடுபட்டும், புதுச்சேரி ஒரு பலத்த ஐரோப்பிய விரோதியை எதிர்த்து நிற்கும் நிலை யிலில்லை. பிரெஞ்சுக்காரர் இந்திய மன்னர்களோடு கட்டாடி அதிகாரம் பெற எண்ணினரென்பது வாஸ்தவம்தான் ; எனினும், ஐரோப்பிய யுத்தத்தை இந்தியாவிலும் பரப்ப எண்ணியது, கொஞ்ச காலம் வரை அவர் களது கோரிக்கைகளைப் பாதித்தியது.

**இருநிறத்தினும் போரினுல் நேர்ந்த விரோதங்கள்**

1744 மார்ச்சுக்குச் சில மாதங்கட்கு முன், இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் போர் நிகழுமென்று அறிக்கை யிட்டபோது, இந்தியாவிலும் எண்டைகள் நிலைமை இப்படியே போலிருந்தது. டுப்ளே, இந்தியாவில் மட்டும் இருநிறத்தினரும் கொதுமலாயிருக்க ஏற்பாடுகள் செய்ய எண்ணி, மூன்று ஆங்கில இராஜதானிகளிடமும் விண்ணப் பித்தார். மற்றும், நாற்பது இந்தியக் கம்பெனிகளுக்குள்† கொதுமல் வழக்காறு நிலவ வேண்டுமென்பதற்காகப் பிரெஞ்சு அரசாங்கம் 1742-இல் ஆங்கில அரசாங்கத்தை யடுத்தது. ஆங்கிலேயரோ, போரிடுதலிலே விரும்பினர். ஆதலின், ஆங்கிலேயர் கடற்கரையை யாளும் *மன்னரது போர்க்கப்பல்களின் நடவடிக்கைகளைத் தங்களால் கட்டுப்படுத்த முடியா தென்று டுப்ளேவுக்கு எச்சரிக்கை யிட்டனர். உண்மையாக, ஆங்கில அரசாங்கம், **பார்னெட்** என்னும் தலைவன்கீழ் ஒரு கப்பற்படையைக் கீழ் நிசையிலுள்ள பிரெஞ்சுக் கப்பல்களைக் கைப்பற்று மாறும், புதுச்சேரியை எதிர்ப்பதில் சென்னைக்கு உதவிபுரியுமாறும் அனுப்பியது.

**டுப்ளே நொதுமலா யிருக்கச் செய்ய முயற்சிகள்**

டுப்ளே ஓர் உபாயத்தில் பங்கப்படவே வேறோர் உபாயம் உடனே எண்ணினர். அவர் நவாப் அன்வருதினுக்கு முறையிட்டார். நவாபைத் தன்னுட்சிப் பகுதிக்குள் ஆங்கிலேயர் பிரெஞ்சுக் காரரை எதிர்க்காதவாறு தடைசெய்ய வேண்டினர். உடனே நவாப், ஆங்கில கவர்னராகிய மார்ஸுக்கு அறிக்கை விடுத்தான். அதனில் ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர் களுக்கு யாதொரு தீங்குகளுக்கு அவனே பொறுப்பாளி யாவானென்றும் பிரெஞ்சுக்காரர் ஆங்கிலேயரைப் பயமுறுத்தினால், நவாப் அவர்களையும் இம்மாதிரியே தடைசெய்வானென்றும் கண்டிருந்தது. இவ்விதமாக டுப்ளே தான் எண்ணியதில் வெற்றியுற்றார். நவாபின் மிரட்டத்தை மீற ஆங்கிலேயர்க்கு இயலவில்லை. ஆகவின், பார்னட், கப்பற்படையோடு சென்னைக் கரையை யடைந்தார், எளிதில் புதுச்சேரியைத் தாக்காமல் விலகிச் செல்ல நேர்ந்தது.

**நவாபினிடம் டுப்ளே முறையிடல்**

† Convention of Neutrality * Royal Navy

இப்படியிருப்ப, மொரிஷஸ் போர்போன் தீவுகளில் பிரெஞ்சுக் கவர்னராயிருந்த மாஹி டிலபோர்டனே என்பவன் தன் கைவசமுள்ள பொருளையும் அத்தீவுகளில் கிரட்டிய கம்பெனிக் கப்பல்களையும் கொண்டு ஒரு கப்பற்படை யமைத்தான். மேலும், மடகாஸ்கர் தீவிலுள்ள ‡காபிரிகளைப் பலவந்தப்படுத்தி யுத்த வீரர்களாக்கினான். ஒரு கிடைப படையெடுப்புக்கு வேண்டியவைகளைச் சித்தப்படுத்திக்கொண்டு 1745- ஆம் வரு ஜூன் மாதம் வங்காள விரிகுடாவிற்கு வரலாயினான். டுப்ளே, தமக்கு உடனே உதவி வேண்டுமென்று இவனுக்குக் கடிதமெழுதி யிருந்தார். புதுச்சேரிக்கு வரும் வழியில், ஆங்கிலக் கப்பற்படையை எதிர்த்தான். ஆனால் இச் சண்டையில் வெற்றி தோல்விகளை நிச்சயிக்க முடியவில்லை. ஆங்கிலத் தலைவன் தன் கப்பல்களைப் பழுதுபார்ப்பதற்கும், உணவுப்பண்டங்கள் கிடைப்பதற்கும் கிரட்டிவதற்கும் சிலோனுக்குச் சென்றுவிட்டான்; அவன் திரும்பவும் வருவதற்குள், லபோர்டனே தன் சைன்யபங்களை அதிகப்படுத்திக் கொண்டான். இதனால் ஆங்கிலத்தலைவன் மிகவும் பயந்து, கோழக்கரையை நீத்து, வங்காளத்திற்குச் சென்றுவிட்டான். ஆங்கில கப்பற்படை நீண்டு போயினமையால், கிழக்குக்கரை முற்றும் பிரெஞ்சுக் கப்பற்படை யின் சுவாதீனமாயிற்று. சென்னையோ பாதுகாப்பில்லாது இடந்தது.

**லாபோர்டனேயின் படையெழுச்சி**

சென்னையிலிருந்த ஒரு சிறு கோட்டைக் காவற்படையினால்தான் மார்ஸ் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. அவன், கவா யின் உதவியை நாடினான்; ஆனால் அது பலிக்க வில்லை. ஆங்கிலக்கப்பற்படை மீண்டதுமுதல் டுப்ளே லாபோர்டனே இருவரும் சென்னையைப் பிடிப்பது நிச்சயமெனத் தீர்மானித்தனர். லாபோர்டனே, தன் கப்பல்களோடும், புதுச்சேரி காவற்படையின் ஒரு பகுதியோடும் சென்னைக்கு முன் தோன்றினான் (செப்டம்பர், 4, 1746). பிரெஞ்சுக்காரர் சென்னையிலிறங்கினர். ஆங்கில துருப்புக்கள் விட்டு நீங்கின. இங்கியர் குடியேறிய நகரப்பகுதியில் சில கொத்தளங்களைக் கட்டிச் சிறு முற்றுகை யிட்டபின்பு, கோட்டை அவர்கள் வசமாயிற்று. (செப்டம்பர், 10.)

**சென்னையை அவன் பிடித்தல் (செப். 1746)**

இதற்குப்பின், இரண்டு பிரெஞ்சுத் தலைவர்களுக்குள்ளும் சண்டை ஏற்பட்டது. இதைப்பற்றிப் பல அபிப்பிராய பேதங்கள் உண்டு. லாபோர் டனே முதலில் சென்னைப் பரிஷ்காரத்தைப் பற்றி டுப்ளே சொற்படி நடப்பதாக விருந்தான். ஆனால் அவன், சென்னையின் விடுதலைக்காகப் பணந்தைப் பற்றி ஆங்கிலேயருடன் பேச்சாடும்போது, அவனுக் காக முடிவு கட்டப்பட்ட லஞ்சத்தைப்பற்றியும் பேச்சு நிகழ்ந்தது. டுப்ளே ஆரம்பத்திலிருந்தே சென்னையை ஆங்கிலேயருக்குத் திருப்பிக் கொடுக்கக் கூடாதென்றும், விடுதலைப் பணத்தைப் பற்றிய பேச்சுக்கள் யாவும் நிறுத்தப்படல் வேண்டுமென்றும் தீர்மானித்தார். மேலும், அவர் ஆங்கி லேயர்க்குச் சென்னையைத் திருப்பிக் கொடுத்துவிடுதலால் நமக்கு ஏற்படும்

**லாபோர்டனேக்கும் டுப்ளேக்கும் சண்டை**

† Mahe de la Bourdonnais. ‡. Coffres.

ஆபத்துக்களை வெளியிட்டார்; ஆனால், லாபோர்டனே டுப்ளேயின் அதிகாரக்கண்டிப்புக்குக் கீழ்ப்படிய விரும்பவில்லை. இரண்டுபேருக்கும் பிரவு வலுத்தது; லாபோர்டனே தான் முதலில் கோரியபடி செய்ய வற்புறுத்தினான்; மேலும், பிரெஞ்சுக்காரரைச் சென்னையிலிருந்து காவி செய்வதற்கும் ஒப்பந்தஞ் செய்துகொண்டான்; இப்படியிருக்க, ஒரு புயல் காற்று அவனது கப்பற்படையின் பெரும் பகுதியை அடித்துக்கொண்டு போயிற்று.

**நவாபின் படை பிரெஞ்சுக்காரர்க்குத் தோற்றல் (அக்டோபர் 1746)**

லாபோர்டனே எஞ்சிய கப்பற்படையோடு கரையை நீத்துப்போயின பின்பு, டுப்ளே அவன் விடுதலைப்பணம் பற்றிச் செய்துகொண்ட உடன் படிக்கையைப் ஆட்சேபித்து, சென்னையை ஆங்கிலேயரிடம் திருப்பிக்கொடுக்கமாட்டே னென்று வெளியிட்டார்; இதற்குள் நவாப் அன்பருகின் தன்னிஷ்டப்படி செய்யச் சென்னையைத் தன்னிடம் கொடுத்துவிடும்படி கேட்டபோது, டுப்ளே பலமிரங்கமாக மறுத்தார். ஆகவே நவாப் சென்னையைப் பிரெஞ்சுக்காரரிடமிருந்து கைப்பற்றும்படி தன் மகன் மாபுஸ்கானை ஒரு பெரும்படையுடன் அனுப்பினர். முகம்மதிய துருப்புக்கள் அவ்விடத்தை முற்றுகையிட்டன; ஆனால் சில பிரெஞ்சு யுத்தவீரர்களு வெளிப்பாய்ந்து எதிரிகளை ஸான்தோமை நோக்கியோடு மாறு துரத்தினர். ஆங்கு புதுச்சேரியிலிருந்து வந்த பிரெஞ்சுப்படை யொன்று எதிரிகளை எளிதில் சிதறவடித்தது. இச்சண்டையைக் குறித்துச் சரித்திர ஆசிரியர்கள் பேசுதல் முற்றும் பொருந்தாவிடினும், இதனிடப்பற்றிப் பேசுதலில் மிகவிருப்பமுடையர். ஏனெனில், 'போரிதிலில் முகம்மதியரே சாலச் சிறந்தவர்' என்று பலர் கொண்டிருந்த மோகம் முதன்முதல் இப்போதுதான் வியோகமடைந்தது. மேலும், ஒரு நூற்றாண்டாக இல்லாமல் இப்போதுதான் புதிதாக முதன்முதலில் தன்கு பழக்கப்பட்ட ஒரு சிறு ஐரோப்பிய படை பெரிய ஓர் இந்தியப் படையை முறியடித்து வென்றது.*

நவாப் மிகவும் அஞ்சியொடுங்கினர். டுப்ளே அவரோடு தன்கு மாறு பட்டு அவரிடமிருந்து யாதொரு ஆபத்தும் நேராதவாறு தன்னை விடுவித்துக்கொண்டார். அவர் ஸெயின்டேவிட் கோட்டையிலிருந்து ஆங்கிலேயரைத் துரத்துவதில் பேருக்கங்கொண் டிருந்தார். ஏனெனில், கரையோமாக ஆங்கிலேயர் வசமுள்ளது அது ஒன்றுதான். அது புதுச்சேரிக் கருகிலுள்ளது; அதுவும் சென்னைபோல்

**ஸெயின்ட்டேவிட் கோட்டையைப் பிடிக்கப் பிரெஞ்சுக் காரரது முயற்சிகள்**

---

* H. Dodwell: Dupleix and Clive, The Beginning of Empire (1920) p. 20. சேர், பாலியர் போன்றவர்கள் முகலியப் படைகளுக்குக் கட்டுப்படுதல் சமர்த்தியமும் பேராதவென்றும், ஐரோப்பியப் படைகள் அவைகளினும் மிக மிகப் பலமானவையென்றும் கூறிப் போந்தனர். அதுமட்டுமல்: அடையாற்றுச் சண்டை என வழங்கப்படும் இச்சண்டை, "தனக்கு முன் எண்பது வருடகாலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த ஆயுத முன்னேற்றத்தின் நிறப்பையும் போர்த்தந்திரங்களின் மதிப்பையும் விசதமாக்கிற்று." காலாட்படைகள் துப்பாக்கிகளையும் சனியன்களையும் (bayonets) ஆயுதமாக்கொண்டன. பீரங்கிகள் மிக்க சக்தியுடையவையாயின. முகம்மதிய குதிரைவீரர்களால் இந்நவீன காலாட்படைகளை யும் வெடிப்படைகளையும் எதிர்த்து நிற்க முடியவில்லை. முகம்மதிய துருப்புக்களுக்கு கல்ல துப்பாக்கிகள் கிடையா: அவர்களது துப்பாக்கி வீரரும் பிரயோசன மற்றவர். 18-ஆம் நூற்றாண்டிலிருந்த ஐரோப்பிய ராணுவமுன்னேற்றதான் இந்திய விரோதிகளை யெதிர்க்க ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் பெருதவி புரிந்தது.

நன்கு பாதுகாக்கப்படவில்லை. அடுத்த பதினெட்டு மாதங்களுக்குள் டுப்ளே அவ்விடத்தைக் கைப்பற்ற மூன்குதரம் முயற்சித்தார். ஆனல், அவை பயனிலவாயின. ஸெயின்ட் டேவிட் கோட்டையைப் பிடிப்பதற்கு டுப்ளே செய்த ஒவ்வொரு முயற்சியும், நவாபுக்குக் கோபத்தை மேன்மேலும் மூளச்செய்தது. கப்பற்படையில்லாமையினல், பிரெஞ்சுக்காரர்க்கு உண வுப்பொருள்களையும் பிறவற்றையும் கடல்மூலம் பெறுதல் கடின மாயிற்று. அவர்களோ இப்போது மதராஸ், புதுச்சேரி, காரைக்கால் மூன்றையும் காவல் செய்யவேண்டும்; இத்தனைக் கஷ்டங்களுக்குமேல் ஒரு ஆங்கிலக் கப்பற்படை வந்து சேர்ந்தது. டுப்ளே தாமில்லாதபோது புதுச் சேரிபிடிபடுமென்று பயந்தார். நவாபோ ஸெயின்ட்டேவிட் கோட்டையி லுள்ள ஆங்கிலேயர்க்குதவியாக சில குதிரை வீரர்களை யனுப்பினர். 1748-ஆம் ஜூன ஜனவரியில் டுப்ளே ஸெயின்ட்டேவிட் கோட்டையை மூன்று முறை தாக்கினர். ஆனல் ஆங்கிலக் கப்பற்படை கரையில் தோன்றிய தால், பிரெஞ்சுக்காரர் உடனே மீள நேர்ந்தது. மறுபடியும் ஒரு பிரெஞ்சுக் கப்பற்படை வரும்வரையில் சில மாதங்கள்வரை கர்நாடக நிலைமையில் யாதொரு மாறுபாடு மேற்படவில்லை. ஆனல் அக்கப்பற்படை டுப்ளேவுக்கு ஒரு வித உதவியும் புரியவில்லை: ஸெயின்ட்டேவிட் கோட்டையை டுப்ளே கடைசி முறை தாக்கியபோது, மேஜர் லாரன்ஸ் மிக்க தீரத்துடன் அதனைக் காத்தனர். இதனல் டுப்ளேயின் எண்ணம் பழுதுபட்டது.

**புதுச்சேரியை ஆங்கிலேயர் தாக்கியதன் அபஜயம்**

**பாஸ்கவென்** என்ற ஆங்கில கப்பற்படைத் தலைவன் கிழ் ஒரு பலத்த கப்பற்படை, ஜூலைமீ 1748-இல், புதுச்சேரியை ஜெயிப்பதற்கு வந்தது. ஆங்கிலேயர் புதுச்சேரி முற்றுகையை ஜாக்கிரதையாக நடத்தியிருப்பின், அவர்கள் ஜெயித்திருக்கலாம். அவர்களது பட்டாளம் தங்கிய இடமும் † துப்பாக்கிப் படைகளை உபயோகித்த விதமும் நன்கமையவில்லை. பிரெஞ்சுக்காரரோ திடமுடன் தங்களைக் காப்பாற்றிக் கொண்டனர். பாஸ்கவென் இரண்டு மாதங்களுக்குப்பின் முற்றுகையை விட்டுவிட நேர்ந்தது; இது "டுப்ளேவுக்குப் பிரதானமான வெற்றியாகும். ஆங்கிலேயர்க்கு ஒரு பெருத்த தோல்வியுமாகும்."

**சமாதானம் செய்யப்படல்**

பாஸ்கவென் ஸெயின்ட்டேவிட் கோட்டையின்மூன் தங்கியிருந்த போது ‡ **ஏய்லாஷாபெல்** உடன் படிக்கை செய்யப்பட்ட செய்தி எட்டியது; அதன்படி, அவரவர்கள் போரில் கைப்பற்றிய கைதிகளையும் இடங்களையும் திருப்பிக்கொடுத்துவிட வேண்டும். ஆகையால், மதராஸ் ஆங்கிலேயருக்கு 1749-இல் திருப்பிக்கொடுக்கப்பட்டது; பாஸ்கவென் ஐரோப்பாவிற்குத் திரும்பினன்: இனி, டுப்ளேவுக்கு ஆங்கிலேயர் எதிர்ப்பென்ற பயமில்லை.

## பகுதி 2: இருதிறத்தினர்க்கும் போரினல் விளைந்த பயன்கள்.

இவ்விதமாக, இந்தியாவில் ஆங்கில-பிரெஞ்சுப் போட்டியின் முதல்

---

Boscawen. † Batteries. ‡ Aix-la-Chapelle.

நிலை முடிவுற்றது. இதனை முடிவுபடுத்திய ஐரோப்பிய உடன்படிக்கை, இருநிறத்தினருக்கு மொப்ப போர்க்கு முன்னிருந்த நிலைமையையே மீண்டும் நிறுவமுயன்றது. இப் போரினால் இருகம்பெனிகளின் வியாபாரமும் அழிவுற்றது; இனியாவது, நற்தம் இந்திய ஊழியர்கள் அமைதியுடன் வியாபாரஞ் செய்வரென இரு கட்சியாரும் கருதினர். ஆனால் நிலைத்து இந்தியாவில் ஆங்கில பிரெஞ்சுக்காரர்களுக் கிடையே அமைதி நிலவர்தவாறு செய்யச் சில காரணங்களேற்பட்டன. இந்திய மன்னர்கள், ஐரோப்பிய ராணுவ உத்தியோகஸ்தர்களால் பயிற்றப் பட்டு மேலுட்டு ஆயுதங்கள் தாங்கிய படைகளின் மேன்மையையும் பலத் தையும், தம்படைகளோடு ஒப்பிட்டுப்பார்த்து நன்குணர்ந்தனர். ஆகவே, அவர்கள் ஆங்கில பிரெஞ்சுக்கட்சியினரில் யாவரேனும் ஒருவரோடு சமாதானம் செய்துகொள்வதன் நன்மைகளைக் கண்டறிந்தனர். ஐரோப்பியரைத் தமக்கு ஊழியஞ் செய்யுமாறு வசிகரிப்பதற்குப் பணத் தையும் நிலப்பகுதிகளையும், பிற உரிமைகளையும் அவர்கள் கொடுக்க முன் வந்தனர். ஐரோப்பியர்களால் இத்தகைய ஆசைக்காட்டலுக்குள்ளா காமலிருக்க முடியவில்லை; சுதேசமன்னரின் விவகாரங்களில் தலையிடாமலிருக்கவும் முடியவில்லை. மேலும், இருநிறத்தினரும் பல படைகளையுடைய ராயிருந்தனர். இப்படைகள், சென்றபோரில் இந்தியாவில் திரட்டப்பட்டனவாகும். இவை மிக்க செலவையுண்டாக் கின: எனினும், தங்களிடம் இப்படைகளிருப்பதே அவர்கள் ஒரு சிறந்த பலமெனக் கருதினர். அவைகளைக்கொண்டு சில நற்பயன்களை யடைய லாமென்றும் அவாவினர். இங்ஙனமாக, சுதேசப்படைகளினும் மேம் பட்ட நமது படைவன்மையும் *அப்படைவன்மை யுணர்ச்சியுமாகிய இரு காரணங்களால் அவர்கள் நிலைமை சிக்கலுக்குள்ளாயிற்று.†

**இருநிறத்தினர்க்கு மேற்பட்ட விரோதங்கள்**

சென்ற யுத்தத்தினால் பிரெஞ்சுக்காரரின் போர்த்திறமை புகழுற்றது அவர்கள் சென்னையைக் கைக்கொண்டதும், மாபுல்காம்மேல் வெற்றி கொண்டதும், ஆங்கிலேயர்க்கு எதிராகப் புதுச்சேரியை வெற்றியுறப் பாதுகாத்ததும் அவர்களுக்குப் புகழ் விளைத்தன. நேற்றே நிரம்பிய அறிவினராகலின், இந்திய நிலை மையைப்பற்றித் தீவிரமாக எண்ணிச் செயல் புரியத்தொடங்கினர்; அவரது அரசியல் பேராசை முன்னையினும் அதிகரித்தது. "சென்னையை ஆங்கிலேயர்க்குத் திருப்பிக்கொடுத்த அந்த ஆண்டிலேயே தான்கொண்ட உயரிய நோக்கங்களை நிறைவேற்ற" அடு-

**பிரெஞ்சுக்காரரின் புகழ் மேலோங்கல்**

---

* Consciousness of this strength. † Rapson: The Struggle between England and France for Supremacy in India (1887) p. 46. "போர்தொடருவதற்கு முன் நிகழ்ந்த சம்பவங்கள் தென்னிந்தியாவின் சுதேச அரசியலில் அவைகள் குலைத்துநிலையற்ற நிலைமையை விளக்கின. மொகில் சக்ரவர்த்தியின் அதிகாரம் நிலைகுலைந்து ஆற்றல் வாய்ந்தவரென்பதையும், அதனால் சுதேச மன்னர்கள் அவர்களை யெதிர்க்கக் கொணரும் எதிரிகளை சேனைகளுக்கும் அவர்கள் நிரந்தரம் பயப்படவேண்டியதில்லை யென் பதையும் நன்கு விளக்கின. இதனால், கடற் பலம் பிரபலமாயுள்ள தேசம் நிலத்திலும் பிரபல மடைந்திருக்கவேண்டுமென்பது வெளிப்படை." The Cambridge History of India, Vol. II Chap. V. p. 124.

யிட்டார். இப்படியிருக்க, 1748 ஜூன்மீ கேர்த்திவாய்ந்த நிஜாமுல்முல்க் முதிர்ந்த வயதில் இறந்துபோனர்; இதனல், எங்கும் குழப்பமேற்படுமென்றும், முன்னமே குறைவுற் றிருந்த அன்வருதீனின் அதிகாரம் இன்னும் மெலி வடையுமென்றும் எங்கும் வதந்திகளேற்பட்டன.

**நிஜாமுல்முல்க் இறத்தல் (ஜூன் 1748)**

நிஜாம் இறக்கும்போது அருகிருந்த அவனது இரண்டாவது புதல்வராகிய **நாஸர்ஜங்** தக்காண சுபேதாயினன். நிஜாமின் மூத்தமகனகிய **காஸியுத்தீன்**, முகலாயப் பேரரசியல் விவகாரங்களில் ஆழ்ந்து டில்லியிலேயே யிருந்தான். ஆனல், பிஜப்பூர் அதோனி கவர்னரும் நிஜாமின் பேரனுமாகிய **முஸபர்ஜங்**கென்பவன் பட்டத்திற்கு உரிமைபாராட்டினன். தனது பாட்டனர் நமக்குப் பின் தன்னையே பட்டத்துக்குரியவனக உயிலின் மூலம் நியமித்துள்ளார் என்று அவன் வாதாடினன்; இவ்விதமாக, தக்காணத்தில் பட்டத்திற்குச் சண்டை சம்பவிக்கும் போலிருந்தது.

**பட்டத்திற்குப் போட்டி**

நிஜாமுல்முல்க் இறந்தமையால் அன்வருதீன் பாதிக்கப்பட்டார். கருநாடகத்தில் இன்னும் பல இடங்களில் அதிகாரம் வகித்து வந்த சாதாதுல்லா குடும்பத்தைச் சேர்ந்தோரால் தொந்தரவு ஏற்படுமென்று அவர் பயந்தார். அவர், முக்கியமாக வேலூரி லிருந்த மூர்தஸா அலிகான் என்பவனுக்குப் பயந்தார். அவன் இதற்குமுன்பிருந்த இரண்டு நவாபுகளின் கொலையிலும் உடன்தையாயிருந்தவன். மேலும் அவன் அன்வருதீனையே ஒழிக்கச் சூழ்ச்சிகள் செய்து வந்தான். இப்படியிருக்க, மராட்டியரால் கைதி செய்யப்பட்ட சந்தாசாஹிப் விடுதலைபெற்றுப் பெரும்படையுடன் தெற்கு நோக்கி வருவதாகச் செய்தி எட்டியது. சந்தாசாஹிப் பல நாட்களாக விடுதலைபெறவும் கர்நாடக நவாபாகவும் சூழ்ச்சிகள் செய்து வந்தான்; நவாப் பதவியினின்று நீக்கப்பட்ட பழைய வமிசத்தினரின் வழி வந்தவனென்று வழக்காடினன். அவன் டுப்ளேயோடு அடிக்கடி கடிதப்போக்கு வரத்து செய்து வந்தான். அவனது குடும்பமே புதுச்சேரியில்தான் வசித்து வந்தது. கடைசியில் 1748-இல் சிறையினின்று விடுதலை பெற்றான். பிற்பாடு இந்த விடுதலைக்குக் காரணம் யானேயாவேன் என்று டுப்ளே உரிமை பாராட்டினர்.

**அன்வருதீனின் நிலை**

**சந்தாசாஹிப் முஸபர்ஜங்கோடு சேர்ந்துகொள்ளல் (1749)**

விடுதலைபெற்றவுடனே சந்தாசாஹிப் முஸபர் ஜங்கோடு சேர்ந்து அவனுக்காகப் பொருளும் படைகளும் திரட்ட உதவிபுரிந்தார். அன்வருதீனை யெதிர்ப்பதற்குப் பிரெஞ்சுத் துருப்புக்களை உதவிக்கு அனுப்புமாறு டுப்ளேவோடு ஏற்பாடு செய்துகொண்டான். அவன் முஸபர்ஜங்கை முதலில் கர்நாடகத்தைப் பிடிக்கும்படியும், பின்பு தக்காணத்தை வெல்லும்படியும் நாள்டினன். முஸபர்ஜங்கும் சந்தாசாஹிபும் கர்நாடகத்தின்மீது படையெடுத்து வந்த போது, சந்தாசாஹிபின் மகனை ராஜசாஹிப் ஒரு பிரெஞ்சுப்படையுடன் அவர்களோடு சேர்ந்து கொண்டான் (1749). வயது முதிர்ந்த அன்வருதீன்

**டுப்ளேவோடும் சேர்ந்துகொள்ளல்**

---

Will.

அவர்கள் வருகையை எதிர்பார்த்திருந்தான். ஆம்பூரில் அவர்கள் பெருத்த வெற்றியடைந்தனர். இப்போரில் பிரெஞ்சுப்படைகள் மிக மும்மரமாகப் போரிட்டன. அன்வருதீன் கொல்லப்பட்டார். அவரது சகோதரனும் மூத்தமகனும் கைது செய்யப் பட்டனர். அவரது இரண்டாவது மகனுகிய **முகம்மது அலி**, தாம் கவர்னராய் ஆண்டு வந்த திருச்சி ராப்பள்ளிக்கோட்டைக்கு ஓடிவிட்டார் (ஆகஸ்டு, 1749).

**சந்தாசாஹிப் ஆம்பூரில் வெற்றிபெறல் (1749)**

இவ்விதமாக, பிரெஞ்சுக்காரர் நாட்டின் அரசியற்போர்களில் தீவிரமாகக் கலந்துகொள்ளலாயினர்: அப்படியே ஆங்கிலேயரும் சும்மா இல்லை. சென்ற யுத்தத்தில் மதராஸை இழந்ததனால் ஆங்கிலேயர் மிக்க கேடுகளையடையவில்லை. ஏனெனில் மதராஸைக் காட்டிலும் பெரியனவும் காவல் செய்யப்பட்டனவுமாகிய கல்கத்தாவும் பம்பாயும் இப்பேரழிவுக்குள் பாகிக்கப்படவில்லை. செயின்ட்டேவிட் கோட்டையோ டுப்ளேயின் தாக்குதல்களால் சிறிதேனும் ஊறுபடவில்லை. பெரும்பாலும் ஆங்கில கப்பற்படை கடலில் மேன்மை பெற்றேயிருந்து பிரெஞ்சு வியாபாரத்தைத் தழ்ந்திலை எய்தச் செய்தது. இந்திய அரசியல்விவகாரங்களில் தலையிட்டுக் கொள்ளவேண்டுமென்ற விருப்பம் ஆங்கிலேயர்க்கும் உண்டாயிற்று. பாஸ்கவென், மதராஸுக்குத் தெற்கே இக்கியரும் போர்த்துகீயரும் குடியேறியிருந்த ஸான்தோமைக் கைப்பற்றினன். ஏனெனில், சந்தாசாஹிப் அதனை டுப்ளேவுக்குக் கொடுத்து விடுவான் என்ற பயமிருந்தது. டுப்ளேயோ மதராஸை இழந்ததற்கு ஈடாக அதனைப்பெற விரும்பினர் (1749). அதே ஆண்டு முதலில் தஞ்சாவூரில் அரசினின்றும் விலக்கப்பட்ட அரசனெருவன் மீண்டும் அரசு பெறுவதற்காக ஆங்கிலேயர் உதவியை நாடினன்; அவர்கள் செய்யும் உதவிக்காகக் கொள்ளிடநதிமுகத்துவாரத்திலுள்ள தேவிகோட்டையென்ற துறைமுகத்தை அவர்களுக்குக் கொடுத்துவிடுவதாகவும் கூறினன். ஆங்கிலேயரும் இதற்குச் சம்மதித்தனர். ஆங்கிலேயரால் அப்போது ஆண்டுவந்த தஞ்சாவூர் அரசனை அரசினின்று நீக்கமுடியாமற் போயினும், அவர்கள் தேவிகோட்டையைக் கைப்பற்றினர். தஞ்சையரசனும், ஆங்கிலேயர் இனி தன்னைத் தொந்தரவு செய்யாமலிருத்தற்காகத் தேவிகோட்டையை அவர்கள் வசமே உறுதிப்படுத்தினன். முதலில் உதவியை நாடியவரைப்பற்றி ஆங்கிலேயர் சிந்திக்கவேயில்லை; அம்மட்டோ! அவனைச் சென்னையில் தம்காவல் கீழ்வைக்கவும் உடன்பட்டனர். ஆங்கிலேயரது இச் செய்கையைப்பற்றி விரித்துரைத்தல் தேவையின்று: சுதேசவிவகாரங்களில் ஆங்கிலேயர் தலையிடுவதன் விஷயம் இதுதான்.*

**ஆங்கிலேயர் தமது பேரவாவை வெளிப்படுத்தல்**

**அவர்கள் ஸான் தோமைப்பெறுதல்**

**தேவிகோட்டையைப் பெறுதல்**

---

* சில்லாண்டுகட்கு முன்பு சந்தாசாஹிபின் உதவியால் பிரெஞ்சுக்காரர் கர்நாடகத்தைக் காலப் பிடித்தனர்; இப்போது ஆங்கிலேயர் தேவிகோட்டையைப் பிடித்தது அதற்குப் பழிவாங்கு சொன்னது போலாகும். "இதனால் கர்நாடகத்தின் அப்பருநிலில் இருநிறத்தினரும் சமனிலையெய்தினர்".

## பகுதி 3 : பிரெஞ்சுக்காரர்களின் வெற்றிகள் (1749—1751).

ஆம்பூர் வெற்றிக்குப் பின் முஸபர்ஜங்கும் சந்தா சாஹிபும் ஆற்காட்டுக்குள் புகுந்தனர். முஸபர்ஜங் தக்காண நவாப் என்ற தகுதியில் தென்னிந்தியாவுக்கு உயர்தலைமை கொண்டாடினான். அதன்படி சந்தா சாஹிபைக் கர்நாடக நவாபாக்கினான் : சில நாட்கள் தூதாகலமாயிருந்தபின்பு அவர்கள் புதுச்சேரிக்குச் செல்ல, அங்கு அவர்களை நன்கு வரவேற்கப்பட்டனர். தங்களுக்கு வேண்டிய உதவியைப் பிரெஞ்சுக்காரர் செய்ததால், அவர்கள் டூப்ளேவுக்கு முழுவுரிமையோடு புதுச்சேரிக் கருகிலுள்ள வில்லிய நல்லூர், பாகூர் ஜாகீர்களைக் கொடுத்தனர். மேலும், முஸபர்ஜங் தன் னதிகாரத்தை நன்கு நிலைநாட்டியபின்பு, பிரெஞ்சுக்காரர்க்கு மசூலிப் பட்டினத்தைக் கொடுப்பதாக வாக்களித்தான்.*

**டூப்ளே புது வுரிமை களைப் பெறல்**

டூப்ளே சந்தாசாஹிபை உடனே திருச்சிராப்பள்ளிக்குப் போய் முகம் மது அலியை அங்கிருந்து ஓட்டுமாறு தூண்டினர் ; சந்தாசாஹிபின்பேரில் டூப்ளே கர்நாடகத்தில் உண்மையான யஜமானராயிருக்க விரும்பினர். அதற்கேற்ப, முகம்மது அலியை அறவே யொழித்தாலன்றி முடியாது; ஏனெனில், ஆங்கிலேயர் அவனுக்கு உதவிசெய்ய ஆரம்பித்தனர். முஸபர்ஜங்கும் சந்தா சாஹிபும் ஒரு பிரெஞ்சுப் படையுடன் திருச்சிராப்பள்ளிக்குப் புறப்பட்டுத் தஞ்சாவூர் பக்கம் திரும்பினர். ஏனெனில், தஞ்சையரசன் பெருத்தபணம் கொடுத்தனுப்புவ னென்றெண்ணினர். ஆனல், அவன் இவர்களை எதிர்த்து மூன்று மாதங்கள்வரை அவர்களைச் செயலற்றிருக்கச் செய்தான். ஆங்கிலேயரும் பஹிரங்கமாகத் தஞ்சை அரசனுக்கு தைரிய மூட்டினர். நாஸிர்ஜங் உதவிபுரிவானென்று ஆங்கிலேயர் அவனுக்கு நம்பிக்கை பிறப்பித்தனர் ; கலகக்காரர்களாகிய முஸபர்ஜங் சந்தாசாஹிப் இருவரையும் அடக்க நாஸிர்ஜங் விரைவில் வருவானென்றும் கூறினர்.

**முகம்மது அலியால் நேரலாகும் ஆபத்து**

இவ்விதமாக ஆங்கிலேயர் தங்களுக் கேற்பட்ட நற்சமயங்களை நழுவ விடவில்லை. ஸான்தோமைக் கைப்பற்றிய உடனே, திருச்சிராப்பள்ளியி லிருந்த முகம்மது அலிக்கு உதவி புரிய ஒரு சேனையை அனுப்பினர். அவர்கள் ஆம்பூர்ச் சண்டையின் விசேடத்தையும், முஸபர்ஜங் சந்தாசாஹிப் இருவரையும் உடனே அடக்காமற்போனுல் தன் னதிகாரத்திற்கு நேரலாகும் ஆபத்துக்களையும் விளக்கி நாஸிர்ஜங்குக்கு எழுதினர்.

**ஆங்கிலேயர் விசேஷத்த பிரதிகூலங்கள்**

---

* புதுச்சேரியோடு இப்பிரதேசங்களையும் சேர்க்கவே, சென்னைச் சுரையிலிருந்த கப்பற்படைத் தலைவன் பாஸ்டவென் ஸான்டிரஸை முகம்மது அலிக்காகப் பிடித்ததனை பதை முன்னரே கண்டோம்.

அவர்கள் தமது முழுவியாபாரமும், வாழ்க்கையுமே டுப்ளேவினல் பழுதுறுமெனக் கண்டனர்; எனவே தங்களைக்காத்துக்கொள்ளப் பல வழிகளை மேற்கொண்டனர்*.

**நாஸர்ஜங் கர்நாடகத்திற்கு வருதல்**

கடைசியில், அமைதிபரப்புமாறு கர்நாடகத்திற்கு வர நாஸர்ஜங் தீர்மானித்தான். அவன் வருகையால் டுப்ளே திடுக்கிட்டார். பிரெஞ்சுக் காரரும் சந்தாசாஹிபும் தஞ்சாவூர் முற்றுகையை விடுத்துப் புதுச்சேரி புக்கனர். நாஸர்ஜங் தனது பெருஞ்சேனையுடன் புதுச்சேரிக்குப் பதினைந்து மைல் தூரத்தில் தங்கினன். சில ஆங்கில வீரர்கள் அவனைச் சேர்ந்தனர். அந்த ஆபத்தான சமயத்தில் பிரெஞ்சுப்படை போரிடமறுத்துப் புதுச் சேரிக்கு மீண்டது. பிரெஞ்சுக்காரர் தன்னை நித்துச் சென்றது கண்டு மூஸபார்ஜங் நாஸர்ஜங்கிடம் சரண்புக அவன் அவனைக் கைதியாக்கினன். சந்தாசாஹிப் மாத்திரம், தன் பழைய நட்பினராய பிரெஞ்சுக்காரரை விட்டு நீங்காது புதுச்சேரிக்கு மீண்டுபோனன்.

**பிரஞ்சுக்காரர் செஞ்சியைப் பிடித்தல்**

டுப்ளே நாஸிர்ஜங்கைத் துணிவுடனெதிர்த்தார். பிரெஞ்சுப்படை எதிரியின் பாசறையை வெற்றியுறத் தாக்குதலும் செய்தது. நாஸர்ஜங் ஆற்காடு திரும்பினன். அங்கு ஆறுமாத காலம் சும்மாவிருந்தான். இதற்குள், செஞ்சிக்கருகாமையிலுள்ள பல விடங்களையும் பிரெஞ்சுக்காரர் பிடித்துக்கொண்டனர். யாவராலும் பிடிபடாதென்றெண்ணியிருந்த செஞ்சிக்கோட்டையையும் **புஸ்ஸி** என்பவர் வீரசாகசச் செயல்புரிந்து பிடித்தார். இந்தப் புஸ்ஸிதான் பின்பு நற்கியாதியுடன் திகழ்ந்தவர். செஞ்சியைப் பிடித்ததால் பிரெஞ்சுக்காரரின் புகழ் மேலோங்கியது. இப்படியிருக்க, டுப்ளே கடல்மூலம் சில படைகளையனுப்பி மசூலிப்பட்டினத்தைக் கைப்பற்றினர். நாஸர்ஜங் ஆற்காட்டினின்று செஞ்சியைத் திரும்பவும் பிடிக்கத் தீர்மானித்தான். ஆனல், மழைக்காலம் தொடங்கிற்று. உணவுப் பொருள்களில்லாமையினல் அவனது சேனை வருந்திற்று. கடப்பை, கர்நூல், சாவனூர் நவாப்புகளாகிய பட்டானிய சிற்றரசர்களும் டுப்ளேயின் தந்திரப்படி துரோகஞ் செய்தனர். இங்ஙனம் யாண்டும் அவன் பங்கப் பட்டான். அவன் போர்க்களத்திலோர் சண்டையில் கொல்லப்பட்டான். கைது செய்யப்பட்ட முஸபர்ஜங்

**நாஸர்ஜங் இறத்தல்**

---

* "உண்மை நோக்கின், ஆங்கிலேயர் டுப்ளேயின் வழிகளை வழக்கப்படி தாமறிக்காமல் அதிவிரைவினுணர்ந்தனர். பிரெஞ்சுக்காரரது சொற்படி நடக்கும் நவாப் ஒருவன் ஏற்பட்டுவிடில் அதனல் பிரெஞ்சுக்காரர்க்குவிளையும் நன்மைகளை ஆங்கிலேயர் சடுதியில் உணர்ந்தார். மேலும், அக்கிரமமாகப் பட்டத்தேறிய சந்தாசாஹிபை ஒழிப்பதற்கு உதவி செய்தால் தமக்கு ஏற்படும் நன்மைகளையும் கண்டறிந்தனர்.....நாஸர்ஜங் வந்தால் (சந்தாசாஹிபும், முஸபர்ஜங்கும், பிரெஞ்சுக்காரரும் கூடிச்செய்யும்) கலகம் போரின்றியே அடக்கப்படுமென்ற உறுதிகொண்டு ஆங்கில கவர்னர் முகம்மது அலிக்கு உதவி யனுப்பினர்.....நாஸர்ஜங்வருகையைத் தடுத்துநிறுத்துதற்குத் தம்மாலியன்றவரை அவர்கள் முயன்றனர். .....இறுதியில், நாஸர்ஜங் கர்நாடகத்திற்கு வந்தபோது, ஆங்கிலேயர் மாசெரன்வை ஒரு சேனையுடன் அவனுடன் சேர்ந்துகொள்ளுமாறு அனுப்பினர். (The Private Diary of Ananada Ranga Pillai, Vol. VI Introduction by H. Dodwell, pp. XVII & XVIII),

ராஜத்துரோகிகளால் விடுதலை செய்யப்பட்டுப் பிரஞ்சு ஆதரவினால் சிம்மாசனமேறினான். (டிசம்பர், 1750).

முஸபர்ஜங் புதுச்சேரிக்குத் திரும்பினான். டுப்ளே அவனை அன்புடன் வரவேற்றார். டுப்ளே தற்போது கர்நாடக நிலைக்குத் தலைவராயினர். சந்தாசாஹிப் கர்நாடக நவாபாக உறுதிசெய்யப் பட்டான். கிருஷ்ணா நதியின் தெற்கேயுள்ள நாடுகளுக்கெல்லாம் டுப்ளே நிஜாமின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். பிரெஞ்சு கவர்னர் முகம்மது அலியை அலட்சியஞ் செய்து பிற்பாடு சாவகாசமாய் அவனை யடக்கலாமென்று எண்ணினர். மேலும் கர்நாடக விவகாரங்களைக் கண்காணிப்பதில் தாம் பெற்ற புத்தூரிமைகளுக்கு ஆங்கிலேயரு முடன்படுவரென்றும் நினைத்தார். இங்ஙனிருப்ப முஸபர்ஜங் 1751ஜூ ஜனவரியீ புதுச்சேரியிலிருந்து தன் தலைநகருக்குச் சென்றான். அவனுடன் புகழ்பெற்ற புஸ்ஸியும் ஒரு பிரெஞ்சுப்படை யுடன் சென்றான்.

**டுப்ளேவின் உன்னத நிலை**

இந்தப் புதிய நிஜாம் தன் அதிகாரத்திற்கும் தற்காப்புக்குமாகப் பிரெஞ்சுத் துருப்புக்களினுதவியை நாடினான். புதிய நிஜாம் தன்தலை நகர்க்குப் புறப்பட்டவளவில் கடப்பை, கர்நூல், சாவனூரிலுள்ள பட்டாணியத்தலைவர்கள், நாஸர்ஜங் மரணத்தால் தமக்குக் கிடைத்த சிறு பரிசுக்காக வெறுப்புக்கொண்டு, பெரும் கூக்குரலிட்டனர். இக்கலவரத்தில் முஸபர்ஜங்கும் அவனைச் சார்ந்தோரும் கொல்லப்பட்டனர். புஸ்ஸியோ புதிய நிஜாமைத் தேர்ந்தெடுப்பதில் சேனையின் முக்கியஸ்தர்களை உடன்படுமாறு சாதுரியமாய்த் தூண்டினான். நாஸர்ஜங்கின் தம்பிகளுளொருவனாகிய ஸலாபட்ஜங் தக்ஷிணத்தில் சிம்மாசனமேறினான். அவன் உடனே பிரெஞ்சுக்காரர்களது உரிமைகளனைத்தையும் உறுதிப்படுத்தினான்; புஸ்ஸியை முகலாய ராஜ்யத்தின்* சமஸ்தானாதிபதியாக்கினான். நிஜாமிடம் பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கு வலி குன்றாமல் நிலைபெற்றது (1751).

**நிஜாமாகிய முஸபர்ஜங்கிடமும் ஸலாபட்ஜங்கிடமும் புஸ்ஸி செல்வாக்குடனிருத்தல்**

பிரெஞ்சுக்காரர் தொடர்ச்சியாக வெற்றிகள் பெற்றபோதிலும், ஆங்கிலேயர் முகம்மது அலியையே கைவிடாது சார்ந்திருந்தனர். அவனுதவிக்காக ஐரோப்பியர் பலரை அனுப்பினர். டுப்ளே செய்யும் எத்தகைய சமாதானப் பேச்சுகளுக்கும் இணங்காத படி அவர்களுக்கு நன்மதியூட்டினர். புதிய ஆங்கிலேய கவர்னராகிய சாண்டர்ஸ் என்பவர், ஆங்கிலேயரது கடினநிலையை யுணர்ந்தார். அவர் தென்னிந்தியாவில் ஆங்கிலேயரது அதிர்ஷ்டதசை முகம்மது அலியின் அதிர்ஷ்டத்தைப் பொறுத்துள்ளது என்ற உண்மையைத் தெளிவினின் உணர்ந்தார். இதற்கிடையே சந்தசாஹிப் கொள்ளிடத்தைக் கடந்து திருச்சிராப்பள்ளியை எதிர்க்கத் தானே வரத்தொடங்கினான். 1751—54-க்கு இடையுள்ள மூன்று வருடங்களிலும் நிகழ்ந்த போர்க்கருமங்கள் சிக்கலாகிச்

**ஆங்கிலேயர் முகம்மது அலியைச் சார்ந்திருத்தல்**

* A nobleman of the Moghul Empire.

சலிப்பையுண்டாக்கின. இறுதியில் இப்போரில் ஆங்கிலேயர் அடைந்த வெற்றியானது பிரெஞ்சுக்காரர்க்குப் பாதகம் விளைவித்து, அவர்கள் தென்னிந்தியாவில் நிலைநாட்ட வெண்ணிய ராஜ்யயோகங்களைப் பாழ் படுத்திற்று. இப்போர்களில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும், சுதேச பகைமன்னர்களுக்கு உதவிசெய்பவராகத் தோன்றினரேயன்றிப் பிரதான சுதந்திரகளாகத் தோன்றவில்லை. சந்தாசாஹிபுக்காகப் பிரெஞ்சுக்காரரும், முகம்மது அலிக்காக ஆங்கிலேயரும் உதவினர். வெகு நாட்கள் வரை இருதிறத்தினரும் முனைந்து போரிடவில்லை. சந்தா சாஹிபும் பிரெஞ்சுக்காரரும் திருச்சிராப்பள்ளிக்கு வடக்கேயுள்ள ஸ்ரீரங்கம் தீவைப்பிடித்துக் காவேரியின் தென்கரையில் கோட்டைக்குக் கிழக்கே தங்கினர். ஆங்கிலசேனைக்கு இருமுறை மதராஸிலிருந்து உதவிப்படை வந்தது; ஆனால், அவை நன்கு பயிற்றப் படவில்லை; பிரெஞ்சுத் துருப்புக்களும் அம்மாதிரி நிலையிலேதானிருந்தன. இருதிறத்தினரும் ஒருவர்க் கொருவர் பலனற்ற மத்தியஸ்த பேச்சுக்களை நிகழ்த்திவந்தனர்; திருச்சிராப்பள்ளியைப் பிரெஞ்சுக்காரர் முற்றுகை யிட்டபோது, ஆரம்பத்தில் ஊக்கமும் குன்றியும் முழுமனதின்றியும், தீவிரமின்றியும் முற்றுகையிட்டனர். 1751-இறுதியில், முகம்மது அலி மைசூர் அரசர்க்குத் திருச்சியைக் கொடுப்பதாகச் சொல்லி அவருதவியை நாடினன்; மேலும், அவன், புகழ்வாய்ந்த பலாட்டிய வீரனும் மலைக்கோட்டைத் தலைவனுமான முராரிராவின் உதவியையும், சந்தாசாஹிபின் விரோதியாகிய தஞ்சாவூர் அரசனின் உதவியையும் பெற்றான். இவற்றிற் கெல்லாம் மேலாக, கிளைவ் புத்தி சாதுரியமுள்ளவனுதலின், நன்கு பாதுகாக்கப்படாத ஆற்காட்டைக் கைப்பற்றுதல் சாத்தியமென்று ஆங்கில கவர்னருக்குத் தெரியப்படுத்தினன்; அவன் அவ்விடத்தின்மேற் சேனையோடு சென்றதும், எளிதில் அதைக் கைப்பற்றியதும், துரதிருஷ்டவசமாக சேனை மீண்டும் தாக்க அதனைப் பெருமையுற விரட்டியடித்ததும் திருச்சிராப்பள்ளியிலிருந்த பகைவரைச் சிந்திக்குமாறு செய்தது; பிரெஞ்சுக்காரரின் புகழுக்கும் பெருந் தீங்கு விளைவித்தது (செப்டம்பர், 1751). கிளைவ் இங்ஙனம் மேன்மையுற்று சந்தாசாஹிப் அனுப்பிய ஒரு பெருத்த படையை எதிர்த்து ஆற்காட்டைப் பிடிவாதத்துடன் விடாமலிருந்தான். இவ் வீரச்செயலும், ஆங்கிலேயர்மேல் வெற்றிபெற வெண்ணிய நேப்ளேயின் அபஜயமும், *ஆங்கிலேயரது கீழ் திசை நடவடிக்கைகளின் புறமாறுதலைத் தெரிவிக்கும்.

**திருச்சிராப்பள்ளியைச் சூழ்ந்து நீட்டித்த போர்ச் செயல்கள்**

**கிளைவ் போக்கைத் திருப்புதல்-அவன் ஆற்காட்டைக் கைப்பற்றுதல் (செப்டம்பர் 1751)**

**முகம்மது அலிக்குப் புதிய சகாயர்கள்**

* 'The turning point in the eastern career of the English.'

# அத்தியாயம் 4

## ஆங்கில—பிரெஞ்சுப் போட்டி—இரண்டாம் நிலை: 1752—1755

### பகுதி 1: திருச்சிராப்பள்ளியில் பிரெஞ்சுக்காரரின் அபஜயம் (1752—54)—கர்நாடகத்தின் நிலைமை

**லாரன்ஸும் கிளிவும் திருச்சிராப்பள்ளியிலிருத்தல் (1752)**

சந்தாசாஹிபின் துருப்புகளை யெதிர்த்துக் கிளைவ் ஆற்காட்டை வீரமாகக் காப்பாற்றியதற்குப்பின்பு முராரிராவ் முகம்மது அலியின் பக்கம் சேர்ந்தான். மேலும், பிரெஞ்சுக்காரரும் சந்தாசாஹிபின் துருப்புகளும் ஆங்கிலேயரால் ஆற்காட்டுக்கு அருகிலுள்ள **காவேரிப்பாக்கத்தில்** முறியடிக்கப்பட்டன. இப்படி திடுமென அதிர்ஷ்டம் ஆங்கிலேயர்க்கேற்படவே, திருச்சிராப்பள்ளியிலிருந்த 'லா' என்ற பிரெஞ்சுத் தலைவன் திடுக்கிட்டுப்போனான், இப்படியிருக்க, இங்கிலாந்திலிருந்து வந்து சேர்ந்த க்ளைவின் நண்பனும் சகாதனுமாகிய **மேஜர் லாரன்ஸ்** என்பவன் திருச்சிராப்பள்ளியை எதிர்த்துப் படையுடன் செல்ல நேர்ந்தது. கிளைவ் உடன்வர அவன் சண்டையை முடிவுக்குக்கொண்டு வரவிரும்பினான். அதன் பொருட்டு முற்றுகையிடப்பட்ட கோட்டையை நோக்கிச் சென்றான். லாரன்ஸும் கிளைவும் முகம்மது அலியோடு சேர்ந்து விட்டால் தன் பக்கத்திற்கும் பெருங்கேடு விளையுமென்பது டுப்ளேவுக்கு நன்கு தெரியும்; ஆகலின் அவர் ஆங்கிலேயரை வழிமறித்து எவ்வகையிலாயினும் தடுக்குமாறு கட்டளையிட்டார். ஆனால், லா சோர்வடைந்திருந்தான். லாரன்ஸ் அவனுக்கு மனத்தடுமாற்றம் விளைவித்து, வேறு வழியாகப் பல நாளைக்காகும் உணவுப்பொருள்களோடும் உபகரணங்களோடும் திருச்சிராப்பள்ளியை யடைந்தான். பின்பு, அவன் லாவின் பாசறையைத் தீவிரமாகத் தாக்கினான். லாவோ மடத்தனமாய் கொள்ளிடத்தைக் கடந்து ஸ்ரீரங்கம் தீவில் தஞ்சம் புகுந்தான்: அத்தீவோ ஆங்கிலேயரது பிரங்கி குண்டுகளுக்கு எளிதில் இலக்காகுமாறும், லாரன்ஸால் எளிதில் முற்றுகையிடுமாறும் அமைந்துள்ளது. ஆங்கிலேயர் லாவை வளைத்துக்கொண்டு அவனுக்கு வரும் உதவிப்படைகளை விரட்டியடிக்கவும் ஆரம்பித்தனர். லாவின் ஆபத்தான நிலைமையைச் சந்தாசாஹிப் கண்டான்; டுப்ளே இதனைச் செயற்கரிய மிக்க மூடத்தனமான செயலென்றெண்ணி புதுச்சேரியினின்று உதவிப்படைகளனுப்பத் தீர்மானித்தான். ஆங்கிலேயரது பாசறையினின்று சிறிது தூரத்தில் உதவிப்படைகள் சேரவேண்டுமென்ற நோக்கத்தினால், லாவைப் புதுச்சேரிக்குத் திரும்புமாறு கட்டளையிட்டான்.

**பிரஞ்சுக்காரரும் சந்தாசாஹிபும் ஸ்ரீரங்கத்தில் அடைபடல்**

இப்படியிருக்க, கிளைவ் லாரன்ஸுக்குப் பின்வருமாறு யோசனை கூறினான்:—ஆங்கிலப் படையின் ஒரு பகுதியைக் கொள்ளிடத்தின் வடபாகத்தில் நிறுத்தி, எஞ்சியவற்றைக் காவிரியின் தென்கரையில் நிறுத்தி

னால் [ஸ்ரீரங்கம் இவ்விரு ஆறுகளுக்கும் இடையிலுள்ளது] லாவின் போக்குவரத்து இருபுறமும் தடைபட்டுப்போய் அவனே சூழ்ந்து புதுச்சேரியிலிருந்துவரும் உதவிப்படைகளை வழிமறித்துத் தடுக்குமாறு கிளைவ் ஒரு படைப் பகுதியுடன் வடக்கே அனுப்பப்பட்டான்; அவன் நன்னீர்க் காக்கிய லாவைத் துரத்திக் கன்மேல்வஞ்ச உதவிப்படைகளைப் பின்விடாமாறு செய்தான். இவ்விதமாக, பிரெஞ்சுக்காரரும் சந்தா சாஹிபும் தப்பிப் போதாதவகை செய்தான். சந்தாசாஹிப் காரைக்காலுக்குத் தப்பியோடி வருதற்குத் தஞ்சாவூர்க்குடிகள் உதவுவரென்றெண்ணி அவர்களைத் தம்பக்கம் சேர்ப்பிக்க வழிதேடி முயன்றான். லாவோ தன் படைகளோடு இழ்ப்படிந்தான் (ஜூன் 1752); பகைவரின் உதாரணத்தைக் கம்பிய சந்தாசாஹிப், தஞ்சாவூர் தளகர்த்தனிடம் அடைக்கலம்புக அவன் இவனை வெட்டி வீழ்த்தினான்; லாரன்ஸ் இவ்விஷயத்தில் தலையிடக் கருதவில்லை. இவ்விதமும், பிரெஞ்சுக்காரர் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்ட வரலாறு முடிவுற்றது. "இந்த விபத்தைப் பற்றிய செய்தி அறிந்த வருடத்து ஜனவரியில் ஐரோப்பாவிற் கெட்டியதனால்தான், பிரெஞ்ச மன்றமும் டூப்ளேயைத் திருப்பி யழைத்துவிடவும் அவர் இந்தியாவில் மேற்கொண்ட முறைமையை மாற்றவும் தீர்மானிக்கும்படி நேர்ந்தது. ஆனால், இந்தியாவில், டூப்ளேயின் ஊக்கமும் நம்பிக்கையும் இறையேனும் குறையவில்லை; அவர் தீர்மானத்தை மாற்ற எவற்றாலும் இயலவில்லை."*

**அவர்கள் இழ்ப்படிதல் (ஜூன், 1752)**

லா இழ்ப்படிந்ததனாலும் சந்தாசாஹிப் இறந்ததனாலும் முகம்மது அலியே போட்டியின்றி கர்நாடக நவாபாயினன். ஆங்கிலேயரும் அக்காலநிலைக்கு யஜமானராயினர். ஆனால், மைசூர் வாசிகளும் முராரிராவும் முகம்மது அலியை விட்டு நீங்குமாறு டூப்ளேயினால் தூண்டப்பட்டனர். தஞ்சாவூரோ கொதுமலாயிற்று. மைசூர் வாசிகள் முன்நிகழ்ந்த வாக்குத்தத்தத்தின்படி திருச்சிராப்பள்ளியைத் தங்களுக்குக் கொடுத்துவிடும்படி கேட்டனர். ஆங்கிலேயர் விஷ்கரிஷையாக இருந்திருக்கலாம். ஆனால், அவர்கள் சிலகாலம் சோர்வுற்றுக் கிடந்து, பின்பு திருச்சிராப்பள்ளியில் ஒரு சிறு படையை வைத்துவிட்டுக் கடற்கரை திரும்பினர். அதற்குள், டூப்ளே மீண்டும் யோசனைகள் பண்ணி, நிஜாமின் பேரில் தமக்குச் செயல்புரிய உரிமை யுண்டென்றும், அவ்வுரிமைப்படி சந்தாசாஹிபின் மகனை ராஜாசாஹிப் தம்மால் நியமிக்கப்பட்ட நியாயமான நவாபாவனென்றும் தைரியத்துடன் வெளியிட்டார். செஞ்சிக்கெதிரே எதிர்த்த ஆங்கிலப்படை முறியடிக்கப்பட்டது. இவ்வெற்றிகண்டு மகிழ்ந்த டூப்ளே, மைசூர்ட்டேவிட் கோட்டையைத் தாக்கத் தீர்மானித்தார்; ஆனால் லாரன்ஸ் தலைமையேற்றுப் பிரெஞ்சுக்காரரை கன்னு தோற்கடித்ததின், அவர்களைப் புதுச்சேரி எல்லைவரை துரத்திச்சென்றனர். அக்காலத்திய போர் விதிகள்படி, லாரன்ஸ் பிரெஞ்சு நிலப்பகுதியுள் பிரவேசிக்காமல்

**டூப்ளே இழந்த நிலையைத் திரும்ப எய்த முயறல்**

* The Cambridge History of India, Vol. V. p. 130.

தயங்கினன்: ஏனெனில், இருதேசத்தவரும் நேருக்கு நேர் எதிரிகளல்லர். ஆனால் டுப்ளேயோ இம்முறைமைக்கு மாறுக ஆங்கிலேயரது உதவிப்படைகளிற் சிலவற்றைக் கடலில் கைப்பற்றத் தயங்கவில்லை. இதற்குள், கிளைவ் சென்னையைச் சூழ்ந்த பிரதேசத்தில் எதிரியில்லையாமாறு செய்து பிரெஞ்சுக்காரரிடமிருந்த கோவளத்தையும் செங்கற்பட்டையும் கைப்பற்றினன். இவ்விதமாக, 1752 முடிவில், புதுச்சேரியும் செஞ்சியும் மாத்திரம் பிரஞ்சுக்காரர் வசமிருந்தன: அவர்களது ஏனைய இடங்கள் ஆங்கிலேயரால் கைக்கொள்ளப்பட்டன.

**ஆங்கிலேயர் பெற்ற பிறவெற்றிகள்**

எனினும் டுப்ளே தைரிய மிழக்கவில்லை. அவர் முராரிராவைப் பிரெஞ்சுக்காரரோடு பலமிரங்கமாகச் சேரும்படி தூண்டினர்; பின்பு, மைசூர் வாசிகளும் டுப்ளே பக்கம் சேரச் சம்மதித்தனர். ஆனால் திருச்சிராப்பள்ளி பிடிபட்டவுடனே அதனை அவர்களுக்கே திருப்பிக்கொடுத்துவிட வேண்டுமென்று ஒரு நிபந்தனையிட்டனர். மேலும் அவ்விடத்தை முற்றுகையிடவும் தொடங்கினர். 1753 முதலில், லாரன்ஸ் இரண்டாம் முறை திருச்சிராப்பள்ளியின் விடுதலைக்காக விரைந்தான். ஆனால் இச்சமயம் பிரெஞ்சுத் தலைவர்கள் மிக்க ஐக்கிரதையுடனிருந்தனர்; அவர்களிடம் வலிய குதிரைப்படை யிருந்தது. தொகையிலும் மிக்கிருந்தனர். சில காலம் வரை லாரன்ஸின் நிலைமை அபாயமாயிருந்தது. அவன் தன் தேவைப் பொருள்களுக்காகத் தன் நண்பனை புதுக்கோட்டை யரசனை நம்பியிருந்தான். ஆனால் அவைகளைச் சேராதவாறு பிரெஞ்சுக்காரர் வழியிடையே தடுத்தனர். கர்நாடகத்தின் பிறபகுதிகளில் பிரெஞ்சுக்காரர் வெற்றியுற்றனர். அவர்கள் ஆற்காட்டினின்று முகம்மது அலியின் துருப்புக்களோட்டி, கடலூர்க்கருகிலுள்ள **தீருவதி** யென்ற கோயிற் கோட்டையைக் கைப்பற்றினர். எனினும் லாரன்ஸ் அவ்விடத்தைத் தாக்கிப் பிரெஞ்சுக்காரை நன்கு தோற்கடித்தார். மற்றொரு வெற்றியில் பிரெஞ்சு சேனைத் தலைவனையே கைதியாக்கினர். கடைசியில் புது பிரெஞ்சு சேனைத் தலைவனாகிய **மெயின்வில்லி** என்பவன் திருச்சிராப்பள்ளியைத் திடீரெனப் பிடிக்கத் தீர்மானித்து அதனை வெகு சாக்கிரதையுடன் தாக்கினன்; பிரெஞ்சுக்காரர் புறமதிலைப் பிடித்தனர்; ஆனால், ஆங்கிலேய துருப்புக்களால் மிக்க சேதத்துடன் துரத்தப்பட்டனர்; பலர் கைதிகளுமாயினர். இப்போரின்கண் ஆங்கிலேயர் பெற்ற இந்த வெற்றியே திருச்சிராப்பள்ளியைப் பேராபத்தினின்றும் காப்பாற்றியது [நவம்பர், 1753].

**பிரெஞ்சுக்காரர் திருச்சிராப் பள்ளியை இரண்டாந்தரம் முற்றுகையிடல் (1753)**

**அது பயனற்றுப் போதல்**

* 'துரதிர்ஷ்டவசத்தா லேற்படும் தன் பங்கட்கு ஈடுசெய்ய வேண்டும்' என்பதை டுப்ளே இப்போதுதான் உணர்ந்தார். அதன்படியே சென்னையில் கவர்னராயிருந்த சாண்டர்ஸோடு சமாதானம் செய்துகொள்ள உடன்பட்டார். உண்மை நோக்கின், பிரெஞ்சு கவர்ன்மெண்டும் பிரெஞ்

* "Sacrifice something to ill-luck"

சுக் கம்பெனியும், டுப்ளேயின் சூழ்ச்சிகளைக் கண்டு சலுத்துப்போயினர். அவரது கபடயுக்திகளையும் பயனற்ற படையெடுப்புகளையும் நிறுத்துமாறு அவரை வற்புறுத்தினர். பின்பு, 1754 ஜனவரி மீ தொகுமலான டச்சு ஸ்தாபனமாகிய சதுரங்கப்பட்டினத்தில் பிரெஞ்சு ஆங்கிலேய கமிஷனர்கள் சமாதானப்பேச்சுகள் நிகழ்த்தக்கூடினர். இருநிறத்தினரின் அபிப்பிராயங்களும் முற்றும் ஒன்றற்கொன்று மாறுபட்டன. இச்சமாதானப் பேச்சுகளுக்குமுன் அடிப்படையாக முகம்மது அலி கர்நாடகத்தின் நவாபாக அங்கீகரிக்கப்படல் வேண்டுமென்று ஆங்கிலேயர் வற்புறுத்தினர்; பிரெஞ்சுக் காரரோ ஸலபட்ஜங் நிஜாமாக அங்கீகரிக்கப்படல் வேண்டுமென்றும் அதன்பின் அவனே உயர்தலைவனதலின் அவனிஷ்டப்படி நவாபைக் கர்நாடக அரசியலுக்கு நியமித்தல் வேண்டுமென்றும் ஆங்கிலேயரை ஒத்துக்கொள்ளுமாறு வற்புறுத்தினர். கிருஷ்ணை நதியின் தெற்கிலுள்ள பிரதேசமனைத்திற்கும் டுப்ளே கவர்னராக நியமிக்கப்பட்டிருப்பதாக ஸலபட்ஜங்கினிடமிருந்து வந்ததென சன்னதத்துகள் (உரிமைப் பத்திரங்கள்) காண்பிக்கப்பட்டன. பிரெஞ்சுக்காரரின் வேண்டுகோளுக்கிணங்க ஆங்கிலேயர் மறுத்தனர்: சில நாட்களானபின் இப்பேச்சு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன.

**சதுரங்கப் பட்டினத்தில் கூடிய மகாநாடு வீண்தாவாய்ப் போதல்**

அச்சமாதானப் பேச்சுக்களால் திருச்சிராப்பள்ளியில் நடந்த போர்க் கருமங்கள் சிறுதேனும் பாதிக்கப்படவில்லை. லாரன்ஸ் †தற்காப்பிலேயே நிற்கவேண்டியதாயிற்று. அவனது குதிரைப்படை சிறிதளவிற்ருகலின் அவனால் பிரெஞ்சுக்காரரை எளிதில் விரட்ட முடியவில்லை; பிரெஞ்சு சேனையோ, திருச்சிராப்பள்ளியை முற்றுகையிடும்படியான பெருத்த அளவிலில்லை. ஆங்கிலேயர்க்குத் துணையாக வரும் படைக்களைத் தடுக்கவும், லாரன்ஸுக்கு உதவிப்பொருள்கள் வந்து கொண்டிருந்த தஞ்சைப் புதுக் கோட்டைச் சீமைகளைக் கொள்ளையடிக்கவும்தான் அதனால் முடியும்.** அவர்கள் மைசூர் வாசிகளோடு செய்துகொண்ட உடன்படிக்கை நின்று போயிற்று; முராரிராவோ அவர்கள் பாசறையை நீத்துச் சென்ருன். இப்போர்நிகழ்ச்சிகளின் போதுதான் இரண்டு இந்திய வீரர்கள் பிரபலமாயினர். அவர்களுள் ஒருவன் கியாதிபெற்ற **ஹைதர் அலி** ஆவான். அவன் மைசூர்ப் பக்கத்தில் தலைவனுயிருந்து சண்டையிட்டவன். பிறகு மைசூர் அரசனுக்கு ஆங்கிலேயர்க்குத் தீராப் பகைவனுயினன். மற்றொருவன் துணிகரமுள்ள **யூசப்கான்** ஆவான். அவன் முதலில் ஹிந்துவாயிருந்து பிறகு, முகம்மதிய மதத்தைத் தழுவியவன். அவன் ஆங்கிலேயர் கீழுள்ள சிப்பாய்களுக்கு கெல்லாம் தலைவனுவன். பிறகு, முகம்மது அலிக்காக மதுரை திருநெல்வேலிப் பிரதேசங்களையடக்கித் தானே கொஞ்சகாலம் வரை நிடமாய் ஆண்டனன். இங்ஙனம், பிரெஞ்சு சேனைத் தலைவனுகிய மெயின்வில்லி தைரியமாகச் சண்டையிட்டு

**திருச்சிராப்பள்ளியில் நிர்ணயிக்க முடியாத முடிவு ஏற்படல் (1754)**

---

† On the defensive.

** இறுதியில், பிரெஞ்சுக்காரர் தஞ்சாவூரின் வளத்திற்குக் காரணமான காவிரியின் அணையை அழிக்க முயன்றனர். இச்செயல், தஞ்சையரசனை ஆங்கிலேயர் ஆதரவை நாடுமாறு செய்தது.

வந்தனன். டுப்ளேயைப்போல அவன் திருச்சிராப்பள்ளியைப் பிடிப்பதில் சிறிதேனும் பின்னடையவில்லை. ஆனால் 1754 ஜூன் ஆகஸ்டுமீ கம்பெனி பின் டைரக்டர்களு ளொருவராகிய கோடியு என்பவர், சண்டையை நிறுத்திச் சமாதானம் நிலவும்படி செய்யவேணுமென்று புதுச்சேரிக்கு வந்துள்ளாரென்ற செய்தி எட்டியது.

**பிரெஞ்சு அரசாங்கத்தார் டுப்ளேயைத் தள்ளுபடி செய்தல் (ஆகஸ்டு, 1754)**

பிரெஞ்சு அரசாங்கத்தார் உண்மை யறிந்து டுப்ளேவின்மேல் அவ நம்பிக்கை கொண்டனர். மேலும், ஆங்கில அரசாங்கத்தார் ஐரோப்பாவில் இரு தேசத்தினரும் சமாதானமா யிருக்கும் போது இந்தியாவிலும் இரு கம்பெனிகளும் சண்டையின்றி யிருக்கவேண்டும் என்று அவர்களுக்குப் பலதரம் தெரிவித்துள்ளனர். மேலும், அவர்கள் இந்தியாவைக்காட்டிலும் வட அமெரிக்காவில் பேரூக்கம் செலுத்திவந்தனர். சதுரங்கப்பட்டினம் மகாநாடு பயனின்றிப் போனது முதல் ஆங்கில அரசாங்கத்தார் இந்தியாவுக்குப் பலத்த கப்பற் படை யொன்று அனுப்ப எண்ணினர். ஆதலால், பிரெஞ்சு அரசாங்கத்தார் டுப்ளேயைப் பதவியினின்றும் நீக்கி ஆங்கிலேயரோடு சமாதானம் செய்ய முடிவுகட்டினர்.

## பகுதி 2 : கோடியுவும் புதுச்சேரி சமாதானமும்—டுப்ளே சரித்திரக்கரியங்கள்

**கோடியு சமாதானம் செய்துகொள்ளல்**

கோடியு புதுச்சேரியி லிறங்கியவுடன் ஸாண்டர்ஸோடு பேச்சு நடவடிக்கை நிகழ்த்தினன். 1754 அக்டோபர்மீ மூன்றுமாதங்கள் வரை போர் நிறுத்த உடன்பாடு செய்யப்பட்டது; அது ஏற்பட்ட சின்னாட்களுக்குள் டுப்ளே ஐரோப்பாவுக்குச் சென்றான். டுப்ளே திருச்சிராப்பள்ளியிலேயே தீவிரமாகப் போரை மேன்மேலும் நிகழ்த்துமாறு சொல்லியிருப்பவும் கோடியு திருச்சியிலிருந்து மெயின்வில்லியைத் திரும்புமாறு கட்டளையிட்டான். மற்றும், டுப்ளே புஸ்ஸியை ஹைதராபாத்திலேயே தங்கவைத்து வட சர்க்காரில் பிரெஞ்சு ஆதிக்கத்தை நிலைபெறச் செய்யுமாறும் கோடியுவிடம் சொல்லிச் சென்றான். கோடியு, தன்னுடன் கொணர்ந்த உதவிப்படையை, வாட்ஸன் என்ற கப்பற்படைத் தலைவன் தீழிருந்த ஆங்கில கப்பற்படை வருதற்கு முன் திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பியிருந்தால், பிரெஞ்சுக்காரர்க்குப் பெருத்த இலாபம் ஏற்பட்டிருக்கும். ஆனால், கோடியு 1755ஜூ ஜனவரிமீ புதுச்சேரியில் சமாதானம் செய்துகொண்டான். அதன்படி ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் சுதேசபட்டங்களையும் பதவிகளையும் நீக்கவேண்டும். இந்திய அரசியல் விவகாரங்களில் தலையிடக்கூடாது. ஆங்கிலேயர் மதராஸ் லெயின்ட் டேவிட் கோட்டை தேவிகோட்டை இவைகளையும், பிரெஞ்சுக்காரர் புதுச்சேரி, மற்றும் ஆங்கிலேயரொடு சமமாகும்படி சில நிலப்பகுதிகள் இவைகளையும் கொள்ளல் வேண்டும். வடசர்க்கார்ப் பிரதேசத்தில் பிரெஞ்சுக்காரர் மருலிப்பட்டினத்தைக் கைக் கொள்ளலாம். கிருஷ்ணை நதியின் வடக்கிலோ, ஒவ்வொரு கிறக்கினருக்கும் சரிசமமான பண்டக சாலைகளிருத்தல் வேண்டும். ஒரு கிறத்தினரும் புதியகோட்டைகள் கட்டக்கூடாது: முகம்மது அலியைப்பற்றியோ டுப்ளே கர்நாடக ஆட்சித்

**புதுச்சேரி சமாதானம் (1755)**

காகக்கொண்ட பொய்யுரிமை வாதங்களைப்பற்றியோ யாதும் குறிக்கப்பட வில்லை. இந்த நிபந்தனைகள கர்நாடகத்திலேயன்றி பிரெஞ்சுக்காரர் பேருரிமை பாராட்டிய வடசர்க்காரிலும் *சமநிலையுரிமைக்கொள்கையை நிலைநாட்டு செய்தது- ஆனால், பிரெஞ்சுக்காரர் வடசர்க்காரில் தாம் கொண்ட உரிமைகளைக் கைவிடவில்லை. புஸ்ஸியும் நிஜாம் அவையில் முன்னேற்பட்ட ஷரத்துக்களுக்கேற்பவே தங்கியிருந்தான். இந்த உடன் படிக்கையின் ஷரத்துக்கள் தற்காலிகமாக யேற்பட்டவை ; ஏனெனில் மறுபடியும் 1756-இல் போர் ஏற்பட்டபோது டுப்ளே ராஜிகாமா செய்த காலத்திருந்த நிலப்பகுதிகளையே அப்போது பிரெஞ்சுக்காரர் கொண்டிருந்தனர். இந்த உடன்படிக்கை கர்நாடகத்தில் பிரெஞ்சுக்காரர் கொண்ட எண்ணங்களனைத்தையும் பாழ்படுத்திற்று; ஆனும் அவர்கள் சுக்காணத்தில் பெற்றிருந்த நிலைமையை அது அழிக்கவில்லை.

**சமாதானத்தால் பிரெஞ்சு நிலைமையி லேற்பட்ட பலன்கள்**

கோடியு டுப்ளே பேராவல் கொண்ட நோக்கங்களைப் பாழ்படுத் தினரா ? கோடியு பிரெஞ்சுக்காரது இலாபங்களை நழுவவிட்டனரா ? என்பவற்றைப்பற்றி வாதம் நிகழ்ந்துகொண்டே யிருக்கிறது. டுப்ளேயின் சுயசரித்திரங்களை ஆதாரமாகக்கொண்டு சரித்திர ஆசிரியன்மார் கூறுவ தாவது :—கோடியு ஆங்கிலேயரைச் சமாதானப் படுத்துவதில் பேராவல் கொண்டு டுப்ளே மேற்கொண்ட நோக்க முறைமையினத்தையும் நிந்தித்துப் பிரெஞ்சுக்காரரது காரிய சித்திகளையெல்லாம் கெடுத்தான் என்பது.† ஆனால், அவன் டுப்ளேயின் நோக்க முறை முழுவதையும் நிந்திக்கவில்லை. அவன் செய்துகொண்ட தற்காலிக உடன்படிக்கையும் வடசர்க்காரில் பிரெஞ்சுக்காரரது உரிமையை நிலை நிறுத்த முயன்றது. மற்றும் டுப்ளேயின் நோக்கமுறையாலேற்படும் யுத்த பயமில்லாமல் கவலையின்றியிருக்கச் செய்தது. அது பிரெஞ்சுக் கம்பெனியைத் தன் வசமுள்ள பிரதேசங்களைவிட்டொழியவோ அல்லது ஆங்கிலேயரது எதிர்ப்பைத் தகர்க்கத்தக்க படையொன்றை யனுப்பவோ இரண்டிலொன்றைத் தீர்மானிக்கும்படியான உறுதிநிலைக்குக்கொண்டு வைத்தது‡.

---

* The principle of equal possessions.

† மாலிஸன் (History of the French in India) கூறுகிறார்:—டுப்ளேயின் புத்திமதியைப் பின்பற்றியிருந்தால் பிரெஞ்சுக்காரர் ஆதிக்கம் பெற்றிருக்கலாம். ஆனால் கோடியு அதனைப் புறக்கணித்துச் சும்மாவிருந்ததால் விரோதிகள் அழிவினின்று தப்பினர். ஏனெனில் போர் நிகழ்த்தியிருப்பின் டுப்ளேயின் நீடித்த நோக்க முறையின் நற்பயனைக் கண்டிருத்தல் கூடும் (P. 424).

‡ ட்ரட்வெல், (டுப்ளேயும் கோவும்) என்ற புத்தகத்தில் (பக். 81). கூறுகிறார் :—கோடியுவின் அரசியல் தந்திரங்கள் கபடமுள்ளவையெனினும், பிரெஞ்சுக்காரரது நற்பயன் விளைவையொட்டியே நிகழ்ந்தன. "உண்மையிலன்றி, வாய்ப்பேச்சாக நிகழ்ந்த இச் சமாதானத்திற்கு ஆங்கிலேசபையே பதிலளிக்கவேண்டியதனாலிதோடியு அல்லன்." வாட்ஸன ஒரு வலிய சேனைப்பலத்துடன் கப்பற்படையொடு வந்த பிறகே கோடியு தான் கண்டிப்புடன் கேட்டவைகளிற் சிலவற்றைக் குறைத்தான். அதுவே யன்றி, அவன் செய்துகொண்ட சமாதானம் பிரெஞ்சுக்காரர்களை எவ்விதத்திலும் தாழ்வுபடுத்தவில்லை. கோடியு புஸ்லியின் செயல்களை முழுமனதுடன் புகழ்ந்தான். இறுதியாக, சமாதானமோ தற்காலிகமாகச் செய்யப்பட்டது. மற்றும் இருசம்பெனியின் மேலதிகாரிகளாலும் அது அங்கீகரிக்கப்பட வேண்டியதாயிருந்தது. "அத்தகைய அங்கீகாரம் வரவேயில்லை. ஏனெனில், மேலதிகாரிகளின் தீர்மானம் தெரிவதற்கு முன்பே எழாண்டுப்போர் தொடங்கியது. ஆகையால் உடன்படிக்கைக் குறிப்பிற்கண்ட நாடுபற்றிய சிறுமாறுதல்களும் செய்யப்பட்டேயில்லை. இங்ஙன,* கோடியு செய்துகொண்ட சமாதானத்தினலன்றி, 1756-இல் ஏற்பட்ட பகைமையே இந்தியாவிலுள்ள பிரெஞ்சு ஸ்தாபனங்களை அழிவுபடுத்திற்று"—P. E. Roberts: History of British India to the end of the E. I. Company. pp. 115—6.

டிப்பூவே ஐரோப்பாவிற்குச் சென்றபொன்று முன்னர்க் கண்டதன் மாதலின், அவரது எண்ணங்கள் பழுதுற்றமைக்குக் காரணங்கள் யாவை யென ஈண்டு நோக்குவோம். அவர் ஆரம்பத்தில் பெற்ற வெற்றிகளைக் கண்டு கம்பெனியார் அவரைக் கொண்டாடினர். அவர் மார்க்விஸ் என்ற பட்டமும் பெற்றார். ஆனால் திருச்சிராப்பள்ளியில் டிரெஞ்சுக்காரர் அடைந்த தோல்வியும் லா தேர்ப்புடிந்தமையும் கம்பெனியார் அவர்மேல் வைத்த நம்பிக்கையை யிழக்கச் செய்தது. போர்களால் அவர்களது வியாபாரம் குன்றியது. தங்கள் வசமுள்ள நாடுகளினின்று இலாபம் சம்பாதிக்கலாமென்ற எண்ணங்களும் பழுதுபட்டுப்போயின. டிரெஞ்சு அரசாங்கம் பல காரணங்களை முன்னிட்டு ஆங்கிலேயரோடு சமாதானம் செய்துகொள்ள விரும்பி, சதுரங்கப்பட்டின மகாநாட்டைக் கூட்டிற்றென முன்னர்க் கண்டோம்: அம்மகாநாடு விருதாவாய்ப் போன போது ஆங்கிலேயரும் ஒரு பலத்த படையை இந்தியாவிற்கு அனுப்புவதாக விருக்கவே, டிரெஞ்சு அரசாங்கம் என்னும் சமாதானத்திலே மூனைந்து கின்றது. முதலிலிருந்து கடைசிவரை டுப்ளேவுக்குச் செல்வாதாரத் தேவையே பெரிய முட்டுக்கட்டையா யிருந்தது. கிழவன் ஆற்காட்டைக் கைப்பற்றியதுமுதல் டுப்ளேவுக் கேற்பட்ட விழுந்தங்களால் தாமெண்ணியபடியே கர்நாடகத்தில் வருவாயை வசூலிக்க அவரால் முடியாது போயிற்று; அவருக்குச் சேனையைப் பராமரிப்பதற்கும் மாதாமாதம் சம்பளம் கொடுப்பதற்குமே கஷ்டமாயிருந்தது. மேலும் உண்மையான மேலதிகாரிக்கு எதிரிடையாகக் கலகஞ் செய்பவன் முகம்மதுஅலி எனக் கொண்டு, ஆங்கிலக் கம்பெனியார் நாளடைவில் தங்களுக்கும் அவனுக்கும் யாதொரு சம்பந்தமு மில்லையென்று கூறிவிடுவரென்றும் டுப்ளே ஓர் எண்ணம் கொண்டிருந்தார். தாம் மேற்கொண்டவைகள் நியாயப்படி யமைந்தன என்ற பெருநம்பிக்கையுடைய ராதலின், அவர் யாவர்க்கும் இணங்காராகி ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் பகை விளைவித்துக் கொண்டார்: மேலும், கம்பெனியாரோ அவரது யோசனைகளில் சிறிதேனும் உதவவில்லை. ஆனால் அவரும் தன் யோசனைகளைப் பற்றி அவர்களுக்குத் தெளிந்த அறிவுண்டாகுமாறு விவரிக்கவில்லை; அவருக்கே தம் யோசனைகள் முற்றும் கைகூடப் பெறுமா என்ற சந்தேகமிருந்தது; ஆதலால் தமது மேலதிகாரிகள் முற்றும் அறியாதபடி தமது நோக்கங்களை மறைத்தே வைத்திருந்தனர். ஆனல், கம்பெனியும் டிரெஞ்சு அரசனும் முன்னாக்கிரதையா யிருப்பதற்கு எண்ணினர். ஆங்கிலேயரோடு சமாதானஞ் செய்துகொள்வதா லேற்படும் முக்கியமான இலாபங்களை அவர்கள் இழக்கத் துணியவில்லை. முடிவாக, டுப்ளே கர்நாடகத்தைத் தாமே ஆளவேண்டுமென்று கொண்ட நோக்கம்—[அவர், ஸலபட்ஜங் தம்மை நவாபாக்கினன் என உரிமை கொண்டாடினர்] —சாத்தியமாவதன்று; ஏனெனில், டிரெஞ்சுக்காரருக்குச் சுதேசபாஷை தெரியாது; சுதேசமக்கள் அரசியற்முறையிற் கொண்ட பழக்க வழக்கங்களும் தெரியாது. "அவரால் சுதேச அரசாங்கத்தில் காணப்படும் ஊழல்களையும் வழக்கங்களையும் இருந்தபடியே யிருக்கவைப்பதன்றி வேறென்றும் செய்ய முடியவில்லை." மேலும், டுப்ளேயின் நோக்க முறையில்

**டுப்ளேயின் பலனற்ற ஆட்சிக்குக் காரணங்கள்**

**செல்வாதாரத் தேவை முதலியன**

* பொதுமைப்பட்ட முறையோடு பிரத்தியேக இலாபங்களையும் கன்மை களையும் இணைத்தலா லேற்படும் மெலிவு காணப் படுகின்றது. இத்தகைய மெலிவு, பின்னர் வங்கா ளத்தில் ஆங்கிலேயர் கடவடிக்கையிலும் காணக் கிடக்கின்றது. டூப்ளேயைப் பற்றினவரை நோக்கும் போது அவர் பொது நோக்க முறைக்காகத் தம் சொந்தபணத்தையே ஒட்டம்வைத்து இரண்டையும் ஒருசேர இழந்தார்: இதனல், அவரது அரசியல் முறைமை † "தற்காலத்து நாம் வழங்கும் பஷரிங்க லஞ்சமெனப் படும் துஷ்டப் பிரவர்த்தனேயோடு அடைபட்டுக் கிடக்கின்றது." இந்த லஞ்சமுறைமைதான் அவரது அரசியற் கண்காணிப்பிற்குக் கெட்ட பேரைக் கொண்டுவந்தது. அவரிட்ட போர்கள் இலாபகரமாயில்லை; அவைகளாலேற்பட்ட செலவுகளைக் கம்பெனியின் பணத்திலிருந்து கொடுக்க நேர்ந்தது: மீதி பணம் வேறு வகைகளில் வந்தது. கர்நாடக யுத்தத்தைக் கடைபோக அவரால் நடத்தமுடியவில்லே. "தக்ஷிணத்தைப் போலவே கர்நாடகமும் செல்வங்குன்றிக்கிடந்தது. மற்றெரு ஐரோப்பிய தேசத்தினரோடு கர்நாடகத்திற்காகச் சண்டையிடுதல் அழிவுக்கே ஏதுவா யிற்று. டூப்ளேயின் மனேராதங்களும் நோக்க முறையும் கைகூடுதற்குக் கர்நாடகமோ, தக்ஷிணமோ போதா: அதற்குச் செல்வம் மல்கிய பிரதேசம் வேண்டும்."‡

**லஞ்சம் வாங்கல் போன்ற துஷ்டப் பிரவர்த்தனே**

டூப்ளே சாதித்த காரியங்களையும் சரித்திரத்தில் அவருக்கேற்ற ஓரிட மும் மதிப்பிடுதல் கடினமே. கவர்னர் பதவியிலிருந்து நீக்கப்பட்டபின் அவர் நிலேமை மிகவும் வருந்தத்தக்கது. அவர் பிரான்சுக்குச் சென்றபின், கொஞ்ச காலம் வரை கன்கு பாராட்டப்பட்டார். ஒரு சமயம் அவரே மீண்டும் இந்தியாவுக்குக் கவர்னராய் அனுப்பப்படு வார் போலுமிருந்தது. ஆனல், அவர் நஷ்ட ஈடு கேட்டபோது கம்பெனி யார் பிடிவாதமாகக் கொடுக்க மறுத்தனர்; அவர் தம் உரிமைகளே நிறுவ வழக்குத் தொடுத்து, அதில் தமது எஞ்சிய சொத்து முழுவதையும் இழந்து வாழ்க்கைப் பயனற்றுப் பிணியினலும் வருந்தி, மனச்சாந்தியின்றி கி. பி. 1764இல் இறந்துபோனர். அவர் சாதித்த காரியங்களும் அவரது குணதி சயங்களும் பல சரித்திர ஆசிரியர்களால் பாராட்டுரைக்கப்படுகின்றது. மாலிஸன் அவரை ஒரு சிறந்த அரசியலதிகாரியென்றும், ஒழுங்குபடுத்து மாற்றலும், கொண்ட காரியத்தில் பற்றுள்ளமும், கடைகூட்டும் வன்மையு முடைய ஒரு ராஜதந்திரி என்றும் கொண்டாடுகிறர். அவர் கூற்றுக்கு மாருக அவரை இழிவுபடுத்திக் கூறுவாருமுளர். தார்ன்டன் என்பவர் டூப்ளே பெரும்பாலும் டம்பமும், பேராசையும், இரண்டகமும் கொண்ட குணமுடையவர் என்கிறர்: வின்ஸன்ட் ஸ்மித் என் பவரோ, பண விஷயங்களில் அவரது கயமையொடு, ராணுவ அறிவின்மையையும் தைரியமின்மையை யும் குறிப்பிடுகிறர். இவ்விருவகை அபிப்பிராயங்களும் உண்மைக்குத்

**டூப்ளே சாதித்த காரியங்களின் மதிப்பு**

**அபிப்பிராய பேதங்கள்**

* Mingling of private advantages and presents with public Policy † "honey-Combed with what to-day we should call flagrant Corruption.
‡ Dodwell's Dupleix and Clive, p. 113.




பிரெஞ்சு யுத்தங்களையும் மைசூர் யுத்தங்களையும் விளக்கும்

தென்னிந்தியா படம்.

தொலைவினவே: சமுசயமின்றி, நுட்பமே விழுமிய நல்வாய்ப்புக்களுடையெனினும், அவர் தெளிந்த விவேகமில்லாதவர். அவரது யுக்திகள் துணிகரமாகவும் சாதுரியமாகவும் அமைவன எனினும், அவைகளைச் சாக்கிரதையாகவும் தெள்ளியதாகவும் நடைபெறச் செய்தலில்லை. அவர் ராஜுவ விஷயங்களிலும், போர்த் தலைவர்களின் அபிப்பிராயங்களிலும் பெரிதும் தலையிட்டனர். அவர் அடிக்கடி இரண்டகமும் கபட நடிப்பும் செய்து வந்தனர்: இவ்விவேஷத்திலும் டம்பத்திலும் பெரு விருப்பினர். ஆனால், அவரது ஆட்சி பலனற்றுப் போனது, அகஸ்மாத்தாகத் தோன்றிய காரணங்களாலும் அவரிடத்துள்ள குறைபாடுகளாலும் அல்ல; அவரது சொந்தப் பொருளாதாரக் குறைவினாலுமேற்பட்டதன்று: அதற்கு வேறு ஆழ்ந்த காரணங்களுள. 1754-க்குப் பின் அவர் அதிகாரம் வகித்திருப்பினும், அவர் இந்தியாவில் பிரெஞ்சுக்காரரின் அதிர்ஷ்டத்தை நன்னிலைபெறச் செய்திருக்க முடியாது.

**அவரது செயல்களில் பெருமை சான்ற அம்சங்கள்**

இத்தனை குறைபாடுகளோடு அவரது ஆட்சிப பயனறறுபபோயினும், அவர் ஒளிபரப்பித்திகழ்ந்தவராவர். அவரது யோசனைகள் வீண் பிரமையினாலேற்பட்டவையல்லவென்பதற்கு அவ்யோசனைகள் பின்பு, ஆங்கிலேயரால் மேற்கொள்ளப்பட்டமையே சான்று பகரும். இந்தியாவில் ஐரோப்பிய ராஜதந்திரத்திற்கு அவரே நிஜமாக அடிப்படையிட்டவராவர். "நன்கு பயிற்றப்பட்ட சிப்பாய்களை முதன் முதல் பரக்கப் பயன்படுத்தியவர் இவரே; கடலோரத் துறைமுகங்களை நீத்து இந்தியாவினூடே முதன்முதல் படையொடு புகுந்தவர் இவரே; அம்மட்டோ! முகலாயப் பெருமையின் பொய்த்தோற்றத்தை உணர்ந்து, அப்பெருமையைக்கண்டஞ்சிய மெலியாரின் அச்சத்தைத் தன் காரிய சித்திக்காக முதன்முதல் பயன்படுத்தியவரும் இவரே."* பேராசை முதிர்ந்தவராயினும், அவரது அரசியல் நோக்கங்களுக்கும் பிரெஞ்சுக்காரரின் புகழையும் அதிகாரத்தையும் சிறிது காலமெனினும் மேலோங்கச் செய்ததற்கும் நாம் அவரைக் கௌரவப்படுத்தல் தகும்.

## பகுதி 3 : தக்காணத்தில் புஸ்ஸி யிருத்தல்—திருச்சிராப்பள்ளியில் நிகழ்ந்த விவகாரங்கள்

**தக்காணத்தில் புஸ்ஸியின் நிலைமை**

தக்காணத்தில் புஸ்ஸியின் நடவடிக்கையால் கிளைவுக்குப் பல உண்மைகள் புலப்பட்டன; கிளைவ் அவ்வுண்மைகளைத் தன் வங்காள நடவடிக்கைகளில் உபயோகப்படுத்திக் கொண்டான்: முஸபர்ஜங்கைக் காட்டிலும் ஸலபட்ஜங் பிரெஞ்சு ஆதரவைப் பெறப் பெரிதும் விரும்பினனென்று கண்டோம்: அவன், பிரெஞ்சுக்காரருக்கு மசூலிப்பட்டினத்தையும்,† டிவி தீவையும், அதற்குப் பக்கத்திலுள்ள சில கிராமங்களையும் தான் நிஜாமானபோது கொடுத்து உரிமை செய்தான். நிஜாம் ஹைதராபாத்தையடைந்தவுடன், புஸ்ஸியைத் தன்னுடன் தங்குமாறு செய்து, தன் ராஜ்யத்

* Elphinstone: The Rise of the British Power in the East (Ed. by Colebrooke pp. 226-7).

† Divy Island.

தின் வடமேற்கு மூலையிலுள்ள அவுரங்கபாத்துக்குத் தன்னுடன் வருமாறு வற்புறுத்தினன்; இவ்வழியத்திற்காகப் பிரெஞ்சுக்காரர் இன்னும் சில பரிசுகள் பெற்றனர்; டேப்லேயும் கிருஷ்ண நதிக்குத் தெற்கேயுள்ள பிரதேசமனைத்திற்கும் கவர்னராக்கப்பட்டு, அதிலிருந்துவரும் மேல் வருமானத்தை அனுபவிக்கும்படி உரிமையும் கொடுக்கப்பட்டார். (1751 இடைப் பகுதி). பின் நிகழ்ந்த சம்பவங்களும் பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கைப் பெருக்கின. இப்படியிருக்க, பாலாஜி பாஜிராவ் என்ற பேஷ்வாவின் தலைமையின்கீழ் மராட்டியர் தக்ஷிணத்தின் மேற்படையெடுத்து அவுரங்கபாத்தை நோக்கிச் சென்றனர். பாலாஜி நிஜாமுல் முல்கின் மூத்தமகனை காளியுத்தீன்கானுக்கு உதவி புரிந்தான்: இவன் இதுவரையில் டில்லியிலிருந்தவன்: பின்பு, தகப்பனது சிம்மாசனத்திற்கு வழக்கிட்டனன். புஸ்ஸியின் உதவியினலும் பிரெஞ்சுப் பிரங்கிப்படைகளாலும் வலிவு பெற்ற ஸலபட்ஜங் பகைவரது நாட்டினுட் புகுந்து போரிடலானன். பாலாஜி, சமாதானஞ் செய்துகொண்ட போதினும், காளியுத்தீனுக்கு உதவி புரிதலே நலமென்றெண்ணி, அதற்காக ஆங்கிலேயர் உதவியையும் பெறுமாறு மதராஸ் பம்பாய் இரண்டிடங்கட்கும் தன்* பக்கவாதிகளை யனுப்பினன். ஆனல், இரண்டு இராஜதானிகளில் ஒன்றுகூட நல்லுதவி புரியவில்லை; பம்பாய் "சமாதானத்திலும் வியாபாரத்திலும் மிக மூழ்ந்து நின்றதனல் இந்த நற்சமயத்தை நழுவவிட்டது:' மதராஸ் இந்நற்சமயத்தின் நன்மைகளை யுணர்ந்திருப்பினும், தரை மார்க்கமாகத் துருப்புக்களை யனுப்ப அதனல் இயலவில்லை: ஏனெனில், புஸ்ஸி வழியிடையில் தங்கியிருந்தான்.

**ஸலபட்ஜங்குக்கு அவன் செய்த ஊழியங்கள்**

காளியுத்தீனுக்கு உதவிபுரிய பேஷ்வாவும் பிரார் அரசனுகிய ரகுஜீபான்ஸ்லேயும் பெருத்த படையுடன் வந்தனர். புஸ்ஸி இவ்வாபத்தை நோக்கி ஸலபட்ஜங்கோடு மசூலிப்பட்டினத்திற்கோ புதுச்சேரிக்கோ 'திரும்பிப்போய்விடக் கருதினன் இதற்குள் காளியுத்தீன், தன் மாற்றுந்தாயொருத்தியால் விஷமிடப்பட்டு அவுரங்கபாத்தில் இறந்தான் (அக்டோபர், 1752): ஆதலின் புஸ்ஸி திரும்பிப்போதலைத் தவிர்ந்தான். இனி புஸ்ஸி,மராட்டியப் படையெடுப்பாளர்களோடுதான் சண்டையிட நேர்ந்தது. அவன் அவர்களது வருகையைத் தடை செய்ய முடியுமேயன்றி அவர்களை வெல்ல முடியாது: அவன் அவர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டான். அதன்படி, காளியுத்தீன் மராட்டியர்களுக்கு வாக்களித்த சலுகைகளை அவர்கள் பெற்றுக் கொள்ளலாம். இவ்விதமாக, புஸ்ஸி ஸலபட்ஜங்கைச் சிம்மாசனத்திலேயே யிருக்கவைத்துச் சங்கடத்தினின்றும் தப்ப வைத்தான்.** நன்றி மிக்க நிஜாம், 1752-இல், மசூலிப்பட்டினத்துக் கருகாமையிலுள்ள கொண்டவீடு பகுதியைப் புஸ்ஸிக்கும் பிரெஞ்சுக்கார

**அவன் † 'கொண்டவீடு' பகுதியைப் பெறல் (1752)**

---

* Vakils. † Kondavid.

** காளியுத்தின் இறப்பதற்கு முன்பு, பிரெஞ்சுக்காரரை ஸலபட்ஜங்குக்கு உதவி, செய்யாதவாறிருக்கும்படி கோரினன்; ஆனல், அவன் வேண்டுகோளை மறுத்தபோது, அவன் டுப்ளேவுக்குத் துவேஷமுண்டாம்படி முகம்மது அலியைக் கர்நாடக நவாபாக நியமித்தான்.

ருக்குமாகக் கொடுத்தான்; கொஞ்சகாலம் வரை பிரெஞ்சுக்காரரின் ஆதிக்கம் போட்டியின்றிக் கிடந்தது.

**புஸ்ஸிக்கு ஏற்பட்ட அநித்திய கஷ்டங்கள்**

ஆனால், விரைவிலேயே கஷ்டங்களும் ஏற்பட்டன. ராஜா ரகுநாத் தாஸ் என்பவர்க்குப் பின்வந்த நிஜாமின் புது மந்திரியாகிய *சையத் லஷ்கர்கான் என்பவர் மறைவினில் புஸ்ஸியொடு பகைமை பாராட்டினன். நிஜாமின் செல்வாதாரமும் சீர்கேடான நிலையிலிருந்தது; சேனையின் சம்பளம் அதிக பாக்கியாயிருந்தது. புஸ்ஸியின் சேனைப் பராமரிப்பினல் நாட்டு வருமானம் வரளத் தொடங்கியது; இப்படியிருக்க, தக்ஷிணத்தில் சேகரிக்கப்பட்ட செல்வமனைத்தையும் பிரெஞ்சுக்காரர் சுரண்டிக்கொண்டு சென்றனராகப் பழிக்கப்பட்டனர். புஸ்ஸியும் தேக அசௌக்கியத்தினல், முசூலிப்பட்டினத்திற்குச் சென்றுவிட்டான். நிஜாம் சமூகத்தில் அவனில்லாதது போகவே, சையத் லஷ்கர் கான் நாடுகளில் பல விடங்களிலுமுள்ள பிரெஞ்சுத் துருப்புக்களைச் சீதறடிக்கவெண்ணி, ஸலபட்ஜங்கை அவனது மெய்க்காப்பாளர்களாகிய பிரெஞ்சுக்காரர்களை வேலையிலிருந்து நீக்கிவிடுமாறு தூண்டினன். அவன் புஸ்ஸிக்கு மூட்டுப்பாடு விளைப்பதற்கு எண்ணி ஆங்கிலேயரோடு கடிதப்போக்குவரவு செய்யத் தொடங்கினன்.

**புஸ்ஸியின் வெற்றி-வடசர்க்கார் அவனுக்குக் கொடுக்கப்படல் (1753)**

நிற்பே, தக்ஷிணத்தில் பிரெஞ்சு செல்வாக்குக்கு விளையும் ஆபத்தைக் கண்டு, புஸ்ஸியை ஹைதராபாத்திற்கு உடனே திரும்புமாறு கட்டளை யிட்டான் (1753). ஆனல் புஸ்ஸிக்கோ, நிஜாமிடத்துப் பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கு நிலைத்திராது' என்பது நன்கு தெரியும்; கர்நாடகத்திலிருந்தும் தனக்குத்தக்க உதவி கிடைக்குமென்றும் அவன் எண்ணவில்லை; ஏனெனில், ஆங்கு பிரெஞ்சுக்காரரின் அதிர்ஷ்டதசை விரைவில் குன்றலாயிற்று. இருந்தாலும், அவன் தன் துருப்புக்களைச் சிக்கிரம் ஒழுங்குபடுத்தி, அவுரங்கபாத்திலுள்ள ஸலபட்ஜங்கினுடைய பாசறைக்குக் கிளம்பினன். அவனது பகைவர் எளிதில் அவனுக்குப் பணிந்தனர். குண்டூர், ராஜமஹேந்திரவரம், எல்லூர், சிகாகோல் சர்க்கார்கள் அவனது பிரெஞ்சுத்துருப்புக்களின் பராமரிப்புக்காக அவனுக்கே கொடுக்கப்பட்டன. நிஜாமும் தன் மெய்க்காப்பாளராகிய பிரெஞ்சுக் காரர்களை நீக்காமல் வைத்துக்கொள்வதாகவும், கர்நாடக விவகாரங்களில் இனி தலையிடாமலிருப்பதாகவும் உடன்பட்டான். (நவம்பர், 1753).

**சர்க்கார்ப் பிரதேசத்தில் பிரெஞ்சு ஆதிக்கம் நாட்டப்பட்டது**

இந்தப்புது இடங்களைப் பிரெஞ்சுக்காரர் வசப்படுத்தியதால் அமைதி யேற்படவில்லை; மிக்க தேவையாயிருந்த பணமும் இதனல் வரவில்லை; மேலும் இப்பகுதிகளிலுள்ள ஜமீன்தார்கள் ஸலபட்ஜங்கின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியவுமில்லை. இச்சமயத்தில், நிஜாமுக்கும் ரகுஜீபான்ஸ்லேக்கும் சண்டை தொடங்கிற்று. ஸலபட்ஜங் மராட்டியருக்கெதிரே படையெடுத்தபோது புஸ்ஸியும் உடன் செல்ல நேர்ந்தது: அதற்குள் சர்க்கார்ப் பிரதேசத்திலுள்ள முகம்மதிய கவர்னராகிய ஜாபர்

* Sayyad Lashkar Khan.

அலிகான் பிரெஞ்சு அதிகாரத்தை எதிர்த்தான். அவன் ராஜமஹேந்திரக் கோட்டையிற் காவற்படைகளமைத்து ஆங்கிலேயருதவியை நாடினன். இவையனைத்தும் வருமான வசூலைப் பாதித்தன. சர்க்கார்ப் பிரதேசத்தில் அதனிலும் முக்கியமாக ராஜமஹேந்திரபுரம் சிகாகோல் பகுதிகளில் பிரெஞ்சு அரசியலை நிலைநாட்டுவதற்காகப் புஸ்ஸி தன் சேனையின் பெரும் பகுதியுடன் செல்ல நேர்ந்தது. ஏனெனில், முக்கிய நிலவாரக்காரனை விஜயநகரத்து அரசன் மிக்க பகைமை கொண்டனனதலால் அவனுடன் மிக்க சாதுரியமாகக் காரியங்களை நிர்வகிக்க வேண்டியிருந்தது.* புஸ்ஸி தக்ஷிணத்தில் தன் சேனையின் செலவுக்குப் போதிய பணத்தைச் சர்க்கார்ப் பிரதேசத்திலிருந்து வசூலிக்கப்பெரிதும் முயன்றான். இதற்குப்பின், 1754 முதலில் டூப்ளே ஐரோப்பாவுக்குச் சென்ற சிறிது காலத்திற்குப்பின், புஸ்ஸி ஹைதராபாத்துக்குத் திரும்பினன். கோடியுவும் அவனுக்குப்பின் வந்த டிலெரிட்டும் புஸ்ஸியையும் அவனது படையையும் நிஜாம் சமுகத்திலேயே வைத்திருந்தனர்; முன்னரே கண்டபடி, புதுச்சேரி சமாதானம் தக்காணத்தோடு சம்பந்தப்பட்டதன்று. எனினும், டூப்ளே இந்தியாவை விட்டுச்சென்றதனால், நிஜாமும் அவனது பிரபுக்களும் பிரெஞ்சு தேசத்தினரின் வலிமையில் வைத்திருந்த நம்பிக்கை அற்றுப்போயிற்று. புதுச்சேரி சமாதானத்தால் 'பிரெஞ்சுக்காரர் வலியற்றவர்' என்று மனதில் பட்ட எண்ணத்தை மாற்றுவதற்குப் புஸ்ஸி பெருமுயற்சிகள் செய்தார்.

**புதுச்சேரி சமாதானத்தால் புஸ்ஸிக்கு ஏற்பட்ட பலன்கள்**

1755-இல், ஸலபட்ஜங் தனக்குச் சேரவேண்டிய கப்பத்தை வசூலிக்குமாறு மைசூர் இராஜ்ஜியத்தின்மேற் சென்றான்; இக்கப்பம், விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள நாடுகளுக்கு முகலாயப் பிரதிநிதி என்ற தகுதியில் இவனுக்குச் சேரவேண்டியவையாகும். புஸ்ஸிக்கு இடக்கான நிலைமை யேற்பட்டது. திருச்சிராப்பள்ளியிலுள்ள மைசூர் வாசிகளோ பிரெஞ்சுக்காரர்க்கு நண்பர்கள்; ஆனால் ஸலபட்ஜங்குக்கு உதவிபுரிய புஸ்ஸி மறுப்பானேல், நிஜாம் பிரெஞ்சுக்காரரையனுப்பி விட்டு ஆங்கிலேயர் உதவியைநாடுவன். இதனால், புஸ்ஸி மைசூர்க்குநிஜாமோடு செல்ல நேர்ந்தது; அதே சமயத்தில் மராட்டியரும் அதனைத் தூண்டினர். புஸ்ஸி மைசூர் வாசிகளை நிஜாமோடும், மராட்டியரோடும் ஒரு சேரச் சமாதானஞ் செய்து கொள்ளுமாறு செய்து (1755) நிஜாமுக்குப் பெருத்த தனலாபமும் வாங்கிக் கொடுத்தான். இவ்விதமாகத் தக்காணத்தில் பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கு முன்போலவே ஒளிவீசித் திகழ்ந்தது. ஆனால், ஹைதராபாத்தில் பிரெஞ்சுக்காரருக்கு எதிராகக் கட்சி வலுத்தது. ஸலபட்ஜங்கின் புது மந்திரியாகிய ஷா நவாஸ் கான் என்பவன் புஸ்ஸியையும் பிரெஞ்சுக்காரரையும் ஒழிக்க முயற்சித்தான். இப்படியிருக்க நிஜாம் பேஷ்வா இருவரையும் எதிர்ப்பதில் ஒன்று சேர்ந்த சாவனூர் நவாபையும், குத்தி முராரி ராவையும் அடக்கப் புஸ்ஸி ஒரு படையெடுக்க

**புஸ்ஸி மைசூரோடு தீர்ப்பு செய்து கொள்ளல் (1755)**

* பிரெஞ்சுக்காரர்கள் குடியேறும்பொருட்டு முயற்சிகள் செய்துகொண்டிருந்தபோது, நூபர் அலி மராட்டியரைச் சிகாகோல் பிரதேசத்தைப் பாழ்படுத்துமாறு வரவழைத்தான்; இதனால், பிரெஞ்சுக் குடியேற்றஞ்செய்வது கடினமாயிற்று.

நேர்ந்தது. புஸ்ஸி, மூராரிராவைத் தன்னடிப்படுத்தினன். மற்றும், திருச்சியில் பிரெஞ்சுக்காரர்க்குச் செய்த உதவிக்காக மூராரிராவ் கேட்ட உரிமைகளெல்லாவற்றையும் அவனையை விட்டுவிடுமாறும் செய்தான். இதனால், பிரெஞ்சுக்காரர்க்கு இலாபம் ஏற்பட்டது. இதனைக்கண்ட ஷா நவாஸ்கான் இதுவே தக்க சமயமென்றெண்ணி ஸலபட்ஜங்கிடம் புஸ்ஸி உண்ட ஸிட்டிற்கிரண்டகம் செய்பவனென்றும், ராஜத்துரோகி யென்றும் நம்புமாறு செய்து, அவனை உடனே வேலையினின்று நீக்குமாறு தூண்டினன். இப்படியிருக்கையில், பாலாஜி பாஜிராவ் புஸ்ஸி நிஜாமால் நீக்கப்பட்டால் தன்னிடம் ஊழியஞ் செய்வான் என நினைந்தான். ஆனால் புஸ்ஸி தன் வேலை நீக்கத்தை அமைதியுடன் ஏற்றுக் கொண்டான். (1756). அவன் ஹைதராபாத்துக்குத் திரும்பிப்போய் பின்பு அங்கிருந்து மசூலிப்பட்டினத்திற்கு வர எண்ணினன்; ஆல் அவன் நிஜாமும் பேஷ்வாவும் ஒன்று சேர்ந்தெதிர்ப்பரோ எனப்பயந்தான்; மேலும், ஆங்கிலேயரை உதவிக்கழைக்கவே, ஒருகால் அவர்களும் தோன்றுவரோ எனவும் அஞ்சினன்; ஆதலால் உடனே புதுச்சேரிக்குத் தன் அபாய நிலையைப்பற்றித் தெரிவித்து அவசரமாக உதவியனுப்ப வேண்டினன். பகைவர் சூழ்ந்த ஹைதராபாத்தில் புஸ்ஸி காவல் மதிற்குள் தங்கியிருந்தனன். சீக்கிரத்திலேயே மசூலிப்பட்டினத்திலிருந்து பிரெஞ்சு உதவிப்படைகள் வந்து சேர்ந்தன. இங்ஙனம், பிரெஞ்சுக்காரரின் துணிகர எதிர்ப்பைக்கண்ட ஸலபட்ஜங்கின் நொய்ய மனம் மாறுபட்டது; அவன் எதிர்பார்த்தபடி ஆங்கிலேயர் உதவிக்கு வரவில்லை. நிஜாம் சென்னையிலிருந்து உதவி வரவேண்டியபோது, ஆங்கிலேயர் அதற்கு மனப்பூர்வமாய் இணங்கித் தக்காணத்திற்கு ஒரு படைப்பிரிவையும் அனுப்பச் சித்தமாயிருந்தனர். ஆனால், அப்போது கல்கத்தாவை ஸிராஜ் உத்தௌலா கைப்பற்றியதாகவும் (ஜூன், 1756) வங்காளத்தில் ஆங்கிலேயராதிக்கம் அறவே ஒழிக்கப்பட்டதாகவும் செய்தி எட்டியது; இதனால் இதர விவகாரங்களையெல்லாம் விட்டுவிட்டு வங்காளத்திலேயே தம் முழு கவனத்தையும் ஆங்கிலேயர் செலுத்த நேர்ந்தது. இவ்விதமாக, புஸ்ஸி தன் விரோதிகளின் மேல் வெற்றி பூண்டு மீண்டும் நிஜாம் சமூகத்தில் முன்னைய நிலையையே யடைந்தான். (ஆகஸ்டு, 1756).

**ஸலபட்ஜங் புஸ்ஸியை வேலையினின்று நீக்கல் (1756)**

**மீண்டும் முன்னிருந்த நிலைமைக்குப் புஸ்ஸி வரல்**

1756 இறுதியில் ஏழாண்டுப் போர் தொடங்கிய செய்தி எட்டியது. புஸ்ஸி வடசர்க்காரின் மேல் கவனஞ் செலுத்தினன். கடற்கரையோரமுள்ள ஆங்கில பண்டகசாலைகளைப்பற்றி விழிப்புடனிருந்தான். ஆங்குள்ள மலைப்பிராந்தியங்களைத் தன்னடிப்படுத்தற்கும் எண்ணினன். அவன் ஆங்கில பண்டகசாலைகளை எளிதில் கைப்பற்றினன்: அவற்றுள் முக்கியமானது விசாகப்பட்டினம்; பிறகு சந்திரகிரியைக் கிளைவும் வாட்ஸனும்* தாக்கவே அதனைக் காக்கத்

**வடசர்க்காரில் புஸ்ஸி—அவன் ஆங்கில பண்டகசாலைகளைக் கைப்பற்றுதல் (1757)**

* கிளைவும் வாட்ஸனும் மதராஸ் விரும்பியபடி புஸ்ஸியை எதிர்த்துச் செல்லாமல் ஒருகப்பற்படையுடன், மேற்குக் கரையிலுள்ள கடற்கள்ளரது கோட்டையாகிய கெரியாவைத்

தன் படையிலொரு பகுதியை வங்காளத்துக்கு அனுப்புவதற்கும் அவன் எண்ணினான்; ஆனால் மார்ச்சு 1757-இல் சந்திரநகர் பிடிக்கப்பட்டது: புஸ்ஸி உபத்திரவம் விளைத்து வந்த சில நிலவாரக்காரர்களையும் ஜமீன்தார்களையும் அடக்கினான்: அவர்களுள் பிரபலமானவன் பொப்பிலி ராசன்; புஸ்ஸி பொப்பிலிக் கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றி விஜயநகரத்தரசன் சொற்படி அதனுள்ளிருந்த காவற்படையை வாளுக்கிரையாக்கினன்.** இங்ஙன், புஸ்ஸி சரித்திரப் பிரசித்தியான 1757-ஆம் ஆண்டைக் கழித்தனன்; ஸிராஜ் உத்தௌலா அவனை ஓரிஸ்ஸாவின் மூலமாக வங்காளத்துக்கு வந்து கிளைவுக்கு விரோதமாகத் தனக்கு உதவுமாறு அழைத்தான்; ஆனால், கிளைவ் அவனையும் முங்கிக்கொண்டு, சந்திரநகரைக் கைப்பற்றிய தோடமையால், பிளாஸி வெற்றியையும் பெற்றனன்.

**ஹைதராபாத்தில் புஸ்ஸி கடைசியாக சாதித்த காரியம்: அவன் புதுச்சேரிக்குச் செல்லல் (1758)**

புஸ்ஸி வடசர்க்காரிலிருந்தபோது, ஷா நவாஸ்கான் ஸலபட்ஜங்குக்கு எதிராகச் சதியொன்று செய்தான். அதன்படி, பிரெஞ்சுக்காரரைத் துரத்திவிட்டு ஸலபட்ஜங்கின் தம்பியாகிய நிஜாம் அலியை நிஜமாகக் சூழ்ச்சி செய்தான். 1758-இல் புஸ்ஸி ஹைதராபாத்துக்குச் சென்று ஸலபட்ஜங்கின் அதிகாரத்தை நிலைநிறுத்த முயன்றனன். ஷா நவாஸ்கான் ஏற்பட்ட கலவரத்தில் கொல்லப்பட்டான். நிஜாம் அலி ஓடிவிட்டான். நிஜாம் ராஜ்யத்தில் புஸ்ஸி ஒழுங்கும் உறுதிப்பாடும் நிறுவினன். ஆனால், †கவுன்ட் டி லாலி என்பவன் அவனை உடனே புதுச்சேரிக்கு வரவழைத்தான்; லாலி மசூலிப்பட்டின காவற்கு வேண்டிய படைகள் நீங்கலாக ஏனைய படைகளோடு புஸ்ஸியை வந்துவிடுமாறு கட்டளையிட்டான்.

**வடசர்க்காரை ஆங்கிலேயர் ஜெயித்தல் (1758—59)**

இதனைக்கண்டு வங்காளத்தில் வெற்றியுடனிருந்த கிளைவ், ‡கர்னல் போர்ட்டு என்பவன் கீழ் ஒரு படையை அனுப்பினன். அது, ¶‘காண்டூர்’ என்ற விடத்துப் பிரெஞ்சுக்காரரைத் தோற்கடித்து, மசூலிப்பட்டினத்தைக் கைப்பற்றிப் பல இடையூறுகளுக்கிடையே அதனை விடாதிருந்தது. (1758—59); ஸலபட்ஜங்கும் ஆங்கிலேயரோடு உடன்படிக்கை செய்துகொண்டு, அதன்படி, முன்னர் புஸ்ஸியின் வசமிருந்த பிரதேசங்களை “யாதொரு பிரதி ஊழியமும் எதிர்பாராதவாறு” அவர்களுக்குக் கொடுத்தான். (ஏப்ரல், 1759).

**புஸ்ஸியின் செயல்கள்**

புஸ்ஸி ஹைதராபாத்தை விட்டுச் சென்றது ஒரு மடச் செயலெனக் கருதப்படுகின்றது; ஏனெனில், தக்காணத்தில் பிரெஞ்சு அதிகாரத்தை அது தானே பலிகொடுத்துவிட்டது. புஸ்ஸி கர்நாடக யுத்தங்களில் கலந்திருப்பானேயாகில் அவன் பிரெஞ்சுக்காரர்க்கு வெற்றி விளைவித்திருப்பன்; இங்ஙன்

---

தாக்க அனுப்பப்பட்டனர். இதனால் புஸ்ஸி தக்காணத்தில் அதிகாரம் வகித்தேயிருக்கான்; ஆனால், பிற்பாடு கிளைவும் வாட்ஸனும் வங்காளத்தில் தமது முக்கியமான செயல்களைச் செய்வதற்குத் தடையின்றியிருக்கவும் இது ஏதுவாயிற்று.

† Count De Lally. ‡ Colonel Forde. ¶ Condore.

** பொப்பிலியை முற்றுகையிட்டவகையும், பொப்பிலி வமிசத்தில் வந்த இருவரால் விஜயநகரத்தரசன் கொலையுண்ட வகையும் ஆர்மி (Orme) என்பவரால் தெளிவாக விவரிக்கப்பட்டுளது. இவ்விஷயத்தைப்பற்றி தெலுங்கு மக்களிடை நிலவும் பாட்டொன்றும் உண்டு.

டுப்ளேயும் சில வெற்றிகள் கண்டிருப்பன்; பிரெஞ்சுக்காரர் சர்க்காரில் சில பகுதிகளைப் பெற்றபோதினும் அவைகளை வசப்படுத்துவது கடினமாயிருந்தது. மற்றும், சேனையின் பராமரிப்புக்கு வேண்டிய வருவாயும் அதிலிருந்து வரவில்லை. அவன் தக்காணத்தை விட்டுப்போன வுடனே அவனேற்படுத்திய அதிகாரம் மறைந்தொழிந்தது. இவ்விதமாக, "புஸ்ஸியின் வீரச் செயல்களாலேற்பட்ட பயனனைத்தும் வெளித் தோற்றத் தினவேயன்றி உள்ளீடு பெற்றவையன்று. அவைகளிற்க் கொண்ட நோக்க முறையும் பழுதுற்றதேயாகும்." இப்படியிருப்பினும், புஸ்ஸி பெருமை யுடையின்; அரசியல் ராணுவ விவகாரங்களில் அதி சூரர்த்தன். சுதேச மன்னர்களை யடக்கிக் கொண்டு போரும் வழியை இவனே காட்டியவன். நற்போது இந்திய சுதேச ராஜ்யங்களிலிருக்கும் ஆங்கில ஸ்தானீகர்களுக்கு இவன் * மாதிரி போல்வான். அவன் டுப்ளேயின் எண்ணங்களை யெல்லாம் கண்மூடித்தனமாய் ஏற்றுக்கொள்ளான்; முகம்மது அலி கர்நாடக நவாப்பென்று உரிமை பாராட்டியபோது, அவனுக்கு மாறாக டுப்ளேவுக்கு நிஜாமிடமிருந்து அதிகாரங்களை வாங்கிக் கொடுத்தான். அம்மட்டோ! இவனுக்கு வழிகாட்டி புஸ்ஸியே யாவன். அரசியற்றுறையில் புஸ்ளினைப்பி பின்பற்றியவன் இவனே யெனலாம்.†

**அச்செயல்களால் நிரந்தரமான பயனின்மை**

இனி, கர்நாடக விவகாரங்களை மீண்டும் கவனிப்போம். புதுச்சேரி சமாதானம் இருகட்சியாரின் நிலைமையையும் வரையறை செய்யாது விடுத்தது. ஆங்கிலேயர், சமாதானத்தை மீறுமலேயே முகம்மது அலிக்குக் கீழ்ப்படியாத மதுரை திருநெல் வேலிச் சீமைகளில் நவாபின் அதிகாரத்தை நிலை நாட்ட முயன்றனர். கோடியுக்குப் பின்வந்த டிலெரிட் புதிதாகச் சண்டை தொடங்குமென எண்ணி, அதற்கு ஆயத்தமா யிருக்கலானுன். மற்றும், திருச்சிராப்பள்ளியைப் பிடிக்கவேண்டுமென்று அதனைச் சுற்றிச் சண்டையிட்டுவந்த மைசூர்த் துருப்புக்கள், தங்கள் சொந்த நாட்டின்மேல் நிஜாமும் மராட்டியரும் படையெடுத்து வருதல் கண்டு திரும்பிப் போயின; போவதற்குமுன் அவர்கள் ஸ்ரீரங்கம் தீவைப் பிரெஞ்சுக்காரர்க்குக் கொடுத்துச் சென்றனர் (1755).

**கர்நாடகத்தில் ஆங்கிலேய பிரெஞ்சுக் காரர்களின் செயல்கள் (இ.பி. 1755—56)**

---

* Prototype.

† பினாவி யுத்தத்திற்குப் பின்னுண்டுகளில் இவன் புஸ்லியின் வழியையே பின்பற்றினன்; இருவரும் ஒரேவிதமான வேதனைகளுக்குள்ளாகி அவற்றைக் கடந்தனர்; பலவீன முள்ள நம்பிக்கையற்ற சிற்றரசர்களோடு பழகல், ஏழறுக்கும் பிரேபுக்களது சதிகளினின்றும் பிற ஐரோப்பியரது பகைமையினின்றும் தூரத்துக்கொள்ளல், பணமுடையாலேற்படும் கஷ்டங்களை யனுபவித்தல் என்ற இத்துறைகளில் இருவரும் ஒருதன்மையரே. "ஜாபர் அலியோடு கீழ்வ் மேற்கொண்ட சம்பந்தங்கள் லபர்ஜங்கோடு புஸ்லி மேற்கொண்டவைகளை யொப்பன்.....எனினும், இவன் தன் வலிய நட்புகளையாலும் சேஷமநிலையாலும் புஸ்லினிப்காட்டிலும் உன்னதநிலையை யடைந்தான்.....இவ்வாறு நட்பையிலும் நிலைமையிலும் காணப்படும் பேதங்களேயன்றி இவனும், புஸ்லிக்கேற்பட்ட கடின விஷயங்களையே சாதிக்க கேர்ந்தது: அவ்விஷயங்களைச் சாதிப்பதற்குப் புஸ்லி மேற்கொண்ட வழிகளையே இவனும் பெரும்பாலும் மேற்கொண்டான்"—Dodwell: Dupleix and Clive, p. 102.

ஆங்கிலேயர், தமது சேனையின் பெரும்பகுதியை மதுரை திருநெல் வேலி ஜில்லாக்களை யடிப்படுத்துமாறு, முகம்மது அலியின் தம்பியாகிய மாபூஸ்கானுக்கு உதவியாக அனுப்பினர்; அதற்காக நவாபினிடமிருந்து சில ஜில்லாக்களின் வருமானங் களைப் பெற்றனர். இச்செயல்களைச் சுதேச விவகா ரங்களில் தலையிடுதலாக எண்ணிய பிரெஞ்சுக்காரர் தாமும் அங்ஙனே செய்வதாக அச்சுறுத்தினர். பம்பாயில் வாட்ஸன் கீழிருந்த கப்பற்படை யோடு கிளைவ் 1756-இல் பெருஞ்சேனையுடன் கலந்து கொண்டான்; இருவரும் பேஷ்வாவோடு சேர்ந்து மராட்டியவீரனை அங்கிரியாவின் கெரியா கோட்டையை அழிக்கச்சென்றனர். பின்பு, அவர்கள் கீழ்க் கரைக்கு வந்து மேல் நிகழ்பவற்றைக் கருதியிருந்தனர்.

**போர் விலக்க முடியாதுபோதல்**

1756 மே மீ ஏழாண்டுப்போர் தொடங்கிற்று; அவ்வாண்டு முடிவில் அச்செய்தி இந்தியாவிற்கு எட்டியது, இந்தியாவில் பிரெஞ்சுக்காரரிழந்த நிலைமையை மீண்டும் எய்துவதற்காக ஒரு வலிய படை அனுப்பப்படுமென்று டிலெரிட் கேள்விப்பட் டார். அவர் தன்னிடமுள்ள சேனைகளை யெல்லாம் திருச்சிராப்பள்ளியை எதிர்க்குமாறு அனுப்பினர்; ஆனால், அங்கு உதவிக்குவந்த ஆங்கிலப் படையொன்று அவைகளைப் பின் வாங்கச் செய்தது (ஜூன், 1757). பின்னர் நிகழ்ந்த சிறு சண்டைகளில் பிரெஞ்சுக்காரர் வெற்றிபெறவில்லை. 1758 ஏப்ரலில், லாலி ஒரு பலத்த பிரெஞ்சுப்படையுடன் புதுச்சேரிக்கு வந்தபோது, கர்நாடகத்தின் நிலைமை ஆங்கிலேயரினும் பிரெஞ்சுக்காரர்க்கு ஏற்றதாயிருந்தது. ஆங்கிலேயர் முன் வருஷத்தில் தம்மிடமுள்ள திருப்புக்களை யெல்லாம் கிளைவின்கீழ் வங்காளத்துக்கு அனுப்பிவிட்டனர்; அவர்களது மூலப் படையோ திருச்சிராப்பள்ளியில் அடைபட்டு கிடந் தது; வாட்ஸன் கீழிருந்த கப்பற்படையோ ஹூக்ளியில் தங்கியது; மதராஸும் செயின்ட் டேவிட் கோட்டையும் நன்கு பாதுகாக்கப் படவில்லை. பிரெஞ்சு சர்க்கார்க்கோ கர்நாடகத்தில் பல கோட்டைகளிருந்தன; அவர் கள் நிலத்திலும், கீழைக்கரைக் கடலிலும் 1758 வரையில் வலிமிக்கிருந்த னர். இப்படிப்பட்ட சௌகரியங்களிருந்தும் லாலி தன் முயற்சியில் அபஜய மடைந்த வரலாறு அடுத்த அத்தியாயத்தில் கூறப்படும்.

**ஏழாண்டுப்போர் தொடங்கல் (1756)**

**லாலி கர்நாடகத்திற்கு வந்தபோது இருநிறத்தினரின் நிலைமை (1758)**

# அத்தியாயம் 5.

## வங்காளத்தில் புரட்சி: தென்னிந்தியாவில் பிரெஞ்சுக்காரர் இறுதியில் தோல்வியடைதல் (1757—1761)

### பகுதி 1 : வங்காளத்தில் புரட்சி (1756—57)—பிளாசி.

இந்தியாவில் ஆங்கிலேய ராஜ்யத்தின் வளர்ச்சி வங்காளத்திலிருந்து தான் ஆரம்பித்தது. 1700-இல் கல்கத்தா இராஜதானியான பிறகு அது பலத்திலும் செல்வாக்கிலும் பெருகியது. அதனது காவல்கள் பலப்படுத்தப்பட்டன. முகலாய அரசர்களால் பூல அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. ஹவாப் அலிவர்திகான் தன் ராஜ்யத்திலுள்ள ஐரோப்பிய ஸ்தாபனங்களை வருத்தவில்லை. ஐரோப்பிய வியாபாரத்தால் ஜனங்களுக்கேற்பட்ட நன்மைகளையும் அவன் பாராட்டினான். ஆங்கில ஸ்தாபனமாகிய கல்கத்தாவன்றியும், பிரெஞ்சு ஸ்தாபனமாகிய சந்திர நகரும், டச்சு ஸ்தாபனமாகிய சின்ஸுராவும் ஹூக்ளியின் வடகரையில் உள்ளன. ஆங்கிலேயரது ஆதிக்க வளர்ச்சியையும், அவர்களது பலத்த கோட்டைகளையும் கணக்கற்ற கப்பல்களையும் டக்கா, காஸிம்பஜார், பாட்னா முதலிய இடங்களிலுள்ள பண்டகசாலைகளையும் கண்டு அலிவர்திகான் சமுசயப்பட்டான். அவன் கர்நாடகத்தின் புரட்சியைப் பற்றியும், டுப்ளேயின் உயர்நிலையைப்பற்றியும், இறுதியில் ஆங்கிலேயரும் முகம்மதியும் வெற்றியுற்றதைப்பற்றியும் கேள்விப்பட்டான். ஆங்கிலேயரைக் கல்கத்தாவிலிருந்து துரத்திவிடும்படி சிலர் புத்தி புகட்டியபோது அவன் பின்வருமாறு கூறினான். "நிலத்தில் பற்றி எரியும் நெருப்பை (உள்நாட்டுக் கலகம்) யணைப்பதே கடினமாயிருக்கிறது. நீர் நிறைந்த கடலில் நெருப்புப்பற்றினால் (கலகத்தோடு இங்கிலாந்தின் கப்பற் பலமும் சேர்ந்தால்) யாரால் அணைக்க முடியும்."

**அலிவர்திகான்**

1752-இல், அலிவர்திகான் தனது பேரப்பிள்ளையாகிய ஸிராஜ்-உத் தௌலாவைத் தனக்குப் பின் பட்டமேறுமாறு நியமித்தான். ஆங்கிலேயரும் இந்தியரும் அவனைப்பற்றி நன்மொழிகூறுதலில்லை. 1756-இல் நவாப் வயதுமுதிர்ந்து இறந்த பொழுது, ஸிராஜ்-உத்தௌலாவிற்கு ஆங்கிலேயரது விரைந்தோங்கும் அதிகாரத்தைப்பற்றியும் நோக்கங்களைப்பற்றியும் கூறி ஜாக்கிரதையாயிருக்குமாறும் புத்திமதி கூறினர். ஸிராஜ் உத்தௌலா பட்டத்துக்கு வந்தவுடனே, தன் தலைநகராகிய முர்ஷிதாபாத்துக் கருகிலுள்ள காஸிம்பஜாரிலிருந்த ஆங்கில பண்டகசாலையைப் பிடித்தான்; அதன் பின்பு கல்கத்தாவின் மேற் சென்று, அது காவலின்றிக் கிடக்க அதனையும் பிடித்தான். கவர்னராகிய டிரேக்கும் பல கவுன்ஸில் அங்கத்தினர்களும் நதியில் தங்கியிருந்த கப்பல்களில் புகுந்தனர் (ஜூன் 1756). 1746-இல் லாபோர்டனே மதராஸைத் தாக்கியபோது அதனைக் காக்க ஆங்கிலேயர் காட்டிய எதிர்ப்பினும், கல்கத்தாவைக் காக்கக் காட்டிய எதிர்ப்பு மிகக் கேவலமானது. ஹால்வெல் என்ற ஒருவனே தைரியமாக ஒரு நாளிரண்டு நாள் எதிர்தாங்கி நின்றான்.

**ஸிராஜ்-உத்தௌலா சிம்மாதன மேறல் (1756)**

**அவன் கல்கத்தாவைப் பிடித்தல் (ஜூன் 1756)**

ஸிராஜ்-உத்தௌலா ஆங்கிலேயர் மேல் வெறுப்புக்கொண்டமைக்குப் பல காரணங்கள் உண்டு. அவன் கல்கத்தாவில் ஆங்கிலேயர் பெருத்த செல்வத்துடனுள்ளனர் என எண்ணினான் : அவன் கோபத்திற்குத் தப்பிய சிலர் ஆங்கிலேயரிடம் சரண் புக்கனர். இதனால் பழிவாங்க நவாப் எண்ணினான். அச்சமயம், இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் யுத்தம் நடக்கும்போலிருந்தது. நவாப் கல்கத்தாவை ஆங்கிலேயர் பலப்படுத்து வதாகக் கேள்விப்பட்டான். அவன் வில்லியம் கோட்டைச் சுவர்களைப் பலப்படுத்தக் கூடாதென டிரேக்குக்குக் கட்டளையிட்டான். ஆனால், டிரேக் 'பிரெஞ்சுக்காரர் ஒருகால் எதிர்ப்பராகலின் ஆங்கிலேயர் பலப் படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது' என மறுமொழி கூறினன். இத னாலும் நவாப் ஆங்கில அதிகார வளர்ச்சியைக் கண்டஞ்சினன். 'கர்நாட கத்தில் ஐரோப்பியர்கள் செய்த மாதிரியே வங்காளத்திலும் செய்து விடுவர் எனக் கருதினன். ஆனாலும் அதே சமயத்தில், பிரெஞ்சுக்காரர்க்கும் டச்சுக்காரர்க்கும் அச்சமுண்டாகுமாறு செய்திகள் விடுத்தான். நவாப் ஆங்கிலேயரை எதிர்த்ததற்கு முக்கியமான காரணம் யாதெனில், அலிவர்தி கான் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் சமயம் பார்த்து ஆங்கிலேயர் கோட் டையைப் பலப்படுத்தியதாகும் எனத்தோன்றுகிறது. ஆனால் உண்மை யாக, டிரேக் பிரஞ்சுக்காரர் எதிர்ப்பதெனப் பயந்து நடிப்பக்கமாயுள்ள சுவரில் சில மீறங்கிகளை ஏற்றினன். தரைப்பக்கமாக யாதொரு காவலும் அமைக்கப்பட்டில்லை.

**ஆங்கிலேயரிடத்தில் அவன் பகைமை பாராட்டல்**

நவாபுக்கு எளிதில் கல்கத்தா வசப்பட்டதற்குக் காரணம் ஆங்கிலே யரது ஒழுங்கீனமும் தலைமையின்மையுமாகும். நவாப் புறப்படைவீடு களைக் கைக்கொண்டபோதே, கவர்னரும் சேனாதி பதியும் கோட்டையை விட்டுச் சென்றனர். ஹால் வெல் சிறிது எதிர்த்து நின்றபோதினும், கோட்டை கிழ்ப்படிந்தது. கோட்டையிலிருப்பதாகக் கேள்விப்பட்ட பெருஞ் செல்வத் தைப்பற்றி ஸிராஜ்-உத்தௌலா விசாரித்த பின்பு, ஆங்கிருந்த ஆங்கிலக் கைதிகளை அற்றை இரவு ஓர் இருட்டறையில் அடைத்து வைக்குமாறு கட் டளையிட்டான். கோட்டைக்குள்ளிருக்கும் இந்த அறைதான், கல்கத்தா இருட்டறை என வழங்கப்படுவது. இது 20 சதுர அடி கூட வீஸ்தீர்ண முடையதன்று : அதற்குள் மிக்க வெப்பமுள்ள ஒரு நாளிரவில் 146 பேர் அடைபட்டனர். அவர்களுள் 23 பேர்கள்தான் உயிருடன் வெளிவந்தனர்* இத்துக்ககரமான செய்தியைப்பற்றி இப்போது விவரிப்பதில் யாதொரு பயனுமின்று.

**கல்கத்தா இருட் டறைக்கொடுமை**

---

* கல்கத்தா இருட்டறைக் கொடுமையென்பது கடைபெறவேயில்லையென ஒருசார் ஆசிரியர் கூறுவினறனர்; அக்காலத்திய முக்கமான சரித்திரங்களிலாவது ஹிந்து ஜனஸ்தகளிலாவது இதைப்பற்றிய செய்தியொன்றும் கூறப்பட்டிலது; அதைப்பற்றி ஹால்வெல் கூறுவனவெல்லாம் பிழையும் முரண்பாடும் கொண்டன. ஹால்வெல் கைதி யாகி உயிர்தப்பியவர்களிலொருவன்; அக்காலத்திய ஆங்கில மேலதிகாரிகளிற் சிலர் கடிதப்போக்குவரத்திலும் இதைப்பற்றிக் குறிப்பிடவில்லை; பிறகு, இச்சுற்ற விடயத்துக் குறி குறியாக ஹால்வெல் ஞாபகச்சின்னம் எழுப்பியதற்கு யாதொரு அத்தாட்சியும் இல்லை என்று கிருபிக்கப்பட்டது. 1899—1905 ஆண்டுகளில் இந்தியாவில் கவர்னர் ஜெனரலா யிருந்த கர்ஸன் பிரபு, ஹால்வெல் கட்டிய ஞாபகச்சின்னம் இடிந்துபோயினமையால், அதற்

கல்கத்தாவை ஆங்கிலேயரிழந்த செய்தி சென்னையை எட்டியபோது அதன் கவர்னர் ஹைதராபாத்தில் பிரெஞ்சு ஆதிக்கத்தை யொழிக்கக் கருதியிருந்தனர். இப்போது அந்தப்படையை அவர் வங்காளத்திற்கு அனுப்ப எண்ணியதோடு வாட்ஸன் கீழ் கடற்கரையிலிருந்த கப்பற்படையொன்றையும் அனுப்பத் தீர்மானித்தார். கிளைவுக்குப் படைத் தலைமை கொடுக்கப்பட்டது. சென்னை கவுன்ஸிலின் அங்கத்தினரும், ஆங்கில-பிரெஞ்சுப் போர்களின் சரித்திர ஆசிரியருமாகிய **ஆர்மி** என்பார், கவர்னருக்குக் கல்கத்தாவை மீட்பதன் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். மேலும்,"சிறிய படையொன்றை யனுப்பினால், அது வங்காளத்திலுள்ள ஆங்கிலேயர் நிலைமையைச் சரிப்படுத்தாதபோதலேயன்றிச் சென்னைக்கும் மெலிவுண்டாக்கும்" எனக்கூறினர். கிளைவைத் தலைவனாக நியமித்தது மிக்க அதிர்ஷ்டமாகக் கருதப்பட்டது. ஆங்கிலப் படைகள் ஹூக்ளி நதி முகத்துவாரத்தையடைய ஈண்ட காலமாயிற்று; எனினும், அது கல்கத்தாவுக்குப்போகும்போது வழியிடை மறித்த நவாப்பின் தூருப்புக்களை எளிதில் தோற்கடித்து, வில்லியம் கோட்டையை மீட்டு, ஹூக்ளி நகரைக் கொள்ளையிட்டது (ஜனவரி, 1757).

**சென்னையிலிருந்து கிளைவின் கீழ் படையனுப்பப்படல்**

நவாப் அஞ்சி, பிரெஞ்சுக்காரர் தயவை நாடினன். ஆனல், இங்கிலாந்தும் பிரான்ஸும் போரிலிறங்கியிருக்கும் செய்தி எட்டியது; ஆகலின், பிரெஞ்சுக்காரரின் மத்தியஸ்தத்திற்கு இடமேயில்லை. நவாப் கல்கத்தாவின்மேற் படை யெடுத்து வந்து, கிளைவ் கொடுத்த ஷரத்துக்களையும் இறுமாப்புடன் மறுத்தான். ஆங்கிலேயர் அவன் பாசறையை இரவில் எதிர்த்தனர். இதனலஞ்சிய நவாப் உடன்படிக்கையை நாடினன். அதன் ஷரத்துக்களின்படி ஆங்கிலேயர் முன்னிலிருந்து அனுபவித்துவந்த உரிமைகள் உறுதிசெய்யப்பட்டன. நவாப் அவர்களிடமிருந்து கொள்ளையடித்த அனைத்தையும் திருப்பிக்கொடுத்துவிடல் வேண்டும். அவர்கள் தங்களிஷ்டப்படி கல்கத்தாவைக்

**நவாப்போடு ஆங்கிலேயர் உடன்படிக்கை செய்து கொள்ளல்**

---

குப் பதிலாக புதிதாக ஒன்றெழுப்பினர். அவர் இந்த ஞாபகச்சின்னம் பாழாய்ப் போவதற்குமுன் 80 வருடகாலமாகத்தான் நிலைத்திருக்கவேண்டும் என்றார்; மற்றொரு சாரார், ஹால்வெல் கூறிய அதிசயோக்திகளோப் புறக்கணிப்பினும், நிகழ்ந்த சம்பவ வரலாற்றின் முக்கிய அம்சங்களே நீக்கலரிதென்றும், அக்காலத்திருந்த லார்ட் கிளைவ், வட்ஸன், வன்னர் பிட் முதலியோர் இதைப்பற்றிக் குறித்துள்ளாரென்றும் கூறுகின்றனர். See Curzon's British Government in India, Vol. I, chap, VII; Busteed. Echoes of Old Calcutta, 4th Ed. chap. II, Bengal Past and Present, July, 1915 and January 1916; C. R. Witson (ed). Old Fort William in Bengal Vol. I. Intro. pp. XXIII et seq. and the Cambridge History of India, Vol. V. p. 156, Note.

அபிராஜ்-உத்தௌலா கபமாக இத்தகைய கொடுமைக்குக் காரணபூதனல்லனெனத் தோன்றுகிறது; அவன் அவ்விரவு விழித்திருப்பானென்பதும் ஐயத்துக்கிடமாகவிலக்கியிருப்பன். ஏனைப் நண்பிடம் அகப்பட்டவர்களுக்கு மிக்க கொடுமைகள் விளைந்திருக்கிறனென்பதற்கும் பல சான்றுகள் இருக்கலாம். எனினும், ஸாலவெலின் சொற்படி, இத்தகைய கொடுமைக்குக் கல்கத்தாவில் வியாபாரியாயிருந்த அமீன் சந்த் என்ற தனவந்தர் சொக்கலேவாதேவிக்காரனது தூண்டுதலே காரணமாகும். அமீன்சந் ஆங்கிலேயர்மேல் வெறுப்புக்கொண்டு நவாபோடு சதியாலோசனை செய்துவந்தான். ஆனல் அவனது கபட்யோசனைகளின் தன்மைகளும் விரிவும் சரிவர முற்றும் தெரியவில்லை. எனினும், சென்றகளுக்குப்பின் ஆங்கிலேயருக்கும் நவாபுக்கும் இடையே பேச்சு நிகழ்ந்தபோது மதியஸ்தனுக அவன் கட்டவிடக்கைகள் நிகழ்ந்தினன்.

**அபிராஜ்-உத்தௌலா அதில் சம்பந்தப்பட்டவரை**

காவற்படுத்திக்கொள்ளலாம். வங்காள முற்றும் வழங்கும்படி ரூபாய் நாணயங்களும் அடிக்கலாம். இந்த உடன்படிக்கையால் ஆங்கிலேயர்க்குப் புகழ் விளைந்ததன்றிச் சௌகரியங்களும் ஏற்பட்டன. ஆனால் தற்போது பிரான்ஸோடும் போர் ஏற்பட்டதால் கிளைவ், நவாபையும் பிரெஞ்சுக்காரரையும் ஒரு சேர எதிர்த்துப் போர்புரிய இயலாதென நினைத்தான். ஆங்கில வெற்றிகளும் உறுதியுடையனவாயில்லை. "உண்மையில் பிரெஞ்சுக்காரர் ஆங்கிலேயர் வழியைப் பின்பற்றி வங்காளத்தில் தம்மைச் சார்ந்த ஒவ்வொருவனையும் கொண்டு முயன்றிருந்தால், இச்சம்ப வங்களின் நிகழ்ச்சியே மாறுபட்டிருக்கும்." ஆனால் புஸ்ஸி கிடைத்த பிரெஞ்சுப்படைகளைத் திரட்டியிருப்பினும் வங்காளத்தில் பிரெஞ்சுக்கார ரின் உதவிக்குப் புதுச்சேரியிலிருந்து போகமுடியவில்லை*.

**சந்திர நகரை ஆங்கிலேயர் கைப் பற்றுதல்**

எனினும், கிளைவுக்கு மனச்சமாதான மேற்படவில்லை. அவன், சந்திர நகரிலுள்ள பிரெஞ்சுக்காரரின் விரோதத்தை எதிர்க்க நேரிட்டது. கொஞ்ச காலம் வரை, இரு கட்சியாரும் நவாபின் உதவியைப் பெற முயன்றனர். நவாபோ இருகிறத் தினரும் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டு மெலிவ தென எண்ணியிருந்தான். நவாபிடம் சண்டை நேரலாம்படியிருந்ததால், கிளைவுக்குச் சந்திரநகரைவிட இஷ்டமில்லை. ஒருகால், புஸ்ஸி, சந்திரநகரிலுள்ள பிரெஞ்சுக்காரரோடு சேர்ந்துகொண் டால் நவாப் அவனது நட்பை நாடுவான்; பிரெஞ்சுக்காரர் நவாபுடன் சேர்ந்துகொண்டால் கிளைவுக்குக் கஷ்டங்களேற்படும். கடைசியில், நவாப் சந்திரநகரை எதிர்க்க ஆங்கிலேயர்க்குக் கடிதம் மூலம் அனுமதியிட் டனன்†. அந்த இடத்தைத் தரைப்பக்கத்திலும் நதிப்பக்கத்திலுமாகத் தாக்கவே பிரெஞ்சுக்காரர் கீழ்ப்படிய நேர்ந்தது (மார்ச்சு, 1757).

**அதன் விளைவு**

கிளைவ் சமயம்பார்த்துச் சந்திரநகரைப் பிடித்தது ஒரு விழுமிய சம்பவமாகும்; இதனால் இந்தியர் பிரெஞ்சுக்காரரிடத்து வைத்திருந்த மதிப்பின் எஞ்சிய பகுதியும் ஒழிந்தது; ஆங்கிலேயருக்கு எதிராக நவாபுக்கு கட்டினராயிருக்கும் நிலைமையும் அற்றது. மேலும், பிரெஞ்சு போர்போன், மொரீஷஸ் தீவுகளுக்கு வங்காளத்தினின்று வழக்கப்படி சென்றுகொண்டிருந்த தானியங்கள் நின்று போயின. "இதனால், 1757-1758 ஆண்டுகளில் பிரெஞ்சுக்காரர் அனுப்பிய கப்பற்படைகளுக்கு உணவளிப்பது கடினமாயிற்று" இவ்வித மாக பிரெஞ்சுக் கப்பற்படைகள் பலம் குன்றிப்போயின. இல்லையேல், தென்னிந்தியாவில் ஆங்கிலேயரோடு செய்த போரில் லாலி ஆரம்பத்தில் பெற்ற வெற்றிகள் நிலைபெற்றிருக்கும்.

---

* "1751-இல், புஸ்ஸியைத் தக்காணத்திற்கு அனுப்பியதால் கர்நாடகத்தில் டுப்ளே யின் எண்ணங்கள் பழுதுபட்டதுபோல், 1757-இல், புஸ்ஸியின் நிலைமையைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தால், வங்காளத்தில் பிரெஞ்சுக்காரர் தீவிரமாகத் தலையிடுதல் முடியாமற்போயிற்று"—(Cambridge History Vol. V. p. 145).

† அக்காலத்து, டில்லியிலிருந்த ஆமத்ஷா அப்தாலி வங்காளத்தின்மேல் படை யெடுப்பதாக வதந்தி இளம்பியது; இதனால், நவாப் ஆங்கிலேயருதவியை நாட நேர்ந்தது; அவர்களோச் சாந்தப்படுத்துவதற்காகச் சந்திரநகரைத் தாக்கீ அனுமதியிட்டான்.

நவாப்புக்குப் பிரெஞ்சுக்காரரை ஒடுக்கியதன் பயனின்மை விளங் கிற்று ; அவன் புஸ்ஸிக்குச் தன்னைக் காக்கவருமாறு எழுதினன். ஆங்கி லேயர் தன்னைத் திடீரெனத் தாக்குவர் என மிகப் பயந்தான் ; அதனால் ஆங்கிலேயரோடு தான் கொண்ட பகைமையைக் காட்டிவந்தான். இதனால், நவாபோடு மாறுபாடு கள் கொஞ்சகாலத்துக்குள் திரும்ப ஆரம்பிக்கும் எனக் கிளைவ் உணர்ந் தான். ஆனால், எப்போழுதாகிலும் அவனைச் சென்னைக்கு வரும்படி யழைப்பாதலின், அவன் , "தல்கத்தாவை விராஜ்-உத்தௌலாவின் இஷ்டப்படிசெய்ய விட்டுவிடுவதா , அல்லது சென்னையைப் பிரெஞ்சுக் காரரின் ஆதீனத்தில் விட்டுவிடுவதா என்ற இரண்டில் ஒன்றைத் தேர்ந் தெடுக்க வேண்டியதாயிற்று." மற்றும், பிரெஞ்சுக்காரர் கடற்கரையில் பெருந்தொகையில் வந்திறங்குவர் என்று நாடோறும் எண்ணியும் வந்த னன். இச்சமயம் கிளைவுக்கு அதிர்ஷ்டம் பிறந்தது. மூர்ஷிதாபாத்தி

**நவாபுக்கு கெதிராகச் சதிசெய்தல்**

லுள்ள முக்கிய பிரபுக்கள் நவாபின் அகங்காரத்திற் காக அவனை வெறுத்தனர். அவனை நீக்கிவிட்டு அவனது மைத்துனனும் சேனைத் தலைவனு மாகிய **மீர் ஜாபர் அலி** என்பவனை நவாபாக்கச் சதி செய்தனர். வங்காளத் தில் சிறந்த ஹிந்து பொக்க லேவாதேவிக்காரர்களாகிய ஜகத் சேட்டுக் களின் குடும்பமொன்று இருந்தது. அவர்கள் அலிவர்திகான் அதிகா ரத்தை நிலைநாட்டப் பேருதவி புரிந்தனர். அவர்களை நவாப் துன்புறுத்தவே அவர்கள் ஆங்கிலேய ருதவியை நாடினர். திவானாயிருந்த **ராய் துர்லப்** விலக்கப்பட்டு ஒரு கீழ்மகன் திவானாயினன். மீர்ஜாபரின் அண்மனை நோக்கித் துப்பாக்கிகள் காட்டப்பட்டன. பழைய உத்தியோகஸ்தர்களனை வரும் நீக்கப்பட்டனர். நவாபின் கொடுமையினால் பிரபுக்களும் ராணுவ உத்தியோகஸ்தர்களும் வெறுப்புக் கொண்டனர். வங்காளத்தில் நவாபுக்குப் பிரெஞ்சுக்காரரின் உதவி விரைவில் கிடைக்காதாதலால், சதிசெய்வோர் கிளைவின் உதவியையும் ஆதரவையும் நாடினர். இங்ஙன், ஆங்கிலேயர் தமக்கு நட்பினராயிருந்த நவாபுக் கெதிராகவே சதிசெய்வோர்க்கு உடந் தையாயிருக்கும்படி தூண்டப்பட்டனர் ; இவ்வாறு நெறிதவறின வழியில் முதன் முதல் அடியிடவே பின்பு பல அபத்தங்கள் செய்ய நேர்ந்தன. அவற் றுள் மிகவும் மானக்கேடான செயல் கிளைவ் அமீன்சந் * தினிடம் செய்த

**கிளைவின் நிலைமை**

---

* பிராஜ்-உத்தௌலா கல்கத்தாவைக் கைப்பற்றியபோது அமின்சந் மோசக்கார னென்ற சந்தேகமேற்பட்டது: இருந்தபோதிலும், நவாபை நீக்கச்செய்த சதியில் அவனையும் கலந்துகொள்ள விட்டனர். பிறகு, அவனை அச் சதியாலோ சனையினின்று விலக்க முயன்றனர்; அப்போது அவன், குழ்ச்சி யைப்பற்றி விராஜ்-உத்தௌலாவுக்குச் சொல்லிவிடுவதாகவும், அங்ஙன் சொல்லாமலிருத்தற்கும் பெரும்பணம் லஞ்சமாகக் கொடுக்கப்படவேண்டுமென்றும் கேட்டான். முர்ஷிதாபாத்திலிருந்த ஆங்கில எஜெண்டு தன்னிடம் அமின்சந் துரோகமாக நட்புகொண்டதற்குச் சாட்சிகள் வைத்திருந்தான் : எப்படியாயினும், விஷயங்கள் முற்றித் தொழில் நடைபெறும்வரை அவன் வாயை மூடி வைப்பது அவசியமாகும். ஆகையால், கல்கத்தாவிலிருந்த ஆங்கில கவுன்ஸில் அங்கத் தினர்கள், இருகூட்டப்பட்ட உடன்படிக்கை முறையை மேற்கொண்டனர். அதன்படி, சதல் பத்திரத்தில் அமின்சந்தின் பணத்தைப்பற்றி எழுதியிருக்க, அசல் பத்திரத்தில் அத்தகைய நிபந்தனை எழுதப்படவில்லை. வாட்ஸன் சபலில் கையொப்பமிட மறுக்க யாரோ ஒருவன் அமின்சந்தை ஏமாற்றுவதற்காக வாட்ஸன் கையொப்பமிட்டதாகியிட்டனன். இந்த மோசம் கிளைவினல் செய்யப்பட்டதென்பர் : கிளைவின்மேல் சாற்றப்பட்ட குற்றங்களுள் இதுவே அவன் பெயரைக் கெடுத்தது ; அவன் வரலாற்று ஆசிரியர்களாகிய **மெகாலே** முதலிய

**அமின்சந் மேற்கொண்ட வேலை**

இரண்டகமே யாகும். அமீன்சந், ஆங்கிலேயர்க்கும் சதிசெய்வோர்க்கு மிடையே மத்தியஸ்தனு மிருந்தான். மீர்ஜாபருக்கும் ஆங்கிலேயருக்கும் நடந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் :—ஓடிப் போன பிரெஞ்சுக்காரர்களையும் பண்டகசாலைகளையும் ஆங்கிலேயரிடம் ஒப்புவித்தல்; ஆங்கிலேயர் இழந்தவைகளை அவர்களுக்கே திருப்பிக்கொடுத்தல்; டக்காவிலும் காஸிம்பஜாரிலுமுள்ள பண்டகசாலைகளைக் காவற்படுத்தும் உரிமை பெறல்; கல்கத்தாவில் ஆங்கிலேயரீது ஆதிக்கத்தை அங்கீகரித்தல் என்பன. இந்த உடன்படிக்கையால் ஆங்கிலேயர் 24 பர்காணாக்கள் என்ற நிலப்பகுதியைப் பெற்றனர்; ஹூக்ளி நகரத்தின் தெற்கோடும் ஆற்றங்கரையில் நவாப் கோட்டைகள் கட்டப்படாது.

**மீர்ஜாபருடனும் சதிசெய்வோருடனும் கிளைவ் செய்துகொண்ட ஒப்பந்தம்**

மீர்ஜாபருடன் உடன்படிக்கை செய்து கொண்டவுடனே, கிளைவ் கல்கத்தாவிலிருந்து ஸ்ரீராஜ் உத்தௌலாவின்மேல் மூவாயிரம்பேர் அடங்கிய படையோடு சென்றனன்; அவர்களுள் எண்ணூறுபேர் ஐரோப்பியர்களாவர்; சிப்பாய்கள் லாரன்னிலால் நன்கு பயிற்றப்பட்டவர்கள்; மீர்ஜாபரிடத்தில்தான் கிளைவுக்கு நம்பிக்கை குறைவாக இருந்தது; மீர்ஜாபர் சண்டையில் மூனைந்து நிற்காவிட்டால் ஆங்கிலேயருக்குப் பெருந்தோல்வி ஏற்படும். மீர்ஜாபர் நவாபைவிட்டு விலகித் தூரநின்று சண்டையின் முடிவைப் பார்த்துக் கொண்டிருக்கத்தான் செய்வன் எனக் கிளைவ் சந்தேகித்தான். எனினும், இப்போது கிளைவுக்கு அவனை விலக்க முடியவில்லை. ஆதலின் கல்கத்தாவிலிருந்து உத்தரவு வருதற்கு முன்பே அவன் சண்டைக்கு மூனைந்து பிளாஸி என்ற இடத்தை நோக்கிச் சென்றனன். (ஜூன் 22. 1757).

**கிளைவ் நவாபின் மேற் செல்லல்**

அடுத்த நாள் என்றும் மறக்கலாகா சண்டை நிகழ்ந்தது. இச் சண்டையே, இந்தியாவில் ஆங்கிலேய ராஜ்யத்தின் அஸ்திவாரக்கல் எனக் கருதப்படுகிறது. இச்சண்டை, தக்காணத்தில் புஸ்ஸி பெற்றதுபோல வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம் பெறுவதா, அல்லது பெருந் தோல்வியடைந்து கல்கத்தாவுக்குத் துரத்தப்படுவதா என்ற இரண்டினுள் ஒன்றை முடிவுகட்டும் எனக் கிளைவ் எண்ணினனன். நவாபின் படை ஆங்கிலேயர் மேல் வெடிருண்டுகளைப் பொழிந்து சண்டையைத் தொடங்கிற்று; கிளைவும் வெடிருண்டுகளை யிட்டுத் தாக்கினனன். பிற்பகலில் நவாபின் படை

**பிளாஸிச் சண்டை ஜூன் 1757**

---

எல்லோரும் அவன் நடத்தையை மன்னிப்பிட்டுச் சரிப்படுத்தப் பலவாறு பிரயாசைப் பட்டனர். அமின்சந் சூழ்ச்சியைப்பற்றி வெளிப்படுத்தினால் நவாப் கோபம் கொள்வான்: அவன் கோபத்துக்காளாகாது, அவன் தலைநகரினின்று மீர்ஜாபரும் ஆங்கிலேயரும் தப்புவதற்கும், இதர சதிக்காரர்களது நன்மைக்குமாகக் கிளைவ் போலி உடன்படிக்கை செய்து கொள்வதே சிறந்த வழியாகுமென எண்ணினனன். "அது மிக வருந்தத்தக்க வழிதான்; தமக்கே நம்பிக்கையில்லாத ஒரு மனிதனை ஆங்கிலேயர் ஏன் அமர்த்தினர் என்பதற்குக் காரணம் நன்கு புலப்படவில்லை.....மேற்கொண்ட உபாயங்களை எவ்வளவுதான் பழிப்பினும், பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனுமிய ஒருவனிடத்து இரக்கங்கொள்வது இயலாத காரியமே". (Dodwell Dupleix and Clive, pp. 132—3). காமன்ஸ் சபையின் கமிட்டியொன்று கிளைவை விசாரித்தபோது 'அத்தகைய சந்தர்ப்பத்தில் அத்தகைய செயலை மேற்கொள்ளல் தகுதியே' எனத் தன் செயலுக்கு நியாயம் காட்டினனன். (Malcolm's Life of Lord Clive, Vol. I. (1836, p. 249, Note).

தமது பார்சற்றையை அடைந்தது; ஆங்கிலத் துருப்புக்கள் மேற்சென்று அவர்கள் தங்கிய இடத்திற்கு அருகாமையிலுள்ள இரண்டு சிறு மேட்டு நிலங்களைக் கைப்பற்றினர். நவாப் சண்டையில் தோற்றோம் என்று எண்ணித் தன் தலைநகருக்கு விரைந்து ஓடினான்; அவனது சேனையும் சிதறுண்டது; ஆங்கிலேயர் ஒரு பெரிய வெற்றியை அடைந்தனர். * கிளைவ் மீர்ஜாபருடன் மூர்ஷிதாபாத்திற்கு விரைந்து ஸிராஜ் உத்தௌலாவைப் பிடிக்க முயன்றான். அவன் பீகாருக்குத் தப்பியோட முயன்றான்; அப்படித் தப்பிப்போயிருப்பின், மீர்ஜாபரை நவாபாக்குவதில் கிளைவுக்குப் பெருங்கஷ்டம் ஏற்பட்டிருக்கும். ஆனால் ஸிராஜ் உத்தௌலா தப்பியோடும்போது பிடிக்கப்பட்டு மீர்ஜாபரின் மகனுகிய **மீரான்** என்பவனால் கொலையுண்டான். மூர்ஷிதாபாத்திலுள்ள பொக்கிஷத்தில் கிளைத்தபடி அவ்வளவு பணமில்லை. மீர் ஜாபர் ஆங்கிலேயத் தலைவர்களோடு பிரத்தியேகமாகச் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி கிளைவுக்கும் அவனைச் சேர்ந்தோர்க்கும் பல பரிசுகளைக் கொடுக்க நேர்ந்தது; எஞ்சியவை, மீர்ஜாபர் கொடுக்கவேண்டிய இதர உத்தரவாத செலவுகளுக்குப் போதாவா யிருந்தன. ஆகையால் மீதி பணத்தின் ஒருபகுதிக்கு நகைகளைக் கொடுக்க நேரிட்டது. இன்னும் மிகுந்த பகுதி பணத்திற்கு அப்போதைக் கப்போது வரும் வருமானங்களைக் கொண்டு தீர்க்க நேர்ந்தது.†

**ஸிராஜ் உத்தௌலாவின் முடிவு**

**ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட புதுநிலைமை**

பிளாஸிக்குப் பின்பு வங்காளத்தில் ஆங்கிலேயர் நிலைமை தக்காணத்தில் பிரெஞ்சுக்காரர் நிலைமையை ஒத்திருந்தது. மீர்ஜாபரும் புதுநவாபாக அவர்களால் ஆக்கப்பட்டவனே; அவர்களது துருப்புக்களே அம் மாகாணத்தில் சிறந்த ராணுவபலம் பெற்றிருந்தது; கிளைவே உண்மை அதிகாரியாக விளங்கினன்.

## பகுதி : 2. வங்காளத்தில் கிளைவின் முதலரசாங்கம் (1757—60)

### மீர்ஜாபரின் ஆட்சி.

மீர்ஜாபரின் ஆட்சி பலமற்றதாகும்; அவனது பலஹீனத்திற்காகவும், அவன் ஹிந்து மொக்க லேவாதேவிக்காரர்களாலும் ஆங்கிலேயராலும் பட்டத்திற்கு வந்ததற்காகவும், முகம்மதிய பிரபுக்கள் அவனை இகழ்ந்தனர். அவன் ஆங்கிலக் கம்பெனியார்க்கும் அதன் தலைவர்களுக்கும் வீரர்களுக்கும் பெரும் பணம் கொடுப்பதாக முன் யோசனையின்றி

**மீர்ஜாபரின் பலஹீனமான நிலைமை**

---

* பிளாஸி யுத்தத்தில் ஆங்கிலேயர் பெற்ற வெற்றிக்கும் செஞ்சிக்கு அருகே நாஜர் ஜங்கின் துருப்புகளின்மேல் பிரெஞ்சுக்காரர் பெற்ற வெற்றிக்கும் ஒற்றுமை காணப்படுகின்றது. நாஜர்ஜங் பாசறையின் பட்டாளிய நவாப்புக்களைப் போலவே, இச்சண்டையில் மீர்ஜாபரும் ராய்துர்லபும் துரோகஞ் செய்தனர். நாஜர்ஜங்கின் மரணத்திற்கும் ஸிராஜ்உத்தௌலாவின் மரணத்திற்கும் ஏதுவாகிய விவரங்களில்தான் வேற்றுமை காணப்படுகின்றது.

† இந்த நீசமான விவகாரங்கள் கிளைவின் புகழுக்கு ஏற்றனவல்ல; எனினும், இப்படிப்பட்ட விஷயத்தில் கிளைவும் அவனைச் சார்ந்தோரும் டுப்ளே புரிந்த வழிகளையே பின்பற்றினர்; மேலும் அக்காலத்துத் தம்மையொப்பார் செய்தவைகளையே அவனும் செய்தான். "இப்படிப்பட்ட விஷயங்களில் நியாயம் காண்பதற்கு அக்கால நிலையைக் கவனிக்கவேண்டுமேயன்றி மனிதர்களைப்பற்றிக் கவலிக்கலாகாது; எனினும், பரிசுகளை ஏற்க ஒப்புக்கொள்ளல் நீமையே ஆகும்; 1765-ல் நிகழப்போவதைக் கிளைவ் முன்பே யோசித்திருப்பின் அவன்மேலேற்பட்ட வெறுப்புக்களுக்கு ஒருகால் அவன் ஆளாகாதிருந்திருப்பன்."—Cambridge History Vol. II p. 151.

வாக்களித்தான். மூன் கண்டபடி, அவன் நகைகளையும், பல ஜில்லாக்களின் வருமானங்களையும் முன்னரே கொடுக்கும்படி நேர்ந்தது. கிளைவுக்கும் இதர தலைவர்களுக்கும் தான் கொடுத்த பரிசுகளால், அவர்கள் கம்பெனியின் நிமித்தம் தன்னைக் கேட்டவைகளைக் குறைப்பரென மீர்ஜாபர் எண்ணினான். ஆனால் அதற்கு மாறாக அவர்கள் அவன் வாக்களித்தபடி முழுத் தொகையையும் கொடுக்கவேண்டுமென வற்புறுத்தினர். அவன் ஆங்கிலேயரோடும் சண்டையிடத் தொடங்கித் தன் கிழுள்ள திவான் ராய் துர்லப், மீஹார் டெப்டி கவர்னர் ராஜராம் நாராயண் போன்ற பிரபல ஹிந்து உத்தியோகஸ்தர்களை வேலையினின்று நீக்கத் தீர்மானித்தான். அவர்கள் இருவரும் ஆங்கிலேயர் சார்பாகவே பிருக்கின்றனர் என்று அவன் சந்தேகப்பட்டான். மேலும், அவனை வெறுத்து இருபெரிய ஹிந்து ஜமீன்தார்கள் கலகம் செய்தனர்; அவர்களைக் கிளைவ் அடக்கிப் பிறகு நவாபின் கோபத்தினின்று அவர்களைக் காக்க நேர்ந்தது. ராஜராம் நாராயண் தன் யஜமானனுக்கெதிராக அயோத்தி நவாப்போடு சேர்ந்து கொண்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டான்; நவாப்போடு பாட்னாவுக்கு வந்த கிளைவ்தான் ராஜாராம் நாராயணனைக் காப்பாற்ற வேண்டிய தாயிற்று; மேலும் யஜமானனோடு மனஸ்தாபம் நீங்கி வாழவும் செய்தான்.

இவ்விதமாக, கிளைவ் நவாபின் பலவீனத்தையும் நட்பின்மையையும் விரைவில் உணர்ந்தான்; மேலும், நவாபின் மகனை மீரான் மூர்ஷிதாபாத்தில் சூழப்பமுண்டாக்க முயன்றான். கிளைவ், நவாபின் மந்திரிகள் தத்தம் கடமைகளை நன்கு செய்து வந்தால் அவர்களை நவாபின் கொடுமையினின்று காப்பதாகச் சொன்னான். ராய் துர்லப் ராம் நாராயண் இவ் விருவரையும் அவன் பாதுகாக்கவும் வேண்டியதாயிற்று. நவாபோடு விரோதங்கொண்டு அவன் புகழையும் குறைக்கக்கூடாது. அவன் நவாப்பைத் தன்னிஷ்டப்படி நடக்கச் செய்தான். ஆங்கிலேயரோடு அவன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை யெல்லாம் நிறைவேற்றிவைத்தான். இவ்விதமாக, சுதேச அரசாங்கத்தின் உறுதிப்பாடு ஆங்கிலத் தலைவனது ஆதரவையும் பிரீதியையும் ஒட்டியிருந்தது.

**கிளைவ் தன் உத்தியோகஸ்தர்களைக் கொடுமையினின்று காப்பாற்றல்**

கிளைவ் வெளி படையெடுப்புகளினின்றும் மாகாணங்களைக் காப்பாற்றவும் நேர்ந்தது. இதுவரையில், அவன் சென்னையரசாங்கத்திலொரு உத்தியோகஸ்தன் மாதிரி கல்கத்தாவில் இருந்தானேயன்றி அவனது பதவி அங்கு நன்கு ஒழுங்குபடுத்திருக்கவில்லை. பல கவர்னர்கள் மாறி மாறி வந்தபோதிலும், நிரந்தரமான ஏற்பாடுகள் செய்யும் வரையில் கிளைவைக் கவர்னராக இருக்கச் செய்தனர். 1758-இல் போர்ட் வில்லியத்திற்குக் கிளைவைக் கவர்னராக நியமித்த செய்தி கம்பெனியின் மேலதிகாரிகளிடமிருந்து கிடைத்தது. இது லாலி சோழ மண்டலக் கரையையடைந்ததற்குப் பின்னராகும். இது ஆங்கிலேயர்க்கு ஒரு நன்மையேயாகும். எப்படியெனில், நவாப் பிரெஞ்சுக்காரினுதவியை நாடிப் புதுச்சேரியோடு கடிதப்போக்குவரவு செய்து கொண்டிருந்த சமயத்தில் கிளைவின் நிலைமை பலப்படுத்தப்பட்டது.

**கிளைவ் போர்ட் வில்லியத்திற்குக் கவர்னராதல் (1758)**

அதே சமயத்தில் அலிகவுஹர் என்ற முகலாய இளவரசன்—இவனே பின்னால் ஷாஆலம் எனப்பட்டம் பெற்றவன்—புரட்சியால் வேதனைப் பட்ட டில்லியிலிருந்து ஓடிப்போய், அயோத்தி நவாபாகிய ஷுஜாஉத்தௌலாவிடம் அடைக்கலம் புகுந்தான். அவன் பிஹார், வங்காளம் ஆகிய இரண்டு மாகாணங்களையும் தனக்கே வசப்படுத்த எண்ணித் தன் தந்தையாகிய முகலாய சக்கரவர்த்தி அவைகளைத் தனக்குக் கொடுத்ததாகச் சாதித்தான். 1759-ஆம் ஆண்டு முதலில் அவன் பெரும் படையுடன் பாட்னாவின் மேற் சென்றான். பிஹாரிலிருந்த பல ஜமீன்தார்கள் அவனோடு சேர்ந்தனர். பிஹாரின் டிப்டி கவர்னராயிருந்த ராஜாராம் நாராயணன் முதலில் கீழ்ப்படிவதுபோல நடித்துப் பின்பு பாட்னாவைத் தாக்கிய விரோதியைத் தோற்கடித்தான். ஆங்கிலேயர் உதவிக்கு வரும் வரையில் அவன் வெகு சாமர்த்தியமாக அந்த இடத்தைக் காப்பாற்றினான். கிளைவ் சீக்கிரம் பிஹாருட் புகுந்து, கலகஞ் செய்த ஜமீன்தார்களைத் தண்டித்துப் பாட்னாவிலொரு படையை வைத்தான். சென்னையிலுள்ள ஆங்கிலேயரை லாலி நெருக்கியதை நிவர்த்திப்பதற்காக, வடசர்க்காரிலுள்ள பிரெஞ்சுக்காரரைத் தாக்கக் **கர்னல்போர்ட்டு** என்பவர்கீழ் பாதி சேனையையனுப்பியபின்பும் கிளைவ் இத்தகைய வெற்றிகரமான செயல்களைப் புரிந்தது மிக மெச்சத்தக்கதாகும். இப்படி, காலத்தில் காப்பாற்றியதற்காக மீர்ஜாபர் கிளைவுக்குத் தன் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டான். அவன் கிளைவுக்கு ஒரு ஜாகீர் கொடுத்தான். மேலும் தாம் நவாபானபோது கம்பெனிக்கு 24 பர்காணாக்களைக் கொடுத்த சமயத்தில் அதன் நிலவரியை வசூலிக்கும் உரிமையை மட்டும் தானே கொண்டிருந்தான். அவ்வுரிமையையும் இப்போது கொடுத்துவிட்டான். இந்த நிலவரியைக் கம்பெனி நவாபினிடம் செலுத்தாது கிளைவுக்குச் செலுத்திவிடவேண்டும். கொடுக்கப்பட்ட நிலங்களுக்குக் **கிளைவின் ஜாகீர்** என்று பெயர் வந்தது. மேலும், டில்லியில் பேருக்கு மாத்திரம் சக்கரவர்த்தியாயிருந்தவனது மந்திரி, பிஹாரில் ஷாஆலம் அடைந்த தோல்விக்கு மகிழ்ந்து மீர்ஜாபரை நியாயமான வங்காள நவாபென அங்கீகரித்தும், கிளைவுக்குக் கௌரவப்பட்ட மளித்தும் சன்னத்து கொடுத்தார். நவாப் கிளைவுக்குக் கொடுத்த பரிசும் இப்பட்டத்தை நிலைநிறுத்தலே நோக்கித்தான்.

அவன் ஷாஆலத்தைப் பிஹாரிலிருந்து திருப்பியடித்தல் (1759)

வடசர்க்காருக்குப் போர்ட்டை அனுப்பல்

கிளைவின் ஜாகீர்

சில காலங்கழித்து கிளைவ் தனக்கு விரோதியாக எஞ்சிய டச்சுக்காரரை யொழிக்க முயன்றான். ஆங்கிலேயரது ஆதிக்கத்தைக்கண்டு சின்ஸுராவிலுள்ள டச்சுக்காரர் பொறாமை கொண்டனர். கிளைவ், வெடிமருந்து பண்ணுவதற்கு மிக அவசியமான வெடியுப்பில் டச்சுக்காரர் பிரெஞ்சுக்காரரோடு செய்து வந்த வியாபாரத்தைத் தடை செய்தான். இதனால், பிரெஞ்சுக்காரருக்கு வெடியுப்பு கிடைக்காது போயிற்று; மற்றும். டச்சுக்காரர் ஐரோப்பாவோடு செய்து வந்த துணி வியாபாரத்தையும், அபினிவியாபாரத்தையும்

சின்ஸுராவில் டச்சுக்காரது அதிகாரத்தைக் கிளைவ் அழித்தல்

பாழ்படுத்தினுன். இதனல், டச்சுக்காரர் தங்கள் நிலைமையைப் பலப் படுத்தவெண்ணி படாவியாவிலிருந்து உதவிப்படைகளுக்காகச் செய்தி யனுப்பி நன்றியற்றமீர்ஜாபரோடு யுக்தி செய்தனர்‡. ஆனல், சின்ஸுரா விலிருந்த டச்சுத் தலைவனே சோம்பி உறுதியற்றுக் கிடந்தான். ஜாவாவி லிருந்து வங்காளத்திற்குக் கப்பற்படை வருவதற்கு முன் கிளைவ் தாமத மின்றிக் கருமந்தொடங்கினுன். அவன் ஹுக்ளி நதிக்கு எதிர்முகமாக டச்சுக்கப்பற்படைவராதபடி தடை செய்து சண்டையை ஆரம்பிக்கச் செய்து பின்பு தரையிலும் கடலிலும் அழிவே மூறியடித்தான் (நவம்பர், 1759). டச்சுக்காரர் தாமே வலுவில் சண்டைக்கு வந்தவராக ஒப்புக் கொண்டு ஈடுகொடுக்க உடன்பட்டனர். இவ்விதமாக, கிளைவ் அவர் களது ஆலோசனைகளையும் சேனுபலத்தையும் பாழ்படுத்தினுன். ஐரோப் பாவிலுள்ள டச்சு அரசாங்கம் கிளைவுக்கு மாருகமுறையிட்டும் பலனில் லாது போயிற்று. டச்சுக்காரரோடு யுக்தி செய்ததற்காகத் தண்டனைக் கிளைவ் தண்டிப்பேனெனவே மீர்ஜாபர் அஞ்சினுன். -

**கிளைவ் முதல்தரம் கவர்னராயிருந்த போது செய்த காரியங்கள்**

1760-இல், கிளைவ் வங்காளத்திலும் பிஹாரிலும் ஐரோப்பிய இந்திய பகைகளில்லாதவாறு செய்தார். அவர் தேக அசௌகரியத்தால் பிப்ரவரி மாதம் ஐரோப்பாவிற்குக் இளம்பினர். இவ்வித மாக, வங்காளத்தில் கிளைவின் முதல்ஆட்சி முடி வுற்றது. கிளைவ் அதிகாரஞ் செலுத்திய மூன் ருண்டுகளில், வங்காளத்தில் போட்டியின்றி ஆங்கில ஆதிக்கத்தை நிலைபெறச் செய்தார். ஒரு நவாபை நீக்கி மற்ருெருவரை நவாபாக்கினர். பிரெஞ்சுக்காரர் டச்சுக்காரர்களது பகைமையை அழித்தார். பிரெஞ்சுக்காரர்களை வடசர்க்காரிலிருந்து ஓடும்படி செய்தார். அவர் பிரமுகர்களான ஹிந்துக்களது நல்லாதர வைப்பெற்ருர். அவர்கள் நவாபின் கொடுங்கோலினின்றும் தங்களைக் கிளைவே காப்பவன் என நம்பினர். டுப்ளே புஸ்ஸி இருவரையும் பார்த்து அவர்களைப்போலவன்றி கிளைவ் ஆபத்துக்களையும் குறைபாடுகளையும் நீக்கி நிரந்தமான ராஜ்யமொன்றை ஸ்தாபிப்பதில் வெற்றி பெற்ருர். "சுருங்கக்கூறின், கிளைவ் கர்நாடகத்தில் ஒரு போர்வீரனுக்குரிய விழுமிய குணங்களைக் காட்டினர்; வங்காளத்தில் ஒரு ராஜநீதி நிபுணனுக்குரிய உயரிய குணங்களை வெளிப்படுத்தினர்". ஆனல், ஆங்கிலேயரது இந்தன் னிலைக்குக் கிளைவின் †தனிருபத்வமே காரணமென்பது மறுக்கற்பால தன்று; அவரது அதிகாரம் *சுயசெல்வாக்கினலும் ராணுவபலத்தினலுமே யாகும். கிளைவ் விவகாரங்களைக் கண்காணிப்பதைவிட்டுச் சென்றவுடனே ஆங்கிலராஜ்யத்திற்கு ஆபத்துக்கள் வரலாயின.

---

‡ "பிரெஞ்சுக்காரர் சந்தர்ப்பசாதனமிழந்து ஆற்காட்டு நவாபாக்கும்படி ஆங்கிலேயர் விட்டிருப்பாரானுல் அவ்வாங்கிலேயர் பிழைக் கட்டக்கையில் சாங்கிலேயமலை யடைத் திருப்பரோ, அந்த நிலைமையையே டச்சுக்காரர் அடைந்திருந்தனர்." (Dodwell; p. 152).

† Personality. * Personal influence.

## பகுதி 3: தென்னிந்தியாவில் பிரெஞ்சுக்காரர் இறுதியிலடைந்த தோல்வி (1758—1761)

ஏழாண்டுப்போர் தொடங்கியவுடனே பிரெஞ்சு அரசாங்கத்தார் இந்தியாவில் ஆங்கில அதிகாரத்தை வேரோடு களையத்தீர்மானித்துக் **கவுன்ட் டி லாலியின்** கீழ் சேனைத்திசைக்குப் பெரும்படை விடுத்தனர். லாலி ஒரு தைரியமுள்ளவர். லஞ்சம் வாங்காதவர்; ஆனால் அவருக்குத் தெளிவாராய்ச்சியில்லை. இறுமாப்புள்ளவர்: வெறுக்கத்தக்க குணமுடையர். பிறர் எண்ணங்களைக் காதுகொடுத்துக் கேளார். கப்பற்படைக்குத் தலைமை வகித்த * **டி அகே** என்ற அவரது தோழனும் அவரைப் போலவே கோபமும் நிதானமுமற்றவன்; இருதலைவர்க்கும் மனவொற்றுமை கிடையாது. லாலிக்கு இரண்டு வேலைகள் கொடுக்கப்பட்டன. (1) பிரெஞ்சு அரசியலை ஒழுங்கு படுத்தல் (2) ஆங்கிலேயரை ஓட்டுதல்.‡

**லாலியின் படையெடுப்பு: அவர் குணதிசயங்கள்**

லாலி புதுச்சேரிக்கு வந்துபோது, சென்னையிலும் புதுச்சேரியிலும் படைகளேயில்லை¶. பிரெஞ்சு சேனையின் முதற் பகுப்பு அவ்வாண்டு பிற்பகுதியில் வந்து சேர்ந்தது. ஆனால் அது முக்கியமாக ஒன்றும் செய்யவில்லை. லாலி புதுச்சேரிக் கருகில் † **போகாக்** தலைமையின் கீழிருந்த ஆங்கிலக் கப்பற்படையோடு சண்டையிட்டான். இந்த போகாக் வாட்ஸனுக்குப் பின் கப்பற்றலைவனானவன்: இவன் கீழைக்கடற்கரையைக் காக்க வங்காளத்தினின்று வந்தவன். நிகழ்ந்த சண்டையில் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்க முடியவில்லை. பிரெஞ்சுக்காரரைப் பின் துரத்திவர ஆங்கிலேயர்க்கு இயலாது போயினும், அவர்களுக்கே நன்மைகள் கிடைத்தன எனலாம். எனினும், புதுச்சேரியில் லாலி இறங்குவதை அவர்களால் தடுக்க முடியவில்லை.

**அவன் வந்தபோது இருந்த நிலைமை**

லாலி, புதுச்சேரியிலிறங்கிய அன்றைத்தினமே செயின்ட் டேவிட் கோட்டைக் கெதிரே ஒரு படைப் பகுதியை விடுத்தான். அவன் கடலோரை எளிதில் பிடித்துச் சில நாட்களுக்குப் பின் செயின்டேவிட் கோட்டையையும் தாக்கி வசப்படுத்தினன். அவ் விடத்தின் காவல்கள் சில விடங்களில் பழுதுபட்டுக் கிடந்தன. எனினும், இன்னும் சிறிது காலம் அது பிடிபடாமலிருந்திருக்கக்கூடும். அதன் வீழ்ச்சி சுதேச

**லாலி செயின்ட் டேவிட் கோட்டையைப் பிடித்தல்**

---

* D'Ache. † Pococke.

‡ இந்தியாவிலிருந்த பிரெஞ்சு அரசாங்கம் டுப்ளேயின் பின்வந்த டி லெரிட்டின்மீழ்களர்ச்சியுற்றது; அதன் குறைபாடுகளை நீக்கி ஒழுங்குபடுத்த லாலியை ஒப்பாட்டத்து அனுப்பியது, 1765-இல் வங்காளத்தை ஒழுங்குபடுத்த இரண்டாம் முறை இவனை அனுப்பியதை யொக்கும். "இவன் தாவிறந்தபின்பும் பீடித்த துன்பமேற்படும்படி தொழில் நிகழ்ந்தினன்; ஆனால், அவனும் பிறிதொரு ஐரோப்பிய அதிகாரத்தோடு போரிட நேர்ந்திருக்குமாயின் அவனுலும் வங்காளத்தை ஒழுங்குபடுத்தியிருக்கமுடியாது. அப்படியிருக்க லாலியை ஒரே மூச்சில் ஆங்கிலேயரை ஓட்டிப் புதுச்சேரியை யொழுங்குபடுத்துமாறு அனுப்பினர். இவ்விதமாக, ஒரு செயற்கரிய செயலை, ஆற்றலும் வல்லமையு மிருந்தும் இராஜநிதிமுறை யறியாத ஒருவனிடம் ஒப்படைத்தனர்." (Dodwell: p. 161). கப்பற்படையின் ஆளுகை டி அகேவுக்கே தனியுரிமையாக ஒதுக்கப்பட்டதாகலின், லாலிக்கு எப்போதாயினும் அவனது ஒத்தாசையில்லாது போகும்.

¶ ஆங்கிலப்படைகளின் பெரும்பகுதி வங்காளத்திலிருந்தது; பிரெஞ்சுப்படையின் பெரும் பகுதி புஸ்ஸியொடும் திருச்சிராப்பள்ளியிலும் நிலைபெற்றிருந்தது; பிரெஞ்சுக்காரர் சற்று முன்பு பிடித்த பல கோட்டைகளில் காவற்படைகளமைத்தனர்.

மன்னர்களது மனத்தில் பெருத்த ஓர் நினைவூட்டியது. பின்பு, லாலி கொள்ளிடநதியின் முகத்துவாரத்துள்ள தேவிகோட்டையைக் கீழ்ப்படியச் செய்தான். ஒவ்வொருவரும் அவன் விரைவில் சென்னையைக் கைப்பற்ற முயல்வானென எண்ணினர். அப்போது சென்னையில் கவர்னராயிருந்த பிகட் என்பவர் கிளைவை உதவிப்படைகளனுப்புமாறு வேண்டினர். ஆனால் சென்னையில் உணவுப்பொருள்களும் பணமும் நிரம்ப இருத்தலின், லாலியால் அதனைக் கைப்பற்ற முடியாதென்பது கிளைவுக்கு நன்கு தெரியும். மேலும், தன் துருப்புக்களில் பெரும் பகுதியைத் தென்னிந்தியாவிற்கு அனுப்பி அதனால் வங்காளத்தில் தன் நிலைமையைப் பலவீனப்படுத்திக் கொள்ள கிளைவ் விரும்பவில்லை.

**பிரெஞ்சுத் தலைவர்களுக்குள் ஒற்றுமையின்மை**

லாலியின் சுபாவத்தினால் மிக்க கேடானநிலை விரைவில் ஏற்பட்டது. செயின்ட் டேவிட் கோட்டையை முற்றுகையிட்டுக்கொண்டே அவன் பிரெஞ்சு கவர்னராயிருந்த டிலெரிட்டோடு சச்சரவிட்டு வந்தான். அவன் பலவகுப்பு இந்தியரையும் தன் சேவையிலமர்த்திக் கொண்டான்; இதனால் புதுச்சேரியிலிருந்த இந்தியர்களுக்குப் பெரும் பயம் ஏற்பட்டது. லாலி சென்னையை எதிர்த்துப் போகவேண்டுமென்றபோது டிலெரிட் அவனுக்குப் பொருளும் போக்குவரவு சாதனங்களுந் கொடுக்க முடியாதென மறுத்தான். டிஅகேயோ போகாக்கை எதிர்க்க முடியாதென மறுத்தான். இவ்விதம் லாலியோடு சேரக் கப்பற்படை மறுத்ததால், இனி, பருவக்காற்று மழைக்காகக் கரையைநீத்து ஆங்கில கப்பற்படை தானே போகும்வரையில் சென்னையை எதிர்ப்பதில் பயனில்லாது போயிற்று. இனி அவனுக்கு இரண்டு வழிகள்தானுண்டு. (1) ஆற்காட்டைச் சுற்றி ஆங்கிலேயர் வசமுள்ள இடங்களிலிருந்து அவர்களைத் துரத்திச் சென்னைக்கு வரவொட்டாது செய்தல்; (2) அல்லது தஞ்சாவூர், திருச்சிராப் பள்ளிமேற்சென்று கொள்ளையடித்தல். இதனால், போரின் விளைவுகள் சிறிதேனும் பழுதுறு.

**லாலி தஞ்சாவூரின் மேற்செல்லல்**

துரதிர்ஷ்டவசமாக, லாலி இரண்டாவது வழியைக் கடைப்பிடித்துத் தஞ்சாவூர்மேற் சென்றான்; தஞ்சையரசன் சந்தா சாஹிபுக்குப் பெரும் பணம் கொடுப்பதாகப் பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தான்: அது பின்பு நிறைவேற்றப்படாமலே போயிற்று. லாலி காரைக்காலுக்குச் சென்றான்; பின்பு, தஞ்சாவூருக்கு வரும் வழியிலுள்ள பிரதேசங்களைப் பாழாக்கினான். சமாதானப்பேச்சுக்கள் பயனற்றுப் போனதினால் அவன் தஞ்சாவூரை முற்றுகையிடத் தொடங்கினான். ஆனால் வெடிமருந்துகளும் உணவுப் பொருள்களும் குறைந்துபோயின; உபகரணங்களை யளிக்குமிடமாகிய காரைக்காலோ ஆங்கில கப்பற்படையால் தாக்கப்பட்டது. இவைகளால், அவன் தஞ்சாவூர் முற்றுகையை விடுக்கநேர்ந்தது; அவன் காரைக்காலுக்குத்திரும்பிப் பின்பு அங்கிருந்து புதுச்சேரி சேர்ந்தான்.

ஆங்கில கப்பற்படை மீண்டும் பிரெஞ்சுக் கப்பற்படையோடு சண்டையிட்டது. ஆனால் ஜய அபஜெயங்கள் நிர்ணயிக்க முடியவில்லை. முன்னே

போலவே பிரெஞ்சுக்காரர்க்குச் சேதம் அதிகம்; டிஅகே மறுபடியும் ஆங்கில கப்பற்படையோடு சண்டையிடப் பயந்தான். இதனால் லாலியும் பிரெஞ்சு கவர்னரும் சொல்லியும் கேளாமல் கரையோரத்திலும் தங்காமல், அவன் தன் கப்பற்படையுடன் மொரீஷஸ் தீவுக்குப் புறப்பட்டுப் போனான்.

**பிரெஞ்சுக் கப்பற் படை போய்விடுதல்**

பயனற்ற தஞ்சாவூர்ப் படையெழுச்சியால் லாலிக்குக் கெட்டபேர் கிடைத்தது; டிஅகே புறப்பட்டுப் போனதனால் லாலியின் நிலைமை மேலும் மோசமாயிற்று; இப்போது அவன் செய்த மற்றொரு தவற்றினால் ஒரு பெருந்துன்பம் விளைந்தது. தஞ்சாவூர்மேற் செல்வதற்கு முன், லாலி புஸ்ஸியையும் வடசர்க்காரின் கவர்னராயிருந்த *மொராஸினியையும் தங்களுக்குக் கிடைக்கும் திருப்புக்களோடு வந்து தன்னைச் சேரும்படியும், மசூலிப்பட்டினத்தில் †கான்பியன்ஸ் என்பவன்கீழ் ‡ஒரு சிறு படையை வைத்துவிட்டு வரும்படியும் அவசரக் கட்டளையிட்டான்.

**புஸ்ஸி தக்காணத்திலிருந்து அழைக்கப்படல்**

புஸ்ஸி புதுச்சேரிக்குப் புறப்பட்டவுடனே விஜயநகரத்தரசனாகிய ஆனந்தராஜ் என்பவன் பிரெஞ்சு அதிகாரத்தை எதிர்த்து, விசாகப்பட்டினத்தைத் தாக்கிக் கைப்பற்றி, கல்கத்தாவிலும் சென்னையிலுமிருந்த ஆங்கிலேயரைப் பிரெஞ்சுக்காரரைத் துரத்துவதில் உடனே தனக்கு உதவி புரியுமாறு வேண்டிக்கொண்டான். ஆனால், சென்னையே முற்றுகையிடப்படும் நிலைமையிலிருந்ததால் அங்கிருந்து உதவி வரவில்லை. ஆனால், கிளைவ் 'இறுதியில் பிரெஞ்சுக்காரர்மேல் வெற்றி பெறுவோம்' என்பதை முன்னரே யுணர்ந்தவனாதலின் அதனைத் துரிதப்படுத்தவெண்ணித் தன் கஷ்டங்களுக்கிடையே தன்சேனையில் பாதியை யனுப்பத் தீர்மானித்தான். உடனே, ‡கிளைவின் வலக்கையென்னுமாறுள்ள கான்ல் போர்டு கல்கத்தாவினின்று கிளம்பினன். அவன், வடசர்க்காரிலிருந்து லாலிக்கு உதவிப்படைகள் போகாமல் தடுப்பதையே முதல் நோக்கமாகக்கொண்டான். அவன் ஆனந்தராஜுடன் சமாதானஞ் செய்துகொண்டு அவன் சேனைகளோடு கலந்து, ராஜமஹேந்திரபுரத்திற்குச் சிறிது வடக்கே **கண்டூர்** என்ற விடத்தில் கான்பியன்ஸுடன் போரிட்டுப் பெருவெற்றியடைந்தனன். ராஜமஹேந்திரபுரம் எதிர்ப்பின்றி உடனே இவர்கள் வசமாயிற்று; இந்தியாவில் ஆங்கிலேயர் அடைந்த முக்கியமான வெற்றிகளுள் கண்டூர் வெற்றியுமொன்றாகும். அது தக்காணத்தில் பிரெஞ்சுக்காரரது ஆதிக்கத்தை ஒழித்தது; நிஜாம் அவர்களிடம் வைத்திருந்த நம்பிக்கையை நீங்கச்செய்தது. கான்பியன்ஸ் மசூலிப்பட்டினத்திற்கு மீண்டான். தற்போது பொருளின்மையாலும், தப்பாக்கியின்மையாலும், ஆனந்தராஜின் சமூசயத்தாலும் போர்டு மசூலிப்பட்டினத்தின்மேற் செல்லவியலாது போயிற்று.

**கிளைவ் போர்டை வடசர்க்காருக்கு அனுப்பல் (1758)**

**போர்டு கண்டூரில் வெற்றி பெறல்**

---

* Moracirr. † Confians.
‡ 'Right hand man'.

கண்டூர் சண்டைக்குச் சிலநாட்களுக்கு முன்பு, லாலி வெகுநாட்களாக நீட்டித்துவந்த சென்னை முற்றுகையைத் தொடங்கினன். அவன் தஞ்சாவூரிலிருந்து மீண்டதுமுதல் சென்னையை முற்றுகையிடும் வரையிலுள்ள இடைப்பட்ட காலத்தில் ஆற்காட்டைக் கைப்பற்றி, அங்குச் சந்தா சாஹிபின் மகனை ராஜா சாஹிபைக் கர்நாடகத்திற்குரிய நவாபாக ஆக்கினன். இவ்விடத்தில் புஸ்ஸி அவனுடன் சேர்ந்துகொண்டான்.* எனினும், அவனுக்கு மிகவும் தேவையாயிருந்த பணமும் சரக்குகளும் சிறிதேனும் கிடைக்கவில்லை. பணமின்றியும் சம்பளம் வாங்காத போர்வீரர்களோடும் லாலி சென்னையை முற்றுகையிடத் தொடங்கினன். அவன் சொற்படி † "சென்னைக்கு ஒட்டமாகப் புதுச்சேரியை வைக்கத் தீர்மானித்தான்."

**லாலி சென்னையை முற்றுகையிடல் 1758-59**

சென்னையில் அனுபவமுதிர்ந்த ஆங்கில ஜனரல் லாரன்ஸ் தலைமை வகித்து வந்தார். அவரும், பிகட் என்ற கவர்னருமே கோட்டையை முன்னாக்கியதைசெய்து செங்கற்பட்டைத் தங்களுக்கு எல்லை ஸ்தானமாக நிறுவினர். லாலி முற்றுகையை 1758ஆம் வரு டிசம்பர்மீ தொடங்கினன். ஆனல் அவனுக்குப் புதுச்சேரியிலிருந்து உதவி வரவில்லை; சேர்த்துவைக்கப்பட்ட உணவுப் பொருள்கள் விரைவில் குறைந்தன; சிப்பாய்கள் கும்பல் கும்பலாக அவனைக் கைவிடுத்தனர்; போர்வீரர்கள் அவனுக்கு அடங்காமற் போயினர். வேண்டிய வெடிமருந்தும் வெடிப்படையுமின்மையால் முற்றுகை நடவடிக்கைகள் மிகவும் மெதுவாகவே செய்யப்பட்டன. ஆனல் லாலி மிகவும் திடமுடனே கோட்டையைப் பீரங்கி கொண்டு முற்றுகையிட்டான்.‡ 1759ஆம் வரு டிப்ரவரிமீ ஆங்கிலக் கப்பல்கள் கரைநோக்கி வரலாயின. உடனே லாலி முற்றுகையை விடுத்துப் பின்வாங்கினன். சென்னையை லாலி முற்றுகையிட்டது இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் வளர்வதற்குக் காரணமாயிருந்த பல முக்கிய சம்பவங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஆங்கிலேயரின் வெற்றிக்குக்

**அதன் அபஜெயம்-ஆங்கிலேயரின் தற்காப்பு**

---

† "resolved to stake Pondicherry against Madras".

* லாலியும் புஸ்ஸியும் குணத்திலும் கொள்கையிலும் மிகவும் வேறுபட்டவர்கள். புஸ்ஸி சிறந்த வீரன்; ராஜதந்திர நிபுணன். லாலிக்கு அரசியல்தந்திரம் சமாதான்ப் பேச்சுகள் முதலியன பிடிக்காது. புஸ்ஸி, தன் தைரியத்தினல் தக்காணத்தில் பிரெஞ்சு ஆதிக்கத்தை நிலைநாட்டித் தன் சாதுரியத்தால் அதனைப் பலப்படுத்தினன்; வடசர்க்கார் நாட்டைத் தம் வசப்படுத்துவதற்குக் தக்காணத்தில் பிரெஞ்சுக்காரரின் ஆதிக்கம் மிக முக்கியமாகும் என்பது அவன் கொள்கை. லாலிக்கோ பிரெஞ்சு ராஜ்யத்தைத் தந்திரங்களாலேற்படுத்துவது ஒரு வீண் எண்ணமாகத் தோன்றியது: ஆங்கிலேயரை நாட்டினின்றும் ஓட்டும்வரை பிரெஞ்சுக்காரர் நாட்டை உறுதியாக வசப்படுத்த முடியாதென்பது அவன் கொள்கை. புஸ்ஸி தான் தக்காணாபாத்துக்குத் திரும்பிச்செல்வதற்காக லாலியிடம் பெரிதும் முயன்றான். ஆனல், லாலி அவனைச் சந்தேகித்துப் பகைவனைப்போல் வெறுக்கத் தொடங்கினன். லாலியின் நடத்தையினல் புஸ்ஸி வேறுபட்டு அவனோடு மனப்பூர்வமாய் ஒத்துழைக்கவில்லை.

‡ சிப்பாய் தலைவனை தைரியமிக்க யூசப்கான் திருச்சிராப்பள்ளியிலிருந்து வந்து செங்கற்பட்டிலிருந்த ஆங்கிலப்படைக்கு உதவிசெய்யவே, அப்படை செயின்ட் ஜார்ஜ் கோட்டையைச் சுற்றி முற்றுகையிட்டிருந்த பிரெஞ்சுச் சேனையை முறியடிக்கப்பார்த்தது. ஆனல் முடியவில்லை. சங்கடங்கள் அதிகமானதாலும், கோட்டை நன்றாய்ப் பாதுகாக்கப்பட்டதாலும்- லாலியினுடைய கருத்துக்கள் குன்ற ஆரம்பித்தன, ஆங்கிலக் கப்பற்படை வந்ததென்று கேள்விப்பட்டதுமே லாலி ஜயிக்கும் எண்ணத்தை விடுத்தான். தன் மனிதர்கள் முற்றுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதனினும் பிளாக் டவுனைக் (காவலற்று இந்தியர்கள் வாழ்ந்துவந்த சென்னையின் பகுதி) கொள்ளையடிப்பதிலேயே கருத்தாயிருந்தனரென்று லாலி முறையிட்டான்.

காரணங்கள் :—லாரன்ஸ், பிகட் இவர்களின் தலைமை; ஆங்கிலப்படையின் வீரம்; பிரெஞ்சுக்காரரின் கவனத்தை வடசர்க்காரின்மீது கிளைவ் திருப்பியது; நல்ல தருணத்தில் ஆங்கிலக்கப்பற்படை சென்பட்டது முதலியன.*

சென்னை முற்றுகை நிறுத்தப்பட்டதோடு இந்தியாவிலிருந்து ஆங்கிலேயரைத் துரத்த லாலி நினைத்த எண்ணங்கள் முற்றும் மறைந்துபோயின.

**ஆங்கிலேயர் மசூலிப்பட்டினத்தைக் கைப்பற்றி ஸலபட்ஜங்கோடு சமாதானம் செய்துகொள்ளல் (1759)**

இத்தோல்வியைத் தொடர்ந்து வடசர்க்காரிலும் பிரெஞ்சுக்காரருக்குத் தோல்வி ஏற்பட்டது. கர்னல் போர்டு மசூலிப்பட்டினத்தைச் சிறு சண்டையிட்டுப் பிடித்தான். மசூலிப்பட்டினத்தை ஆங்கிலேயர் கைப்பற்றியதால் ஸலபட்ஜங்குக்கு வருத்தமுண்டாயிற்று; அவன் சர்க்காரை மீட்கும் எண்ணத்தையும் பிரெஞ்சுக்காரரிடத்து வைத்த நம்பிக்கையையும் கைவிட்டான், அவன் ஆங்கிலேயரோடு பேச்சுக்கள் நிகழ்த்தி 1759ஹ மேமீ அவர்களோடு சமாதானம் செய்துகொண்டான்; அதன்படி சர்க்காரில் மிகுந்துள்ள பிரெஞ்சுப் படைகளைத் துரத்துவதற்கு உடன்பட்டனர். இந்த விதமாக தக்காணத்தில் பிரெஞ்சு இராஜ்ஜியம் சிறிது காலம் நிலவி முடிவுற்றது; மேலும் ஆங்கிலேயருக்கும் நிஜாமுக்கும் தற்காலம்வரை நிலவிவரும் நீடித்த நட்பும் இப்போதுதான் தொடங்கியது. 1759 ஆம் வருஷத்திய சமாதானத்தால் ஆங்கிலேயர் மசூலிப்பட்டினத் துறைமுகத்தையும் அதனைச் சேர்ந்த பிரதேசங்களையும் † இனாமாகப் பெற்றனர்; மற்றும், ஸலபட்ஜங் தன் இராஜ்ஜியத்தினின்று பிரெஞ்சுக்காரரைத் துரத்தவேண்டியதாயிற்று. இங்ஙனம் அடைந்தவைகளை 1765-இல் முகலாயச் சக்கரவர்த்தி உறுதிப்படுத்தினர். இதே ஆண்டில்தான் கிளைவ் வங்காளம் பிஹார் ஒரிஸ்ஸா மாகாணங்களில் ‡வரி வசூல் செய்யும் உரிமையைப் பெற்றார்.

இங்ஙனமாக, கர்நாடகத்தில் யுத்தம் நடந்து கொண்டே வந்தது. பிரெஞ்சுக்காரர் சென்னை முற்றுகையை நிறுத்தியவுடனே இருகட்சியினரும் சிறிது காலம் சும்மாவிருந்தனர். லாலி அடிக்கடி புதுச்சேரி சபையோடு சச்சரவிட்டு வந்தான்; டணமின்றியும் தவித்தான். அவன் துருப்புக்கள் முற்றும் நெறிகெட்டுக் கிடந்தன; பிரெஞ்சு வசமுள்ள கோட்டைகளின் காவற்படைகளும் விரோதிகளோடு பிரஸ்தாபித்தன. கிழக்கரை சேர்ந்த டி அகேயின் கப்பற்படை யாதொரு உதவியும் செய்யவில்லை; அது ஆங்கிலக் கப்பற்படையொடு முடிவு நிச்சயமற்ற போரிட்டுத் திரும்பிப் போயேவிட்டது. இனி, கடற்கரை இடையீடின்றி ஆங்கிலக் கப்பற்படையின் வசமாயிற்று. லாலிக்குப் பிரான்ஸிலிருந்து உதவிப்படைகள் வருமென்ற எண்ணம் அற்றுப் போயிற்று; அவன் துருப்புக்களுக்குச் சம்பளம் சரிவரக் கொடுக்காமல் பாக்கியாயிருந்தமையால் அவை கலகம்

**பிரெஞ்சுக்காரரின் ஒழுக்கச் சிதைவு**

† Inam. ‡ Diwani.

* லாலி ஆங்கிலக் கப்பற்படை தோன்றுவதற்கு இரண்டுநாள் முன்னமேயே முற்றுகையை நிறுத்தத் தீர்மானித்தான்; எனினும், அவன் திரும்பியது ஆங்கிலப்படை தோன்றியபின்பேயாகும்.

தொடங்குவன போலிருந்தன: ஆதலால், அவன் சுதேச மன்னர்களது உதவியைக் கடைசியாக நாடலானான்.

**கர்னல்** (பின்பு ஸர் அயர்) கூட் என்ற புது ஆங்கிலத் தளகர்த்தன் வந்தவாசிக்கோட்டையைத் தாக்கத் தீர்மானித்தான்; ஆற்காட்டைத் தவிர, கர்நாடகத்தில் பிரெஞ்சுக்காரர் வசமுள்ள இடங்களில் வந்தவாசியே முக்கியமாகும். கூட் கோட்டையை முற்றுகையிட்டுப் பிடித்தபின்பு லாலி அதனை மீட்க முயற்சித்தான். நிகழ்ந்த போரில், ஆங்கிலேயர் பெரு வெற்றி யடைந்தனர்; புஸ்ஸியே கைதியாக்கப்பட்டான்: பிரெஞ்சுக்காரரில் பலர் மாண்டனர்; துப்பாக்கிகளையும் இழந்தனர். ஆங்கிலேயரடைந்த இவ்வெற்றியால் நல்ல விளைவுகள் உண்டாயின. இவ்வெற்றியைத் தொடர்ந்து கூட் ஆற்காட்டையும் அதனைச்சுற்றிப் பிரெஞ்சுக்காரர் வசமிருந்த கோட்டைகளையும் பிடித்தான்; 1760-இல் புதுச்சேரி, செஞ்சி, காரைக்கால் மூன்றுமே பிரெஞ்சுக்காரர் வசமிருந்தன; லாலி போரிடுதலை விட்டுப் புதுச்சேரிக்குப் போக நேர்ந்தது.

**கூட் வந்தவாசியில் வெற்றி பெறல்**

இப்படியிருக்க, திடீரென லாலிக்கு ஒரு புது நண்பன் தோன்றினான். அவன் மைசூரிலுள்ள ஹைதர் அலியாவன். இதனால் லாலிக்குச் சிறிது ஆறுதல் கிடைத்தது. அவன் முன்னாலேயே நிஜாமின் தம்பியருளொருவனுகிய பஸலட்ஜங்கோடும், முராரிராவ் என்ற மராட்டிய வீரனோடும் பயனின்றிப் பிரஸ்தாபித்து வந்தான். அவன் இப்போது மைசூர் ராஜ்யத்தில் தலைமை வகித்த ஹைதர் அலியோடு உடன்படிக்கை செய்து கொண்டான். ஹைதர் அலி பிரெஞ்சுக்காரருக்குக் குதிரைப்படையும் பீரங்கிப்படையும் கொடுத்து உதவ உடன்பட்டான்; அதற்காக, பிரெஞ்சுக்காரர் வெற்றியுற்றால் மதுரையையும் திருநெல்வேலியையும் ஹைதருக்குக் கொடுத்துவிட வேண்டும். ஹைதரின் துருப்புக்கள் கர்நாடகத்தைப் பாழாக்கிச் சிறிது காலம் ஆங்கிலப்படைக்குத் தொந்தரவு விளைத்தது; ஆனால், அவைகள் புதுச்சேரியின் நிக்கற்ற நிலையைக்கண்டவுடன், அதனையும் பிரெஞ்சுக்காரரது நேசத்தையும் நீத்து மீண்டன. மேலும், ஹைதர் உள்நாட்டுக் கலகம் நிகழுமென்றஞ்சினதனால், மைசூரை விட்டுப்போக விரும்பவில்லை.

**லாலி ஹைதர் அலியின் உதவியை நாடுதல்**

லாலி சுதேச மன்னரிடம் உதவிபெற இயலாததைக் கண்டான்: மேலெழுந்துவரும் ஆங்கிலப்படை வரிசைகள் அவனை நெருக்கின; எனினும் அவன் தைரியத்துடன் எதிர்த்து நின்றான். 1761 ஜனவரி வரையில் புதுச்சேரியின் எதிர்ப்பு நீடித்தது. 1761 ஆகஸ்டில் கூட் புதுச்சேரி முற்றுகையைத் தொடங்கி அதன் வெளிப்புறங்களையெல்லாம் கைப்பற்றினான். உணவுப் பொருள்கள் குறைந்தபோதினும், ஜனங்கள் நெறி தவறின போதிலும், தனக்கும் புதுச்சேரி சபைக்கும் நட்பாடலில்லாத போதினும் லாலி எதிர்த்தலை விடாதிருந்தான். டிசம்பர் மாதத்தில் கூட் புதுச்சேரிக் காவல்களின்மேல் குண்டுவிடுத்தான்; நெருங்கித் தங்கிய ஆங்கிலக் கப்பற்

**புதுச்சேரியின் முற்றுகை (1760)**

படையும் உணவுப் பொருள்கள் உட்பிரவேசிக்காதபடி தடையிட்டது.

**அது கீழ்ப்படிதல் (ஜனவரி, 1761)**

1761ஆம் ஜனவரியீ 15 ஆம் தேதியன்று, புதுச்சேரி தானுகவே கீழ்ப்படிந்தது. பிறகு செஞ்சிக்கும் அக்கரியே நேர்ந்தது. மலையாளக்கரையிலுள்ள மாஹியும் வசமாயிற்று. 1761 ஏப்ரலுக்குள் இந்தியாவில் ஒரு இடம்கூட பிரெஞ்சுக்காரரின் ஸ்வாதீனத்திலில்லை. ஆங்கிலேயர், புதுச்சேரியின் காவல்களை இரக்கமின்றி நாசமாக்கினர்; இந்நாசத்தால் "எவ்வளவு நீடித்த காலமாகச் சென்னைச் சபையினர் பிரெஞ்சு விரோதிகளுக்கு நடுங்கி வந்தனர்" என்பது போதரும். லாலியின் கதி துக்ககரமானது. அவன் பிரான்சுக்குத் திரும்பியவுடனே அவனைச் சிறைபிலிட்டுப் பின்பு கொலையும் செய்தனர். பிரெஞ்சு அதிகாரம் இந்த அழிவினின்றும் ஈடேறவேயில்லை. கர்நாடகத்தில் லாலி யடைந்த தோல்வியும், வங்காளத்தில் கிளைவின் ஆட்சியும் இந்த இரு பிரதேசங்களிலும் ஆங்கிலேயரது ஆதிக்கத்தை நன்கு நிலைபெறச் செய்தன. ஏழாண்டுப்போர் முடிவில் **பாரிஸ் சமாதானத்தால்** (1763) புதுச்சேரியும் இதர ஸ்தாபனங்களும் மீண்டும் பிரெஞ்சுக்காரருக்குத் திரும்பக் கொடுக்கப்படினும், அவை பாழாகிக் காவலற்றுக் கிடந்தன. "அவைகளின் வியாபாரம் அழிந்தது; செல்வாக்கு ஒழிந்தது. குடிகள் முகத்தில் தோல்விக் குறியே காணப்பட்டது." ஏழாண்டுப் போர்க்குப் பின்பு ஆங்கிலேயராதிக்கம் மிகவும் பெருகியதால், பிரெஞ்சுக்காரிடமிருந்து மீண்டும் ஆபத்து நேருமென்பதே இல்லையாயிற்று. அடுத்த 1778-இல் இருநாற்றார்க்கும் ஐரோப்பாவில் யுத்தம் தொடங்கிய போது புதுச்சேரி எளிதில் ஆங்கிலப்படையின் வசமாயிற்று. உண்மையில், 1781-இல் பிரெஞ்சுக்காரர் *ஸப்ரன் என்பவன் கீழ் ஒரு கப்பற்படையையும் புஸ்ஸியின் கீழ் ஒரு சேனையையும் அக்காலத்து ஆங்கிலேயர்க்குப் பெரு விரோதியான ஹைதர் அலிக்கு உதவிபுரிய அனுப்பினர். ஸப்ரன், ஆங்கிலக் கப்பற்படையைக் கோழக்கரையிலும் ஸிலோன் கரையிலும் பல இடங்களில் நெருங்கித் தாக்கி வெற்றிகள் பெற்றாலும், நரையில் தங்குவதற்கு இடமொன்றுமில்லாமையால் அவ்வெற்றிகள் பலனற்றுப் போயின; புஸ்ஸியோ ஹைதர் அலி இறந்தபிறகு 1783-இல் தான் கோழக்கரை சேர்ந்தான். அதற்குள் போர்முனை கரையினின்று வேற்றிடம் மாறிற்று. மேலும் அவனுக்கு முன் போலவே சக்தியில்லை: ஆதலால் பழையவற்றைப் போல் இப்போது காரியங்களைச் சாதிக்கமுடியவில்லை. இந்தப் பிரெஞ்சு யுத்தம் †வர்ஸே உடன்படிக்கையால் முடிவடைந்தது; இதனைத் தென்னிந்தியாவில் இராஜ்யத்தை ஸ்தாபிக்கப் பிரெஞ்சுக்காரரிட்ட இறுதிப்போர்‡ என

**ஸப்ரனும் புஸ்ஸியும் தென்னிந்தியாவிற்கு வரல்**

**பிரெஞ்சுக்காரர் பின்னும் செய்த முயற்சிகள்**

**தென்னிந்தியாவில் ராஜ்யத்திற்காகப் பிரெஞ்சுக்காரரிட்ட இறுதிப்போர் (1781—83)**

---

* Suffrein. † Versailles.

‡ Malleson: Final French Strugglesin India on the Indian Seas (1878)—See Introduction.

வழங்குவர். ஆனல், பின்னர் நிகழ்ந்த பிரெஞ்சுப் புரட்சிப் போரிலும் நெப்போலிய யுத்தத்திலும் இந்தியக் கடல்களில் ஆங்கில வியாபாரத்தைப் பிரெஞ்சுக்காரர் அழிக்க முயன்றனர்; மற்றும் ஆங்கிலேயரோடு பகைமை யாராட்டிய சுதேச மன்னர்களாகிய பேஷ்வா திப்புசுல்தான் போன்றவர் களது சபைகளில் பிரெஞ்சுக்காரர் தங்களது தந்திரத் தலேவர்களே நியமித் தனர். நெப்போலியனது ஆட்சியில் பிரெஞ்சுக்காரர் ருஷியாவோடு சேர்ந்துகொண்டு தரைமார்க்கமாக இந்தியாவைத் தாக்குவரென்று ஆங்கிலேயர் கொண்ட பயம்தனியாக வேரோர் அத்தியாயத்தில் கூறப்படும்.

1746-52 இடையே வலுத்திருந்த பிரெஞ்சு அதிகாரம் அழிந்தமைக் குப் பல காரணங்கள் உள. அவற்றுள் சில சேய்மையன. சில அண்மை யன; சில அற்பமானவை: சில முக்கியமானவை. முற்றும் நோக்கின்,

**பிரெஞ்சு அழிவிற் குக் காரணங்கள்**

பிரெஞ்சுக் கம்பெனி அமைப்பிலும், செல்வக்கிலும் பலத்திலும், ஆங்கிலக் கம்பெனியைவிடக் கீழ்மைப் பட்டதேயாகும். ஆரம்ப முதற்கொண்டே அது அரசாங்கத்தின் மேற்பார்வையில் கிடந்தது. அது அரசனின் படையுண வுத் துறையாளர்களால் கண்காணிக்கப்படவே, பதினைந்தாம் லூயி (1715–1774) யின் ஆட்சியில் நேர்ந்த சோம்பேறித்தனமும் ஊக்கமின்மை யும் அதனையும் பிடித்தது. ஐரோப்பாவிலும் பிற இடங்களிலும் செய்த யுத்தங்களால் பிரெஞ்சு அரசாங்கம் இந்திய விவகாரங்களைச் சரிவரக்

**பிரெஞ்சுக்கம்பெனி யின் பலமின்மை**

கவனித்து உதவிசெய்ய இயலாதுபோயிற்று. ஆங் கிலக் கம்பெனியைப் போலன்றி பிரெஞ்சுக் கம்பெ னிக்கு வணிக தனவந்தர்களின் உதவி கிடைக்க வில்லே. அது இந்தியாவில் போர் தொடங்கு முன்பே செல்வாதாரத்தில் குன்றிக்கிடந்தது. இந்திய சரக்குகளோடு பிரான்ஸுக்குச் சென்ற கப்பல்கள் சிலவே; பிரெஞ்சு ஸ்தாபனங்களில் கூலிக்துவரும் வியாபா ரத்தை மீண்டும் நன்னிலே பெறச்செய்வதற்கு வேண்டிய பெருத்த பணம் இந்தியாவுக்கு அனுப்பப்படவில்லே. 1754-க்குப் பிறகு அவர்களது வியாபாரம் கூலிக்தது. இந்தியாவில்

**வியாபாரமும் பண மும் குறைவுற் றிருத்தல்**

அவர்கள் வைத்திருந்த பணம் என்றைக்கும் போதா மலே கிடந்தது; டுப்ளேயும் லாலியும்-அம்மட்டோ-இதர வருவாய்களேயுடைய புஸ்ஸியும் எப்போதும் பணமுடையால் தவித்ததை முன்னரே கண்டோம். பிரெஞ்சுக்காரர் அடிக்கடி பண விஷயங்களில் போக்குக்காட்டி நழுவவேண்டியிருந்தது. டுப்ளே தன் சொந்த தகுதியில் பலதரம் கடன் வாங்கினர். லாலி இறுதியில் தோல்வி யடைந்ததற்கும் பணமின்மையே முக்கிய காரணமா கும். அதற்கு மாருக, ஆங்கிலேயர் பணவிஷயத்தில்

**ஆங்கிலேயர் நிலேமையொடு வேறு பாடு**

மிக்க நன்னிலே பெற்றிருந்தனர். போர்க்காலங்களி லும் ஆங்கிலேயர் பெரு வியாபாரம் செய்து வந்தனர்; அவர்கள் தங்கள் வெற்றிகளால் இலாப மடைந்தனர். பிரெஞ்சுக்காரரது போர்களும் வெற்றிகளும் அவர்களுக் குச் சுய ஆதரவை அளிக்கவில்லே. புஸ்ஸியே இந்தத் தீமையின் விளே வுக்கு ஆளாகி யிருக்கிருன்.

மேலும், இந்தியாவிலிருந்த பிரெஞ்சுப் பிரதிநிதிகள் மொத்தத்தில் ஆங்கிலத் தலைவரினும் ஆற்றல் குன்றியவர். டுப்ளே லாலி புஸ்ஸி இம் மூவரைத் தவிர இதர பிரெஞ்சுத் தலைவர்கள் தெளிவற்றவர்கள். டுப்ளேயின் நடத்தையிலும் சுபாவத்திலுமே பல குறை பாடுகள் காணப்பட்டன; அவரது நோக்கங்களெல் லாம் பேராசையோடு ஒன்றியன. லாலி படைத் தலைவனென்ற தகுதியில் வெறுக்கப்பட்டான்; ஓர் இராஜதந்திர நிபுணனுக்கு வேண்டிய குணங்க ளனைத்தும் அவனுக்கு இல்லை. புஸ்ஸி சிறந்த ராஜதூத நிபுணன்; தைரிய மிக்க வீரன்; எனினும், தக்காணத்தில் நிலைத்து நிற்கும் ராஜ்யமொன்றை நிறுவ அவனால் முடியவில்லை. லாலியோடு கலந்து உழைக்கவும் முன்வர வில்லை. இப்படிப் பிரெஞ்சுத் தலைவர்கள் சேர்ந்து உழையாமையால்தான் அவர்கள் வெற்றி பெறவில்லை. டுப்ளேவுக்கு அவரது கீழ் ராணுவ உத்தியோகஸ்தர்கள் கூட்டுறவு புரியவில்லை; டிலெரிட்டோடு லாலியிட்ட சச்சரவுகளோ உலகப் பிரசித்தமானவை. இதற்கு மாறுக, ஆங்கிலத் தலை வர்களிடம் ஒன்றிய மனப்பான்மையும் அன்னியோன்னியமும் காணப் பட்டன. லாரன்ஸ் கிளைவைத் தம்பையெனப் பாவித்தான். கிளைவும் அவனிடம் பிரீதி பாராட்டினன். ஆங்கில ஸிவில் அதிகாரிகளும் தங்கள் தளகர்த்தர்களது முயற்சிகளி லும் குறிக்கோள்களிலும் ஆதரவு காட்டினர். இவ்விதமாக, ஸாண்டர்ஸும் பிகட்டும், கிளைவ் லாரன்ஸ் கூட மூவரும் செய்த தொழிலே மேற்கொண்டு நடத்தினர். ஆங்கிலேயர்களில் லாரன்ஸ், கிளைவ், கூட், ஸாண்டர்ஸ், பிகட், போர்டு போன்ற சாமர்த்தியமுள்ள தலைவர்களும் முன் ஜாக்கிரதையுள்ள ராஜதந்திர நிபுணர்களும் இருந்தனர்.

**இந்தியாவிலிருந்த பிரெஞ்சுத் தலைவர்களின் குறை பாடுகள்**

**ஆங்கிலேயரிடையே ஒற்றுமை**

மற்றெருரு வகையிலும் ஆங்கிலேயரின் மேன்மை நன்கு விளங்கிற்று. நடந்த * நிலைப்போர்கள் பலவற்றில் ஆங்கிலேயரே வெற்றி பெற்றனர். பிரெஞ்சுக்காரர்களைக் காட்டிலும் ஆங்கிலப் போர் வீரர்கள் கஷ்டங்களை நன்கு பொறுக்கக்கூடிய வர்களாயிருந்தனர். மற்றும், ஆங்கிலேயர் பக்க லிருந்த இந்திய சிப்பாய்களும் நன்கு பயிற்றப் பட்டவராயும் தங்கள் யஜமானர்களாகிய ஆங்கிலேயரிடம் விசுவாச முள்ளவராயு மிருந்தனர். இவ்வாறுக, போர்க்களத்தில் இராணுவ மேன்மை ஆங்கிலேயர் பக்கமே இருந்தது.

**நிலத்தின்கண் ஆங்கிலேயரின் மேன்மை**

இதனைத் தொடர்ந்து கடலிலும் அவர்கட்கு மேன்மை ஏற்பட்டது. நடந்த போர்கள் பலவற்றிலும் அவர்களது கப்பற்படை மேன்மை நன்கு விளங்கிற்று. ஆங்கிலேய வியாபாரஸ்தலங்களுக்கு ஏற்பட்ட பேராபத்துக்களை யெல்லாம் அவர்க ளுடைய கப்பற்கூட்டமே போக்கின. இதனினின்று ஒருண்மை வெளியாயிற்று. அதாவது, எந்நாட்டினரும் தாங்கள் கடல் கடந்து பரந்த நாடுகளைக் கொள்ளவேண்டு மெனின், கடலில் பலம்

**கடலிலும் அவர்களின் மேன்மை**

* Pitched battles.

பொருந்தியிருப்பது மல்லாமல் அக்காடுகளுடன் போக்குவரத்தும் தம்வசம் கொண்டிருக்கவேண்டு மென்பதே. 18-ஆம் நூற்றாண்டில் நடந்த போர் களின்போது பிரான்சுக்கு மேற்கூறியவாறு கைக்கொள்ள முடியாமற் போயிற்று; ஆனால், இப்போர்களில், இங்கிலாந்தின் கப்பற்படை சிறப் புற்று வளர்ந்தது. இவ்வுண்மை ஏழாண்டுப்போரில் நன்கு உறுதியாயிற்று. நெல்சனுடைய எண்ணங்கள் பலித்திருந்தாலும், பிரெஞ்சுக் கப்பற்படை யின் கூணைதசை ஆங்கிலேயர்க்கு முடிவில் எப்படியும் வெற்றி யளித்திருக்கும். * கப்டன் மாஹன் என்ற கடற் பல வரலாற்று நிபுணர், இரு கட்சியினர்க்கும் குடியேற்ற வியாபாரங்கள் நிமித்தம் காமிட்ட போர்களில் தத்தம் கப்பற்பலத்தால் முறையே கோர்ந்த விளைவுகளைப்பற்றி விரிவாகக் கூறியுள் ளார்; அத்தகைய போர்களில் இந்தியாவிலிட்ட சண்டைகளே முதனிலையில் நிற்பனவாம்.‡

**கடற்பலத்தின் பிராபல்யம்**

ஆங்கிலேயர் இறுதியில் வெற்றிபெறுதற்கு ஏதுவாய நிலைகளின் ஊழி யங்களை வற்புறுத்திப் பேசல் தகும். கிருச்சிராப்பள்ளியில் பிரெஞ்சுக் காரரையும் சந்தாசாஹிபையும் தோல்வியடையச் செய்ய நிலைவு ஆற்காட்டைக் கைப்பற்றியதன் விசேஷத்தை முன்னமே குறித்துள்ளோம். வங்கா ளத்தில், ஆங்கில அதிகாரத்தை நிலைநாட்டி, லாலிக்கு எதிராகச் சென் னைக்கு உதவிபுரிய வாராமலும், அங்கேயே பிடிவாதமாய் நிலைவு தங்கி யிருந்தது ஒரு அதி முக்கியமான செயலாகும். ஏனெனில், ஆங்கிலேயர் வங்காளத்தைக் கைக்கொண்டதால், அவர்கட்குப் "போர்க்கு வேண்டிய உபகரணங்களும், இந்தியா வில் போர் நிகழ்த்தற்கு வேண்டிய † அடிப்படைப் பூமியும் கிடைத்தன." இந்திய இராஜ்யத்திற்குத் திறவுகோல் வங்காளமேயாகும். ஆங்கிலேயர், அதனை 1757க்குப் பின்பு கைக்கொண்டதனால், பிறரால் வெல்லப்படாத பலமும் செல்வப்பெருக்கும் கொண்டிலங்கினர். இறுதிப்போரில், நிலைவு சந்திரகுலரை யழித்தமையும் புஸ்ஸியில்லாத சமயம் பார்த்து வடசர்க்காரைப் பிடிக்கப் போர்டை அனுப் பியமையும் விழுமிய பலன்களை யளித்தன.

**ஆங்கிலேயர் வங்காளத்தை வசப்படுத்தியதன் நன்மை**

ஆங்கிலேயர் மேன்மை யடைந்ததற்குரிய காரணங்கள் பல விருப்பி னும் அவற்றுள் சிலவற்றை மிகுதியாக மதிப்பிடாமலும் சிலவற்றைத் தாழ்த்தாமலும் தக்கபடி சீர்தூக்கிப் பார்க்கவேண் டும். தொகுத்துக் கூறுமிடத்து, ஆங்கில வெற்றிக் குக் காரணங்களாவன:—இந்தியாவுடன் கொண்டி ருந்த மிகுந்த வியாபாரச் செல்வாக்கு; தென்னிந்தியாவில் கைகலந்த போர்களில் அவர்களுடைய உயர்வு; அனுபவமிகுந்த லார்டு நிலைவி னுடைய சிறந்த விவேகம்; முக்கியமாக ஏழாண்டுப் போரின்போது கடலில் இங்கிலாந்து அடைந்த மேம்பாடு; 1757-இல், வங்காளத்தைக் கைக்கொண்ட பிறகு அவ்விடத்திலிருந்து அவர்கள் செல்வமும் சாதனங்க

**காரணங்களைத் தொகுத்துரைத்தல்**

* Captain Mahan. † Base of operations.
‡ The Influence of Sea-power upon History; pp. 254—329.

ளும் பெற்றமை; பிரான்ஸைப்போல் ஐரோப்பியப் போர்களில் கலந்து கொள்ளாமல் குடியேற்ற நாடுகளையும் கடல் வியாபாரத்தையும் விருத்தி செய்வதிலேயே ஆங்கில அரசாங்கம் கண்ணுங் கருத்துமா யிருந்தமை முதலியன.

# அத்தியாயம் 6

## புரட்சியும் மாறிமாறி வந்த நவாபுக்களும் (1760—1765)

### பகுதி 1: புரட்சியும் மாறிமாறி வந்த நவாபுக்களும் (1760—1763)

கிளைவ் இங்கிலாந்திற்குப் போனதுமே இந்தியாவில் ஆங்கில அரசாட்சிக்குக் கௌரவக்குறைவு ஏற்பட்டது. டச்சுக்காரருடன் சேர்ந்திருப்பதாகச் சந்தேகிக்கப்பட்ட மீர்ஜாபர் அடங்காப்பிடாரியாஞன். கிளைவிற்குப்பின் கவர்னராக வந்த ஹால்வல் என்பவஞல் கம்பெனி உத்தியோகஸ்தர் மீதிலாவது நவாப்பின்மீதிலாவது அவனதுஅதிகாரத்தைச் செலுத்த முடியவில்லை. சில மாதங்களுக்குப் பின் வான்ஸிட்டார்ட் என்பவர் கவர்னராக வந்தார்: நல்லெண்ணமுடைய ராயினும் மற்றையோரை சீர்தூக்கிப் பார்க்கவோ பலத்த ஆட்சியை நடத்தவோ துணிவற்றவர். அதஞல் ஆங்கில உத்தியோகஸ்தர்கள் அடங்காமற் போயினர்: தங்கள் அதிகாரத்தைத் துர்விநியோகம் செய்தனர்; அநேக வியாபார உரிமைகளைத் தங்களுடையதென்றும், தங்கள் ஏஜெண்டுகளுடையதென்றும் வாதித்தனர்: இந்திய தனவந்தர்களிடமிருந்து வெகு மதிகளை வற்புறுத்தி வாங்கினர். வருமானக்குறைவாலும் அவசியமற்ற செலவுகள் நேர்ந்தமையாலும், வலியற்ற நவாபின் அரசாங்கம் பணமின்றித் தவித்தது. ஹால்வல், கம்பெனியே நேராக வங்காளத்தை ஆளலாம் என்ற ஒரு ஆலோசனை கூறினன். பீஹாரில், ஆங்கிலப் படைகளுக்கு அதிகாரியாயிருந்து ஷா ஆலத்தைத் தோற்கடித்த மேஜர் * **கெலாட்** என்பவர், மீர்ஜாபரும் அவன் மகனுகிய மீரானும் தனக்கு உதவிசெய்யவில்லை யென்று முறையிட்டார். சிறிது காலத்திற்குப் பிறகு மீரான் கொல்லப்பட்டான். அவன் இடிவிழுந்ததனல் இறந்தான் என்ப. இங்கிலீஷில், நவாப்பினுடைய மருகனுகிய **மீர்காஸிம்** என்பவன் தான் நற்பயனடைய முயன்றன். மனநோய் கண்டிருந்த மீர்ஜாபர் தன் மகனிறந்ததைக் கேள்விப்பட்டதுமே பைத்தியம் பிடித்தவனுன்; இங்ஙனுக, கெலாட் ஹால்வல் இவர்களுடன் உள்ளுறவு கொண்டாடிய மீர்காஸிமைப் பீஹாருக்கு டிபுடி கவர்னராக்குவதாக அவர்கள் வாக்களித்தனர். மீர்காஸிம் தான் † சிறு நவாப் என்று உரிமை பாராட்டித் தன்னைத் திவானுக நியமிக்க வேண்டுமென்றும் கேட்டான். புதிய கவர்னராகிய வான்ஸிடார்ட் மீர்காஸிமோடு சமாதானஞ்செய்து கொண்டான்: அதன்படி மீர்

**வங்காளத்தில் அக்கிரம ஆட்சி: ஹால்வலும், வான்ஸிடார்டும் (1760—65).**

**மீர்ஜாபர் அடக்கப் படல் (1760)**

* Caillaud. † Chota Nawab.

காளிமை முதலில் திவாலுக்கிப் பின்பு நவாபாக்கவேண்டுமென்றும், ஆங்கிலப்படையின் பராமரிப்புக்காக நவாப்பின் கையை எதிர்பாராதபடி யிருக்க, ஆங்கிலேயர்க்கு மிதுனபுரி, * வர்த்தமானபுரம், சிட்டகாங் என்ற மூன்று ஜில்லாக்களையும், அவைகளின் வருமானங்களையும் கொடுக்க வேண்டுமென்றும். ஏற்பாடு செய்யப்பட்டது. மீர்ஜாபர்.கம்பெனிக்குக் கொடுக்கவேண்டிய பாக்கித் தொகைகளைக் கொடுத்து விடுவதற்கும், மீர் காஸிம் உடன்பட்டான். (1760 ஆம்வரு செப்டம் பர்மீ 27 ஆம் தேதியன்று செய்த உடன்படிக்கை.) மீர்காஸிமுக்குப் பணிய மீர்ஜாபர் மறுத்ததனால், வான்ஸிடார்டும் கௌடாடும் முர்ஷிதாபாத் திற்குச் சென்று அவனுடைய அரண்மனையைப் பலவந்தமாகக் கைப்பற் றினர். அவன் நன் பதவியை விட்டுவிடும்படி வற்புறுத்தப்பட்டான்; உடனே மீர்காஸிமுக்கு அப்பதவி கொடுக்கப்பட்டது. இவ்விதமாக நவாப் பதவியில் மாறுதல் நீற்பட்டதெனினும், ஆள்ப்வரை மாத்திரம் மாற்றிவிடு வதில் நக்க பரிகாரம் உண்டாகாது; அப்பரிகாரம் ஆளும் முறையை மாற்றுதலிலேயே பொருந்தியிருக்கிறது. ஆங்கிலேயர் ஒரு நவாப்பை நீக்கியதனால் யாது பயன்? மற்றொரு நவாப்பை "சம அரசியலதிகாரத்தோடும் அபரிமித சுய ஆற்ற லோடும்" நியமித்தனர். ஆங்கிலேயர் நமக்கும் நவாப்புக்கும் இடையேயுள்ள தகராறுகளை நிவர்த்திக்க யாதும் செய்ய வில்லை; மற்றும், அவர்கள் புது நவாப்போடு செய்து கொண்ட ஒப்பந்தம் "இனி பிற்காலத்து மனஸ்தாபங்களை விலக்குமாறு" தெளிவாயில்லை. இவ்வளவுக்கும் மேற்பட்ட கேவலமான செய்கை யாதெனில்—இந்த நடவடிக்கையை நிகழ்த்திய முக்கியஸ்தர்களுக்குப் பெருத்த பணத் தொகை யைக் கொடுக்கவேண்டு மென்பது: அதனுள்ளும் ஹால்வலின்† பங்கு முன் னரே நிர்ணயிக்கப்பட்டது.

**மீர்காஸிமோடு ஆங்கிலேயர் செய்து கொண்ட உடன் படிக்கை**

**நவாப்புகளை மாற்று தலின் பயனின்மை**

ஆங்கிலேயருக்குச் சலுகைகள் காட்டிய பின்பு, தன்னிஷ்டப்படி செய்ய அவர்கள் விட்டு விடுவரென மீர்காஸிம் எண்ணினான். பீஹாரில் இளவரசனாயிருந்த ஷா ஆலம் தன் தகப்பன் கொலை யுண்டபின் முகலாயச் சக்கரவர்த்தியானான். அவன் ஆங்கிலேயரோடு அளவளாவதே நவாபாகிய மீர் காஸிம் வங்காளத்தின் சுபாதாரியை, 'ஆங்கிலேயர் நமக்கே வேண்டுமென்று பெற்றுக்கொள்வரோ' எனச் சந்தேகித் தான். அவன் சந்தேகத்திற்கேற்பவே வான்ஸிடார்ட்டின் எண்ணமும் சுபாதாரியைப் பெறுவதேயாகும்; ஆனால், இவ் வெண்ணம் ஆங்கிலச் சபையோரால் ஆமோதிக்கப்படவில்லை; இவ்விதம் அவ் வெண்ணம் பயனின்றிப்போயது. ஆங்கிலேயருக்கும் ஷா ஆலத்

**மீர்காஸிம் கஷ்டங்களை நிவர்த்தித்துக் கொள்ளல்**

---

* Burdwan.

† "புரட்சியைப் பொதுநம்பிக்கைத் துரோகமென்றாலும், பிரதியேகப்போராசையின் விளைவென்றாலும் குறைகூறுதற்குரியதல்லவாயினும், அது இந்தியாவில் ஆங்கிலேயர் செய்துள்ள அரசியல் விவகாரத் தவறுகளுக்குள் மிக்கபெருந் தவறுகும்.....ஆங்கிலேயரது உபாயம் செயற்கரியதாயிற்று; அது தன் காரணபூதர்களுக்கு ஆபத்தை விளைவித்தது." (Dodwell: Dupleix and Clive, p. 206.)

துக்கும் ஒப்பந்தம் ஏற்படுமென்று மிக அஞ்சிய மீர்காஸிம் ஆங்கில உதவியின்றி ஷா ஆலம் அயோத்திக்குச் சென்றபின்னரே மன நிம்மதி அடைந்தான். அவன் இப்போது கிளிவினால் கைவிடாது ஆதரிக்கப்பட்டு வந்த ராஜாராம் நாராயணனை ஒழிக்க முயன்றான்: வான்ஸிடார்டும் ராம் நாராயணனைப் பழிக்குப் பழி வாங்க எண்ணிய நவாப்பின் கையில் ஒப்படைத்தான். வான்ஸிடார்டுக்கு இச்செயலால் பிற்கேடு விளையுமென்றும், ஆங்கிலேயரின் கௌரவம் குறையுமென்றும், தெரிய வில்லை. இப்போது நவாப் அதிகாரத்தின்மேல் கிளிவ் இட்ட தடைகள் நீக்கப்பட்டும் போயின. மீர்காஸிம் ராம் நாராயணனை வேலையினின்றும் நீக்கிக் கொலை செய்தான்;* மேலும், ஆங்கிலேயருக்கும், ஒடிப்போன முகலாய சக்கரவர்த்திக்கும், ஒப்பந்தம் ஏற்படாதவாறு விலக்கினான். "இதனால் இப்போது 1756-க்கு முன்பு இருந்த நிலைமையிலேயே இருக்க நேர்ந்தது; அங்ஙன் இல்லையேல் அவர்கள் சண்டை செய்தே தீரவேண்டிய தாயிற்று; ஏனெனில், ஹால்வல் லஞ்சம்வாங்கியமையாலும் வான்ஸிடார்ட் 'எல்லாம் நன்மைக்கே' என்று தவருக எண்ணியமையாலும் அவர்கள் பெரு நஷ்டங்கள் அடைந்தனர்."

இப்படியிருக்க, நவாப் வங்காளத்து உள்நாட்டு வியாபாரத்தில் ஆங்கிலேயர் பெற்றிருந்த உரிமைகளின் நியாயத்தை எதிர்க்கலாயினன். விரைவிலேயே சுங்க வரிகளைப் பற்றிச் சண்டையெழுந்தது.

**வியாபார சம்பந்த மாகச் சண்டை யெழல் (1762)**

இதனால் அவனுக்கும் கல்கத்தாவிலுள்ள ஆங்கில அரசாங்கத்திற்கும் விரோதமேற்பட்டது. முகலாயப் பேரரசின் பர்மன்கள் பிளாஸி யுத்தத்திற்கு முன்னிருந்தே ஆங்கிலேயர்க்கு வாணிப சுயேச்சாதிகாரத்தையும் சுங்கவரி மீக்கத்தையும் அளித்திருந்தன கண்டோம். இதனால், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் நவாபிட்ட தடையையும் மீறி, தாங்கள் உப்பு, வெற்றிலை, புகையிலை போன்ற சரக்குகளில் தடையின்றி வியாபாரஞ் செய்யலாமென வாதித்தனர். 1757-இல் நிகழ்ந்த பிளாஸி வெற்றிக்குப் பின்னர் ஆங்கிலேயர்க்கும் மீர்ஜாபர்க்கும் நடந்த உடன்படிக்கையில் இப்படிப்பட்ட உரிமைகள் யாவும் வரையறுக்கப்படவில்லை; எனினும், மீர்ஜாபர் கொடுத்த சன்னத்தினால் ஆங்கிலேயர் எவ்வித வியாபாரத்தையும் செய்யலாமென அனுமதிக்கப்பட்டனர்; ஆனால், 'அதனிலும் உள்நாட்டு வியாபாரத்தைப்பற்றிய உரிமை தெளிவாகப் பிரஸ்தாபிக்கப்படவில்லை; கிளிவின்கீழ் ஆங்கில உரிமைகள் முன்னிலிருந்தபடியே யிருந்தனவன்றி அதிகரிக்கவில்லை. கிளிவுக்குப்பின் வந்தவர்களின்கீழ் உரிமைகள் அதிகரித்தன. இங்ஙன வர்த்தகர்கள் பரிதானம் கொடுத்து ஆங்கில உத்தியோகஸ்தர்களின் பேரில் தடையிலா வியாபாரஞ் செய்யலாயினர்.†

---

* S, H. Askeriar Raja Ramnarain, in the Indian Historical quarterly (1938, pt. I).

† For a full treatment of the topic, see Dodwell: Dupleix and Clive chap. V. pp. 214—220; and The Cambridge History of India, Vol, V pp. 170—1.

மீர்காஸிம் நவாப்பானபோது இந்த உரிமைகளை மீக்குமாறு கேட்க வில்லை. நவாபான பின்பு ஆங்கில வியாபாரிகளிடமிருந்த இந்திய ஏஜெண்டுகளின் (குமாஸ்தாக்கள்) துர்நடத்தையைப் பற்றி முறையிட்டான். வங்காளத்தின் உள்நாட்டு வியாபாரமுற்றும் ஆங்கிலேயர் வசமும் அவர்களது ஏஜெண்டுகள் வசமுமே இருந்தது; இந்திய வர்த்தகர்களிற் பெரும்பாலோர் கம்பெனியின் *உத்தரவுகளை வாங்கி மோசம் செய்தனர். இந்தக் குமாஸ்தாக்களும் பிறரும் குடியானவர்களையும் வர்த்தகர்களையும் அடிக்கடி துன்புறுத்தி இறுமாப்புக்கொண்டு எங்கும் நவாபின் உத்தியோகஸ்தர்களை எதிர்க்கலாயினர். மீர்காஸிம், நியாயப்படியே தன் வருமானம் குறைந்ததென்றும், தன் குடிகட்குக் கேடுகள் விளைந்தனவென்றும், தன் அதிகாரம் இழிவு படுத்தப்பட்டதென்றும் கல்கத்தா சபையின் முன்னர் முறையிட்டான். ஆனல் சபையோரில் பெரும்பாலோர் சுய இலாபத்திலேயே பேராசை கொண்டனராகலின் நவாபின் முறையீடுகளை செவியேற்கவில்லை. மேலும், வான்ஸிடார்ட், ஹேஸ்டிங்ஸ் இருவரும் சொன்ன ஷரத்துக்களையும் ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்விதம், நவாபுக்கும் ஆங்கிலச் சபைக்கும் ஏற்பட்ட வேற்றுமையைக்கொண்டு நவாபின் உத்தியோகஸ்தர்கள் ஆங்கில வியாபாரத்தைத் தடை செய்யலாயினர்; மற்றொருபுறம், ஆங்கிலேயரிடமிருந்த இந்திய ஏஜெண்டுகளின் துர்நடத்தை நவாபின் கண்டிப்புகளுக்கு உறுதியளித்தது. வான்ஸிடார்டும் நவாபும் தங்கள் சச்சரவுகளை இந்திய † பவுஜ்தார்களின் மூலம் தீர்மானிக்க எண்ணியபொழுது ஆங்கிலச்சபையோர் கவர்னரைத் தீய வெண்ணங்களை உடையவனென்றும், நவாபின் கையில் ஆங்கில உத்தியோகஸ்தர்களைக் காட்டிக் கொடுப்பவனென்றும் குற்றஞ்சாட்டினர். அவர்கள் முன்னலேயே கோரிய ஒப்பந்தத்தை மறுத்து, இனி, பட்டின்மேல் விதித்த 2½ சதவீதம் வரி தவிர இதர சுங்கவரி ஒன்றுமின்றி ஆங்கிலேயர் வியாபாரஞ் செய்யவேண்டுமென்றும், ஆங்கில ஏஜெண்டுகள் ஆங்கிலேயர்க்கு அடங்கியே இருக்கவேண்டுமென்றும் தீர்மானித்தனர். இதனைக்கண்ட நவாப் எல்லா சுங்க வரிகளையுமே எடுத்துவிடத் தீர்மானித்து ஆங்கில வியாபாரத்திற்குமட்டுமிருந்த ‡ வாசியை ஏற்க மறுத்தான். ஆங்கிலச் சபையோர் கோபங்கொண்டனர். எல்லாச் சுங்கங்களையுமெடுத்து விட்டதால் நவாப், ஆங்கிலேயருடன் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறிவிட்டானென்றும் குறை கூறினர். தான் செய்ததை ஆட்சேபிக்கவந்த ஆங்கிலக் கோஷ்டியினரை நவாப் வரவேற்க மறுத்தான். விவகாரங்கள் முற்றவே, பாட்னாவிலிருந்த ஆங்கிலப் பண்டகசாலைத் தலைவனை **எல்லிஸ்** என்ற முன்கோபக்காரன் அப்பட்டணத்தைத் தாக்கிப் பிடித்துக்கொண்டான் (ஜூன், 1763). ஆனல், ஆங்கிலப்படைகளுக்குப் பயிற்சி போதாமையால் அற்றைத் தினமே நவாபின் சேனைகள் அப்பட்டணத்தைமீட்டு அங்கிருந்த ஆங்கிலேயரை யெல்லாம் கைதிகளாக்கின.

**ஆங்கிலேயர் தம் உரிமைகளைத் துர்விநியோகம் செய்தல்**

**நவாபுக்கும் ஆங்கிலச் சபைக்கும் விரோதம் ஏற்படல்**

**எல்லிஸ் பாட்னாவைத் தாக்கல் (1763)**

**போர் எழுதல்**

* Permits. † Faujdar. ‡ Preferential Terms.

மீர்காஸிம் ஆங்கிலேயர் தன்னைப் பட்டத்திலிருந்து வீழ்த்தச் சூழ்ச்சி செய்கின்றனரென்று சந்தேகம் கொண்டதால் தனது சமஸ்தானத்தை மூர்ஷிதாபாத்திலிருந்து மங்கீர் பட்டணத்துக்கு மாற்றினன். அவன், தன் குடும்பச் செலவுகளைக் குறைத்துக்கொண்டு தனக்கு முன் நவாபாயிருந்தவனுடைய நேசர்களை யெல்லாம் நீக்கி ஒரு சேனையைச் சொந்தத்திற்குச் சேகரித்தான்; மற்றும் ஆங்கிலேயச் சார்பினராய உத்தியோகஸ்தர்களையெல்லாம் நீக்கி அயோத்தி நவாபோடு உறவாடலானன். கம்பெனிப் படையினின்று விலகி யோரைத் தன்கீழ் வேலையிலமர்த்தித் தன் துருப்புக்களுக்கு ஐரோப்பிய முறைப்படி படைப்பயிற்சி யளித்தான். மற்றும் வெடிமருந்து துப்பாக்கி கள் செய்வதற்கும் ஆயுதச் சாலைகள் ஏற்படுத்தினன். ராம்நாராயணனைப் பணியும்படி செய்து தன் கௌரவத்தைப் பெருக்கினன்; வான்ஸிடார்ட் துர்பலமானவனென்றும் அவன் உணர்ந்தான்; மற்றும் ஆங்கிலேயரை வெறுத்த பிரபுக்களின் உதவியையும் பெற்றான்.

**மீர்காஸிம் நிலை**

பாட்னாவில் எல்லிஸ் தோல்வி யடைந்த பின்பு, * அம்யாட் என்ற ஆங்கில தூதுவன் கொல்லப்பட்டான். இச்செய்தி கல்கத்தாவுக்கு எட்டியவுடனே அங்குள்ள ஆங்கிலச் சபையினர் மீர்காஸிம்மீது போர் தொடங்கி மீர்ஜாபரை மீண்டும் நவாபாக்கமுற்பட்டனர். மீர்காஸிம் நன்கு தயாரிக்கப்பட்ட 20000 ஆட்களடங்கிய சேனையோடு காஸிம்பஜாரைக் கைப்பற்றினன். இதற்குள் ஆங்கிலச் சேனை கல்கத்தாவிலிருந்து கிளம்பி, மூர்ஷிதாபாத்தைக் கைப்பற்றி, † கெரியா ‡ உதயனல்லா என்றவிடங்களில் வெற்றி பெற்று மங்கீரை நோக்கிச் சென்றது. அப் பொழுது மீர்காஸிம் மங்கீரிலிருந்து பாட்னாவுக்குப் பின் வாங்கினன். தன் சேனைத் தலைவனை ¶குர்கின்கான் மீது சந்தேகம் கொண்டு அவனைக் கொன்றான். மங்கீரை ஆங்கிலேயர் முற்றுகையிட்ட போது, தன் கீழ் வேலையிலிருந்த §சம்ரு என இந்தியர்களால் வழங்கப்படும் ஔவால்டர் ரீன்ஹார்ட் என்ற ஜெர்மானியப் போர்வீரனைக் கொண்டு பாட்னாவிலிருந்த ஆங்கிலக் கைதிகளனைவரையும் கொல்வித்தான். இப் படுகொலையால் ஆங்கிலேயர்க்கும் நவாபுக்கும் சமாதானப் பேச்சு நிகழாது போயிற்று. ஆங்கிலப்படை பாட்னாவை யடைவதற்கு முன்னமேயே மீர்காஸிம் அவ்விடந்தைவிட்டுப் பெருஞ்செல்வத்துடன் அயோத்திக்குத் தப்பியோடினன். ஆங்கிலத்தலைவன் பீஹாருக்கும் அயோத்திக்குமிடையே எல்லியாகவோடும் ** கர்மநாஸா என்னும் நதியைக் குறுகிக் கல்கத்தாவினின்று மேற்செய்ய வேண்டியவைகளைப்பற்றிய கட்டளைகளை எதிர்பார்த்து நின்றான். அபகீர்த்தி பெற்ற சம்ரு டில்லிக்கு அருகே அரசொன்று நிறுவினன்: மற்றும் அவனும், அவனது இந்திய

**ஆங்கில வெற்றிகளும் பாட்னாவின் மேற் செல்லலும்**

**மீர்ஜாபர் மீண்டும் நவாபாக்கப்படல்**

**மீர்காஸிம் அயோத்திக்கு ஒட்டம் பிடித்தல் (1764)**

* Amyatt. † Gheria. ‡ Udayanala. ¶Gurgin Khan.
§ Samru. ℣ Walter Reinhardt. ** Karmanasa.

மனோவியாகிய பேகம் சம்ருவும், கூர்ணை ஸ்திதியிலிருந்த முகலாயப் பேரரசின் விவகாரங்களில் தலையிட்டனர்.*

அயோத்தி நவாபாகிய ஷுஜா உத்தௌலா இந்தக் கலவரத்தைப் பயன் படுத்திக்கொள்ள முயன்றான்; தன்னிடம் ஓடிவந்த ஷா ஆலத்தைக் கொண்டு தனக்கே வங்காளம், பிஹார் இரண்டையும் வசப்படுத்திக் கொள்ள எண்ணினான். மீர்காஸிம், ஷா ஆலம் ஷுஜா உத்தௌலா ஆகிய மூன்று முகம்மதிய அரசரும் ஒன்று சேர்ந்து, ஆங்கிலேயர் வசமிருந்த பாட்னாவின்மேற் படையெடுத்தனர்: அயோத்தியப் படைகள் சண்டைக்கு ஆயத்தமாயில்லை. ஆங்கில சேனையோ கார்னிக் என்ற வலிகுன்றிய தலைவன் கீழிருந்ததால் கலகஞ் செய்ய விரும்பின. ஆங்கில சேனையில் லாலியை விட்டுவந்த பிரெஞ்சுத் துருப்புக்களுமிருந்தன: உணவுப் பொருள்கள் கிடைப்பதிலும் பெருங் கஷ்டங்கள் நேர்ந்தன. இப்படியிருக்க, சேனையோடிருந்த புது நவாபான மீர்ஜாபர் ஷுஜா உத்தௌலாவின் நாட்டின்மேற் படையெடுக்கக்கூடாதெனத் தடுத்தான். இதனால், ஷுஜா உத்தௌலா ஆபத்தாரமின்றித் தன்னைத் தற்காப்படுத்திக் கொண்டான்: ஆங்கில சேனை பாட்னாவுக்குத் திரும்ப, பகைவர் பிஹாரினுட் பிரவேசித்துப்(ஏப்ரல் 1764) பலபோர்களை நிகழ்த்தினர். கடைசியில், மேஜர் மன்ரோ ஆங்கிலத்துருப்புக்களுக்குத் தலைவராகிக் கலகத்தையும் ஒழுங்கீனத்தையும் ஓடுக்கிச் சோணை நதியைக் கடந்து, பக்ஸார் என்னுமிடத்தில் பகைவரை அறவே தோற்கடித்தார் (அக்டோபர்). இந்த வெற்றியால் பல முக்கிய விளைவுகள் ஏற்பட்டன; மன்ரோவிற்குப் பின் தலைவனான †பிளெட்சர் அயோத்தியைப் பாழாக்கினான்; அலஹாபாத் நகரும், சுனர் கோட்டையும் கைப்பற்றப்பட்டன; ஷுஜா உத்தௌலாவுக்கு ஆங்கிலேயரோடு மற்றொரு சண்டையிடத் தைரியமில்லை. ஆனால், அவன் மீர்காஸிமை ஆங்கிலேயரிடம் ஒப்புவிக்க மறுத்துத் தன் நாட்டிற்கு ஓடிப்போய், பின்பு அங்கிருந்து ரொஹில்கண்டுக்கு ஓடிவிட்டான். ஷா ஆலம் ஆங்கிலேயர் பக்கம் வந்து சேர்ந்து சமாதானம் வேண்டினான். மீர்காஸிம் வறுமையால் வருந்தினான்; அவன் கதி பின்னர் என்னவாயிற்றெனத் தெரியவில்லை; அவன் கீழிருந்த அபகீர்த்தி மிக்க சம்ரு ஜாட்குலத்தைச் சேர்ந்த பரதபுர அரசனிடம் வேலையிலமர்ந்தான்.

**அயோத்தி நவாப், ஷா ஆலம், மீர்காஸிம் மூவரும் சேர்ந்து மேற் செல்லல்**

**பக்ஸாரில் ஆங்கிலேயனின் பெரு வெற்றி (அக்டோபர், 1764)**

**அதன் பலன்கள்**

"ஆங்கில அதிகாரத்தை இந்தியாவில் பிளாஸி வெற்றியே தொடக்கஞ் செய்தது என்பதைக் காட்டிலும், பக்ஸார் வெற்றியே செய்தது" எனல் தகும் என்பர் ஓர் ஆசிரியர். இதற்குமுன் ஆங்கிலேயர் நவாபின் நடவடிக்கைகளைக் கண்காணித்தும், அவனது சபையினர் தம்மேல் பகைமை பாராட்டாதவாறு பாதுகாத்தும் வரவேண்டியிருந்தது; இப்போது அத்

* See Chap. II. of Keene—Hindustan under Freelance (1770—1820); B. Banerjea—Begam Samru and chap. 75 of W. Sleeman's Rambles and Recollections. ed. by V. A. Smith. See M. J. Seth—The Armenians in India (1937) for Gurgin Khan.

† Fletcher.

த்தைய தொல்லை யொழிந்தது. கிளைவின் கீழ் இந்தக் குற்றப்பாடுகளும் முறைமை திருத்திகரமாகவே நடந்து வந்தது; ஆனால் அவனுக்குப் பின் இந்த முறைமை குழப்பமடைந்தது; நவாபின் பதவியில் அறிவு கேடான மாற்றங்கள் செய்ததால் ஒரு கோர யுத்தம் உண்டாயது. இந்த முறையால் ஆங்கிலேயர்க்கும் நவாபுக்கும் குடிமக்களுக்கும் கேடுகளே விளைந்தன;

**கிளைவ் வங்காளத்துக்குத் திரும்பி வரல் (மே, 1765)**

நவாபின் சக்தியின்மையினாலும், ஆங்கிலேயரின் பேராசையினாலும் கலவரங்களும் அநீதிகளும் ஏற்பட்டன. இதனால், கிளைவ் விவகாரங்களைச் சரிப்படுத்த இந்தியாவுக்கு மீண்டும் வந்தான். அவனுக்கு லார்ட் பட்டமளித்து, வங்காளத்திற்குக் கவர்னராகநியமித்தனர்; அரசியல் விவகாரங்களில் அவனுக்கு முழு அதிகாரமுண்டு; அவனுக்கு உதவிபுரிய ஆங்கிலச் சபையிலிருந்து தன்னாலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட ன்கு அங்கினர்களடங்கிய ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. அவன் திரும்பவும் வந்தபோது மக்கள் அவனைப் பெரிதும் வரவேற்றனர்: அவன் வருகையை "வெயிலால் கருகிப்போன நிலத்தின் கண் மழை பொழிந்தது போலாயிற்று" என ஒப்பிட்டுச் சிறப்பித்தனர்.

## பகுதி 2. கிளைவின் இரண்டாம் முறை ஆட்சி (1765—1767)

லார்ட் கிளைவ் 1765 மே மாதம் கல்கத்தா அடைந்தான். வங்காள விரிகுடாவில் வந்துகொண்டிருந்தபோதே, மீண்டும் நவாபாக்கப்பட்ட மீர்ஜாபர் பிப்ரவரி மாதத்திலிறந்தானெனக் கேள்வியுற்றான். நவாப் தான் செய்து கொண்ட உடன் படிக்கையின் ஷரத்துக்களைச் சரிவர நிறைவேற்ற வில்லை; போர்க்கருமங்களுக்கும் அவன் ஒரு பெருந்தடையாயிருந்தான்.

**புது நவாபை அங்கீகரித்தல்**

**நந்தகுமார்** என்ற மந்திரி ஆங்கிலேயரது சூழ்ச்சிகளைப் பகைவர்க்குப் பஹிரங்கப்படுத்தியதனால் அவர்கட்குத் துன்பம் விளைவித்தானெனவும் கருதப்பட்டது. மீர்ஜாபர் இறந்த பின்பு அவன் மகன் நஜீம் உத்தௌலாவை ஆங்கிலச் சபையோர் நவாபாக்கினர்; ஆனால், அவர்கள் தங்களால் நியமிக்கப்பட்ட ஒருவன் நவாபின் பேரில் அரசியலை நடத்த வேண்டுமென்று திட்டமிட்டனர். இதனால், நவாப் பொம்மை யரசனுயினன். நந்த குமாரை நவாபின் சபையினின்று பலாத்காரமாக விலக்கி, நவாபின் டெப்டியாக (உதவியாளராக) **முகம்மது ரஸாகான்** என்பவனை நியமித்தனர். இந்த ஏற்பாடு தான்வகும்போதுதானு ஏற்படல் வேண்டும் எனக் கிளைவ் கோபங் கொண்டான். ஆனால் நடைமுறையை நோக்க அது நலமுடைத்தாகும். இந்த ஏற்பாட்டினல் ஆங்கிலச் சபையங்கத்தினர் பெரு லஞ்சம் பெற்றனர்: இது டைரக்டர்களின் கட்டளையை மீறியதோர் செயலாகும்.

கிளைவ் மீர்ஜாபரின் சிறு வயதுள்ள பேரப் பையனை நவாபாக்க எண்ணினன். எனினும், முறையாக நவாபாக்கப்பட்ட நஜீம் உத்தௌலாவை அவனல் விலக்கமுடியவில்லை; கிளைவ் டெப்டி நவாபாகிய முகம்மது ரஸகானின் அதிகாரத்தைக் குறைவுபடுத்தியதுடன் அவரோடு இரண்டு ஹிந்து பிரபுக்களையும் உடன் வைத்தான். அவன் மூர்ஷிதாபாத்திலிருந்த கஜானு சுரண்டப்பட்டிருப்பதைக் கண்டு "வெள்ளையரும்

**கிளைவ் நவாபோடு செய்துகொண்ட ஏற்பாடு**

க்குப்பரும் நவாபினுடைய கஜானாவைக் கொள்ளையடிக்க ஒன்று சேர்ந்தனர்'' எனக்கழறினன். அவன், டைரக்டர் சபையே கவர்னர் ஸ்பென்ஸர் மீதும் அவனது சன்ப மீதும் நடவடிக்கையெடுத்துக் கொள்ளட்டுமென்று வாளாவிருந்தனன். (இந்த ஸ்பென்ஸர் வான்ஸிடார்ட்டுக்குப் பின் கவர்னராகிப் புதிய நவாபுக்குச் சிம்மாசனமீந்தவன்).

முகலாய சக்கரவர்த்திக்கு அயோத்தியை வான்ஸிடார்ட் கொடுப்பதாக வாக்களித்திருந்ததைக் கிளைவ் அறிந்தான். அம்மாகாணத்தை ஷா ஆலத்தினுல் ஆங்கிலேயர் உதவியின்றி கிர்வகிக்க முடியாதென்பதையும் பின்னர் இதனுல் பெருத்த சங்கடங்கள் விளையுமென்பதையும் கிளைவ் உணர்ந்தான். ஆதலின், கிளைவ் கார்னக் என்பவனை ஷுஜா உத்தௌலாவினிடம் அளவளாவிப் பேச அனுப்பினன். ஷுஜா உத்தௌலாவும் ஆங்கிலேயரை நம்பிச் சரண் புகுந்தான். மற்றும், கிளைவ் அலஹாபாத்துக்குச் சென்று, அயோத்தி நவாபுடனும் முகலாயச் சக்கரவர்த்தியுடனும் கிரந்தரமான ஓர் ஒப்பந்தஞ் செய்தான். (ஆகஸ்டு 1765). இவ்வொப்பந்தத்தின்படி அலஹாபாத் கோரா என்ற இரண்டு ஜில்லாக்களும் முகலாய சக்கரவர்த்திக்குக் கொடுக்கப்பட்டன. ஷுஜா உத்தௌலாவுக்கு மேற்கூறிய இரு ஜில்லாக்கள் நீங்கலாக முன்னரே அவனுக்குச் சொந்தமாயிருந்த பிரதேசங்களனைத்தும் கொடுக்கப்பட்டன. இதற்குப் பதிலாக ஷுஜா உத்தௌலா கம்பெனிக்கு 50 லட்சம் ரூபாய் கொடுப்பதுமல்லாமல் ஆங்கிலேயருடன் தற்காப்புடன்படிக்கை செய்து கொள்ளவும் வேண்டியதாயிற்று, மேலும், அவன் தன்னுல் சண்டை செய்து மீட்கலாகாத பிரதேசங்கள் தனக்குக் கிடைத்ததற்காக ஆங்கிலேயரிடம் நன்றி பாராட்டி, அவர்களுக்கு உற்ற நண்பனுயினுன். இஃது இங்ஙனமாக, ஆங்கிலேயர் ஷா ஆலத்திற்கு அலஹாபாத் கோரா என்ற ஜில்லாக்களைக் கொடுத்தனர். ஷா ஆலம் ஆங்கிலக் கம்பெனிக்கு வங்காளம், பிஹார், ஒரிஸ்ஸா என்னும் மாகாணங்களின் திவானி (வரி வசூல் செய்யும் உரிமை) யைக் கொடுத்தான். [ஒரிஸ்ஸா மாகாணம் மிதுனபுரி நீங்கலாக மராட்டியர் வசமிருந்தது.] இதற்குப் பிரதிபலனுக ஆங்கிலேயர் ஷா ஆலத்திற்கு வருடந்தோறும் 26 லட்சம் ரூபாய் வங்காள வருமானத்திலிருந்து கப்பமாகக் கொடுப்பதாக உறுதியளித்தார்கள்.

**அயோத்தி நவாபுடன் கிளைவ் உடன்படிக்கை செய்து கொள்ளல்**

**ஷா ஆலத்துடனும் உடன்படிக்கை செய்து கொள்ளல் (1765)**

ஆங்கிலேயர் திவானியைப் பெற்றமையால், "அம்மாகாணச் செல்வாதாரமுற்றும் அவர்களது வசப்பட்டது; மேலும், 1765 பிப்ரவரி ஏற்பாட்டின்படி நவாபின் அதிகாரத்தை நீக்க எண்ணிய கோரிக்கை இப்போது முற்றுப் பெற்றது." இங்ஙன் திவானி பெற்றமையால் நன்மைகளும் தீமைகளும் ஏற்பட்டன. இதனுல், பொம்மை போன்ற முகலாயச் சக்கரவர்த்திக்குக் கப்பம் கொடுக்க நேரிட்டது; எனினும், பொம்மைபோன்ற அவனுக்குத் திவாணி நியமிக்கும்

**ஆங்கிலேயர் திவானியைப் பெற்றமை—அதனுல் விளைந்த நன்மைகளும் தீமைகளும்**

உரிமையுண்டென நிறுவியது; ஆனால், நவாபை நியமிக்கும் உரிமையை அவனிடமிருந்து ஆங்கிலேயர் கைக்கொள்ளுமாறும் செய்தது. மேலும், இதன்படி ஷா ஆலத்திற்கு சுயேச்சாதிகாரம் செலுத்துமாறுள்ள பிரதேசமும் பலந்த அலஹாபாத் கோட்டையும் கிடைத்தது; அவன் சாமர்த்திய முள்ளவனுயிருப்பின், ஆங்கிலேயருக்கே ஒரு பெருவிரோதியாயிருக்கலாம். ஆனல் கிளைவ், வான்ஸிடார்ட் வாக்களித்தபடி ஷா ஆலத்திற்கு அயோத்தி முழுமையும் கொடுக்காமற்போயினும், அவனுக்கு அடியோடு ஒன்றும் கொடுக்காமல் விட்டுவிடவில்லை. மற்றும், முகலாயச் சக்கரவர்த்திவானியை யளித்து ஒரு விஷயத்தில் பயனுடையது. "முகலாயச் சக்கரவர்த்தி" என்ற பெயரின் கௌரவத்தை இன்னமும் சுதேச மன்னர்கள் மதிக்குமாறு செய்தது; அவன் ஆணைகளுக்கு ஒருவரும் கீழ்ப்படியாவிடினும் சாதாரணமாக எல்லா விவகாரங்களுக்கும் அவன் உறுதியளிக்க வேண்டியிருந்தது." மேலும் வங்காளத்தில் இன்னமும் தங்கியிருந்த பிரெஞ்சுக்காரரும் டச்சுக்காரரும், சக்கரவர்த்தி போம்மைபோலிருப்பதைக்கொண்டு அவனது பர்மானின் தகுதியை எதிர்ப்பதற்கு முன் வரவில்லை.

**கிளைவ் செய்த ஏற்பாட்டின் தகுதி**

கிளைவ் ஷா ஆலத்தின் விபரீதமான சூழ்ச்சிகளை ஏற்றுக்கொள்ளமறுத்தான். வங்காளத்திலுள்ள ஆங்கில ராஜ்யத்திற்கும் வட இந்தியாவிலுள்ள சுமுப்பமுள்ள நாடுகளுக்கும் இடையே ஒரு † இடைப்பட்ட நாடாயிருந்த அயோத்தியை மெலிவுபடுத்த கிளைவ் விரும்பவில்லை. அவன், தற்போதைய எல்லைகளிலிருந்து ஆங்கில அதிகாரத்தை இன்னும் பரவச் செய்தல் கூடாது என உறுதி கூறினன். டேனியரும் புஸ்ஸியரும் வட இந்தியாவிலும் பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கைப் பரப்ப விரும்பினர்: 1759-இல் ஷா ஆலம் முதன்முதல் வங்காளத்தினின்று துரத்தப்பட்டபோது கிளைவின் ராணுவ உத்தியோகஸ்தர்களிலொருவனுகிய கெலாட் என்பவன் "கிளைவ் இன்னுமொரு வருஷம் இந்தியாவிலிருந்து முகலாயப் பேரரசனையும் வங்காள நவாபாயும் சேரத் துலங்கக்கூடாதா" என ஆச்சரியப்பட்டான். ஹால்வெல், வான்ஸிடார்ட், கூட், மன்ரோ ஆகிய எல்லோரும் ஆங்கிலேயர் டில்லிக்குள் வெற்றிகரமாய்ப் பிரவேசிப்பரென எண்ணினர். ஆனல், கிளைவ் கூறிவுள்ளவனைகளின் அத்தகைய எண்ணங்களை மேற்கொள்ள வேயில்லை. ஏனெனில், அக்காலத்திய நிலைமைப்படி, ஆங்கிலேயர் தம்மைத் தாக்க விரும்பியவர்களுக்குத்தான் பயத்தையும் ஆபத்தையும் விளைத்து வந்தனர். மற்றையோர் எண்ணிய வழியில் போயிருந்தால்,

† Buffer-state.

இந்த ஏற்பாட்டினுல் கிளைவ்தன்மைதிமைகளைப்பற்றி முற்றுமறியவேண்டில் கீழ்க்கண்டவைகளைப் பார்க்கவும்:—

Elphinstone: Rise of the British Power in the East: chap X. on the grant of the Diwani with the supplementory note of the Editor, Colebrooke; Dodwell p. 247; Mill's History of British India (1858) Vol. III, pp. 286—7; and Forrests Life of Lord Clive Vol. II, p. 289.

ஒவ்வொரு இந்திய அதிகாரமும்—மராட்டியர், முகம்மதியர், ராஜபுத்திரர் அனைவரும்—ஆங்கிலேயரை எதிர்த்திருப்பர். கிளைவ் இங்கிலாந்துக்குப் போவதற்கு முன்பு ஒரு பிரபல அரசாங்கப் பத்திரிகையிலும் தன் கருத்தக்களை உறுதிப்படுத்தியுள்ளான்; அவன் அதனுள் டில்லி யின்மேற் படையொடு செல்லல் ஒரு பயனற்ற வீணெண்ணமென்றும், வங்காளத்தையும் இக்கடப்படு நாடாகிய அயோத்தியையும் காப்பதில்லாமல் மற்றைய போர்களில் ஆங்கிலேயர் எறிட்டு இறங்குதல் கூடாதென்றும் வெளியிட்டான். இவ்விதமாக, அவன் அயோத்தி நவாபின் நிலைமையையும் ஆங்கிலேயர்க்கும் முகலாய சக்கரவர்த்திக்குமுள்ள சம்பந்தத்தையும் பலப்படுத்தினன்.* பின்னர்க் கூறப்பட்ட சம்பந்தம் அழிந்துபடினும், சுதேச விவகாரங்களில் தலையிடா நோக்கமும் காவலுக்காக இடைப்படு நாடு அமைப்பதன் நோக்கமும் கிளைவின் பின்வந்தோராலும் அந்தூற் றாண்டு முடிவுவரை கைக்கொள்ளப்பட்டு வந்தது.

**கிளைவின் அளவறிந்து போகுந் தன்மை**

கிளைவ் வங்காளத்தில் நிறுவிய அரசியலமைப்பு மிகவும் முக்கிய மானது. கம்பெனி, திவான் உரிமை வகித்ததாகலின், மாகாணங்களின் வருமானங்களனைத்தையும் கைக்கொண்டது. பொதுவாகக் கம்பெனியாரும் நவாபும் சேர்ந்து வங்காளத்தை யாளவேண்டும், நவாப் முகலாய சக்கரவர்த்திபிடமிருந்து தன் அதிகாரத்தைப் பெற்று, நாட்டின் பாதுகாப்பிற்கும் பொது அமைதியை நிலைநிறுத்தற்கும் நியாயம் வழங்குதற்கும் பொறுப்பாளியாயினன். திவானி அதிகாரம் பெற்ற கம்பெனியார், மாகாணங்களின் வருமானங்களை வசூலிப்பதற்கும் செலவுகள் செய்தற்கும், எஞ்சிய தொகையைச் சக்கரவர்த்திக்குக் கொடுத்தற்கும் பொறுப் பாளியாயினர். இது வரையில் ஏற்பாடு தெளிவாக அமைந்துள்ளது: ஆனால் இதற்குமேல் ஒரு சிக்கல் காணக்கிடக்கின்றது. கிளைவ் நவாபின் சேனையை நீக்கிவிட்டு ராணுவத்தால் நாட்டின் காப்பையும் தானே எடுத்துக்கொண்டான், நவாப் ராஜ்யாதிகாரத்தினின்று அறவே விலக்கப்பட்டுப் பேருக்கு மாத்திரம் மாகாணத் தலைவனாயிருந்தான். வருஷத்தில் அவனுக்கு 53 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது: இவ்விதமாக, நவாப் உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டு அரசியலிலிருந்து விலக்கப்பட்டார். பொதுவாகக் கம்பெனி ஷா ஆலத்தினிடமிருந்து திவானி உரிமையைப் பெற்றதெனினும், தற்போது அது நிஜாமத் (ராஜ்யாதிகாரத்) தையும் பெற்றது எனலாம். ஆனல், கம்பெனியின் உத்தியோகஸ்தர்கள் வரி வசூலிக்கும் கடமைகளையோ அரசியற் கடமைகளையோ தாமே ஏற்றுக்கொள்ளத் தயங்கினர். அவர்கள் வங்காளம் பீஹார் இரண்டற்கும் டெப்டி நவாபுகளை நியமித்தனர்; வழக்கப்படி பார்ப்பின் இவர்கள் கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற பின்பு நவாபினல் நியமிக்கப்படல்வேண்டும்; அவர்கள் தங்கள் உத்தியோகஸ்தர்களோடு அரசியல் முழுதையும்—ஸிவில், ரெவின்யூ இரண்

**இருதலைப்பட்ட அரசியல் அமைப்பு**

**அவ்வமைப்பின் நடைமுறை**

* Forrest's Bengal and Madras Papers, Vol. III, (1757—85) Select Committee of Fort William—Proceedings of 16th January, 1767.

டையும்—நடைபெறச் செய்தல் வேண்டும். 1769-இல்தான் வரி வசூலிக்கும் இந்திய உத்தியோகஸ்தர்களைக் கண்காணிப்பதற்காக ஆங்கில * மேற்பார்வையாளர் நியமிக்கப்பட்டனர்; இவர்களே பின்பு கலெக்டர்கள் என வழங்கப்பட்டனர்.

இந்த வங்காள அரசியல் ஏற்பாடு, கிளைவின் '**இருதலைப்பட்ட அரசியல் அமைப்பு**' என்று வழங்கப்படும்; அதன் நோக்கங்கள் பல. அது ஆங்கிலேயரது நிலைமைக்கு உறுதியளித்துத் தெளிவுண்டாக்கிற்று; † "அதிகாரம் பெறுதலினின்று அரசியலே யேற்பதற்குச் செய்யும் மாற்ற நிலையை அது குறிப்பதாகும்". கம்பெனியார் நவாபின் எல்லா அதிகாரங்களையும் பகிரங்கமாகத் தாமே கைக்கொண்டிருப்பராயின், பிரெஞ்சுக்காரரும் டச்சுக்காரரும் பொருமை கொண்டிருப்பர்; மேலும், ஆங்கில பார்லிமெண்டுக்கும் மந்திரிச் சபைக்கும் கம்பெனி விவகாரங்களில் தலையிடுதற்கு நியாயமும் ஏற்பட்டிருக்கும். "ஆதலால், கம்பெனியின் எதிரிகளானவர்க்கும் பயமுண்டாகாதவாறு எப்படி வங்காளத்தில் பலனளிப்பதும் நியாயவழிப்பட்டதுமான அதிகாரத்தைப் பெறுவது என்பதுதான் ஆலோசிக்க வேண்டிய விஷயமாகும்." கிளைவின் ஏற்பாடு அவ்வாலோசனை விஷயத்தை நோக்கி யமைக்கப்பட்டதே யன்றி, "நாட்டின் அரசியல் முன்னேற்றத்தை நோக்கியன்று." இதனால்தான், பல சிக்கல்களும் அரசியலை யேற்றுக் கொள்வதில் வெறுப்புக்களும் தோன்றின. நவாபின் காலத்திருந்த ஒழுங்கு கெட்ட அரசியலையே இந்த ஏற்பாடும் நீட்டித்துத் தொடரச் செய்தது எனக் குற்றஞ்சாட்டினர். ஆனால், கம்பெனியின் ஆங்கில உத்தியோகஸ்தர்கள் அரசியலை முற்றும் ஏற்குமாறு போகிய அளவிலில்லை யென்பது கிளைவுக்கு நன்கு தெரியும்: மேலும் அவர்களுக்குப் போகிய பயிற்சியும் அறிவும் அனுபவமும் இல்லை. மற்றும் கிளைவுக்கு, நெடுங்காலமாக நடைபெற்று வந்த அரசியல் முறைமையைத் திடீரென மாற்ற விருப்பமில்லை. அவன் செய்த ஏற்பாடு, அரசியற் பொறுப்பை ஆங்கிலேயர் மேல் விழாதபடி விலக்கி, இந்திய உத்தியோகஸ்தர்கள் வசமே இருக்கும்படி செய்தது: மேலும், அது பழைய முறைகளையே பின்பற்றிக் கிடந்தது.

**அதன் நோக்கங்கள்**

இந்த இருதலைப்பட்ட அரசியல் ஒருவிதத்தில் மிக மோசத்தனமான செயலாகும்: ஏனெனில், ஆங்கிலேயர்க்கும் நவாபுக்குமிடையே அரசியலை அது நன்கு பகுத்து வரையறை செய்யவில்லை. எனினும், "சுதேச ஆட்சிக்கும் ஆங்கில ஆட்சிக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்க்கும் ஒரு பாலம் போல்" அது உபயோகப்படுகிறது. அது ஆங்கிலேயரை அரசியற் பொறுப்பினின்று விடுவித்தது: சேணியின் பராமரிப்புக்கும் கம்பெனியார்க்குத் தேவையான சரக்குகளை இந்தியாவிலும் சீனாவி

**அதன் நன்மைகள்—அதன் தீமைகள் விலக்கலாகாதன**

* Supervisors.

† "A transitional Stage between the acquisition of power and the assumption of administration."

லும் வாங்குவதற்கும், தக்க ஏற்பாடுகளைச் செய்தது. இந்தக் காரணத்தினால்தான் இந்த ஏற்பாட்டை டைரக்டர்கள் சந்தோஷத்துடன் ஆமோதித்தனர்.* ஆனால், இந்த ஏற்பாட்டால் சில வருடங்களில் மிக்க கெடுதிகள் ஏற்பட்டன.

**ஸிவில் விஷயங்களில் கிளைவ் செய்த சீர்திருத்தங்கள்**

கம்பெனியின் ஸிவில் ராணுவ விஷயங்களில் சீர்திருத்தங்களைச் செய்தது கிளைவின் கீர்த்தி வாய்ந்த கடைசி நற்செயலாகும். ஆங்கில உத்தியோகஸ்தர்கள் தனியே தாமாகவே வியாபாரஞ் செய்வதையும், டஸ்தூரி வாங்குவதையும் நிறுத்த முதன்முதல் முயன்றவர். அவன் ஆங்கிலச் சபைக்குள் ஏற்படுத்திய †பொறுக்குக்கழகத்தைத்தான் செய்யும் சீர்திருத்தங்களுக்கு உதவும் கருவியாகக் கொண்டான்; பரிசுவாங்குவதை நிறுத்தக் கம்பெனியாரிட்ட கட்டளைகளை உறுதியுடன் செலுத்தினான். இந்தக் கட்டளைகள் யாவும் கிளைவின் ஜாகிரைப்பற்றிய சச்சரவுகளினின்று தோன்றின; புதிய இச் சட்டங்களைக் கிளைவ் செலுத்தியதால் பலரும் அவனைக் குற்றஞ் சாட்டினர்: வங்காள ஸிவில் உத்தியோகஸ்தர்களும் அவனைப் பெரிதும் வெறுத்தனர். கிளைவ், சபையிலேற்பட்ட காலியிடங்களுக்கு வங்காள உத்தியோகஸ்தர்களின் உரிமைகளைப் புறக்கணித்துச் சென்னையிலிருந்து உத்தியோகஸ்தர்களைக் கொணர்ந்து வேலையிலமர்த்தினான்; தன் கருத்துக்கு மாறுக எதிர்ந்தவர்களைத் திடமுடன் ஒடுக்கினான். ஆனால், உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களை உயர்த்தும் விஷயத்தில் மட்டும் டைரக்டர்கள் இவன் பக்கல் சேரவில்லை. இதற்கு மாற்றாக, கம்பெனியின் உயர்தர உத்தியோகஸ்தர்களுக்குக் கிரமப்படுத்திய பங்குகளின் மூலம் உப்பு வியாபாரத்தில் தனியுரிமை யீந்தான். இந்த ஏற்பாட்டின் உண்மைத் தத்துவத்தை யுணராத டைரக்டர்கள் இதற்கு உடன்படவில்லை. ஸிவில் விஷயங்களில் கிளைவ் செய்த சீர்திருத்தங்கள் பின்வருமாறு:— (1) பரிசுகளையும் மேல் வரவுகளையும் வாங்காது அறவே யொழித்தல். (2) சுங்கமின்றிச் சரக்குகளை எடுத்துப் போகும் உரிமையினின்று சிலரை மட்டும் கட்டுப்படுத்தல். (3) உத்தியோகஸ்தர்கள் பிரத்தியேக வியாபாரஞ் செய்யாதபடி கட்டுப்படுத்தல். (4) உப்பு வரியின் தனியுரிமையால் பெறப்பட்ட வருமானத்தின் ஒரு பகுதியை உத்தியோகஸ்தர்களுக்கு ஒரு சிறிது ஈடாகுமாறு கொடுத்தல். (5) சபையினங்கத்தினரை கிராமாந்தரங்களில் ஏஜெண்டு பதவிகளை வகிக்காதபடி தடை செய்தல்.

**கிளைவின் ராணுவ சீர்திருத்தங்கள்**

கிளைவின் ராணுவ சீர்திருத்தங்களும் மிக முக்கியமானவை. மீர்ஜாபர் தனக்குதவியாய்ப் போர்க்களத்தில் ஆங்கிலத் துருப்புக்கள் சண்டையிட்டு வந்த வரையில் ‡இரட்டைப்படி கொடுத்து வந்தான். மீர்காஸிமும், இம்முறையைக் கையாண்டு வந்ததுடன், அதற்காகக் கம்பெனிக்கு மூன்று ஜில்லாக்களின் வருமானத்தையும் கொடுத்தான். டைரக்டர்கள் இந்த இரட்டைப் படியைநிறுத்துமாறு கிளைவுக்கு ஆணை பிறப்பித்தனர். கிளைவ் அப்படியே செய்ய, ஒரே நாளில் சுமார்200 உத்தியோகஸ்தர்கள் வேலைகளை ராஜிகாமா

† Select Committee. ‡ Double batta.

* J. Talboys Wheeler: Early Records of British India, p. 351.

செய்தனர். இப்படிச் செய்தால் கிளைவ் தங்கள் கோரிக்கைக்குப் பணிவ னென்பது அவர்களெண்ணம். கிளைவ் அவர்களது ராஜிகாமாக்களை அங்கீகரித்ததுடன் அவர்களையும் சிறையிட்டு அவர்களிடங்களுக்குச் சென்னையிலிருந்து புதிதாக மனிதர்களை வரவழைத்து நியமிக்கலாயினன். நிகழும் போலிருந்த கலகத்தையும் இரண்டு வாரங்களில் அடக்கினன். பரிசுகளையும் மேல் வரவுகளையும் வாங்கக் கூடாதென இட்ட கட்டளையால் தோன்றிய . கீழ்ப்படியாமை இயக்கத்தையும் தீவிரமாக ஒடுக்கினன். அவன், வங்காளச் சேனையை மீண்டும் ஒழுங்குப்படுத்திப் பண்புறச் செய்ய முயன்றான் ; மற்றும், அவன் • காயம்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கும், போரிலிறந்தோரின் விதவைகளுக்கும் உதவி நிதியொன்று ஏற்படுத்தினன்.

இந்தியாவில் கிளைவ் செய்யவேண்டிய வேலைகள் முடிவடைந்தன. அவர் கேள அரசாங்கரியத்தினால், 1767 முதலில் இங்கிலாந்துக்குப் பிரயாண மாயினர். அங்கு முதன்முதலில் டைரக்டர்களும் மந்திரிகளும் அவரை மிக்க கௌரவத்துடன் நடத்தினர். சிலகாலம் கிளைவ் பார்லிமெண்ட் கட்சி விவகாரங்களில் தலையிட்டுக் கொண்டபின் 'கட்சி விவகாரங்கள் பேரரசு விவகாரங்களோடு எஞ்ஞான்றும் பொருந்துவன வல்ல' என்பதை யுணர்ந்து, எந்தக் கட்சியிலும் சேர மறுத்தனர். ஆனால், அவர்க்கு டைரக்டர்களிற் பலரும், கம்பெனி உத்தியோகத்தை விட்டுவந்தவர்களிற் பலரும் விரோதிகளாயினர். அவர்கள் கிளர்ச்சி செய்து, 1772-இல் காமன்ஸ் சபையினரைக் கிளைவினது நடத்தையையும் செயல்களையும் பற்றி விசாரணை நடத்தும்படி தூண்டினர் : ஏனெனில், அவர் செயல்களிற் பெரும்பாலன அக்கிரமமானவை. கிளைவ் இத்தகைய எதிர்ப்புகளுக்குப் பணிந்துபோகுபவரல்லர் ; அவர் ஒரு சொற்பொழிவில் தன் தற்காப்புக்காக வாதித்தபோது சாதாம் பிரபுவே ஆச்சரியப்பட்டார். அவர்மேற் சாட்டப்பட்ட முக்கியமான குற்றங்களாவன :—ஸிராஜ் உத்தௌலாவோடு மேற்கொண்ட நடவடிக்கைகள் ; கற்பிதமான உடன்படிக்கையால் அமின் சந்தை ஏமாற்றியது ; வியாபாரத் தனி உரிமைகளாலும் வேறு வழிகளாலும் பெருத்த பணம் சம்பாதித்தது முதலியன. கிளைவ் பணம் சம்பாதிப்பதில் "தம்மிடம் ஒப்படைத்த அதிகாரங்களைத் தீய வழியிற் செலுத்தினர்" எனக் காமன்ஸ் சபையினர் தீர்மானித்தனர் ; ஆனால், அவர்க்கு எதிரிடையாக *நிந்தனை வாக்குக் கொடுக்க மறுத்தனர் ; கடைசியில், அவர் தம் தேசத்திற்காகப் புகழ்வாய்ந்த அரும்பாடுகள் பட்டுள்ளனரென அவர்களே தீர்மானங் கொணர்ந்தனர். காமன்ஸ் சபையில் கிளைவைப் பிடித்த துன்பம் இரண்டு வருஷங்கள் வரை விடவில்லை. நோயினால் மிக வருந்தி உள்ளக் கிளர்ச்சிகுன்றி, கிளைவ் ஒரு சமயம் வேதனை பொறுக்கமாட்டாமல் தற்கொலை செய்து கொண்டார். (நவம்பர், 1774).

**கிளைவ் இங்கிலாந்துக்குப் போதல் (1767)**

**அவர் செயல்களைப் பற்றிப் பார்லிமெண்ட் விசாரித்தல் (1772-74)**

**அவர் இறத்தல் (1774)**

* Vote of Censure.

கிளைவ், தாம் மேற்கொண்ட நடவடிக்கைகளில் தீய வழிகளிற் சென்றுரென்றும், தமது இரண்டாம் முறை ஆட்சியில் வங்காளத்தில் தாம் வந்த காரியத்தை நன்கு நிறைவேற்றவில்லையென்றும் சில அபிப்பிராயங்கள் நிலவியபோதினும், இந்தியாவிலுள்ள ஆங்கில ராஜ்யத்துக்கு அவர் புரிந்துள்ள சேவைகள் சந்தேகமின்றிப் பாராட்டத் தக்கன. அவர் ஆற்காட்டைக் கைப்பற்றித் காத்தமையும், 1751-52-இல் லாரன்ஸோடு சேர்ந்து திருச்சிராப்பள்ளியைச் சூழ்ந்து தீவிரமாகச் சண்டையிட்டமையும் டுப்ளேயின் எண்ணங்களை முதலிலேயே பழுது படுத்தின. அவர் ஜெனரல் லாரன்ஸினிடமிருந்து போர்த்திறனையும், கவர்னர் ஸாண்டர்ஸினிடமிருந்து அரசியல் தந்திரங்களையும் விரைவில் கற்றுக் கொண்டார்; டுப்ளேயின் தப்பான உபாயங்களையும், தவறுகளையும் கண்டுணர்ந்து, அவ்வறிவால் பெரும் பயனடைந்தார். 1756-இல், இங்கிலாந்திலிருந்து அவர் திரும்பி வந்தபின்பு, அவர் மராட்டியரோடு சேர்ந்து பம்பாய்க் கரையிலுள்ள கெரியா என்ற கடற்கள்ளரின் முக்கிய ஸ்தலத்தை ஒடுக்கினர். பிளாஸி வெற்றியால், அவர் வங்காளத்தில் ஆங்கில ஆதிக்கத்தை நிலைநாட்டிப் பிரெஞ்சுக்காரரைக் கர்நாடகத்திலும் வடசர்க்காரிலும் கடைசி முறையாக நசுக்குவதற்கும் வழிதேடினர். இந்தியாவில் ஆங்கில ராஜ்யம் வங்காளத்திலிருந்துதான் பரவியது. வங்காள நவாபின்மேல் ஆங்கிலேயரது ஆதிக்கத்தை நிலைநாட்டும்போது, கிளைவ் கர்நாடகத்தில் டுப்ளே செய்ததுபோல் தவறுகளையும் அளவு கடந்த செயல்களையும் செய்யாதபடி ஜாக்கிரதையாயிருந்தார். ஆங்கிலேயர்க்குப் புதிதாக ஏற்பட்ட அந்தஸ்தினால் விளையக்கூடிய ஆபத்துக்களையும் அவர் மறந்தாரிலர். 1760-இல் இங்கிலாந்துக்குத் திரும்பிய வுடன், டைரக்டர்கள் சபையில் தாமும் சேர்ந்து, அவர்களை, இந்திய அரசியலைப் புத்தி சாதுரியமாக நடத்தும்படியும், அரசியல் முறையை மீண்டும் ஒழுங்குபடுத்தும்படியும் செய்விக்க முயன்றார். அவர் வங்காளத்தில் இரண்டாமுறை கவர்னராயாண்டபோது, அயோத்தியை ஒரு வலிய இடைப்படு நாடாக ஆக்கித் தெளிவுபட்ட எல்லைப்புற நோக்க முறையை வெளியிட்டார். அவர், வங்காளத்தில் ஆங்கில அதிகாரம் சட்ட முறைப் படியமைந்த தொன்றென நிறுவ முயன்றார். கம்பெனியிலுள்ள ஸிவில் ராணுவ உத்தியோகஸ்தர்களில் சில சீர்திருத்தங்களும் செய்ய முயன்றார்.

**இந்தியாவில் ஆங்கில ராஜ்யத்திற்காகக் கிளைவ் செய்த சேவைகள்**

**அவரது தெளிவான எல்லைப்புற நோக்க முறையும் சீர்திருத்தங்களும்**

இது முதற்கொண்டுதான் ஆங்கிலக் கம்பெனியார் அதிகாரத்தின் மேல் அதிகாரம் வகிக்கத்தலைப்பட்டு அரசியல் நுணுக்கங்களில் மிகுதியாகத் தலையிடலா யினர். கிளைவ் அரசியல் நிர்வாகத்தில் சாதுரியமுடையராயிருந்த தன்றியும், பின் நிகழ்வனவற்றை முன்னரே கணித்தறியும் அரச தந்திரி யாகவும் இக்காலத்துத் துலங்கினர். அவரது ராணுவ நிபுணத்துவம் மிக

**அவரது ஆற்றல்**

உயரிய நிலையினதாகும்: சாதாம் பிரபு அவரைப் பிரஷியா தேசத்து *'மேன்மை மிக்க பிரெடரிக்' கோடு ஒப்பிட்டுக் கூறினர்.‡

## பகுதி 3: வங்காளத்தில் ஜமுலாட்சி (1767-1772)

கிளைவ் போனது முதல் 1772-இல், வாரன்ஹேஸ்டிங்ஸ் கவர்னராய் வரும் வரையில், வெரெல்ஸ்ட்டும் அவர்க்குப் பின் கார்ட்டியரும் கவர்னராயிருந்தனர். அவர்களது பலவீன ஆட்சியில் மக்கள் பெரும் துன்பமடைந்தனர். இதற்குக் காரணம் கிளைவின் இருதலைப்பட்ட ஆட்சியாலேற்பட்ட குறைபாடுகளேயாகும்: ஆனால் ஆங்கிலேயராலேயே ஆளப்பட்டு வந்த நான்கு ஜில்லாக்களில் (24 பர்க்கானாக்கள், வர்த்தமானபுரம், மிதுனபுரி, சிட்டகாங்) இக்குறைபாடுகளில்லை; அரசாட்சியில் நவாபுக்கும் பங்குண்டென்பது அபத்தமாகும்; அவனது உத்தியோகஸ்தர்கள் அம்மாகாணங்களுக்குப் புதியவராதலின், மக்களைத் துன்புறுத்தும் ஜமீன்தார்களுக்கே உதவிபுரிந்து வந்தனர். ஆங்கிலேயரும், சர்வ காரியத்தையும் நிஜாமத்தின் பேரிலேயே நடைபெற விடுத்தனர். டைரக்டர்களே நிஜாமத்தின் விவகாரங்களில் தலையிடக் கூடாதென விதித்தனர்; முர்ஷிதாபாத்தில் ஒரு ஆங்கிலேய ஸ்தானிகரை நியமித்தனர்; ஆனால், அவரால் ஒன்றும் செய்ய இயலவில்லை. விவசாயிகளிற்பலர் வரிப் பிடுங்கல்களுக்கு ஆற்றாது தமது நிலங்களைக் கைவிட்டுக் கொள்ளே யடிக்கத் தலைப்பட்டனர்.

**ஜமுலாட்சி திரும்பும் எழும்பல்**

**நாட்டின் சீர்கேடு**

1769-இல், செவின்யூ அரசியல் துறையில் அறிவற்ற ஆங்கிலச் சிறுவர்களைச் சுதேச செவின்யூ உத்தியோகஸ்தர்களின் †மேற்பார்வையாளராக நியமித்தபோது, அவர்களும் பணம் பறிக்கலாயினர்.

ஆங்கில உத்தியோகஸ்தர்கள் தங்களது பிரத்தியேக வியாபார உரிமைகளைச் சரிவர உபயோகிக்கவில்லை; எனினும், அவர்கள் உப்பு, வெற்றிலைப்பாக்கு மற்றும் இதர சரக்குகள் இவைகளின் மேல் பெற்ற வியாபாரத் தனி உரிமையை அனுபவித்து வந்தனர்; அவர்களது ஏஜெண்டுகள் மீர்காஸிம் காலத்தில் செய்ததுபோல மக்களைத் துன்புறுத்தி வந்தனர். டெப்டி நவாபாயிருந்த முகம்மது ரஸாகானலும் அவனது அதிகாரிகளாலும் இந்தப் பிரத்தியேக வியாபாரத்தை நிறுத்த மூடியவில்லை. கும்மாஸ்தாக்களின் அக்கிரமங்களைத் தடுக்கவும் முடியவில்லை. 1769 வரையில் கவர்னராயிருந்த வெரெல்ஸ்ட் இந்தக் குறைபாடுகளை யெல்லாம் கண்டு, இந்த அரசியல் சீர்கேட்டின் காரணங்களை ஓர் அறிக்கையில் வெளியிட்டார்.

**ஆங்கிலேயர் லீமித்தல்**

ஆண்டுதோறும் வங்காளத்தினின்று பெரும் பணத்தைக் கம்பெனி சுரண்டலாயிற்று. கம்பெனியின் உள்நாட்டு வியாபார நிமித்தம் சரக்குகளனுப்பிய சீனவுக்கும் இதர நாடுகளுக்கும் பொன் கட்டிகள் ஏராளமாய் ஏற்றுமதியாயின. மூன்று வருடங்களுக்குள் 50 லட்சம் பவுன்களுக்கு மேற்

**நாட்டின் செல்வம் வெளியேறல்**

---

* Frederick the Great.

† Supervisors.

‡ For a fuller estimate of Clive's achievements etc. see Dodwell pp. 270—2, Forrest's Life of Lord Clive Vol. II, p. 342: Malcolm's Life of Clive, Vol. III, chap. XVIII: and Mill:—Book IV, chaps. VII and IX—K. J. Minney: Clive.

பட்ட மதிப்புள்ள பொற்கட்டிகள் வங்காளத்தினின்று வெளியேறின. இதனால் நாட்டில் நாணயங்கள் அரியவாகவே, வியாபாரம் பல இன்னல்களுக்குட்பட்டு அழியலாயிற்று.

கார்ட்டியர் கவர்னராயிருந்த காலத்து (1769-71) ஒரு கொடிய பஞ்சம் வங்காளத்தைப் பாழ்படுத்தியது; ஜனத்தொகையில் மூன்றிலொரு பங்கு இறந்தனர். பிஹாரில் அதன் கொடுமை மிக்க தீவிரமாயிருந்தது: பிஹாரில் டெப்டி கவர்னராயிருந்த ராஜா ஷிடப் ராய், தினந்தோறும் பாட்னா தெருக்களில் 50 பேருக்கு மேல் இறந்தனரென்றும், சில சமயங்களில் இத்தொகையின் மும்மூடங்குக்கு மேலும் இறந்துபோயினரென்றும் கூறியுள்ளார். ஸர் W. W. ஹண்டர் இப்பஞ்சத்தின் விளைவுகளைப் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்:—"விவசாயிகள் தங்கள் ஆடுமாடுகளை விற்றனர்; தங்கள் உழவுக் கருவிகளையும் விற்றனர்; விதைக்காக வைத்த தானியங்களையும் உண்டனர்; தங்களது பிள்ளைகளையும் பெண்களையும் அபரிமிதமாக விற்று விட்டமையால், குழந்தைகளை வாங்குவோரும் அரிதாயினர், அவ்விவசாயிகள் இலைகளையும் புல்லையும் தின்றனர்: 1770ஐ ஜூன்மீ. மூர்ஷிதாபாத்திலிருந்த ஸ்தானீகரும் உயிருடனிருந்தோர் இறந்தோரைத் தின்று பிழைத்தனரெனவும் கூறினர்.* பஞ்சத்தோடு நில்லாமல், ஜுரமும் பெரியம்மையும் பெரு நகரங்களில் உண்டாயின: மூர்ஷிதாபாத்தின் தெருக்களிலெல்லாம் இறந்ததும் இறந்துகொண்டிருப்பதுமான ஜனக்குவியல்கள் சிதறிக் கிடந்தன. 1770-இன் முடிவில் பஞ்சம் தீர்ந்தது; அடுத்த பருவக் காற்றில் மிகுதியான பயிர் அறுவடையாயிற்று. எனினும், இப்பஞ்சத்தாலேற்பட்ட சேதம் மிக அதிகமாகும். ஜனத்தொகையில் மூன்றிலொரு பங்கும் விவசாயிகளில் பாதிபேரும் அழிந்தனர்; 1771-இல் மிக்க தானியங்கள் விளைந்தபோதினும் பல நிலங்கள் பயிர் செய்யப்படாமலேயே கிடந்தன. ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள், "மாகாணத்தின் வளமுள்ள பகுதி பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு மக்களின்றியும், நிலங்கள் கைவிடப்பட்டும், நில வருமானங்குன்றியும்" இருப்பதைக் கண்டனர்.

**கொடிய பஞ்சம்—1770**

**அதன் கொடுமை**

**அதன் விளைவுகள்**

நிலைமை யிவ்வாறிருந்தும், நிஜாமத்தைச் சேர்ந்த இந்திய உத்தியோகஸ்தர்கள் குடியானவர்களையும் ஜமீன்தார்களையும் ஒரு சேர நசுக்கலாயினர்: மற்றும் அவர்கள் பல காரணங்கள் காட்டி ஜமீன்தார்களுடைய மரபொடுபட்ட உரிமைகளையும் பூஸ்திதிகளையும் அடிக்கடி விற்று வந்தனர். ஆங்கிலேயர் தங்கள் வியாபாரத் தனி உரிமைகளைச் சரிவரச் செலுத்தாத தனால் மிகவும் பெயர்போன வங்காளப் பட்டுக் கைத்தொழில்கள் முற்றும் அழிந்துபோயின.

**கஷ்டங்களை யுணராத அரசியல்**

வெரெல்ஸ்ட் பயிரிடுங் குடிகளை ஜமீன்தார்களிடமிருந்து காப்பாற்றவும், நிலவரி வசூலிப்போரை ஆங்கில மேற்பார்வையாளரைக்கொண்டு

* Annals of Rural Bengal (1868) p. 26; and Wheeler: Early Records of British India.

ஒடுக்கவும் யோசனை செய்திருந்தார். ஆனால், கார்ட்டியர் முக்கியமாக ஒன்றும் செய்யவில்லை. முடிவில் டைரக்டர்கள் தங்கள் கடமையை நன்குணர்ந்து, கம்பெனியின் பழைய உத்தியோகஸ்தனையும், அக்காலத்திய சென்னைச் சபையில் இரண்டாமிடத்தை வகித்தவனுமிருந்த **வாரன்ஹேஸ்டிங்ஸை** வங்காள கவர்னராக நியமித்தனர்; அவன், 1772-இல் அவ் வேலையை ஏற்றுக்கொண்டான்.

**ஹேஸ்டிங்ஸ் ஆட்சிக்கு இக்காலம் ஒரு ஆரம்பமாகுதல்**

1767 முதல் 1772 வரையிலும் உள்ள காலம் ஹேஸ்டிங்ஸ் ஆட்சிக்கு ஆரம்பமாகும்; ஹேஸ்டிங்ஸ் காலத்தை, "இந்தியாவில் ஆங்கிலேயரின் வரலாறு உருவடைந்த காலமெனக் கூறலாம். அவரது கவர்னராட்சியில் நடந்த மறக்கலாகாச் சம்பவங்களுக்கு அடிப்படை இக்காலத்தே போடப்பட்டதெனலாம்.† மராட்டியர்கள் மூன்றும் பானிபட் யுத்தத்தின் தோல்வியினல் உண்டான கேடுகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய்த் தேறிக் கங்கை யமுனை இடைநிலப் பகுதி (தோஆப்) விவகாரங்களில் மஹத்ஜிஸிந்தியாவின் மூலமாய்த் தலையிடலாயினர். இவர்கள் தூண்டுதலினல் முகலாயச் சக்கரவர்த்தி ஆங்கிலேயரின் ஆதரவைத் திரஸ்கரித்து, அலஹாபாத்தை விடுத்து, மராட்டியருடன் டில்லிக்குச் சென்றார். சிறு கலகங்கள் செய்யப்பட்டபோதிலும் ஷுஜா உத்தௌலா, தான் ஆங்கிலேயரிடம் கொண்டிருந்த நட்பில் சிறிதும் தளராதிருந்தான். ஆனல், ஓரிஸ்ஸாவின் மீது தன் ஆதிக்கத்தைநிறுவின நாகபுரி யரசனன பான்ஸ்லே ஆங்கிலேயருக்குத் தொந்தரவு விளைத்து வந்தான். மற்றும், கம்பெனியார் அரசாட்சியின் ஒருபாகத்தைத் தாமே மைக்கொள்ள ஆரம்பித்தனர். பெயரளவிலேயிருந்த நவாப் பொம்மை போலாடினன். பார்லிமெண்டும் இந்தியாவில் கம்பெனியார் செலுத்தி வந்த அரசியலில் தீவிரமாகத் தலையிட ஆரம்பித்தது.

---

# அத்தியாயம் 7

## சென்னையில் ஆங்கிலேயரது வரலாறு: கர்நாடகமும், மைசூரும்.

### பகுதி 1: சென்னை அரசாங்கத்தின் கஷ்டங்கள்

**ஆங்கிலேயரும் நவாப் முகம்மது அலியும்**

தென்னிந்தியாவில் ஆங்கிலேயர் புதுச்சேரியைக் கைப்பற்றியதால் மிகவும் உன்னத நிலையை யடைந்தனர். அவர்கள் கர்நாடகத்தில் தங்கள் அதிகாரத்தை ஸ்திரமாக நிலை நிறுத்தினர். கர்நாடக நவாபாகிய முகம்மது அலி அவர்கள் கையில் பொம்மை போலாடினன். கர்நாடகத்தின் பாதுகாப்பு சென்னை கவர்மெண்டாரின் பொறுப்பாயிற்று. அது நவாபின் வருமானத்தைக் கொண்டுதான் பெருத்த சேனையைப் பாதுகாக்கவேண்டியிருந்தது. நவாப் அளவுக்கு மிஞ்சி வீண் செலவு செய்ததனல் கடன்காரனனன். பெரும்பாலும் ஒவ்வொரு ஜில்லாவிலும் அவனுடைய வருமானங்கள் பாக்கியாய்க் கிடந்தன. அவனுடைய உத்தியோகஸ்தர்களிற் பலர் அவன் அதிகாரத்தை எதிர்த்துக் கலகம்

† Cambridge History of India, Vol. 5, p. 160.

செய்யலாயினர். ஆங்கிலேயர் அவனிடமிருந்து சென்னை ஜாகிர் என வழங்கி வந்த செங்கற்பட்டு ஜில்லாவைப் பலாத்காரமாகப் பெற்றுக் கொண்டனர் (1763). மற்றும், அவர்கள் நவாபினுடைய நன்மைக்காகவே தாங்கள் பிரெஞ்சுக்காரருடன் சண்டை செய்ததாகக்கூறி, அச்சண்டையி னலேற்பட்ட செலவுகளை அவனே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் சொன்னது மல்லாமல் இன்னும் அதிகமாகவும் கொடுக்கும்படி அவனைப் பலவிதங்களில் கேட்டனர்.

வங்காளத்தில் ஆங்கிலேயர் ஒரு வெற்றியிலேயே இராணுவ மேன் மையை யடைந்தனர். ஆனல் அத்தகைய மேன்மையைச் சென்னையில் பெறுவதற்குப் பிரெஞ்சுக்காரருடன் வெகு காலம் சண்டை செய்ய வேண்டியதாயிற்று. வங்காளத்தில் வியாபாரம் மிகவும் இலாபகரமா யிருந்தது. ஆங்கிலக் கம்பெனியும் அதன் உத்தியோகஸ்தர்களும் தங்கள் சரக்குகளுக்குச் சுங்கவரி செலுத்தா உரிமையைப் பெற்றிருந்தனர். பிரெஞ்சுக்காரரை வீழ்த்திய பிறகு கர்நாடகம் ஆங்கிலேயருக்கு மிக முக்கியமாகத் தோன்றவில்லை. அதன் தெற்கிலும் மேற்கிலுமிருந்த ஜில் லாக்களில் பல, அடங்காமற் கலகம் செய்து வந்த பாளையக்காரர்கள் கைவசமிருந்தன. அவர்களை ஆங்கில இராணுவ உதவியினலேயே அடக்க வேண்டியிருந்தது. வங்காளத்தில் நவாபாயிருந்த மீர்காஸிம் பலமும், திடமனமும் உடையவன். அவன் கல்கத்தாவிலுள்ள ஆங்கிலப் பேரதி காரத்தினின்று விடுபட்டுத் தன்னைப் பலப்படுத்திக்கொள்ள எண்ணி, அரசியல் ஸ்தானத்தை மங்கீருக்கு மாற்றிக்கொண்டான். ஆனல் கர் நாடகத்திலோ முகம்மது அலி தன்னுடைய தலைநகராகிய ஆற்காட்டை விட்டுவிட்டுச் சென்னையில் ஆங்கிலேயரிடை வசிக்கலாயினன். கம் பெனிக்குச் சேரவேண்டிய தொகைகளை அவன் நேர்மையாகக் கொடுக் காமல் மேன்மேலும் கடன் வாங்கி, கடன் கொடுத்த ஆங்கிலேயருக்குத் தன் வருமானத்தை ஈடு கட்டினன். முடிவில் அவன் இராஜ்ஜிய வரு மானம் முற்றும் அவர்களுக்குச் செல்லலாயிற்று. அவன் ஆங்கிலேயரிடம் மிகுந்த வட்டிக்கே கடன் வாங்கியிருந்தான். அதற்கு அவன் காட்டிய நியாயம் பின்வருமாறு: தான் இந்தியர்களிடமிருந்து கடன் வாங்கியிருந்தால் இன்னும் அதிக வட்டி கொடுக்க வேண்டியிருக்கும் என்பது.

**நவாபின் கடன்கள்**

1766-இல் கம்பெனி, நவாப் கொடுக்கவேண்டிய வட்டியைக் குறைத்து 10 சதவீதமாக்கினர். ஆனலும் நவாபினுடைய கடன் ஏறிக் கொண்டே வந்தது. இதனல், கடன் கொடுத்த ஆங்கிலேயர் மிக்க இலாபத்தை அடைந்தனர். சென்னைச் சபை அங்கத்தினரிற் பெரும்பாலோர் அவனுக்குக் கடன் கொடுத்தவராதலின் அவர்களைத் தீய வழியில் திருப் பித் தஞ்சாவூர் அரசனை வற்புறுத்துமாறு தெரிவித்தனர்.

**தஞ்சையில் தலையிடு**

நவாப், தஞ்சாவூர் அரசன் தனக்குக் கொடுக்கவேண்டிய [illegible]பத்தை வெகு காலமாகச் செலுத்தாமல் நிறுத்திவிட்டதால் அவ்வரசைக் [illegible]ள்ள யிடவேண்டுமென்று ஆங்கிலேயரிடம் [illegible]விக் தான். தஞ்[illegible] அரசனுடைய பிரதாப் [illegible]கை, ஆங்கிலேயர் கோரிய பணத்தொகை கொடுக்கும்படி

யாகவும், வருடந்தோறும் கப்பம் செலுத்தும்படியாகவும் வற்புறுத்தினர். தஞ்சை அரசனது இராஜ்ஜியத்தில் ஓடும் காவிரியாற்றின் அணையைப் பழுதுபார்க்கும் விவகாரத்தில் நவாப் அவ்வரசனோடு சண்டையிடலா யினன். இச்சண்டையையும் ஆங்கிலேயரே தீர்க்கவேண்டியதாயிற்று.

பிறகு நவாப் வேலூரிலிருந்த மூர்கிஸா அலி, யூசப்கான் ஆகிய இரண்டு கலகக்காரர்களையும் அடக்கும்படி ஆங்கிலேயரை வேண்டினன். [இந்த மூர்கிஸா அலி என்பவன் சந்தாசாஹிபுக்கு உற வினன்; அவனுக்கு எதிரியும் ஆவன்: டேப்ளே நிய மித்த பொம்மை நவாபுகளில் இவன் இறுதியாவன்]

**யூசப்கானை யொடுக்குதல்**

யூசப்கான் ஹிந்துவாயிருந்து பின்பு முகம்மதியனாகியவன்: மிக்கதைரியம் படைத்தவன். அவன் மதுரைக்கும் திருநெல்வேலிக்கும் கவர்னராயிருந் தான். இந்த யூசப்கான் கம்பெனி வேலையிலமர்ந்த சிப்பாய்களுக்குத் தலைவ னாயிருந்து ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரரோடிட்ட சண்டைகளில் பெரிதும் உதவினன். அவன் தெற்கே யிருந்த பாளையக்காரர்களை யடக்கியது மன்றி முரடர்களான மறவர்கள் வாழ்ந்த சிவகங்கை இராமநாதபுரம் பிரதேசங்களையும் பாழ்படுத்தினன். மற்றும் அவன் வெகுதொலைவில் ஆண்டு வந்த திருவாங்கூர் அரசனிடமிருந்தும் கப்பம் பெற்றான். துர திஷ்டவசமாக அவன் நவாபுக்கு எதிரே கலகஞ் செய்ததால் ஒரு ஆங்கிலப் படை மதுரையில் அவனை முற்றுகையிட்டுப் பிடித்துக்கொன்றது. மால் காம் என்ற சரித்திரப் பேராசிரியர், "இந்தியாவில், ஆங்கிலேயருக்காக ஊழியஞ் செய்த இந்திய சிப்பாய்களுக்குள் அவன் தான் மிக்க வீரமும் திறமையும் படைத்தவன்" எனக்கூறுகின்றனர்.* ஆனால் இரு கலகக்காரர்களை அடக்கியும், நவாப் எண்ணிய அளவும் கம்பெனி விரும் பிய அளவும் பலன் கிடைக்கவில்லை. இதன் பிறகு நவாபின் உத்தியோ கஸ்தர்களால் மதுரையும் திருநெல்வேலியும் ஆளப்பட்டபோது பழைய கலவரம் திரும்பவும் தோன்றியது.

வங்காளத்தில் ஆங்கிலேயர் திவானியைப் பெற்றதுமல்லாமல் நிஜாமத்தையும் அபகரித்துக் கொண்டனர். சென்னையிலோ முகம்மது அலியே கர்நாடக திவானாகவும், நஜீமாகவும் இருந்தான். எனினும் உண் மையில் கம்பெனியே சர்வாதிகாரமும் பெற்றிருந்தது. நவாப் தன் பிரதே சங்களில் பல பாகங்களை ஆங்கிலேயரிடம் அடகு வைத்திருந்தபோதினும் ஆங்கிலேயர் அப்பாகங்களின் ஆட்சியைத் தாங்களே நேரிற் செலுத்த வேண்டுமென்று ஆவல்கொள்ளவில்லை. தங்களுக்கு ஸாரோக வீடப் பட்ட ஜில்லாவின் வருமானத்தையும் நவாபினிடமே குத்தகைக்கு விட்டு விட்டனர்.

அலஹாபாத் உடன்படிக்கையின் ஒரு ஷரத்தின்படி நவாப் முகம்மது அலி, நிஜாமின் ஆதரவிலேயே இதுவரை யிருந்ததிலிருந்து தவிர்க்கப்பட் டான்; மற்றும் முகலாயச் சக்கரவர்த்தி அவனுக்கு வாலாஜா எனும் பட்டமளித்தார். மற்றொரு ஷரத் தின்படி பிரெஞ்சுக்காரரிடமிருந்து 1758-59 இல்,

**ஆங்கிலேயரும் வடசர்க்காரும்**

* See for his life, S. C. Hill's Yusuf Khan the Rebel Commandant (1914)—chaps. 3, 8 and 15—and Nelson: The Madura Country. A Manual (1867)—Part III, chap. XI.

போர்டு என்பவரால் கைக்கொள்ளப்பட்டுச் சில வருஷங்கள் வரை குழப்ப நிலையிலிருந்த வடசர்க்கார் ஆங்கிலேயர்க்கு நியாய வுரிமையாகக் கிடைத்தது. அதனை 1759-இல், நிஜாம் ஆங்கிலேயர்க்கு ஒருவாறு அளிக்க, ஷா ஆலம் அதனை அவர்களுக்கே இனமாகக் கொடுத்தான். இதற்கு முன்புதான் ஸலபட்ஜங்கை அவனது சகோதரனை நிஜாம் அலி நவாப் பதவியினின்று நீக்கிப் பின்பு கொன்றமையுமாகும். இப் புதிய நிஜாம், ஷா ஆலம் ஆங்கிலேயருக்கு வடசர்க்காரைக்கொடுத்த இச்செயலை முதலில் அங்கீகரிக்கவில்லை. சென்னை கவர்மெண்டிற்கும் அவனிடம் விரோதித்துக்கொள்ள இஷ்டமில்லை; ஆதலால், அவர்கள் அவனுடன் தனியாக உடன் படிக்கை செய்துகொண்டனர். அதன்படி, அவர்கள் வடசர்க்காரை அவனிடமிருந்து பெற்றுக்கொண்டதாக வைத்துக்கொண்டு அதற்குப் பதிலாக அவனுக்கு வருடந்தோறும் கப்பஞ்செலுத்த உடன் பட்டனர். இந்த ஏற்பாட்டில் குண்டூர்ப்பகுதி சேர்க்கப்படவில்லை. அது நிஜாமின் தம்பியாகிய பஸலட்ஜங்குக்கு அவன் வாழ்நாள் பரியந்தம் ஜாகிராகக் கொடுக்கப்பட்டது. இருநிறத்தினரும் வேண்டியபோது பரஸ்பர உதவி செய்துகொள்ள உடன்பட்டனர். இந்தப் பரஸ்பர உதவியேற்பாடு மைசூரிலுள்ள ஹைதர் அலியின் அதிகார வளர்ச்சியைத் தடுப்பதற்காகச் செய்யப்பட்டதாகும். இது குறித்தேதான் 1766-இலேயே, நிஜாம், மராட்டியரோடு சமாதானஞ் செய்துகொண்டது மாகும்.

**நிஜாமோடு உடன் படிக்கை செய்தல் (1766)**

**பகுதி 2 : முதல் மைசூர் யுத்தம் (1767-69) : ஹைதரின் கிளர்ச்சி.**

ஸ்திர புத்தியற்ற நிஜாம் அலி தான் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி நடக்கவில்லை; இதனால் ஆங்கிலேயர்க்கு ஹைதரோடு போர் ஏற்பட்டது. ஆங்கிலேயர் ஹைதரிடம் விரோதம் பாராட்டியே வந்தனர்; அவனுக்கு எதிராகக் கர்னல் ஸ்மித் என்பவனையும் அனுப்பினர். ஆனால் ஆங்கிலேயர் அதிசயிக்குமாறு, ஹைதரும் நிஜாம் அலியும் தத்தம் படைகளோடு ஒன்று சேர்ந்தனர். ஆங்கிலேயர், நிஜாம் மராட்டியர் இவர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டால் வெற்றி யுறலாமென எண்ணினர். ஆனால், ஹைதர் மஹாராஷ்டிரர்களுக்குப் பரிதானம் கொடுத்துப் பிரித்தான்; பின்பு நிஜாம் அலியும் பிரிக்கப்பட்டான். இங்ஙன் ஆங்கிலேயர் தனியாக ஹைதரை எதிர்க்க நேர்ந்தது. இப் போர் முதல் மைசூர்யுத்தம் என வழங்கப்படும்.

**மைசூரோடு சண்டை தொடங்குதல்**

ஹைதரும் நிஜாமும் ஒன்றுசேர்ந்து கர்னல்ஸ்மித்தைச் செங்கம்மாவிலும் திருவண்ணாமலையிலும் தாக்கித் தோல்வியடைந்தனர். பகைவரது சிப்பாய்களைக் கர்நாடகத்தி லிருந்து துரத்தப் போதிய குதிரைப்படை ஆங்கிலேயரிடம் இல்லை. மற்றும் ஆங்கிலத் தலைவர்களுக்குள்ளேயே சிறு சண்டைகள் ஏற்பட்டன. ஹைதர் ஆங்கிலப் பீரங்கிகளின் அருகே வராமற் காத்துக்கொண்டான். இப்படி யிருக்க, நிஜாம் ஆங்கிலேயர்பக்கம்

**நிஜாமின் *மாற்ற நோக்கமுறை**

* Shifty Policy.

சேர்ந்து முன்னர் அவர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையைப் உறுதி செய்தான். ஏனெனில் அவன் ஹைதரின் உதவியால் ஆங்கிலேயரை நசுக்கிக் கர்நாடகத்தைத் தான் கைப்பற்ற எண்ணிய எண்ணம் பலிக்காது என்றும், ஹைதர் சுயநலத்திற்காகத் தன்னைப் பயன்படுத்திக் கொள்ள எண்ணியுள்ளானென்றும் உணர்ந்தான். ஆனால் நிஜாம் செய்துகொண்ட இந்த உடன்படிக்கையால் யுத்தத்தில் யாதொரு மாறுபாடும் ஏற்படவில்லை. பம்பாயிலிருந்துவந்த சேனையொன்று மங்களூரைக் கைப்பற்றியது; எனினும், ஹைதர் அதனை விரைவில் மீட்டான். பலங்குன்றிய நிஜாமையும், முகம்மது அலியையும், உடன் வைத்துக்கொண்டு ஆங்கிலேயரால் நினைத்தற்ற வெற்றிகளை அடைய முடியவில்லை. ஹைதர் அலியின் குதிரைப்படை கர்நாடகத்தைப் பாழ்படுத்தியதால், அவர்களது செல்வாதாரம் குன்றியது. ஒருசமயம் ஹைதர் பாரமஹால் பிரதேசத்தை (சேலம், கோயம்புத்தூர் பகுதிகள்)க்கொடுத்துச் சமாதானஞ் செய்துகொள்ள முற்பட்டான். ஆனால் ஆங்கிலச்சபையும், பேராசை மிக்க முகம்மது அலியும் இதற்கு உடன்பட வில்லை. ஆதலால் இறுதியில் ஹைதர் தைரியமாக எதிர்க்கத் துணிந்தனன்.

**ஹைதரின் போர்க் கருமங்கள்**

ஹைதர் திடீரென பெரும்படையுடன் பாரமஹால் பிரதேசத்திலிறங்கிக் காவிரிபள்ளத்தாக்கின் வழியே விரைந்து சென்று தஞ்சாவூரை யடைந்தான்: தஞ்சை அரசனைக் கப்பங்கட்டுமாறு செய்தான். பின்பு, கடலூரின் மூலம் திடீரென சென்னைக்கு அருகேவர ஆங்கிலசபை பீதியடைந்தது. இங்ஙன், ஹைதர் தலைமைபெற்றுத் தன்னிஷ்டப்படி உடன்படிக்கை நிபந்தனைகளிட்டான். இந்த யுத்தம் **சென்னை உடன்படிக்கை**யால் முடிவடைந்தது. இதன்படி அவரவர் ஜெயித்த நாடுகளையும் கைதிகளையும் திரும்பக் கொடுத்துவிட வேண்டும்; வேற்றுப் பகைவர் தாக்கும்போது இருவரும் ஒருவருக்கொருவர் பரஸ்பர உதவி செய்துகொள்ளவேண்டும். இந்த உடன்படிக்கையை முகம்மதுஅலி கோபத்துடன் மறுத்து உடன்படாதிருந்தான். ஹைதரும் அவனை மகிழ்ச்சியுடன் புறக்கணித்தான். இப்படிப்பட்ட அவமானமுள்ள உடன்படிக்கையைச் செய்துகொண்டதற்கு ஆங்கிலேயர் "போரிடுதற்குப் பணமின்மையால் சமாதானஞ் செய்துகொள்ள வேண்டியதாயிற்று" எனக் காரணம் காட்டினர். "போரின் நடைமுறை பொதுவாகத் திறமையற்றிருப்பினும், அது ஒரு சிறு தீமையே யன்றிப் பெருந்தீமை யாகாது; ஆனால், அதற்கு முன்னும் பின்னும் கைக்கொள்ளப்பட்ட பலனற்ற நிர்ணயிக்கலாகாத நோக்கமுறையே பெரிய தீமையாயிற்று."*

**சென்னையின்மேல் பாய்தல்**

**சென்னை உடன்படிக்கை**

---

* இக்காலத்துத் தென்னிந்திய விவகாரங்களும். மேற்கிந்திய விவகாரங்களும் ஒன்றோடொன்று பின்னிக்கிடந்தன; மராட்டியர், நிஜாம், ஹைதர் அலி, பம்பாய் சென்னையிலுள்ள ஆங்கிலேயர் இவர்களுக்குள் நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டன. மேலும், மூன்று சுதேச அதிகாரங்களும் ஒன்றையொன்று அழித்தலேயே கருதியிருந்தன.....இத்தகைய சந்தர்ப்பத்தில் ஆங்கிலேயர்க்கு எந்தக்கட்சியினரோடும் சண்டையிடாது தவிர்தலே சிறந்த வழியாகும்.....முதலாவதாக, சென்னை பம்பாய் ராஜதானிகளுக்குள் யாதானுமொன்றில் அவர்கள் அக்கறை செலுத்த நேர்ந்தது.....இரண்டாவதாக, சென்னை இராஜதானியின்

இக்காலத்தில் ஆங்கிலேயர்க்குப் பெருத்த விரோதியாயிருந்தவன் ஹைதர் அலியே. மைசூர் ராஜ்யம் முற்றும் அவன் தன்னடிப்படுத்தோங்கிய வரலாறு தெவிட்டா இன்பம் பயக்கும். மைசூர் ராஜ்யம் ஆதியில் விசயங்கர சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியா யிருந்தது. அந்த ராஜ்யம் அழிவுற்றகாலத்து மைசூர் பலமுற்றுச் சுமார், 1650-இல், தனியாட்சி நிறுவியது. அதனை ஆண்டவர் உடையார் வமிசத்தினர். அவர்கள் 1730-இல், தளவாய் (சேனைத்தலைவன்) தேவராஜ், மந்திரி நஞ்சராஜ் என்ற இருவர் சொற் படியொழுகி வந்தனர். ஹைதர் பங்களூர் கோட்டைக்குத் தலைவனாயிருந்த ஒரு போர்வீரனின் மகனவன். அவன் துணிச்சலுடையனதலின், நஞ்ச ராஜ் அவன் வீரத்தைக்கண்டு, அவனை ஒரு சிறு படையுடன் தேவனஹல்லி என்ற எல்லைப்புறக் கோட்டைக்குத் தலைவனக்கினன் (1749). நிஜாமும் மராட்டியரும் மைசூரைத் தாக்கியதால் ஹைதருக்குத் திறமைகாட்டிப் புகழொடு விளங்கச் சந்தர்ப்பமேற்பட்டது. இதற்குப்பின்பு, நஞ்சராஜ் திருச்சிராப்பள்ளியைச்சுற்றி நிகழ்ந்த ஆங்கில-பிரெஞ்சுப் போர்களில் தலையிட்டான்; ஹைதரும் அவனுடன் சென்று அப்போரில் கலந்து கொண்டான். முடிவில், அவன் திண்டுக்கல்லுக்குப் பவஜ்தார் ஆயினன் (1755). இவ்விடத்துக் குறிசை வீரர்களையும் ஏவலாட்களையும் திரட்டி, ஒழுங்கு பட்ட முறையில் கொள்ளையடிக்கத் தலைப்பட்டு, தோச்சிபெற்ற ஐரோப்பியரைக்கொண்டு ஒரு பிரங்கிப்படையும் ஆயுத சாலையும் அமைத்துக்கொண்டான். 1757-இலும், மீண்டும் 1759-இலும் மராட்டியர் மைசூர்மேல் படையெடுத்தபோது மைசூரைக்காக்க இவனை வரவழைத்தனர். 1759-இல், மராட்டியரைத் துரத்தியடித்தபின்பு, ஹைதர் தலைநகராகிய சீரங்கப்பட்டணத்துள் வெற்றியுடன் புகுந்தான். மைசூர் அரசர் அவனை வரவழைத்து ஜயங்கொண்ட ஹைதர்பஹதர் என்ற பட்டத்தை யளித்தார். சீக்கிரத்திலேயே ஹைதர் நஞ்சராஜைத் தொலைத்துத் தானே ராஜ்யபரிபாலனஞ் செய்பவனுயினன். இவனது பேராசைத்தைக் கண்ணுற்ற பிரெஞ்சுக்காரர் தாம் புதுச்சேரியிலிட்ட இறுதிப் போரில் தமக்கு உதவுமாறு ஹைதரை வேண்டினர். ஆனால் அவனுக்குத் தன் நாட்டில் உபத்திரவங்கள் ஏற்பட்டமையால் உதவி புரிய வரமுடியவில்லை. ஹைதர் புதிதாக மந்திரிப் பதவிக்குவந்த கண்டேராவை வீக்கித் தோற்கடித்துச் சிறையிலிட்டான். ஹைதர் மைசூர் அரசனுக்குப் பணிந்தவனாக நடித்தபோதிலும், உண்மையில் அதிகாரம் முழுவதையும் அபகரித்துக்கொண்டான். சீக்கிரத்தில் அவன் நாற்றிசையிலுமுள்ள நாடுகளை ஜெயிக்கத்தொடங்கி பெட்னூர் (அவன் அதற்கு ஹைதர் நகர் எனப் பெயரிட்டான்) மலபார், கோயம்புத்தூர், வடக்கே கிருஷ்ணை நதி வரையி

**ஹைதரின் எழுச்சி**

**அவன் திண்டுக்கல் மலைக்கோட்டையைக் கைப்பற்றல் (1755)**

**அவன் மைசூரில் ராஜ்ய பரிபாலனஞ் செய்தல்**

---

செயல்களுக்கு நவாப் வாலாஜாவின் நடவடிக்கை பெரும் தடையாயிற்று.....மூன்றுவதாக, இந்திய ஆங்கில அரசாங்கங்களில் இங்கிலாந்திலுள்ள மேலதிகாரிகள் தலையிடாமையில் வேகமாகவில், விஷயங்களைச் சரிவர உணர்ந்துகொள்ளாமலும், சரியான அதிகாரமின்றியும், பொதுவாக முன்னுலோசனையின்றியும் தலையிடலாயினர்"—H. H. Dodwell in The Cambridge History of India, Vol. V, p. 217—See also Wilkes; A History of Mysore (Madras ed. Vol. 1).

உள்ள ஜில்லாக்கள் ஆகிய இவ்விடங்களையும் ஜெயித்தான். அவன் தன் சக்தியினால் வெல்லமுடியாதவற்றை யுக்தியினால் வென்றான். 1766-இல் மைசூர் அரசனிறந்ததும், ஹைதர் தானே மைசூரின் அரசனெனப் பகிரங்கமாகக் கூறி, இறந்த அரசனின் பின்வந்தோனுக்கு அரசனெனும் பட்டத்தை மாத்திரம் வகிக்க அனுமதி கொடுத்தான். அவன் மைசூருக்கு அரசனானதுகண்டு, அவனுக்கு எதிராக மராட்டியர்களும் நிஜாமும் ஒன்று சேர்ந்து, அவனது இராஜ்ஜியத்தைத் தாக்கினர். (1767)*

அவன் பெட்னூர் முதலியவற்றை ஜெயித்தல்

மராட்டியர் முதலில் சீரா என்ற கோட்டையைத் தாக்கித் தம்முடன் நிஜாம் சேர்வதற்கு முன்பேயே கிழக்கேயிருந்த ஹைதரின் ஜில்லாக்களைப் பாழாக்கினர். ஹைதர் அவர்களுக்குப் பெருத்த லஞ்சம் கொடுத்துத் திரும்பிப் போகச்செய்தது மல்லாமல் நிஜாம் அலியை ஆங்கிலேயருக்கு விரோதமாகத் தன்னுடன் சேரும்படி செய்தான். அவர்களுடைய சேனைகள் கர்நாடகச் சமவெளியில் கர்னல் ஸ்மித்தின் கிழிருந்த ஆங்கிலச் சேனையை எதிர்த்தன என்று முன்னரே கூறியுள்ளோம். இதிலிருந்துதான் முதல் மைசூர் யுத்தம் தொடர்ந்தது; அதில் ஹைதரே வெற்றிபெற்றான்.

முதல் மைசூர் யுத்தத்தில் அவன் வெற்றியடைதல்

ஹைதர் ஆங்கிலேயருடனிட்ட சண்டை முடிந்தவுடன் மராட்டியர்கள் மறுபடியும் அவனுடைய இராஜ்ஜியத்தின் வடக்கேயும் வடகிழக்கேயுமுள்ள ஜில்லாக்களையெல்லாம் பாழாக்கி, அவனையும் தலைகாவேரிக்குள் புகுந்துகொள்ளுமாறு துரத்தினர் (1770—71). அந்தச் சமயத்தில் ஹைதர் சென்னையிலிருந்த ஆங்கிலேயரை, உடன்படிக்கையின்படி தனக்கு உதவுமாறு வேண்டினான்; மேலும் அவன் பாரமஹாலையும் மற்றும் பெருத்த பணத் தொகையையும் கொடுப்பதாகவும் கூறினான். கடைசியில் அவன் பிரெஞ்சுக்காரரைத் தனக்கு உதவிசெய்யக் கூப்பிடுவதாகவும் பயமுறுத்தினான். இப்படியிருக்க, ஹைதரை வெறுத்த முகம்மது அலி, ஆங்கிலேயர் அவனுக்கு உதவி செய்யக்கூடாது என்று கூறியது மல்லாமல், ஆங்கிலேயரை ஹைதருக்கு விரோதிகளாகிய மராட்டியர்களுடன் சேர்ந்துகொள்ளும்படியும் கூறினான். முகம்மது அலி கூறியதை ஒட்டி **ஸர் ஜான் லின்ட்ஸே** என்பவரும் பேசினர். இவர் இங்கிலாந்து அரசாங்கத்தால் முகம்மது அலியினிடம் ராஜதூதனாக அனுப்பப்பட்டவர். ஹைதருக்கும் மராட்டியருக்கும் நடந்த சண்டையின்போது லின்ட்ஸே ஆங்கிலக் கம்பெனியாரை மராட்டியர் பக்கம் சாருமாறு தம்மாலான வரையில் முயன்றார். அவருக்குப்பின் வந்த **ஹார்லாண்டு** என்பவர்

மராட்டியருடன் அவன் சண்டையிடுதல்

ஆங்கிலேயர் அவனுக்கு உதவி செய்ய மறுத்தல்

* For the rise of Hyder Ali : See the History of Hyder Naik of Hussein Ali Khan Kirmani, translated by W. Miles (1842)—chap. II, *et seq* & Bowring's Haidar Ali and Tipu Sultan (Rulers of India), and Wilks' History of Mysore. Chapters VII, X, XI & XII in Vol. I of 2nd Edition—also the Mysore Gazetteer (Revised) Vol. II Part IV.

பேஷ்வா மாதவராவுடன் உடன்படிக்கை செய்வதற்கான பேச்சுக்களையும் நிகழ்த்தினர்.

**ஹைதர் ஆங்கிலேயர் மீது கொண்ட வெறுப்பு**

முடிவில், ஹைதரே சமாளித்துக்கொள்ள வேண்டியதாயிற்று; அவன் மராட்டியர்களுக்குச் சண்டையினாலேற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய வேண்டியிருந்தது மல்லாமல், பெங்களூர், கோலார் போன்ற முதல்தரமான ஜில்லாக்களையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதாயிற்று. இதனால், அவனுடைய இராஜ்ஜியும் குறைவுபட்டது. "துரோகஞ்செய்தும் பயம் மேற்கொண்டும் தன்னைச் சரியத்தில் கைவிடுத்த" ஆங்கிலேயரது தீச்செயலை ஹைதர் மறக்கவேயில்லை.

## பகுதி 3 : கர்நாடக தஞ்சாவூர் விவகாரங்கள்.

**முகம்மது அலியின் உட்சூழ்ச்சிகள்**

சென்னைச் சபையில் திறமைவாய்ந்த யோக்கியமுள்ள அங்கத்தினரொருவருமிலர். டைரக்டர்கள் சென்னை உடன்படிக்கையை ஆமோதிக்காது, சென்னைச் சபையினரை "ஆடவர்க்கு வேண்டிய கடைப்பிடிப்பு அற்றவரென்றும், மந்திரியஸ்தர்களுக்கு வேண்டிய சக்தியற்றவரென்றும், அரசியலார்க்கு வேண்டிய வன்மை குன்றியவரென்றும்" பழி சாட்டினர். முகம்மது அலி தன்னைப்போல் அரச பதவியிலுள்ள மூன்றும் ஜார்ஜ் மன்னனுக்குச் சென்னை அரசாங்கத்தால் தான் அனுபவிக்கநேர்ந்த நீதி முறையற்ற கஷ்டங்களை நிவர்த்திக்குமாறு விண்ணப்பித்தான்; மூன்றும் ஜார்ஜும் முகம்மது அலியின் வழக்கைத் தீர்க்க விருப்பங்கொண்டு, நவாபின் குறைகளை நேரே கேட்டுத் தீர்ப்பதற்காக லின்ட்ஸே போன்ற தூதுவர்களை இந்தியாவுக்கு அனுப்பினர்.

**தஞ்சையரசன் மேல் நவாப் சாட்டிய குற்றங்கள் : தஞ்சையரசன் நாடிழத்தல்**

இதனால், முகம்மது அலியின் நிலை வலுத்தது: அவன் *கொடுப்பதற்கரியனவைகளைக் கொடுக்குமாறு கம்பெனியைக் கேட்டான். தன் பகை வருகிய ஹைதர் அலி ஒடுங்கியதற்குப் பெரிதும் மகிழ்ந்தான்; தான் விரும்பியபடி மராட்டியரோடு சமாதான மேற்படாவிடினும், அவன் சென்னைச் சபையினரைத் தஞ்சாவூர் ராஜ்யத்தை எதிர்த்துக் கைப்பற்றுமாறு உடன்படச் செய்தான், முன்னர்க் கூறியபடி 1762-இல் கவர்னர் பிகட்டின் முயற்சியால் நிகழ்ந்த உடன்படிக்கையின்படி நவாபுக்குத் தஞ்சையரசன் வருடந்தோறும் கப்பங்கட்ட உடன்பட்டனன். ஆனால், தஞ்சையரசன் சரிவரக் கப்பம் கட்டுவதில்லை யென்றும், மதுரைத் தலைவன் யூசப்கான் மராட்டியர் ஹைதர் அலி இவர்களோடு சேர்ந்து சதி செய்கின்றனென்றும் நவாப் குற்றஞ் சாட்டி, அவன் உடன்படிக்கையை மீறினனென வெளியிட்டான். சென்னைச் சபையினர் இக்குற்றங்களை நம்பி, 1771-இல் தஞ்சாவூரைத் தாக்கினர்: இரண்டாண்டு கட்குப் பின் மறுபடியும் ஆங்கிலப்படையொன்று தஞ்சையரசனை யெதிர்த்து அவன் கோட்டையையும் கைப்பற்றி, அவன் குடும்பத்தையும் சிறைபிடித்து அவன் நாட்டையும் நவாபுக்குக் கொடுத்தது: அதே சமயத்

* Impossible demands.

தில், இராமநாதபுரத்திலும், சிவகங்கையிலுமுள்ள வலிபெற்ற பாளையக் காரர்களை யடக்கத் துருப்புக்கள் அனுப்பப்பட்டன.

ஆங்கிலேயர் தஞ்சாவூரை நவாபுக்குப் பிடுங்கிக் கொடுத்த மானக் கேடான இச்செயல் இங்கிலாந்தில் வெறுப்புண்டாக்கியது. டைரக்டர்கள் இச்செயலைப் பழித்தனர்: மேலும், தஞ்சையரசனை அரசிழக்கச் செய்தது நீதியற்ற கடுஞ்செயலென மதித்தனர். அவர்கள் தஞ்சாவூரை மீண்டும் அரசனிடம் கொடுக்க அனுமதியிட்டு, அவனை அரசிழக்கச் செய்த கவர்னரை அப்பதவியினின்று நீக்கி, பிகட்டை மீண்டும் கவர்னராக அனுப்பினர்; இந்த பிகட்தான் முன்னர் லாலிக்கு எதிராகச் சென்னையை வெகு சாமர்த்தியமாகப் பாதுகாத்தவர். பிகட் இக்கொடுமையை நீக்கமுற்பட்டுத் தஞ்சையை மீண்டும் அரசற்களித்து அவன் ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய கப்பத்தையும். நிர்ணயித்தார். இதனால், கவர்னருக்கும் நவாபுக்கும் பெரு விரோதமேற்பட்டது; அன்றியும், நவாபுக்குக் கடன் கொடுத்த ஆங்கிலேயர் கவர்னரோடு விரோதம் பாராட்டினர்: ஏனெனில் புதிதாகக் கைக்கொண்ட தஞ்சாவூரில் நவாப் தாம் பட்ட கடன்களுக்கு ஈடுகாட்டியிருந்தான். கடன் கொடுத்தவர்களுக்குத் தலைமை வகித்தி *பால் பென்பீல்ட் என்பவன் தனக்கு நவாப் பெருந்தொகை கொடுக்கவேண்டுமென்று வழக்காடினன்: சபையினங்கத்தினரிற் பெரும் பாலோர் இவ்வழக்கை ஆதரித்தனர்; ஏனெனில், அம்மாதிரியாகவே தாங்களும் நவாபோடு மோச விவகாரங்கள் செய்துள்ளனர். அவர்கள் சங்கியை சபையில் பிக்கிருந்தது, மேலும் சேனைத் தலைவனுயிருந்த ஸர் ராபர்ட் பிளெட்சர் என்ற கொடியவனும் அவர்கள் பக்கம் சார்ந்திருந்தான். இங்ஙனம் சென்னைச் சபையில் கடுஞ் சச்சரவுகளேற் பட்டன; அதே சமயத்தில், கல்கத்தாவில் கவர்னர் ஜெனரலாயிருந்த வாரன்ஹேஸ்டிங்ஸுக்கும் ஆங்கிலச் சபையோர்க்கும் சச்சரவுகள் தோன்றின. வாரன் ஹேஸ்டிங்ஸ் சாக்கிரதையாயிருந்தான். அதற்கு மாறுக பிகட் தன்னிடம் பகைகொண்ட முக்கிய விரோதிகளை வேலையினின்று தள்ளிவைத்தார். இதனால் எதிரிகள் அரசாங்கத்தைக் கவர்ந்து பிகட்டைச் சிறையிலிடச் சதி செய்தனர்; இச்சதியில் பென்பீல்ட்டும் நவாபும் கலந்தனர்; முடிவில், பிகட்டைச் சிறையிலிட்டனர் (1776). அடுத்த வருஷத்தில் பிகட் சிறையிலேயே இறந்தார். 1773-இல் ஏற்பட்ட ஒழுங்கு முறைச் சட்டத்தால், சென்னை பம்பாய் இராஜதானிகளுக்கு மேற்பட்ட வங்காள அரசாங்கமும் இவ்விஷயத்தில் யாதும் செய்யவில்லை; ஏனெனில் அதுவே பல தொந்தரவுகளுக்கு உள்ளாயிருந்தது.

**கவர்னர் பிகட் தஞ்சையரசனை சிம்மாசன மேற்றல்**

**பிகட் சபையோடு சண்டையிடல்**

**பிகட்டின் சிறை வாசமும் மரணமும் (1776—7)**

பிகட்டுக்கு எதிராகச் சென்னைச் சபையிலிருந்த பெரும்பாலோரும் இங்கிலாந்துக்கு வரவழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுத் தண்டம் கட்டும்படி நேர்ந்தது: பென்பீல்ட் எவ்வித தண்டனைக்குமுள்ளாகாது தப்பினன். உண்மை யாதெனில் "இங்கிலாந்திலுள்ள மேலதிகாரிகள் சமய மறியாது தலையிட்டதால், இந்தியாவிலுள்ள ஆங்கில

**ஏற்பட்ட தொந்தரவுக்கு உண்மையான காரணம்**

* Paul Benfield.

அரசாங்கத்தின் உறுதி குலைந்தது." ஆங்கில மந்திரிச் சபையின் இத்தகைய மூடச் செயலால் நவாப் தைரியமிருந்து சென்னைச் சபைக்குப் பல இடை யூறுகள் விளைத்தான்: சென்னைச் சபையும் சீர்கெட்டுக் கிடந்தது. இவ் விதமாக, சென்னையின் நிலைமை மிகவும் கேவலமாயிற்று: இதனிடையே ஹைதரோடு இரண்டாம் மைசூர் யுத்தம் தொடங்கியது.

**ஊழலாட்சி தொடரல்**

புதிதாக கவர்னராய் வந்த ஸர் தாமஸ் **ரம்போல்ட்** என்பவனும் தன் முன்னிருந்த கவர்னர்களைப்போலவே அக்கிரமச் செயல்களை மேற் கொண்டான். அவன், வடசர்க்காரிலுள்ள ஜமீன் தார்களோடு ஒரு தீர்மானஞ் செய்ய முயன்றான். அதேசமயத்தில், பம்பாய் கவர்ன்மெண்டின் மடமையால் மராட்டியர்களோடு போர் ஏற்படவே, அதனால் ஆங்கிலே யர்க்கு பெரு வருத்தமும் செலவும் ஏற்பட்டன. மேலும் 1778-இல், தாய் நாட்டை எதிர்த்துக் கிளம்பிய அமெரிக்க குடியேற்ற நாடுகளோடு பிரான்ஸ் சேர்ந்து கொண்டதால், அதனோடு போரிட நேர்ந்தது. ரம்போல்ட் நிஜாமின் சகோதரனுகிய பஸலட்ஜங்கோடு அளவளாவி அவன் வசமிருந்த குண்டூ ரைத் தான் வாங்கிக்கொள்ள முயன்றான். இச்செயலால் நிஜாமுக்கு

**நிஜாமைப் பகைத்துக் கொள்ளல்**

ஏமாற்றமுல மேற்பட்டது: இத்தகைய சமயத்தில் நிஜாமின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்ளுதலா லேற்படக் கூடும் ஆபத்தை வாரன் ஹேஸ்டிங்ஸ் நன்குணர்ந்தான்: ஆதலின், உடனே பஸலட்ஜங்கினிடம் குண்டூரைத் திரும்பக் கொடுத்துவிடும்படி செய்தான். இவ்விவகாரத்தால் சென்னை வங்காள அரசாங்கங்களுக்குள் தீவிர சச்சரவு ஏற்பட்டது; நிஜாம் ஆங் கிலேயரிடம் நம்பிக்கை யிழந்தான்; அதே சமயத்தில் ஹைதரோடு போரும் தொடங்கும்போலிருந்தது.

**ஹைதருக்குக் கோபம் மூளல்**

ஹைதருக்கே குண்டூரைக் கொள்ளவேண்டுமென்ற எண்ணமிருந்தது: அதனால் ஆங்கிலேயர் அதனைத் தம் வசப்படுத்த முயன்றபோது அவன் மிகக் கோபித்தனன். பிரெஞ்சுக்காரரோடு போர் தொடங்கியவுடனே, சென்னைப் படையின் தலைவனு யிருந்த ஸர் ஹெக்டர் மன்ரோ புதுச்சேரியை முற் றுகையிட்டுப் பிடித்து அதன் காவல்களைப் பாழ்படுத்தினன் (1778). சந்திரநகர், காரைக்கால் போன்ற இதர பிரெஞ்சு நகரங்களும் பிடிபட்டன. மலையாளக் கரையிலுள்ள மாஹி என்ற சிறு துறைமுகமே பிரெஞ்சுக் காரரின் வசமிருந்தது. ஹைதர் தானடைந்த வெற்றிகளைக் காரணமாக யேறிட்டு மலையாளக்கரை முழுவதற்கும், ஐரோப்பிய ஸ்தலங்களுட்பட பேரரசுரிமை பாராட்டினன். அவன் மாஹி தன் பாதுகாவலுக்கடங்கிய தென்று வாதித்தான்: அங்ஙன் அவன் வாதித்தபோதினும், சென்னைச் சபையினர் அவனது நாட்டின் மூலமாகவே படையொன்றை யனுப்பி மாஹியை முற்றுகையிட்டுக் கைப்பற்றினர். (மார்ச்சு 1779). இஃதன்றியும், ஹைதர் ஆங்கிலேயரோடு போர் தொடங்குதற்கு இதர காரணங்களும் உள. மராட்டியருக்கும் ஆங்கிலேயருக்கும் போர் ஏற்பட்ட

**அவன் ஆங்கிலேயரோடு சண்டையிடக் காரணங்கள்**

போது, பூனவில் மராட்டிய அரசாங்கத்திற்கு உண்மையில் தலைவனுயிருந்த நானு பட்னவிஸ் ஹைதரை, இனி தமக்குக் கப்பங்கட்ட வேண்டியதில்லை யென்றும், மைசூர் ராஜ்யத்தின் எல்லையைக் கிருஷ்ணு நதிவரை பரப்பலா மென்றும் உறுதி யளித்தான். மேலும், நம்போல்ட் நிஜாமோடு முரணிய போது, அவர்களிருவரும் இனி ஒன்று சேராரென ஹைதர் சந்தோஷப் பட்டான். மற்றும், ஹைதர் ஆங்கிலேயர்மேல் தீரா வெறுப்புக் கொண் டனன்: ஏனெனில், 1769-இல் அவனேடு செய்து கொண்ட உடன் படிக்ஞையின்படி நடக்கவோ அல்லது அதனைப் புதுப்பிக்கவோ ஆங்கிலேயர் விரும்பவில்லை. ஹைதரோ சண்டைக்கு வேண்டியவற்றைச் சித்தப் படுத்திக் கொண்டான். அவனது சேனை பிரெஞ்சு தளகர்த்தர் களால் நன்கு பயிற்றப்பட்டுளது: அவனது பிரங்கிப்படை அக்கால நிலைக் கேற்ப வலிவுற்றிருந்தது. வயது பூர்த்தியாயினும், ஹைதரின் புத்தி கூர்மை மழுங்கவில்லை. அவன் ஆங்கிலேயரைத் தென்னிந்தியாவினின்று அறக்களைவேனெனப் பகர்ந்தான். இவ்விதமாக, அவன் ஆங்கிலேயரோடு டஹிரங்கமாகப் பகைமை பாராட்டினன். 1779-இல் ஆங்கிலேயர் ஸ்வார்ட்ஸ் என்னும் டேனியகிறிஸ்தவப்பாதிரியை ஹைதருடன் சமாதானஞ் செய்யஅனுப்பினர்கள். இந்த ஸ்வார்ட்ஸ் தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளியில் அநேக பள்ளிக்கூடங்களை நிறுவிக் கல்வித் துறையில் சேவை செய்தவர்: தஞ்சையரசரிடம் செல்வாக்கொடு திகழ்ந்தவர்: இந்தியாவில் வந்த பாதிரிமாருள் மேன்மையுடனும் வெற்றியுடனும் துலங்கி யவருள் இவரும் ஒருவராவர்: ஹைதர் இப்பாதிரியிடம் பட்சமாயும் மரியாதையோடும் நடந்து கொண்டானெனினும், ஆங்கிலேயரின் நடத்தை யைத் தீவிரமாகக் கண்டித்தான். ஹைதர் ராஜீய விவகாரங்களை விரைவில் முடிக்கும் ஆற்றலுடையனென்றும், பேரறிவும் ஞாபகசக்தியும் மிக்கவ னென்றும் ஸ்வார்ட்ஸே சான்று பகருகிறார்,*

**ஹைதரிடம் ஸ்வார்ட்ஸின் தூது பயனற்றுப் போதல்**

இப்படியிருக்க, சென்னை யரசாங்கம் நிஜாமலியை பகைத்துக் கொண்டது என முன்னர்க் கூறினேம்: அவன் தன் சேனையில் பல பிரெஞ்சுக்காரரை யமர்த்திக் கொண்டான். ஆங்கி லேயரை இந்தியாவினின்றும் துரத்துவதற்கு, நிஜாம் மராட்டியர் ஹைதர் மூவரும் ஒன்று கூடினர். இவைகளுக்கு மேலாக, சென்னை அரசாங்கம் அக் கால நிலையைக் கணித்தறியவும் சக்தியற்று, எதிரிகளை எதிர்ப்பதற்கும் வலி குன்றிக் கிடந்தது. அது, ஹைதரை யெதிர்ப்பதற்கு ஆயத்தமாயு மில்லை: அவனேடு சமாதானஞ் செய்து கொள்வோமெனக் கனவு கண்டுக் கிடந்தது. முகம்மது அலியோ படையெடுப்பைத் தடுக்கத் தயாரா யிருக்குமாறு ஆங்கிலேயரைத் தூண்டினன்; ஆனால் அவனது எச்சரிக்கை கள் செவியேற்கப்படவில்லை. அவன் சரிவரச் சம்பளம் கொடுக்காமையால் அவனது துருப்புக்கள் கலகஞ் செய்து ஹைதரின் பக்கல் சேர்ந்துவிடுவோ மெனப் பன்முறை பயமுறுத்தின. அவன் வழக்கப்படி ஒருவர்க்கும்

**நிஜாம், மராட்டியர், ஹைதர் மூவரும் ஒன்று சேர்தல்**

**முகம்மது அலியின் நிலைமை**

* H. Pearson's Life of Swartz, Vol. I, p. 319.

பாக்கியைச் சரிவரக் கொடுக்காமல் தான் மட்டும் கடன் கொடுப்பாரொவ் வொருவரிடமும் கடன் பெறுவானுயினுன் ; அவன் " கடன் கொடுத்தோர்க் கும் நடிப்புச் சேவை செய்தோர்க்கும் † பத்திரங்களைக் கொடுத்துத் தீர்த் தான் ; இந்தப் பத்திரங்களிற் சிலவற்றில் கண்டுள்ள தொகை குறிக்கப் பட்ட தவணைக்குள் செலுத்தப்படல் வேண்டும் ; சிலவற்றில் தவணையே குறிக்கப்படவில்லை ; ஆனல் எல்லாம் நாட்டின் வருமானத்தினின்று கொடுக்கப்படல் வேண்டும்.§

போதாகுதற்கு, ரம்போல்ட்டுக்குப்பின் கவர்னராய் வந்த ‡ஹொயட்ஹில் என்பவன் பலவீனன் : லஞ்சம் வாங்குவதில் சமர்த்தன். பக்ஸாரில் வெற்றியுற்ற வீரனகிய ஸர் ஹெக்டர்மன்ரோ சேனைத் தலைவனுயிருப்பினும், அவன் நல்லறி விழந்து, துணிபற்றுக் கிடந்தான். கர்நாடகத்தை ஹைதரின் துருப்புக்கள் கொள்ளே யடிக்குஞ் செய்கி எட்டும் வரையில் சென்னையில் யாதொரு தயாரிப்பும் செய்யப்படவில்லை.

சென்னை அரசாங் கத்தின் பலவீனம்

## பகுதி. 4. இரண்டாவது மைசூர் யுத்தம் (1780—84)

ஹைதர் கர்நாடகத்தில் பெரும் படையுடன் வந்தான், வரும் வழியெல் லாம் கொள்ளையடித்துப் பாழ்படுத்தினுன். " பரங்கிமலையிலிருந்து தீக் கொளுவிய கிராமங்களினின்றெழும் புகையும் புகைப் படலம் கண்ணுக்குத் தென்பட்டது : காயப்பட்டவர் குருதி சோரச் சென்னையை நோக்கி ஓடிவந்தனர்" மன்ரோ சென்னைக்கருகில்லாமல் காஞ்சிபுரத்தில் நின்றிருந்தார் ; ஹைதர் பெய்லி என்னும் தளகர்த்தனின்கீழ் மன்ரோவைச் சேர வேண்டுமென வந்த படையைப் பஞ்சரில் முறியடித்தான். மன்ரோ அப்படையின் உதவிக்கு விரைந்துபோகுமாற்றலற்றுப் பயந்து சென்னைக் குத் திரும்பி ஓடி வந்தார். ஹைதர் ஆற்காட்டையும் கைப்பற்றிக் கொண் டான் ; அவன் பிரெஞ்சுக் கப்பற்படையின் வரவை வழிமேல் விழி வைத்துப் பார்த்திருந்தான். இங்ஙன் சென்னையில் ஆங்கிலேயரது நிலைமை பேராபத்துக்குள்ளாகிக் கிடந்தது.

கர்நாடகத்தில் ஹைதரின் படை யெழுச்சி—பெய்லி மேல் வெற்றியுறல்

இவ்விதமாக போர் தொடங்கும்போது ஆங்கிலேயர்க்குப் பெருந் தீங்குகள் விளையும் போலிருந்தது. அதனல் சென்னை அரசாங்கம் வாரன் ஹேஸ்டிங்ஸின் உதவியை நாடியது. வாரன் ஹேஸ் டிங்ஸும் துரிதமுடன் உதவி ஆங்கிலேயரது ஆபத்தை நீக்கினன். மராட்டிய யுத்தம் ஒருபுறம் நடந்துகொண்டிருப்பினும் ஹேஸ்டிங்ஸ் வங்காளத்தி லிருந்து கர்நாடகத்திற்கு ஸர் அயர் கூட்டை அனுப்பினுன். 1781-இன் தொடக்கத்தில் கூட செங்கற்பட்டை ஆபத்தினின்று விடுவித்து, வந்த வாசியைக் காத்து நின்ற ¶பிளிண்ட்டுக்கு உதவியாகச் சென்று அதனையும் ஆபத்தினின்று விடுவித்தான் ; அதன்பின்பு, ஹைதரிட்ட வேலூர் முற்றுகையை எடுத்து விடுமாறு செய்தான். கிழக்குக் கரையில் ஒரு பிரெஞ்சுக் கப்பற்படை தோன்றியபோது ஹைதர் கடலூருக்கு

வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆங்கிலேயரைக் காப்பாற்றுதல்

ஸர் அயர் கூட் போர் முனைக்கு வருதல்

† Bonds. ‡ Whitehill. ¶ Captain Flint.
§ Wilks—Vol. I, (2nd edition), p. 443.

வந்து அதனைப் பிரெஞ்சுத் துருப்புக்களை இறக்குவதற்கேற்ற ஸ்தலமாகக் கொள்ள எண்ணினான். ஆனால், கூட் போதிய குதிரைப் படையின்மையாலும் அளவுக்கு மிஞ்சிய பீரங்கிகளும் பரிவாரங்களும் இருந்தமையாலும் கஷ்டப்பட்டபோதிலும் ஹைதரைப் பின்பற்றித் தொடர்ந்தான். ஹைதர் கூட்டோடு கைகலப்பதைத் தவிர்த்து உள்நாட்டிற்கு மீண்டு தஞ்சையரனது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளை நாசமாக்கத் தொடங்கினான். இதற்குள் பிரெஞ்சுக்கப்பற்படை மொரீஷஸ் தீவு நோக்கிச் சென்றுவிட்டது; ஆங்கிலப் படைகள் தங்கள் துப்பாக்கிகளைக் கொண்டு கைப்பற்றக் கூடிய அளவு பிரதேசங்களையே கைப்பற்றின. ஒரு சமயம் கூட் நிதம்பரத்தை அடைந்தான். ஆனால், அங்குத் தாக்கப்பட பரங்கிப்பேட்டைக்கு மீண்டான். இச்சமயம் பார்த்து ஹைதர் ஆங்கிலேயர்க்கும் கடலூருக்கும் இடையில் புகுந்து போரிட ஆயத்தமானான். இப்படியிருக்க அரபிக் கடலிலிருந்த ஆங்கிலேய கப்பற்படை கடலூருக்கு அருகே வந்தது; கூட் தைரியமாகப் பரங்கிப்பேட்டைக்கருகே ஹைதரைத் தாக்கினான். கடும்போர் நிகழ்ந்தது; அதில் ஹைதர் போர்க்களத்தினின்று பிடிபடாதவாறு தப்பினான். (ஜூலை 1781). உள்நாட்டுள் மீண்ட பின்பு ஹைதர், முன்னால் பெய்லி மேல் வெற்றிபெற்ற **பனூரிலேயே** மறுபடியும் ஆங்கிலேயரோடு சண்டையிட்டான். ஆனால் தோல்வியடைந்தான். மீண்டும்**சோளிங்கரில்** தோல்வியடைந்தான்; கூட் அவனை உள்நாட்டுள் துரத்தினான். ஆனால் இப்போரில் பகைவரது *ஆக்கமூல அழிவைக் காட்டிலும் ஆங்கிலேயரது ஆக்கமூலஅழிவு அதிகமாகும். "1781-இலும், 1782-இலும் நவாபின் பிரதேசத்திலிருந்து ஹைதரைத் துரத்த கூட் செய்த முயற்சிகள் பயனிலவாயின; மற்றும் ஆங்கிலேயரது ஆக்கமூலங்களும் செல்வங்களும் அழிந்து போயின."

**பரங்கிப்பேட்டையில் கூட் வெற்றி பெறல் (1781)**

**சோளிங்கரிலும் வெற்றி பெறல்**

சோளிங்கர் தோல்விக்குப்பின் ஹைதர் **கூட்டை** எதிர்க்கத் துணியவில்லை; கூட் சென்னைக்குத் திரும்பினான். கூட்டின் தந்திரங்களால் ஹைதரின் எண்ணங்கள் பழுதுபட்டுப் போயின; ஆனால் போதிய முஸ்திபும் உணவுப் பொருள்களும் இல்லாமையால் கூட் எண்ணிய அளவு பலன் கிடைக்கவில்லை. இச்சமயத்தில் சென்னைக் கவர்னராக நியமிக்கப்பட்ட **லார்டு மெகார்ட்னே** மிகவும் கௌரவமும் அனுபவமும் நிறைந்தவர். அப்போது டச்சுக்காரருடன் போர் தொடங்கியதால், ஹைதர் நாகப்பட்டினத்துள்ள டச்சுக்காரரோடு பேச்சுக்கள் நிகழ்த்த, மெகார்ட்னே நாகப்பட்டினத்தைக் கைப்பற்றிப் பின்பு, சிலோனில் டச்சுக்காரர் வசமிருந்த திரிகோணமலையையும் பிடித்தார். மேலும், மெகார்ட்னே நவாப் முகம்மது அலியோடு ஒரு ஏற்பாடும் செய்து கொண்டார். இந்த முகம்மது அலி தன் இராஜ்யத்தை ஆங்கிலேயர் பாதுகாத்திருப்பவும் அவர்களுக்கு ஒன்றும் கொடுக்க மறுத்தான்: அம்மட்டோ! அவர்களது

**லார்ட் மெகார்ட்னே சென்னைக் கவர்னராதல்**

**நாகப்பட்டினத்தைக் கைப்பற்றுதல்**

* Resources.

துருப்புக்களது போக்குவரத்தையும் தடை செய்தான். கூட் நவாபின் சபையினர் நிகழ்த்தும் லஞ்சங்களையும் துஷ்ட பிரவர்த்தனைகளையும் தீவிரமாகக் கண்டித்தான்; அப்போது, மெகார்ட்னே பல இழுக்கடிப்புக்களுக்குள்ளாகிய பின்பு, கர் நாடகத்தின் வருமானத்தை ஓரைந்தாண்டுகள் கம்பெனியின் கையில் நவாப் விட்டுவிடவேண்டு மென்றும் நவாபின் சொந்த செலவிற்காகவும் அவனது கடனீட்டிற்காகவும் ஆறிலொரு பங்கு வருமானம் நவாபுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் முடிவு கட்டினர்.

**முகம்மது அலியோடு மெகார்ட்னே உடன்படிக்கை செய்தல் (1781)**

ஹைதரின் மகனாகிய திப்பு ஒரு பெருத்த சேனைப் படைகொண்டு, தஞ்சாவூரில் நவாபின் அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காக நியமிக்கப்பட்ட *கர்னல் பிரேயித்வயிட்டைத் திடீரெனத் தாக்கித்தோற் கடித்தான். இங்கு இப்படியிருக்க †தெள்ளியசேரியி லிருந்த (மலையாளத்தில் ஆங்கிலேயரால் நன்கு பாதுகாக்கப்பட்ட வர்த்தகசாலை இதுவேயாகும்) ஆங்கிலச் சேனை அக்கோட்டையை முற்றுகையிட்டோரைத் தைரியமுடன் தாக்கிப் பின்னிடச் செய்தது; இதனால், முன்னர் ஹைதருக்குத் தோற்ற நாயர்கள் தைரியங்கொண்டு மலையாளம் முழுவதிலும் கலகஞ்செய்து எதிர்த்து நிற்கலாயினர்; மற்றும் சூடகிலும் ஹைதருக்கு எதிர்ப்பு ஏற் பட்டது (1782).

**ஆங்கிலேயரது நிலையிலேற்பட்ட மாறுபாடுகள்**

இதற்குப்பிறகு, ஹைதர் ஏக்கம் கொண்டான். அவன் கூட்டுடன் நிகழ்த்திய ஒவ்வொரு சண்டையிலும் தோல்வியடைந்தான்; மலையாளத் தில் எழுந்த கலகம் விரைவில் மைசூருக்கும் பரவலா யிற்று. தனக்கு உதவி செய்ய வருவதாக உறுதி கூறிய பிரெஞ்சுக்காரர் அவ்வாறு செய்யாமல் தன்னை இரண்டு வருடங்களாக ஏமாற்றி வந்ததை ஹைதர் நன்கு உணர்ந் தான். அவனுடைய இராஜ்ஜியத்தின் பகுதியில் மேற்குக் கரையோரமே எளிதில் தாக்கக்கூடியதாக விருந்ததால், எதிரிகள் அங்கே எதிர்க்கவும் தொடங்கினர்.

**ஹைதரின் ஏக்கம்**

1782-முதலில் **சப்ரன்** என்ற சாமர்த்தியமுள்ள தலைவன்கீழ் ஒரு பிரெஞ்சு கப்பற்படை வந்தது. அவன் அவ்வாண்டுக்குள் ஆங்கிலக் கப்பற்படையோடு நான்கு கடும்போர்களில் திறமை காட்டிச் சண்டை செய்தனன். ஆனால், "ஆங்கிலேயர் அவனது சிறந்த திறப்பாடுகளுக்கு அஞ்சாது தாங்கி நின்றனர்." சப்ரன் 2000 பேர் அடங்கிய ஒரு சேனையைத் திறமையற்ற ஒரு தலைவன் கீழ் ஹைதரொடு சேர்ந்து கொள்ளுமாறு அனுப்பினன். இதனால் இராணுவ நிலையில் யாதொரு மாறுபாடும் தோன்றவில்லை. திரிகோணமலை யொன்றே சப்ர

**பிரெஞ்சு கப்பற் படையின் செயல்கள் (1782)**

* Colonel Braithwaite. † Tellicherry.

னால் கைப்பற்றப்பட்டது; அதுவும் ஆங்கிலக்கப்பற்படை சமயத்தில் உதவ இயலாததால் பிடிபட்டது. ஹைதரும் பிரெஞ்சுத் தலைவனும் வந்தவாசியை விடுவிக்க வந்த கூட்டை எதிர்க்க இயலவில்லை. கூட்டும், கர்நாடகத்தில் ஹைதருக்கு முக்கிய இடமாகிய ஆரணியைக் கைப்பற்ற முயன்றன; அம்முயற்சி வீணாகவே சென்னைக்குத் திரும்பினன்.

**ஹைதருக்குப் பிரெஞ்சு உதவிப் படைகளால் பயனின்மை**

அவ்வமயம் புஸ்ஸியின் கீழ் மற்றொரு பிரெஞ்சுப்படை வருவதாக மெகார்ட்னேவுக்குச் செய்தி எட்டியது; திரிகோணமலை சப்ரன் வசமிருந்ததாலும், கர்நாடகத்தில் ஹைதரின் வன்மை ஓங்கியிருந்ததாலும் சென்னைக்கே பிரெஞ்சுக் கப்பற்படையால் ஆபத்து நேருமென மெகார்ட்னே பயந்தார்; அவர் படையைக் கப்பற்கே ஏற்ற ஆங்கிலக் கப்பற்படையும் விரிகுடாவை நீத்துப் பழுதுபார்ப்பதற்குப் பம்பாயை அடைந்தது. அதே சமயத்தில் சென்னை கொடிய பஞ்சத்தால் வருந்தியது; ஹைதரின் அட்டூழியங்களுக்கு ஆற்றது சுற்றுப்புறமுள்ள குடிமக்கள் சென்னை நகரத்துள் புகுந்தனர்; பிணியாலும் பசியாலும் பலர் மடிந்தனர். கூட்டும் தேக அசௌகரியத்தால் வங்காளத்திற்குத் திரும்பினன்.

**சென்னையின் அபாயநிலை (1782)**

இந்த நிர்ணயமற்ற போட்டித்த கர்நாடகப் படையெடுப்பினால் தப்பபிப்பிராயங்கள் நிலவின. ஹைதரைத் தீர ஒடுக்கவேண்டுமானால், அவனது நாட்டிற்குள்ளேயே நுழைந்து போரிடவேண்டும். மேற்குக் கரைப்பக்கமாக அவனது நாட்டை எளிதில் தாக்குதல் கூடும்; அப்பகுதியை ஆங்கிலேயரும் மராட்டியரும் தடையின்றித் தாக்கலாம். கர்னல் ஹம்பர்ஸ்டோன் என்பவன் கள்ளிக்கோட்டையில் பம்பாய்த் துருப்புக்கள் சிலவற்றோடிறங்கி பாலக்காட்டை எதிர்த்தான். இவனை எதிர்க்க ஹைதர் திப்புவைப் பெரும்படையுடன் அனுப்பினன்; ஆனால் திப்பு பெருஞ் சேதமடைந்து தோல்வியுற்றான் ஹைதர் கர்நாடகத்தை விட்டு மேற்குக்கரைக்குச் செல்லத் தீர்மானித்தான். ஆனால், அப்போது ஒரு பிரெஞ்சுக் கப்பற்படை பரங்கிப்பேட்டைக் கருகேவந்து சில போர்வீரர்களைத் தரையிறக்கியதெனவும் கேள்வியுற்றான். ஆங்கிலேயர் வெற்றிபெற்றாலும் பிரெஞ்சுத் துருப்புக்கள் கடலோரைக் கைப்பற்றி ஹைதரின் சேனையோடு சேர முயன்றன. அதே சமயத்தில், திப்புவும் பாலக்காட்டுக் கருகே சில வெற்றிகளடைந்தான். மறுபடியும் கர்நாடகத்தில் போர்தொடங்கும்போ விருந்தது. ஹைதர் ஆற்காட்டுக்கருகே பிறுந்த பாசறையில் இறந்தார். திப்பு வரும் வரையில் ஹைதரின் மரணம் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. சேனைக்குத் தாராளமாகக் கொடைகள் நல்கி திப்பு சிம்மாசனமேறினன்.

**மேற்குக் கரையைத் தாக்குதலின் எளிமை**

**ஆங்கிலேயர் அதனைத் தாக்குதல்**

**ஹைதரின் மரணம் (டிசம்பர், 1782)**

திப்பு வருவதற்குள் ஆங்கிலேயர் மைசூர்ச் சேனையைச் சிதற வடித்திருக்கலாம். ஆனால் அவர்கள் அக் கற்சமயத்தை நழுவவிட்டனர்

திப்புவோ, கர்நாடகத்தில் போரிடுதலை நிறுத்தி மேற்குக்கரை சார்ந்தான்.

**திப்பு மேற்குக்கரை சார்தல் (1783)**

புகழ்பெற்ற பிரெஞ்சு சேனைத் தலைவனை புஸ்ஸி கிழவனைபின்பும் கடலூரில் வந்து இறங்கினன் (1783). அவன் விரைவில் திப்புவோடு சேர்ந்திருப்பின் ஆங்கிலேயர்க்குப் பேராபத்து விளைவித்திருக்கலாம். ஏனெனில், கூட்டுக் குப்பின் தளகர்த்தனனவன் திறமையற்றவன். ஆனல், புஸ்ஸியும் திப்புவும் ஒன்று சேரவில்லை. புஸ்ஸி கடலூர்க்கருகே ஆங்கிலேயரோடு ஒரு சண்டையிட்டான். அதன் வெற்றி தோல்விகள் நிர்ணயிக்க முடியவில்லை. அதே சமயத்தில் சப்ரனும் ஆங்கிலக் கப்பற்படையோடு கடும்போர் புரிய அது பழுதுபார்ப்பதற்காகச் சென்னையை யடைந்தது. இதனல், புஸ்ஸி துணிவு பிறந்து, ஆங்கிலப் பாசறையையே தாக்க எண்ணினன். ஆனல் அப்பொழுது ஐரோப் பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சமாதானம் உண்டாய்விட்டது என்ற செய்தி வரவே அவன் பகைமை யொழிக்க நேர்ந்தது; கர்நாடகத்திலிருந்த ஆங்கிலசேனை இவ்விதம் தப்பித்தது.* புஸ்ஸி போரை நிறுத்தித் திப்புவின் சேவையிலிருந்த பிரெஞ்சு துருப்புக்களை மீட்டான் (ஜூலை, 1783).

**புஸ்ஸியும் திப்புவும் சேர்ந்து கொள்ளாமை**

**கடலூரில் ஆபத்தான சண்டை**

இதற்குள், பம்பாய் அரசாங்கத்தார் **மேத்யூஸ்** என்னும் தளகர்த்தன் கீழ் ஒரு படையை மங்களூரையும் பெட்னூரையும் எதிர்க்குமாறு அனுப்பினர். விரைவில் ஹொனேவாரும்† மங்களூரும் ஆங்கிலேயர் வசமாயின. பெட்னூரும் பிடிபட்டது. திப்பு வெகு பிரயாசைப்பட்டு பெட்னூரை மீட்டான். ஆனல் பல மாதங்கள் வரை மங்களூர் திப்புவை வீரத்துடன் எதிர்த்து நின்றது. மற்றும் ‡புலர்டன் என்பவன் ழேனுப்பிய படையொன்று திண்டுக்கல், கோயம் புத்தூர், பாலக்காடு இவைகளைப் பிடித்துச் சீரங்கப்பட்டணத்தையே எதிர்க்கச் சித்தமாயிற்று. ஆங்கிலேயர் துணிகரமாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்திருப்பராயின் அவரது படைகள் சீரங்கப்பட்டணத்துப் புகுந்து சமாதானத்தைச் செய்துகொள்ளும்படி விதித்திருக்கும். ஆனல் சென்னைக் கவர்னராயிருந்த மெகார்ட்னே சமாதானத்தையே நாடி, கவர்னர் ஜெனரலிட்ட கட்டளையையும் புறக்கணித்து, சமாதானத்தை முடிவுகட்டுமாறு ¶ஆணையாளர்களை ஏவினர். ஹேஸ்டிங்ஸுக்குத்

**மேற்குக்கரையில் ஆங்கிலேயரது போர்ச் செயல்கள் (1783)**

**புலர்டன் பாலக்காட்டின்மேற் செல்லல்**

---

* மாலிஸன் கூறுவதாவது :—இங்ஙனம் போரை நிறுத்தியதால் பிரான்ஸுக்கு நலமேற்படவில்லை : ஆங்கிலேயரும் கடைசிமுறையாகப் பிரெஞ்சுக்காரரிடமிருந்து தப்பிப் பிழைத்தனர் (Final French struggles in India [1878]. pp. 74—75). வில்ஸன் பின் வருமாறு இதனேப்பற்றிக் கூறியுள்ளார் :—"சரியான சமயத்தில் பிரான்ஸோடு சமாதான மேற்படாமலிருந்தால் தென்னிந்தியாவை ஆங்கிலேயரிழக்க நேரிட்டிருக்கும். பிரெஞ்சுக் காரர் கப லூரில் சேனையை அழித்தவுடனே சென்னையை முற்றுகையிட்டிருப்பர் : அப் போது திப்பு பிரெஞ்சுக்காரர் இவர்களுக்கெதிராகச் சென்னையை ஆங்கிலேயரால் காத் திருக்க முடியாது."

† Honowar. ‡ Fullerton. ¶ Commissioners.

திப்புவின் தலைநகரிலேயே சமாதானத்தை விதிக்க விருப்பம்: ஏனெனில், முதல் மைசூர் யுத்தத்தில் ஹைதர் சென்னை வாயிலென்றே சமாதானத்தை விதித்தான். - ஆனால் மெகார்ட்னே தம் வழியே பின்பற்றி மார்ச்சு 1784-இல் மங்களூர் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். அதன்படி அவரவர் ஜெயித்த நாடு களைத் திருப்பிக் கொடுத்து விட்டல் வேண்டும்: ஆங்கி லேயரே தங்ளுடைய சமாதானத்தைச் செய்துகொள்ள விரும்பித் தன்னை நாடியதாகத் திப்பு தோற்றுவித்தான். அதற்கேற்பவே சென்னை அரசாங் கமும் அவனுடன் செய்த நடவடிக்கைகளில் பணிந்துகாட்டிற்று.

மெகார்ட்னே சமாதானத்தை நாடுதல்-மங்களூர் உடன்படிக்கை (மார்ச்சு 1784)

இந்த ஆபத்தான யுத்தத்தில், ஹேஸ்டிங்ஸின் புத்திசாலித்தனமும் சமயோசித புத்தியும் கூட்டினுடைய விடாமுயற்சியும் ஒன்று கூடியேசென்னை இராஜ்ஞானியைக் காப்பாற்றின. இந்தயுத்தமே சென்னை அரசாங்கத்தின் திறமையின்மையாலும் சஞ்சலபுத்தியாலும், துர்நடத்தையாலும் ஏற்பட்டது. ஹேஸ்டிங்ஸ், இந்த யுத்தத்தில் இந்தியாவில் டச்சுக் காரரை அறவொழிக்க வெண்ணி அவரது ஸ்தலமாகிய நாகப்பட்டினத்தைப் பிடிக்க முயன்றான். கர்நாடகம் நன்கு பாழாக்கப்பட்டது; வடசர்க்கார் செவ்வனே ஆளப்பெறவில்லே. முதலிலிருந்தே, சென்னையின் ஆக்கமூலப் பொருள்கள் அதன் கஷ்ட காலங்களில் உதவுமாறு போதிய அளவிலில்லே. 1781-இல் நவாப் சென்னை அரசாங்கத்தின்வசம் கர்நாடக வருமானத்தை ஒப்புவித்ததால் அக்கால நிலைமை சீர்திருந்தவில்லே. ஆனல் நவாப் தன் வரிஉத்தியோகஸ்தர்கள் வசூலித்த தொகை முழுவதையும் ஆங்கிலேயர்க்குக் கொடுத்து விட அனுமதிக்கவில்லே. மெகார்ட்னே பணம் வசூலிப்பதை மேற்பார்வை யிடுதற்கும் நவாபின் அரசியலில் சீர்திருத்தங்கள் செய்தற்கும் ஒரு தனிக் கமிட்டியை (நிர்ணய ரெவின்யூ கமிட்டி)* நியமித்தான். இந்தக் கமிட்டி தலையிடுதலே நவாப் விரும்பாமல், கவர்னர் ஜெனரலேக்கொண்டு அதனைத் தள்ளப்பார்த்து இறுதியில் 1785-இல், டைரக்டர்களின் உத்தரவு பெற்று அதனைத் தள்ளுபடி செய்தான். இதனல், மெகார்ட்னேவெறுப்புக்கொண்டு, மீண்டும் தோன்ற விருந்த ஊழலாட்சி முறையை மேற்கொள்ள விரும் பாது கவர்னர் பதவியை ராஜிநாமா செய்தார். சென்னை அரசாங்கத்திற்கு, மன்னரது ராணுவ உத்தியோகஸ்தர்கள் நிலைமையையும், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் நிலைமையையும் ஒற்று மைப்படுத்தும் விஷயத்தில் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. இவைகளுக்கும் மேல் சென்னை வங்காள அரசாங்கங்களுக்குள் அடிக்கடி சச்சரவுகள் நிகழ்ந்து வந்தன.

ஆங்கில வெற்றிக்கு ஹேஸ்டிங்ஸ் செய்த அனுகூலம்

சென்னை அரசாங்கத்தின் கஷ்டங்கள்

முகம்மது அலியால் துன்பங்கள் தொடர்ச்சியாய் ஏற்படல்

---

* The Committee of Assigned Revenue.

# அத்தியாயம் 8.

## வங்காளத்தில் வாரன் ஹேஸ்டிங்ஸ்.

### பகுதி 1. ஹேஸ்டிங்ஸ்—வங்காளத்தின் கவர்னர் (1772-74)

இந்தியக் கவர்னர் ஜெனரல்களுள் முதலில் வந்தவனும் முக்கியமானவனுமான வாரன் ஹேஸ்டிங்ஸ், 1749-இல் தனது 18-ஆவது வயதில் இந்தியாவுக்கு வந்து ஆங்கிலக் கம்பெனியில் ஒரு குமாஸ்தா வேலையில் அமர்ந்தான். ஆரம்பத்தில் சில வருடங்கள் அவன் கல்கத்தா காஸிம்பஜார் வர்த்தகசாலைகளில் வேலையிலிருந்துகொண்டு தங்களுக்கு விரோதிகளாகிய டச்சு வியாபாரிகளிடமும் இந்திய வர்த்தகர்களிடமும் வெகு திறமையுடன் நடந்துகொண்டான். 1756-57-இல் நவாபைப் பழிக்குப் பழிவாங்கக் கிளைவ் எடுத்த படையெழுச்சியிலும் இவன் கலந்து கொண்டான்; ஸிராஜ் உத்தௌலாவொடு நிகழ்த்திய பேச்சுக்களில் கிளைவால் நம்பிக்கைக்குரிய ஓர் ஏஜெண்டாக இவன் நியமிக்கப்பட்டான். பிளாஸி யுத்தத்திற்குப் பிறகு, ஹேஸ்டிங்ஸ் மீர்ஜாபரிடத்தில் ஆங்கில ஸ்தானீகராகவிருந்தான். அவனிடமிருந்து 24 பர்காணாக்களின்மீது கம்பெனிக்கு உரிமை உண்டென்ற உறுதிமொழியைப் பெற்றுக்கொண்டான். சிறிது காலத்திற்குப் பின்பு அவன் கல்கத்தா சபையின் அங்கத்தினனானான்; அவனை அடிக்கடி நவாபின் தர்பார்க்கு ராஜ காரியமாய் அனுப்புவது வழக்கம். மீர்காஸிமோடு சமாதானமாயிருப்பதற்காக அவனும் வான்ஸிடார்ட்டுடன் முயன்றான்; ஆனால், அம்முயற்சி பயனற்றதாயிற்று.

**ஹேஸ்டிங்ஸ் வரலாற்றின் முற்பகுதி**

**அவன் வங்காள கவர்னராதல் (1772—74)**

பக்ஸார் வெற்றிக்குப் பிறகு ஹேஸ்டிங்ஸ் இங்கிலாந்திற்குத் திரும்பினான்; 1769-இல் இந்தியாவிற்குத் திரும்பிவந்து சென்னைச் சபையில் இரண்டாம் பதவியை வகித்தான்; ஹைதரால் பாழாக்கப்பட்ட கர்நாடகத்தில் அவன் அமைதியை உண்டாக்க முயன்றதுமல்லாமல், முகம்மது அலிக்கும் தஞ்சையரசனுக்கும் நல்ல சம்பந்தம் ஏற்படுத்த முயன்றான். 1772-ஆம் வருஷத் தொடக்கத்தில் அவன் கல்கத்தா சபையில் இரண்டாம் பதவியை வகிக்க மாற்றப்பட்டான்; மற்றும் கவர்னராவதற்கு வேண்டிய உரிமையையும் பெற்று அவ்வாறே சீக்கிரத்தில் கவர்னரும் ஆனான் (ஏப்ரல் 1772).

ஹேஸ்டிங்ஸ், ஆங்கிலேயராட்சியைச் சீர்திருத்த ஆரம்பித்தபோது லார்டு கிளைவினிடமிருந்து வந்த கடிதம் அவனை நன்கு ஊக்கியது. அக்கடிதத்தில் அவர், "தனிப்பட்ட மனிதர்களின் நன்மையினும் பொதுஜன நன்மையே குறிக்கோளாக யிருக்கவேண்டுமென்றும், பிறருடைய அபிப்பிராயத்தைக் கேட்பதைக் காட்டிலும் தன் அபிப்பிராயத்தையே நம்பியிருக்கவேணுமென்றும், மிக்க ஜாக்கிரதையுடன் ஆலோசனைசெய்து ஆபத்துநேரும் காலங்களில் தைரியத்துடன் செயல் புரியவேண்டுமென்றும், பொல்லாங்கு நேரும் வரையில் தவறான வழியை மனத்தினும் கருதாதேயென்றும், கேடுவிளைந்த காலத்தும், 'காலக்கிரமத்தில் விடா

மூயற்சியால் எல்லாம் நன்மையாகவே முடியும்' என்ற நம்பிக்கையொடு புதிய யுக்திகளை மேற்கொண்டு நடக்கவேண்டுமென்றும்" போதனைகள் செய்திருந்தார்.* முதன்முதலில் ஹேஸ்டிங்ஸ் இரட்டையாட்சியை யொழித்தார். டைரக்டர்களும் அதனை ஒழிக்க ஹேஸ்டிங்ஸுக்கு அனுமதி கொடுத்தனர். அவர் இரண்டு டெப்டி நவாபுகளையும் (முகம்மது ரஸா கான், ராஜா ஷிடப் ராய்) வேலையினின்று நீக்கினர். ஊர்ப் பணத்தை மோசஞ் செய்தவரென அவர்கள் விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டனர்.†

**இரட்டை ஆட்சியின் முடிவு**

அவர் நிலவருமானத்தை வசூலிக்கும் இந்தியர்களை நீக்கி ஆங்கிலேயரையே வேலைக்கு நியமித்தார். மற்றும், அவர் பலப்பல ஜில்லாக்களைச் சில பகுதிகளாகச் சேர்த்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஆங்கிலக் கமிஷனர்களை நியமித்தார். அவர் மூர்ஷிதாபாத்திலும் பாட்னாவிலுமிருந்த வருவாய் மேல் விசாரணைச் சபைகள் (Revenue Boards) இரண்டினையும் ஒழித்து, கல்கத்தாவில் ஒரே ஒரு சபையை ஏற்படுத்தினர். கஜானாவையும் அவ்விடத்திற்கு மாற்றினர். வழக்குகளைத் தீர்மானிப்பதில் ஜமீன்தார்களுக்கும் பஞ்சாயத்தார்களுக்கும் இருந்த அதிகாரத்தை ஒழித்து ஒவ்வொரு ஜில்லாவிலும் ஸிவில் நிமினல் வழக்குகளைத் தீர்க்க நீதிமன்றங்களை ஏற்படுத்தினர்; அந்நீதிமன்றங்களுக்குக் கலெக்டர்களே நியாயாதிபதிகளானார்கள். கல்கத்தாவிலேயே ஸிவில் கிரிமினல் வழக்குகளுக்காக மேற்கூறிய நீதிமன்றங்களுக்கு மேற்பட்ட இரண்டு உயர்தர நீதிமன்றங்களை ஏற்படுத்தினார்; **ஸதர் தீவானி அதலத்தில்** (இது மாகாணத்திற்கே உயர்தர ஸிவில் நீதிமன்றமாகும்) கவர்னரும் அவருடைய சபையின் அங்கத்தினர்களில் இருவரும் நியாயாதிபதிகளாக இருந்தனர்; மற்றொரு நீதிமன்றமாகிய **ஸதர் நிஜாமத் அதலத்தில்**, ஆங்கிலச் சபையோரான் நியமிக்கப்பட்ட ஒரு இந்திய நியாயாதிபதி தலைமை வகித்தார். இவ்விரு நீதிமன்றங்களிலுமிருந்த நியாயாதிபதிகளுக்கு உதவி புரிய, தத்தம் சட்டங்களை விவரித்துச் சொல்வதில் வல்லுநரான பிராம்மண பண்டிதர்களும், முகம்மதிய மௌல்விகளும் நியமிக்கப்பட்டனர். இச்சீர்திருத்தங்களெல்லாம் ஹேஸ்டிங்ஸ் கவர்னரான முதல் வருஷத்திற்குள்ளேயே ஏற்பட்டன.

**அரசியற் சீர்திருத்தங்கள்**

இதர துறைகளிலுங்கூட ஹேஸ்டிங்ஸ் சீர்திருத்தங்கள் செய்தார். அவர் கம்பெனியின் வியாபாரத்தை முன்னேறச் செய்ததுமன்றி, ஆங்கில உத்தியோகஸ்தர்களுடைய அக்கிரமச் செய்கைகளையும் தடுக்கப் பெரிதும் முயன்றார். சமீபத்தில் உண்டான பஞ்சத்தின்போது அவ்வுத்தியோகஸ்தர்கள் உப்பு, புகையிலை, பாக்கு, அரிசி இவைகளின்மீது நிலைநாட்டின தனி

**இதர சீர்திருத்தங்கள்**

---

* Oswell: Rulers of India, Sketches of: Vol. II, p. 2. For an account of his work at reform, See chap. VI. of Monokton Jone's Warren Hastings in Bengal 1772—74.

† நீட்டித்த விசாரணை செய்தபின்பு, ஷிட்ப்ராய் நிர்தோஷியென விடுதலை செய்யப்பட்டார்; பாட்னாவில் மீண்டும் பெரிய உத்தியோகத்திலமர்த்தப்பட்டார்; ரஸாகானும் நிர்தோஷியென விடுதலை செய்யப்பட்டானெனினும். ஹேஸ்டிங்ஸ் அவனைக் குற்றவாளியென்றே நம்பினார். நவாபின் மந்திரியாயிருந்து பின்பு இழிவுபடுத்தப்பட்ட மகாராஜ நந்தகுமார் அவர்களது வழக்கில் கலந்துகொண்டார். அவன் ஹேஸ்டிங்ஸுக்கு விரோதியாவன்; இவ்வழக்கினால், அவன் ஹேஸ்டிங்ஸிவிடம் கொண்டபகைமை முற்றியது.

உரிமையை ஒழித்தார்.*: இதுவரை நவாபுக்குக் கொடுத்து வந்த பண்த்தைப் பாதிக்கும் கீழாகக் குறைத்துவிட்டார். நவாபினுடைய குடும்பச் செலவையும் குறைத்தார்; மீர்ஜாபரின் மனைவியாகிய †மனி பேகமை அவனுக்கு (நவாபுக்கு) இரக்ஷிணையாகவும், நந்தகுமாரின் மகனுகிய ராஜா குருதாலை அவன் குடும்ப திவானுகவும் நியமித்தார். ஹேஸ்டிங்ஸ் நந்தகுமாரை மிகவும் வெறுத்தார்; ஆனல், டைரக்டர்கள் அவனுடைய ஊழியங்களை உபயோகப்படுத்திக் கொள்ளுமாறு அவரை ஏவினர்; அவர் அவனுடைய மகன் மூலம் நவாபினிடம் முகம்மது ரஸாகான் கொண்டிருந்த செல்வாக்கை அறுக்க எண்ணினர். ஹேஸ்டிங்ஸ், போலீஸ் உத்தியோகஸ்தர்களை ஒன்று பலப்படுத்தி, ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள போலீஸ்இலாகாவை ஒரு தனிப் பட்ட உத்தியோகஸ்தரிடம் கொடுத்தார்; மற்றும் அவர், கிழ்ப்படியாத குடியானவர்களையும் ஜமீன்தார்களையும் கச்சேரியில் சாட்டையால் அடிக்கும்

**கொள்ளைக்காரரை ஒடுக்குதல்**

பழக்கத்தைத் தடுத்தார். எங்கும் நிலவிய கொள்ளையை ஒழித்தார்; நாட்டிலெங்கும் திரிந்துகொண்டு சிறு பிள்ளைகளைத் திருடிச் செல்வது போன்ற அக்கிரமச் செய்கைகளைச் செய்துவந்த சந்நியாசிக் கூட்டங்களை அழித்தார். ஒரு சமயம் அக்கூட்டத்தார்களுக்கு எதிராக அனுப்பப்பட்ட ஆங்கிலப் படையொன்று அவர்களால் ரங்கபுரியில் தோற்கடிக்கப்பட்டது; ஆதலால், ஹேஸ்டிங்ஸ் அவர்களைத் தடுக்க நாட்டின் எல்லைப்புறத்தில் வீரர்களை நிறுத்தவேண்டியதாயிற்று.‡

ஹேஸ்டிங்ஸ் தாம் முதலில் நியமித்த கலெக்டர்கள், போதிய அனுபவமின்மையால் வேலையைச் சரிவரப் பார்க்க முடியாததைக் கண்டார். ஆதலால் அவர் வரி வசூல் செய்யும் வேலையை

**மாகாணச் சபைகளை நிறுவுதல்**

¶இந்திய அமீல்களுக்கே கொடுத்தார். அவ்விந்தியர்களை மேற்பார்வையிடவும், விவசாயிகளிடமிருந்து வரும் முறைமீடுகளைத் தீர்க்கவும் கல்கத்தாவில் வருவாய் நிர்வாகக் கமிட்டி (Committee of Revenue) ஒன்றை ஏற்படுத்தினர். ஜில்லாக்களை ஆறு பெரும் பிரிவுகளாகப் பிரித்து அவைகளைப் பார்வையிட ஆங்கிலக் கமிஷனர்களை நியமித்தார். ஒவ்வொரு பிரிவும் ஐந்து அங்கத்தினை ரடங்கிய ஒரு மாகாணச் சபையால் (Provincial Council) நிர்வஹிக்கப்பட்டு வந்தது; அவ்வங்கத்தினர் அப்பீல்களைத் தீர்க்கவும், நில வருவாய்க் கணக்குகளை ஆராயவும், நில உரிமைத் திட்டத்தைப் பரிசீலனை செய்யவும் அதிகாரம் பெற்றிருந்தனர்.

ஹேஸ்டிங்ஸ் தாம் புதிதாக ஏற்படுத்திய நீதிமன்றங்களுக்கு உபயோகமாகும்படி இந்துக்களுக்கும், முகம்மதியர்களுக்கும் உரிய சட்டங்களைத்

---

* இக்காலத்தில் வியாபார சம்பந்தமாக அவர் எழுதிய கடிதங்கள் அவரது "அனுபவ நுணுக்கங்களையும், மேன்மேலும் அறிவுபெறக் கொண்ட பேரவாவையும், பெரிய விஷயங்களையன்றியும், பட்டு நூல்களைப் புதுமுறையில் தயாரிப்பது பட்டுப்புச்சிக் கூடுகளை வாங்குவதுபோன்ற சிறுவிஷயங்களையும் கவனிக்கும் வன்மையையும்" காட்டுவதாகும்—L. J. Trotter's Warren Hastings, A Biography (1910), p. 94.

† Mani Begam.

‡ வங்காளத்து சந்நியாசிகளும் பக்கிரிக்கொள்ளைக்காரர்களும்.

¶ Indian amils.

தொகுக்க ஏற்பாடு செய்தார். முகம்மதிய சட்டம் ஔரங்கசீப் காலத்திலேயே நன்கு தொகுக்கப்பட்டிருந்தது; அதனையே இப்பொழுது பயன்படுத்திக் கொண்டனர். இந்துக்களின் சட்டம் சீர்குலைந்திருந்தது; ஆதலால் ஹேஸ்டிங்ஸ் பண்டிதர்களைக் கல்கத்தாவிற்கு வரவழைத்து விரிவாக நியாயச் சட்டத்தை எழுதச் செய்தார்; அது, சம்ஸ்கிருதத்திலிருந்து பாரசீக பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டது; கம்பெனி வேலையிலிருந்த ஹால்ஹெட் என்பவர் அதனை 1775-இல் ஆங்கிலத்தில் எழுதினர்.‡

**இந்தியச் சட்டச் சுருக்கம்**

கவர்னர் உள்நாட்டு வியாபாரத்தைத் தடைசெய்த பல வரிகளை நீக்கி ஒரு படிப்பட்ட சுங்க வரியை விதித்து அதற்கேற்பச் சட்டமும் வகுத்தார். அவர் அபினி, உப்பு வியாபாரத்தை முற்றும் அரசாங்கத்தார் விசாரணையின் கீழ் கொணர்ந்தார்: கல்கத்தாவில், ஒரு *பாங்கு ஏற்படுத்தினர்; கம்பெனி உத்தியோகஸ்தர்கள் நிலத்தீர்வை விடுதலிலும், கவர்ன்மெண்ட் ஒப்பந்தங்களிலும் யாதொரு பங்கும் எடுத்துக்கொள்ளக் கூடாதெனத் திட்டமிட்டார்.

**பொருளாக்க சீர்திருத்தங்கள்**

பூடானிய ஹிமயமலையடிவாரத்திலுள்ள சூச்-பிஹார் என்ற சிறு சுதேச நாட்டின்மேல் பூடானியர் படையெடுத்தனர். அந்நாட்டு அரசன் கல்கத்தா கவர்னரினுதவியை நாடினன்: அவனுக்கு உதவியாக ஒரு சிறு சிப்பாய்ப்படை யனுப்பப் பட்டது. படையெடுத்தவர் பணிந்தனர். இப்படையெழுச்சியின் பயனாக ஆங்கிலேயர் முதன்முதலில் திபெத்துக்குத் தூது விடுத்தனர். †போகில் என்ற வாலிபனைப் பூடானுக்கு அனுப்பி, அங்கிருந்து திபெத்தோடு வியாபாரம் நிகழ்த்தச் சாத்தியமாகுமா என்ற விஷயத்தை நிர்ணயிக்கத் திபெத்துக்கு அனுப்பினர். வழியிடையே காணும் மக்களது நடையுடைபாவனைகளையும், பிரமபுத்ரா நதியோடும் வழியையும் கவனித்துச் செல்லுமாறு அவனுக்குச் சொல்லினர். இத்தூது வெற்றிகரமாயில்லை; லாஸா அதிகாரிகளைச் சீனு தேசத்தவர் நெருக்கியமையால் இத்தூது திரும்ப நேரிட்டது.¶ ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இது ஒன்றே தான் திபெத்துக்கும் இந்தியாவுக்கும் நிகழ்ந்த சம்பந்தமாகும்.

**திபெத்துக்குத் தூது அனுப்புதல்**

ஆங்கில எல்லைக்குப் புறம்பேயும் கலவரங்கள் ஏற்படும்போலிருந்தன. பானிபட்சண்டையால் விளைந்த சீர்கேட்டினின்று மராட்டிய அதிகாரம் திரும்ப நன்னிலை யெய்தியது. 1769-இல் பேஷ்வா அனுப்பிய சேனையொன்று§ ஜாட்டுகளின் மேலும் ராஜபுத்திரர்களின் மேலும் கொள்ளை

---

* Bank. † Bogle.

‡ இந்த நியாயச்சட்டத்தொகுப்பு ஹேஸ்டிங்ஸுக்கே அர்ப்பணம் செய்யப்பட்டது; இது ஜனங்களுக்கு நம்பிக்கையை ஊட்டியது; நீதிமன்றங்களில் வழக்குகள் விரைவில் தீர்க்கப்பட்டன. ஹேஸ்டிங்ஸ் "சிலர் கூறியதுபோல், இந்தியர்கள் நாகரிகமற்ற நிலைமையிலில்லை" என்பதை நிரூபிக்க, இந்த நியாயச்சட்டத்தின் சில பகுதிகளை இங்கிலாந்தில் சீர்த்திபெற்ற நியாயாதிபதியான லார்டுமான்ஸ் பீல்டுக்கு அனுப்பினர்.

¶ Markham's Narrative of Bogle's Mission (Trubner & Co. 1876). இது இன்பம் பயப்தாய் அக்கால திபெத்தைப்பற்றி நன்கு கூறுவதாகும்.

§ Jats.

வரிகளை வித்தித்து யூசப்ஸை சாதியைச் சேர்ந்த ரொஹில்லர்கள் என்ற பலம் வாய்ந்த ஜனங்கள் ஆண்ட ரொஹில்கண்டையும் பாழ்படுத்திற்று. இப்பிரதேசம் அயோத்திக்கு வடமேற்கிலுள்ளது. மற்றும் பானிபட்டில் தங்கள் விரோதிகளுக்கு அயோத்தி நவாப் உதவிசெய்ததற்காக அவனைப் பழிக்குப்பழி வாங்குவதாகப் பயமுறுத்தினர். 1770-இல் அவர்கள் டெல்லியுள் வெற்றிகரமாகப் புகுந்து அலஹாபாத்தில் சில்லாண்டுகளாக ஆங்கிலக் கம்பெனியின் கைதியாய் அமைதியுடன் வாழ்ந்து வந்த ஷாஆலத்தை ஆங்கு உடனே வரவழைத்தனர். சலனபுத்தியுள்ள சக்கரவர்த்தி மீண்டும் தம் முன்னோர்களின் சிம்மாசனத்திலே ஏறலாமென எண்ணினான். கல்கத்தா சபை தடுத்தும் கேளாமல், ஷாஆலம் 1771-மே மாதத்தில் ஒரு சிறு படை திரட்டி, அலஹாபாத்தினின்று கிளம்பி கிறிஸ்த்மஸ் தினத்தன்று டெல்லியுள் பிரவேசித்தான். ரொஹில்கண்ட் படையெடுப்பில் அவன் மராட்டியரோடு கலந்துகொள்ளினும், விரைவில் உதவியற்றுப்போய் தனக்குக் கிளைவ் முன்னர்க்கொடுத்த கோரா, அலஹாபாத் ஜில்லாக்களை அவர்களுக்குக் கொடுக்க நேர்ந்தது. வட இந்தியாவில் ஆங்கிலேயர்க்குப் பெருத்த பகைவரான மராட்டியர் வசம் இவ்விரு ஜில்லாக்களையுமளிக்க ஹேஸ்டிங்ஸ் உடன்படவில்லை. மேலும் இவ்விரு ஜில்லாக்களும் பிஹாரை அயோத்தியோடு இணைத்தன. ஹேஸ்டிங்ஸ் இந்த ஜில்லாக்களை வசப்படுத்துவதற்கு விரைவில் தூருப்புக்களை யனுப்பிச் சக்கரவர்த்திக்குச் செலுத்தி வந்த வருடாந்தரக் கப்பத்தை நிறுத்தி விட்டார்.

**புறத்தினின்று வினைந்த தொந்தரவுகள்**

**அலஹாபாத்தி லிருந்து ஷாஆலம் புறப்படல் (1771)**

ரொஹில்கண்டை மராட்டியர்கள் தாக்க ஆரம்பித்ததுமே, ரொஹில்லரின் தலைவர்களான *ஹபிஸ்ரஹ்மத்கானும் மற்றையோரும் பயங்கொண்டனர். பன்னிரண்டு வருடங்கட்குமுன் மராட்டியப் படையெழுச்சியைத் தடுத்துத் துரத்தியவனை அயோத்தி நவாபுடன் சேர்ந்துகொண்டால்தான் தங்கள் நாடு உய்யும் என அவர்கள் நன்கு உணர்ந்தனர். ஆனால் நவாபே மராட்டியர் செய்த ஏற்பாடுகளைப் பார்த்து அஞ்சினன், மற்றும், நவாப் ரொஹில்லர்மீது எப்போதும் சந்தேகங்கொண்டிருந்தான். ரொஹில்லரும் தங்களுக்குள் அடிக்கடி சண்டையிட்டு வந்ததனால் மராட்டியர்கள் அவர்கள் நாட்டிற்குள் படையெடுக்க ஏதுவாயிற்று. இதனால், நவாப் ரொஹில்லரை நசுக்குதலில் ஆங்கிலேயர் தனக்கு உதவி செய்வதாயிருந்தால், தான் 1765-இல் கைவிடுத்த ஜில்லாக்களைத் திரும்பவாங்கிக் கொள்வதாகவும், மேலும் ஆங்கிலேயர்க்குப் பெருத்த பணத்தொகையைக் கொடுப்பதாகவும் ஹேஸ்டிங்ஸுக்குத் தெரிவித்தான். முன்னரேயே ரொஹில்லர், நவாபோடு சமாதானஞ் செய்துகொண்டு, நவாப் மராட்டியரைத் தங்கள் நாட்டினின்று துரத்தினால் அவனுக்கு 40 லக்ஷம் ரூபாய் கொடுப்பதாக வாக்களித்திருந்தனர். 1775-ஆம் ஆண்டு முதலிலேயே படையெடுத்து

**ரொஹில்லரும் அயோத்தி நவாபும்**

* Hafiz Rhmat Khan.

வந்த மராட்டியரை நவாப்பின் சேனையும் ஆங்கிலச்சேனையும் ஒன்றுகூடித் துரத்தின. பின்பு, நவாப் ரொஹில்லர் தலைவனான ஹபிஸ்ரஹ்மத்காணைக் குறித்த பணத்தொகையைக் கேட்டபோது அவன் ஏதோ சாக்குப்போக்குச் சொல்லி வந்தான். ஆதலால் அயோத்தி நவாப் ரொஹில்லரை அடக்கத் தீர்மானித்தான்.

**ஹேஸ்டிங்ஸ் காசியில் உடன்படிக்கை செய்துகொள்ளல் (1773)**

ஹேஸ்டிங்ஸ் காசியில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார் (ஆகஸ்டு 1773). அதன்படி அயோத்தி நவாபுக்கு ஆங்கிலேயர் கோரா, அலகாபாத் ஜில்லாக்களைக் கொடுக்க உடன்பட்டனர். அதற்குப் பதிலாக நவாப் ஆங்கிலேயருக்கு 50 லக்ஷம் ரூபாய் கொடுக்க வேண்டும். மேலும், ஆங்கிலேயர் அவன் ரொஹில்கண்டை ஜெயித்துப் பிடிப்பதற்குத் தங்கள் படைகளைக் கொடுத்து உதவவேண்டும். மற்றும் அச்சண்டை முடிந்த பிறகு ஆங்கிலேயருக்குப் பெருத்த பணத்தொகையுடன் கங்கைக்கரையில் காசிக்குச் சற்று வடக்கேயுள்ள சுனார் கோட்டையையும் கொடுத்தல் வேண்டும். இக்கோட்டை கிடைப்பின், கங்கைச் சமவெளியின் வடபகுதியில் ஆங்கிலேயரது ஆதிக்கம் வலியுறும்.

**ஹேஸ்டிங்ஸ் அவ்வாறு செய்ததற்குக் காரணங்கள்**

நவாப் கேட்டவைகளை ஹேஸ்டிங்ஸ் கொடுக்க உடன்பட்டதற்குக் காரணங்கள் பல உள. அவற்றுள் மராட்டியர் மறுபடியும் சமயம் நேர்ந்தபோது படையெடுப்பர் என்று ஹேஸ்டிங்ஸ் கொண்ட பயமும், நவாப் ஆங்கிலேயரிடம் வைத்த விசுவாசத்தில் ஹேஸ்டிங்ஸ் கொண்ட நம்பிக்கையும் முக்கியமானவை. மற்றும் அவர் கம்பெனியின் செல்வாதாரத்தை உயர்வுபடுத்த எண்ணினர். மேலும் அயோத்தியுடன் ரொஹில்கண்டைச் சேர்க்க விரும்பினர். அங்ஙனம் செய்து அயோத்தி நாட்டின் எல்லையை இயற்கைவரம்பாகிய இமயமலைத்தொடர்வரை பரப்ப எண்ணினர். அவர் ரொஹில்லர் மராட்டியருடன் சேர்ந்துகொண்டால் அயோத்தியேயன்றிப் பிறரும் வங்காளமும் ஆபத்திற்குள்ளாகும் என்பதை நன்கு உணர்ந்தார்.* அக்காலத்தில் கம்பெனியின் துருப்புக்களை நட்பரசின் உதவிக்காக அனுப்புவது வழக்கமாதலின் ஹேஸ்டிங்ஸின் செயலை ஆங்கிலச் சபையினர் ஆமோதித்தனர். ஆயினும் டைரக்டர்கள் ஹேஸ்டிங்ஸின் இந்த ஏற்பாட்டை "நீதி முறைப்படி ஆலோசியாது அரசியல் காரணங்களையேறிட்டுக் குற்றங்கண்டனர்."

ரொஹில்லர்க்கு எதிரே படையெடுத்து அவர்களை மீரான்பூர்காத்ரா என்ற விடத்தில் முறியடித்து அவர்களதிகாரத்தைச் சிதைத்தனர். ஹபிஸ் ரஹ்மத்தானும் இறந்தான். நவாபின் துருப்புக்கள் ரொஹில்லரின்

---

* ஹேஸ்டிங்ஸின் அபிப்பிராயப்படி, ரொஹில்கண்டை அயோத்தியோடு சேர்த்துக் கொள்வதால், அயோத்தி நவாப் "கங்கைநதிமூலம் பிறபடைபெடுப்புகள் திகழாவண்ணம் தடுக்கக் கட்டுப்பாடுடைய நாடொன்று பெறுவன்.....அவன் நம்மொடு பகைமை பாராட்டினாலும் அல்லது நம் பாதுகாப்பை விரும்பினாலும்.....நம் படைகளுக்கு அவன் எளிதில் வசப்படுவன்." அவனது நாட்டு எல்லை மராட்டியர்களுக்கருகே நெருங்குதலால், நவாப் ஆங்கிலேயரையே நம்பியிருக்கவேண்டிவரும். எனெனில், அவனுக்கு மராட்டியரைத் தன்னந்தனியே எதிர்க்க ஆற்றலில்லை. இதனால் நமக்கும் அவனுக்குமிடையே ஏற்பட்டஒற்றுமைஉறுதிபெறும்என்பது.—Forrest's Administration of Warren Hastings.

பாசறைகளை முற்றிலும் கொள்ளையிட்டன. நவாப் தான் கொள்ளையிட்ட

**ரொஹில்லருடன் சண்டை**

பொருளில் ஆங்கிலத் துருப்புக்களுக்குப் பெருந் தொகை கொடுத்தான். இனி மேன்மேலும் எதிர்ப்புகள் நிகழாதபடி அடக்க முரட்டு வழிகளையும் மேற்கொண்டான். ரொஹில்கண்டு அயோத்தியோடு சேர்க்கப்பட்டது; அநேக ரொஹில்லர்கள் கங்கையைக்கடந்துமேலப்பக்கத்திற்குடியேறினர். ஹபிஸ்ரஹ்மத்கானுடைய பிள்ளையாகிய பெய்ஸுல்லாகான், தன் தகப்பருடைய மானியமாகிய ராம்பூரைத்தானே அனுபவிக்குமாறு அனுமதிக்கப்பட்டான். இச்சண்டையின் முக்கிய விளைவு யாதெனில் இடைப்பட்ட நாடாகிய அயோத்திக்கு ஒரு நிர்ப்பயமான வரம்பு கோலப்பட்டது. ரொஹில்கண்டு மராட்டியர்களால் பயமுறுத்திக் தாக்கப்படாமல் நாற்பது வருடங்கட்குமேல் அமைதி குடிகொண்டு நிலவியது.

**அதன் விளைவுகள்**

"ரொஹில்கண்டைப் பிடித்துக்கொண்ட செயலால், இந்தியாவிலுள்ள நம் விரோதிகளுள் அதிக அபாயகரமான மராட்டியரிடமிருந்து அயோத்தியும் வங்காளமும் நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட்டன. ஹேஸ்டிங்ஸ் கோரிய எண்ணமும் நிறைவேறியது."*

ரொஹில்கண்டை ஜெயிப்பதில் ஹேஸ்டிங்ஸ் மேற்கொண்ட கொடுமான வழிகளே பின்னர் பார்லிமெண்டின் முன்னர் அவன்மேல் சாற்றப்பட்ட குற்றங்களுள் முதன்மையதாகும். ரொஹில்லப் போரின் நடைமுறை பழிப்புக்கிடமானதென்பது உண்மையே; இப்போரை நிகழ்த்தியதன் அடிப்படையான நோக்கமுறையும் குற்றத்திற்கிடமான தொன்றே. ஆனால், மில்லும், மெகாலேயும் ரொஹில்லப் போரைப்பற்றிய வரலாறு கூறுமிடத்துத் தமது மனப்பாண்மையை வெளியிட்டு உண்மைச் சரித்தைதப் பொய்ப்பித்தனர்; ரொஹில்லரின் கபடமின்மையையும், அவர்களைத் தோற்கடித்தபின்பு செய்த கொடுமைச் செயல்களையும், அவர்கள் கஷ்டங்களை ஹேஸ்டிங்ஸ் சிறிதேனும் உணராத தன்மையையும்பற்றி அவ்விருவரும் உண்மை நெறி விலகிக் கூறினர். "சரித்திர வரலாற்றில் இதனைக் காட்டிலும் பெருத்த அபாண்டமான அபவாதம் வேறொன்று காணக்கிடக்கிலது."† உண்மை யாதெனில் இந்த நடவடிக்கை முற்றும் பணப்பேராசையால் பழுதுற்று நடுநிலையின்மையாகிய குற்றத்தால் நடந்தேறியது.

**இவ்விஷயத்தில் ஹேஸ்டிங்ஸுக்கு ஏற்பட்ட குற்றம்**

---

* Strachey's Hastings and the Rohilla War, p. 264.

† See Forrest's Selections from the State-Papers of Warren Hastings, Introduction p. XXI: அவர் மேலும் எழுதுவதாவது :—"ரொஹில்லர்களுக்குச் செய்த அட்டூழியங்கள் சாம்பியன் பிரான்ஸிஸ் இவ்விருவருங்கொண்ட துவேஷத்தினால் பிறந்து, பர்க்கின் பேச்சு வல்லமையால் வளர்ந்து, மெகாலேயின் சரியுறுத் தெளிந்தொழுகும் நடைவன்மையால் பரந்துபட்டது." லயல் "ரொஹில்லர் கோபமூட்டாமலேயேயிருக்க, அவர்களுக்கெதிரெடுத்த படையெடுப்பு தவறென்றும், நவாபை நன்மைகளைத் தூண்டியோகளும் செய்தலேயே நம்பலாமென்றும்" கூறுகிறார்—Warren Hastings, p. 49. A. M. டேவிஸ் என்பவர் இந்திய அரசுக்காக ஆங்கிலத் துருப்புகளைக் கூலிக்குப் போரிடுமாறு ஹேஸ்டிங்ஸ் அமர்த்தினால் என்ற குற்றத்தைத் திவிரமாகக் கண்டிக்கிறார். (Warren Hastings; 1934) p. 8.

## பகுதி. 2. பார்லிமெண்டார் கம்பெனி ஆட்சியில் தலையிடுதலும் ஒழுங்குமுறைச் சட்டமும்

ஹேஸ்டிங்ஸ் வங்காள கவர்னராய் நிகழ்த்திய வேலைகள் பலவெனினும் அவை ஒழுங்குற நடந்தேறின: அவன் கல்கத்தா சபையோடும், இலண்டனிலுள்ள டைரக்டர்கள் மன்றத்தோடும், சுயேச்சையொடுதான் ஒத்துழைத்தான். இப்போது அவனது சுதந்திரத்திற்குத் தளைகளிடப் பட்டன; அவன் தனது ளஞ்சிய வாழ்க்கையில், கல்கத்தா சபையினரோடும் இங்கிலாந்திலுள்ள தன் பகைவரோடும் நீட்டித்த சச்சரவிட நேரிட்டது. இந்தப் புதிய நிலைமைக்குக் காரணம் ஒழுங்குமுறைச் சட்டத்தை நிறைவேற்றியமையாகும்; அது, இந்தியாவில் கம்பெனியின் ஆட்சி முறையை அறவே சீர்திருத்தியது.

கிளைவ் திவானியைப் பெற்றுக் கொண்ட செய்தி இங்கிலாந்துக் கெட்டியவுடனே நிர்வாகச் (ப்ரொப்ரைடர்) சபையினர், கம்பெனிப் பட்டயத்தை இன்னும் சிலகாலம் நீட்டிக்குமாறு அரசாங்கத்தை வேண்ட ஆலோசித்தனர். அதற்காக, கம்பெனியடையும் புதிய இலாபங்களில் அரசனும் பங்கெடுத்துக் கொள்ளலாமென வெளியிட்டனர். 1766-இல், காமன்ஸ் சபையினர் அக்காலத்திய கம்பெனியின் ஊழல்களை விசாரிக்குமாறு கமிட்டியொன்றை நியமித்தனர். இந்திய விவகாரங்களில் இங்கிலாந்திலுள்ளோர் அக்கறை எடுத்துக் கொள்ளத் தொடங்கினர். கம்பெனி, இந்தியாவிலோங்கிவளரும் தன் இராஜ்ஜியத்திற்குக் கப்பமாக மேனாட்டு ஆங்கில அரசாங்கத்தாருக்கு 400000பவுன்கள் செலுத்தும்படி பார்லிமெண்டார் சட்டமொன்று இட்டனர். கம்பெனியின் பணக் கஷ்ட நிலையை நன்குணர்ந்த கிளைவ் இச்சட்டத்தைக் கண்டித்து 'இது அநியாயான பணப்பிடுங்கலாகும்' என்றனர். ஆனல், பார்லிமென்ட் கிழக்கில் பெற்ற நாடுகளால் இலாபமடையத் தீர்மானித்தது. அதன் பயனக, கம்பெனிக்குச் சேரும் இலாபக்கூறு (dividend) கட்டுப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தால், பார்லிமெண்டுக்குக் கம்பெனி விவகாரங்களில் தலையிட உரிமையுண்டு என்பது விசதமாக்கப்பட்டது; ஆனல், இந்தியாவில் கம்பெனியின் *அரசுத் தலைமையை விசாரணை செய்து நிர்ணயிக்க அது முற்படவில்லை.

**பார்லிமெண்ட் தலையிடுதலின் தொடக்கம்**

கிளைவ் கம்பெனியினிடமிருந்து அதனது இந்திய நாடுகளைப் பிடுங்கி விடுமாறு சாதாம் பிரபுவுக்கு முன்னரே எழுதியுள்ளார்; சாதாம் பிரபு, லார்ட் ஷெல்பர்ன் என்பவர்க்கு "கம்பெனி, வியாபாரம் பற்றியடையும் வருமானங்களைத் தவிர, †நாட்டியல் பற்றியடையும் வருமானங்களைப்பொது கஜானவுக்குச் செலுத்தல் வேண்டும்" எனத் தன் கருத்தைத் தெரியப் படுத்தினர். அக்காலப் பொதுமக்கள், 'மன்னர்க்கேயன்றி ஆங்கில வியாபாரச் சங்கத்திற்கு வெளியே நாடுகளைச் செயித்து ஆள நியாயப்படி உரிமையுண்டா?' என்று சிந்தித்தனர்." 1769-இல் பார்லிமெண்ட் மற்றொரு சட்டத்தால், கம்பெனியை வருடந்தோறும் 400,000 பவுன்கள்

**கிளைவின் நோக்கம்**

* Sovereignty. † Territorial.

செலுத்த வற்புறுத்தியது; மேலும், குறைந்த பட்சம் 300000 பவுன்கள் மதிப்புள்ள *ஆங்கிலச் செய் பொருள்களை ஏற்றுமதி செய்யவும் வற்புறுத்தியது. எல்லோரும் கம்பெனி இந்தியாவில் பெருத்த இலாபங்களடைகின்றதென நம்பினர்; உண்மையில், அதற்கு நேர்ந்த கஷ்டங்கள் மிகப்பல: அது அடிக்கடி †இங்கிலாந்து பாங்கிலிருந்து கடன்வாங்கி வந்தது.

**கம்பெனியின் நிலைமை**

அது, தான் செல்வந்தரிட்ட மேற்கொண்ட எண்ணங்கள் பழுதுற்றமைக்குக் காரணங்களை விசாரிக்க இந்தியாவுக்கு ஒரு கமிஷன் அனுப்பியது. கம்பெனியின் இந்திய விவகாரங்களில் மந்திரிச் சபையும் தலையிட்டது. நவாப் முகம்மது அலியின் நண்பர்கள் தெரிவித்தபடியே, லின்ட்ஸேயும் ஹார்லாந்தும் ஒருவர் பின்னொருவராக நவாபுக்கு உதவிபுரிய, மன்னரின் கமிஷனர்களாக அனுப்பப்பட்டனர். 1772-இல், பார்லிமெண்டு திறப்பு விழாவில் மன்னர் ஆற்றிய சொற்பொழிவில், இந்தியாவிலுள்ள ஆங்கிலப் பிரதேசங்களுக்குப் புதுச்சட்டங்களைச் சிபார்சு செய்தனர்; ஏப்ரல் மாதத்தில் காமன்ஸ் சபையினர் கம்பெனி விவகார ‡விசாரணைப் பொறுக்குக் கழகமொன்று நியமித்தனர். விரைவில், கம்பெனி தன் தொல்லைகளிலிருந்து விடுதலையடையவெண்ணி, மந்திரிச் சபையைக் கடன் கொடுத்துதவுமாறு கேட்டது. இதைக் காரணமாகக் கொண்டு கம்பெனி விவகாரங்களையும் தஸ்தாவேஜுகளையும் பார்வையிட்டு விசாரணை செய்ய ஒரு ¶இரகசிய கமிட்டி தொடங்கப்பட்டது. கம்பெனி சண்டையிட்டும் உடன்படிக்கை செய்தும் கைக்கொண்ட பிரதேசங்களனைத்தையும் ஆங்கில அரசாங்கத்தாரே எடுத்துக்கொள்ளுமாறு பொறுக்குக் கழகம் சிபார்சு செய்தது; மேலும், அது கம்பெனிக்குச் சேர வேண்டிய பணங்களையும் கிளைவ் வாங்கிக் கொண்டானெனக் கிளைவின்மீது குற்றஞ் சாட்டியது.

**பார்லிமென்டின் விசாரணைக் கமிட்டி (1772)**

கம்பெனியின் கஷ்டங்கள் மிகுதிப்படவே, டைரக்டர் சபையினர் ஒரு பெருந் தொகையைக் கடனாகக் கொடுக்குமாறு பார்லிமெண்டைக் கேட்டனர். இதைக் காரணமாகக் கொண்டு பார்லிமெண்ட் கம்பெனியின்மேல் புதிய நிபந்தனைகளை யிட்டது. **லார்டு நார்த்** கம்பெனியின் அமைப்பு முறையை மாற்றுதற்கேற்ப பல ஆலோசனைகளைப் பார்லிமெண்டில் கொணர்ந்தார். இந்த ஆலோசனைகளை அடிப்படையாகக்கொண்டு 1773-ஆம்வரு அக்டோபர் மாதத்தில் ஒழுங்குமுறைச் சட்டம் ஏற்பட்டது. அது, 1774-ஆம் வரு ஆகஸ்டுமீ இந்தியாவில் சட்டமாகப் பயின்றது. இச் சட்டம் கம்பெனியின் அமைப்பு முறையில் மாறுதல்களை உண்டாக்கியது; அன்றியும், ஆங்கில அரசாங்கத்தொடு கம்பெனி மேற்கொண்ட சம்பந்தங்களிலும் மாறுதல்களை ஏற்படுத்தியது. இது முதற்கொண்டு கம்பெனி முற்றிலும் மந்திரிச் சபைக்கு வசப்பட்ட தெனலாம்; மந்திரிகள் பார்லிமெண்டிற்கு எவ்வளவு பொறுப்புடையரோ அவ்வளவு பொறுப்புதான்

**ஒழுங்குமுறைச் சட்டம் ஏற்படல் (1773)**

---

* British manufactures. † Bank of England.
‡ A Select Committee of Inquiry. ¶ Secret Committee.

கம்பெனியிடத்தும் காணப்பட்டது.'* இந்தியாவிற்கு ஒரு விழுமிய அரசாட்சியை நிறுவுவதற்குப் பார்லிமெண்ட் மேற்கொண்ட முதற்செயல் இதுவாகும்; இது, தீவிர கண்டனத்திற்குள்ளாயிற்று. கம்பெனிக்குச் சத்துருவாகிய பிட் இச் சட்டம் "கம்பெனியின் பட்டயத்தை மீறியது என்றும், பிரத்தியேக மனிதர்களைக் கொள்ளையிடுவது என்றும்" கடுமையாகக் கண்டித்தார்.†

**கம்பெனியின் அமைப்பு முறையில் மாறுதல்கள்**

இங்கிலாந்திலும் கம்பெனியின் அமைப்புமுறை இச்சட்டத்தினால் சிறு மாறுதலே யடைந்தது. டைரக்டர்கள் ஒரு வருடத்திற்குப் பதிலாக நான்கு வருடங்கள் பதவிவகிக்கலாம்; ஓர் ஆண்டுக்குக் குறைந்த பட்சம் 1000 பவுன் முதற்பணம் வைத்துள்ள பங்குதாரர்களே ப்ரொப்ரைடர் சபையில் ஓட்டுரிமை யுடையர். கம்பெனி விவகாரங்களில் தலைமை வகிப்போரின் பொறுப்பை அதிகப்படுத்துவதும், டைரக்டர் தேர்தல்களில் நிகழும் அக்கிரமங்களைத் தடுப்பதும் இதன் நோக்கமாகும்.

**வங்காள கவர்னர்—ஜெனரலும் அவரது சபையும்**

வங்காள கவர்னருக்கே மற்றைய இராஜதானிகளின்மீது அதிகாரம் கொடுக்கப்பட்டது. இதர இராஜதானிகளின் கவர்னர்கள் தாமாகவே சண்டையோ சமாதானமோ செய்யக்கூடாது. வங்காள கவர்னர் இனி, கவர்னர்—ஜெனரல் என வழங்கப் பட்டார். அவருக்கு நான்கு அங்கத்தினரடங்கிய சபை உதவி செய்தது. முதலில் கவர்னர் ஜெனரலாகவும் சபையின் அங்கத்தினர்களாகவும் நியமிக்கப்பட்டவர்களின் பெயர்கள் இச்சட்டத்திலேயே எழுதப்பெற்றிருந்தன; அவர்கள் ஐந்து வருடங்கள் அப்பதவிகளை வகிக்க வேண்டும். இவர்களுக்குப் பின் வருவோர் கம்பெனியால் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். கவர்னர் ஜெனரலின் சபையில் பெரும்பாலோருடைய அபிப்பிராயமே (Vote of the Majority) முடிவான தீர்மானமாகும்; எச்சமயத்தில் அபிப்பிராய பேதம் உண்டாகி, எப்பக்கத்தில் தீர்ப்புச் செய்வதென்பது கடினமாயிறதோ அப்பொழுது கவர்னர் ஜெனரலுக்கு முடிவு செய்வாக்கு (Casting Vote) உண்டு.

**ஆர்டினன்ஸ்கள்**

கம்பெனிக்கு அடங்கிய நாடுகளின் மீதெல்லாம் 'ஆர்டினன்ஸ்' (Ordinance) என்று சொல்லப்பட்ட சட்டங்களிட அதிகாரம் கவர்னர்ஜெனரலுக்கும் அவரது சபையினருக்கும் கொடுக்கப்பட்டது. இச்சட்டங்கள் இங்கிலாந்திலுள்ள சட்டங்களுக்கு விரோதமாயிருக்கக்கூடாது; ஒழுங்குமுறைச் சட்டத்தாலேற்பட்ட உயர்தர நீதிமன்றத்தில் (Supreme Court) இச்சட்டங்கள் பதிவுசெய்யப்பட்டு வெளிவரும் வரையில் அவை பயனற்றவையேயாம். ஆங்கில மன்னர் தம் சபையினோடு கலந்துபேசி இச்சட்டங்களை யெடுத்து விடலாம்.

---

* இச் சட்டத்தின் நன்மைகளைப்பற்றி அக்காலத்திய அபிப்பிராயபேதங்கள் பலவாம்
—See A. M. Davies : Warren Hastings : p. 142.

† Early Chartered Companies, p. 141.

உயர்தர நீதிமன்றத்தில், ஆங்கில மன்னரால் நியமிக்கப்பட்ட ஒரு தலைமை நியாயாதிபதியும், மற்றும் மூன்று நியாயாதிபதிகளும் இருந்தனர்;

**உயர்தர நீதி மன்றம்**

அம்மன்றத்திற்கு சிவில் கிரிமினல் விவகாரங்களையும், *கடற்படையாட்சிவிஷயமான விவகாரங்களையும் †மத சம்பந்தமான விவகாரங்களையும் பற்றி விசாரிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அம்மன்றத்தின் அதிகாரம் வங்காளம் பிஹார் ஒரிஸ்ஸா மாகாணங்களில் **ஆங்கில அதிகாரத்துக்குட்பட்ட** குடிகளின்மீது பரவியிருந்தது; எல்லாக்குற்றங்களையும் விசாரிக்க, ஒரு பிரிடிஷ் ‡தீர்ப்புதவுக் கூட்டம் அதற்கு உதவி செய்தது. அம்மன்றம் வழக்குகளைப் பதிவு செய்வதுமன்றி, ஜெயிலிலிருந்து கைதிகளை விடுதலை செய்யும் அதிகாரமும் பெற்றிருந்தது. இந்த மன்றத்திற்கு மேலும், அப்பீல் செய்வதாயிருந்தால், ¶ஆங்கில மன்னர்க்கும் அதன் சபைக்கும்தான் அப்பீல் செய்யவேண்டும்.

சட்டத்தின் இத்தர ஷரத்துக்கள் கம்பெனியின் உத்தியோகஸ்தர்களை நன்கொடையோ பிரத்தியேக வியாபாரமோ செய்யக்கூடாதெனத் தடையிட்டன. ஆங்கிலமக்களுக்குக் கம்பெனியின் ஊழல்கள் வெட்ட வெளிச்சமாகவே, பார்லிமெண்டில் இருகட்சியினரும் அவைகளை எதிர்க்கலாயினர். ஆதலின் இந்த இதர ஷரத்துக்கள் அத்தகைய ஊழல்களை நீக்க முற்பட்டன.


**இதர ஷரத்துக்கள்**

முதல் கவர்னர் ஜெனரலாகி 1785–வரையில் அப்பதவியை வகித்த ஹேஸ்டிங்ஸுக்கும் அவரது சபையோர்க்கும் ஏற்பட்ட சண்டைகளும், சபையோர்க்கும் உயர்தர நீதிமன்றத்திற்கும் ஏற்பட்ட சண்டைகளும் ஒழுங்குமுறைச் சட்டத்தாலேற்பட்ட குறைபாடுகளினால் உண்டானவை. கவர்னர்-ஜெனரலுடைய அதிகாரமும், அவரது சபையோரின் அதிகாரமும், உயர்தரமன்ற நீதிபதிகளின் அதிகாரமும், கவர்னர்-ஜெனரலுடைய சபைக்கும் நீதிமன்றத்துக்குமிடையேயுள்ள சம்பந்தமும் தெளிவுபட வரையறுக்கப்படாமையால் அவர்களுக்குள் சச்சரவுகள் உண்டாயின. ஹேஸ்டிங்ஸுக்கும் அவரது சபையோர்க்கும் அடிக்கடி சண்டைகளேற்பட்டன. உயர்தர நீதிமன்றமோ கம்பெனி உத்தியோகஸ்தர்களை மேற்பார்வையிடவும், சுதேசமக்களைப் பிறர் வருத்தாமல் பாதுகாக்கவும் எண்ணியது. ஆனால், கவர்னர்ஜெனரல் சபையோர் இவர்களது ஆணைகளில், எவ்வளதூரம் உயர்தர நீதி மன்றம் தலையிடலாமென்பது சட்டத்தில் அறுதியிட முடியவில்லை. இவர்களைப் பொறுத்தமட்டில், இவர்கள், இம்மன்றத்தின் பலாத்கார அதிகாரத்திற்குட்பட்டவரல்லர். மேலும் இந்தியப் பிரஜைகளின் வாழ்க்கைக்கும் நிலைமைக்கும் ஏற்காத ஆங்கிலச் சட்டத்தை அது பிரயோகித்தது; இந்தியப் பிரஜைகளனைவர் மேலும் உயர்தர நீதிமன்றம் அதிகாரம் செலுத்துவதா அல்லது கம்பெனியின் கீழ் உத்தியோகத்திலமர்ந்துள்ள

**ஒழுங்குமுறைச் சட்டத்தின் குறைபாடுகள்**

---

* Admiralty. † Ecclesiastical. ‡ Jury. ¶ King-in-Council.




*கமார் கி. பி. 1765-இல் ஆங்கிலே ராஜ்யத்தைக் காட்டும்*

**இந்தியா படம்**

இந்தியர்கள் மேல் மட்டும் செலுத்துவதா என்ற விஷயம் நிர்ணயிக்கப் படவில்லை*.

அதன் நன்மைகள்

இந்தக் குறைபாடுகளிருப்பினும், இச்சட்டம் நன்மதிப்பிற்குரியது. ஏனெனில் முன்னரே குறித்தபடி, ஆங்கில பார்லிமென்டின் கீழ் இந்திய அரசியலுக்கொணர்தற்கு இதுமுதல் முயற்சியாகும். மற்றும், ஒழுங்குபட்ட சட்டங்களையும் நியாயத் தையும் இந்தியர்களுக்கு வழங்கவும், இந்திய உத்தி யோகத்துறைகளின் ஊழல்களைச் சீர்திருத்தவும் முதன்முதல் செய்த முயற்சியாகும். மொத்தத்தில், அது *"ஒரு கடின விஷயத்தைத் தீர்ப்பதற் கேற்பட்ட ஒரு நன்முயற்சியாகும்." இச்சட்டநீதின் குறைபாடுகளே ஹேஸ்டிங்ஸைப் பார்லிமென்ட் சபையில் குற்றவிசாரணைக்குக் கொணர்ந் தன. இக்குற்றவிசாரணையால் ஆங்கில மக்களது †அரசியலுணர்ச்சி கிளர்ந்தெழுந்தது.

## பகுதி 3 : ஹேஸ்டிங்ஸும் ஆட்சி முறையும்.

ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாதல்

ஹேஸ்டிங்ஸ், அவருடைய யோக்யதைக்கும், கிறமைக்கும் கவர்னர் ஜெனரலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனினும் இச்சட்டத்தைப்பற்றிய அவரது கருத்துக்கள் ஏற்கப்படவில்லை. ஆனல், லார்டுகளவைக்கு இப்பதவிகொடுக்கப்பட்டிருந்தால் இதனை மறுக்காமல் ஏற்றிருப்பர் என்ப. பழைய சபை அங்கத்தினருள் ஒருவராய **பார்வெல்** தவிர வேனைய மூன்று அங்கத்தினர் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்டனர். அவர்கள் **ஜெனரல் லாஜான் க்ளாவெரிங், கர்னல் மான்ஸன், பிலிப் பிரான்ஸிஸ்** எனப் பெயர் பெறுவர். க்ளாவரிங்கும் மான்ஸனும் இராணுவ வீரர்களான மையால் அவர்களுக்கு அறிவுத் தேர்ச்சியும் அரசியற்றுறையில் சாமர்த் தியமும் சிறிதுமில்லை. ஆனல், அவர்களுக்குப் பார்லிமென்டில் செல்வாக் கிருந்தது. மற்றும், அரசும் அவர்களை யாதரித்தது.

சபையில் பெரும் பான்மையோர் பிலிப் பிரான்ஸிஸ் பக்கஞ்சார்தல்

பிரான்ஸிஸ் என்பவர் விக் கட்சியைச் சார்ந்தவர், அவர் ஜூனியஸ் என்ற மாறுபெயர் கொண்டு ஜூனியஸ் கடிதங்களை எழுதியதாகக் கூறப்பட்டது மன்றி, அவ்விதம் அவர் எழுதுவதை நிறுத்துவதற் காகவே அவருக்கு இப்பதவியளிக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டது.‡

---

* Vide pp. 53—55 of C. P. Ilbert's. The Government of India (3rd Edition.)

* 'An honest attempt to deal with a difficult problem '.

† Political Consciousness.

‡ ஜூனியஸ் என்ற மாறுபெயர் உடையரோ அல்லரோ அது கிடக்க : பிரான்ஸிஸ் தூஷித்தும் கிந்தித்துமெழுதுவதில் சமர்த்தர் ; அவர் பேசவாரூண்டு, வங்காளத்தில் கலேமையதிகாரம்பெறக் கருதினர். "இந்திய அரசாங்கத்தைப்பற்றிக் கினவு மேற் கொண்ட சூழ்ச்சிகளையும் துரபிமானங்களையும் அவரும் பூண்டார். தம்மை நீதிக்கு உறையுளென வெண்ணியதுமன்றி ஹேஸ்டிங்ஸ் செய்த பேருழல்களைத் திருத்துவதற்காகப் பணிக்கப்பட்டாரெனவும் கருதினர். அவர் கல்கத்தாவையடைவதன் முன்னரே க்ளாவரிங் மான்ஸன் இருவரையும் தம் பக்கல் சேர்த்துக்கொண்டு தம் அபிப்பிராயங்களையே அவர் களுக்கும் ஊட்டி, அவர்களையும் தம்மைப்போன்ற சுயவமுடையராயும், தம் சூழ்ச்சிகளுக் குப் பணிவுகாட்டுபவராயும் செய்தனர். உண்மையில், அவர் ' ஒரு வாக்குரிமைக் கெதிரா கத் தாம் மூன்று வாக்குரிமைகளைச் சம்பாதித்துத் தம்மைப் பலப்படுத்திக்கொண்டார் ' See Weitzman's Warren Hastings and Philip Francis (1929) pp. 20-22.

வந்த புதிய சபையினர் ஆரம்பத்திலிருந்தே ஹேஸ்டிங்ஸையும் அவருக்குதவி புரியும் பார்வெலியும் எதிர்ப்பதாகவே கங்கணம் கட்டிக்கொண்டனர். ஹேஸ்டிங்ஸ் வங்காள கவர்னராயிருந்தபோது செய்த எல்லாவற்றையும் அவர்கள் கண்டித்தனர். உதாரணமாக அலகாபாத் கோரா ஜில்லாக்களை அயோத்தி நவாபின் வசமாக்கியது, ரொஹில்லருடன் போர்புரிந்தது, புதிய தீர்வை ஏற்பாடுகள் செய்தது முதலியன. பழைய நவாபாகிய ஷுஜா உத்தேஸலாவொடு செய்துகொண்ட ஏற்பாட்டை

**ஹேஸ்டிங்ஸ் அதிகாரம் ஒடுங்கிக் கிடத்தல் (1774-76)**

ரத்து செய்து, அவனுடைய பிள்ளையாகிய அசப் உத்தேலாவொடு அவர்கள் புதியதோர் உடன்படிக்கை செய்துகொண்டனர். அவன் கொடுக்க வேண்டிய †உதவிப் பணத்தை அதிகப்படுத்தினர். அவர்கள் ஹேஸ்டிங்ஸ் தடுத்தும் கேளாமல் அவனக்காசிஜில்லாவின் நிலவருவாயைக் கம்பெனிக்குக் கொடுக்கும்படி வற்புறுத்தினர். அவர்கள், ஹேஸ்டிங்ஸின் பொதுஜன நோக்கமுறையைத் தாக்குவதோடு திருப்தியடையாமல் ஹேஸ்டிங்ஸின் நடத்தையைப்பற்றி விரோதமாய்த் தெரிவிக்கப்பட்ட பல வம்புகளுக்கும் செவிசாய்த்தனர். பிரான்ஸிஸோ, ஹேஸ்டிங்ஸ் டைரக்டர்களுடைய உத்தரவுகளுக்குச் சிறிதும் கீழ்ப்படியாமல் செயல்புரிகிறரென்றும், ஓவரைத் திரும்ப அழைத்தால்தான் வங்காளம் உய்யும் என்றும் டைரக்டர் சபையினருக்குத் தெரிவிக்க எண்ணினர். மற்றும் அவர் கம்பெனியின் ஆட்சி மீக்க கொடுமையாயிருக்கிறதென்றும், நாட்டில் நல்லாட்சியை நிறுவுதவதற்குத் தாமொருவரே இன்றியமையாத வரென்றும் கூறி மந்திரிச் சபையையும், பார்லிமென்டையும் நம்புமாறு செய்ய முயன்றார்.*

விரைவிலேயே ஹேஸ்டிங்ஸின் மேல் அவனது விரோதிகளால் பல குற்றங்கள் கொணரப்பட்டன. இந்த அவதூறுகளிலும் குற்றஞ் சாட்டுதலிலுமே பிரான்ஸிஸ் மனமகிழ்ந்து வந்தார்.

**நந்தகுமார்**

இப்படியிருக்க ஹேஸ்டிங்ஸ் மீர்ஜாபரின் மகனை நவாபின் குடும்பத்துக்குத் திவானுக்கியதற்காகவும், மீர்ஜாபரின் மனைவியை அம்மகனுக்கு இரட்சணையாக்கியதற்காகவும் ஒரு பெருத்த இலஞ்சம் வாங்கிக்கொண்டானென **மகாராஜா நந்தகுமார்** குற்றஞ் சாட்டினர். பெரும்பாலோரின் அபிப்பிராயப்படி ஹேஸ்டிங்ஸ் கட்டுப்படமறுப்பினும், அவர்கள் இக்குற்றம் உறுதிப்படுத்தப்பட்டது கண்டு ஹேஸ்டிங்ஸைப் பணத்தைத் திரும்பப் பொது கஜானாவில் கட்டிவிடுமாறு ஆணையிட்டனர். ஹேஸ்டிங்ஸ் நந்தகுமாரர் சதி செய்ததாகக் குற்றஞ்சாட்டி உயர்தர நீதிமன்றத்தின் முன் விசாரணைக்குக் கொணர்ந்தார். அப்போது நந்தகுமாரின் எதிரியொருவன் அவர் வேறொருவருடைய கையொப்பத்தைத் தாமே போட்டு ஒரு பொய்ப்பத்திரத்தை எழுதியதாகக் குற்றஞ்சாட்டினன். அவரை, உயர்தரநீதிமன்றத்தில்

**அவரை விசாரித்துத் தூக்கி விட்டது (1775)**

---

* Weitzman's Warren Hastings and Philip Francis (1929)p. 33.

† Subsidies.

ஆங்கிலேய சட்டமுறைப்படி விசாரித்துக் குற்றவாளியென்றனர் பின்பு அவர்க்கு மரணதண்டனை விதிக்கப்பட அவர் தூக்கிலிடப்பட்டார்.

**தூக்கிட்ட செயலின் நியாயவிசாரம்**

(ஆகஸ்டு, 1775). சபையின் பெரும்பாலோர்க்குத் தம்மைக் காக்குமாறு அவரிட்ட முறையீடுகள் செவியேறவில்லை. நந்தகுமாரின் மரணத்திற்குப் பின்பு, ஹேஸ்டிங்ஸின்மேல் குற்றங்கள் கூறுதல் விடுபட்டது. "வேறொருவர் கையொப்பத்தைத் தாமேயிட்டதற்காக நந்தகுமாரர் தூக்கிலிடப்பட்டாரென்பது மேலோட்டாக ஏற்படினும் அவர் கவர்னர்-ஜனரலையே குற்றஞ்சாட்டத்துணிந்தமையேகாரணமென்பது" பொதுநம்பிக்கை. ஹேஸ்டிங்ஸும் அவருடைய பள்ளித்தோழனுமிய **ஸர்எலிஜா இம்பே** என்ற தலைமை நியாயாதிபதியும் சேர்ந்து சூழ்ச்சி செய்து நந்தகுமாரைத் தூக்கிலிட்டனர்.* இவ்விதமாகக் கொள்ளும் அபிப்பிராயத்திற்குத் தக்கசான்றுகளில்லை. ஆனல், வேறொருவரின் கையொப்பமிட்டதற்குத் தூக்கு தண்டனை விதிப்பது மிகக்கொடிய தண்டனையாகும். மற்றும், உயர்தர நீதி மன்றத்திற்குக் கம்பெனியின் இந்திய பிரஜைகளின்மீது அதிகாரம் உண்டா என்பதே சந்தேகத்திற்கிடமானது.

**பிரான்ஸிஸ்ஸின் கட்சி நிறுதொகையிற்ருதல் 1776-80**

பிரான்ஸிஸ் தமக்கு நந்தகுமார் உயிருடனிருந்து உதவுவதைக் காட்டிலும் தூக்கிலிடப்பட்டதன் மூலம் தம் காரியத்திற்கு உறுதிப்பயனளிப்பனென எண்ணினர். மேலும், ஹேஸ்டிங்ஸ் இம்பேயுடன் துராலோசனை செய்து, தாம் செய்த குற்றத்தை வெளிப்படுத்த முயன்ற ஒருவனைத் தமக்குத் தீங்கு நேராவண்ணம் காத்துக்கொள்ள ஒழித்தாரென பிரான்ஸிஸ்கூறினர். ஹேஸ்டிங்ஸுக்கும் அவரது சபையினரிற் பெரும் பாலோருக்கும் சச்சரவு இரண்டு வருடங்கட்குமேல் விடாமல் தொடர்ந்தது. '1776-ஆம் ஷூ செப்டம்பர்மீ மான்ஸன் இறந்தான். அதனல், சபையில் கவர்னர்-ஜெனரலைச் சேர்த்து நான்குபேர்தான் இருந்தனர். ஆகவே, கவர்னர்-ஜெனரல் பார்வெலின் உதவியாலும் தமக்கென்றேயிருந்த தனிப்பட்ட வாக்குரிமையாலும் திரும்பவும் பிராபல்யம் அடைந்தார். உடனே அவர் சபையினரில் பெரும்பாலோர் செய்த தீயகாரியங்களை யெல்லாம் மாற்றி அரசியலிலும் †வெளிநாட்டு நோக்கமுறையிலும் தம் எண்ணப்படி நடந்தார். ஆனல் 1777-இல் தம் வேலையை ராஜிநாமா செய்தார். இது "மிகவும் ஆச்சரியத்தையும், பிரமிப்பையும் உண்டாக்கக்கூடிய சம்பவாகும்."§ இங்கிலாந்திலிருந்த லார்டு நார்த்தும் மந்திரிச்சபையினரும்

---

* ஸர்ஜேம்ஸ் ஸ்டீபன் 'நந்தகுமாரும் இம்பேயும்' என்றபுத்தகத்தில் இந்த விசாரணை செவ்வனே நடைபெற்றதென்பர். ஆனல், நந்தகுமாரின் குற்றத்தைப்பற்றியாவது ஆங்கிலேய சட்ட முறைப்படி வேறொருவரின் கையொப்பத்தை ஒருவரிடுதல் மரணதண்டனைக்குள்ளாக்கும் குற்றமாவதை இந்தியனுக்கு ஏறிட்டுத் தீர்ப்புக்காணும் விஷயத்தைப்பற்றியாவது யாதும் தெளிவுபடக் கூறப்படவில்லை. மேலும் தண்டனையின் கொடூரத்தன்மையும் கேரிதன்று. அக்கொடூரத்திற்கு நீதிபதிகளே முற்றும் பொறுப்பாளிகளாவர். மெகாலே 'வியாசத்'தில் இம்பேயைத் தீங்கு விளைக்கும் பேய் என்று கூறி அவனுக்கும் ஹேஸ்டிங்ஸுக்கும் நிகழ்ந்த இலஞ்ச கட்வடிக்கைகளைப்பற்றி வற்புறுத்திக் காட்டுகிறார்.

† Foreign Policy.

§ நான்கு நாட்கள் அவர் மனம்பட்ட பாட்டின் வரலாற்றையறிய டேவிஸ் புத்தகம், பக்கம் 223 பார்க்கவும்.

ஹேஸ்டிங்ஸை விரும்பவில்லை. ஆதலால் அவர்கள் அவரை 1775-இலேயே திரும்புமாறு அழைக்க முயன்றனர். இதனலும், ஹேஸ்டிங்ஸ் தம் சபை யினரிடத்தில் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தாலும் இங்கிலாந்திலிருந்த தம் ஏஜெண்டின் மூலம் ராஜிநாமாவை டைரக்டர்களிடம் கொடுக்கச் செய்தார். அவர் இவ்வாறு செய்தது, மான்ஸன் இறந்ததற்கு முன்பாகும். ஆனல், மான்ஸன் இறந்ததும் நிலைமை முற்றிலும் மாறியது, டைரக்டர்

**ஹேஸ்டிங்ஸ்† தம்மிய மன ராஜிநாமா செய்தல்**

கள் ஹேஸ்டிங்ஸ் கொடுத்த ராஜிநாமாவை அங்கீ கரித்தனர். ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி க்ளா வரிங் கவர்னர்-ஜெனரலாக வேண்டியிருத்தலால் அவருடைய ஸ்தானத்திற்கு டைரக்டர்கள் ‡வெலர் என்பவரை நியமித்தனர். ஹேஸ்டிங்ஸ் இரண்டுமாதங்களுக்குப் பின்னர் தாம் கொடுத்த ராஜிநாமாவை வாபீஸ்வாங்கிக்கொண்டார். ஆனல், க்ளாவரிங் தாமே கவர்னர்-ஜெனரலாவதற்கு முயட்டித்தனத்துடன் தவருன வழியிலிறங்கினர். இதனல் முட்டுப்பாடுண்டாயிற்று. இவ்விஷயம் உயர்தரநீதிமன்ற நீதிபதிகளின் முன் கொணரப்பட அவர்கள் ஹேஸ் டிங்ஸே கவர்னர்-ஜெனரலெனத் தீர்ப்புக்கூறினர். இதற்குப்பின்

**பிரான்ஸிஸ்இங்கி லாந்துக்குத் திரும்பு தல் (1780)**

க்ளாவரிங் இறந்தார் (1777). வெலர் பிரான்ஸிஸை ஆதரிப்பினும் ஹேஸ்டிங்ஸ் சபையில் ஆதிக்கம் பெற்றிருந்தார். 1779-இல் ஹேஸ்டிங்ஸின் பதவி இன்னும் சிறிது காலம் நீட்டிக்கப்பட்டது. க்ளா வரிங்குக்குப் பின் சேனைத் தலைவனகிய ஸர் அயர்கூட் ஹேஸ்டிங்ஸுக்கு மூர்க்கத்தனமாய் தொந்தரவுகள்விளைத்துவந்தபோதினும் பிரான்ஸிஸுக்கு உதவி செய்யவில்லை. இவ்விபரீதங்களால் பிரான்ஸிஸ் மனம்கொந்தார். ஹேஸ்டிங்ஸ் பிரான்ஸிஸ் இருவருக்குள் நிகழ்ந்த சண்டைக்குப்பின், பிரான்ஸிஸ் 1780 நவம்பரில் இந்தியாவிலிருந்து திரும்பினர்.* இதற்குப் பிற்கு ஹேஸ்டிங்ஸ் தாம் பதவி வகித்தவரையில் அவருக்குச் சபையோரால் பெருங்கஷ்டம் ஏற்படவில்லை. ஆனல், தம் ஆட்சி இறுதியில் மட்டும் அவர்கள் சில விஷயங்களில் மாறுபட்டனர். ஹேஸ்டிங்ஸும் தமது சபையினரின் கருத்திற்கேற்ப ஒழுகிவந்தனர்.

ஹேஸ்டிங்ஸின் பக்கம் அவரது சபை சார்ந்ததுமன்றி, உயர்தரநீதி மன்றமும் அவர் அதிகாரத்துக்கு அடங்கிற்று. முதலில் உயர்தரநீதி மன்றம்

**சபையும் உயர்தர நீதிமன்றமும் சண்டையிடல்**

மாகாணத்திலுள்ள ஒவ்வொருவர் மேலும் அதிகார வரிமை பாராட்டி, நவாபுக்கு அரசியலதிகாரமில்லை யென்று மறுத்தது. அதற்கு மாருக ஹேஸ்டிங்ஸும் அவரது சபையும் நீதிமன்றத்துக்கு இத்தகைய

† Conditional Resignation. ‡ Mr. Wheler.

* ஹேஸ்டிங்ஸ் டைரிமுறையாக பிரான்ஸிஸோடு, அக்கால மராட்டிய யுத்தரகை முறைவிஷயமாக ஒற்றுமைப்பட் முயன்ருர். ஆனல், பிரான்ஸிஸை ஒப்பந்தத்தை மீறிய வரென்று ஹேஸ்டிங்ஸ் குற்றஞ்சாட்டியபோது இருவர்க்குள் சண்டையேற்பட்டது. ஹேஸ்டிங்ஸ், பிரான்ஸிஸை உண்மையற்றவரென்றும் கௌரவமிழந்தவரென்றும் பகிரங் கமாகக் குறைகூறினர். இட்டசண்டையில் அவமானமடைந்தபின், பிரான்ஸிஸ் தன் இரு எண்ணங்களும் பழுதுபட்டுப்போக இங்கிலாந்துக்குத் திரும்பினர். அவ்விரு எண்ணங் களாவன :—ஹேஸ்டிங்ஸை மட்டந்தட்டுதலும், தமக்கே கவர்னர்-ஜெனரல் பதவியை ஆக்கிக்கொள்ளுதலுமாம். இங்கிலாந்திலும் ஹேஸ்டிங்ஸுக்கு விரோதமாக அவர் வேலை கள் செய்து வந்தார்.

பேரதிகாரமில்லையென மறுத்து ஜமீன்தார்கள் ஆங்கிலரின்கீழ் பிரஜைகளல்லரென்றும், நவாபின் பிரஜைகளே யாவரென்றும் கூறினர். உயர்தரநீதிமன்றத்துக்கு ஆங்கிலப் பிரஜைகளின்மேல் அதிகாரமுண்டு. ஆனால், ஒழுங்கு முறைச்சட்டத்தில் சொற்கள்தெளிவுபட அமையாமையால் இவ்வதிகாரம் ஒருபடி பார்த்தால் வங்காள மக்கள் முழுவதற்கும் பொருந்துவதாகவும், மறுவிதமாக நோக்கின் ஆங்கிலேயர்களுக்குமட்டும் பொருந்துவதாகவும், வேறொரு விதமாக நோக்கின் கல்கத்தாவிலுள்ள குடிமக்களுக்கு மட்டும் பொருந்துவதாகவும் தோற்றுகின்றது. இப்படியிருக்க், சில விஷயங்களில் அபிப்பிராய பேதங்களேற்பட்டன. அவையாவன் :—உயர்தர நீதிமன்றத்திற்கு ஜமீன்தார்களின் மேல் அதிகாரமுண்டா ? கம்பெனியின் கீழமர்ந்து வரிவசூலிக்கும் ஆங்கில உத்தியோகஸ்தர்களும் சுதேச உத்தியோகஸ்தர்களும் செய்யும் அக்கிரமங்களை விசாரிக்க அதிகாரமுண்டா ? கம்பெனியின் நியாய விசாரணை செய்யும் உத்தியோகஸ்தர்களின் செயல்களுக்கு மாறுக வரும் முறைமீடுகளை விசாரிக்க அதிகாரமுண்டா? என்பன. இதனால், அடிக்கடி உயர்தர நீதிமன்றத்தின் உத்தியோகஸ்தர்களுக்கும், ரெவின்யூ, இன்னும் இதர இலாகாக்களின் உத்தியோகஸ்தர்களுக்கும் சச்சரவுகள் ஏற்பட்டன.

**சச்சரவுக்குக் காரணங்கள்**

1776-இல், ஹேஸ்டிங்ஸ் உயர்தர நீதிமன்றத்தோடு கம்பெனியின் ஸதர் நீதிமன்றங்களையும் ஒன்று சேர்க்க முயன்றார். ஆனால், சபையிற் பெரும்பாலோரின் அபிப்பிராயம் மாறுயிருக்கவே, அவர் முயற்சி வீணுயிற்று. இதனால், உயர்தர நீதிமன்றத்துக்கும் சபைக்குமிடையுள்ள சச்சரவு வலுத்து, இரண்டு பெரு வழக்குகளில் தலையோங்கி நின்றது. **பாட்னு வழக்கில்**, உயர்தர நீதிமன்றம், கம்பெனியின்கீழ் நீதித்துறையில் சேவகம் புரியும் இந்திய உத்தியோகஸ்தர்களின் அக்கிரமங்களை விசாரிக்கத் தனக்கு உரிமையுண்டு என வாதித்தது. **காஸிஜுரா வழக்கில்** உயர்தர நீதிமன்றத்துக்கு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு பிரஜையின் மேலும்—முக்கியமாக. ஜமீன்தார்களின்மேல்—அதிகாரமுண்டா என்ற விஷயம் நோக்கப்பட்டது உயர்தர நீதிமன்றம் கௌரவ மிழந்தது ; ஆனால் அது ஐரோப்பிய நியாயாதிபதிகளினிடமிருந்தும், அவரது சுதேச ஏஜெண்டுகளினிடமிருந்தும் பிரஜைகளைக் காத்தலித் தன் கடமையாக எண்ணியது.*

**ஹேஸ்டிங்ஸ் கஷ்டத்தை நிவர்த்தி செய்தல் (1780)**

ஹேஸ்டிங்ஸ் இம்பேயை ஸதர்திவானி அதலத்திற்கு நீதிபதியாக நியமித்து அவருக்கு நாட்டிலுள்ள நீதிமன்றங்களின்மீதும் அதிகாரம் கொடுத்து எல்லாக் கஷ்டத்தையும் நிவர்த்தி செய்தார். இந்த யுக்தி இரு பலன்களை யளித்தன ; நிர்வாகத்துறைக்கும் நீதித்துறைக்கு மேற்பட்ட சச்சரவைத் தீர்த்தது ; ஸதர் நீதிமன்றத்தை முன்போலன்றி மிக்க வலிவுடைய தாக்கியது. ஆனால், இதனால் இங்கிலாந்தில்

---

* ஏற்பட்ட தொந்தரவுகளெல்லாம் பாட்னு வழக்கு (1779) காஸிஜுரா வழக்கு (1779—80) என்ற இரண்டினாலும் விளைந்தவை. ஸர் ஜேம்ஸ் ஸ்டீபன் சபையைக் காட்டிலும் உயர்தர நீதிமன்றத்தின் பக்கமே நியாயமுரைத்து எனின்றனர். (See Cambridge History of India—Vol. V, pp. 243) also E. B. Impey's Memoirs of Sir Elijah Impey.

பெரிய எதிர்ப்பு எழுந்தது. அங்குள்ளோர் ஹேஸ்டிங்ஸ் இம்பேவுக்கு லஞ்சம் கொடுத்துத் தம் பக்கல் வசீகரித்துக் கொண்டாரென நம்பினர்; மேலும், கம்பெனி உத்தியோகஸ்தர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுமாறு ஏற்படுத்திய உயர்தர நீதிமன்றத்தினை, ஹேஸ்டிங்ஸ் கம்பெனி உத்தியோகஸ்தர்களைச் சார்ந்திருக்குமாறு செய்து விட்டாரெனவும் எண்ணினர். இவற்றால், இம்பே திரும்ப வரவழைக்கப்பட்டு குற்ற விசாரணை செய்யப்பட்டார்.

1781-இல் வங்காளத்தில் கடைபெறும் நியாய பரிபாலனத்தைப்பற்றி பார்லிமெண்ட் விசாரித்தது; மேலும், ஒழுங்குமுறைச் சட்டத்தின் ஊழல்களைத் *திருத்தும் சட்டமொன்று அமலுக்குக் கொண்டு வரப்பட்டது. அது, உயர்தர நீதிமன்றத்துக்கும் சபைக்கும் ஏற்பட்ட சச்சரவுகளை விசாரித்துச் சபையின் சார்பாகவே முடிவு கட்டியது. கவர்னர் ஜெனரலும் அவ்வது சபையும் தமது †அரசாங்கத் தகுதியில் செய்த செயல் எதற்கும் உயர்தர நீதிமன்றத்தினதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவரல்லர். ரெவின்யூ விஷயங்களிலோ அல்லது மக்களின் மரபின்படி ரெவின்யூவை வசூலிக்கும் விஷயத்திலோ மன்றத்திற்கு யாதொரு அதிகாரமுமில்லை. நிலமனுபவிப்போன் என்பது பற்றியாவது, வரிக்குத்தகை செலுத்துபவனென்பது பற்றியாவது ஒரு இந்தியனையும் உயர்தர நீதிமன்றம் விசாரணை செய்யக்கூடாது. கடைசியாக, ஆங்கிலேயரைப்பற்றிய எல்லா வழக்குகளையும் அம்மன்றம் விசாரித்தல் வேண்டும்; கல்கத்தா குடிகளனைவரின்மேலும் இதற்கு அதிகாரமுண்டு. ஆனால், பிரத்தியேக ரீதியில் வழக்குக்களில் ஹிந்து சட்டங்களையும் முகம்மதிய சட்டங்களையும் உபயோகித்தல் வேண்டும். இவ்விதமாக, சபை சில விஷயங்களில் வெற்றி பூண்டது; உயர்தர நீதிமன்றம் பெரும்பாலும் தன் முரட்டுத்தனத்தாலும் சிக்கல் நடவடிக்கைகளாலும் தன் உரிமைகளை யிழந்தது. மேலும், அது வழக்காளிகளிடமும் பொதுமக்களிடமும் கொடுமையாய் நடந்துகொண்டதென்பது பொதுஜன நம்பிக்கை.

**1781-ஆம் வருடத்திய திருத்தச் சட்டம்**

இத்தனையாண்டுகளாகச் சபையினர் தடைகள் விளைவித்தபோதினும், ஹேஸ்டிங்ஸ் அரசியல் முறைமையில் முன்னேற்றம் செய்தலைத் தொடர்ச்சியாகச் செய்துவந்தார். முதன் முதலில் அவர் புகுத்திய ரெவின்யூ ஏற்பாடுகள் வெற்றியுறவில்லை; நிலத்தீர்வைகள் வெகு அதிகமாகப் போடப்பட்டன; அநேக ஜமீன்தார்கள் கட்டுவதற்குத் தவறினர்; ஆதலால், அவர்களது சொத்துக்களை ஏலம் போட்டு விலை கூற நேரிட்டது. நிலவரிமை இராஜாங்கத்தினது என்றும், ஜமீன்தாரானவன் பரம்பரையாக வரும் நிரந்தர உத்தியோகஸ்தனல்லனென்றும், கம்பெனியானது தெவானென்ற தகுதியில் நிலங்களைக் குத்தகைக்குவிட உரிமை கொண்டதென்றும் கொள்கைகள் நிலவின. மற்றொருபால் ஜமீன்தார்கள் பாராட்டிய உரிமை இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது; "ஜமீன்தார் ராஜீய வரிகளை

**இதர ரெவின்யூ சீர்திருத்தங்கள்**

* Amending Act. † Public Capacity.

வசூல் செய்யும் உரிமையைப் பரம்பரையாக்கக் கொண்ட நிரந்தர உத்தியோகஸ்தன் என்பது ஒன்று; நிலத்திற்குச் *சொந்தக்காரனுயிருக்கும் உரிமை உடையன். என்பது மற்றொன்று."‡ ஹேஸ்டிங்ஸ் பூஸ்திதிகளை ஏலமாவது போடலாம். அல்லது குத்தகைக்காவது ஆயுள் பரியந்தம் விடலாம் என வெளியிட்டார். ஆனல், சபையினரிற் பெரும்பாலோர் சாசுவதமாக வரித்தீர்மானம் செய்து கொள்ளலாமெனச் சிபார்சு செய்தனர். டைரக்டர்கள் இருவித ஏற்பாடுகளையும் புறக்கணித்தனர். ஹேஸ்டிங்ஸ், சரிவர வரிசெலுத்தாதிருக்கும் ஜமீன்தார்களின் பூஸ்திதிகளை ஏலம் போட்டு விற்கும் முறைமையை மாற்றமுயன்ருர். அதன்படி, ஜமீன்தார்களோடு வருடாந்தர ஏற்பாடுகள் செய்யப்பட்டன; ஒவ்வொரு பூஸ்திதியின் ஆக்க மூலத்தைப்பற்றியும் விசாரித்தார். இவைகளால் நிலைமை இன்னும் கேடடைந்தது. நிலத் தீர்வையைக் கேட்குமது சிறிது குறைவுபடினும், பாக்கிகள் பெருகத் தொடங்கின.

1781-இல் சீர்திருத்தங்கள் தீவிரமாய் செய்யப்பட்டன. கல்கத்தாவிலிருந்த †நில வருவாய்க்கமிட்டிக்கே சர்வ அதிகாரமும் கொடுக்கப்பட்டது.

**1781-ஆம் வருஷத்திய ஏற்பாடுகள்**

மாகாண சபைகள் நீக்கப்பட்டன. பல்வேறு ஜில்லாக்களுக்கும் கலெக்டர்கள் நியமிக்கப்பட்டனர். மத்திய அரசினிடமே நில வருவாயைக் கவனிக்கும் பொறுப்பு முற்றும் கொடுக்கப்பட்டது. கலெக்டர்கள் வரியை மட்டுமே வசூலிக்கவேண்டும். ஜமீன்தார்களுடன் மூன்று வருட கால வரையறைக்கு மேற்படாத பலவித ஏற்பாடுகள் செய்யப்பட்டன; 1784-இல், மறுபடியும் வருடாந்தர ஏற்பாடுகள் தொடங்கி விட்டன.¶

மற்றும், ஹேஸ்டிங்ஸ், மேலே கண்டபடி, கம்பெனியினுலேற்பட்ட நீதிமன்றங்களையும் சீர்படுத்தினர். காட்டுப்புறங்களிலிருந்த ஸீவில் நீதிமன்றங்களுக்குக் கலெக்டர்களைத் தவிர, ஜில்லா நீதி உத்தியோகஸ்தர்களை நியமித்தார். அவர்களுக்கு மாஜிஸ்டிரேட்டின் அதிகாரம் கொடுக்கப்பட்டது. அவர்கள் கொள்ளைக்காரர்களையும் இதர குற்றவாளிகளையும் பிடித்துத் தண்டிக்கலாம். கிரிமினல் நீதிமன்றங்களில் இந்திய நீதிபதிகளேயிருந்தனர்; ஆனல், அவர்களது வேலையை மேற்பார்வையிட மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்ளப்பட்டது. செவின்யூ வழக்குகளின் விசாரணையெல்லாம் நிலவருவாய் வசூலிக்கும் கலெக்டர்களினிடமே யிருந்தன.

**இதர அரசியற் சீர்திருத்தங்கள்**

---

* Proprietary right in the soil. † The Committee of Revenue.

‡ Ascoli : Early Revenue History of Bengal and the Fifth Report, p. 34.

¶ *1765 முதல் 1786 வரையில் சபையினரின் நோக்கமுறை மாறிக்கொண்டேயிருந்தது. ஆரம்பத்தில், சபையினர் கூனிக்குறுகிப் போகும் முகலாய அதிகாரத்தின் பழைய மெல்லவற்ற நீய முறைமையில் நம்பிக்கை வைத்தனர்.....தம்மிருப்பிட்டத்தைப்பற்றிய அறிவு பெறுதலில் ஐரோப்பிய மேற்பார்வையாளரும் (Supervisors) சுதேச அமீன்களும் மேற்கொண்ட முயற்சிகள் வீணாய்ப் போகவே, சபையினர் அத்துறையில் இனி ஒருவித முயற்சியும் மேற்கொள்ளவில்லை; மேலும், காட்டின் சீர்கேட்டினின்று தூர விலகிய ஒரு மத்திய அரசாங்கமே இதுபோன்ற பழைய தெரிவற்ற முறைமையை உதவியின்றிக் கையாள முடியும் என்றும் எண்ணினர்."* Ibid, p. 36. அனுபவ முதிர்ந்த தக்கோரால் செய்யப்பட்ட நிலவரி அரசியல் முறைமையைப் பற்றிய அறிவு இக்காலத்தில் வளர்ச்சியுறலாயிற்று—Cambridge History of India, Vol. V. p. 432.

ஹேஸ்டிங்ஸ், கல்வியையும் கலைகளையும் நன்கு போற்றி ஆதரித்தார். அவருடைய ஆதரவின்கீழ் மேஜர்ரென்னல் என்பவரும் அவரைச்சார்ந்த நிலமளப்போர்சிலரும் வங்காளத்தையும் ஹிந்துஸ்தானத்தையும் நில அளவுசெய்தார்; பின்னர் பர்மாவிலும், தார்த்தாரியிலும் இந்நில அளவு பரவியது.

**ஹேஸ்டிங்ஸ் கல்வியையும் கலைகளையும் போற்றுதல்**

ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாயிருந்த கடைசி வருஷத்தில் அவர் வங்காளத்தில் ஏஷ்யாடிக் சங்கத் (Asiatic Society)தை நிறுவ உதவிபுரிந்தார். **ஸர் வில்லியம் ஜோன்ஸ்** என்ற உயர்தர நீதிமன்றத்து உதவி நீதிபதியே அச்சங்கத்திற்கு முதன் முதல் தலைவராயினர்; அச்சங்கத்தின் மூலம் சம்ஸ்கிருத பாரசீகபாஷைகளிலுள்ள அரியபெரியநூல்களின் பெருமையை மேனாட்டினருக்கு வெளிப்படுத்தியவர் இவரே *. மற்றும், முன்னர்க் கூறியபடி ஹேஸ்டிங்ஸ் ஹிந்துக்களின் சட்டத்தைத் தொகுத்தார்; அவர் ஹிந்து முகம்மதிய சட்டங்களுக்கு மூலகாரணமாயுள்ள நூல்களை மொழிபெயர்த்து ஒழுங்குபடுத்த ஹால்ஹெட், ஆண்டர்ஸன், ஹமில்டன் போன்ற பேரறிஞர்களை ஊக்கினர். மேலும், கீழ்திசைபாஷைகளில் வல்லுநரான ஆங்கிலேயர்களுள் ஒருவராகிய க்ளாட்வின் என்பவர் **ஆயினி அக்பரி**யை மொழிபெயர்க்க, ஹேஸ்டிங்ஸ் அம்மொழிபெயர்ப்பை ஆதரித்தார். வங்காளத்திலிருந்த முகம்மதிய இளஞ்சிறார்களின் கல்வி அபிவிருத்திக்காகக் கல்கத்தாவில் ஒரு கலாசாலையை (கல்கத்தா மதராஸா)ப் பெரும் பாலும் தம்சொந்த செலவில் ஏற்படுத்தினர். அவர், ஓவியக்கலைபோன்ற கலைகளில்மட்டுமன்றி வங்காள எல்லையிலிருந்த காட்டுமிராண்டிகளை நாகரிகப் படுத்தவும் ஆவல்கொண்டொழுகினர். இதற்கு உதாரணமாக, பகல்பூர் என்ற இடத்தில் க்ளிவ்லாண்டு என்ற ஓர் இளம் உத்தியோகஸ்தன் நன்கு உழைத்ததும் காண்க. மேலும், ஹேஸ்டிங்ஸ் பூடான், திபெத் முதலிய பிரதேசங்களுடன் வியாபாரநிமித்தமாகத் தூதுவரை விடுத்ததும் முன்னர்க்கண்டோம்.

## பகுதி 4: மராட்டியர்கள் அவர்கள் ஆங்கிலேயரோடிட்ட முதல் யுத்தம்.

இனி, ஹேஸ்டிங்ஸுக்குச் சண்டைசெய்ய விருப்பமில்லையெனினும் பம்பாய் அரசாங்கம் அவரை மராட்டியருடன் யுத்தம் நிகழ்த்துமாறு செய்தது. மராட்டியர்கள் பானிபட் தோல்விக்குப்பின் அடைந்த ஈன ஸ்திதியிலிருந்து விரைவில் மீண்டும் நன்னிலையடைந்தனர். புதிதாக பேஷ்வாவாகிய மாதவராவ் I (1761-72) சிறுவனதலின், தமது சிறிய தந்தையான ரகுநாத ராவின் பாதுகாப்பிலிருப்பினும், விரைவில் தம் அதிகாரத்தை நிலைநாட்டிப் பேராற்றலுள்ள அரசராக விளங்கினர். அவர் அபகரித்து பெற்ற தம் சிறிய தந்தையின் கட்டுப்பாட்டினின்றும் தம்மை விடுவித்துக் கொண்டார்; ஆதலால், ரகுநாதராவ் நிஜாமோடு சேர்ந்துகொண்டு மராட்டியர்களும் முகலாயதருப்புக்களும் அடங்கிய ஒரு சேனையோடு பூனாவின் மீது படையெடுத்தார். மாதவராவ் அந்நெருக்கடியினின்று தப்பித்துக் கொள்வதற்காகவும், மராட்டிய ராஜ்யம் பின்னப்படாலிருப்பதற்காகவும்,

**நான்காவது பேஷ்வா-மாதவராவ் I (1761-72)**

* Life and works of Sir W. Jones—ed. by Lord Teigumarth (13 Volumes).

தம்முடைய சிறிய தகப்பனுக்குப்பணிந்துவிட்டார் (1763). ரகுநாதராவ் பேரதிகாரத்தையடைந்தாலும், அவருக்குத்தீயபுத்திமதிகளைப் புகட்டி வந்த

**ரகுநாதராவும், ஜனோஜி பான்ஸ்லேயும் பேஷ்வாவை எதிர்த்தல்**

அவருடைய மனைவியான **ஆனந்த பாய்** என்பவளின் முன் கோபத்தாலும், மராட்டியத் தலைவர்களுக்குள்ளேயே சச்சரவுகள் ஏற்பட்டன. மற்றும், பேஷ்வாவுக்கும் ரகுநாதராவுக்கும் மீண்டும் சச்சரவுகள் உண்டாயின. பேராத்தலைவனான **ஜனோஜி பான்ஸ்லே**, பேஷ்வாவுடன் சண்டையிட்டான்; ஆதலால் பேஷ்வா அவனைத்தண்டிப்பதற்காகத் தம் ஜ்ஞ்ம விரோதியான நிஜாமுடன் சேர்ந்துகொண்டார் (1760). அச்சமயத்தில், பேஷ்வாவுடன் விடாமல் தோழமைபாராட்டிவந்த இந்தூர் நாட்டுஸ்தாபகர் **மல்ஹர்ராவ் ஹொல்கர்** இறந்தார். அவரிறந்தபின், அந்நாடு ஹொல்கரின் நாட்டுப் பெண்ணாகிய திறமைமிக்க பக்திக்களஞ்சியமாகிய **அஹல்யாபாயின்** ஆளுகையின்கீழ் வந்தது. இராணுவத்தலைவரான **துகோஜிராவும்** அவளுக்கு உதவிபுரிந்தார். இவ்விதம் இந்தூர் நாட்டில் நடைபெறவே, ஹொல்கரினுதவி பேஷ்வாவுக்குக் குறைந்தது. மற்றும், ஹொல்கரின் விரோதியான **மஹத்ஜி ஸிந்தியா**, பூனாவிலும், வட இந்திய அரசியலிலும் தலையோங்கி நின்றான்.

மாதவராவ், **நானுபட்னவிஸ்** என்று சிறப்பாக வழங்கப்படும் பாலாஜி ஜனார்த்தன் என்பவரை 1763-இல், தம்கீழ் வேலையிலமர்த்திக்கொண்டார்; இதற்குமுன்பு ஜனார்த்தன் தலைமைக்கணக்காக விருந்தார். ரகுநாதராவ் பேரதிகாரம் வகித்தலை

**நானு பட்னவிஸ்**

நானுபட்னவிஸ் விரும்பவில்லை. அவரூட்டிய ஊக்கத்தினால், பேஷ்வா தமக்கு எதிரிகளான ரகுநாதராவ் ஜனோஜிபான்ஸ்லே இவர்களையும் எதிர்க்கவல்லமையுடையரானர். இஃது இப்படியிருக்க, ஹைதர்அலி, தன் இராச்சியத்தின் வடவெல்லையைக் கிருஷ்ணை நதிவரையில் பரப்பி, மராட்டியரைத் தார்வாருக்குமப்புறம் துரத்தினான். ஆதலால் மாதவராவ் 1764-இல், மைசூரின்மீது படையெடுக்க நேர்ந்தது; அவர்

**ஹைதர்அலிக்கெதிராக எடுத்த முதல் இரண்டு படையெழுச்சிகள் (1764-7)**

வெற்றி பெறினும், தமது சிறியதகப்பனார் செய்த இரகசியமான உளவுகளால், தொடர்ந்த சமாதானத்தில் பெரும்பயனடையவில்லை. மீண்டும் இரு வருடங்கள் கழித்து, அவர் ஹைதருக்கு விரோதமாகப் படையெடுத்தார்; அதேசமயத்தில், நிஜாம் அலி துருப்புக்களும் ஆங்கிலத்துருப்புக்களும் ஒன்றுசேர்ந்து ஹைதரைத்தாக்கின. மேலே, முதல் மைசூர் யுத்தத்தில் நாம் கண்டபடி, ஹைதர் மராட்டியர்களுக்குப் பெரும் பணத்தொகை கொடுத்தனுப்பிவிட்டு, ஆங்கிலேயரைக் கைவிட்டுத் தன்பக்கல் சாரும்படி நிஜாமைத்தூண்டினான் (1767).

இஃது இங்ஙனமாக, ராஜபுத்திரர், ஜாட்டுக்கள், ரொஹில்லர் இவர்களை எதிர்க்க மாதவராவ், ஒரு சேனையைச் சாம்பல் நதியைக்கடந்து ஹிந்துஸ்தானத்தின்மேற் செல்ல அனுப்பினர். இச்சேனையுடன் மஹத்ஜிஸிந்தியாவும் சென்றார்; ஆதலால் நியாயப்படி நாட்டை

**ஹிந்துஸ்தானத்தின்மீது மராட்டிய படையெடுப்பு**

யாள அவனுக்கு உரிமையில்லாதிருந்த போதினும், மாதவராவ் அவன் வகித்த அதிகாரத்தை உறுதிப்படுத்தினர். மஹத்ஜி மிக்கதிறமையும் தீரமும்

பகடைத்தவன்; பானிபட் சண்டையில் காயமடைந்து நானாபட்னவிஸுடன் தப்பிவந்தவன். ராஜேஜிஸிந்தியாவின் புதல்வர்களில் உயிருடனிருந்தவன் அவனொருவனே; அவனுடைய சகோதரரான ஜயப்பாவும் மற்றையோரும் முன்னரே இறந்துபோயினர். ரகுநாதராவ் அவன்மேல் வெறுப்புக்கொண்டு, அவனைப்பட்டத்திற்கு வராதபடி விலக்கமுயன்றார். ஆனால், பேஷ்வா அவனை உறுதியுடன் ஆதரித்தார். மஹத்ஜிஸிந்தியாவும் துகோஜி ராவ் ஹொல்கரும் ராஜபுத்திர சிற்றரசர்களிடமிருந்தும் பரதபுரியிலிருந்த ஜாட்களிடமிருந்தும் கப்பம் வாங்கினர். பானிபட் சண்டைக்குப் பழிவாங்க மஹத்ஜி ஹொஹில்ல நாட்டைக் கொள்ளையிட எண்ணினான்; அவ்வாறே அவன் யமுனையைக்கடந்து ஹொஹில்லைக் கங்கைக்கப்பால் துரத்தி, தோஆப் முழுவதையும் அச்சுறுத்தினான். அவன், ஷாஆலத்தை அலஹாபாத்தை விட்டு விடும்படியாகவும் ஆங்கிலேயருடைய பாதுகாப்பிலிருக்கும் மராட்டியரின் பாதுகாப்பை நண்ணும்படியாகவும் தூண்டினான். 1771-ஆம்வரு டிசம்பரில் சக்கரவர்த்தியாகிய ஷாஆலம் ஒருபெரு மராட்டியச் சேனையோடு டில்லியிட் புகுந்தார். ஸிந்தியா சக்கரவர்த்திக்கு ஹொஹில்கண்டை ஜெயிக்கவேண்டியதன் இன்றியமையாமையை அறிவுறுத்தி, 1772-இல், ஒரு பலத்த சேனையோடு அந்நாட்டின்மீது படையெடுத்து, ஹொஹில்லத்தலைவர்களை மலைகளுக்கு ஓட்டி ஜனங்களைக் கொள்ளையிட்டான். சக்கரவர்த்தி தாம் மராட்டியர்கையில் கைதியைப்போல் சிக்கிக்கொண்டதையுணர்ந்து, ஆங்கிலப்பாதுகாப்பையும் அலஹாபாத்கோட்டையையும் விடுத்ததற்காகப் பெரிதும் வருந்தினர்.

**மஹத்ஜி ஸிந்தியா ஷாஆலத்தை மீண்டும் டில்லி சிம்மாசனத்திலேற்றல்**

இஃது இப்படியிருக்க, ஹைதரைத் துரத்துவதற்காகத் தெற்கு முகமாய்ப் படையெடுத்துச் சென்ற மாதவ ராவ் தேக அசௌகர்யத்தினால் அப்படையெழுச்சியைத் தவிர்த்துப் பூனாவுக்குத் திரும்ப நேரிட்டது (1770). இருவருடங்கள் கழிந்த பின்னர் அவர் க்ஷயரோகத்தினால் இறந்தார். இதனால் "தளராது இடைவிடாது தம் பிரஜைகளுக்காக உழைத்த" ஓர் அரிய உயிர் முடிவெய்தியது. அவர் இறந்துபடவே "அரசியற் கபட சூழ்ச்சிகளுக்கிட்ட பெருந்தடையொன்றும் விலகிப் போயிற்று."*

**மாதவராவின் மரணம் (1772)**

மாதவராவ் புத்திரப் பேறின்றி இறக்கவே, அவரது சகோதரனான 17 வயதுள்ள **நாராயணராவ்** பேஷ்வாவானான். அவன் எதையும் கவனியாதவன்; மற்றும் தைரியம் குன்றியவன். இப்படியிருக்க, பேஷ்வாவால் துரோகியென்று சந்தேகிக்கப்பட்டுச் சிறையிலிடப்பட்ட ரகுநாதராவ் தமக்கேற்பட்ட இடையூறுக்காகக் கோபங் கொண்டார்: அவர் மனைவி

**பேஷ்வா நாராயணராவ் (1772—73)**

---

* மராட்டிய இராச்சியத்தின் கட்டு குலைந்ததற்குப் பானிபட் சண்டையினும் மாதவராவின் அகால மரணமே காரணமாகுமென்பது உண்மைக் கூற்றாகும். அவர் நீதி தவறாத மன்னர்; மராட்டிய அரசியல் ஸமூல்களை ஒங்காதவாறு தடுக்கப் பெரு முயற்சியோடு எதிரிட்டவர். அவருடைய மரணத்தோடு சிவாஜி அடிகோலிய மராட்டிய மேன்மையின் எஞ்சிய பகுதியும் மறைந்தொழிந்தது. (See Grant—Duff: History of the Mahrattas' Chi XXIII; and Kincaid and Parasnis. A History of the Maratta people Vol. III, Chap. LVI—Selections from the Peshwa & after.)

ஆனந்தபாயும் நாராயண ராவைக்கொன்று தனது கணவனையே சிம்மாசனமேற்ற வேண்டுமென்று பெருஞ்சூழ்ச்சி செய்தாள். மனக் குறையுள்ள சில பிரபுக்களும் தலைவர்களும் அவளுடைய அக்கிரமச் செயல்களுக்கு உதவி புரிந்தனர்; அவர்கள் பூனாவிலிருந்த அரண் மனையில் ரகுநாதராவின் முன்னிலையிலேயே பேஷ்வாவைக் கொல் லும்படி செய்து அவளது எண்ணத்தை நிறைவேற்றினர்.* ரகுநாத ராவ், தாம் அக்கொலையைப்பற்றி யாதொன்றும் அறியாதவரென ஜனங் களுக்கு நம்பிக்கையூட்ட மிகவும் பிரயத்தனப்பட்டார்; ஆயினும், அவரே அக்குற்றத்திற்குக் காரணபூதரென்பது எங்கும் விரைவில் பரந்தது. நாராயணராவ் இறந்த பத்தாவது நாள் நானுபட்னவிஸும் மற்றும் பதி னெருவரும்—இவர்களுக்குச் சரித்திரத்தில் பாராபாயி அல்லது பன்னிரு சகோதரர்கள் எனப்பெயர்—ஒன்றுகூடி ரகுநாதராவைப் பேஷ்வா வாகாதபடி தடுக்கச் சபதஞ் செய்து கொண்டனர். எனினும், சதாரா அரசனிடமிருந்து அதிகாரம் பெற்று, ரகுநாத ராவ் பேஷ்வாவாக அரசாள ஆரம்பித்தார். பின்பு, ரகுநாத ராவ், பீரார் அரசனிய பான்ஸ்லேயுடன் சேர்ந்து கொண்ட நிஜாமொடும், முன்னர் மராட்டி யர்க்கு இழந்த தன் பிரதேசங்களை மீண்டும் அவர்க ளிடமிருந்து மீட்க முயற்சித்த ஹைதரொடும் சண்டை செய்யத் தலைநகரி னின்றும் போந்தார். அப்போது பேஷ்வா நாராயண ராவின் மனைவிக்கு அவரிறந்தபின் ஒரு குழந்தை (Posthumous Child) பிறந்ததென்ற செய்தி அவருக்கு எட்டவே, அவர் பூனாவுக்கு விரைந்து வந்தார். இது நிற்க: நாரா யண ராவின் மனைவியாகிய கங்காபாய் †கர்ப்பவதியாதலால் அவளை வெகு ஜாக்கிரதையுடன் புரந்தர் கோட்டையில் தங்க வைத்திருந்தனர். அவளுக்கு 1774-ஆம்ஆம் ஏப்ரல்மீ ஓர் ஆண் மகவு பிறந்தது. உடனே, பன்னிரு சகோதரர்களும் "நாங்களே அக்குழந்தைக்குப் பதிலாக ஆளும் ரக்ஷக மந்திரிச் சபையினராவோம்" என வெளியிட்டு, அக்குழந்தையே பேஷ்வாவாதற் குரிமையுடையனெனவும் பறைசாற்றினர். அவர்கள் ரகுநாதராவைச் சார்ந்தோர் தமக்கு இடையூறுகள் விளைக்காவண்ணம் முன்னெச்சரிக்கை செய்து கொண்டனர். ரகுநாதராவ் தாமெண்ணியபடி, ஹொல்கரும் ஸிந்தியாவும் உதவி செய்யாமற் போகவே, தைரியத்தை யிழந்தார். ஆதலால், அவர் பரோடா அரசனுகிய கெயிக்வாரின் உதவி யையும் பம்பாய் அரசாங்கத்தின் உதவியையும் நாடினர். இது முதற்

**ரகுநாத ராவ் பேஷ்வா பதவியை அபகரித்ததும், ரக்ஷக மந்திரிச் சபை யின் எதிர்ப்பும்**

---

* ரகுநாத ராவ் இவ்விஷயத்தில் தாம் குற்றமற்றவரென்றும், பேஷ்வா ஓர் இராஜ வக்கலகத்திலிறந்தனரென்றும் கூறி, யாதுமறியாதவர்போல் பாசாங்கு செய்தார். ரகுநாத ராவ், நாராயண ராவைச் மிறை பிடித்தால், காலாட் படைக்கு வெகுமதி கொடுப்பதாக ஒரு லிகிதம் வரைந்தார்: அந்த லிகிதத்தில் 'பிடி' என்று எழுதியிருந்த சொல்லை 'கடி' (கொல்) என்று ஆனந்தபாய் மாற்றிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இச் சூழ்ச்சியை ரகுநாத ராவ் கன்கு உணர்ந்திருப்பினும், அவர் நாராயண ராவைக் கையாக்கவே எண்ணியிருப்பர்; ஆனல். ஆனந்தபாய் கபடமாகத் தலையிட்டதனலேதான் கொலை நிகழ்ந்தது.

† கங்காபாய் கனவுவிறந்ததுமே உடன்கட்டையேற உடன்பட்டாள்; ஆனல், ஆனந்தபாய் தன் குற்றத்தை யுணர்ந்து, உடன்கட்டை யேறுபவள் கொடுக்கும் சாபம் தன்னைத் தின்றுமெல அஞ்சி, கங்காபாயின் கனவனின் தகனக்கிரியை முடியும்வரை அவளை ஓர் அறையில் அடைத்து வைத்தாள். இதனல், ஆனந்தபாய் தன் எதிரிகளுக்குத் தானே கன்மையை உண்டாக்கி வைத்தாள். ஏனெனில், கங்காபாய் கர்ப்பவதியாயிருந்தாள்.

கொண்டு (1775) ரகுநாத ராவ் "மராட்டியத் தலைவர்கள் தங்கள் சுயநலங் கருதிச் செய்துவந்த சிக்கலான சூழ்ச்சிகளுக்கும் சண்டைகளுக்கும் உள்ளாகிச் சொக்கட்டான் காய் போலாடினன்; மராட்டியத் தலைவர்களும் மனமொருமித்து மராட்டிய ராஜ்யத்திற்காகச் சிறிதும் பாடுபடாமையால் நாளடைவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் பெற வழியேற்பட்டது."

1774-இல் பம்பாய் அரசாங்கம் ரகுநாத ராவுக்கு உதவி புரிய இசைந்தது; ஆனால், ரகுநாத ராவ், பேஷ்வா ஆனவுடன் ஆங்கிலேயர்க்குப் பேஸீன், ஸால்ஸெட், மற்றும் சில தீவுகள் முதலிய வைகளைக் கொடுத்தல் வேண்டும். ரகுநாத ராவ் பேஸீனைக் கொடுக்க மறுத்தனர்; ஏனெனில், அவ் விடத்தில் அவரது சிற்றப்பன் சிம்ஞஜி அப்பா என்பவர் போர்த்துகீசியர் மீது பெரு வெற்றி பெற்றார். சிறிது காலத்திற்குப் பின்பு, போர்த்து கீசியப் படையொன்று ஸால்ஸெட்டைக் கைப்பற்ற ஆயத்தமாகிறதெனக் கேள்விப்பட்டவுடனே, ஆங்கிலேயர் தாமே முற் பட்டு, ஸால்ஸெட் தீவைத் தம்மடிப்படுத்தினர். ரகுநாதராவ், ரக்ஷக மந்திரிச் சபையின் தளகர்த்த ரகிய **ஸரீபடகே** என்பவரால் தோற்கடிக்கப்படவே. அவர் ஆங்கிலேயர்க்கு ஸால்ஸெட் பேஸீன் இரண்டையும் கொடுப்பதாக இசைந்து சமாதானம் செய்துகொண்டார்; அதற்குப் பதிலாக, ஆங்கிலேயர் ஐரோப்பியர்களு முள்ளிட்ட 3000 பேர் கொண்ட சேனையொன்றைக் கொடுத்து உதவ வேண்டும் (மார்ச்சு, 1775). இந்த உடன்படிக்கை **சூரத் உடன்படிக்கை** என வழங்கப்படும். இதற்குப் பின்பு, ஆங்கிலேயர் பூனாவிலிருந்த ரக்ஷக மந்திரிச் சபைச் சேனையின்மீது வெற்றி பூண்டனர்; சில மராட்டியத் தலைவர்கள் ரகுநாதராவின் பக்கல் சேர்ந்தனர்.

**ஆங்கிலேயரும் ரகுநாத ராவும்**

**சூரத் உடன் படிக்கை (1775)**

இப்படியிருக்க, கல்கத்தாவிலிருந்த உயர்தர நீதிமன்றம் தம் அனுமதி பெறாமல் பம்பாய் அரசாங்கம் சூரத் உடன்படிக்கையைச் செய்து கொண்டதற்காக வெறுப்படைந்தது; அம்மன்றத்தினர் அவ்வுடன்படிக் கையை நிராகரித்து, பூனை ரக்ஷக சபையோடிட்ட சண்டையை 'ஆலோசனை யற்ற, ஆபத்தான, அதிகாரத்தை மீறிய, அநீதியான' செயலென்று கண் டித்தனர். ஹேஸ்டிங்ஸுக்கே அப்போது மராட்டியரோடு சண்டையிட விருப்பமில்லையெனினும், தொடங்கியபின் நிறுத்துதல் தக்கதன்றென்றும் கடைசி வரையில் சண்டையிட்டுத் தீர்வதே கருமமென்றும் முடிவு கட்டினர்.* ஆனால், சபையிற் பெரும்பாலோர் அவர்க்கு விரோதமாக, சூரத் உடன்படிக்கையை ரத்து செய்து, நானுபட்னவிஸோடு சமாதானப் பேச்சுக்கள் நிகழ்த்த ஒரு ஏஜெண்டையும் அனுப்பினர்; இதனால், மராட்டியர் கண் முன்னே பம்பாய் அரசாங்கத்தின் அதிகார கௌரவம் இழிவு படுத்தப்பட்டது. இவ்விதமாக, அவர்கள் மராட்டிய ரக்ஷக மந்திரிச் சபையோடு நட்புக் கொண்டாடி, **புரந்தர் உடன்படிக்கையைச்** செய்து

**புரந்தர் உடன் படிக்கை (1776)**

* See pp. XV and XVI of the Introduction of Forrest's Selections from the State Papers preserved in the Bombay Secretariat (1885), and The Poona Residency Correspondence.

கொண்டனர். அதன்படி, ஆங்கிலேயர் ரகுநாதராவை விடுத்து ரக்ஷக சபைக்கு உதவிபுரிய வேண்டும்; இதற்குப் பதிலாக, ஸால்ஸெட்டும் பணத் தொகை சிறிதும் ஆங்கிலேயர்க்குக் கொடுக்கப்படல் வேண்டும். இப்படி யாக, பம்பாய் அரசாங்கம் தான் செய்த உடன்படிக்கையைத் தள்ளி வைத்ததற்காக மிகக் கோபங்கொண்டது; ஆங்கிலேயரது சஞ்சலத்தை யறியாத ரகுநாதராவ், தன் சொந்த உபகரணங்களைக்கொண்டு போரிடுவ தாக வெளியிட்டு, மஹத்ஜி ஸிந்தியாவின் உதவியை நாடினான்: ஆனால் இது பலிக்கவில்லை. இதற்குள், சூரத் உடன்படிக்கையை ஆமோதித்தும், ஸால்ஸெட் ஆங்கிலேயர் வசமேயிருக்க வேண்டுமென்றும், டைரக்டர் சபையினர் செய்திகள் அனுப்பினர். பம்பாய் அரசாங்கத்திற்கு மகிழ்ச்சி பொங்கியது.

1777-முதலில், பதினைந்தாம் லூயியின் தூதுவனெனவந்த **லெயின்ட் லூபின்** என்ற வீரன் பூனாவில் வெகு விமரிசையாக எதிரேற்கப்பட்டான்.

**நானுபட்னவிஸின் மனநிலை**

மராட்டிய அரசாங்கத்தோடு சேர்ந்து பிரெஞ்சுக் காரர் சதி செய்கின்றனரென்ற வதந்தியால், எல்லா ஆங்கிலேயரும் பூனாசபையைப் பகைக்கலாயினர்; அப்போது இங்கிலாந்து தனியே எதிர்த்து நின்ற அமெரிக்க குடியேற்ற நாடுகளோடு தீவிரமாகச் சண்டையிட்டு வந்தது; பிரெஞ்சுக்காரரும் அமெரிக்கநாடுகளுக்கு உதவிபுரிய முன் வந்தனர்: நானு பட்னவிஸுக்குப் பிரெஞ்சு உதவியின் பயனின்மை நன்கு தெரியும்; எனினும், அவர்களையும் கருவியாக்கொண்டு தன் காரியத்தை நிறைவேற்ற முயன்றார். பம்பாய் அரசாங்கம் தான் மேற்கொண்ட செயலில் நம்பிக் கைகொண்டு, ரகுநாதராவுக்கு உடனே உதவிபுரிய வேண்டுமென்றது. இவ்வமயம், இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் போர்தொடங்கியதென செய்தியெட்டியது. பூனாசபையில் பெருஞ் சச்சரவுகளேற்பட்டன. மீண்டும் அதிகாரம் பெற்று லூபினோடு நட்பாடும் நானுபட்னவிஸை ஒழிப்ப தற்குச் சதியொன்று தோன்றியது; ரகுநாதராவ் முன்னர் தாம் கொடுப்ப தாகச்சொன்ன ஸால்ஸெட்பேஸீன் பிராந்தியங்களை மீண்டும் கொடுப்ப தாகச்சொன்னார்; பம்பாய் அரசாங்கத்தினரும் நானுபட்னவிஸ் ஸால்ஸெட் டைப்பிடித்துக்கொள்வாரெனப்பயந்தனர். அவர்கள், ரகுநாதராவை இளம் பேஷ்வாவுக்கு ரக்ஷகனுகப் பூனாவில் அமர்த்த எண்ணினர். அவர்கள் ரகுநாதராவோடு பூனாவின் மேற்செல்ல ஒருசேனையை யனுப்பினர். நானு பட்னவிஸோ, பரந்த ஆயத்தங்கள்செய்து, ஹொல்கர் ஸிந்தியா இவர்க ளின் உதவியைப்பெற்று, வங்காளத்தினின்று கல்கத்தா அரசாங்கம் அனுப்பும் உதவிப்படைகளை யெதிர்க்கச் சித்தமாயிருந்தார். அவர் ஒரு பலத்த படையையனுப்பி, பூனாவுக்கிடை வழியிலுள்ள கிராமங்களைச் சூறை

**போர் தொடங்குதல்**

யாடவே, ஆங்கிலப்படை உற்சாகங்குன்றி **வாட்கான்** என்ற இடத்தில் நானுபட்னவிஸின் படைக்குக் கீழ்ப் படிந்தது. இதனைக் கண்ட ரகுநாத ராவ் ஆங்கிலேயருதவியை நிராகரித்து ஸிந்தியாவின் பாசறையைச் சேர்ந்தார். ஆங்கிலேயர் ஸால்ஸெட்டையும், மற்றும் 1775 முதற்கொண்டு செய்துகொண்ட உடன்படிக்கைகளால் தாமடைந்த

**வாட்கானில் ஏற் பட்ட சமாதானம் (1779)**

பிரதேசங்களையும் விட்டுவிடுவதாக ஒத்துக்கொண்டனர். வங்காளத்தினின்று துருப்புக்களை அனுப்புதலையும் நிறுத்த உடன்பட்டனர். இப்படி, பம்பாய் அரசாங்கத்தார் இந்த மானக்கேடான சமாதானத்தால் ஆங்கிலேயரது கௌரவத்தை இழக்கச் செய்தனர்; வெகுகாலம் வரையில் இக்கௌரவத்தை மீட்க முடிய வில்லை. (ஜனவரி 1779).

ஹேஸ்டிங்ஸ் முன்னலேயே முயற்சிகள் எடுத்துக்கொண்டு, ஜெனரல் கோடார்ட் தலைமையின்கீழ் ஒரு படையனுப்பினர் அது தபதி நதிக்கரையிலுள்ள பூர்ஹான்பூரை யடைந்ததும், வாட்கான் தோல்விச் செய்தியைக் கேள்வியுற்றது. ஹேஸ்டிங்ஸ், உடனே வாட்கான் சமாதானத்தை நிராகரித்தார்: எனினும், ஸிந்தியா வுக்களித்த வாக்குத்தத்தத்தை மீற அவர் விரும்ப வில்லை. கோடார்ட், மேலும் தோல்விகள் ஏற்படா வண்ணம் விலக்கச் சூரத்திற்கு விரைந்து சென்றான். பம்பாய் அரசாங்கமும் வாட்கான் சமாதானத்தைத் தங்களனுமதியின்றி செய்யப்பட்டதென நிராகரித்தனர். இதற்குள், வாட்கானில் ஆங்கிலேயர்க்காக மத்தியஸ்தம் செய்து வைத்த ஸிந்தியா, இப்போது நானபட்னவிஸுக்கும் ஆங்கிலேயர்க்குமிடையே மத்தியஸ்தராயிருக்க விரும்பி, ரகுநாதராவைப் புரோச்சு நகர்க்குத் தீப்பியோடுமாறு செய்தனன். நானபட்னவிஸ் ஹைதர் அலியோடும் நிஜாம் அலியோடும் உடன்படிக்கை செய்துகொண்டு, ஆங்கிலேயர் தம்மோடு உறவாட வேண்டுமெனின், முன்னம் ரகுநாதராவையும் ஸால்ஸெட்டையும் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென்று வற்புறுத்தினர்; இவ்விதமாக, போர் மீண்டும் தொடங்கியது.

**ஹேஸ்டிங்ஸ் உதவிக்கு வரல்**

கோடார்ட் மஹாராஷ்டிரத்தினும் குஜராத்தையே போர்க் கருமங்கள் நிகழ்த்த ஏற்ற இடமாகக் கொண்டான்; ஏனெனில், ஆங்கிலேயர் போர் நிகழ்த்துவதற்குச் சூரத் ஒரு நல்ல அடிப்படை நிலையமாகும். அவன் 1780-இல், அஹமதாபாத்தை முற்றுகையிட்டுப் பிடித்துத் தன்னோடு வந்த ஸிந்தியா ஹொல்கரிருவரின் படைகளையும் ஓட்டினன். தன்கிரமிக்க ஸிந்தியா முடிவு காணுமாறு போரிட மறுத்துக் கொஞ்சம் கொஞ்சமாகக் கோடார்ட்டை அடிப்படை நிலையத்தினின்று தூர வரும்படி இழுத்துச் செல்ல விரும்பினன். இச்சமயத்தில்தான் ஹைதர் அலி சென்னையிலிருந்த ஆங்கிலேயரைத் தீவிரமாகத் தாக்கிக் கர்நாடகத்தைச் சூறையாடியது; இவ்வரலாறு, முன்னரே குறிக்கப்பட்டுளது (இரண்டாவது மைசூர் யுத்தம்). நானபட்னவிஸ் கிருஷ்ணா துங்கபத்ரா நதிகளுக்கிடையுள்ள பிரதேசங்களை ஹைதருக்குக் கொடுக்க உடன்பட்டார். நிஜாமும் அவருக்கு உதவி செய்தனர்; பிரெஞ்சுக் கப்பற்படையொன்றும் கிழைக்கரைக்கு வருமென எதிர்பார்க்கப்பட்டது.

**கோடார்ட் குஜராத்தில் நிகழ்த்திய போர்க் கருமங்கள்**

ஹேஸ்டிங்ஸ் இந்தக் கஷ்டங்களிலிருந்து ஆங்கிலேயரை விடுவித்தார். குஜராத்திலிருந்து ஸிந்தியா ஹொல்கரிருவரையும் திரும்பச் செய்வதற்காக அவர்கள் கவனத்தை மத்திய இந்தியாவிற்கு இழுக்கவெண்ணி, ஹேஸ்டிங்ஸ் **காப்டன் பாப்ஹாம்** தலைமையின்கீழ் வங்காளத்தினின்று ஒரு

சேனையை *கோஹட்ராணாவுக்கு உதவி புரியுமாறு அனுப்பினர்; இந்த ராணா பேஷ்வாவுக்கு அடங்காது சுயேச்சாதிகாரம் பெற விரும்பினர். பாப்ஹாம், கைப்பற்ற முடியா தென வெண்ணிய குவாலியர் கோட்டையைத் தீவிரமான முற்றுகையிட்டுக் கைப்பற்றினர். இவ் வீரச் செயல், ஆங்கிலேயரது பெருமையைப் பெருக்கியது; கோட்டையை யிழந்த ஸிந்தியா மராட்டிய†கட்டுப்பாட்டுக் கூட்டத்தை நீத்து மாளவத்துக்கு விரைந்தான். நானாபட்னவிஸுக்கு முதலிலிருந்தே முழுமனதுடன் உதவி புரியாதிருந்த பான்ஸே ராஜாவும் தமக்கிட்ட கட்டளைப்படி வங்காளத்தை யெதிர்க்கவில்லை. ஹேஸ்டிங்ஸ் அவனுக்குப் பணங்கொடுத்து, அவனது படைகளை மீட்டுக் கொள்ளுமாறு தூண்டினர். இப்படியிருக்க, கோடார்ட் பேஸீனைக் கைப்பற்றினன்: இது நானாபட்னவிஸுக்கு ஏக்கமுண்டாக்கிற்று; குவாலியர்கோட்டை பிடிபட்டபோது ஏற்பட்ட பயம் பேஸீனைக் கைப்பற்றியபோதும் உண்டாயிற்று; கோடார்ட் கையிக்வாரைப் பூனா அரசாங்கத்தோடு சேராதபடி பிரித்து வைத்தான்; நிஜாமும் பூனா அரசாங்கத்திற்குத் தீவிரமாக உதவி புரியவில்லை.

**பாப்ஹாம் குவாலியரைக் கைப்பற்றுதல் (1780)**

**ஆங்கிலேயர் பேஸீனைப் பெறுதல்**

ஹேஸ்டிங்ஸ் நானாபட்னவிஸின் தனிப்பட்ட நிலைமைகண்டு அதனைத் தமக்கு நற்பயன்படுத்த எண்ணினர். அவர் பான்ஸ்லேயை முன்னரே தம்பக்கல் சேர்த்துக்கொண்டார். குவாலியரை யிழந்தமையால் வருந்திய ஸிந்தியா, ஆங்கிலேயரோடு சமாதானஞ் செய்து கொள்ளுதலே நலமெனக் கருதி அவர்களோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டான் (1781). அதன்படி, ஸிந்தியா, பூனா சபைக்கும் ஆங்கிலேயர்க்கும் சமாதானஞ்செய்து வைப்பதாகவும், அச்சமாதானத்தைச் செவ்வனே அனுஷ்டிப்பதற்குத் தானே உத்தரவாதமாயிருப்பதாகவும் ஒத்துக்கொண்டான். ஹேஸ்டிங்ஸுக்கு மராட்டியர் ஹைதர் அலியைத் தாக்கவேண்டும் என்பதுதான் விருப்பம்: ஏனெனில், ஹைதர் கர்நாடகத்திலிட்ட போர்கள் மிகப் பயங்கரமானவை. 1782-மே மாதம் **ஸால்பாய் உடன்படிக்கை** செய்யப்பட்டது. ஆங்கிலேயர் வென்ற நாடுகளனைத்தும் மராட்டியர்களுக்குத் திரும்பக் கொடுத்துவிடல் வேண்டும்; ரகுநாதராவுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துவிட வேண்டும்; ஸிந்தியாவின் நற்சேவைகளுக்காகவும், வாட்காளில் ஆங்கிலேயர்க்கு அவன் காட்டிய உதாரகுணத்துக்காகவும், அவனுக்குப் புரோச்சைக் கொடுத்துவிடல் வேண்டும். ஆங்கிலேயர் ஸால்ஸெட்டைத் தாமே வைத்துக்கொண்டு, கையிக்வாரைச் சுயேச்சாதிகாரம் பெறச் செய்தனர். இவ்வுடன்படிக்கை இந்தியாவில் ஆங்கிலேயரது வரலாற்றில் ஒரு சிறந்த சம்பவமாகும்; இது மராட்டியரோடு ஆங்கிலேயர் மேற்கொண்ட சம்பந்தங்களுக்குப் புதியதோர் அடிகோலியது. இது, மராட்டியத் தலைவர் கூட்டத்தோடு இருபதாண்டுகள் சமாதானம் நிலவும்படி செய்தது; மேலும்,

**நானாபட்னவிஸின் தனிப்பட்ட நிலை**

**ஸால்பாய் உடன்படிக்கை (1782)**

**அதன் விளைவு**

* Rana of Gohad. † Confederacy.

"இந்திய அரசியல் விவகாரங்களில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை நிலை பெற நிறுவியது." ஹேஸ்டிங்ஸின் பேராற்றலும் சாமர்த்தியமும்தான் ஆங்கிலேயரை மிக்க ஆபத்தான நிலைமையிலிருந்து தப்ப வைத்தது: இதுமுதல், மகத்தான இந்தியாவும் பூலுவிலிருந்த பேஷ்வாவுக்கும் நானுபட்னவிஸுக்கும் அடங்கி நடக்காமல் அவர்களை விட்டுப் பிரிந்தான்.*

## பகுதி 5. ஹேஸ்டிங்ஸின் ஆட்சி முடிவு—அவனது குற்ற விசாரணை.

1780—81 ஆம் ஆண்டுகளில் ஹேஸ்டிங்ஸுக்கு மிக்க தொந்தரவுகள் ஏற்பட்டன. ஹைதர் அலி கர்நாடகத்தைப் பாழ்படுத்திக் கொண்டிருக்க, மராட்டியரோ சமாதானத்திற்கு வராமலிருக்க, பிரெஞ்சுக் கப்பற்படைகளோ விரிகுடாவில் சுற்றிக் கொண்டிருக்க, ஹேஸ்டிங்ஸுக்குத் தலைக்குமிஞ்சிய அலுவல்களேற்பட்டன. போதாததற்குப் பிரான்ஸினின் எல்லையற்ற துவேஷம் ஹேஸ்டிங்ஸை வாட்டியது; பிரான்ஸிஸ், 1780 முடிவில், வாரன் ஹேஸ்டிங்ஸ் இம்பே இருவர் மேலும் கடும் விரோதத்தொடு இங்கிலாந்துக்குத் திரும்பினர். ஹேஸ்டிங்ஸின் மேல் பகைமை முற்றியதற்குக் காரணம், தம்மாலேயே உண்டாக்கப்பட்ட சண்டையொன்றில் இருவரும் கைகலந்தபோது, ஹேஸ்டிங்ஸ் பிரான்ஸிஸைக் காயப்படுத்தியமையேயாகும். இதனால், பிரான்ஸிஸ் இங்கிலாந்துக்குச் சென்றபின்பும் துன்புறுத்த ஆரம்பித்தார்; அவர் பொதுமக்களுக்கு ஹேஸ்டிங்ஸின்மீது கோபம் பெருகும் வகை அவரது அரசியலைப் பழித்துப் பேசினர்; அச்சாபீஸ் தலைவர்களைத் தம் சார்பாகவே எழுதும்படி தூண்டினர்; டைரக்டர் சபையினரிற் சிலரையும் தம் பக்கல் சாரும்படி செய்தார். மேலும், பார்லிமெண்டினலேற்படுத்தப்பட்ட இரண்டு விசாரணைக் கமிட்டிகளையும்கூட கவர்னர்—ஜெனரலுக்கு விரோதமாகச் சாட்சிகள் தொடுக்கும்படி செய்தார். 1782-இல், லார்ட் நார்த் (North) தின் மந்திரிச்சபை போய் ராஜிங்காம்—ஷெல்பர்ன் மந்திரிச் சபை வந்தபோது, ராஜிங்காமைக் கையகப்படுத்திய பர்க் (Burke), ஹேஸ்டிங்ஸுக்கு விரோதமான செயல்களையே மேற்கொள்ளும்படி அவரைச் செய்தார். மற்றும் பொறுக்குக் கழகங்களின் அறிக்கைகளையும், பிரான்ஸினின் உதவிகொண்டு பர்க்கே எழுதினர்; கம்பெனியின் அமைப்பு முறையை முற்றும் மாற்றும்படியும், இம்பேயைத் திரும்ப அழைக்குமாறும் கூக்குரலெழும்பியது. இதற்குப் பின்பு துண்டுக் காகிதப் பிரசுரங்களின் மூலம் சச்சரவுகள் நிகழ்ந்தன. 1781-இல், செயிட்சிங்கோடு ஹேஸ்டிங்ஸ் வைத்துக்கொண்ட நடவடிக்கைகளின்விவரம் இங்கிலாந்துக்கெட்டவே, அவைகளைக்கொண்டுஹேஸ்டிங்ஸை மேலும் பழிக்கலாயினர். 1782 முடிவில், பர்க்ஸும் (Fox) பர்க்கும் ஹேஸ்டிங்ஸைப் பார்லிமெண்டில் பகிரங்கமாக நிந்தித்தனர். ஹேஸ்டிங்ஸை நீக்கி லார்ட் காரன்வாலிஸைக் கவர்னர்—ஜெனரலாக்குமாறு ஒரு

**ஹேஸ்டிங்ஸுக்கு இங்கிலாந்திலேற்பட்ட உபத்திரவம்**

---

* Cambridge History of India, Vol. V. pp. 271—2. பின்னர், 1818-இல் ஆங்கிலேயர் பேஷ்வாகாரத்தோடு ஒன்றியதற்குக் காரணம் ஸால்பாய் உடன்படிக்கையில் அவர்கள் பெற்ற உயர்நிலையேயாகும்.

*மசோதா ஆலோசிக்கப்பட்டது. அம்மசோதாவில், ஜமீன்தார்களோடு செய்துகொள்ள வேண்டிய நிலத்தீர்வை ஏற்பாட்டைப் பற்றியும், கம்பெனி †சுதேச விவகாரங்களில் தலையிடா நோக்கத்தைப்பற்றியும் கண்டிருந்தது. ஆனல், பார்லிமெண்டில் அம்மசோதா அங்கீகரிக்கப்படும் முன்னரே, அமெரிக்க நாட்டொடு சமாதானப் பிரகிஞை விஷயமாக ஷெல்பர்ன் மந்திரிச் சபை அப்பதவியைக் கைவிட நேர்ந்தது; இதற்குப் பின்பு பாக்ஸ்-ம் நார்த்தும் சேர்ந்த ‡கூட்டு மந்திரிச் சபைப் ஏற்பட்டது. (மார்ச்சு, 1783),

**ஹேஸ்டிங்ஸை நீக்கச் சூழ்ச்சி செய்தல்**

மந்திரிச் சபையில் இத்தகைய மாறுதல்கள் பல ஏற்படினும், "பிரான்ஸிஸால் தூண்டப்பட்ட பாக்ஸ்—பர்க்கின் செல்வாக்கு, அனைத்திற்கும் மேலாகத் தலையோங்கி நின்றது." ஸால்பாய் உடன்படிக்கை ஏற்பட்டு செய்தியும், ஹேஸ்டிங்ஸின் ஏஜெண்ட் பிரசுரித்த §'கூசியில் நிகழ்ந்த சம்பவங்களின் வரலாறு' என்ற சிறுபுத்தகமும் பொதுமக்களின் அபிப்பிராயத்தை ஹேஸ்டிங்ஸின் சார்பாகத் திருப்பின; மேலும், ஹேஸ்டிங்ஸுக்கு என்றும் ஆதரவளித்து வந்த ¶நிர்வாக சபையினரும் 'அவனது நீடிய மதிப்பரிய சேவைகளுக்கு' நன்றியறிதலைத் தெரிவித்தனர்; ஒருவர் அவரைக் "கீழ்திசையிலுள்ள சாதாம்பிரபு' எனமதித்தனர். இவ்விதமாக, ஹேஸ்டிங்ஸின் சார்பாக நற்காலம்திரும்பினும், பர்க் பிரான்ஸிஸ் இருவராலும் தூண்டப்பட்ட பாக்ஸ் 1783-நவம்பர் மீ" பார்லிமென்டில் தாம் வகுத்த இந்திய மசோதாக்களைக் கொணர்ந்தார்: அதற்கு, முன்னுரையாக இந்தியாவில் அரசியலாழல்களைப்பற்றி ஒரு நீண்ட சொற்பொழிவாற்றினர். பாக்ஸைக் கிளப்பி விட்டவன் பர்க்; பர்க்கை "முடுக்கியவன் பிரான்ஸிஸ்."

**பாக்ஸ் கொணர்ந்த இந்திய மசோதாக்கள் (1783)**

**பிரதான மசோதாவில் பிரான்ஸிஸ் கூறியபடியே அரசியல் முறைமை வரையப்பட்டிருந்தது. அது, சுதேசமன்னரின் விவகாரங்களில் தலையிடக் கூடாதென்றும், பிறநாடுகளைவென்று ஆங்கிலராஜ்யத்தைப் பரப்புதல் கூடாதென்றும் விதித்தது. மேலும், கம்பெனியினதிகாரத்தை அறக்கீளைய வேண்டுமென்றும், டைரக்டர் சபையையும் நிர்வாக சபையையும் ஒழித்து விட்டு, அவைகளுக்குப்பதிலாகக் கமிஷனர்களடங்கிய இரு சபைகளை யேற்படுத்த வேண்டுமென்றும் கூறியது. இந்த இருசபைகளுள் ஒன்று, கம்பெனியின் **வியாபார**சம்பந்தமான விவகாரங்களைக் கண்காணித்தல் வேண்டும். மற்றொரு சபை மிகமுக்கியமானது. அது கவர்னர்ஜெனரல் முதலாகவுள்ள உத்தியோகஸ்தர்களனைவரையும் வேலையிலமர்த்துவது நீக்குவது உள்ளிட்ட சகல ‡ ராஜீய விவகாரங்களையும் கவனித்தல் வேண்டும். அந்த உத்தியோகஸ்தர்களின் பெயர்கள் மசோதாவிலேயே குறிக்கப்பட்டுள்ளன; அவர்கள் பார்லிமென்டினல் நியமிக்கப்பட்டவர். நான்கு வருடங்கள்தான் உத்தியோகம் வகிக்கலாம். இந்த நிபந்தனைதான் அம்மசோதா

**அவைகளின் உண்மை நோக்கம்**

---

* Bill. † Policy of Non-intervention. ‡ Coalition Ministry.
§ "Narrative of Events at Benares." ¶ Court of Proprietors.
** Main Bill ‡ Political.

வில் காணப்படும் பெருத்தகுறைபாடாகும். பாக்ஸின் விரோதிகள், 'பாக்ஸ் கம்பெனியின் பரிபாலனத்தை மந்திரிகளின்கைவசம் மாற்றப் பார்க்கிறார்' என வாதித்தனர்; அப்படி மாற்றுவதனால் மந்திரிகளுக்குப் பார்லிமெண்டில் பெரும்பாலோர் வாக்குரிமைகிட்டி அதிகாரச் செல்வாக்கு நிலைத்து நின்றுவிடும். ஆனால், பர்க் அம்மசோதாவை ஆதரித்து ஒரு சிறந்த சொற்பொழி வாற்றினர்; அச்சொற்பொழிவில் 'நான் இந்தியவிவகாரங்களைப்பற்றியறிந்ததற்குப் பிரான்ஸிஸுக்குப் பெரிதும் கடமைப்பட்டவனாவேன்' எனத்தெரிவித்தார்‡. மீசோதா அமுலுக்கு வந்திருந்தால், பொதுமக்களால் வெறுக்கப்பட்டும் மன்னரால் எதிர்க்கப்பட்டும் கிடந்த கூட்டு மந்திரிச் சபைநீண்டகாலம் அதிகாரம்வகித்திருக்கும். டைரக்டர்கள் நீவிரமாகஎதிர்த்த போதினும், பர்க்கின் சொற்பொழிவாலும், பாக்ஸின் செல்வாக்காலும் இம்மசோதா காமன்ஸ் சபையில் எளிதாக அங்கீகரிக்கப்பட்டது. அது, பிரபுக்கள் சபையிலும் எளிதில் அங்கீகரிக்கப்பட்டுச் சட்டமாகியிருக்கும். ஆனால், மன்னர் பலமிரங்கமாகப் பகைமை பாராட்டித் தம் முயற்சிகளால் அதனைத் தள்ளுபடி செய்தனர். இங்ஙன், மந்திரிச் சபை தோல்வியுடைந்தவுடன், மன்னரால் கூலிக்கப்பட்டது. முதன் முதலாக, பார்லிமெண்டின் வரலாற்றில் இந்திய விவகாரங்களால் பிரிட்டிஷ் அரசாங்கம் நீவிரமாகப் பாதிக்கப்பட்டது இப்போதேயாகும். தோற்ற மந்திரிகள் தங்கள் வீழ்ச்சிக்கு ஹேஸ்டிங்ஸைக் காரணமாக்கி அவர் மேல் கறுக் கொண்டனர்.

**மசோதாக்கள் நிறைவேறுது போதல்**

இதற்குப்பின் பிட் மந்திரியானர்; பிட்டின் மந்திரிச் சபையினரிற் பெரும்பாலோர் ஹேஸ்டிங்ஸிடம் நட்புக்கொண்டாடினர்; இம்மந்திரித்துவத்துக்கு **லார்ட் கவர்** என்பவர் "ஹேஸ்டிங்ஸின் அரசியல் முறை" எனப் பெயரிட்டனர்; நீக்கப்பட்ட கூட்டு மந்திரிச்சபையோ கவர்னர் ஜெனரலிடம் கடும்பகைமை பாராட்டியது. தூண்டுக் காகிதப் பிரசுரங்களின் மூலம் சச்சரவுகள் நிகழ்ந்தன; பிரான்ஸிஸ் பழிவாங்குவதில் முனைந்து நின்று, இந்தியாவுக்குப் புதிய அரசியல் திட்டம் வகுப்பது இன்றியமையாதாகும் என வெளியிட்டார். பிட் பார்லிமெண்டைக் கலைத்துப் பின் பெரும்பாலோரின் வாக்குரிமை பெற்று 1784ஆம் ஆகஸ்டுமீ தம் புகழ் சான்ற **இந்திய மசோதாவைப்** பார்லிமெண்டில் கொணர்ந்தார்: அதுபார்லிமெண்டில் எளிதில் நிறைவேற்றப்பட்டுச் சட்டமாயிற்று. அதன் விளைவுகளும் பெருமையும் இந்தியாவிலிருந்து ஹேஸ்டிங்ஸ போன பின்புதான் உணரப்பட்டன. இந்தியாவில் ஹேஸ்டிங்ஸின் ஆட்சி முடிவடையும்போது இங்கிலாந்தில் இத்தகைய நிலைமை நிலவியது.

**பிட் மந்திரிப் பதவி வகித்தல்**

**பிட் இந்தியச் சட்டம் நிறைவேறல் (ஆகஸ்டு, 1784)**

---

‡ இம்மனிதரது ஆற்றலண்ணங்களும் சட்டமியற்றுதலிற்கொண்ட பெரு நோக்கங்களும், நோக்க முறைச்சூழ்ச்சிகளும் நம்விருத்தாந்தங்களுக்கு மெருகிட்டுப்பிரகாசிக்கச் செய்கின்றன; அவைகளினின்றுதான் நாம் சில நல்ல கருத்துக்களையறிந்தோம்.....அவர் வேறெருவெரு மதியையோ புகழையோ விரும்பினரில்லை; ஆனல், நல்ல மனச்சாட்சியுடைய ஞகலின் ஆன்மஉள்ளொளி (inward shine of the soul) அவரிடம் உண்டு"—p.157 of Weitzman's Warren Hastings and Philip Francis.

இனி, இந்திய விவகாரங்களைத் திரும்பக் கவனிப்போம். மராட்டிய ரோடும் ஹைதர் அலியோடும் செய்த போர்களால் கம்பெனியின் பொக்கி ஷம் வறண்டு போயிற்று. ஆதலால் ஹேஸ்டிங்ஸ் பணம் சம்பாதிப்பதற்கு எவ்வகை வழிகளையும் மேற்கொள்ள நேரிட்டது; அவைகளுளொன்று, காசியரசன் செயிட் சிங்கினிடமிருந்து பணம் பெற்றமை. இந்த செயிட் சிங் தன் தகப்பன் பலவந்த் சிங்குக்குப்பின் காசியில் அரசனுயினன்; முதலில் காசியரசு அயோத்தி நவாபுக்குட்பட்டுக் கிடந்தது; பின்னர் நிகழ்ந்த உடன்படிக்கையால் கம்பெனியின்கீழ் வந்தது. 1778-இல் மராட்டிய யுத்தம் தொடங்கியபோது, ஹேஸ்டிங்ஸ் தமக்குச் சேர வேண்டிய கப்பத்தொகையேயன்றி, மேலும் ஒரு 5 லட்சம் ரூபாய் கொடுக்குமாறு செயிட் சிங்கைக் கேட்டான். இப்படியே அடுத்த இரண்டு வருடங்களிலும் அரசனிடமிருந்து கேட்டு வாங்கினர். அரசனே, ஆங்கிலேயரோடு செய்து கொண்ட உடன்படிக்கையின்படி கப்பத்தைத்தவிர வேறொன்றும்தான் கொடுக்க வேண்டியதில்லையென வாதித்தான். அவன் சொற்களைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. அவன் நாட்டின்மேல் ஹேஸ்டிங்ஸ் துருப்புக்களை ஏவினர். மற்றும் 1780-இல், அவரைக் கம்பெனிக்கு 2000 குதிரை வீரர்களையாவது—அல்லது குறைந்த பட்சம் 1000 குதிரை வீரர்களையாவது—கொடுக்குமாறு கேட்டார். செயிட்சிங், 1000 குதிரை வீரர்களை யனுப்ப உடன்பட்டபோது, ஹேஸ்டிங்ஸ் ஏற்க மறுத்தார். மேலும், செயிட்சிங்கின் மூர்க்கத்தனத்திற்காக ஹேஸ்டிங்ஸ் 50 லட்சம் ரூபாய் அபராதம் விதித்தார்.* விதித்தபின் அபராதத்தை வற்புறுத்தி வசூலிக்க வேண்டி, ஹேஸ்டிங்ஸ் காசிக்கு வந்தபோது அரசன் தாழ்ந்து பணிந்தான்; பணிந்தவனை ஹேஸ்டிங்ஸ் சிறையிலிட்டான். அரசனது துருப்புக்கள் கலகஞ்செய்து சில ஆங்கிலச் சிப்பாய்களையும் உத்தியோகஸ்தர்களையும் கொலை செய்தன. செயிட் சிங், மேலும் தனக்குத் துன்பம் விளையுமென்றெண்ணி, நிகழ்ந்த கலவரத்தில் சிறையினின்று தப்பியோடினன். ஹேஸ்டிங்ஸ் பேராபத்துக்குள்ளாகிப் பாதுகாப்புக்காகச் சுனர்கோட்டைக்கு விரைந்தோடினர். அவர் சமயோசித புத்தியுடையராகலின், கிடைத்த துருப்புக்களைத் திரட்டிக் கலகத்தை விரைவில் ஒடுக்கினர். செயிட் சிங் தான் நிரபராதியென வழக்காடியும்கூட அவரை வேட்டையாடி அலக்கழித்தார் ஹேஸ்டிங்ஸ் செயிட் சிங்கின் மருகனை காசியரசனுக்கி அவனிடமிருந்து வரவேண்டிய கப்பத் தொகையை அதிகப்படுத்தினர்.

**காசிய ரசன் செயிட் சிங்கை ஹேஸ் டிங்ஸ் பணம் கேட்டல்**

**காசியில் ஹேஸ் டிங்ஸ்—(1781)—கலகம் ஏற்படல்**

கல்கத்தா சபையினர் ஹேஸ்டிங்ஸின் அவசரச் செய்கையை ஆமோதித்தனர்; ஆனால் இச்சம்பவ முற்றும் பின்னர் நிகழ்ந்த குற்றச் சாட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஹேஸ்டிங்ஸின் மேல் குற்றத்திற்குக் காரணம் யாதெனில்—செயிட்சிங் சுதந்திரமுள்ள ஒரு அரசனேயன்றி

**செயிட்சிங் விவகாரத்தின் தகைமைகள்**

---

* ஹேஸ்டிங்ஸ் எழுதிய 'காசி ஜமின்தாரியில் கேர்ந்த கலகத்தின் வரலாறு' என்றதில் அவர் கூறுவதாவது:—"செயிட்சிங்கின் குற்றத்தினால் நான் கம்பெனியின் பணக் கஷ்டங்களை வெர்த்திக்கத் தீர்மானித்தேன்." ஹேஸ்டிங்ஸ் காசியின் வருவாய்களைப் பெற்று அதன் அரசியலை மேன்மைப் படுத்த ஆலோசித்தார்.

ஜமீன்தாரல்லன்; ஆதலின் கம்பெனிக்கு ஜவாப்தாரியல்லன் என்பது. ஹேஸ்டிங்ஸ் அவனை ஜமீன்தாராகவே மதித்தானென்றாலும், ஒரு விஷயத்தில் அவர் நிலைமை குறைபாடுடையதேயாகும். 1775-ஆம் வருடத்திய உடன்படிக்கையின்படி கப்பத்தொகை நவிர அதிகப்படியாக வேறெதுவும் தன்னிடமிருந்து வசூல் செய்யப்படாதென செயிட்சிங் நிபந்தனையொன்று பெற்றுள்ளான். ஆதலின், ஹேஸ்டிங்ஸ் அவனை நடத்திய விதம் "கருணை யற்றதும் பழிப்புக்கிடமானது" மாகும்; அவன் மேல் விதித்த பெருத்த அபராதமும் அக்கால ராஜீய நிலைமையையொட்டி நியாயமென வேண்டுமேயன்றி வேறின்று. இந்தப் பண்பிடுங்கல்களினின்றும் கலக விளைவுகளினின்றும் காசி மீண்டும் தன்னிலையெய்த நீண்டகாலம் பிடித்தது; இஃதே ஹேஸ்டிங்ஸின் செயலுக்குப் பெரும் பழியைச் சூட்டுகிறது.*

செயிட்சிங்கைப் பெருந்தொகை செலுத்துமாறு செய்த முயற்சி வீணாகவே ஹேஸ்டிங்ஸ் வேறு வழியில் பணம் சம்பாதிக்க எண்ணினர்.

**ஹேஸ்டிங்ஸும் அயோத்தி நவாபும்**

அயோத்தி நவாபாகிய அஸப் உத்தௌலா கம்பெனிக்கு ஒன்றரை கோடி ரூபாய் கடன் கொடுக்க வேண்டுமாதலின், அத்தொகையைக் கொடுக்கும்படி ஹேஸ்டிங்ஸ் வற்புறுத்தினர். நவாப் ஹேஸ்டிங்ஸைச் சுனரில் சந்தித்துத் தன்னிடம் பணமில்லையென்றும், உடன்படிக்கையின்படி தான் தன் தலை நகரில் வைத்துக் கொண்டுள்ள ஆங்கிலத்துருப்புக்களையே தன்னால் பராமரிக்க முடியவில்லையென்றும் கூறினர். தன் நகப்பணப் போலன்றி, இந்த நவாப் அதிக செலவாளி; மேலும் நீசமானவரோடு தோழமைபூண்டு அவர்கள் சொற்படியே தீய வழிகளில் ஒழுகி வந்தான். ஹேஸ்டிங்ஸ், இதனை நன்குணர்ந்து, நவாபின் அரசியல் முறையையே முற்றும் மாற்ற விரும்பினன். அஸப் உத்தௌலா பட்டத்துக்கு வந்தபோது, சபையிற் பெரும்பாலோர் அவனைப் புது உடன்படிக்கையொன்று செய்து கொள்ளுமாறு வற்புறுத்தினர்; அதன்படி, தன் சேவையிலுள்ள ஆங்கிலத் துருப்புக்களின் பராமரிப்புக்காக அவன் இன்னும் அதிக தொகை கொடுக்க வேண்டி வந்தது. மேலும், அவன் தகப்பனர் சேர்த்து வைத்த ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாயடங்கிய பொக்கிஷத்தை அவன் தொடவும் கூடாது: அப்பொக்கிஷம் பீகங்களின்—அதாவது, ஷுஜா உத்தௌலாவின் தாயும் மனைவியும்—வசமிருந்தது. மற்றும், பீகங்களின் வசம் பல ஜாகீர்களுமிருந்தன; அவர்கள் தங்கள் வசமுள்ள சொத்துக்களனைத்தையும் ஒரு உயிலின் துணைக்கொண்டு தங்களதென உரிமை பாராட்டினர்: ஆனால் அந்த உயில் என்றும் காட்டப்பட்டிலது. அஸப் உத்தௌலாவோ இச் சொத்துக்களெல்லாம் தன்னிடம் கொடுக்கப்படாமல் அநியாயமாய் எடுத்துக் கொள்ளப்பட்டன என வழக்காடினன். அவனது தாய் ஒரு நிபந்தனை பிட்டு அவனுக்குப் பெருத்த தொகை வழங்கினள்: அந்நிபந்தனையாவது:—இனிமேல், அவனும் கம்பெனியும் யாதொருவித தொகையும் அவளிடம் கேட்பதில்லை என்பதே; அங்ஙனமே அவனும் கம்பெனியும் வாக்குறுதியளித்தனர். (1775).

**அயோத்தி பீகங்கள்**

* Torrens: Empire in Asia (1872)—p. 136.

1781-இல், அயோத்திநவாப், தனக்குநியாயப்படி சொந்தமாயுள்ள பொக்கிஷத்தைக் கவர்ந்துகொண்டதால் தான்பட்டகடன்களைக் கொடுக்க இயலவில்லை என ஹேஸ்டிங்ஸினிடம் கூறினன்; உண்மையில், பிகங்களினிட முள்ள சொத்து அனைத்தும் ராஜாங்கத்தைச் சேர்ந்த வையேயாகும்; ஆதலின், அதனிலிருந்து ராஜீய கடன்களைக் கொடுத்துத் தான் தீர்க்கவேண்டும்.

**சுஜுர் உடன்படிக்கை (1781)**

ஹேஸ்டிங்ஸ் இப்போது அயோத்தி நவாபோடு புதிய உடன்படிக்கை செய்து கொண்டார்; அதன்படி, அயோத்தி நவாப் தன் அரசியலையும் சேனையையும் சீர்படுத்துவதாகவும், நீசத்தோழர்களிடமிருந்த ஜாகீர்களை மீட்டுக்கொள்வதாகவும், ஆங்கில ஸ்தானீகரின் கண்காணிப்பின் கீழ் வெகு சிக்கனமாயிருப்பதாகவும் உடன்பட்டான். இதற்குப் பதிலாக, ஹேஸ்டிங்ஸும், அயோத்திநவாப் தன் ஆஸ்திகளை மீட்டுக் கொள்ளலாமென்றும் பிகங்களினிடமுள்ள சொத்துக்களை அபகரித்துக்கொள்ளலாமென்றும் உடன்பட்டார். இவ்வாறு, கம்பெனியின் பாதுகாப்பு பிகங்களுக்கு இல்லாமற் போகவே, நவாப் அவர்களைத் தடையின்றிக் கொள்ளையடிக்கலானான். ஆனால், அவன் இப்போது தன் தாய்க்கும் பாட்டிக்கும் எதிரிடையாகவும், தன் தோழர்களைப் பாதிக்கும்படியாகவும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தை முற்றுவிக்கத் தயங்கினன். பிகங்களுக்கு எதிரிடையாகத் தீவிரநடவடிக்கைகள் எடுப்பதற்கு நவாப் தயங்காதபடி பார்த்துக்கொள்ள ஹேஸ்டிங்ஸ் ஸ்தானீகருக்குக் கட்டளையிட்டார். அவர்களது சேனைகள் நிராயுதபாணிகளாக்கப்பட்டன: அவர்களிடமிருந்த ஜாகீர்கள் மீட்கப்பட்டன: அவர்களது அரண்மனைகிழ்ப்படியும் வரையில் ஆங்கிலத்துருப்புக்கள் முற்றுகையிட்டன. சிறிது எதிர்த்தபின், பிகங்களுக்குக் காவல்புரிந்த அலிகள் நவாபினிடம் சொத்துக்களைக் கொடுத்துவிட்டனர். அச்சொத்துக்களாலும், மீட்கப்பட்ட ஜாகீர்களின் வருமானங்களாலும், கம்பெனிக்கு நவாப் கொடுக்கவேண்டிய கடன்கள் தீர்க்கப்பட்டன. பிகங்களைத் தொந்தரவு செய்யவில்லை; அக்கால நிலையையொட்டிப்பார்ப்பின், அவர்களது ஏஜென்டுகளையும் மிகுதியாக பலாத்காரஞ்செய்யவில்லை.

**பிகங்களைச் சொத்தைக் கொடுத்து விடுமாறு வற்புறுத்தியது**

நிகழ்ந்தவைகட்கெல்லாம் ஹேஸ்டிங்ஸ்தான் உண்மையில் பொறுப்பாளியாவர்; நவாபும் ஸ்தானீகரும் அவரது மனோதத்தை வற்புறுத்த ஏற்பட்ட கருவிகளேயாவர். * ஹேஸ்டிங்ஸ் செபிட்சிங் கலகஞ் செய்த போது அவனுக்குப் பிகங்கள் உதவிபுரிந்தனரென்றும், அயோத்தி நவாபுக்கெதிராகக் கலகமொன்றை யெழுப்பினரென்றும் கூறித்† தாம் அவர்களைக் கொள்ளையடித்தது நியாயமெனச் சாதித்தார்.† ஆனால், கவர்னர் ஜெனரலின்

**பிகம்-விவகாரத்தின் இயல்பு**

---

* தன் ஏஜெண்டுகள் பைஸாபாத்தில் செய்த இச்செயல்களுக்கு ஹேஸ்டிங்ஸ் காரணபூதரல்லர் என்பதும், அவர்கள் நவாப் விரும்பியேதையே செய்தனரென்பதும், எழுதினவைத்துள்ள குறிப்புக்களை நோக்கும்போது நிலைத்து நிற்காவாம்—See Cambridge History Vol. V. pp. 300: இவ்விஷயத்தில் ஹேஸ்டிங்ஸை எவ்வகைக்குற்றத்துக்கும் உள்ளாக்காதவாறு விலக்க டேவிஸ் என்பவர் முயன்று பார்த்தார்—See his Warren Hastings. pp-31-6.

† இதற்குச் சாட்சி யாதெனில்:—இம்பே, கவர்னர் ஜெனரலே நியாயத்திற்கு விரோதமாகக் காசுகவெண்ணி லக்னோவில் தயாரித்த வாக்குமூலங்களேயாகும். இவை பின்னர் ஹேஸ்டிங்ஸின் குற்றவிசாரணையின்போது அவருக்கு ஆதரவாக உபயோகப்பட்டன.

துர்நடத்தைக்கு அடிப்படைக்காரணம் யாதெனில், 1781-இல் அயோத்தி நவாப் அவருக்குப் பத்துலட்சம் ரூபாய் லஞ்சம் கொடுக்க அவர் பெற்றுக் கொண்டமையேயாகும்; அப்பணத்தொகையைக் கம்பெனியின் அதீனத்தில் வைத்திருப்பதாக டைரக்டர்களுக்கு முதலில் தெரியப்படுத்திப் பின்பு, தமக்கே நன்கொடையாக அளித்துவிடும்படி அவர்களே வேண்டிக்கொண்டார். அக்காலநிலையையொட்டி ஹேஸ்டிங்ஸ் அங்ஙன் செய்ய கோர்ந்த போதினும், மொத்த விவகாரமும், கவர்னர் ஜெனரலுக்கும் அயோத்தி நவாபுக்கும் 'சிறிதேனுமேற்காத்த 'நீசமான அற்ப விசனிக்கத்தக்க'தொரு விஷயமாகும்.

மற்றொரு விஷயத்திலும் ஹேஸ்டிங்ஸ் நற்பயன்களடையவில்லை. ராமபுரிப் பகுதியைச் செல்வனேயாண்டுவந்த மொஹில்லர் தலைவனுகிய **பெயிஸுல்லா கான்** ஆங்கிலேயரோடு ஒரு தனி உடன்படிக்கை செய்து கொண்டான். இப்படியிருக்க, 1780-இல், அங்கிலேயர் நவாப் இவ்விருவரது ராஜ்யங்களுக்கு எல்லைப் புறங்களைப்பாதுகாப்பதற்காக அவனே 5000 குதிரைப்படைகளைக் கொடுக்குமாறு ஹேஸ்டிங்ஸ் கேட்டார். பெயிஸுல்லா கொஞ்சம் குறைவான எண்ணிக்கையையுடைய துருப்புக்களைக்கொடுத்தபோது, ஹேஸ்டிங்ஸ் கோபித்து அயோத்தி நவாபின் ஆலோசனையின்படியே அவனது ஜாகீரைப் பறிமுதல் செய்ய உடன்பட்டார். ஆனல், பெயிஸுல்லாவின் அதிர்ஷ்ட வசமாக, ஹேஸ்டிங்ஸ் தன் மனேரதத்தை நிறைவேற்றக் காலதாமதஞ்செய்துவர, டைரக்டர் சபையினர் இந்த விவகார முற்றையும் பழித்தனர்; ராமபுரி பெயிஸுல்லாவுக்கும் அவர் சந்ததியார்க்கும் நிரந்தர உரிமையாயிற்று.

**ஹேஸ்டிங்ஸும் பெயிஸுல்லா கானும்**

ஹேஸ்டிங்ஸ் கடைசியாக காசி அயோத்தி அரசியல் முறைகளைச்சீர் படுத்த முயன்ருர். அவரே 1784-இல் லக்னேவுக்கு வந்து, ராஜீய செல்வாதாரத்தைத் தக்கபடிவைத்து, தம்மோடு பகைமை மறந்த நேசங்களுக்கு ஜாகீர்களைத் திரும்பக்கொடுத்தனர். ஆனல், அரசாங்கத்தில் யாதொரு நிரந்தர சீர்திருத்தமும் செய்யப்படவில்லை. காசியில், ஹேஸ்டிங்ஸ் ரெவின்யூவையும் குடியானவர்களின் உரிமைகளையும் பாதுகாக்கவும், டிரையோஜனற்ற உத்தியோகஸ்தர்களை நீக்கவும் ஒரு ஆலோசனையிட்டார். ஆனல், அதனல் நன்மையொன்றும் ஏற்படவில்லை. மேலும் அவர் டில்லியில் கலவரப்பட்டுக்கிடந்த முகலாய சபையினரின் அரசியல் விஷயங்களிலேயே தலையிடவிரும்பினர்; ஷாஆலமும் ஆங்கிலேயர் பாதுகாப்பின் கீழ் வரவிரும்பினன்; ஆனல், இவ்வெண்ணம் முற்றுப்பெருது போயிற்று.

**அயோத்தியிலும் காசியிலும் சீர் திருத்தஞ்செய்ய அவர்செய்த முயற் சிகள்**

ஹேஸ்டிங்ஸ் சிலகாலமாக கவர்னர் ஜெனரல் பதவியை விட்டுச்செல்ல எண்ணமிட்டார். ஹேஸ்டிங்ஸோடு தீராப்பகை பாராட்டிய ஷெல்பர்ன் மந்திரிச் சபையும் கூட்டுமந்திரிச் சபையும் முடிவெய்தின: அவைகளுக்குப்பின் வந்த பிட்மந்திரிச் சபை ஹேஸ்டிங்ஸோடு நட்பாயிருந்தது: டைரக்டர் சபையினரும் அவரோடு பட்சம் பாராட்டினர். 1783-இல் இம்பே திரும்பியழைக்கப்பட்டனர். அடுத்த ஆண்டுமுதலில்,

**ஹேஸ்டிங்ஸ் இந்தியாவை விட்டுப் போதல் (1785)**

ஹேஸ்டிங்ஸின் அன்பிற்குரிய மேரியாளென்னும் அவர் மனைவியும் இங்கிலாந்து திரும்பினர். ஹேஸ்டிங்ஸ் அவளை இந்தியாவில் சில்லாண்டுகட்கு முன்பு மணந்தனர்: அவள் அவரின் உயிர் நிலையாவள்: கீளிக் சொல்லிய படி அவள் 'அவரது கண்மினளாயும் நம்பிக்கைகுரியளாயும், ஆறுதலளிப் பவளாயும், பேரானந்தமூட்டுபவளாயும்' தூலங்கினர். ஹேஸ்டிங்ஸும் அவளோடு இங்கிலாந்து சென்றிருப்பர்: ஆனல், திப்புசுல்தானேடு மேற் கொண்டநடவடிக்கைகள் முற்றுப் பெறுமையாலும், அயோத்தி விவகாரங்க ளைச் சரிப்படுத்துவதற்காக லக்னேவுக்குந் தாம் நேரே செல்லவேண்டியிருந் தமையாலும், வங்காளத்திலேற்படும்போலிருந்த பஞ்சத்தினுலும், அவர் 1785-ஆம் ஆண்டுத்தொடக்கவரையில் இந்தியாவிலேயே யிருக்க நேர்ந் தது, பிட் இந்தியச் சட்டத்தைப்பற்றியசெய்தி எட்டியவுடனே ஹேஸ்டிங்ஸ், கம்பெனியின் மேலதிகாரிகள் தமது ராஜிநாமாவை "விரும்பி யெதிர்பார்க் கின்றனர்" என நம்பிக்கைகொண்டார். அவர் 1785-ஐரோப்பாவிலிருந்து முதல் தேதி தம்கீழ் சேவகம் புரிந்த மனிதர்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தினிடையே கல்கத்தாவைவிட்டுக் கிளம்பினர். அவர்க்குப்பின் சபையங்கத்தினருள் முதலவராயிருந்த **ஸர் ஜான் மக்பர்ஸன்** கவர்னர் ஜெனரலானர். இவர், முதலில் சென்னையில் வேலைபிலமர்ந்து, பின்பு ஆற்காட்டு நவாபோடு கலந்துபேசிப் பின்னர் பார்லிமென்டில் அங்கத்தினராயிருந்தவர்: ஏறக் குறைய இரண்டாண்டுகள் கவர்னர்ஜெனரலாக வேலைபார்த்தவர்.

**ஹேஸ்டிங்ஸுக்கு இங்கிலாந்திலளித்த வரவேற்பு**

பிட் இந்தியச் சட்டப்படி புதிதாக இந்திய மந்திரியாகிய **டண்டாஸ்** என்பவர் ஹேஸ்டிங்ஸை அன்புடன் வரவேற்றார்; ஹேஸ்டிங்ஸ் தாம் பிர யாணஞ் செய்தபோது எழுதிய † 'இந்தியாவின் நிலைமைபற்றிய விண்ணப்ப'த்தை அவரிடம் கொடுத் தார்; அது சிறந்த தஸ்தாவேஜாகக் கருதப்படுகிறது. பிட் அவரிடம் பற்றற்றவராஞர்; பர்க்கோ பகிரங்க மாகக் குற்றவிசாரணைக்கு அவரைக் கொணரவேண்டுமென அச்சுறுத்தி னர். ஹேஸ்டிங்ஸுக்கு எதிரிகளின் பெருகி, எதிர்ப்பும் மிக்க தீவிர மாயிற்று.*

**ஹேஸ்டிங்ஸின் குற்றச் சாட்டு விசாரணை**

குற்ற விசாரணையின் (Impeachment) உபக்கிரமங்கள் 1786-இல் தொடங்கின; விசாரணை ஏழு வருடங்களுக்குமேல் நடந்தது. அது 22 குற்றங்களை அடிப்படையாகக் கொண்டது: அவற்றுள், ரொஹில்லாயுத்தம் பொய்யாகப் போரிட்டது, நந்த குமாரை விசாரித்துத் தூக்கிலிட்டது, வங்காள நவாபை நடத்திய முறைமை, செயிட்சிங் மீதங்களின் விவகாரங்கள் இவை முக்கியமானவை. காமன்ஸ் சபையினர் லார்ட்ஸ் சபையினர்முன் ஹேஸ்டிங்ஸின் குற்ற விசாரணையை நடத்துவதற்காகப் பர்க்கின் தலைமைபின்கீழ் பத்தொன்பது செயலாளர்களடங்கிய கமிட்டி யொன்றை நியமித்தனர்; அவர்களுக்குப் பிரான்ஸிஸ் தன்னுயிரன்ற

† 'Memorial on the State of India'

* "ஹேஸ்டிங்ஸுக்கு விரோதமாக விழுமிய சொற்பொழிவுகளாற்றிய பர்க், பாக்ஸ், டண்டாஸ், ஷெரிடன் என்போர், பல அல்லல்களுக்குள்ளாகிய மிலிப்பிரான்ஸினின் மூகாயி னுல் சித்திரிக்கப்பட்ட நாட்டகமொன்றின் நடிகர்கள்போலும்"—Weitzman, p. —171.

வழிகளிலெல்லாம் உதவி புரிந்தார். 1788-இல், இம்பேயும் காமன்ஸ் சபை முன்னர் பல குற்றங்களுக்காக விசாரிக்கப்பட்டார்: அவற்றுள் நந்தகுமாரைத் தூக்கிலிட்டுக் கொன்றதுமொன்றாகும்: ஆனால், தீவிரப் பிரதிவாதமொன்று நிகழ்ந்தபின், அவர் விடுதலை செய்யப்பட்டார். ஹேஸ்டிங்ஸின் ரக்ஷணைக்காகப் பல புகழ்சான்ற நியாய வாதிகள் முன் வந்து நடத்தினர்; குற்றஞ் சாட்டியவரோ, பார்லிமென்டிலுள்ள சொற் பொழிவாளர்களும் வாதப்போரிடுவோருமேயாவர். அவர்கள், *"தாறு மாறுகக் குற்றங்களே யேறிட்டுக் கதம்பமாக" வெளிப்படுத்தினர்; மேலும் "எல்லாவற்றையும் தாமே நேரே பரக்க அறிந்தவர்போலப் பொய் நடிப்பு நடித்து" அக்குற்றங்களை மிகுதியாகத் தோற்றுமாறு செய்தனர். விக்குக்கள் இக்குற்றச்சாட்டு விசாரணையின் மூலம் தமது மானிட வுணர்ச்சிகளையும் நிந்தனையையும் வெளிப்படுத்தினர்.† 1791-க்குள் பல குற்றங்கள் விடுபட்டுப் போயின: செயிட்சிங் பீகங்களிவர்களைப் பற்றியனவும், மோசக்தனமான ஒப்பந்தங்கள் பரிசுகளிவைகளைப் பற்றி யனவுமாகிய குற்றங்களே எஞ்சி நின்றன. தீர்ப்பு செய்யப்பட்ட எல்லா விவகாரங்களிலும் ஹேஸ்டிங்ஸ் விடுவிக்கப்பட்டார்: ஆனால், ஹேஸ்டிங் ஸுக்கு விரோதமாயிருந்த சிறுபாலோரின் தொகை, அயோத்தி பீகங்கள் செயிட்சிங் இவர்களின் விவகார விசாரணையின்போது மட்டும் அதிகப் பட்டது.‡

**ஹேஸ்டிங்ஸின் செயல்களை மதிப்பிடல்**

ஹேஸ்டிங்ஸ் நீண்டவயது ஜீவித்திருந்தார்; உள்ளக்கிளர்ச்சியும் செல்வமும் குன்றிப்போயினும், அவர் தாம் மேற்கொண்ட வழக்கு நியாயப் படி யமைந்ததென்பதில் நம்பிக்கையிழக்கவேயில்லை. அவரது வாழ்க்கை முற்றும் தோஷமற்றதன்று; நீதிமுறைக்கேற்ப, அவரிடத்துச் சில நற்பெருங் குணங்கள் காணப்படினும், அவர் அதர்மத்திற்குப் பின்வாங்காத மனவலி மையுடையவர். சில சமயங்களில் அவர் சந்தேகத்துக்கிடங்கொடுக்கும் விவகாரங்களில் சிக்கிக்கொண்டு பெருத்த இலஞ்சங்களுக்கும் உடன்பட் டுள்ளார். குணதோஷ விசாரகனகிய **மெகாலே** தனது **'வியாசத்தில்'** ஹேஸ் டிங்ஸின் உள்நாட்டுப் புறநாட்டு அரசியலீப்பற்றிப் பின்வருமாறு புகழ்ந் தெழுதியுள்ளார். அவர் இரட்டையாட்சியை யொழித்தார். அவர் விவகா

---

* "an absurd hotch—potch of charges"

† Mill and Wilson's History of British India (1858) Vol. V. p. 126, W. எழுதிய குறிப்பு, "இவ்விசாரணை நியாயத்தைத் தலைகாட்ட ஏற்பட்டதன்று; ஆனால் ஹேஸ்டிங்ஸைக் குற்றவாளியாக்குதற்கெனவே ஏற்பட்டது." என்கின்றது.

‡ இக்குற்ற விசாரணை தொந்தரவு விளைப்பதாய் பலவாறுதத் தாறுமாறுய்க்கிடந்தது. குற்ற விசாரணை வரலாறு முற்றும் பொய் நடிப்புத் தோற்றமுடைத்து. இத்தகைய விசாரணையை மேற்கொண்டமையால், காமன்ஸ் சபை தன் எண்ணங்களேதாமே பாழாக் கிக்கொண்டது. அது ஹேஸ்டிங்ஸை வீணே தொந்தரவுகளுக்குள்ளாக்கிற்று; அது விசாரணையை நீட்டிக்கச் செய்து உலக மக்களைச் சலிப்படைய வைத்தது; (விசாரணை பார்லிமென்டு ஏழு கூட்டங்கள் கூடும் வரையிலும் நியாய சபை 148 தரம்' கூடும் வரை யிலும் நிட்டித்தது).....உண்மையிலேயே, ஹேஸ்டிங்ஸ் சில விவகாரங்களிலே குற்றவாளி யாயிருப்பினும், அவருக்கு ஏற்பட்ட நீடித்த இந்த மனச் சித்திரவதையே பெரும்தண்டனை யாயிற்றெனலாம்.—P. E. Roberts on 'The Journal of Indian History', Vol. III, p. 131.

இவ்விசாரணை சரித்திர வரலாற்றில் ஒரு சிறந்த சம்பவமன்று; 'அரசாங்கம் ஆள் பவரது விருப்பத்திற்கினங்க நடைபெறும் பொறுப்பினதாக வேண்டுமெனக் கொண்டு ஹேஸ்டிங்ஸ் கண்முறையில் பயிற்றியதையே' பார்க் வாய்விட்டுக் கூறினர். (Davis p. 510)

மங்களின் கண்காணிப்பை ஆங்கிலேயர் வசமாக்கினர். அஞ்சத்தக்க அராஜகத்தினின்று முற்றுப்பெறுத கடின சமாதானத்தை நிறுவினர்..... ஹேஸ்டிங்ஸின் ஆதரவின்கீழ் இங்கிலாந்து யாதொரு நஷ்டமும் அடைய வில்லை. ஐரோப்பிய ஆசியவிரோதிகளிடையே நம் நாட்டு ஆதிக்கத்தைக் கிழ்திசையில் மிகவும் பெருக்கினர்.* இந்தியாவில், ஹேஸ்டிங்ஸைப்போல வேறெந்த ஆங்கிலேயனும் சங்கடக்காலங்களில் தைரியமும் ராஜதந்திரமும் வாய்ந்தவனல்லனென்ற எண்ணம் நிலவியது; அவரே தாம்சாதித்த கருமங் களைப் பெரிதும் மதித்தார். †

அவரது செயல்

ஹேஸ்டிங்ஸ் குற்றவிசாரணைக்கு ஆளானதும், அவரது அரசியல் முறைமை பின்னர் கார்ன்வாலிஸ் செய்த சீர்திருத்தங்களுக்கு அடிப்படை யாயிற்று; ஆனால், ஆங்கில அரசாங்கத்தின் நோக்க முறையிலும், வங்காள நில ஏற்பாட்டு முறையிலும், இந்திய சபைகள் மேற்கொள்ளவேண்டிய நோக்க முறையிலும் பொதுமக்கட்கு அறிவுகொளுத்தும் முறையிலும், பிரான்ஸிஸ் கூறிய வழிகளே மேலோங்கி நின்றன.‡ ஹேஸ்டிங்ஸின் விவகாரங்களைப் பற்றி இன்னும் சச்சரவுகள் நிகழ்ந்துவரலாம்: எனினும், அவரது உண்மை மகத்துவம் உள்ளங்கை நெல்லிக்கனியாம்.

---

# அத்தியாயம் 9

## கார்ன்வாலிஸ் பிரபுவும் ஸர் ஜான் ஷோரும் (1786—1798)

### பகுதி 1: மக்பர்ஸன் ஆட்சியும், பிட் இந்தியச் சட்டமும்

மக்பர்ஸன் கவர்னர் ஜெனரலாதல் (பெப்ரவரி 1785—செப்டம்பர், 1786)

ஹேஸ்டிங்ஸ் போனபின்பு, சபையில் முதல்தானம் வகித்திருந்த ஸர் ஜான் மக்பர்ஸன் அரசாங்கத்தை மேற்கொண்டு நடத்தினர். சென்னையில், அவர் முன்னர் செய்த செயல்கள் குறிக்கத் தக்கனவன்று; அவர், நவாப் முகம்மது அலிக்கு ஏஜெண்டாயிருந்தார்; ஒருமுறை கம்பெனி சேவையினின்று நீக்கவும்பட்டிருக்கிறார். எனினும், அவர் மீண்டும் சேவகத்திலமர முயற்சித்து, வங்காளச் சபையில் ஒரு அங்கத்தினரானார்; இவ்விதம், முகம்மது அலிக்கு ஏஜெண்டாயிருந்த ஒருவர் ஆங்கிலச் சபையில் துணையாளியாகிப் பின்பு, ஹேஸ்டிங்ஸுக்குப் பின் கவர்னர் ஜெனரலும் ஆனார். அவர் கவர்னர் ஜெனரலாயிருந்த ஈராண்டுகளில் (1785-86), சிக்கன முறைகளைக் கையாளுதலிலும், செல்வாதாரச் சீர்திருத்தங்கள் செய்வதிலும் சிறிது வெற்றி யுற்றனரேயன்றி, மற்றைப்படி

---

*Historical Essays (Oxford edition) 1913, pp. 594-5.

† தன்குற்ற விசாரணையின்போது ஹேஸ்டிங்ஸ் அளித்தபதிலாவது:—

"பிறர் விரத்தினால் சம்பாதித்த காடுகளை நான் பரப்பி உருவாக்கி உறுதியளிக்க, அந்த ராஜ்யமே இப்போது நிலவி ஆண்டுவருவதாகும்: நான் அதைரக்ஷாப்பாற்றினேன்; அதன் சேனைகளை மிக செலவின்றி வெகு இறமையுடன் உபது வசமுள்ள பிற பிரதேசங் களுக்கு உதவுமாறு முன்பின்னறியாத பகைப்புலத்தின் மூலம் நான் செலுத்தியுள்ளேன்; ஒரு பிரதேசத்தை (பம்பாயை)ச் சிக்கெட்டிவின்றும் அளைரவத்திலின்றும காப்பாற்ற அனுப்பினேன்; மறறெல்லை, (சென்னையை)ப் பகைவர்களுப் பணிந்து அவர் வசமாகாத வாறு காப்பாற்றினேன். என்னுலன்றி உங்களாலும் மற்றவர்களாலும் ஏற்பட்ட போர்களை நான் தாங்கியின்றேன். நான் பகைவர்மேல் வெற்றியூண்டேன்."

‡ Weitzman, p. 691.

அவ்வது அரசியல் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதொன்றன்று : என்னலும் திப்பு சுல்தானோடு மராட்டியர் போர் தொடங்கியபோது அவர்களுக்கு உதவி செய்வதாக அவர் உடன்பட்டார்; இதனால், திப்பு சுல்தானுக்குப் பெருங்குற்றம் செய்யப்பட்டது; உண்மையில் இது மங்களூர் உடன்படிக்கையை மீறிய செயலன்றே !

சென்ற மைசூர் யுத்தத்தின்போது சென்னைக் கவர்னராயிருந்த லார்ட் மெகார்ட்னே, தம்மை இப்போது கவர்னர் ஜெனரலாக நியமிக்குமாறும், ஆங்கிலச் சபையில் பெரும்பாலோர் எதிரிடினேன், அவர்களபிப்பிராயத்தைப் புறக்கணிக்கும் சிறப்பதிகாரங்களைக் கொடுக்குமாறும் வற்புறுத்தி நின்றார். ஆனல், பிட்டும், டண்டஸும் அவர் கேட்டவைகளிற் சிலவற்றைக் கண்டு வெறுப்புற்று, அவருக்குப் பதிலாகக் காரன்வாலிஸ் பிரபுவைக் கவர்னர் ஜெனரலாக்கினர். காரன்வாலிஸ் ஒரு சிறந்த தளகர்த்தரென்றும், ராஜதந்திர நிபுணரென்றும் புகழ்பெற்றவர். அக்கால இந்திய நிலைமைக்கு அவரே தகுதியுடையரெனக் காமன்ஸ் சபையில் குறிக்கப்பட்டது; யார்க் டவுனில், அமெரிக்க தளகர்த்தனகிய வாஷிங்டனுக்கு இவர் பணிவு காட்டியதால்—[இச்சம்பவம் அமெரிக்க குடியேற்ற நாடுகளின் • சுதந்திரத்தை நிலைநாட்டியது] — இவரது புகழ் சிறிதேனும் குன்றவில்லே.• அவர், பிட், (போர் அவ் கன்ட்ரோல் சபையின் தலைவராய) டண்டஸ் இவ்விருவரது முழு நம்பிக்கைக்கும் பாத்திரரானர்; அவர் உயர் குடிப்பிறப்பினர்; குணசாலி; பேராற்றலும் நுண்ணிய ஆய்வுவன்மையும் உடையர். இந்தியாவைப்பற்றிய அனுபவம் சிறிதுமிலரேனும், தேசாசாரம்பற்றிய குறுகிய நோக்கங்களுக்கு அவர் கட்டுப்பட்டவரல்லர். இங்ஙன், "விஷயங்கள் நிகழ்ந்தபடி நோக்கின், அமெரிக்காவை இழக்க வைத்த மனிதனெருவன் இந்தியாவை ஆளும்படி யனுப்பப்பட்டும், இந்தியாவைக் காப்பாற்றிய ஒருவன் (ஹேஸ்டிங்ஸ்) குற்ற விசாரணைக்கு ஆளாக்கப்பட்டும் இருக்க நேர்ந்தது." காரன்வாலிஸ் 1786 செப்டம்பரில் இந்தியாவை யடைந்தார்: மூன்று இராஜதானிகளும் அமைதியோடிருக்கக் கண்டார். 1785-இலேயே பிட் காரன்வாலிஸைக் கவர்னர் ஜெனரல் பதவியை ஏற்குமாறு தூண்டினர்; ஆனல், அவர் மறுத்தார். மீண்டும் 1786 பிப்ரவரியில் அவரை ஏற்க வேண்டினர்; அவர் தம் சொந்த நிபந்தனைகளிட்டு அப்பதவியை ஏற்றனர். அவர், பார்லிமென்டில் சிறப்புச் சட்டமொன்றின்படி, தம் சொந்தப் பொறுப்பின்மேல் ஒரு சட்டத்தை ஏற்றுக்கொள்ளவோ, தள்ளி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ அதிகாரம் பெற்றார்; மேலும், அவர் கவர்னர் ஜெனரலும் சேனதிபதியும் ஆகிய இரண்டு பதவியையும் ஒரு சேரப்பெற்றார்.

**லார்ட் காரன்வாலிஸ் கவர்னர்—ஜெனரலாக நியமிக்கப்படல்**

பிட் பார்மென்டில் எதிர்கட்சியைச் சேர்ந்திருந்த காலத்து வெறுத்த இந்திய சட்டத்தையே, தாமே பிறகு கொண்டுவர நேர்ந்ததை முன்னரே கண்டோம். பாக்ஸைப் போலன்றி இவர் *சார்ந்த நலன்களுக்குத் தீங்கு விளைக்கவில்லை; கம்பெனி அளித்த ஆதரவை மந்திரிச் சபைக்கு மாற்றுமலும்,

**பிட் இந்தியச் சட்டம் (1784)**

* Vested Interests.

கம்பெனியின் அமைப்பையே முற்றிலும் மாற்றியதுபோல் தோற்றுமலும், இருக்கச் செய்தார். அவர் டைரக்டர்கள் சபையையும் நிர்வாக (புரொப் டைர்கள்) சபையையும் மாற்றுமல் வைத்து, வேலைக்கமர்த்தும் அதிகாரத் தையும் அவர்களிடமே ஒப்படைத்தார். ஆனல், அவர் தமது சட்டத்தில், பாக்ஸ் டீசோதாவில் காணப்பட்ட முக்கிய தத்துவத்தை யேறிடச் செய் தார். அத்தத்துவமாவது யாதெனில், † "ஆங்கில அரசாங்கத்திற்குப் பதிலாக நியமிக்கப்பட்ட ஒரு சங்கத்துக்குக் கம்பெனியை நேராகவும் நிரந் தரமாகவும் கீழ்ப்படச் செய்தலாகும்." டைரக்டர்கள் முன்போலவே தத்தம வியாபார விஷயங்களைக் கண்காணிக்கும்படி விடப்பட்டனர்; ஆனல், இந்தியாவோடு சம்பந்தப்பட்ட எல்லா ராஜீய விவகாரங்களும் **போர்ட் ஆவ் கன்ட்ரோல்** என்று சொல்லப்பட்ட ஒரு புதிய அரசாங்கச் சபையின்கீழ் கொண்டுவரப்பட்டது. இந்த போர்ட் மன்னரால் நியமிக்கப்பட்ட ஆறு கமிஷனர்களடங்கியதா யிருத்தல்வேண்டும்; அதன்

**போர்ட் ஆவ் கன்ட்ரோல்**

*தலைவர் இந்தியாவின் காரியதரிசி என்ற புதுப் பெயர் புனையாவிடினும், உண்மையில், அக் காரியதரிசிபோல்பவரே யாவர். அங்கத்தினர்களுக்கு ஊதியம் கிடையாது. அவர்களுக்கு உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் அதிகாரமும் கிடையாது. இந்த ஆறு அங்கத்தினர்கள் யாவரெனில், †கருவூலத் தலைவர், அப் போதைய தேசிய காரியதரிசிகளுள் ஒருவர், நான்கு பிரிவி கவுன்ஸிலர்கள் ஆவர். இவர்கள் ‡மன்னர் விருப்பத்தின்படி பதவி வகிப்போராவர். அவர்கள் "கீழ்திசையில் ஆங்கிலேயர் வசமுள்ள நாடுகளின் ஸிவில் ராணுவ வருமான விஷயங்களைப் பற்றிய எல்லாச் சட்டங்களையும், கருமங் களையும், விவகாரங்களையும் மேற்பார்வையிட்டு, இயக்கி, அடக்கியாளவும்" வேண்டும். டைரக்டர்கள் இந்தியாவோடு செய்யும் கடிதப்போக்கு வரவு

**டைரக்டர்களின் இரகசிய சபை**

களைச் செவ்வனே கண்காணிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு; டைரக்டர் சபையினர், போர்ட் ஆவ் கன்ட்ரோலின் அனுமதியின்றி இந்தியாவுக்கு யாதொரு உத்தரவும் அனுப்பலாகாது.§ டைரக்டர்களுக்குள்ளேயே **இரகசிய சபையொன்று உண்டாக்கப்பட்டது; அது, ஒரு தலைவரையும் உபதலைவரையும் ஸீனியர் டைரக்டர் ஒருவரையும் கொண்டது. போர்ட் ஆவ் கன்ட்ரோல் இரகசியக் கட்டளைகளையிடும்போது, இந்த இரகசியக் கமிட்டிதான் இதர டைரக்டர்களுக்குத் தெரியாவண்ணம் இக்கட்டளைகளை இந்தியாவுக்கனுப்ப வேண்டும்.

---

† "in direct and permanent subordination to a body representing the British Government."

* President. † Chancellor of the Exchequer.

‡ Holding office during the King's pleasure. ** Committee of Secrecy.

§ "டைரக்டர்களனுப்ப எண்ணிய ஆணைகளைப் போர்ட் ஆமோதிக்கவும், நிராகரிக்க வும், மாற்றவும் கூடும்; மாற்றியபடியே, ஆணைகளை யனுப்புமாறு போர்ட் டைரக்டர்களையே வேண்டினலும் வேண்டும்; ஒதுக்கி வைப்பதோ அல்லது தாமதமோ நேரும்போது, தாங்க ளிட்ட சொந்தக் கட்டளைகளை டைரக்டர்களது சம்மதமின்றியே அனுப்பினலும் அனுப்ப லாம்." கம்பெனியின் எல்லா கடிதப் போக்குவரவுகளையும், சாதனங்களையும் அவர்கள் தட்டின்றி பார்வையிடலாம்."—Ilbert: Government of India (III, Ed., Historical Introduction p. 63.)

இங்ஙனிருப்ப, புரொப்ரைடர் சபையினர் சிறுமை யுற்றனர். அவர் களுக்கு இலாபத்தின் கூறுகளைப் பெறுதற்கும், டைரக்டர்களைத் தேர்ந் தெடுப்பதற்கும்தான் அதிகாரமுண்டு. கம்பெனியின் எந்த ஊழியனையும் நீக்க மன்னர்க்கு உரிமை யுண்டு : இதனால், உத்தியோகஸ்தர்களை நியமிப்ப தில் டைரக்டர்கள் கொண்டிருந்த சுதந்திரத்திற்கும் ஒரு மேற்பார்வை யேற்பட்டது.¶

சட்டத்தினலேற் பட்ட பிறமாறுதல் கள்

இந்திய அரசாங்கத்திலேயே சில மாறுதல்களேற்பட்டன. கவர்னர்-ஜெனரலின் சபையில் நால்வருக்குப்பதில் மூவர் அங்கத்தினர் இருத்தல் வேண்டும் : அம்மூவருளொருவன் சேனைத் தலைவனு மிருத்தல் வேண்டும். இதர இராஜதானிகள் ஒவ் வொன்றிலும், ஒரு கவர்னரும் மூன்று சபையின ரும் இருத்தல் வேண்டும்; அம்மூவருள் இராஜதானிச் சேனையின் தலைவனும் ஒருவனவன். இவர்களனைவருங் டைரக்டர் சபை யினரால் நியமிக்கப்படல் வேண்டும் : ஆனல், மன்னரால்வது டைரக்டர் களாலாவது அவர்கள் நீக்கப்படலாம். கம்பெனியொடு உடன்படிக்கை செய்துகொண்ட ஊழியர்களே, சபையின் அங்கத்தினர்களாவதற்குத் தகுதிவாய்ந்தவராவர். கவர்னர்-ஜெனரலுக்கும் கவர்னருக்கும் தனிப் பட்ட வாக்குரிமை (Casting Vote) யுண்டு. இத்தர இராஜதானிகளின்மேல் கவர்னர்-ஜெனரலின் அதிகாரம் பெருகியது ; அவ்வதிகாரம் " சுதேச அதி காரங்களோடு கொண்ட விவகாரங்களைப் பற்றியும். போரிடுதல், " சமா தானஞ் செய்து கொள்ளல், போர்க்காலங்களில் வருமானம் வசூலித்தல் படை திரட்டுதல் முதலியவைகளைப் பற்றியும் தழுவியதாகும் " எனப்படு கின்றது. இவ்விதமாக, சென்னையும் பம்பாயும் அவசர காலங்களிலன்றி மற்றைக் காலங்களில் தாம் விரும்பியபடி போரிடவும் சமாதானஞ்செய்ய வும் கூடாதென விதிக்கப்பட்டது ; அவைகளின் வருமானங்களைப் பரி சீலனை செய்தல்கூட கவர்னர்-ஜெனரலால் ஆமோதிக்கப்படல் வேண்டும்.

இந்திய அரசாங் கத்தை மீண்டும் ஒழுங்குபடுத்தல்

மற்றும், அச்சட்டத்தில், " வெற்றி வெறிகொண்ட நோக்கங்கள் ஆங்கில நாட்டவரின் விருப்பத்திற்கும் கௌரவத்திற் கும் நோக்க முறைக்கும் ஏற்றனவாகா " எனவும் கண்டிருந்தது. கவர்னர் ஜெனரல்கூட டைரக்டர் களின் அனுமதியின்றியோ அல்லது இரகசியக் கமிட்டியின் அனுமதியின்றியோ சுதேச மன்னருடன் போரிடவோ சமா தானஞ் செய்துகொள்ளவோ கூடாது.

தலையிடா நோக்க முறை விவரணம் செய்யப்படல்

மேலும், சுதேச மன்னர்களின் நாடுகளில் செய்யும் செயல்களுக்காக ஆங்கிலக் குடிகள் ஒவ்வொருவரும் இங்கிலாந்திலுள்ள நியாய ஸ்தலங்களி லாவது, பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள நியாய ஸ்தலங் களிலாவது விசாரிக்கப்படலாமென்பதும் ஏற்பட் டது. கம்பெனி உத்தியோகஸ்தர்கள் பரிதானம் வாங்குதல் பணப்பிடுங்கலாகக் கருதப்பட்டு தண்ட

இந்தியாவில் ஏற் பட்ட இதர சீர் திருத்தங்கள்

¶ " மிட்டும் அவசது கம்பிக்கைக்குரிய நேசமுனை டண்ட்ஸ்ரும் இந்தியாவில் அதிகா ரத்தையும் பலனத்தையும விரைவில் பெற்றனர் "—p. 18 of Forrest's Selections from the State.-Papers of the Governor,-Generals of India: Cornwallis. Vol. I. Introduction.

னைக்குரிய குற்றமாக ஆகியது; ஒவ்வொருவரும் தான் இந்தியாவில் சம்பாதித்த ஆஸ்திபின் தொகையளவைப் பற்றிப் பிரமாணஞ் செய்தல் வேண்டும். மூன்று நீதிபதிகளும், நான்கு பிரபுக்களும், காமன்ஸ் சபையினர் அறுவரும் சேர்ந்துள்ள ஒரு பிரத்தியேக சபையொன்று, இந்தியாவில் ஆங்கிலேயர் செய்யுங் குற்றங்களை விசாரிப்பதற்கென ஏற்படுத்தப் பட்டது.

இச்சட்டத்தாலேற் பட்ட இரட்டை யாட்சி

பிட் இந்தியச் சட்டமானது டைரக்டர்களது ராஜீய நோக்க முறையையும் செயல்களையும் மேற்பார்வையிட ஏற்பட்டது; எனினும், வியாபார விவகாரங்களிலும், உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் விவகாரங்களிலும் அவர்களுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டது. இவ்விதமாக அச்சட்டம், புதிய டைரக்டர் சபையாலும் போர்ட் ஆவ் கன்ட்ரோலாலும் ஒரு சேர ஆளப்பட்ட இருதலைப்பட்ட இந்திய அரசாங்கத்தை நிறுவியது எனினும், போர்ட் ஆவ் கன்ட்ரோலின் அதிகாரம் தலையோங்கி நின்றது; ஏனெனில், டைரக்டர்கள், அனுப்புக் கடிதங்களைத் தொகுத்து வைப்பவராயினும், போர்ட் பரிசோதனை செய்து திருத்தமுற அமைப்பதன் முன்பு, அவை அனுப்பப்படா. விரைவில், எல்லா ராஜீய அதிகாரமும், போர்ட் ஆல் கன்ட்ரோல் தலைவரின் வசமாயிற்று; அவர் இந்திய காரிய தரிசிபோலானார். போர்டில், கருவூலத் தலைவரும், தேசீய காரியதரிசியும் நீங்கலாகவுள்ள எனையர் கமிஷனர்தான், தலைவர் (President) என வழங்கப்பட்டார்; அவர், "அக்காலத்திய அரசாங்கத்தில் தற்போதைய இந்திய காரியதரிசியின் நிலைமைக்கு நிகரான நிலைமையையே வகித்து வந்தார்." இதனால், போர்ட் போலி போர்ட்டாகி, செயலற்றுக் கிடந்தது. கவர்னர் ஜெனரலும் இதர கம்பெனி உத்தியோகஸ்தர்களும் தாங்கள் டைரக்டர்களால் நியமிக்கப்பட்டிருப்பினும், மந்திரிச் சபையோடும், முக்கியமாக, போர்ட் ஆவ் கன்ட்ரோலின் தலைவரோடும் விரோதம் பாராட்டாது, அவர்களது தயவை நாடியிருக்க வேண்டும் என்பதை விரைவில் உணர்ந்தனர்.* ஆனால், கம்பெனி † திரும்பப் பார்த்துத் திருத்தும் உரிமையைக் கைக்கொண்டே யிருந்தது. இந்திய விவகாரங்களைத் தம் நாட்டினின்றே இயக்கி வருதலில் அவர்கள் கொண்டிருந்த அதிகாரம் இப்போதும் அருகிற்றிலது.

அதன் விளைவுகள்

பிட் தனது சட்டத்தின் குறைபாடுகளை விரைவிலுணர்ந்து, அவைகளிற் சிலவற்றைத் தனது 1786-ஆம் வருடத்திய ‡திருத்தமுறைச் சட்டத்தால் சீர்திருத்த முயன்றார். இஃது காரன்வாலிஸைக் கவர்னர் ஜெனரல் பதவி வகிக்கச் செய்வதற்காக, அவரைத் திருப்தி செய்வதற்கு ஏற்பட்டதாகும். கவர்னர் ஜெனரல் பதவியையும் சேனாபதியின் பதவி

1786-ஆம் வருடத்திய திருத்தமுறைச் சட்டம்

---

* 1784-ஆம் வருடத்திய சட்டமானது "1773-ஆம் வருடத்திய ஒழுங்குமுறைச் சட்டத்தால் ஏற்கனவே மெலிவுற்றுக் கிடந்த கம்பெனியைப் பின்னும் முடக்கியது; எனினும், கம்பெனி இன்னும் கடிதப் போக்குவரவு செய்யலாம்; தன் சொந்த விவகாரங்களைப்பற்றியும் வியாபாரத்தைப் பற்றியும் ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்.....ஆனால், முயற்சி மேற்கொள்ளும் உரிமையும், போர் மேற்கொள்ளும் சுதந்திரமும் போய்விட்டன, ராஜீய விஷயங்களில் அது சுதந்திரமற்றுக் கிடந்தது; அது தனது பேரரசுரிமையையும் சுயேச்சாதிகாரத்தையுமிழந்தது."—Beckles—Willson's Ledger and Sword, Vol. II, p. 308. † Right of Revision. ‡ Amending Act.

யையும் ஒரே ஆள் வகிக்குமாறு இணைத்தற்கு டைரக்டர்களுக்கு அதிகார மூண்டு; அதற்கேற்ப, லார்ட் காரன்வாலிஸ் தாம் பதவி ஏற்பதாயிருந்தால், கவர்னர் ஜெனரலின் அதிகாரங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று வற்புறுத்தவே, இவ்விரு பதவிகளும் அவரிடமே இணைக்கப்பட்டன. மற்றொரு ஷரத்தும் இக்கருத்துப் பற்றியே தோன்றிற்று; அஃது யாதெனில், கவர்னர் ஜெனரல் நமக்கு மூருய்ச் சபையினரிற் பெரும்பாலோர் கொள்ளும் ஆயிப்பிராயத்தை மீறித் தன் சொந்தத் தகுதியில் தன்னிஷ்டப்படி செய்ய லாகும். அதே சமயத்தில், கவர்னர் ஜெனரலைத் தெரிந்தெடுப்பதில் மன்னர் சம்மதம் பெறவேண்டுமென்றிருந்த நிலைமையும் நீக்கப்பட்டது; ஆனால், இது அவ்வளவு பயனளிப்பதொன்றன்று. ஏனெனில், மன்னர்க்குக் கவர்னர்-ஜெனரலைத் திரும்பி வரவழைக்கும் அதிகாரம் இருந்த படியே குன்றாமலிருந்தது.

### பகுதி. 2 ஃ காரன்வாலிஸும் புறத்துறை விவகாரங்களும்.

காரன்வாலிஸ் தன்னுடைய முதல் மூன்றாண்டுகளில், உள்நாட்டு அரசியலை ஒழுங்குபடுத்தும் வேலையை மேற்கொண்டனர். மக்பர்ஸன் கவர்னர் ஜெனரலாயிருந்த கால முதல் இம் மூவாண்டுகள் வரை இடைப்பட்ட காலப்பகுதியில், மகத்தி ஸிந்தியா மிக வலிவடைந்தான். 1784-இல் பேஷ்வாவை †வகீலே முத்லஃ [முகலாயப் பேரரசின் பிரதிநிதி] ஆக்குமாறு ஸிந்தியா எண்ணி அதற் கேற்ற அதிகாரப் பத்திரமொன்றில் முகலாயச் சக்கரவர்த்தியின் கையொப்பத்தை வாங்கினன்; அன்றியும், ராஜப்பிரதிநிதியாகிய பேஷ்வாவினிடமிருந்தே தான் அவருக்கு உதவி புரிபவனுயிருக்கவும் (Deputy) அதிகாரம் பெற்றுக்கொண்டான். ஹேஸ்டிங்ஸ் இந்தியாவை விட்டுச்சென்றவுடன் ஸிந்தியா, ஆங்கிலேயரை முகலாயச் சக்கரவர்த்திக்கு வங்காளத்திலிருந்து சேரவேண்டியிருந்த கப்பத்தின் பாக்கித் தொகையைக் கேட்டான். மக்பர்ஸனது அரசாங்கம் ஸிந்தியா கேட்பது நியாயமன்றென மறுத்தநோடு, அங்ஙனம் கேட்காதவாறிருக்கவும் வற்புறுத்தியது; மற்றும் ஸிந்தியா ஷா ஆலம் இருவரும் பாராட்டிய உரிமைகளையேற்கவும் மறுத்தது.

**ஆங்கிலேயர்-மகத்தி ஸிந்தியா வோடு மேற்கொண்ட சம்பந்தங்கள்**

1786-இல், பேஷ்வா திப்புசுல்தானுக்கெதிராக நிஜாமோடு சேர்ந்து கொண்டார். மங்களூர் உடன்படிக்கையின்படி, ஆங்கில அரசாங்கம் திப்புவின் விரோதிகளுக்கு உதவிபுரியக் கூடாது. ஆனால், மக்பர்ஸனே திப்புவின் அக்கிரமத்திற் கெதிராக மராட்டியர்க்கு இரானுவ உதவி புரியுமாறு முற்பட்டார். காரன்வாலிஸுக்கு இது பிடிக்கவில்லை; ஏனெனில், அநாவசியமாகப் போர் ஏற்படுவதோடு, பிட் இந்தியச் சட்டத்தை மீறியதாகவும் ஏற்படும். ஆதலால், மக்பர்ஸன் ஏற்பாடு செய்துவைத்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுதற்குக் காரன்வாலிஸ் மறுத்தபோது, பூனு அரசியலில் தலைமை வகித்த நானுபட்னவிஸ் "புதிய

**ஆங்கிலேயர் மராட்டிய அரசாங்கத்தோடு கொண்ட சம்பந்தங்கள்**

† Vakil-i-Mutlaq.

கவர்னர்-ஜெனரலின் வஞ்சனையைப் பற்றித் தாம் பெரிதும் திடுக்கிட்டு வருந்துவதாகக்" கூறினர்.

**அயோத்தியோடு ஏற்பாடு செய்துகொள்ளல்**

இதற்குப் பின்பு, காரன்வாலிஸ், கம்பெனிக்கும் அயோத்திநவாப்புக்கும் நன்மையுண்டாகும்படி அயோத்தி விவகாரங்களை ஒழுங்குபடுத்தத் தொடங்கினர். நவாபின் மந்திரியாகிய ஹைதர்பேக் கான் என்பவர், கவர்னர் ஜெனரலைக் கண்டு, ஆங்கில அரசாங்கம் தமது சொந்தவியாபார இலாபத்திற்காக அயோத்தியைச் சுரண்ட விரும்பவில்லை என்று கூறியதைத் தாம் எளிதில் நம்ப முடியவில்லை என வெளியிட்டார்.* கடைசியில் மீடித்த பேச்சு நிகழ்ச்சிகளுக்குப் பின்னர், ஆங்கிலத்துருப்புக்கள் அயோத்தியிலேயே தங்கியிருக்க வேண்டுமென்றும், அதற்காக அயோத்தி நவாப் வருஷத்திற்கு ஐம்பதுலட்சம் ரூபாய் கொடுத்து விடவேண்டுமென்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டது (1787). அடுத்த ஆண்டில் அயோத்தி நவாபோடு வியாபார சம்பந்தமாக ஓர் உடன்படிக்கை செய்யப் பட்டது; அதன்படி அவனது வரிகளை விதிக்கும் அதிகாரத்திற்கு வரம்பு கோலப்பட்டது. அயோத்தி நவாப் தான் அநியாயவட்டிக்கு வாங்கிய கடன்களையும் நிவர்த்திப்பதற்கு முடிந்தது; அவன் தன் நாட்டை நீதி முறை வழுவாது வன்மையுடன் ஆளுமாறு கூறப்பட்டான்.*

**மராட்டியர், நிஜாம், பிப்பு இவர்களிடை நிலவிய பரஸ்பர சம்பந்தங்கள்**

பின்பு, காரன்வாலிஸ், நிஜாமோடு ஆங்கிலேயர் மேற்கொண்டிருந்த சம்பந்தங்களைத் தீர்மானித்து முடிவு கட்ட ஆரம்பித்தார். பல்லாண்டுகளாக நிஜாம் அலியைத் திப்பு மிரட்டிவந்தான். ஆனல் நிஜாம் தற்பாதுகாப்பாக 1784 இல், மராட்டியரோடு ஒப்பந்தஞ் செய்துகொள்ள ஏற்பாடுகள் செய்தான். ஆனல் திப்பு, இருவரையும் ஒருசேர எதிர்க்கும் ஆற்றல் வாய்ந்தவனதலின், அவன் மேல்முனைந்து சண்டையிடத் தொடங்கினன்; அவன், மலேபாளத்திலும் குடகிலும் எழுந்த கலகங்களை அடக்கி, அங்கிருந்த கிறிஸ்தவர்களையும் ஹிந்துக்களையும் பெருவாரியாக முகம்மதிய மதத்தை தழுவச்செய்து, கொடுமையாட்சி நிறுவினன். பின்பு, அவன் மராட்டிய எல்லையைத் தாக்கவே, காரன்வாலிஸ் திடுக்கிட்டுப் போனர். காரன்வாலிஸ் நிஜாமின் வலியின்மையை நன்குணர்ந்தவராகலின், ஆங்கில அரசாங்கத்தை உதவிக்கு வருமாறு வேண்டினர். மக்பர்ஸன் உதவிபுரிவதற்கு இசையவும் காரன்வாலிஸ் அவரிசைவை ரத்து செய்தார்; இதனல், மராட்டியர்க்கும் திப்புவுக்கும் சண்டை தொடங்கிய போது, இருகிறத்தினரும் ஒரு முடிவு ஏற்படும்வரை சண்டையிடவில்லை. விரைவில், உடன்படிக்கையும் செய்யப்பட்டது (1787). மராட்டியர்க்குச் சில நிலப்பகுதிகள் கிடைத்தன; நிஜாமுக்கு அதோனி கிடைத்தது; திப்பு கப்பங்கட்ட இசைந்தான். திப்பு ஏன் இப்படிப்பட்ட ஈனநிலையைத் திடீரென அடைந்து தனக்கு விரோதமாகவே சமாதானத்தைச் செய்து கொண்டானென்பது தெளிவுபட விளங்கவில்லை; ஒருகால், ஆங்கிலேயர்

---

* காரன்வாலிஸ், 'பாம்பினுற் கடியுண்டவன் பழுதையைக் கண்டஞ்சுவன்' என்ற மூதுரையைக் காட்டிப் பதில் எழுதியுள்ளார்.

தன் எதிரிகளோடு சேர்ந்துகொள்வரோ என்று அவன் அஞ்சியிருக்கலாம்.*

இப்போது, நிஜாமுக்கு மைசூர் பக்கத்தினின்று ஆபத்தொன்றும் நேராமல் போகவே, காரன்வாலிஸ் குண்டூர் சர்க்காரைத் தமக்குக் கொடுத்துவிடும்படி அவனைக் கேட்டார்; 1768-ஆம் வருடத்திய உடன்படிக்கையின்படி அப்போது குண்டூரை யாண்டுவந்த பஸல்ட்ஜங் இறந்தபின்பு, அது ஆங்கிலேயர்க்குக் கொடுக்கப்படல் வேண்டும். (இந்த பஸல்ட்ஜங் 1782 இல் இறந்தான்). ஆங்கிலேயர் முன்னமேயே குண்டூரைத் தம்மிடம் கொடுத்துவிடுமாறு கேட்டனர்; ஆனல், நிஜாம் பல சாக்குப் போக்குகளே யேறிட்டு அவர்களது உரிமையைப் புறக்கணித்தான். இப்போது, நிஜாம் அலி, 1768 ஆம் வருடத்திய உடன்படிக் கையின்படி, ஆங்கிலேயர் நிறைவேற்றவேண்டிய கடமையை நிறைவேற்றினல், தான் குண்டூரைக் கொடுக்கச் சித்தமாயிருப்பதாகக் கூறினன். அக்கடமையாவது, தன்னிடமிருந்து ஹைதர்அலி கைப்பற்றிய சில ஜில்லாக்களைத் தான் மீட்பதற்கு ஆங்கிலேயர் உதவிபுரிவதேயாகும். ஆனல், சென்னை உடன்படிக்கையாலும் (1769), மங்களூர் உடன்படிக்கையாலும் (1784), மைசூர் சுல்தான், தனது ஆட்சியின் கீழுள்ள நிலப் பகுதிகள் மேலெல்லாம் பாராட்டிய உரிமையை ஆங்கிலேயர் அங்கீகரித்தனர். இங்ஙனம், காரன்வாலிஸ், ஒரு சிக்கலான நிலைமைக்குள்ளாகி, நிஜாமுக்கு உறுதியாக வாக்களிக்க முடியாதபடி திகைத்தான். ஆங்கிலேயர்மேல் என்றைக்கும் அவநம்பிக்கை கொண்டிருந்த நிஜாம் திப்புவுக்கே நேராக ஒரு தூதுவனைக் குரான் பிரதி யொன்றேடு அனுப்பி, அவன்மூலம், ஆங்கிலேயரது அதிகாரம் வளர்ச்சியடைந்து வரலால் ஜாக்கிரதையாயிருக்குமாறும், தன்னேடு பரஸ்பர நட்புக் கொண்டாடி ஒப்பந்தஞ் செய்துகொள்ளுமாறும் வேண்டினன் (1788). அதற்குத் திப்பு, தன் குடும்பத்தினர்க்கும் நிஜாம் குடும்பத்தினர்க்கும் விவாக சம்பந்தஞ் செய்துகொள்ளுமாறு கேட்டான். இதனைக்கேட்ட நிஜாம் அலி ஹைதரின் அற்ப குடும்பத்தினரோடு மணமிசைய இறுமாப்புடன் மறுத்தான். இதன் பயன் யாதெனில் இருவர்க்கும் பூன்னியினும் விரோதம் மூற்றியது.

**ஆங்கிலேயர் குண்டூர் சர்க்காருக்கு உரிமை கொண்டாடல்**

**நிஜாம் திப்பு இவர்களிடையே பேதம் மேற்படல்**

காரன்வாலிஸ் நிஜாம் கேட்டதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. பிட் இந்தியச் சட்டமும், சுதேச மன்னர்களோடு அரசியலாக ஒப்பந்தங்கள் செய்துகொள்ளாதவாறு விலக்கியது. அதனல், அவர் ஒரு மத்தியஸ்த வழியைப் பின்பற்றினர். திப்பு ஆங்கிலேயரை எதிர்ப்பதற்குக் காலம் கருதியிருக்கின்றனென்பதை அவர் நன்குணர்வார். திப்புவும் புதுச்சேரியிலுள்ள பிரெஞ்சுக்காரருக்குச் சமயம் வாய்த்தவுடனே ஆங்கிலேயரை எதிர்ப்பதாக எழுதினன். காரன்வாலிஸ் தாமே போரைத் தொடங்கி முனைந்து மேற்கொள்ளாவிடினும் கம்பெனிக்கு விரோதமாக

**ஆங்கிலேயர் நிஜாமோடு ஏற்பாடு செய்துகொள்ளல் (1788)**

---

* திப்புவோடு ஆங்கிலேயர் மேற்கொண்ட மிகச் சிக்கலான சம்பந்தங்கள் பூனை செஸிடென்ஸி கடிதப்போக்குவரத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. Vol. 3—The Allies' war with Tipu sultan (1790—93)—1937.

வுள்ள எந்த அதிகாரத்தையும் எதிர்க்க நிஜாமுக்கு இராணுவ உதவிபுரிவ தாகக் கூறினர். அதேசமயத்தில், ஆங்கிலேயரோடு நேசமாயிருப்போரின் ஜாபிதாவிலிருந்து பஷீர்மகமாய் திப்புவின் பெயரை எடுத்துவிட்டார். இவ்விதமாக, நிஜாம் திப்புவோடு போர் தொடங்கினால், நிஜாமுக்கு உதவ அவர் விரும்பாதில்லை; நிஜாம் குண்டூர் சர்க்காரைக் கொடுத்துவிடுவதாக உடன்பட்டான் (1788).

இங்கு இப்படியிருக்க, திப்புவே போரிடத் துணிந்தான். அவன் சில ஆங்கிலக் கைதிகளைக் கொடிய தண்டனைக்குள்ளாக்கி வைத்திருந்தான்*; இதனால் மங்களூர் உடன்படிக்கையை மீறியவனானான்; புதுச்சேரி கவர்னரோடு இரகசியப் பேச்சுக்கள் நிகழ்த்த எண்ணிப் பாரிஸுக்கு ஒரு ராஜதூதனைத் திப்பு அனுப்பினான்; இருநாடுகளுக்கும் (பிரான்சு, இங்கிலாந்து) போர் தொடங்கியவுடனே அவன் தன் தகப்பனைப்போல் கர்நாடகத்தின்மேல் படையெடுத்துச் சூறையாடச் சூழ்ச்சியிட்டான்.

**திப்பு திருவாங்கூர் காவல் வரிசைகளைத் தாக்குதல்**

அவன் திருவாங்கூர் இராஜ்யத்தைக் கைக்கொள்வதில் மிக்க ஆவல் கொண்டான்; மேற்குக் கடற்கரையை யடைதற்கு அதனை ஒரு மார்க்கமாகக் கொள்ள விரும்பினான். மங்களூர் உடன்படிக்கையின்படி திருவாங்கூர் ஆங்கிலேயர் பாதுகாப்பில் வைக்கப்பட்டது. திருவாங்கூர் அரசன் டச்சுக்காரரிடமிருந்து தனது வடவெலிலையிலிருந்த *குரங்கனூர், †ஆயக்கோட்டை என்ற இரு பட்டணங்களையும் வாங்கிக் கொண்டான். மற்றும், முன்னலுதவிபுரிந்ததற்குக் கைம்மாறாக, கொச்சியரசன் திருவாங்கூர் அரசனுக்குச் சில ஜில்லாக்களைக் கொடுத்தான்; அங்குத் திருவாங்கூர் அரசன் மலைகளுக்கும் கடலுக்கும் இடையே காவல் வரிசைகள் அமைத்தான். குரங்கனூரும் ஆயக்கோட்டையும் இக்காவல் வரிசைகளின் முனையில் பொருந்தி, அவைகளின் பாதுகாப்புக்கு இன்றியமையாதனவாயிருந்தன. திப்பு, இப்பட்டணங்கள் தன்னிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென வாதிட்டான். அவன் கூறிய காரணமாவது:—இவை தன்கீழ் சிற்றரசனையுள்ள கொச்சியரசனுக்குரியவையாகலின் டச்சுக்காரர்க்கு இவைகளை விற்க உரிமையில்லை யென்பதே. பின்பு திப்பு, காவல் வரிசைகளைத் தாக்கினான்: ஆனால், மிக்க சேதத்துடன் துரத்தப்பட்டான்; மறுபடியும், திப்பு மிக்க தீவிரமாகத்தாக்கி அக்காவல் வரிசைகளைக் கைப்பற்றினான் (1789-90). திருவாங்கூர் காவல் வரிசைகளைத் திப்பு எதிர்த்தவுடனே, ஆங்கிலேயர் தந்திரமாக இராணுவ ஏற்பாடுகள் செய்ய விரைந்தனர்.

காரன்வாலிஸ் திப்புவுக்கு எதிரிடையாகத் திருவாங்கூர் அரசனுக்குச் செவ்வனே உதவிபுரியுமாறு சென்னைக் கவர்னருக்குக் கட்டளையிட்டிருந்தார். ஆனால், சென்னை யரசாங்கமோ முன்னல் நிகழ்ந்த மைசூர் யுத்தங்களின்போது இருந்தது போலவே, சீர்கெட்டு வலி குன்றிக் கிடந்தது; ஆதலால், திப்பு, காவல் வரிசைகளைத் தாக்கும்போது அது நலம்பட யாதொன்றும் செய்யவில்லை. காரன்வாலிஸ் சென்னைக் கவர்னரை வேலியி

**போர் தொடங்குதல் (1790)**

* Cranganore. † Ayacottah.

னின்றும் சிறிதுகாலம் நீக்கி, அவற்குப்பகிலாகப் பம்பாயிலிருந்த **ஜெனரல் மெடோஸ்** என்பவரைச் சென்னைக் கவர்னராகவும் சேனைத்தலைவராகவும் நியமித்துத் தீவிரமாகப் படையெடுப்புகளை நிகழ்த்துமாறு ஆஞ்ஞாபித்தார்.

**மெடோஸ் தளகர்த்தனின் படையெடுப்பு**

மெடோஸ் விரைவில் மைசூர்க்குத் தென்கிழக்கேயுள்ள பள்ளநிலப் பகுதிகளைக் கைப்பற்றித் திண்டுக்கல், பாலக்காடு, கோயம்புத்தூர் இவைகளையும் பிடித்தார். ஆனால், ஆங்கிலச்சேனை மைசூர் பீடபூமியை அடைந்தபோது, திப்பு அவற்றைத் திறமையுடன் துரத்தியடித்தான். இதற்குள் பம்பாயிலிருந்து ஒரு சேனை மலையாளக்கரையிலிறங்கிக் கண்ணனூரைப் பிடித்துக்கொண்டது.

இதற்குமுன்பே, காரன்வாலிஸ் மராட்டியரோடும் நிஜாம் அலியோடும் ஒப்பந்தஞ்செய்துகொண்டார். அதன்படி, எல்லோரும் கூடித் திப்புவை எதிர்த்துப் பின் ஜெயித்த நாடுகளைச் சரிசமமாகப் பங்கிட்டுக்கொள்ள உடன்பட்டனர் (ஜூலை, 1790).* மராட்டியர் தீவிரமாக உதவிபுரிந்து திப்பு ராஜ்யத்தின் வடக்கிலுள்ள தார்வாரைக் கைப்பற்றினர். நிஜாம் மாத்திரம் சோர்வுற்றுக் கிடந்தான் (1790). ஆனால், திப்பு கர்நாடகத்தின்மேல் பாய்ந்து, திருச்சிராப்பள்ளிவரை வந்தான்; வரும் வழியிடையே ஸ்ரீரங்கத்தையும் இதர இடங்களையும் கொள்ளையடித்தான். அவன் பகைவரும் ஓர்மிக்கு விதித்த தூது நற்பயனளிக்கவில்லை.* அவன், கர்நாடகத்திலிருக்கும்போதே ஜெனரல் மெடோஸிடம் சமாதானத்தை நாடினன்; ஆனால் அது பலிக்கவில்லை.

**மராட்டியரோடும் நிஜாம் அலியோடும் ஒப்பந்தஞ் செய்துகொள்ளல்**

1790-இல் எடுத்த படையெடுப்பின் பயன் கண்டு காரன்வாலிஸ் திருப்தியடையவில்லை; ஆதலின், தாமே போரை நிகழ்த்த எண்ணிச் சென்னையை யடைந்து, படைகளுக்குத் தலைமை வகித்தார் (1791). வேலூரில் தம் சேனையைத் திரட்டியபின், மைசூர் பீடபூமியின் மேற்சென்று, திப்புவை நேரிற்கண்டு போரிடாவாறு விலகி, அவனது வலுத்த பங்களூர்க் கோட்டையைச் சண்டையிட்டுப் பிடித்தார். சில இடங்கள் ஆங்கிலச் சேனையால் பிடிபட்டன. அவ்வமயம் நிஜாம் துருப்புக்கள் ஆங்கிலச் சேனையோடு கலந்துகொண்டன: எனினும், அவைகளால் பிரயோசனமொன்றுமில்லை. மே மாதத்தில், லார்ட் காரன்வாலிஸ் ஸ்ரீரங்கப்பட்டணத்தின்மேற்செல்ல, மற்றொரு ஆங்கிலப்படை **அபர்க்ரம்பி** என்பவன் தலைமையின்கீழ் மேற்குக் கரையினின்று அவரைச் சேர்ந்தது. **காரிக்கட்டம்** என்ற இடத்தில் ஆங்கிலேயர் திப்புவின்மேல் திறமையுடன் வெற்றிபெற்றனர்; ஆனால், விடாமழையும் உணவுத்தேவையும் அவ்

**காரன்வாலிஸே சேனைத்தலைமை வகித்தல்**

**அவர் பங்களூரைக் கைப்பற்றுதல் (1791)**

**காரிக்கட்டத்தில் வெற்றிபெறல்**

---

* "அரசன் மொயயுத்தியுடையனுகலின், தன்மந்திரி சொன்ன வகையை மேற்கொள்ளவில்லை. அவன் சொன்னதாவது:—"இது, என்றும் நான் வருத்தத்தொடு கூடுகின்ற வரும் அமெரிக்க விவகாரத்தையொத்துள்ளது. அக்காலத்து நான் சிறுவயதுடையனுயிருப்பவே அங்ஙன் நடந்தது; அதற்காக இப்போது, காம் துன்புறுகின்றேம்; இதனல் நாம் கற்ற நிதி எஞ்ஞான்றும் மறக்கற்பாலதன்று." [The Mysore Gazetteer (new edition), Vol, II. Part. IV, pp. 259-60].

வெற்றியினலடையும் நற்பயன்களை யனுபவிக்கவொட்டாது தடை செய்தன. திப்புவோ, வெகு ஜாக்கிரதையாய்விட்டான்; காரன்வாலிஸ் தம்மிடமுள்ள பலுவான சாமான்களையெல்லாம் போட்டுவிட்டுப் பிரங்கி களையெல்லாம் மண்ணில் புதைத்துவிட்டு விரைவில் பின்வாங்கினர். மராட்டியப்படைகள் தக்க சமயத்தில் வந்துசேரவே, அவர் ஏற்படக்கூடிய விபத்தினின்று தப்பினர். அவ்வாண்டு முடியும் வரை ஆங்கிலேயர் நந்திதுர்க்கம், இன்னும் இதர மலைக் கோட்டைகள் இவற்றையே கைப்பற்றுவதில் காலங்கழித்தனர். மராட்டியரோ, கொள்ளையடித்

**அவ்வாண்டில் நிகழ்ந்த இதர போர்க்கருமங்கள்**

தலையே கருத்தாகக்கொண்டு தமது சாதனங்களையெல்லாம் விழலுக்கிரைத்த நீராக்கினர்; அவர்கள், திப்புவின் தளகர்த்தருள் ஒருவனுகிய **கம்ருத்தீனிட்ம்** தோல்வியும் அடைந்தனர்.

அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் காரன்வாலிஸ் ஒரு படைக்குத் தலைமைவகித்துப் போர் மேற்கொண்டார்; அதுவரை தென்னிந்தியாவில் இதைப்போன்ற சேனையொன்று கண்டதில்லை. மூஸ்திபுகளும், உணவுப் பொருள்களும் அபரிமிதமா யிருந்தன. திப்பு, "நான் கண்ணுறக்காணும் ஆங்கி லப்பொருளாக்க மூலங்களுக்கும் அஞ்சினேனில்லை; காணுமாட்டாதவற்றுக்கு அஞ்சுகின்றேன்" என்று கூறியது உண்மையா யிற்று. கிஷ்ணாவின் சேனை வடகிழக்கிலிருந்தும், மராட்டியரின் சேனை வட மேற்கிலிருந்தும் வந்து காரன்வாலிஸைச் சேர்ந்தன; அபர்கிராம்பியும் தன் சேனையோடு மலையாளத்தினின்றும் வந்துசேர்ந்துகொண்டான். காரன்வாலிஸ் யாதொரு எதிர்ப்புமின்றி ஸ்ரீரங்கப்பட்டணத்தை யடைந்து, அவ்விடத்தை முற்றுகையிடத் தொடங்கினர் (பெப்ரவரி, 1792). முற்றுகை

**காரன்வாலிஸது இரண்டாவது படையெடுப்பு**

**ஸ்ரீரங்கப்பட்டணத்தை ஆங்கிலேயர் முற்றுகையிடல்**

யிடும்போது, வெகு தீவிரமாகச் சண்டையிட்டு, எதிரிகளை முறியடித்தார். ஆங்கிலேயர் வடக்கிலுள்ள கோட்டைகளையெல்லாம் வசப்படுத்தி ஸ்ரீரங்கப்பட்டணத்தை யடைந்தபோது திப்பு தற்பாதுகாப்புக்காக அஞ்சி நடுங்கினன்; ஜெனரல் அபர்கிராம்பி தென்மேற்கில் பாசறை யிறுத்தான். திப்பு சமாதானப் பேச்சுக்கள் நிகழ்த்தித் தன்மேலிட்ட கடுநிபந்தனைகளை யேற்றுக்கொண்டான். திப்பு, தனது ராஜ்யத்தில் பாதியை ஆங்கிலேயருக்கும் அவரது நண்பர்களுக்கும் கொடுத்துவிட

**திப்புவின் சமாதானப் பேச்சுகள்**

வேண்டும்; சண்டையின் செலவிற்காக மூன்று கோடி முப்பது லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டும்; தற்போதிருந்த கைதிகள் எல்லோரையும் விடுவிக்க வேண்டும்; இந்த உடன்படிக்கை நிறைவேறும்வரை தமது இரண்டு மூத்த குமாரர்களையும் ஜாமீனுக ஆங்கிலேயரிடம் அனுப்பவேண்டும். காரன் வாலிஸ் இரு குமாரரையும் நன்முறையில் ஓம்பி, பின்பு விடுதலை செய்யவும் உத்தரவிட்டனர். தன் சேனையிற் பெரும்பகுதி மனமுளைந்திருப்பது கண்ட திப்பு, தீர ஆலோசித்து இந்நிபந்தனைகளுக்கு உடன்பட்டான். ஆங்கிலேயருக்கு மலையாளம், திண்டுக்கல், பாராமஹால் பிரதேசங்கள் கிடைத்தன; மராட்டிய ராஜ்யத்தின் எல்லை 1779-இல் இருந்ததுபோல்,

தெற்கே துங்கபத்திரைவரை யெட்டியது. இப்படியிருக்க, பம்பாயிலிருந்து வந்த சேனைக்குப் பேருதவி புரிந்த சூடரு அரசரைத் திப்புவின் கோபத்துக்கு ஆளாகாதவாறு காக்கவேண்டியிருந்தது ; ஆகவின், அவர் ஆங்கிலேயரின் பாதுகாப்பிற்குட்பட்டனர். இதனால் ஆங்கிலேயர்க்கு ஒரு நன்மை யேற்பட்டது ; அவர்கள் மேற்குப் புறத்திலிருந்து மைசூர் நாட்டை எளிதிலடைவதற்கு ஒரு வழியுண்டாயிற்று. பாராமஹால் பிரதேசத்தில் முக்கியமான கோட்டைகளிருந்தன. இதுவரை மைசூர் நாட்டினர் கர்நாடகத்தின் மேல் படையெடுத்தற்கு வாயிலாக விருந்த கணவாய்களும் இப்பிரதேசத்திலுள்ளன. நிஜாம், மூன்பு தனக்குச் சொந்தமாய் துங்கபத்திரா நதியின் வடக்கிலிருந்த பிரதேசங்களனைத்தையும் திரும்பக் கொடுக்கப்பெற்றான் : தெற்கில் தானிழந்த கடப்பையையும் பெற்றான். இவ்விதமாக, ஸ்ரீரங்கப்பட்டண உடன்படிக்கை தென்னிந்தியாவிலுள்ள அதிகாரங்களிடை சமநிலையை உண்டாக்கியது ; ஆங்கில கௌரவத்தை மிகவும் அதிகரிக்கச் செய்தது. போரை வெற்றியுற நடத்தியதால் காரன்வாலிஸ் கியாதியடைந்து மார்க்விஸ் என்ற பட்டமும் பரிசாகக் கொடுக்கப் பெற்றார். ஆனால், பின்பு 1799-இல் வெல்லெஸ்லி திப்புவின் அதிகாரத்தை அற ஒழித்தமையால் காரன்வாலிஸ் புகழ் மங்கிப்போயிற்று. ஆனால், காரன்வாலிஸ் ஒரு பலத்த விரோதியோடு போகிய வசதியும் உரிமையும் இன்றிச் சண்டையிட்டது மறக்கற்பாலதன்று.* அவரது உருவச்சிலை நன்றியறிவுள்ள சென்னை வாசிகளால் எழுப்பப்பட்டது ; அதனடித் தளத்திலுள்ள போதிகையொன்று கவர்னர்-ஜெனரல் திப்புவின் குமாரர்களை வரவேற்பதுபோல் அமைந்துள்ளது. இப்போது அவ்வுருவச்சிலை, சென்னை கானிமரா பொதுஜன புத்தக நிலையக் கூடத்தில் இருக்கிறது.

**ஸ்ரீரங்கப்பட்டண உடன்படிக்கையின் ஷரத்துக்கள் (1792)**

ஸ்ரீரங்கப்பட்டண உடன்படிக்கை திப்புவினிடமிருந்து பலவற்றைக் கைக்கொண்டன என்று சிலர் கூறை கூறினர் : வேறு சிலர், திப்புவின் பேரவாவுக்கு இவ்வுடன்படிக்கையால் போதிய தடையிடப்படவில்லை என அபிப்பிராயங் கொண்டனர். ஜெனரல் மெடோஸ் சுல்தானையே நீக்கிப் பழைய ஹிந்து அரச குடும்பத்தினரையே மீண்டும் ஆளுமாறு செய்ய யோசனையிட்டார். இவ்வழியை மேற்கொண்டிருந்தால், பின்னர் நிகழவிருக்கும் யுத்தத்தைத் தடுத்திருக்கலாம் ; ஆனால், அது, இங்கிலாந்திலுள்ள ஆங்கிலேயரது அபிப்பிராயத்திற்கு விரோதமானதாகும் ; 1784-ஆம் வருடச் சட்டத்தின் தருதிக்கும் ஏற்றதல்லதாகும். திப்புவின் ராஜ்யம் முழுவதையுமே ஆங்கில ராஜ்யத்தோடு சேர்ப்பதெனக் கொண்டால், நிஜாம் மராட்டியர் ஆகிய இரு கிறத்தினருக்கும் வெறுப்புண்டாகும் ; மேலும், ஆங்கிலேயருக்கு அரசியல் விவகாரங்களில் ஆதிக்கமேற்படுமாகலின், அக்காலத்து அவ்வாதிக்கத்தை வகிக்கத்தக்க சக்தியற்றவராயிருந்தனர். " காரன்வாலிஸும் மந்திரிச் சபையும் எதிரியின் ஆற்றலைக் குன்ற மதிப்பிட்டதோடு, ஒரு முடிவும் ஏற்படாதெனவும் மதித்தனர்

**காரன்வாலிஸின் ஏற்பாட்டைப் பற்றிய கண்டனம்**

* See Sir J. N. Sarkar's editorial introduction to The Allies' War with Tipu Sultan (1790—93)

என்பது பின்வரும் சம்பவங்களால் ஏற்படுகின்றது." நிஜாமும் மராட்டியரும் ஆங்கிலேயர். உதவியின்றித் தாம் திப்புவின் கொடுமைகளினின்று தம்மைக் காத்துக்கொள்ள முடியாதென நன்குணர்ந்தனர். காரன்வாலிஸே, போர்ட் ஆவ் கன்ட்ரோலுக்கு இவ்வுடன்படிக்கையைப் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார் :—"நாங்கள் எங்கள் விரோதியைச் செவ்வனே ஒடுக்கினேம் ; அதே சமயத்தில், எங்களொடு நட்புப் பூண்டவர் களையும் வலிவு பெறச் செய்தோமில்லை."*

**தஞ்சாவூர் விவகாரங்கள்**

காரன்வாலிஸின் அமைதி நோக்கமுறைக்கு, மைசூர் யுத்தமொன்றே † புறனடையாகும். அவர் ஐரோப்பாவிற்குப் போவதற்குச் சற்று முன்பு (1793) புதுச்சேரியைக் கீழ்ப்படுத்த நேர்ந்தது ; ஏனெனில், அவ்வமயம் இங்கிலாந்துக்கும் புரட்சி நிலையிலழுந்திய பிரான்ஸுக்கும் போர் தொடங்கிற்று. அவர் தஞ்சாவூர் அரசவுரிமைக் கேற்பட்ட சச்சரவையும் தீர்த்து வைக்க நேர்ந்தது ; காலஞ்சென்ற தஞ்சையரசனின் சகோதரருமிய அமரசிங்குக்கும் அரசனது ஸ்வீகார புத்திரனை சரபோஜி யென்பவனுக்கும் இச்சச்சரவு ஏற்பட்டதாகும். லார்ட் மிகட் காலத்துத் தஞ்சையரசனைச் சிறிது காலம் விலக்க வைத்தபின், 1776-இல், மீண்டும் அவ்வரசன் சிம்மாசன மேற்றப்பட்டான் ; ஆனால், முகம்மதலியின் வசமிருந்து, (1773-76) தஞ்சை ராஜ்யம் விடுபட்டவுடனே, ஹைதர் அலி அதனைப் பாழ்படுத்திப் பல மாதங்கள் தன் வசங்கொண்டிருந்தான். அவன் செய்த அட்டூழியங்களினால் விளைந்த தீமைகள் சொல்லொணாது : விவசாயம் மீண்டும் நன்னிலை பெற 18-ஆம் நூற்றாண்டு இறுதிவரை காலம் பிடித்தது. தஞ்சையரசைக் கைப்பற்றிய அமரசிங் 1787-இல், ஆங்கிலேயரோடு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். அதன்படி, போர்க் காலங்களில், வரி வசூலிக்கும் உரிமையை ஆங்கிலேயர் தம் கைக் கொண்டனர். மற்றொரு உடன்படிக்கை 1792–இல் செய்யப்பட்டது. கீர்த்தி பெற்ற ஷ்வார்ட்ஸ் பாதிரியோடு ஒருசேர எண்ணப்படும் சரபோஜி, கவர்னர்-ஜெனரலுக்கு விண்ணப்பித்தான் ; நடத்திய விசாரணையின் பயனாக, சரபோஜி காலஞ்சென்ற அரசனின் உரிமைக்குரிய ஸ்வீகார புத்திரனுவானென்று நிர்ணயிக்கப்பட்டது.‡ அவன் மீண்டும் சிம்மாசனமேறுதல் பின்னர் நிகழ்ந்தது.

**முகம்மது அலியோடு செய்துகொண்ட உடன்படிக்கை (1792)**

காரன்வாலிஸ் நவாப் முகம்மது அலி கொடுக்க வேண்டிய கடன்களைத் தீர்க்குமாறு தூண்டினர் ; மேலும், அவனோடு முன்னால் நடந்த உடன்படிக்கைகளின் நிபந்தனைகளை அவன் மீறுதவாறு நடந்து கொள்ளும்படி வாக்குரிமை யளிக்கவும் செய்தார். 1792-இல், அவர் மற்றொரு உடன் படிக்கையினால், போர்க்காலத்துக் கர்நாடகக் கண்

---

* காரன்வாலிஸ் ஏற்பாட்டின் கண்டனத்தைப்பற்றியறிய—Mackenzie: Sketch of the War with Tippoo Sultan (1794) ; Wilks Mysore (Madras edition) Vol. II ; pp. 260—2 ; V. A. Smith's Oxford History of India, p. 561 ; and Miles History of the Reign of Tipu Sultan ; pp. 155—6 பார்க்கவும். நிஜாமின் கீழ் வேலியிலமர்த்த **ரெயிமண்ட்** என்னும் பிரெஞ்சுத் தளகர்த்தன் "இந்த யுத்தத்திற்குப் பிறகு பெரும் பாலும் நிஜாம் மராட்டியர் போன்ற பேரதிகாரங்களுக்குள் மீண்டும் சமாதானம் நிலவியது" என எழுதியுள்ளார்.

† Exception. ‡ See Venkasami Row's Mauual of the Tanjore District, pp. 813—21.

காணிப்பு முழுவதையும் ஆங்கிலேயர்க்குக் கொடுப்பதாகவும், ஆங்கிலப் படையொன்றின் பராமரிப்புக்காக வருடந்தோறும் ஒரு ஸ்திரமான தொகையைச் செலுத்துவதாகவும் உடன்பட்டார். இந்த உடன்படிக்கை நவாபின் திறமையின்மையாலும் வயோதிகத்தாலும் திருப்திகரமாய் நிறை வேறவில்லை. காரன்வாலிஸ், நிஜாமும் மராட்டியரும் தம்மொடு பகைமை பாராட்டத் தொடங்குவதை விலக்க யாதொன்றுஞ் செய்யவில்லை; அவர் தனது பகைமை நாளடைவில் மூற்றிக் கடைசியில் பயங்கரமான போரில் முடிந்தது.

## பகுதி 3: காரன்வாலிஸின் அரசியல் நிர்வாக சீர்திருத்தங்கள்—சாசுவதநிலவரி ஏற்பாடு

காரன்வாலிஸ் நீண்ட காலம் நற்பயனளிக்கும் நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்தார். அவர் தமது ஆட்சியின் முதல் மூவாண்டுகளில், உத்தியோகஸ்தர்கள் பயின்றுவந்த ஊழல்களையொடுக்கி அவர்களது கடமைகளையும் பொறுப்புகளையும் வரையறுத்தனர். அவர் *அரசாங்க வேலையைத் தூய்மை செய்து எல்லா உத்தியோகஸ்தர்களையும் கடமை வழுவாமையும் நன்னடக்கையும் மேற்கொள்ளுமாறு செய்தார். அவர் உத்தியோகஸ்தர்களது சம்பளங்களை உயர்த்தி அவர்கள் லஞ்சம் வாங்குவதில் ஆசைகொள்ளாதவாறு செய்தார். மற்றும் அவர்கள் சில்லரை வேலை செய்வதையும் †ஒப்பந்தம் செய்துகொள்வதையும், வேலையில்லாமலேயே ஊதியம் பெறுவதையும் நிறுத்தினர். டைரக்டர்களும் இங்கிலாந்திலுள்ள வேறு சிலரும் இந்தியாவில் வேலைக்காகச் சிலருக்குச் சிபார்சு செய்தபோது, அவர்களது வேண்டுகோள்களைத் துணிகரமாய் எதிர்த்தார்.

**காரன்வாலிஸின் நிர்வாக சீர்திருத்தங்கள்**

இப்படிப்பட்ட நற்சீர்திருத்தங்களிடையே அவர் இந்தியர்களுக்குப் பெரும் அநீதியான செயலொன்று புரிந்தார். அதாவது, அரசாங்கத்தின் பெரிய உத்தியோகங்கள் இந்தியர்க்குக் கிடையாது என்று விலக்கியதேயாகும். இந்தியர் மாதம் 25 ரூபாய் சம்பள முடைய தரோகர் என்னப்படும் போலிஸ் உத்தியோகஸ்தர்களாகவாவது அல்லது சிறு குற்றங்களை விசாரித்துத் தரகு வாங்கி ஜீவனம் பண்ணும் முனிசீப்புகளாகவாவது ஆகலாம்.‡

**பெரிய உத்தியோகங்களினின்று இந்தியர் விலக்கப்படல்**

---

* Public Service. † Contracts.

‡ டாக்டர் **மார்ஷ்மென்** காரன்வாலிஸ் இந்தியர்க்குச் செய்த இந்த அநீதிக்கு மனம் புண்பட்டுப் பின்வருமாறு கூறியுள்ளார்:—"முன்னிருந்த கொற்றவேந்தரனைவர் மீதும் சிலவற்றைத் தவிர பெரும்பாலனவாய் விலில் இராணுவ உத்தியோகங்கள் சுதேசிகளுக்கு அடைபாட்வாயிலாயிருந்துள்ளன. அவர்கள் முழு நம்பிக்கையோடு மந்திரிப் பதவியையும் சேனாபதிப் பதவியையும் வகிக்க மேன்மேல் முயலலாம். ஆனால், 1793-இல் நிறுவப்பட்ட விவேகமற்ற முறையினால் நாட்டுச் சுதேசிகளின் சேர்மையான பேரவா உரிமைகளுக்குத் தாளிடப்பட்டது. ஆங்கில ஆட்சியின் விரித்திரமான சுபாவத்தின்படி ஐரோப்பியர்வசமே எல்லா இராஜீய இராணுவ அதிகாரங்களை வைக்கவேண்டுமென்பது இன்றியமையாதாயின், இதனையேநீட்டி நீதி முறை (Judicial) இலாகாக்களிலும் அவர்களுக்கு ஒரு வசதியுமளிக்காது மறுப்பது தக்க காரணமாகாது. அங்கீதி முறை இலாகாக்களில் வேலையிலமர்த்தப்படும் நம் சுதேசுப்பிரஜைகளும், இயற்கையறிவாலும், நாட்டு மொழியறிவாலும் மக்களது நடையுடவாலும் அவர்களே சாலத் தகுதியுடையர். அவர்களை விலக்கியதன் கிய விளைவுகள் அரசியல் நிர்வாகமனைத்திலுமுண்டாகிய மெலிவிலும் அபகீர்த்தியிலும் விரைவில் பிரதிபலித்தன." (History of India-Part I pp. 476-77).

கம்பெனியின் கீழுள்ள ஸிவில் கிரிமினல் நீதிமன்றங்களின் சீர் திருத்தம் நிறைவேற்றப்பட்டது. வரி வசூலிக்கும் கலெக்டரின் கடமை களை ஸிவில் நீதிபதியின் கடமைகளினின்றும் முற்றி லும் பிரத்தியேகமாக்கினர். கலெக்டரின் வேலையைச் சார்ந்த அனேத்தையும் தழுவி விரிவாக விதிகள் ஏற்பட்டன. *அரசாங்கக் காரியாலயமும் ஒழுங்கு படுத்தப் பட்டது. ரெவின்யூபோர்டும் ஜில்லாகலெக்டர்களும் தங்கள் நீதிவழங்கும் அதிகாரங்களை முற்றும் இழந்தனர். ஒவ்வொரு ஜில்லா விலும் ஆங்கில நீதிபதிகளின்கீழ் ஸிவில் நியாஸ்தலங்கள் அமைக்கப் பட்டன. அந்நீதிபதிகளுக்கு ஹிந்து முகம்மதிய சட்டங்களைப்பற்றிய யோசனை கூற இந்தியர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த நியாஸ்தலங் களுக்கு எல்லா இந்தியர்களின் மீதும் அதிகாரம் செலுத்த உரிமையுண்டு. ஆங்கிலக் குடிகளோ உயர்தரநீதி மன்றத்தின் அதிகாரத்திற்குட்பட்டனர். ஜில்லாகோர்ட்டுகளிலிருந்து வரும் அப்பீல் அனேத்தையும் விசாரிக்க நான்கு அப்பீல்கோர்ட்டுகள் முறையே கல்கத்தா, டக்கா, மூர்ஷிதாபாத், பாட்னா என்ற இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. இவைகளின் தீர்மானங் களுக்கு மேல் அப்பில் செய்யவேண்டுமானல் கல்கத்தாவிலுள்ள ஸதர்நீதி மன்றத்திற்குச் செய்யவேண்டும். கடைசியாக பிரிவிகவுன்ஸிலுக்கு அப்பில் செய்யவேண்டும்.

**நீதித்துறையில் செய்த சீர்திருத்தங் கள்**

**ஸிவில்கோர்ட்டுகள்**

கிரிமினல் கோர்ட்டுகளும் அவ்வாறே சீர்திருத்தம் செய்யப்பட்டன. ஒவ்வொரு ஜில்லாவும் பல சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது; ஒவ் வொரு பகுதிக்கும் ஒரு தரோகர் நியமிக்கப்பட் டார். அவருக்குக் குற்றவாளிகளைக் கைப்பற்றி ஜாமீனில் விடுக்க அதிகாரம் கொடுக்கப்பட்டது ஜில்லாகோர்ட் ஜட்ஜுகளுக்குக் குற்ற விசாரணை செய்யும் அதிகாரம் உண்டு. அவர்கள் சிறு விவகாரங்களைத் தீர்மானிக்கலாம். இதரவிவ காரங்களில் †சுற்றும் நீதிபதிகளின் முன்னர் குற்றவாளிகளை விசாரணைக் காக அவர்கள் அனுப்பவேண்டும். இந்தச் சுற்றும் நீதிபதிகள் யாரு ரெனில் நான்கு அப்பில் கோர்ட்டுகளின் ஜட்ஜுகளே யாவர்: அவர்கள் தங்கள் அதிகாரத்தைச் செலுத்த ஜில்லாதோறும் சுற்றி வருடத்திற்கு இருமுறை சிறைச்சாலையிலிருந்து கைதிகளை விடுவிப்பர். கல்கத்தாவி லுள்ள கிரிமினல் ஸதர் கோர்ட், எல்லா விவகாரங்களுக்கும் அப்பீல் கோர்ட்டாகும்.

**கிரிமினல் கோர்ட்டு கள்**

முகம்மதிய மன்னர்கள் வழங்கிவந்த சட்டங்களே இந்த நியாஸ்தலங் களின் கிரிமினல் சட்டத்தொகுப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனல் அத்தொகுப்பில் காணக்கிடந்த பெரும்பாலான சட்டங்களின் கடுமை குறைக்கப்பட்டதுடன் தப்பிதங் களும் திருத்தப்பட்டன. காரன்வாலிஸ் இந்த நியாயஸ்தலங்களின் நடைமுறையைப்பற்றி ஸ்ளலிஜா இம்பே அமைத்த

**அவரது சீர்திருத்தங் களின் இயல்புகள்**

* The Secretariat of the Government. † Judges of circuit.

விதிகளின் தொகுப்பைச் செம்மைப்படுத்தினர். இவ்விதிகளனைத்தும் சுமையாய்க் கிடந்தன. அவை பரிபாஷைச் சொற்களும் இடம்பமான விதிகளும் அடங்கிய ஒரு முறையை மேற்கொண்டிருந்தன. ஆனால், "ஜான் ஸ்டுவர்ட்மில் கொள்கைப்படி, அக்கால மேனாட்டு ஆங்கில நியாஸ்தலங்களைக் காட்டிலும் இம்முறை சிறுபான்மையே இங்குக் கொள்ளப்பட்டன". காரன்வாலிஸ், நீதிமன்றங்களின் நிர்வாகத்துறையில் முற்றிலும் ஐரோப்பியரையே நியமித்தாரெனத் தீவிரமாக அவரைக் கண்டித்தனர். ஆனால் இங்ஙன் செய்தது இன்றியமையாததென்னே அவர் எண்ணினார். ஏனெனில், அக்காலத்துப் பாந்து நிலவிய இலஞ்சம் வாங்குதல் போன்ற தீக்கருமங்களைத் தடுக்க இதுவே ஒரு வழியென அவர் எண்ணினார். அன்று முதல் இன்று வரை அரசாங்கத்தின் ஒரு சிறந்த அங்கமாக வளர்ந்தோங்கிவரும் *கீழ்தர நீதித்துறை இலாகா "அனுப்வ அறிவும் கல்வியறிவும் பயந்தளித்ததோர் நற்பயனே" யாகும். **காரன்வாலிஸ்கோட்** எனப்படும் இச்சட்டத் தொகுப்பு தன்னிடத்து ஒரு விழுமிய குணமட்டும் கொண்டிலங்கியது. அது எல்லா மனிதர் மேலும் சட்டத்தின் ஆதிபத்தியத்தையும் நியாயஸ்தலங்களின் அதிகாரத்தையும் நிறுவியது. மற்றும், அது பொது சுதந்திரத்திற்கும் அடிகோலியது.†. அதுகலெக்டர்களையும் இதர அரசாங்க அதிகாரிகளையும்கூட நீதிமன்றங்களுக்கு உத்தரவாதியாக்கியது. இங்கன், ஒரு முக்கியமான சுதந்திரக்கொள்கையை வெளிப்படுத்தியது. அதாவது, எவ்வளவு பெரிய உத்தியோகஸ்தனாயிருந்தாலும், தனக்கு அவன் தீங்கு விளைப்பானாயின், அவனை நீதிமன்றத்து முன் கொணர்ந்து நிறுத்த எவர்க்கும் உரிமையுண்டு என்பது.

**நிலவரி வருமானத்தில் செய்த சீர்திருத்தங்கள்**

காரன்வாலிஸ் செய்த சீர்திருத்தங்களில் மிகவும் முக்கியமானது, அவருடைய **சாசுவத நிலவரி ஏற்பாடாகும்**. நிலவரியை ஏற்பாடு செய்து வரையறுத்தல் அரசியல் நிர்வாகத்தின் ஒரு சிறந்த பகுதியாகும். நிர்வாகத்தின் செல்வாதார உறுதி நிலையும், குடிகளின் க்ஷேமமும் அதனை ஆதாரமாகக் கொண்டுள்ளன. வங்காளத்தில் நிலவரி வசூலிப்போர் வெகுகாலமாக ஜமீன்தார்கள் என வழங்கப்பட்டு வந்தனர். அவர்கள் நாளடைவில் தங்கள் உத்தியோகத்தைப் பாரம்பரிய உரிமை பாக்கியதோடு, போலீஸ் நீதித்துறைகளிலுள்ள அதிகாரங்களையும் கைக் கொண்டனர். பெரும்பாலும் ஜமீன்தார் ராஜா என்ற பட்டத்தை வைத்துக்கொண்டு தன் ஜில்லாவிற்கோ, சமஸ்தானத்திற்கோ உண்மையில் தலைவனாயினன். கம்பெனியார் திவானியை ஏற்றுக்கொண்டபோது, அவர்கள் ஜமீன்தார்களை வரி வசூலிப்பவராகக் கருதினர்; அவர்கள், ஜமீன்தாரது வரி வசூலிக்கும் உரிமையைப் பெருத்த ஏலத்திற்கு—சாதாரணமாக, பலவருஷ காலத்திற்குக்—குத்தகை விடுத்தனர். வங்காளம், 1770 ஆண்டுப் பஞ்சத்தினால் ஜனத்தொகை குன்றி ஏழைமையை யடைந்தது. அநேக ஜமீன்தார்களால் தாங்கள் செலுத்தவேண்டியிருந்த பாக்கித் தொகையைச் செலுத்த

---

* Judicial subordinate service.

† Ross: Cornwallis correspondence, Vol II p. 558 see also pp. 446-7 of the Cambridge History of India—Vol. V for an estimate of the administrative Reforms.

முடியவில்லை: ஆங்கிலக் கலெக்டர்களோ அனுபவமில்லாதவர்; நாட்டுப் பழக்கங்களையும் உணராதவர். முதன்முதல் ஹேஸ்டிங்ஸ் ஐந்துவருட ஏற்பாடு (quinquennial settlement) திட்டமிட்டார்; பிறகு வருடாந்தர ஏற்பாடுகளிட்டார்; ரெவின்யூ துறையைத் தலைமைப்படுத்தினர். நிலஉரிமைத் திட்டங்களைப்பற்றி எவ்வளவு விஷயங்கள் கிடைக்குமோ அவற்றை யாவையும் திரட்ட விரும்பினர். ஹேஸ்டிங்ஸ் ஜமீன்தார்களோடு ஏற்பாடு செய்து கொண்டபோது, அவர்கள் குடியானவர்களை வருத்தாதபடி பாதுகாக்கவும் விரும்பினர்.

*முன்னர் நிகழ்ந்த திட்டங்கள்*

இப்படியிருக்க, டைரக்டர்கள் வரித்தொகை நிலையாகக் குறைந்து வருவதைக் கண்டு அஞ்சினர்: வருடாந்தர வரி வசூலால் யாவர்க்கும் பயனில்லையாவதோடு ஜமீன்தார்கள் பெருத்த தாக்கி கொடுக்க நேரிடுதலையும் அவர்கள் கண்டனர்; அதனால், அவர்கள் அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் ஒருசேர நன்மை விளைக்கும்படியான நடுத்தர நிரந்தர வரி வசூல்முறையைச் சிபார்சு செய்தனர்; நிலத்தில் சிறிதேனும் அக்கறையின்றி, அரசாங்கத்தை யேமாற்றிக் குடியானவர்களை வருத்தும் சாசுவதமற்ற நிலவாரக்காரர்களை நியமிப்பதைக் கண்டித்தனர்; அவர்கள் பழைய ஜமீன்தார்களோடு ஏற்பாடுகள் செய்துகொள்வதையே மேலாகக் கருதினர். டைரக்டர்கள கொண்ட இக்கருத்துக்களை யெல்லாம் ஜான்ஷோரோடு காரன்வாலிஸ் இந்தியாவிலிறங்கியவுடனே, அவருக்குத் தெரியப் படுத்தினர்; ஷோர் என்பவர் கம்பெனியின் பழைய ஊழியரும் அக்காலத்தில் ரெவின்யு விஷயங்களில் கைதேர்ந்த நிபுணருமாவர். காரன்வாலிஸுக்கு டைரக்டர்கள் எண்ணிய திட்டம் சாத்தியமாவதாகத் தோன்றவில்லை. முன்னரே, ரெவின்யு நிர்வாக முறைமையில் மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன; ஒரு சிறிது அதிகாரப் பிரிவினையும் செய்யப் பட்டது. மாகாணங்களை ஜில்லாக்களாகப் பிரித்து ஒவ்வொரு ஜில்லாவையும் ஒரு கலெக்டரின் கீழாக்கினர்; இந்தக் கலெக்டர் ரெவின்யு போர்ட்டுக்கு அடங்கி நடக்கவேண்டும்; இந்த ரெவின்யுபோர்டு முன்னிருந்த ரெவின்யு கமிட்டியின் தானத்தை யேற்றது.

*1786 இல் டைரக்டர்கள் இட்ட ஆக்கினை*

இச் சீர்திருத்தங்கள் ஷோரினால் செய்யப்பட்டன; அவை, மேற்கொண்டு செய்பவற்றுக்கெல்லாம் அடிப்படைகளாகக் கொள்ளப்பட்டன. 1787-இலும் 1788-இலும் கலெக்டர்கள் வருடாந்தரத் திட்டங்கள் வகுத்தனர்: அடுத்த ஆண்டில், பத்து வருட ஏற்பாட்டுக்கு விதிகள் வகுத்தனர். இந்த விதிகள் வகுப்பதற்காகக் கூடிய கூட்டத்தில், **ஜேம்ஸ் கிரான்ட்** என்பவர் தலைமையின்கீழ் ஒரு சாரார் "ஜமீன்தாரனுக்கு நிலச் சொந்தக்காரனென்ற தகுதியிலோ, அல்லது நிலவரி வசூல்செய்து கொடுக்கும் உத்தியோகஸ்தனென்ற தகுதியிலோ அந்நிலத்தில் யாதொரு நிரந்தர பாத்தியதையும் இல்லை" என்றனர்; மேலும், அவனிடமிருந்து வாங்கும் வரிப்பணத்திற்காக அரசாங்கம் ஒருவித வரையறைக்கும் கட்டுப்பட்டதில்லை யென்றும் கூறி

*1786-இல் நிகழ்ந்த ரெவின்யு சீர்திருத்தங்கள்*

*ஏற்பாட்டைப் பற்றிய சச்சரவு*

னர். ஷோரின் தலைமையின் கீழுள்ள மற்றொரு சாரார், ஜமீன்தார்க்கு நிலச்சொந்த உரிமை யுண்டென்றும் அரசாங்கம் அவனிடமிருந்து பழக்கப் பட்டு வந்துள்ள வரித்தொகையையே வசூலிக்கவேண்டு மென்றும் வாதித்தனர்*. நிலவரி விதித்தலைப்பற்றி இவ்விரு சாராருள்ளும் பிற பேதங்களும் நிலவின: ஷோர், 'திருத்தமான ஏற்பாடொன்று நிறுவுவ தற்கு, வாஸ்தவமாகக் கொடுக்கப்பட்ட வரிக்கட்டணத்தின் விகிதத்தையும், ஜமீன்தார்களும் வாரக்காரர்களும் நிஜமாக வசூலித்த தொகையினளவை யும், கட்டிய தொகையினளவையும் நிர்ணயித்தல் வேண்டும்' என்றார். அவர் ஜமீன்தார்களோடு பத்துவருட காலத்திற்கு நேருக்கு நேராகவே ஏற்பா டொன்று செய்துகொள்ளல், நல்ல அரசியல் முறைக்கும், தேச முன்னேற் றத்துக்கும் மாறுபடாததொன்று மென்றனர். இதர உத்தியோகஸ்தர்களில் அநேகரும் ஜமீன்தார்களோடு ஏற்பாடு செய்துகொள்ளலே தகுதியுடைத் தென்றனர்; அவர்களிற் சிலர் சாசுவத ஏற்பாட்டுக்காக வாதித்தனர். லார்ட் காரன்வாலிஸ் டைரக்டர்கள் ஆக்ஞைகளை யொட்டி, 'பத்து வருடகால ஏற்பாடு வாரத்திற்கு விடுவது போலாகுமென்றும், பரவிய காடு கெடுத்துப் பயிர்நிலமாக்கி வளம்படுத்த வேண்டுமென்ற ஊக்கக் கிளர்ச் சியை ஜமீன்தார்களிடை ஊட்டாதென்றும்' கூறினர். [வங்காளத்தின் மூழு விஸ்தீரணத்தில் மூன்றிலொருபங்கு காடாகுமென்று மதிப்பிட்டனர் காரன்வாலிஸ்.] ஆனால், ஷோரோ, சாசுவத நிலவரி ஏற்பாட்டினால்— அதுவும் நிலஅளவு செய்யாதிருக்கும் இக்காலத்து— தீர்வை தகுதி யுற அமையாதென்று வெளியிட்டார். 1790-இல் காரன்வாலிஸ் இட்ட அறிக்கை பத்துவருட ஏற்பாட்டுக்கு வேண்டிய விதிகளை வெளியிட்டது; அக்கால வரையறை முடிவில் மேலும் ஒருகால் பரீட்சித்துப் பார்க்கவும் எண்ணினர். 1793 மார்ச்சுமீ, வங்காளத்திலும் பிஹாரிலும் இருந்த நிலவரி ஏற்பாடுகள் டைரக்டர் சபையினரின் கட்ட ளைப்படியே நிரந்தரமாக்கப் பட்டன. இங்ஙன் செய்த ஏற்பாட்டினால், பதினெட்டாம் நூற்றாண்டுந் தொடக்கத்திலிருந்ததைவிட இரண்டு மடங்கு தீர்வை கிடைத்ததோடு கம்பெனி திவானியைப் பெற்ற முதலாண்டில் (1765—66) வசூலித்த தொகையைவிட இரண்டுமடங்கு தொகையும் கிடைத்தது.† தீர்வையை எவ்வளவு உயர்த்த வேண்டுமோ அவ்வளவு உயர்த்தினர்: ஏனெனில், 'ஏற்பாடு முடிவானதாயும் நிரந்தரமானதாயு மிருப் பதால், அவ்வளவுதூரம் உயர்த்த முடிந்தது.' இதுவே 1793ஆம் மேமீ ‡ உயர்தரச் சபையினர் செய்த பல திட்டங்களில் § முதல் திட்டமாகும். இந்தத் திட்டங்களின் தொகுப்பு காரன்வாலிஸ் கோட் என வழங்கப்படும்.

**ஷோரின் அபிப்பிரா யங்களும் 1790-இல் நிகழ்ந்த ஏற்பாடும்**

**சாசுவத நிலவரி ஏற்பாடு (1793)**

ஜமீன்தார்களோடு செய்துகொண்ட இந்தச் சாசுவத ஏற்பாடு, அவசர மாக ஏற்பட்ட தொன்றன்று; மற்றும், ஆங்கில நிலவுரிமை கோக்கங்கள்

---

* For details see Ascoli's Early Revenue History of Bengal and the Fifth Report; chaps. V & VI—Grant's case and Shore's case.

† See R. C. Dutt's Economic History of India under Early British Rule, 5th, Ed pp. 92-93.

‡ Supreme Council. § Regulation I.

மலிந்துள்ள காரன்வாலிஸே இதற்கு **முற்றிலும்** காரணமாவர் எனக் கூறுதலும் பொருந்தாது.. ஜமீன்தார்களோடு ஏற்பாடொன்று செய்து கொள்ளுவது நாட்டிலுள்ள ரெவின்யு உத்தியோகஸ்தர்களிற் பெரும்பாலோர்க்கு உடன்பாடேயாகும்; அவர்களிற் பலர் சாசுவத ஏற்பாட்டையே ஆமோதித்து வாதித்தனர். பல்லாண்டுகளாக அனுபவப்பட்டுச் சேகரித்த விஷயங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது இந்த வாதம்; அதனை ஆங்கில மேலதிகாரிகள் முழுமனதுடன் ஆதரித்தனர்; டைரக்டர்களும், பிட்டும் டண்டஸும் அதனை அங்கீகரித்தனர்*.

**இந்த ஏற்பாட்டின் விளைவுகளைப் பற்றிய அபிப்பிராயங்கள்.**

காரன்வாலிஸின் இந்த ஏற்பாடு ஒரு சாராரால் மிகத் தீவிரமாகக் கண்டிக்கப்படுகிறது; மற்றொரு சாரார் இதனை அதிகமாகச் சிறப்பித்துக் கொண்டாடுகின்றனர். பல துறைகளில், இது செல்வனே பயனளித்தது. இதற்கு முன்னர் நிகழ்ந்த கலவரத்தால், ஜமீன்தார் என்ற வருப்பே விரைவில் அழிந்துபட்டுக்கொண்டிருக்க, இப்போது தோன்றிய இவ்வேற்பாட்டால், அவ்வகுப்பினர் "மிக்க ராஜீய அதிகாரங்கள் பெருவிடினும் உறுதியுற்ற சுதந்திரத்தைப் பெற்று ஓங்கினர்". இப்போது அவர்களுக்குத் தங்கள் நிலங்களை மேன்மேலும் அபிவிருத்திசெய்ய ஓர் ஊக்கம் ஏற்பட்டது. கரம்பு நிலங்களிலும் பயிராக்கிச் சாகுபடிசெய்ய முயன்றனர். அவர்களது செல்வம் பெருகவே, புத்தம் புதிய வழிகளில் வியாபாரமும் தொழில்களும் நிகழ்ந்த முன்வந்ததோடு லோகோபகாரிகளாகவும் திகழ்ந்தனர். அரசாங்கத்திற்கோ நில வரிவசூல் செய்வது மிக எளிதாயிற்று; வரித் தொகையும் முன்னர்போல் பெருந்த † மாற்றங்களையில்லை. R. C. LL போன்ற சட்ட நூலறிஞர்கள் சாசுவத ஏற்பாடு ஒரு சிறந்த நல்வரமாகும் என்று அபிப்பிராயப் படுகின்றனர்; டட், அப்படிப்பட்ட சாசுவத ஏற்பாட்டையே—[சில மாறுதல்கள் செய்யினும்]—இந்த மாகாணங்களிலும் நிலவுமாறு செய்து, விவசாயிகளுக்குப் பெருந்த நன்மையை யுண்டாக்க வேண்டுமெனத் தீவிரமாக அறுதியிட்டுக் கூறுகின்றனர்‡.

**அதனால் ஏற்படும் நன்மைகள்**

இதற்கு மாறுக, சாசுவத ஏற்பாட்டை எதிர்ப்போர் மேற்கூறிய நன்மைகளிற் பெரும்பாலன § நிர்ணயகாலம் வரையில் செய்துகொள்ளும் ஏற்பாட்டுமுறையிலேயும் காணக் கிடக்கின்றன என்கின்றனர். மேலும் அவர்கள், நிலத்தின் விளைபொருள்களுக்கு மிக்க விலை யேற்பட்டதால் ஜமீன்தார்கள் பெருத்த இலாபமடைந்தனரென்றும், விவசாயிகள் வருந்தினரென்றும், கூறினர். விவசாயிகளது குத்தகைகளை அவர்களுக்கு

---

* 1798-இல், நிலவரி இங்கிலாந்தில் சாசுவதமாக்கப்பட்டது; நிலச் சொந்தக்காரர்கள் மொத்தமாக ஒரு தொகையைச் செலுத்தி இந்த நிலவரியிலிருந்து விமோசனம் பெறலாம்.

† Fluctuation. § Periodic Settlements.

‡ அவரது 'இந்தியாவில் பஞ்சங்கள்' (1900) என்ற நூலைப்பார்க்கவும்: அதனில் அவர் சாசுவத நிலவரி ஏற்பாட்டினால் மூலதனம் சேருமென்றும், நிலச்சொந்தக்காரர்கள் பயிரிடுவோர் இவர்களது நிலைமை ஒரு சேர முன்னேறுமென்றும், விளைபொருளதிகரித்து வரட்சியேற்பட்டகாலத்திலும் அவர்கள் தாங்கி நிற்பரென்றும் கூறியுள்ளார். (முகவுரை பக்கம் 12) R. B. Ramsbotham-Studies in the Revenue History of Bengal (1769-87) என்ற நூலையும் பார்க்கவும்.

ஷிடாமல் தாமே வைத்துக்கொண்டனர். அவர்களது வரித்தொகையைப் பல காரணங்களே யேறிட்டு அதிகப்படுத்தினர். இன்னும் அவர்கள் பல புதிய தேவைகளுக்காகப் பணங்கொடுக்கவும் நேர்ந்தது. அரசாங்கம் தொடர்ச்சியான பல *நிலவாரச் சட்டங்களால் விவசாயிகளுக்கு அவர்களது பழைய நிலங்களில் சொந்த உரிமையளிக்க முயன்றது. மற்றும் அவர்களை அக்கிரமமாக நீக்கப்படுதலினின்றும், அவர்கள் விஷயங்களில் அக்கிரமமாகத் தலையிடுதலினின்றும் காப்பாற்றியது. நிலவாரத்தை மிருகிப்படுத்தாதபடி பாதுகாப்பும் செய்தது. உதாரணமாக (1859-1868-ஆம் ஆண்டுகளைச்சேர்ந்த நிலவாரச் சட்டங்களையும் 1885-ஐச் சேர்ந்த †குடிவாரச்சட்டத்தையும் பார்க்கவும்.) மற்றும், 1793-ஆம் ஆண்டு ஏற்பாட்டால், வெறுமனே நிலவரி வசூலிக்கும் வாரக்காரர்களாயிருந்த ஜமீன்தார்கள் நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாய் மாறிவிட்டார்கள் என்றும், தொன்றுதொட்டு வந்துள்ள விவசாயிகள் வெறும் பயிரிடுவோராகித் தாழ்நிலையெய்தினரென்றும் சிலர் கூறினர். ஜமீன்தார்கள் செலுத்தவேண்டிய தொகை, 1789-ஆம் ஆண்டில் அவர்கள்மேல் விதித்த நிலவாரவிகிதங்களை அடிப்படையாகக்கொண்டது அவ்விகிதங்கள் "வருங்காலத்து ஏற்படலாகும் நில் விற்பனைவிலை மாற்றத்தையும், வருடாந்தர விளைபொருள்களின் மாற்றத்தையும் கணக்கிலெடுத்துக்கொள்ளாமலேயே ஒரு நிலைத்த பணத்தொகையாக" விதிக்கப்பட்டன. இதனால், நிலவருமானம் விலையேற்றத்திற்கேற்பவும், அரசாங்கத்தின் தேவைகளினேற்றத்திற்கேற்பவும், வளர்ந்துவராது தடைப்பட்டது, எனவே அரசாங்கம் இப் பணக் குறையை நீக்க ஆட்சேபனைக்குரிய புதிய வழிகளின் மூலம் வரிகளை வசூலிக்க முற்பட்டது. அரசாங்கச் சார்பினராயுள்ளோர் சாசுவத ஏற்பாடு வங்காளத்தில் பஞ்சம் ஏற்படாதவாறு விலக்கவில்லையென்றும், மேன்மேலும் அப்பஞ்சமேற்பட்டுத் தீமைவிளைக்காவாறும் பாதுகாப்பளிக்கவில்லையென்றும் கூறிப் பின் நிலவாரச் சட்டங்களில்லையேல், குடியானவர்கள் தற்போதைய நிலையைக் காட்டிலும் மிக்க தாழ்நிலையையடைந்து வருந்தியிருப்பரெனவும் எடுத்துக்காட்டினர்.‡

**அதனுலேற்படு மென்று கூறிய தீமைகளும் குறைபாடுகளும்**

1793-ஆம் ஆண்டைய ஏற்பாடு மூன்று நோக்கங்களைக்கொண்டது. (1) குறைந்தபட்சம் நிரந்தரமான நிலவரிகளைக் காலந்தவருமல் வசூலித்துப் பெறுதல் (2) விவசாயத்தைப் பரவச் செய்தல் (3) விவசாயத்தை அபிவிருத்தி செய்து மூன்றேறச் செய்தல். சிலர் இந்த மூன்று நோக்கங்களில் ஒன்றேனும் இச்சாசுவத ஏற்பாட்டால் தோன்றவில்லையென அபிப்பிராயப்படுகின்றனர். ஜனத்தொகை அதிகரித்தால், விவசாயம் தானே பரவுகிறதேயன்றி இத்தகைய ஏற்பாட்டினுல் அது பரவுவதொன்றன்று. இந்த ஏற்பாடு தொடங்கி மூப்பதாண்டுகள் வரை காலந்தவருமல் வசூலிக்கும் முறைமை செவ்வனே கடைபெறவில்லை. வரிசெலுத்தாமைக்காகப் பல ஜன்மிகிகள் பலவந்தமாக விற்கவும் பட்டன. விவசாய முன்னேற்றமும்

* Rent Laws. † Tenancy Act.

‡ Land Revenue Policy of the Indian Government, 1902 pp. 6-7.




சுமார் கி. பி. 1792-இல் ஆங்கில ராஜ்யத்தைக் காட்டும்

**இந்தியா படம்**

இந்த ஏற்பாட்டினால் தோன்றிய விளைவு அன்று.* இப்படிப்பட்ட கண்டனங்களேற்பட்டபோதினும், 1793-ஆம் ஆண்டுச் சட்டம் மொத்தத்தில் சிறந்ததாகக் கருதப்பட்டது. அதனால் பல நன்மைகளும் உண்டாயின.†

**பட்டயத்தைப் புதுப்பித்தல் (1793)**

காரன்வாலிஸ் இந்தியாவை விட்டுப் போவதற்கு முன்னரேயே பார்லிமென்ட் 1793-இல், பட்டயச் சட்டத்தைத் தோற்றுவித்தது. அதனால் கம்பெனியின் சாஸனம் மீண்டும் இருபது வருஷங்களுக்குப் புதுப்பிக்கப்பட்டது. 1788-இல் மற்றொரு சட்டம் உண்டாயது. அதனால், மன்னர்க்கு ஆங்கிலக் கம்பெனிமேலிருந்த அதிகாரம் உறுதியாயிற்று. டைரக்டர்கள் ஆண்டுதோறும் பார்லிமென்டிற்குமுன் கம்பெனியினது வரவு செலவுக் கணக்கை ஒப்படைக்கவேண்டும். போர்ட் ஆவ் கன்ட்ரோலுக்கு ஆங்கிலத் துருப்புக்களை இந்தியாவுக்கு அனுப்ப உரிமையுண்டு. அவைகளின் செலவைக் கம்பெனி ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்நடவடிக்கை இந்தியாவிலுள்ள துருப்புக்களனைத்தையும்‡ மன்னர் சேனைப் படைகளாக மாற்றுதற்குச் செய்த முதல் முயற்சியெனலாம்.

**அதன் அம்சங்கள்**

இப்போதுதான் ஆங்கில வியாபாரிகள், கம்பெனியின் கீழ்நிசை வியாபாரத் தனிவுரிமையை நீட்டித்ததற்காகவும், ஆங்கிலேயரை அதில் பங்கெடுத்துக்கொள்ளாதபடி விலக்கியதற்காகவும், தீவிரமாக எதிர்த்து நின்றனர். ஆனால், மந்திரிச் சபையினர் இம்மாறுதலை நிராகரித்தனர். ஏனெனில், இந்திய வியாபாரத்தில் எல்லோரும் பங்கெடுத்துக்கொண்டால் கம்பெனியின் இலாபங்கள் குறைந்து போய், கடனைத் தீர்ப்பதற்குத் தடையேற்படும்: மேலும், இந்தியாவில் பெருவாரியாக ஆங்கிலேயர் குடியேறிவிடுவரென்றும், அப்போது இங்கிலாந்து அமெரிக்காவை இழந்தது போல் இதனையுமிழக்க நேரிடுமென்றும் அவர்கள் அஞ்சினர். எனினும், ஆண்டு தோறும் இந்தியாவோடு சிறிது வியாபாரஞ் செய்வதற்கு ஆங்கியேயர்க்குப் பட்டயச் சட்டத்தில் சலுகைகாட்டப்பட்டிருந்தது. ஆனால் பாதிரிமார்கள் அனுமதியின்றி இந்தியாவுக்குப் போகக்கூடாது; ஏனெனில், அவர்களது பிரசங்கங்களால் மக்களிடையே புரட்சியேற்பட்டாலும் ஏற்படலாமென அஞ்சினர். இங்ஙனமாக, பட்டயச் சட்டமானது அக்கால ஆங்கிலேயரின் குறுகிய நோக்கங்களைத் தெரிப்பதாகும். இந்திய அரசாங்க முறைமையில் செய்த மாறுதல்கள் மிகச் சிறியவே. கவர்னர்-ஜெனரலுக்குள்ள சபையை மீறும் அதிகாரம் வற்புறுத்தப்பட்டது. அதேமாதிரியான அதிகாரங்கள் சென்னை பம்பாய் கவர்னர்களுக்கும் கொடுக்கப்பட்டன.

---

* Chaudhuri's History and Economics of the Land System in Bengal, p 34.

† மார்ஷ்மன் என்பவர், ஆங்கில அரசாங்கம் இந்தியாவில் நிலைபெற்றது முதல் இது வரை மேற்கொண்ட அதி முக்கியமான பரவிய சட்டம் இதொன்றேயெனக் கூறியுள்ளார். 4th ed. Part-I of his History, p. 479.

‡ King's forces.

## பகுதி 4 : ஸர்ஜான்ஷோரின் அரசியல் முறைமை—*மராட்டியத் தலைவர்களின் கூட்டுறவு (1793—98)

புது கவர்னர்-ஜெனரலாகிய ஸர்ஜான்ஷோர் கம்பெனியில் சேவை புரிந்தோரில் கியாதிபெற்றவர். 1793-ஆம் ஆண்டைய சாசுவத நிலவரி ஏற்பாட்டுக்குக் காரண பூதர்களில் இவருமொருவர். பிட்டும் டன்டாஸும் அவரது கபடமின்மையையும் சுறுசுறுப்பையும் பேரறிவையும் கண்டு அவரைப் பெரிதும் மதித்தனர். இங்கிலாந்திலிருந்து வந்த பிரபுவுக்கே கவர்னர்-ஜெனரல் பதவி கொடுக்கப்படல் வேண்டுமென்ற கோட்பாட்டை யுடைய காரன்வாலிஸே ஷோர் விஷயத்தில் பணிந்து காட்டச் சித்தமாயிருந்தார்.

**ஸர்ஜான்ஷோர் கவர்னர் ஜெனரலாதல் (1793-98)**

முதன்முதல் ஷோர் மராட்டியர்க்கும் நிஜாமுக்கும் நடந்துவந்த ஓயாப் போரைப்பற்றிக் கவனிக்க நேரிட்டது. நாம் மகத்ஜி ஸிந்தியாவினதிகாரம் ஸால்பாய் உடன்படிக்கை தொடங்கி மிகவும் மேலோங்க லாயிற்றெனக் கண்டோம். அரசியற் றுறையில் அவர்கொண்ட செல்வாக்குக் கேற்ப அவரது ராணுவபலமும் ஒருசேர அதிகரித்துவந்தது; அவர் புகழ்பெற்ற வீரனகிய **கவன்ட் டுபாயின்** என்பவனையும் இதர ஐரோப் பிய துணிவுள்ளாரையும் தம் கீழ் சேவகத்தி லமைத்துத் தம் காலாட் படைக்கு நற்பயிற்சியளித்து, ஐரோப்பிய முறைகளில் பயிற்சியும் தருதி யும் கொண்ட ஒரு சேனையைத் திரட்டிவைத்தார். அவர் டில்லிமேல் அதிகாரம் பெற்று, முகலாய சாம்ராஜ்யத்தின் பிரதிநிதிப் பட்டமும் வகித்தார்; அவர் யமுனையாற்றிடைப் பிரதேசத்தையும் (தோ-ஆப்), ஆக்ரா, அலிகார் ஜகமங்களையும் தம் வசப்படுத்தினர். மகத்ஜி ஸிந்துஸ்தானத்தில் வகிக்கும் பேரதிகாரம் கண்டு நானபட்னவிஸ் சமுசயமுற்று அவரிடம் இரகசியமாகப் பகை பாராட்டினர். ஒரு சமயம், இளவயதுள்ள பேஷ்வா மாதவராவ் II — ஐப் பதவியினின்று நீக்கி, காலஞ்சென்ற ரகுநாதராவின் மகனகிய பாஜிராவ் என்பவனைப் பேஷ்வாவாக்கச் சதியொன்று ஏற்பட, அதனை நானபட்னவிஸ் அடக்க நேரிட்டது; அவர் இச்சதி ஸிந்தியாவால் தூண்டப்பட்டு ஏற்பட்டதாகுமெனச் சந்தேகித் தார். (1785).

**மகத்ஜி ஸிந்தியா வின் அதிகார வளர்ச்சி**

**நானபட்னவிஸோடு மகத்ஜி விரோதம் கொள்ளல்**

இப்படியிருக்க, விரைவில், பேஷ்வாவுக்கும் நிப்புசுல்தானுக்கும் போர் மூண்டது; இப்போரில் காரன்வாலிஸ், தமக்குமுன் பதவி வகித்தவர் வாக்களித்தபடி மராட்டியர்க்கு உதவிபுரியத் தாம் மறுத்தன ரென்பதை முன்னர்க் கண்டோம். போர் சிலகாலவரை நிகழ்ந்தது. கடைசியில் ஒரு சமா தானத்தால் முடிவுற்றது; அது பெரும்பாலும் மராட்டியர்க்கு நன்மை விளைப்பதாகவே முடிந்தது. (1787).

**மராட்டியர் நிப்பு வோடு இட்ட போர் (1786—87)**

---

* The Maratha Confederacy.

இங்ஙனுக, மகத்ஜி ஸிந்தியா கஷ்டங்களுக் குள்ளாயினர் ; பெருத்த தம் சேனையின் பராமரிப்புக்காக அவர்க்குப் பணம் தேவையா யிருந்தது.

**டில்லியில் குழப்பம் (1788)**

ராஜபுத்திர அரசர்களைக் கப்பம் கேட்டபோது அவர்கள் மறுத்தனர் ; டில்லியிலோ கட்சிச் சண்டைகள் தீவிரமாகத் தொடங்கின. மகத்ஜியின் படைகள் ராஜபுத்திர—முகலாயத் துருப்புக்களால் ஜயபுரியிலிருந்து துரத்தப் பட்டன ; அத்துருப்புக்களுக்குத் தலைமை வகித்தவர், முகம்மதுபேக் ஆன்பவரும் • இஸ்மெயில்பேக் ஸென்ற அவரது மருகனுமாவர். இதற்குப் பின்பு, திறமைமிக்க குலாம் காதர் என்ற இளைய சொஹில்லத் தலைவன் பலங்குன்றிய முகலாயச் சக்கரவர்த்தியினிட மிருந்து அமிர்-உல்-உமாரா என்ற பட்டத்தைப் பெற்று, இஸ்மெயில் பேக்கின் உதவியால் 1788-இல் டில்லியையும் அலிகாரையும் வசப்படுத்திச் சக்கரவர்த்தினிபாண்மனை யைக் கொள்ளையிட்டுச் சக்கரவர்த்தியையும் அவரது குடும்பத்தினரையும் கொடுமையாக நடத்தினான். [இந்தக் குலாம் காதர் ஷூபிடாகானின் மகனவன்]. ஆனால் காதரின் துரதிர்ஷ்ட மிருந்தபடி என்னே ! இஸ்மெயில்பேக் அவனை விட்டுப் பிரிந்தான் ; நானுபட்னவிஸ், மீண்டும் டில்லியில் முகம்மதிய அதிகாரம் தலை தூக்குவது கண்டஞ்சி ஸிந்தியாவுக்கு வலிய உதவிப் படைக ளனுப்பினர். ஸிந்தியா, டில்லியைத் திரும்ப மீட்டுக் குலாம் காதரைச் சிறைபிடித்துக் கொலைசெய்து பழிக்குப் பழி வாங்கியபின், குருட்டு ஷா ஆலத்தை மீண்டும் அரியாசன மேற்றினர் (1789). இங்கு இங்ஙனுக, இஸ்மெயில் பேக் ராஜபுதனத்திலிருந்து துரத்தப்பட்டான் ; அவனது ராஜபுத்திர நேசர்களும் 1790-இல் தாழ்நிலை யடைந்தனர்.

**ஸிந்தியா தம் பகை வர்மேல் பெற்ற வெற்றிகள்**

இப்போது ஸிந்தியாவின் சேனையே சர்வ வல்லமை யும் பெற்றது ; அது, டுபாயினல் நன்கு பயிற்றப் பட்டுள்ளது. இந்த டுபாயின் அக்கால இந்தியாவில் நிகிலவழுவாத நிறமைமிக்க வீரர்களுள் ஒருவனுவன்; அவனுக்கு அறிவிபற்பட்ட போர்முறையின் தத்துவங்கள் தெரியும் ; அவை களை இந்திய மக்களுக்கும் நிலைமைக்கும் ஏற்ப உபயோகிக்கும் நிறமும் அவனுக்கு நன்கு தெரியும்.* டுபாயின் தன் கீழுள்ள சேனைகளுக்கு ஐரோப்பிய மாதிரியில் முஸ்திபு அளித்துத் தகுதியுடையோரையே படை

**டுபாயினும் அவனது செயலும்**

களிற் சேர்த்து, அவர்களுக்கு ஐரோப்பிய ராணுவ உத்தியோகஸ்தர்களையும் ஐரோப்பிய பெடிப்படை வல்லுநரையும் கொண்டு பயிற்சியளித்தான்: மற்றும் அவன், பிரங்கிகள் பிரயோகிக்கவல்ல ஒரு படையையும், தொடர்ச்சியாக முற்றுகையிடத்தக்க ஒரு படையையும், குதிரைப்படைக்கு இன்றி யமையாக் காவலாக ஓர் உதவிப்படையையும் விழுமிய முறையில் எழுப்ப முயன்றுன். அவனது 'புதுமாதிரிப்படை'†யால் ஸிந்தியா, ராஜபுத்திரர்கள் ஜாட்டுக்கள் முகலாயர்கள் முதலிய அனைவர்மேலும் ஒருசேரத் தன் பேரதி காரத்தை நிலைநிறுத்த இயன்றது ; மேலும், இந்தூர் ராணியாகிய அகல்யா

---

* Keene : Madhava Rau Sindhia (Rulers of India), p. 148.

† டுபாயின் தளகர்த்தனும் அரசிய லதிகாரியாயும் செய்த செயல்களின் விவரங் களை யறிய, ஜேன் எழுதிய 'Hindustan under Freelances' (1770—1820) என்ற புத்தகத் தின் அத்தியாயம் 5—பார்க்கவும்.

**பாயின்** தளகர்த்தனை **துகோஜி ஹொல்கரின்** பகையையும் ஒழிக்க முடிந்தது; இந்தத் துகோஜி வெளிப்படையாகப் பகை பாராட்டிப் போர்க்கு வர, டுபாயின் விரைவில் ஆஜ்மீருக்கருகே அவனைத் தோற்கடித்தான்: (இப் போரில், டட்ரினெக் என்ற ஐரோப்பிய வீரன் உதவினன்.) துகோஜி தோல்வியுற்றதால், ஸிந்தியா வட இந்தியாவில் அசைக்கலாகாத பேரதிகார நிலையைப் பொருந்தினார். அவர் நிப்புவுக் கெதிராக ஆங்கிலேயரோடு சேர்ந்துகொள்ள இணங்கினார்; ஒரு கர்ல் நானுபட்னவிஸையே தொலைத்து மராட்டியத் தலைவர்களின் கூட்டுறவுக்குந் தானே தனிப்பெருந் தலைவராக நினைந்தனர் போலும்.

**பூனாவில் ஸிந்தியா (1792—4)**

ஸிந்தியா இஸ்மெயில்பேக்மேல் வெற்றிபெற்ற சின்னட்கவில், பலமற்ற சக்கரவர்த்தியிடமிருந்து பேஷ்வாவை வகீலேமுத்லக் பதவியிலும் தம்மை அவ்வகீலின் உதவியாளர் பதவியிலும் பரம்பரையாக உறுதிப்படுத்துமாறு அதிகாரப் பத்திரங்கள் பெற்றார். பின்பு அவர் சிறிதேனும் அச்சம் விளக்காது பலத்த படையுடன் பூனாவின்மேற் சென்றார்; இது துகோஜி தோல்வியடைதற்குச் சிறிது முன்பாகும். பேஷ்வாவின் கொலுச் சபையில் ஸிந்தியா மிக்க பணிவுடன் நடந்துகொண்டார்; தம் வமிசஸ்தாபகரான முன்னோன் ஒரு *கிராமத் தலைவனுமிருந்து பேஷ்வாவின் பாதுகையைத் தாங்கும் பாரம்பரிய உரிமைப்பெற்றுச் சேவகம் புரிந்து † பணிவு காட்டியது போலவே, இவரும் இப்போது நடந்துகொண்டார். நானுபட்னவிஸ் இதற்கெல்லாம் தம்மேல் சந்தேகங் கொண்டுள்ளா னென்பதையுணர்ந்து, அவர் நானுவோடு வெளிப்படையாகச் சண்டை யேற்படாவாறு ஜாக்கிரதையாக விலகிவந்தார். அவரது முக்கிய நோக்கம் இளம்பிராயத்தனைய பேஷ்வாவின் நம்பிக்கைக்குரியராகி, அவனை நானுபட்னவிஸின் ஆதரவின் கீழில்லாதவாறு சுயேச்சை யடையுமாறு தூண்டி ஹிந்துஸ்தானத்தில் தாமடைந்துள்ள பெருநிலையில் தம்மை உறுதிப்படுத்துமாறு செய்தலே யாகும். ஆனால் நானுபட்னவிஸினிடத்துப் பேஷ்வா வைத்த நம்பிக்கையை அசைப்பது எளிதன்று; நானுபட்னவிஸும் பேஷ்வாவுக்குப் பதிலாக, மகத்ஜி ஸெயித்து ஆண்டு வரும் ஜில்லாக்களின் வருமானங்களைப் பற்றிய கணக்குகளைக் காட்டவேண்டுமென்று வற்புறுத்தினர்; மற்றும் பேஷ்வா கேட்கும்போது ஹிந்துஸ்தான விவகாரங்களின் அதிகார முழுவதையும் மகத்ஜி கொடுத்துவிடவேண்டுமென்றார். துகோஜி ஹொல்கரின் தோல்வியைக்கேட்டு நானு கோபங் கொண்டார்; இருவருக்கும் சண்டை ஏற்படும் போலாயிற்று. இப்படியிருக்க, துகோஜியின் கலகம் ஏற்பட, பூனாவை விட்டு ஸிந்தியா போய்விடுவானென நானு எண்ணினர்; ஆனால், ஹொல்கர் டுபாயினிடம் அடைந்த தோல்வியால் தற்சமயம் வலிகுன்றிக் கிடந்தார். எவ்வகையிலோ போர் ஏற்படவில்லை. ஒருகால், மகத்ஜி துகோஜியை

**அவரது நோக்கங்கள்**

**அவரது மரணம் (1784)**

---

* Village Patel.

† ஸர் ஜான்மால்கோம் 'மகத்ஜி தன்னை ஊழியன் என்று சொல்லிக்கொண்டே அரசனுய் விட்டார்' என்பதற்குச் சான்று பகருகிறார்—Central India, Vol. I, p. 125.

வசீயப்படுத்தியிருப்பார்.† அவர்கொண்ட நோக்கங்கள் பழுதுபடுமாறு திடீரென கூற்றுவன் உயிர் கவர்ந்தான் (பிப்ரவரி 1794) ஸிந்தியா பூனுவொடு தாம்கொண்ட சம்பந்தத்தை அடியோடு ஒழிப்பதற்கு எங்காளும் எண்ணவில்லை ; அங்ஙனம் செய்ய விரும்பின் எளிதில் செய்திருக்கலாம். "அவரது அதிகாரத்திற்கு அடிப்படை பேஷ்வாவின் இராஜ்ஜியத்திலே வேரூன்றிக் கிடந்தது. ஸிந்தியா ஹிந்துஸ்தானத்தை ஆண்டது இந்த இராஜ்ஜியத்தின் ஒரு கிளைப்பகுதியேயாகும்."** "ஸிந்தியா பணிவது போல் வெளிக்காட்டியே உண்மையில், தம் அதிகாரத்தைச் சம்பாதித்தார் ; இப்படிப் பணிவு வெளிக்காட்டியபோதும், தாம் கொண்ட நோக்கத்தை மறந்தாரல்லர். அவரது பரிவாரங்கள் அவருக்குச் "சிரத்தையோடும் விசுவாசத்தோடும் தொழில் புரிந்து வந்தன. டுபாயின் மகனர் எழுதியுள்ள *'கவுன்ட் டுபாயின் வரலாற்றி'ல் ஸிந்தியாவின் நற்குணங்களும் கடைப்பிடியும், நன்றியறிவும் தெரியக் கூறப்பட்டுள்ளன. அவருக்குப் பிறகு, அவர் சகோதரனுடைய பேரன் தௌலத்ராவ் ஸிந்தியா பட்டத்துக்கு வந்தான் ; அவனுக்கு ஹொல்கரும் இதர மராட்டியத் தலைவர்களும் உதவி புரியினும், அவன் பல கஷ்டங்களில் சிக்கிக்கொண்டான்.

தௌலத் ராவ் ஸிந்தியா அரியணை யேறல்

இக்கால இந்தியாவில் நிலவிய அரசுத்துறை முறையில் மராட்டியக் கூட்டுறவின் நிலை மிக விபரீதமானது. பேஷ்வா நானுபட்னவிஸின் ஆதரவிலொடுங்கிக் கிடந்தார் ; கூட்டுறவின் இதரக் கிழ்தரத் தலைவர்களோ, பேஷ்வா அதிகாரத்தைமீறிச் சுதந்திர மடைந்தனர் ; முதல் மராட்டிய யுத்தத்தில் ஆங்கிலேயர்க்கு உதவிய பேரார் அரசனுகிய முதாஜி போன்ஸ்லே 1788-இல் இறந்துபோனர் ; அவரது மகன் ரகுஜீ, சிறிது இடையூறுகளுக்காளாகிப் பின்பு, பேஷ்வாவினிடமிருந்து அரசு பெற்றான் ; எனினும், அவன் பூனு அரசியல் விவகாரங்களில் பெரும் பாலும் தலையிடவில்லை. ஆங்கிலேயரோடு முன்னர் சமாதானஞ் செய்து கொண்ட கெயிக்வாரின் ராஜ்யமும் 1789-இல் அதன் ரீஜெண்ட் (அரசின் பதிலோன்) டாகிய படே சிங் இறந்தபோது குழப்பமடைந்தது. ரீஜெண்டின் சகோதரனுகிய கோவிந்தராவ் தன் விரோதி யொருவனோடு சண்டையிட நேர்ந்தது ; அவனுக்கு மஹத்ஜி ஸிந்தியா உதவி புரிந்தார் ; 1793-இல் ஆங்கிலேயரது மத்தியஸ்தத்தினல்தான் கோவிந்தராவ் பேஷ்வாவினிட

மராட்டியக் கூட்டுற வின் விபரீத நிலைமை—பான் ஸ்லே, கெயிக்வார், ஹொல்கர்

† See p. 89 of Macdonald's Memoir of the Life of the late Nana Phadnavis (1851) edited by H. G. Rawlinson (1927). For a contrast of the aims and character of the Sindia and Nana Phadnavis see G. S. Sardesai's Main currents of Maratha History, Lecture V.

* தன் எழுதிய 'மாதவராவ் ஸிந்தியா' என்ற புத்தகத்தின் பக். 184 பார்க்கவும் : மஹத்ஜி தந்திரமாக பூனுவில் அரசியற் சமனிலையை நிறுத்த முயன்றுகொண்டே, ஹிந்துஸ்தானத்தில் தளரச ஓக்கத்தோடு போரிட்டு ஆள முயற்சித்தார் ; மேலும், அவர் நானுவைச் சார்ந்திருப்பவராயும், ஹொல்கரின் மதிப்புக்குரியராயும் ஆங்கிலேயரொடு கொண்ட நட்பினைப் போற்றுபவராயும் வெளிக்காட்டினர்." மற்றும் "அவர் பேஷ்வாவிடத்துச் செய்ய வேண்டிய ராஜவிசுவாசத்தைச் சிறிதேனும் தவிர்ந்தவரல்லர் : பேஷ்வா பதவிக்காக ஏற்பட்ட சண்டைகளில் அவர் கலந்து கொள்ளவில்லை ; ஆங்கிலேயர் போரிட்ட விரும்பிய காலத்தும் அவர்களோ அவர் எதிர்க்கவில்லை ; அவர் எஞ்ஞான்றும் ஹொல்கரைச் செயல்தளருமாறு செய்தாரல்லர்." பக்கம். 196.

* Memoire of Count de Boigne.

மிருந்து தன் பதவியேற்க அங்கீகாரம் பெற்றான். ஹொல்கரின் ராஜ்யமோ அதனையேற்படுத்திய மல்ஹர் ராவ் ஹொல்கரின் நாட்டுப் பெண்

**அகல்யா பாயும்**

ணிய **அகல்யா பாய்** (இவள் கணவன் இறந்து பட்டான்) என்பவளால் மிக்க திறமையுடன் சுமார் 30 ஆண்டுகள் (1766-95) ஆளப்பட்டு வந்தது; இவளுக்கு ஹொல்கரினத்தைச் சேர்ந்த **துகோஜி** என்ற தளகர்த்தன் பேருதவி புரிந்தான். இவன் அரச குடும்பத்தைச் சார்ந்தவனல்லன். அகல்யாபாயின் உள்நாட்டு அரசியல் முறைமை நீதி வழுவாது நன்மை பயந்தது; தன் குடிமக்களைத் தாய்போல் ஆதரித்தாள்: ஹொல்கர் வமிச வரலாற்றில் அவளது

**துகோஜி ஹொல்கரும்**

ஆட்சியே விளக்க மெய்தி நிற்பதாகலின், அதனைக் கூறாது விடுத்தல் தக்கதன்று.* துகோஜி, நாட்டுக்குத் தலைவனையும், சேனைத் தலைவனையும் அவளால் ஆக்கப்பட்டான்; எஞ்ஞான்றும் அவளிடத்துப் பணிவு காட்டி யொழுகி வந்தான். அவன் மாளவத்தின் புறத்திலுள்ள பிரதேசங்களிலிருந்து வரிகளையும் கப்பங்களையும் வருவித்தான்; அப்பிரதேசங்கள் அகல்யாபாயின் ஆளுகைக்கு நேராக உட்பட்டனவாம். இருதலைப்பட்ட இவ்வதிகாரம் ஹொல்கர் ராஜ்யத்தில் யாதொரு இடையூறுமின்றி, ராணி 1795-இல்

**துகோஜியின் மரணம் (1797)**

இறக்கும் வரையில் நிலவி வந்தது. அவளுக்குப் பின், வயது முதிர்ந்த துகோஜி முழு அதிகாரத்துடன் பதவிக்கு வந்தான்; ஆனால், ஈராண்டுகள் கழிந்த பின்னர், அவன் மரணமடைந்தான். அவனிறந்தவுடன் சண்டைகளேற் பட்டு நாடு பாழாயிற்று. துகோஜியின் புதல்வர் பட்டவுரிமைக்கிட்ட சண்டையில் தௌலத்ராவ் ஸிந்தியா தலையிட்டுக் கொஞ்சகாலம் வரை இந்தூர் ராஜ்யத்துக்குச் சர்வாதிகாரியாக ஆயினன்.

மஹத்ஜி ஸிந்தியா இறந்ததனால், நானாபட்னவிஸுக்கு விரோதியொரு வருமில்லையாயினர்: இப்போது பேஷ்வா முற்றிலும் அவரதீனத்திலாய் விட்டான்: அவர், வெளி நாட்டுச் சண்டை யொன்றைப் பயன்படுத்தி அதன் மூலம் தம் பேரதிகாரத்தை மிக வோங்கச் செய்ய முயன்றார். இது

**நிஜாமோடு போரிடல்**

வரையில், பரஸ்பர வெறுப்பும் கபட சூழ்ச்சிகளும், மராட்டியக் கூட்டுறவுத் தலைவர்களை ஒன்று சேர்ந்து எதிரிகளைத் தாக்காதவாறு விலக்கி வந்தது. ஆனால், இப்போது பேஷ்வா நிஜாமைத் தமக்குச் சேரவேண்டிய சௌத், சர்தேஷ்முகியின் பாக்கித் தொகைகளைக் கொடுக்கும்படி மீண்டும் உரிமையுடன் கேட்டபோது, எல்லா மராட்டியத் தலைவர்களுக்கும் அத்தொகையில் பங்குண்டாதலின் ஒன்று சேர்ந்தனர். நிஜாம் ஒரு முடிவுக்கு வரத் தாமதஞ் செய்தான்; அவன் தன்னிடமுள்ள நன்கு பயின்ற படைகளைப் பெருக்கிப் போருக்கு ஆயத்தமாகும்படி †**பிராங்காய்**

---

* ராணியைப் பற்றிய வரலாறும், அவளது குணச்சிறப்பும், ஆட்சிச் சிறப்பும் அறிவதற்கு ஸர். ஜான்மால்கோம் எழுதியுள்ள 'Memoir of Central India' (1824) Vol. I பக்கம் 151 முதல் பார்க்கவும். மால்கோம், உள்நாட்டு அரசியல் நிர்வாக முறையில் அவளடைந்த வெற்றியின் பெருமை "முற்றிலும் வியக்கத் தகுந்தது" எனக் கூறுகிறார். See also Mr. M. Burway's Life of Ahalya Bai Holkar.

† Francois de Raymond.

டி ரேய்மண்ட் என்ற ஒரு பிரெஞ்சு உத்தியோகஸ்தனை நியமித்தான். ரெய்மண்ட பயிற்றிய தேர்ந்த படைகளால் நிஜாம்அலி மராட்டியரை எளிதில் வெல்லலாமென எண்ணினன்; அவன், அவர்களே போர்க்கு வருமாறு கோபமூட்டி, பீடாரில் தன் சேனையைத் திரட்டி, பூனைவையே கொள்ளையிடுவதாகப் பகிரங்கமாகக் கூறினன். நானா பட்னவிஸுக்கு உதவியாக, தௌலத் ராவ் ஸிந்தியா, துகோஜி ஹொல்கர், ரகுஜி பான்ஸ்லே, கோவிந்த ராவ் கெய்க்வார் மற்றும் ஏனைய தலைவர்களும் இவர்களது படைகளும் வந்தனர்; மற்றும், 130,000க்கு மேற்பட்ட மராட்டியக் குதிரைப் படையும் காலாட்படையும் கலந்து கொண்டன. அம்மட்டோ! மராட்டியச் சேனைகளை யொட்டி வாழ்ந்த பிண்டாரிகள் எனப்படும் முரட்டுக் குதிரை வீரர்களும் சேர்ந்தனர். இப்பெரும் மராட்டியப் படை நிஜாம் ராஜ்யத்தினெல்லையிலுள்ள அஹமத் நகரினருகே கர்டா என்ற விடத்தில் நிஜாமை எதிர்த்தது.

**மராட்டியக் கூட்டுறவுத் தலைவர் ஒருசேர இட்ட இருநிபேர்.**

**கர்டா சண்டை.**

நிஜாம் 1790-ஆம் ஆண்டு உடன்படிக்கையின் நிபந்தனைப்படி ஸர்ஜான்ஷோரின் உதவியை நாடி ஒரு விண்ணப்பமிட்டான். ஆனால், கவர்னர்-ஜெனரல் நொதுமலாயிருக்கத் தீர்மானித்தார்; அவர் மராட்டியர்க்குத் தீங்கு விளைக்க விரும்பவில்லை; எனெனில், அதனால் ஒரு பெரிய போர் ஏற்பட, பொக்கிஷம் வரண்டு போகும். மேலும், அவர், பார்லிமெண்ட் சட்டங்களைச் செவ்வனே தழுவி யொழுக முயன்றார்; அச் சட்டங்கள் சுதேச மன்னர்களோடு செய்து கொள்ளும் உடன்படிக்கைகளை விலக்குகின்றன; அவர், 'பழைய இரு கண்பருள் ஒருவருக்கெதிராக மற்றொருவருக்கு உதவுவது நியாய விரோதமாகும்' என நிஜாமுக்குக் கூறினார். ஆனால், நிஜாம், 1790-இல் நடந்த உடன்படிக்கையில் தான் கலந்து கொண்டதற்கு, "ஆங்கில அரசாங்கத்தினிடத்துத் தான் வைத்த நம்பிக்கையே யன்றி மராட்டியரது துரோகம் காரணமல்ல" என வாதித்து ஷோர் சொன்னதை யேற்க மறுத்தான். இப்படியிருக்க, கவர்னர்-ஜெனரலது மெலிவு கண்ட நானாபட்னவிஸ் தன்னைச் சித்தப்படுத்திக் கொள்ள விரைந்தான். 1789-இல் திப்புவுக்கெதிராகத் திருவாங்கூர் அரசனுக்கு ஆங்கிலேயர் உதவிய தாலடைந்த புகழ், இப்போது ஷோர் *தகுதி கருதியும் சிக்கனம் கருதியும் மேற்கொண்ட முனைமையால் மறைந்து போயிற்று.

**ஷோர் நிஜாமுக்கு உதவி புரிய மறுத்தல்**

**அதனுறேற்பட்ட வினைவு**

மராட்டியத் தலைவர்கள் எளிதில் வெற்றியுற்றனர். பேஷ்வாவின் கீழ் அவர்கள் ஒன்று சேர்ந்து சண்டை செய்ததில் இதுவே கடைசி முறையாகும். ரெய்மண்டின் கன்னு பயிற்றப்பட்ட துருப்புக்களுக்கும், † பெரான் கீழமைத்த ஸிந்தியாவின் துருப்புக்களுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. போர் ஒரு முடிவு அடைவதன் முன்னமேயே நிஜாம் அலி தன் படைகளுக்குத்

* On grounds of expediency and economy.
† Perron.

திரும்புமாறு கட்டளையிட்டான் : இதனால் நிஜாமின் படை தோற்ற படை போலாகியது. அவைகள் கர்டா கோட்டையில் முற்றுகையிடப்பட்டன : சின்னட்களில் அவைகள் ஒரு மானக்கேடான உடன்படிக்கையும் செய்து கொள்ள வேண்டியதாயிற்று. நானுபட்னவிஸ் தபதி நதி முதல் ‡ பரிந்தா கோட்டை வரையுள்ள பிரதேசமும், தௌலதாபாத் [தேவகிரி] கோட்டையும் மராட்டியர்க்குக் கொடுக்கப்படல் வேண்டுமென்றும்; யுத்த செலவிற் கிடாகவும் கப்ப பாக்கியாகவும் மூன்று கோடி ரூபாய் கொடுக்கப் படல் வேண்டுமென்றும்; ஒரு பெருந்த பணத் தொகையும் நிலங்களும் ரகுஜீ பான்ஸ்லேவுக்குக் கொடுக்கப் படல் வேண்டுமென்றும் வற்புறுத்தினர் (ஜனவரி, 1795).

**நிஜாம் தோல்வியடைதல்**

இந்த வெற்றியை மராட்டியர்கள் தாம் பெற்ற பெரு வெற்றிகளு ளொன்றாக மதித்தனர்; இதனாலேற்பட்ட பெருமை முற்றும் நானுபட்ன விஸைச் சேர்ந்ததாகும் : அவர், தற்போது இந்தியாவில் பிரபல பிரமுக ராயிருந்தார். நிஜாமோ, ஆங்கிலேயர் தம்மைத் துரோகமாக இந்நெருக்கடியில் தவிக்கக் கை விட்டது குறித்துப் பெரும் கோபம் கொண்டான் அவன், தன் கிழ்சேவைபுரிந்த ஆங்கிலப் படைகளை யெல்லாம் நீக்கிவிட்டு, அதற்குப் பதில் தன் கிழிருந்த பிரெஞ்சுப் படைகளை யதிகப்படுத்திச் சபையின் கண்ணும் ஒரு பாற் கோடி பிரெஞ்சுக்காரர்க்குப் பேராதரவு காட்டலாயினன்.

**அதனால் ராஜீயத் துறையிலேற்பட்ட விளைவுகள்**

மராட்டியர் நிஜாமை இன்னும் ஓடுக்கியிருப்பர் : ஆனால், பேஷ்வா வாகிய சிறுவன் திடீரென இறந்து போகவே அங்ஙன் செய்ய இயலவில்லை. பேஷ்வர் நானுபட்னவிஸின் போஷணையிலிருக்க வேண்டிய சங்கடத்தைப் பொருமல் ஆத்திரத்தால், பூனாவிலுள்ள தனது அரண்மனையின் மேல் உப்பரிகையிலிருந்து தானே கீழே விழுந்து மரண மடைந்தானெனப் பலரும் நம்பினர் (அக்டோபர், 1795). இச்சம்பவத்தால் நானுவின் மீங்கிய பெருமை கூம்பியது. மேலும், நானு, ரகுநாதராவின் மகனை பாஜிராவைச் சிறையி னின்று விடுவிப்பதற்கு மறுத்ததாலும், பேஷ்வாவின் வெறுப்புக்குப் பாத் திரரானார் : நானு பாஜிராவைச் சிறையிட்டதற்குக் காரணம் அவர் புரட்சி செய்வாரென்பதேயாகும். ஆனால் பேஷ்வா மாதவராவும் அவனது ஞாதியான பாஜிராவும் இரகசியமாகத் தங்களுக்குள் கடிதப் போக்கு வரவு நிகழ்த்திவந்தனர்; இது நானுவுக்குத் தெரியவர, அவருக்கும் பேஷ்வா சிறுவனுக்கும் கடு விவாதமேற்பட்டது. இதனால், பேஷ்வா அனுபவித்து வந்த ரோகம் முற்றியது; அவனது வீழ்ச்சியாலேற்பட்ட மரணம்* பின்னர்

**பேஷ்வா திடீரென மரணமடைதல்**

---

‡ Parinda.

* பேஷ்வா வேண்டுமென்றே உப்பரிகையிலிருந்து தன்னைக் கீழே விழத்திக்கொண் டான் என்று கிராண்ட் டவ் (Grant Duff) அபிப்பிராயப்படுகிறார்; ஆனால், பேஷ்வா புத்தி கலங்கிப்போய் அகஸ்மாத்தாய் விழுந்து விட்டானென்பதற்குப் பல அத்தாட்சிகள் உள; இச்சம்பவத்தைப் பற்றியறிய-Kincaid and Parasnis' A History of the Maratha People, Vol. III, pp. 178-179; and Khares' Life of Nana Phadnavis; and Macdonald's Memoir of the Life of the late Nana Phadnavis (edition of the Rawlinson) p. 103—பார்க்கவும்.

நிகழவிருக்கும் நானாவின் அதிகார வீழ்ச்சியை முன்னரே காட்டிச் சென்றது. மராட்டிய சரித்திர வரலாற்றில், இதனைக்காட்டிலும்—ஒருகால் அப்ஸல்கான் மரணம் நீங்கலாக—வேறெருரு சம்பவம் மிக்க வாதத்திற் குள்ளாகவில்லை.

இப்படியிருப்ப, பாஜிராவ், பேஷ்வா பதவிக்கு இருகாரணங்களை யேறிட்டுப் பாத்தியதை கொண்டாடினர். (i) இறந்த பேஷ்வாவுக்கு உறவினனென்பது (ii) இறந்த பேஷ்வா நமக்குரிப்பின் அவரையே பட்டத்துக்கு வரும்படி நியமித்தது. நானுபட்னவிஸுக்குப் பாஜிராவ் தம்மை வெறுக்கின்ருரென்பது தெரியும்: ஆதலின், நானு, அவரை விலக்க எண்ணி, மாதவராவின் மனைவியை ஒரு புத்திரனைச் சுவீகாரஞ் செய்து கொள்ளுமாறு செய்யச் சூழ்ச்சியிட்டார்: அதற்காக, தௌலத் ராவ் ஸிந்தியா, ரகுஜீ பான்ஸ்லே இவர்களது உதவியைப் பெற முயன்ருர். ஆனால், பாஜிராவோ ஸிந்தியா வையும் அவன் மந்திரியையும் தம் பக்கம் வசப் படுத்தி விட்டார். தௌலத் ராவின் நடவ டிக்கைகளின் போக்கை முன்னரே கணித்த நானு, தாமே பாஜிராவைச் சிறையினின்று விடுவித்துப் பேஷ்வாவாக அங்கீகரிக் கத்தீர்மானித்தார். பாஜிராவும் ஸிந்தியாவோடு நிகழ்த்தி வந்த பேச்சுக் களை நிறுத்தி, நானுவின் வழிப்பட்டார். நானு தாம் உதவி செய்வ தற்காகத் தம்மை முதல்மந்திரி ஸ்தானத்திலேயே இருக்குமாறு செய்ய உறுதிமொழி கேட்டார். இதே இவ்வாறுக, நானுவுக்கு எதிர்கட்சி யினரும், தௌலத்ராவ் ஸிந்தியாவும் கூடி பாஜிராவின் தம்பியாகிய சிம்னுஜீயைப் பேஷ்வா வாக்கவும் நானுபட்னவிஸைப் பூனுவை விட்டுத் துரத்தவும் சூழ்ச்சியிட்டனர். ஆனால், நானுவின் எதிர்ச் சூழ்ச்சியினுல் பாஜிராவ் பேஷ்வாவாக, நானுவும் முதன் மந்திரியாக உறுதிசெய்யப் பட்டார் (1796). பின்பு, நானு, துகோஜிஹொல்கரின் உதவியையும், நிஜாமின் உதவியையும் பெறமுயன்ருர். நிஜாமுக்கு, அவன் கொடுத்த பிரதேசங்களைத்தவும் திருப்பிக் கொடுத்துவிடுவதாகவும், 1795ஆம் ஆண்டு உடன்படிக்கையின்படி அவன் கொடுத்த தண்டத்தொகையையும் திருப்பிக் கொடுத்துவிடுவதாகவும் நானு வாக்களித்தார்.

**பூனுவில் புரட்சி—இரண்டாவது பாஜிராவ் இறுதியில் பேஷ்வா வாதல் (1796)**

"பாஜிராவையும் நானுபட்னவிஸையும் ஒன்று சேர்த்த கஷ்டங்கள் மறைந்தவுடனே, அவர்களிடை மீறுபூத்த நெருப்புபோலவிருந்த பழைய வெறுப்பு தலைக்காட்டலாயிற்று." பாஜிராவ் நிஜாமுக்கு வாக்களித்த பிரதேசங்களைத் திருப்பிக் கொடுக்க மறுத்தான். நானுவின் விழுமிய நண்பன் துகோஜியும் இறந்து போனுன். கொஞ்சகாலம்வரை ஹொல்கரின் ராஜ்ய விவகாரங்களைத் தௌலத்ராவ் ஸிந்தியா மேற்கொண்டு நடத்தினுன். பாஜி ராவ் நானுபட்னவிஸின் கட்சியை உடைத்தெறியச் சூழ்ச்சியிட்டு, ஸிந்தி யாவைக்கொண்டு நானுவைச் சிறை பிடித்தான். இதனுல், தௌலத்ராவ் பூனுவில் சர்வாதிகாரம் பெற்றுன்; அவனது உத்தியோகஸ்தர்கள் பல நாட்கள் கொள்ளையிடுமாறு பூனு இக்கற்றுக் கிடந்தது; பேஷ்வாவே இக் கொள்ளைகளுக்கு அனுமதியிட்டான்; ஏனெனில், இவைகளின்மூலம் தான்

**நானுபட்னவிஸின் அதிகார வீழ்ச்சி**

ஸிந்தியாவுக்குக் கொடுக்கவேண்டிய தொகையை ஈடுசெய்ய எண்ணினான். 'நாதர்ஷாபோன்ற கொலைப் படையாளர்களிடம் டில்லி பட்டபாட்டை'ப் பன்னட்கள் பூனவும் பட்டது. இவைகள் போதாவென சிவாஜி குடும்பத்தைச் சார்ந்த பான்ஸ்லே ராஜாக்களின் பரம்பரையிலொருவன் ஸடாராவில் ஆண்டுகொண்டிருந்தவன், தன் முன்னோர்களது பெருமையைத் தானும் மீண்டும் அடையவிரும்பி முயன்றான்; ஆனால், அது வீணுயிற்று இதற்குள் மஹத்ஜி ஸிந்தியாவின் மனைவியரைத் தௌலத்ராவ் விரோதித்துக் கொள்ள, அவர்கள் பஹிரங்கமாகப் பேஷ்வா பக்கம் சார்ந்தனர். • பாஜிராவ் தௌலத்ராவ் இருவது துருப்புக்களுக்குள் சண்டை தொடங்கிற்று. உடனே, பாஜிராவ், ஸிந்தியாவை யொழிப்பதற்காக, நிஜாம் அலியோடு உடன்படிக்கை செய்துகொண்டான். ஆனால், ஸிந்தியாவோ இது கண்டு சலிப்படையவில்லை; அவன் நானுபட்னவிஸைச் சிறையினின்று விடுவித்து, பாஜிராவோடு செய்துகொண்ட உடன்படிக்கையை நிராகரித்து விடுமாறு நிஜாம் அலியைத் தூண்டினான். இதனால், பாஜிராவ், நமது விரோதிகளை வெற்றியுற எதிர்த்தலரிதென்றெண்ணி, தௌலத்ராவ், நானுபட்னவிஸ் இருவரோடும் பகைமை யொழிந்தான் (1798). நானு மீண்டும் முதல் மந்திரிப் பதவியை யேற்றார்; எனினும், முன்னிருந்ததுபோல பேஷ்வாவின் முழு ஆதரவுக்கும் நம்பிக்கைக்கும் அவர் பாத்திரராகவில்லை. இப்படிப் பட்ட நிலைமையில் மராட்டியத் தலைவர்களிருந்தபோதுதான் வெல்லெஸ்லி ஷோருக்குப்பின் கவர்னர்-ஜெனரலாக வந்தார். இப்படியாக, மராட்டியத் தலைவர் கூட்டுறவு தன்னுளேற்பட்ட சண்டைகளாலும், சுயநலச்சூழ்ச்சிகளாலும் கட்டுக்குலேந்து பிளவுபட்டுத் தன்னழிவையே விரைவில் தேடிக் கொண்டது. பேஷ்வா பரவிக்கிருந்த மதிப்பனைத்தும் போயிற்று; அதனைத் கிறமையோடு கடைபியாக ஆதரித்துவந்த நானுபட்னவிஸுக்கும் இறுதிக் காலம் குறுகிற்று.

**மராட்டியர் களுக்குள் சண்டை**

ஷோரின் அரசியல் நிர்வாகத்தில் முக்கியமாகக் கவனிக்கத்தக்க சம்பவம் யாதெனில், அயோத்தி நவாபின் பட்டவுரிமையில் அவர் செய்த மாறுதலேயாகும். 1787-ஆம் வருடத்தில் காரன்வாலிஸ் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி நவாப் ஆங்கிலேயத் துருப்புகளைப் பராமரிப்பதால், கப்பஞ்செலுத்த வேண்டியதில்லையாயிற்று; மேலும் அயோத்தியில் கம்பெனி உத்தியோகஸ்தர்கள் வாங்கி வந்த சம்பளமும் பரிசுகளும் குறைக்கப்பட்டன; மற்றும், இனிமேல் ஆங்கிலேயர் அயோத்தி நவாபிடமிருந்து யாதொன்றும் கேட்பதில்லை என்ற உறுதிப் பாடும் இவ்வுடன்படிக்கையாலேற்பட்டது. அடுத்த ஆண்டில் நிகழ்ந்த வியாபார உடன்படிக்கை உண்மையில் நியாய முறையையொட்டியும் பரந்த நோக்குடையதாயும் அமைந்தது. ஷோர் நவாபை அவன் முன்னுல் உதவிய பொருளோடு இருசேனைகளின் ரக்ஷணையின் செலவையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டார்; அவர் 1797-இல் லக்னேவுக்கு நேரேசென்று நாம் கேட்டவைகளை அங்கீகரிக்குமாறு நவாபை வற்புறுத்தியதுமல்லாமல் அவனது மந்திரியையும் ஆங்கிலேயர் வசத்தில் வைத்தனர். வாய்து முதிர்ந்த

**அயோத்தியோடு ஆங்கிலேயர் புதிய உடன்படிக்கை செய்து கொள்ளல் (1797)**

அஸப் உத்தௌலா இதனைக்கண்டு மனமுடைந்து, நோய்வாய்ப்பட்டான். அவன், "மனமுறிவுக்கு மருந்தேது" * எனக்கூறி மருந்து கொள்ளமறுத்தான். சில மாதங்களுக்குப்பின் அவன் இறந்தான்.

வழக்கப்படி, ஆங்கிலேயர் புது நவாபின் பட்ட வரிமையை வியாஜமாகக்கொண்டு, தாம் நவாப் பதவியின்மேல்கொண்ட பிடியைப் பலப்படுத்திக்கொண்டனர். முதலில், ஷோர்; இறந்த நவாபின் புதல்வனுகிய வஸீர் அலியை நவாபாக அங்கீகரித்தான். ஆனால், விரைவிலேயே இந்தப் புதிய நவாப் இழிகுலத்திற் பிறந்தவனென்றும், முன்கோபக்காரனென்றும், ஆங்கிலேயர்க்கு விரோதியென்றும் ஷோர் நம்பினர்; அவனை, நவாபாயிருக்கச் செய்வதால் ஆங்கிலேய அதிகாரத்துக்கும் அயோத்தி நாட்டுக்குமே கேடை விளையுமென அவர் எண்ணினர். அவர் காசிக்குச் சென்று, அஸப் உத் தௌலாவின் சகோதரனை ஸாதத்.அலியிடம் அவனை நவாபாக்குவதாகக் கூறினர்; ஆனால், ஸாதத் அலி, அயோத்தி நவாப் ஆங்கிலேயர்க்குக் கொடுத்துவரும் பொருளை இன்னும் அதிகமாகக் கொடுக்கவும், நியமித்த கட்டணங்களைச் செலுத்தவும் உடன்பட வேண்டும். ஸாதத் அலி, அங்ஙனமே இந்த நிபந்தனைகளுக்கு உடன்பட்டான்; கவர்னர்-ஜெனரல் இரண்டாந்தரம் 1798-இல் லக்னௌவுக்குச் சென்று ஆங்கு ஸாதத் அலியை நவாபாக்கினர்; உடனே அவனோடு ஒரு புதிய உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது; அதன்படி அவன் தனது ராணுவப்படை யினைத்தையும் ஆங்கில ஸ்வாதீனத்தின்கீழ் வைப்பதற்கு இசைந்து, கம்பெனிக்கு அல்ஹாபாத் கோட்டையையும் கொடித்தான், கம்பெனி உத்தியோகஸ்தர்களைத் தவிர வேனைய ஐரோப்பியரனைவரும் அயோத்தியை விட்டு வெளியேற வேண்டும். இந்த உடன்படிக்கை† பின்னர் 1801-இல் வெல்லெஸ்லி அயோத்திமேல் இட்ட மிக்க சுமையானதும் முக்கியமானதுமாகிய உடன் படிக்கைக்கு வழியிட்டது.

**வஸீர் அலி நவாப் பதவி யிழத்தல்—ஸாதத்அலி நவாபாதல்—ஆங்கிலேயரோடு புதிய உடன்படிக்கை செய்து கொள்ளல் (1798)**

ஷோர் இரண்டாம் முறை லக்னௌவுக்குச் சென்றிருந்தபோது, வஸீர் அலியின் முரட்டுப் பரிவாரங்களால் தாக்கப்பட்டு ஆபத்துக்குள்ளானார். ஆனால் அவர் உறுதியோடு தாங்கிநின்று, பதவி யிழந்த வஸீர் அலியைப் பணியவைத்தார். இதற்குச் சற்று முன்புதான், அவர் கம்பெனி ராணுவ உத்தியோகஸ்தர்களிடை பரவிய வெறுப்பையும் எதிர்த்து நிற்க நேர்ந்தது. இவ்வெறுப்பு மன்னரது படைகளையும் நாட்டில் நிலை நிறுத்தியதாலேற்பட்ட பொருமையினடியாகப் பிறந்ததாகும் (1795—96). காரன்வாலிஸும் டண்டாஸும் கம்பெனிச் சேனைகளை மன்னரது படைகளோடு இணைக்க விரும்பினர். ஆனால் இதனைக் கம்பெனி

**கம்பெனி உத்தியோகஸ்தர்களிடை தோன்றிய பிணக்கு**

---

*Daceity in Excelsis or the Spoliation of Oude, 1st ed. p. 34.

† அது 'பலமே பிரதானமாகக்கொண்டு செய்யப்பட்டுள்ளது.' ibid p, 35. மில் நவாப் பட்டவுரிமையில் ஷோர் தொண்ட நிர்மானத்தை ஆட்சேபிக்கிறார்; ஆனால் 'லார்ட் மவுத் வாழ்க்கை வரலாறு' எனற புத்தகத்தில் (Vol. 1. Appendix V) அத்திர்மானம் ஒட்டிப் பேசப்பட்டுள்ளது.

ராணுவ உத்தியோகஸ்தர்களிற் பலர் பிணங்கி எதிர்த்தனர். ஷோர் திடமின்றி அவர்கள் கேட்டபடியே கொடுப்ப இசைந்தார். ஈண்டு முப்பது வருடங்களுக்கு முன்பு, இத்தகைய ஒரு நிலைமை யேற் பட்டபோது, கிளைவ் மனவுறுதியொடு எதிர்த்தடக்கியவிதம் நினைவு கூர்தற்பாலது. ஷோர் துருப்புக்களுக்கு இரட்டைப்படி கொடுப் பதை மீண்டும் நிறுவி ராணுவ உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களையும் உயர்த்தினர்.* இந்தச் சலுகைகள் டண்டாஸுக்கும் போர்ட் அவ் கன்ட் ரோலுக்கும் வெறுப்புண்டாக்கின. ஆதலின், அவர்கள் ல்ார்ட்காரன் வாலிஸை மீண்டும் கவர்னர்-ஜெனரல் பதவியேற்று இந்தியாவுக்குச் செல்லும்படி வேண்டினர். காரன்வாலிஸ் ஏற்க மறுத்தபோது **லார்ட் மார்னிங்டன்** என்பவரை அப்பதவியேற்கவேண்டினர். இவர்தான் பின்பு வெல்லெஸ்லி பிரபு எனப்பட்டவர்; இவர் பிட்டுக்குச் (Pitt) சிறந்த நண் பரும், அவர் வழியொழுகுபவருமாவர். தேர்ச்சி பெற்ற ராஜ நீதி நிபுணரா வர். நான்கு ஆண்டுகள் போர்ட் அவ் கன்ட்ரோலின் தலைமை சான்ற அங்கத்தினருள் ஒருவராய்த் திகழ்ந்தவர். அவர் 1798-ஆம் ஆண்டு மேமீ ஷோரினிட மிருந்து கவர்னர்-ஜெனரல் பதவியை ஏற்றார்.

**ஷோர் பதவியை விட்டுப் போதல்**

பதவியைவிட்ட பின்பு ஷோர் நீண்டகாலம் வாழ்ந்திருந்தார். அவருக்கு **லார்ட்டின்மவுத்** என்ற †பிரபுப்பட்டம் அளிக்கப்பட்டது. அனைவரும் குற்ற விசாரணைக்கு ஆளாவர்போலிருந்தது. ஆனால் அது நிகழவில்லை.

---

# அத்தியாயம் 10

## வெல்லெஸ்லி பிரபு (1798—1805)—ஸர் ஜார்ஜ் பார்லோவும் மின்டோ பிரபுவும் (1805—1813)

### பகுதி : 1. வெல்லெஸ்லியும் **துணைப்புரி உடன்படிக்கை முறையும்—திப்புசுல்தானோடு போர்புரிதல்

ஸர் ஜான்ஷோர் பதவியை விட்டு நீங்கும்போது லார்ட் ஹொபார்ட் என்ற சென்னைக் கவர்னருக்குக் கவர்னர் ஜெனரல் பதவியைக் கொடுப்ப தாக வாக்களிக்கப் பட்டிருந்தது. ஆனால், வங்காள இராணுவ உத்தியோகஸ்தர்களின் கிழ்ப்படியா மனப்பான்மையால் டைரக்டர்கள் லார்ட் காரன் வாலிஸை நியமிக்க வேண்டியதாயிற்று. ஆனால், காரன்வாலிஸோ, அயர்லாந்துக்கு ல்ார்ட் லெப்டினெண்ட் பதவியேற்றுச் சென்றுவிட்டார்; பின்பு, சில வருடங்களாகப் போர்ட் அவ் கன்ட்ரோல் அங்கத்தினரா யிருந்துவரும் லார்ட் மார்னிங்டன் என்பவர், முதலில் சென் னைக் கவர்னராக நியமிக்கப்பட்டவர், பிறகு கவர்னர் ஜெனரல் பதவிக்குப் ‡பாரன் வெல்லெஸ்லி என்ற பட்டத்தோடு உயர்த்தப்பட்டார். அவர் இந்தியாவுக்குப் புறப்படும்போது எம்முறையைக் கடைப்பிடிப்பதெனச்

**வெல்லெஸ்லி கவர்னர் ஜெனரலாதல் (1798—1805)**

---

* See Cardew The White Mutiny, p. 6. † Peerage.

** The Subsidiary System. ‡ Barn Wellesley.

சூழ்ச்சியும் நீடித்து ஆங்கிலத் தங்குவதற்கு விரும்பாமலுமே வந்து சேர்ந்தனர். அவர்க்குக் காரன்வாலிஸைப்போல இராணுவப் பயிற்சியும் பட்சபாதமும் கிடையா. ஷோரைப்போல கம்பெனியிடத்து அபிமானமுமில்லை. ஷோரின் மந்த ஆட்சிக்குப்பின்னர், வெல்லெஸ்லியின் சீரும் சிறப்பும் பெற்ற ஆட்சி நடைபெற்றதனல், அவ்வேற்றுமை காணுமிடத்து வெல்லெஸ்லியின் ஆட்சி ஒளிவிட்டுப் பிரகாசித்தது; அவர் பல துறைகளில் பரந்த நோக்குடையர்; அவர் ‡ கத்தோலியரின் மதசுதந்திர ஸ்மோசனத்திற்கும் § பிராடெஸ்டண்டு மதத்தோடு இணங்காதவரின் கஷ்ட நிவாரணத்திற்கும் பேராதரவு காட்டினர்; தடையிலா வியாபாரத்தைப் போற்றுபவர்; அடிமை வியாபாரத்திற்குச் சத்துரு ஆவர். அவர் அரசியல் நிர்வாகத்தில் பேரறிவு படைத்தவர்; டைரக்டர்களுக்கு அவர் விடுத்த முதலறிக்கையே அவரது பரந்த அரசியற்றிறமையைத் தெற்றெனக் காட்டியது.

**அவர் வந்தபோது இந்தியாவின் நிலைமை**

இதுநிற்க, ஸ்ரீரங்கப்பட்டண உடன்படிக்கையால் காரன்வாலிஸ் வல்லமைச் சமநிலையை நிறுவியதாக எண்ணியதற்கு மாறுக வெல்லெஸ்லி இந்தியாவிற்கு வந்தபோது அச்சமநிலை மறைந்து தொழிந்து கிடந்தது. மூன்று ஆங்கில இராசதானிகளும் ஒன்றோடொன்று தொடர்பற்றுக் கிடந்தன; பகைவரது நாட்டின் மூலமாகவோ அல்லது சுதந்திர நாடுகளின் மூலமாகவோ சென்றலன்றி மற்றைப்படி நேரே அவைகளுக்குள் ஒன்றற்கொன்றினிடையே போக்குவரவு வசதிகளமையவில்லை. ஆலல் வேண்டுமாயின் கடல் மூலம் செல்லலாம். **வங்காளத்தில்** ஆங்கிலேய ராஜ்யம் என்பது, ஓரிஸ்ஸாவின் ஒரு பகுதியையும், (ஏனைய பகுதிகள் நாகபுரி அரசன் வசமுள்ளன) சிட்டகாங், பிஹார் இரண்டையும் உட்கொண்டதாகும்; வாரன்ஹேஸ்டிங்ஸ் † காஸிபுரி, காசி இவைகளின் மேல் ஆங்கில அதிகாரம் நிறுவினர்; ஸர் ஜான்ஷோர் அயோத்தி நவாபினிடமிருந்து அலஹாபாத் கோட்டையைக் கைக்கொண்டார். **சென்னை இராஜதானியில்** ஜாகீர் ஜில்லாவாகிய செங்கற்பட்டு, வடசர்க்கார்ப்பிரதேசம், திண்டுக்கல் பாராமஹால் மலையாளப் பகுதிகள் இவைகளைத் தவிர, கர்நாடக நவாபினலும் தஞ்சை யரசனலும் ஆளப்பட்டுவந்த ஏனைய ராஜ்யங்களில் ஒழுங்கினமுற்ற அரசியல் முறைமை யேற்படுமாயின், போர்க்காலங்களில் ஆங்கிலேயர் அவ் விராஜ்யங்களின் நிர்வாகத்தை யெடுத்துக்கொள்ளும் உரிமை பெற்றிருந்தனர். கர்நாடகத்தின் மேற்கெல்லைப்புறம் திப்புவின் பகைமையால் பெரிதும் அல்லலுற்றது. **பம்பாய் ராஜதானியோ** மிகச் சிறியதாய் ஸால்ஸெட்டையும் பம்பாயையும் மட்டும் தன்னகத்துக் கொண்டிருந்தது.

**திப்புசுல்தானும் பிரெஞ்சுக்காரரும்**

திப்புசுல்தான் ஆங்கிலேயரைப் பழிக்குப் பழிவாங்கும் சமயத்தின் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தான்; அவன் நன்கு பயின்று தேர்ச்சி பெற்றுள்ள ஒரு பெருத்த படையை வைத்திருந்தான்; புரட்சியிடும் பிரான்ஸ் தேசத்தோடு சம்பந்தம் கொண்டாடினன்; பிரெஞ்சு உத்தியோகஸ்தர்

‡ Catholic Emancipation. § Protestant Dissenters. † Ghazipur.

களைத் தன் கீழ்வேலைக் கமர்த்தியதுமன்றி, பிரெஞ்சுத் தூதுவர்களையும் வரவேற்றான். அத்தூதுவர் ஆங்கிலேயர்க்கு விரோதமாகத் தம்மோடு ‡தாக்குதல்படிக்கையும் காப்புதல்படிக்கையும் செய்து கொள்ளும்படி திப்புவைத் தூண்டினர்.* ஸ்ரீரங்கப் பட்டணத்தில், பிரெஞ்சு உத்தியோகஸ்தர்கள் சுல்தானின் ஆதரவின்கீழ் 'ஜாகொபின்' சங்கமொன்று அமைத்தனர்; அவர்கள் திப்புவுக்கு 'ஸிடிஸன் திப்பு' (உரிமைச் சுற்றத்தானைய திப்பு) என்ற பட்டமுமளித்து அவனைக் கௌரவப்படுத்தினர்; ஸ்ரீரங்கப் பட்டணத்தில் "மரபுவழி பிறழாது சுதந்திரத்தரு நாட்டப்பட்டது; அதன்மேல் சமத்துவப் பாகையும் ஏற்றப்பட்டது."§

நிஜாம்

இது ஞான்றும் நண்பனாயிருந்த நிஜாம், கர்நாடகத்தில் தனக்கு ஆங்கிலேயர் உதவிமறுத்ததற்காக வேறுபட்டு, தன் கீழிருந்த பிரெஞ்சுப் படைகளைப் பெருக்கி, அவைகளின் சம்ரக்ஷணைக்காகக் கர்நாடகத்தில் னெல்லையை யொட்டியிருந்த ஜில்லாக்களைக் கொடுத்தான். மேலும், நிஜாம் திப்புவோடு வஞ்சனையாகக் கடிதப் போக்குவரவு செய்வதாகவும் சந்தேகிக்கப் பட்டான், அவனது பிரெஞ்சுத் துருப்புக்கள் ஏற்படும் எந்தகைய பிணக்குக்களிலும் ஆங்கிலேயர்க்குப் பேராபத்தை விளைவிக்கும். கர்நாடக நவாபோ சென்னை யரசாங்கத்தின் அதீனமாயினன். அவன் தனக்குக் கடன் கொடுத்த கம்பெனி ஊழியர்களுக்குத் தன் சொத்துக்களையெல்லாம் பெரும்பாலும் அடமானம் வைத்தான். அவர்கள் தங்கள் கடன் உரிமைகளின் பொருட்டுக் கம்பெனியையே எதிர்த்து நின்றனர். 1795-இல்

கர்நாடக நவாப்

நவாப் முகம்மது அலி வாலாஜா இறந்தபின்; உம்தத்-உல்-உமரா நவாபாயினன்; சென்னைக் கவர்னர், அவன் வாங்கிய கடன்களுக்கு ஈடாகக் காட்டியுள்ள நிலப் பகுதிகளை யெல்லாம் கம்பெனிக்குக் கொடுத்துவிட வேண்டுமெனக் கூறியபோது, அவன் மறுத்தான்; "ஆற்காட்டு நவாபின் கடன்"

---

‡ Offensive and defensive alliances. § "The Tree of Liberty was planted with due Ceremonials and surmounted with the Cap of Equality."

* பழுதுபட்ட பிரெஞ்சுப் போர்க்கப்பலொன்றின் தலைவனுகிய ரிபாட் என்பவன் தான் மொரிஷஸ் தீவு கவர்னரின் தூதுவனெனக் கூறினன்; திப்பு அவனை ஆதரித்து, அவனுடன் தன்னிடமுள்ள இரு தூதுவர்களைப் பிரெஞ்சுக் கவர்னராகிய மலர்டிக்கிலிடம் அனுப்பி இந்தியாவினின்று ஆங்கிலேயரைத் துரத்துவதற்குத் தீவு புரியும்படி வேண்டினன். திப்பு, "மனிதவர்க்கத்துக்கே கொடுமை சூழ்பவரிடம் யான் கொண்ட வெறுப்பை என் சிநேகிதரிடம் வெளிப்படையாகத் தெரியப்படுத்தக் காலம் கிட்டியது" எனக் கூறினன். மலர்டிக் அத்தூதுவர்களைப் பிரெஞ்சுப் பிரதம ஸ்தாபனத்தின் (French Directory) முன்னர் தமது எண்ணங்களை நேரே தெரிவிக்க அனுப்பினன். திப்புவுக்கு மாத்திரம் பிரெஞ்சுக்காரர் நினைவேற்றுது வாக்களிப்பது மட்டும் மிடுக்கவில்லை. ஆனால் மலர்டிக் ஒரு சிறு படையை வேண்டுமாவில் அனுப்பலாம்; ஆனால், திப்புவோடு இரகசியமாக உடன்படிக்கை செய்துகொண்டு, ஐரோப்பாவினின்று உதவிப்படை வருமளவும் பேசிடாது இருக்கவேண்டியிருக்க, அங்ஙன் செய்யாமல் எல்லோரு மறியுமாறு அவன் திப்பு போர்வெறி கொண்டுள்ளானென்று வெளிப்படுத்தினன். இவ்விதமாக, அவன், "சிறிது காலமேனும் பகைவர்க்கு (ஆங்கிலேயர்) இடையூறு விளைப்பதாக எண்ணிச் செய்த காரியத்தால், தன்னுடு நட்பாடிய ஒருவனை ஆபத்துள் சிக்கவைத்தான்." இதனால், வெல்லெஸ்லியும் திப்புவுக் கெதிராக மிகக் கடினமான நடவடிக்கைகளை எடுக்க வழி யேற்பட்டது; திப்புவே தான் நட்பாடியவர்கள் அடிக்கடி தன்னைவிட்டுப் பிரிந்தமையால், பட்ட கஷ்டங்களை வெளியிட்டுள்ளான். (Wilks Vol. II, Chap. XLIII, Roberts: India under Wellesley, pp. 43-4; and Martin: Wellesley's Despatches Vol. I. Introduction.)

அயோத்திநவாப் ஆங்கிலஸ்தானீகரின் அதீனத்தி லொடுங்கிக் கிடந் தான்; அவனது வருவாயின் பெரும்பகுதி ஆங்கில உதவிப் படைக்காகச் செலவிடப்பட்டது; வியாபாரத்தின் பெரும்பாகமும் ஐரோப்பியர் கைவசமாயிற்று. 1797-இல் ஏற்பட்ட புரட்சியிலே ஷோர் தலையிட்டது கண்டோம். புது நவாபாகிய ஸாதத்அலி தன் குடிகளின் அன்புக்குப் பாத்திரனாகவில்லை. ஒடுக்கப்பட்டுக் கிடந்த குருட்டு ஷா ஆலமோ, தௌலத்ராவ் ஸிந்தியாவின் வசம் கைதி போலாயினன்; மற்றும், வடக்கிலுள்ள ஸிந்தியாவின் படைகளுக்குந் தலைமை வகித்த பெரான் என்ற பிரஞ்சு சேனாதிபதியின் கையில் ஷா ஆலம் நேரே அடங்கிக்கிடந்தான் என்பது செவ்வனே பொருந்தும். ராஜபுதன வரசர்கள் ஸிந்தியாவுக்குக் கீழ்ப்படியும்படி வற்புறுத்தப்பட்டனர். பஞ்சாபில், ரஞ்சித் ஸிங், 1798-இல் லாஹூரைப் பிடித்துக்கொண்ட போதினும் சிக்கிய அதிகாரத்தை இன்னும் ஒன்று படுத்திக் கட்டுப்படுத்தவில்லை. மேலும், ஆப்கானிய மன்னனாகிய ஸமான்ஷா படையெடுத்து வருவான்போலிருக்க அதனைத் தடுக்கும் வலிமை சீக்கியர்க் குண்டோ வெனவும் அஞ்சினர். "1796-இல் லாஹூருக்கு முன் ஆப்கானியப் படையொன்று தோன்றிற்றுதலின் அதனைப்பற்றி யெண்ணும்போதெல் லாம் இங்கியச் சமவெளிப் பிரதேசங்களுக்குப் பேராபத்தேற்படுமென்ற நினைவு யாவர் மனத்தும் குடிகொண்டிருந்தது."

**ஹிந்துஸ்தானத்தின் நிலைமை**

இனி, மராட்டியக் கூட்டுறவைப்பற்றி நோக்குவோமாயின், பேஷ்வா அதிகாரமற்றுக் கிடந்தார். பூனாவில் அவரது அவைக்களம் கபட சூழ்ச்சி களுக்கும் சதிகளுக்கும் உள்ளாயிற்று. முன்னரே கூறியபடி, நானு பட்னவிஸின் செல்வாக்கு மறையலாயிற்று. பூனா அவைக்களத்தில் ஸிந்தியா பேராதிக்கம் பெற முயன்றனன்; ஹிந்துஸ்தானத்திலிருந்த அவனது ராஜ்யங்கள் பிஹார் அயோத்தி இவைகளோ யொட்டி யிருந்தன. ஆற்றல் சான்ற டுபாயினனும் இதர பிரெஞ்சு தளகர்த்தர்களா லும் கன்கு பயிற்றப்பட்ட பிரெஞ்சுப் படைகள் தொகையில் அதிகரித்தன; அவைகளின் பராமரிப்புக்காக இராஜ்யத்திலொரு பாகம் முழுவதும் விடப் பட்டது.* ஹொல்கரின் ராஜ்யம் அரசவுரிமைக்கேற்பட்ட சச்சரவுகளால் மெலிவுற்றது. 1797-இல் துகோஜி இறந்த பின்பும் சில்லாண்டுகள் இச் சச்சரவு தொடர்ந்தது. பிரானின் அரசனுகிய பான்ஸ்லே பூனாவிலுள்ள மராட்டியக் கூட்டுறவுச் சிக்கல்களுக்குள்ளாகாது விலகிநின்றனன்: ஆங்கி

**மராட்டியக் கூட்டுறவின் கூட்டுறவு**

---

* ஸிந்தியா வாவர ஒரு மராட்டிய சிற்றரசனுக்கு வேண்டிய இலக்கணங்களோடு பொருந்தியுள்ளில்லை. அவனைச் சூழ ஐரோப்பியர்களும், முகம்மதியர்களும் ராஜபுத்திரர் களும் இருந்தனர்: அவன் "மராட்டியத் தலைவர் கூட்டுறவிலொருத்தனைப் போலன்றி இந்தியாவிற்கே ஒரு பேரரசனும்" விளங்கினன்:—Auber: Rise and Progress of the British power in India. Vol. II, p. 278.

லேயரோடு பகைமையும் அவன் பாராட்டவில்லை.† பரோடா வரசனுகிய கெயிக்வாரோ, ஸிந்தியா பேஷ்வா ஆகிய இருவரால் பெரும் தொந்தரவுக் காளாகவே கூட்டுறவை நீத்தான். "இனி, அவன் ஆங்கில அதிகாரத்தை எதிர்த்துச் சண்டையிடப் போவதேயில்லை."

வெல்லெஸ்லியின் ஆட்சிற்தொடக்கத்தில் ராஜீய நிலைமை இவ்விதமாக விருந்தது. ஸர்ஜான் மால்கோமும், மற்றையோரும் தலையிடா நோக்கத் தைத் தீவிரமாகப் பழித்தனர்; அதனல் கம்பெனியின் பாதுகாவல்களும் ஒரு வழிப்படவில்லை; அதன் செல்வாதாரமும் காக்கப்படவில்லை. "அரசி யற்றுறையில் குறைந்த மதிப்பிற்கு ஈடாகச் செல்வாதார நிலையாவது யேறி பிருக்கலாமே, அதுவுமில்லை:" எனினும், இந்நிலைமை வெல்லெஸ்லியே ஒத்துக்கொண்டபடி ஆபத்தை விளைக்குமாறு அமைந்த தொன்று; வேறு யாராவது ஒருவர் கவர்னர் ஜெனரலாக விருந்தால், "முன்னிருந்த நிலை மையே சில சேர்க்கைகளோடும் மாறுதல்களோடும் தொடர்ந்திருக்கும்". இதனல் நாடுகளை இரக்கமின்றிச் சேர்த்துக்கொண்டு துணைபுரிய வற்புறுத்

**புதிய நோக்க முறையின் அவசியம்**

தும் முறைமை முற்றிலும் வேண்டுவதன்று என யாவரும் கூற முன் வருவர். ஏதோ மைசூர் நிஜாம் பேஷ்வா என்ற மூவரைப்பற்றிய விவகாரங்களில் இத்தகைய முறைமை பொருந்துமெனக் கூறலாமே யன்றி ஏனையவற்றில் இது முற்றிலும் நியாயப்படி பொருந்துவதன்று.

வெல்லெஸ்லி அக்கால நிலைமையைக் கொண்டு தமக்கு நற்பயன் விளைவித்துக் கொள்ள விரைந்தார். முதலில், அவர் ஹைதராபாத்தில் தம் கவனத்தைச் செலுத்தினர். ஆங்குள்ள பிரபுக்களிற் பெரும்பாலோர் ஆங்கிலேயரிடத்து வெறுப்பும், பிரெஞ்சுக்காரரிடமும் கிப்புவிடமும் விருப்பும் கொண்டிருந்தனர். நிஜாமோ காஸ்கனி மாகாணத்தினுகிய **செய்மண்ட்** என்ற தளகர்த்தனைக்கொண்டு 14000 மக்களடங்கிய சேனை யொன்றை நிறுவி நன்கு பயிற்றுமாறு செய்தான்: செய்மண்டும் உன்னத நிலையடைந்து திகழ்ந்தான். ஆனல், ஆங்கிலேயரதிர்ஷ்டவசமாக, 1798-இல்

**நிஜாமோடு துணைபுரி உடன் படிக்கை செய்து கொள்ளல் (1798)**

செய்மண்ட் இறந்தான். நிஜாம் தன்னிடமிருந்த பிரெஞ்சு உத்தியோகஸ்தர்களின் அஹங்காரங்கண்டு சலிப்படைந்து அவர்களுக்கு மாருகத் தான் இந்திய சிப்பாய்களடங்கிய படை வகுப்பொன்று தொகுத் தான்: அவனது மந்திரியாகிய மீர் அல்லம் என்பவன் ஆங்கிலேயரோடு ஒப்பந்தம் செய்து கொள்ள இடித்துரைத்தான். "ஆங்கிலேயர் தம்மை நம்பினேரைக் கைவிடாரென்பதும், ஆதரித்துக்காக்கும் ஆற்ற லுடையோரென்பதும் கண்கண்ட உண்மைகளாம்" எனவும் கூறினன்.

---

† வெல்லெஸ்லி "பீரார் அரசனின் வலிமைக்குப் பின் வரும் காரணங்களைக் கூறினர். அவை:-கம்பெனியின் நிலப்பகுதிகளையும் நிஜாம்ராஜ்யத்தின் பகுதிகளையும் தன் கீழ்வசமாகின, மாக்கிக் கொள்ளுமாறு தக்க வசதிகளோடு அமைந்துள்ள கோட்டைகள் அவன் வசமிருக் தமை; வங்காளத்துக்கும் வட் சர்க்காருக்கும் போக்கு வரத்து நிகழாதபடி இடையே **கடகம்** (Cuttack) என்ற நகரை அவன் கைக்கொண்டிருந்தமை, ஹைதராபாத்துக்கு வடக்கில், பான்ஸ்லே அரசனின் ராஜ்யமும் நிஜாம் ராஜ்யமும் பின்னிக்கிடந்ததால், பான்ஸ்லே உரிமைகள் பரசட்டித் தொந்தரவுகள் விளைக்கச் சமயம் வாய்த்தமை" என்பனவாம். Roberts: India under Wellesley, p. 27.

மேலும், ஹைதராபாத்தில் ஆங்கில ஸ்தானீகராயிருந்த * **கர்ப்டன் கிர்க்பாட்ரிக்** என்ற திறமையாளர் நிஜாமையும் அவனது மந்திரியையும் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு செய்தார். அதன்படி பிரெஞ்சுப் படைகளனைத்தும் நீக்கப்படல் வேண்டும்: ஆங்கிலேயரது அனுமதியின்றி நிஜாம் யாதொரு பிரெஞ்சுக்காரனையோ ஐரோப்பியனையோ தன் கீழ் வேலைக்கமர்த்தக்கூடாது; ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களின் மேற் பார்வையில் அடங்கிய ஒரு துணைப்புரிப்படை ஹைதராபாத்தில் நிறுவப்படல் வேண்டும்; அப்படையின் செலவை நிஜாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுதான் பிரபலமான **துணைபுரி உடன்படிக்கை முறையின்** தொடக்கமாகும்; ஆங்கிலப் பேரரசின் இராஜ்ஜியங்களை யமைப்பதற்கு இம்முறையே சிறந்த கருவியாயிற்று.† பிரெஞ்சுத் தூருப்புகள் திறமையாக நீக்கப்பட்டுச் சிதறடிக்கப்பட்டன; நிஜாமின் அவைக்களத்தில் ஆங்கிலேயரின் செல் வாக்கு எதிரின்றி லங்கியது.

**பேஷ்வாவும் ஸிந்தியாவும் இந்த உடன்படிக்கையை யேற்க மறுத்தல்**

வெல்லெஸ்லி, அதே சமயத்தில், பேஷ்வாவோடும் ஸிந்தியாவோடும் அம்மாதிரி துணைபுரி உடன்படிக்கைகள் செய்து கொள்ள எண்ணி, அவர் களைக்கேட்டார்: மேலும், அப்போது ஏற்படும் போலிருந்த ஆப்கானியப் படை யெடுப்பிற் கெதிராக ஆங்கிலேயரோடு சேர்ந்து கொள்ளும் படி அவர்களைக்கூப்பிட்டார். ஆனல், இத்தனை நாளாகக் கம்பெனியோடு நட்பினராயிருப்பினும், இவ்விருவரும் நாகபுரி யரசனுகிய பான்ஸ்லேயும் துணைபுரி உடன்படிக்கை முறைமைக்கு உடன்பட வில்லை. ஏனெனில், அவர்கள் உடன்படின், அவர் களது அரசியல் சுதந்திரமும் ராணுவ பலமும் அறவே அற்றுப்போம். இவ்வுண்மை அவர்களுக்குத் தெரியுமாகலின், வெல்லெஸ்லியிட்ட ஆலோ சனையை யேற்க மறுத்தனர். எனினும் பேஷ்வா மட்டும், திப்புவோடு ஆங்கிலேயரிடப் போரும் போரில், அவர்களுக்கு உதவ ஒரு படை திரட்டு பவர் போல் பாசாங்கு செய்தார்.

**திப்புவோடு போர் தொடங்கல்**

வெல்லெஸ்லி, வந்தது முதல் திப்புவோடு முடிவு காணும் வரை சண்டையிடத் தீர்மானித்தார்: திப்புவோ பிரெஞ்சுக்காரர் முதற்கொண்டு ஆப்கானிய ஸமான்ஷா உட்பட்ட ஆங்கிலேய விரோதிகளனைவரோடும் நட்பாடினன். இதற்குள் நெபோலியன் எகிப்தில் தங்கி, கீழ்திசையில் நாடுகளை வென்று மீண்டும் பிரெஞ்சு இராஜ்ஜியத்தைத் தாபிக்க எண்ண மிட்டான்.

---

* Captain Kirkpatrick.

† இதனுல், ஹைதராபாத் உடன்படிக்கை துணைபுரி முறையின்படி செய்யவேண்டிய உடன்படிக்கைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்....இவ்வுடன்படிக்கையின் இடையீடு படாத நிரந்தரமாயுள்ள தன்மையானது, நிஜாமைச் சமவலி குன்றிய ஒரு சிற்றரசனுக் கிற்று....மற்றும், இவ்வுடன்படிக்கையின் நிரந்தர இயல்பு, ஆங்கில அரசாங்கம் நிர்வாக முறையில்விட்ட தீர்மானங்களே சரியென்னுமாறு ஓர் உறுதிப்பாடு அளித்தது; எனெனில், அபிப்பிராயபேதங்களேற்படும் பிரச்னைகளை மத்தியஸ்த முறையிலோ அல்லது வேறு வகையிலோ தீர்மானித்து ஏற்பாடு செய்வதற்குத் தகுதியான வழி யொன்றும் இவ்வுடன் படிக்கையில் கூறப்பட்டில்லை.—P. 33 of K. M. Panikker's British Policy towards Indian States.

இஃது இங்ஙனமே சென்னையிலிருந்த உத்தியோகஸ்தர்கள் திப்புவை ஒடுக்கக் கூடாதென்றும், அவனே மராட்டியர்க்கும் நிஜாமுக்கும் எதிரிட்ட ஒரு தடையாக ஓம்ப வேண்டுமென்றும் வாதித்தனர்; ஆனல் வெல்லெஸ்லி அவ்வாதத்தைக் கண்டித்து அடக்கினர். திப்புவுக்குக் கடைசி முறையாக எழுதின கடிதத்தில், வெல்லெஸ்லி, எகிப்தில் ஆங்கிலேயரடைந்த வெற்றி களைக் குறித்துச் செய்தி தெரிவித்து, அவனைப் பிரெஞ்சுக்காரரோடு சேரு வதை விடுக்குமாறு புத்திமதி கூறினர். திப்பு அதற்குத் தெளிவான பதில ளிக்கவில்லை. எனவே, வெல்லெஸ்லி அவன் மேல் போர் தொடுத்துத் தாமே ராணுவ ராஜீய கருமங்களை மேற்கொண்டு சென்னைக்கு வந்தார். வெல்லெஸ்லியின் விரைவை யுணராத திப்பு, பிரெஞ்சு அரசாங்கத்தை (டைரக்டரியை) உதவி புரியுமாறும், ஸமான்ஷாவைச் சிந்துவைக் கடந்து வருமாறும் வேண்டினன். வெல்லெஸ்லியோ தீவிர படையெடுப்பைத் தொடங்கி, ஸ்ரீரங்கப்பட்டணத்தையே கைப்பற்ற நோக்கங்கொண்டார். ஸ்ரீரங்கப்பட்டணம் திப்புவின் அதிகாரத்திற்கு மூலகாரணமாகும்; அது அவனது பிரதான களஞ்சியமாகும்; அது அவனது ஆயுதச் சாலையாகும். "திப்பு, தன் ராஜ்யமே ஸ்ரீரங்கப்பட்டணத்தை நன்கு காப்பதின்மேல்தான் பொறுத்துள்ளது என மதித்தான்". கவர்னர் — ஜெனரலின் சகோதரரும், பின்னல் வாடர்லூவில் வெற்றி பெற்று வெல்லிங்டன் பிரபு என்ற பெயருடன் திகழ்ந்தவருமாகிய **ஸர் ஆர்தர் வெல்லெஸ்லியும்**, சென்னை யின் கவர்னரும், பிளாஸிச் சண்டையில் வெற்றி வீரனுய்த் திகழ்ந்த கிளைவின் மகனுமாகிய **லார்ட் கிளைவும்** ஒரு பெருத்த ஆற்றல்சான்ற படை யொன்று திரட்டினர்: அப்படை **ஜெனரல் ஹாரிஸ்** தலைமையின் கீழ் வைக் கப்பட்டது. நிஜாமும் தன்னிடமுள்ள துணைப்படையைக் **காப்டன் ஜான் மால்கோம்** தலைமையின்கீழ் அனுப்பினன். இந்த மால்கோம் பின்னர் பம்பாய் கவர்னராகியவர்; தாம் சம்பந்தப்பட்ட சம்பவங்களைப் பற்றிய வரலாறுகளை எழுதியுள்ளார். பம்பாயிலிருந்த சேனை கண்ணனூரில் குழுமி, மேலைப் பக்கமாக ஸ்ரீரங்கப் பட்டணத்தைக் குறுகிற்று. திப்பு அதனை எதிர்த்துப் போர் புரிந்து **சித்தீஸ்வரம்** என்ற விடத்தில் தோல்வியுற்றன். அதற்குள் ஹாரிஸ் தளகர்த்தர் பங்களூரை யடைந்து, பின்பு அதிக தெற்குப்பக்கமாயுள்ள மார்க்கமாக ஸ்ரீரங்கப்பட் பட்டணத்தின்மேற் சென்றார்; திப்புவோ வேறோரிடத்தில் இவரைத்தடுக்கக் காத்திருந்தும் பயனில்லாது போயிற்று. **மால்வல்லி** யென்ற இடத்தில் ஹாரிஸ் வெற்றிபெற்றுக் காவிரியைக் கடந்து, பம்பாய் சேனையோடு சேர்ந்து, ஸ்ரீரங்கப்பட்டணத்தை முற்றுகை யிடத் தொடங்கினன். (ஏப்ரல், 1799). போர்க்கருமங்கள் மிக்க தீவிரமாக நடைபெறவே, திப்பு மூன்று நாட்களுக்குள்ளேயே சமாதானத்திற்கு நாடி வந்தான். வெல்லெஸ்லி, அவனது நாட்டில் பாதியும், இரண்டுகோடி ரூபாயும், ஜாமீனுக அவனது நான்கு குமாரர்களையும் கொடுக்குமாறு திப்புவைக் கேட்டார். திப்பு பணிவுகாட்ட மறுத்தான். "புறமதத்தின

**ஸ்ரீரங்கப்பட்டணத்தில் ஆங்கிலேயர் படை கெழுமுதல்**

**சித்தீஸ்வரம், மால்வல்லிச் சண்டைகள்**

ரைப் புண்ணுடை நெஞ்சொடு கும்பிட்டு, அவர்கள் கொடுக்க உப்காரச் சம்பளம் பெற்று வாழும் ராஜாக்களேயும் கவாபுகளேயும் போல் யான் வாழகில்லேன்: அத்தகைய வாழ்க்கையினும் ஒரு சுத்த வீரனைப் போல் போரிட்டுச் சாதலே" சிறப்புடைத்து எனக்கழறினன். மேமீ 4–ஆம் தேதி, சுல்தானிடம் பல்லாண்டுகளாகக் கைதியாயிருந்த ஸர் டேவிட் பேயர்ட் என்பவன் தலைமையின் கீழ் முற்றுகையிட்ட ஒரு குழுவினர் தீவிரச் சண்டையிட்டுக் கோட்டைச்சுவர்களைத் தகர்த்து வழியுண்டாக்கினர். சுல்தானே போர் நெருக்கத்தில் பல காயங்களடைந்து இறுதியில் போர் வீரனொருவனல் சுடப்பட்டிறந்தான். அவனது மகன் படே ஹைதரும், மந்திரி பூர்ணய்யாவும் பணிவுகாட்டிடவே, படைவீரர்களின் கோபத்திற்கு இலக்காகாது தப்பினர். திப்புவை, அவனது தகப்பனார் ஞாபகத்திற்காகக் கட்டிவைத்த பெரிய கோரிகில் மிக்க மரியாதையுடன் அடக்கஞ் செய்தனர். கைதேர்ந்த பிரெஞ்சுத் துருப்புக்களைக்கொண்டு உணவுப்பொருள்களிலும் சேனைத்தொகுதிகளிலும் குறைவற்றிருந்தமையால், ஸ்ரீரங்கப்பட்டணம் இன்னம் நீண்டகாலம் எதிர் தாங்கி நின்றிருக்கலாமென்பது போர்முறை வல்லாரது அபிப்பிராயமாகும். மேலும், திப்புவின் இறுதியழிவுக்கு அவனது உத்தியோகஸ்தர்களிற் சிலரது—அவர்களிலும் முக்கியமாக அவனது திவான் மீர் சாதஒகினது—துரோகமே காரணமென்றும் வெகு காலம்வரை நம்பப்பட்டது.*

**ஸ்ரீரங்கப்பட்டணம் ஆங்கிலேயர் வசமாதல்—திப்புவின் மரணம் (மே, 4, 1799)**

திப்புவுக்கு இறக்கும்போது வயது 46: போரிடுதலிலோ சமாதானஞ் செய்துகொள்ளுதலிலோ அவனது தகப்பனாருக்கிருந்த பேராற்றலில், ஒரு சிறு பகுதியே இவனிடம் காணப்பட்டது. இவன் 'மெய்த்திரு வந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் மொத்திருக்கு முள்ளத் துரவோனு' யில்லே. 'ஹைதர் ஒரு பேரரசை யேற்படுத்திப் பிறந்தான். திப்பு அதனைத் தொலைக்கப் பிறந்தனனே' என்பது மைசூரினரிடை பயிலும் வழக்காற்று மொழியாகும். குணங்களிலும் நடவடிக்கைகளிலும் திப்பு ஹைதரைச் சிறிதேனு மொத்திருக்கவில்லே. வில்க்ஸ் என்பவர் கூறியபடி:—"ஹைதர் முன்னேற முயலும் மன்னனுகிச் சிறுமாறுதல்களே செய்தனன். திப்பு மாறுதலிடும் மன்னனுகி ஒருவித முன்னேற்றமுஞ் செய்தானில்லே. ஹைதர் நுட்பமான பேரறிவுடையன்; திப்பு சஞ்சலமான நொய்ய புத்தியுடையன். ஹைதர் அரசை யபகரித்த போதினும், அவனது மதஞ்துவேஷமின்மை கண்டு எம்மதத்தினரும் பகைமை யொழிந்தனர். மற்றும் மதத்திற்கு முதலிடம் கொடாது முற்றிலும் விடுத்தும் கூட, அவன் சமயோசித புத்திகொண்டு ஒழுகி வந்தான். ஹைதர் நடத்தையில் பெரும்பாலும் தப்புவழியில் சென்றதேயில்லே: திப்பு நியாயவழியில் சென்றதேயில்லே. இருமன்னரும்

**திப்புவின் குணவிசயங்கள்**

**ஹைதரொடு ஒப்புக்காண்டல்**

* Mir Hussain Alikhan Kirmanis: Reign of Tipu sultan' (W. Miless Translation); இவ்விஷயத்தைப்பற்றி நன்குணர்ந்த கர்னல் மார்க் வில்க்ஸ் என்பவர் தாமெழுதிய நூலில் இந்தத் துரோகத்தைப்பற்றி யாண்டும் குறிப்பிடவில்லே.

அறக்கொள்கைகள் அற்றவரெனினும், ஹைதருக்கு முன்னேறவேண்டு மென்ற பேரவாவில் சஞ்சலமற்ற தெளிவிய பெருநோக்குண்டு. திப்புவினிடம் அப்பெருநோக்கு அடிக்கடி மங்கிப்போய், அற்பவெறி களால் தடைபட்டு நின்றது.*

திப்புவின் மதவெறி, அவன்கீழ் ஊழியஞ் செய்த புறம்தத்தினரின் அருங்குணங்களைக் காணுதவாறு அவன் கண்ணை மறைத்தது. அவனால், தன்னரசியலில் நேர்ந்த தூர்ப்பிரவர்த்தனைகளையும், லஞ்சம் வாங்கலையு மொடுக்க முடியவில்லை. அவனது கொடிய கோர தண்டனைகளால் யாதொரு நற்பயனுமேற்படவில்லை. ஹைதர் வாழ்ந்தபோது அவனை ஒரு கொடுங்கோல் மன்னனென மதித்தனர். ஆனால், திப்புவோடு ஒப்புக் காணும்போது, அவனைத் தயாநிதியாகத் தோற்றச் செய்கிறது. இரு மன்னர்களது வரலாறுகளையும் பற்றி, எழுதியுள்ள மீர்ஹுசேன் ஆலிகான் என்னும் முகம்மதிய சரித்திராசிரியரே அவ்விருவரிடை காணப்பட்ட வித்தியாசங்களை வெளிப்படுத்தியுள்ளார். அவர் 'ஹைதரின் நடத்தை எஞ்ஞான்றும் அனுபவம், ஜாக்கிரதை, அறிவு இவற்றை யொட்டியே நிகழுமென்றும், திப்புவின் நடத்தை இவற்றை வெட்டியே நிகழுமென்றும்' எழுதியுள்ளார்.

ஹைதரை, அவனது அரசவாழ்க்கையின் தொடக்கத்தில் ஆங்கிலே யர்க்கு நண்பனெனக் செய்திருக்கலாம். ஆனால், ஹைதரிடம் முகம் மதுஅலி கொண்ட வெறுப்பும், அவனைப்பற்றிச் சரிவர நிர்ணயிக்காத சென்னையரசாங்கத்தின் மடமையும் அவனைத் தீராப்பகைவனுக்கியது. அத்தீராப்பகைமையை அவன் தன் மகனுக்கு ஊட்டினன். "அம்மகனும் ஒருபோதாவது ஆங்கிலேயரோடு நட்பாட விரும்பவுமில்லை; நட்பாடும் திறமையும் கொள்ளவில்லை." திப்புவின் நடவடிக்கைகளை வெறுத்து, ஆங்கில அரசாங்கம் தொடர்ச்சியாக ஒருபடித்தான காரணங்களைக் கூற இடமிருந்தது. ஆனால், அதற்கு மாறுக, ஆங்கில அரசாங்கத்தின் நட வடிக்கைகளைப்பற்றி நியாயமான காரணங்களைக் காட்டிக் குறைகூற ஹைதருக்கு இடமிருந்தது.

திப்புவின் அதிகார மொழிந்தமையால் ஆங்கிலேயரது பெருமை பன்மடங்கு பெருகியது. திப்புவின்மேல் பெற்ற வெற்றி, பிளாஸி வெற்றிக்குப்பின் இரண்டாந்தரத்ததாகக் கருதப்

**போரின் முடிவு**

பட்டது. இப்போரைத் திறம்பட நடத்தியதற்காக வெல்லெஸ்லி பெரிதும் பாராட்டப்பட்டார். மந்திரிச் சபையினர் அவர்க்கு 'லார்ட்' பட்டம் அளித்துச் சிறப்பித்தனர். பார்லி மென்டும் தனது நன்றியறிதலைக் காட்டிற்று. மைசூர் கோட்டைகள் விரைவில் கீழ்ப்படிந்தன. நாடுமுற்றும் அமைதியாக்கப்பட்டது. ஆனால் **தூந்தியவாஹ்** என்னும் ஒரு துணிகரவீரன் மட்டும் சிறிது காலம் வரை

* Historical sketches of the South of India, etc. (1869 ed.), Vol. II pp. 381—3 திப்புவைப்பற்றிப் பின்னர் ஐரோப்பியர் கொண்ட கருத்துக்கள், பௌரிங்கொண்ட் கருத் துப்போல் அனுதாபம் காட்டுவனவாயமைந்துள்ளன. மைசூர் கெஜட்டியரில் (புதுப்பிப்பு, வால்யூம் II, பாகம் IV. பக். 2084-90) திப்புவின் குணங்குறைகள் வகை செய்யப்பட் டிருக்கிலோடு, சீர்திருத்தத்தில் அவனது பெருவிருப்பம், அவனது சக்தி, மதப்பற்று, எடுத்த கருமத்திற்கேற்ப வொழுகல் முதலிய நிறப்பியல்புகளும் கூறப்பட்டுள்ளன.

கொள்ளைப்போரிட்டு வந்தான். அவனும் இறுதியில் கர்னல் வெல்லெஸ்லி *யால் அடக்கப்பட்டான்.

திப்புவின் ராஜ்யத்தின் பெரும் பாகத்தைக் கம்பெனி எடுத்துக் கொள்வது மானக்கேடான செயலாகுமெனக் கவர்னர்-ஜெனரல் கண்டனர். ஆனல், நிஜாமும் மராட்டியரும் தாராளமாக பங்கிட்டுக்கொள்ள முன் வந்தனர். ஆங்கிலேயர், கன்னட நாட்டையும், மலையாளத்திற்கும் கர்நாடகத்திற்கு மிடையிட்ட நிலப்பகுதியையும் சேர்த்துக் கொண்டனர். இவ்விதமாக, அவர்கள் கீழைக்கரைக்கும் மலையாளத்திற்கும் இடையிலுள்ள பிரதேச மனைத்தையும், மற்றும் திப்புவின் கீழிருந்த மேலைக் கடற்கரை முழுவதையும் கைக்கொண்டனர். மேலும், அவர்கள் மைசூரில் ஸ்ரீரங்கப்பட்டணத்தையும், இன்னும் சில கோட்டைகளையும் விடாது தம்வசமே கொண்டிருந்தனர். நிஜாமும், ஆங்கிலேயர்க்குச் சமமாக நிலப்பகுதிகளை வடகிழக்கில் பெற்றனர். அவனுக்குக் குத்தி ஜில்லாவும், † சித்தலதுர்க்கம் ‡சிரு நந்திதுர்க்கம் கோலார் கோட்டை வரிசைகளை யொட்டியுள்ள பிரதேசங்களும் கிடைத்தன. மராட்டியர்க்கு ஹர்பனஹல்லியும் சுந்தாவும் இதர ஜில்லாக்களிற் சிலவும் கொடுக்கப்பட்டன. அவைகளிலிருந்து, மற்றையிருவரது பங்குகளினின்று கிடைக்கும் வருவாயில் பாதிக்குக் குறையாமல் மூன்றிலிரண்டு பங்குக்கு மேற்படாமல் வருமானம் கிடைக்கும். ஆனல், 'பேஷ்வா தனது ராஜ்யத்தில் பிரெஞ்சுக்காரரை வரவொட்டக்கூடாதென்றும், தான் நிஜாமோடு இடும் சச்சரவுகளை ஆங்கிலேயரிடம் ' மத்தியஸ்தத்திற்குக் கொண்டுவரல்வேண்டுமென்றும் ' நிபந்தனையிட்டபோது, மராட்டியர் இத்தகைய நிபந்தனையை யேற்க மறுத்தனர். ஆதலால் அவர்கள் சேர்த்துக் கொண்ட பிரதேசங்களை நிஜாமும் கம்பெனியாரும் தமக்குள் பங்கிட்டுக் கொண்டனர்.

**ஜெயித்த நாடுகளைப் பங்கிட்டுக் கொள்ளல்**

**ஆங்கிலேயர்க்கும் நிஜாமுக்கும் கிடைத்த பங்கு**

திப்புவின் எஞ்சியராஜ்யம் புதிய மைசூர் இராஜ்யமாக நிர்மாணஞ் செய்யப்பட்டு, முன்பு ஹைதரால் உரிமையினின்று நீக்கப்பட்ட பழைய ஹிந்து அரச குடும்பத்தினருக்கே கொடுக்கப் பட்டது. கவர்னர்-ஜெனரல் ஹிந்து அரசர்க்குத் திருப்பிக் கொடுத்தலையே முடிவுகட்டினர். திப்புவின் குடும்பத்தினர் பாரம்பரியமாகப் பிரெஞ்சுக் காரரோடு நட்பாடிய காரணத்தை யேறிட்டு அக்குடும்பத்தினர்களே அரச பதவியில்லை போக்கவும் நிர்மானித்தார். அதன்படி, **கிருஷ்ணராஜ உடையார்** என்ற சிறுவன் அரியணை யேற்றப்பட்டான். அவனது திவானகப் **பூர்ணய்யாவும்** ஆங்கில ஸ்தானீகராக **ஸர் பாரி க்ளோஸ்** என்பவரும் நியமிக்கப் பட்டார். இச்செயல் ஹிந்துமக்களுக்கு மகிழ்ச்சியளித்தது : புதிய அரசனோடு துணைபுரி உடன்படிக்கை யொன்று செய்து

**மைசூரில் ஹிந்து ஆட்சி மீண்டும் நிறுவப்படல்**

**கிருஷ்ணராஜாவும் பூர்ணய்யாவும்**

*Guerilla struggle. † Chitaldrug ‡ Sira.

கொள்ளப்பட்டது. அதன்படி மைசூரின் அரசியல் முற்றும் ஆங்கிலேயர் கண்காணிப்பில் வைக்கப்பட்டது.

திப்புவின் குடும்பத்தினர்க்கு உபகாரச் சம்பளம் கொடுத்து வேலூருக்கு அனுப்பிவிட்டனர். பூர்ணய்யா ரட்சகராகி ராஜ்ய அரசியற் பொறுப்பை யேற்றார். 1811 வரையில் அவர் ரட்சகராயிருந்தார்: அக்கால முற்றும் பல ஸ்தானீகர்களால் உதவி செய்யப்பட்டார். 1805-வரையில் அவர் ஸர் ஆர்தர் வெல்லெஸ்லியின் பேருதவியைப் பெற்றிருந்தார்: ஆர்தர் வெல்லெஸ்லி அப்போது மைசூர் துருப்புக்களுக்குத் தலைமை வகித்திருந்தார். அவர் திவானின் ராஜவிசுவாசத்தையும் திறமையையும் பற்றிப் பலபடப் பாராட்டிப் புகழ்ந்துள்ளார். விரைவில் மைசூர் இராஜ்ய முற்றும் குடிகளுக்குப் பாதுகாப்பேற்பட்டு அது செல்வாக்கோடு மேனிலையெய்கியது. க்ளைவின் கால முதற்கொண்டு ஆங்கிலவதிகாரம் "இராணுவத்துறையிலும், செல்வாதாரத் துறையிலும், சாந்த முறையிலும் செய்து கொண்ட ஏற்பாடுகளுள் மைசூரில் பெற்ற வெற்றியே தலை சிறந்ததாகும்."

## பகுதி : 2. கர்நாடகத்தையும் தஞ்சாவூரையும் சேர்த்துக்கொள்ளல்.— சென்னை இராஜதானி இறுதியில் உருவாக்கப்படல்.

திப்புவோடிட்ட போரினால், ஆங்கிலேயர் நிஜாமோடு கொண்ட சம்பந்தங்களில் ஒரு திருத்தமேற்பட்டதுடன் கர்நாடகமும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. விவகாரங்களிருந்தபடி நோக்கின் 1798-ஆம் ஆண்டைய உடன்படிக்கையின்படி நிஜாம் துணைப்படை யொன்றைப் பராமரிக்க ஒப்புக் கொண்டிருப்பினும், அவன் இப்போது அப்படையின் பராமரிப்புக்காகவே பெருந்தொகை பாக்கிக் கொடுக்க வேண்டியிருந்தது; மேலும், அவன் மராட்டியர் படையெடுப்பரோ என அஞ்சினன்; பேஷ்வாவோ தாம் ஹைதராபாத்தோடிட்ட சச்சரவுகளில் ஆங்கிலேயரது மத்தியஸ்தத்தை யேற்றுக்கொள்ள மறுத்தார். முன்னைய உடன்படிக்கையையே அடிப்படையாக் கொண்டே இப்புதிய உடன்படிக்கை பரக்கச் செய்யப்பட்டது; நிஜாமிடத்திலிருந்த துணைப்படை பெருக்கப்பட்டது. அவன் பணமாகக் கொடுப்பதற்குப் பதிலாகத் தான் 1792-இலும் 1799-இலும் மைசூரிலிருந்து பெற்ற நிலப்பகுதிகளைக் கம்பெனிக்குக் கொடுத்தான். மேலும், தன் சண்டை சச்சரவுகளெல்லாவற்றையும் அவன் ஆங்கில மத்தியஸ்தத்திற்கு ஒப்படைக்கச் சம்மதித்தான்; இவைகளுக்கு ஈடாக எத்தகைய மராட்டியத் தாக்குதலினின்றும் அவனைக் காப்பதாக உறுதியளிக்கப்பட்டது. 1800-ஆம் ஆண்டு அக்டோபர்மீ செய்துகொண்ட இப்புதிய உடன்படிக்கை ஹைதராபாத்தை *அகப்புற அழிவுகளினின்றும் காப்பாற்றியது. மற்றும் பின்னர் ஆங்கிலேயர் இந்திய மன்னர்களோடு செய்துகொள்ளும் துணைபுரிமுறை உடன்படிக்கைகளுக்கும் இது ஓர் எடுத்துக்காட்டாயிற்று. நிஜாம் "நிலப்பகுதிகளைக் கொடுத்ததனால் தன் ராஜ்யத்தைக் காப்பாற்றின துருப்புக்களின்

**நிஜாமோடு செய்து கொண்ட புதிய உடன்படிக்கை (1800)**

**ஆங்கிலேயர் கொடுக்கப்பட்ட ஜில்லாக்களைப் பெறுதல்**

* Internal decay and External ruin

சேவைக்கு ஈடாகிய செலவை நிரந்தரமாக முற்படவே கொடுத்துவிட்டா னென்னினும், அவன் உடன்படிக்கையைக் குலைக்க விரும்பவில்லை.† இதனால், அவனது ராஜ்யத்தில் மராட்டிய அதிகாரமொன்றும் தலையிடா வாறு தடுக்கப்பட்டது. கம்பெனிக்குத் தற்போது, கொடுக்கப்பட்ட ஜில்லாக்க ளெனப்படும் பல்லாரி, கடப்பை, அனந்தபூர் மூன்றும் கிடைத்தன; இவற்றுல் ஆங்கில நாட்டெல்லை துங்கபத்திரா நதி வரை பரவியது.

இந்தப் பிரதேசங்கள் முற்றிலும், கட்டுக்கடங்காத பாளையக்காரர் களது அட்டூழியங்கள் விளைவில் ஒழிக்கப்பட்டுக் குடியேற்றங்கள் செய்யப் பட்டன; ஆங்கு முதலில் கலெக்டராயிருந்த **தாமஸ்மன்ரோ** என்பவரால் அது மிக்க செல்வாக்கான நிலையை எய்திற்று. இவரே பின்பு, சென்னைக் கவர்னர்களாகச் சிறந்தோருள் ஒருவராகத் திகழ்ந்தவர். இப்படி, ஆங்கிலேயர் தாம் பெற்ற நிலப்பகுதிகளால் நன்கமைந்த எல்லைப்புறத்தைக் கண்டனர்; மைசூரும் இப்போது முற்றிலும் ஆங்கிலேயரது நிலப்பகுதி களால் சூழப்பட்டுக் கிடந்தது.

கர்நாடகத்தைப்பற்றிக் கவனிக்கும்போது, நாம் முன்னரேயே 1792-ஆம் ஆண்டைய உடன்படிக்கையின்படி நவாப் போர்க்காலங்களில்

**கர்நாடகம்**

கர்நாடக அரசியல் முழுவதையும் ஆங்கிலேயர் வசம் கொடுத்துவிடுவதாகவும், ஆங்கிலப் படை யொன்றின் பராமரிப்புக்காக ஒரு வருடாந்தரக் கட்டணம் செலுத்துவதாக வும் உடன்பட்டதைக் கண்டோம். ஆனல், வயது முதிர்ந்த நவாபினல் இக்கட்டணத்தைச் செலுத்த முடியவில்லை; கட்டணத் தொகை குறைக்கப் பட்டபோதும் கூட, நவாப் கம்பெனிக்கு உறுதியாக்கப்பட்ட ஜில்லாக் களின் வருமானங்களையும் சேர்த்துத் தனக்குக் கடன் கொடுத்தவர் களுக்கு ஈடாகக் காட்டும் வழக்கத்தை விடவில்லை.* முகம்மது அலி 1795-இல் இறந்தார்; அவருக்குப்பின் நவாபான **உம்தத் உல் உமராவும்** திறமையற்றவனுயும் ஊதாரி யாயுமிருந்தான்; அவன் தன் வருமானங்களைத் தனக்குக் கடன் கொடுத்தவர்க ளெடுத்துக்கொள்ளுமாறு விடுத்தான்; கடன் கொடுத்தவர்களிற் பெரும்பாலோர் கம்பெனியின்கீழ் வேலையி லமர்ந்து லஞ்சம் வாங்கிய ஆங்கில ஊழியர்களே யாவர். சென்னைக் கவர்னராயிருந்த **லார்ட் ஹோபார்ட்** நவாபின்மேல் அதிக கடின மான நிபந்தனைகளிட முயன்று அவன் கொடுக்க வேண்டிய கட்டணத் தொகைக்குப் பிரதியாகத் திருநெல்வேலியுட்பட்ட பல ஜில்லாக்களை நிலை யாகக் கொடித்துவிடுமாறு வற்புறுத்த வெண்ணினர். ஆனல், நவாப் அவ்வெண்ணத்தை யேற்க மறுத்தான்; இதற்கு அவனுக்குக் கடன் கொடுத்தவர்களே உடந்தையாயிருந்து தூண்டுதல் அளித்தனர்: ஏனெனில்,

**முகம்மது அலி இறத்தல் (1795)**

† Malcolm: The Political History of India from 1784 to 1823 (1826) Vol. I. p. 244.

* சென்னை அரசியலின் தூய்மையை மிகவும் பாதித்த ஆற்காட்டு நவாபின் கட்டன் களைப்பற்றிய வரலாறு மேற்கண்டவைகளில் செவ்வனே விவரிக்கப்பட்டுள்ளன:— Chap. IX-P. E. Roberts: India under Wellesly and in Appendix B of Sir A. G, Cardew's The White Mutiny.

நவாப் ஏற்றுக்கொண்டால், அப்போது அவர்களால் தீய வழிகளில் பெரு லாபம் அடைய வழிகளில்லாது போகும்; கவர்னர்-ஜெனரலும் புதிதாகத் தலையிட வேண்டியுள்ள இச்செயலே விரும்பவில்லை. வெல்லெஸ்லி, திப்புவோடு போர் தொடங்கியதைக் காரணமாக்கொண்டு, 1792-ஆம் வருடத்திய உடன்படிக்கை ஷரத்துக்களின்படி, கர்நாடகத்தின் அரசியல் நிர்வாகத்தைத் தாமே ஏற்றுக்கொள்ள ஆலோசனையிட்டார். அதற்குள் திப்பு மரணமுற்றார்; திப்புவினிட்மிருந்த கடிதங்களில் முகம்மது அலியும் உம்தத்-உல் உமராவும் எழுதிய சில கடிதங்களும் அகப்பட்டன: இதனைக் காரணமாக யேறிட்டு அவ்விரு வரும் ஆங்கிலேயருக்குத் துரோகமெண்ணினரெனக் கவர்னர்-ஜெனரல் வெளியிட்டார். இக்கடிதங்கள், உண்மையில் துரோகம் காட்டுவனவா அல்லவா என்பது ஒரு புறமிருக்க, கவர்னர்-ஜெனரல் இவ்விஷயத்தை விசாரிப்பதற்கு ஒரு கமிஷனை நியமித்தார்; அந்தக் கமிஷனே இக்கடிதங்களால் நவாபுகள் தாங்கள் கம்பெனியோடு செய்துகொண்ட நட்பு உடன்படிக்கைகளை மீறினரென முடிவு கட்டியது.* கர்நாடகத்தின் ஸிவில் ராணுவ ஆட்சி யனைத்தையும் ஆங்கிலேயர் எடுத்துக்கொள்ளத் தீர்மானித்தனர்; இந்த நடவடிக்கையை மேற்கொள்ள அனுமதியளிக்குமாறு டைரக்டர்களுக்கும் போர்ட் அவ் கன்ட்ரோலுக்கும் விண்ணப்பமிடப்பட்டது. ஆனால், மரணத் தறுவாயிலுள்ள நவாப் இறக்கும்வரை ஆங்கிலேயர் ஒன்றுஞ் செய்யாதவாறிருக்கத் தீர்மானித்தனர், நவாபின் உயிலின்படி, அவனது இளைய மகன் **அலி ஹுசேன்** என்பவன் இரண்டு ரட்சகர்களினுதவு கொண்டு பதவியேற்க வேண்டும். ஆனால் இச்சிறுவனுக்கும், இறந்துபோன நவாபின் மருகனெருவனுக்கும் சச்சரவேற்பட்டது. இதனால், ஆங்கிலேயர் தாமெண்ணியபடியே செய்வது எளிதாயிற்று; தாமிட்ட நிபந்தனைகளையேற்க மறுத்த மகனைப் புறக்கணித்தொதுக்கி, அந்நிபந்தனைகளைத் தடையின்றி யேற்க இசைந்த மருகனை நவாபாக்கினர்; கர்நாடகத்தின் †தேறிய வருமானத்தில் ஐந்திலொரு பங்கு அவனுக்கு உபகாரச் சம்பளமாகக் கொடுக்க உறுதியளித்தனர். கர்நாடக அரசியல் நிர்வாக மனைத்தும் கம்பெனியின் வசமாயிற்று. வெல்லெஸ்லி மேற்கொண்ட இச்செயல் நீதிமுறைக்கேற்ப கடுமையாகக் கண்டிக்கப்பட்டது. சென்னையைச் சேர்த்துக்கொண்டது நியாயம் என்பது எவ்வாறெனில்:—நவாபின் ஆட்சி அபத்தமாகியது; "அது நிலைபெறுதற்குக் காரணமாயிருந்த ஆங்கிலேய அதிகாரமே இத்தகைய சீர்கெட்ட வலிகுன்றிய அரசியலைக் காணச் சகிக்காது வெறுத்தது."‡

**நவாப் உம்தத்-உல் உமரா (1795-1801)**

**ஆங்கிலேயர் கர்நாடகத்தைச் சேர்த்துக் கொள்ளத் தீர்மானித்தல் (1801)**

**இந்த நடவடிக்கையின் நியாயம் காண்டல்**

---

* மில் கடிதங்களால் ஒரு துரோகமும் ஏற்பட்வில்லையென்று கூறி, மேலும், "செய்த தீச்செயற்குக் காரணங் காட்டுதல், ஆட்டுக்குட்டியைக் கொன்றதற்கு ஓநாய் நியாயங் காட்டிய கதைபோலும்" என்றார். ட்ரால்ஸ், ஓவன் போன்ற இதர சரித்திர ஆசிரியர்களும் இக்கொள்கையையே கொண்டுள்ளனர். † Net Revenues.

‡ See Major Evans Bell's Empire in India (2nd edition 1935 by C.S. Srinivasachari, pp. 50 *et seq* of Introduction.)

ஆங்கிலேயர் கர்நாடகத்தைச் சேர்த்துக்கொள்வதற்குமுன் தஞ்சர் வூரைச் சேர்த்துக்கொண்டனர். பல கஷ்டங்களுக்குள்ளாகி வருந்திய ராஜா துல்ஜாஜி என்பவர் 1787-இல்இறந்துபோஞர்; அவருக்குப் பின் அவர் சகோதரன் அமரசிங்கன் பட்டத்துக்கு வந்தான்; அவனோடு ஓர் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. துல்ஜாஜி இறப்பதற்குமுன் ஸரபோஜி என்பவனை ஸ்வீகார மகனாக ஏற்று அமரசிங்கனின் ரக்ஷணையின்கீழ் வைத்தான்.* இந்த ஸ்வீகாரம் பலவிதமாக மறுக்கப்பட்டு அமரசிங்கனே பட்டத்திற்கு உரியவன் என்று அங்கீகரிக்கப்பட்டான். பின்பு, ஸரபோஜி இம்முடிவுக்கெதிராக முறையிட்டான்; அவனது உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் அமரசிங்கனுக்குப் பதில் அவனே மன்னனாக அங்கிகரிக்கப்பட்டான். அமரசிங்கன் அரச பதவியினின்றும் நீக்கப்பட்டான். 1799-ஆம் ஆண்டில் ஸரபோஜி பட்டத்துக்கு வந்தவுடனே ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். அதன்படி ராஜ்யத்தின் அரசியல் நிர்வாகத்தை ஆங்கிலேயர் கையில் ஒப்படைத்தான்-தஞ்சைக் கோட்டையையும் அதன் அக்கம் பக்கங்களையும் மட்டும் தன் அதீனத்தில் வைத்துக்கொண்டான். மேலும், தேர்ந்த வருமானத்தில் ஐந்திலொரு பகுதியும் உபகாரச் சம்பளமும் பெற்றான். சரபோஜி 1832-வரை வாழ்ந்திருந்தான். அவனுக்குப் பின் அவனது ஒரே மகனான சிவாஜி பதவியேற்றான். சிவாஜி யாதொரு ஆண் சந்ததியுமின்றி இறந்தபின்பு, டைரக்டர் சபையினரின் நிர்மானப்படி தஞ்சையரசப் பதவியும் அதற்கிருந்த மதிப்பும் ஒழிந்துபோயிற்று. சரபோஜி தீவிர ஹிந்துவாயினும், தனக்குப் போதகர்களாயிருந்த ஷ்வார்ட்ஸ், *கெரிக் இருவரிடமும் பட்சம் பாராட்டினான்; டேனிய பாதிரிமார்களுக்கு ஆதரவு காட்டினான்; கற்றோரை யாதரித்தான்; அவன் விழுமிய புத்தக நிலையம் ஒன்று அமைக்கப் பல புத்தகங்களையும் கையெழுத்து ஓலைகளையும் திரட்டினான். அவற்றுள் பெரும்பாலன ஆங்கிலத்திலும் வடமொழியிலுமுள்ளன; இப்புத்தக நிலையம் உலகில் சிறந்ததொன்றும். இப்போதும், தஞ்சாவூர் அரண்மனையில் அவனது பெயரிடப்பட்டு இப்புத்தக நிலையம் நிலவி வருகிறது.

**தஞ்சாவூரைச் சேர்த்துக்கொள்ளல்—அமரசிங்கனும் ஸரபோஜியும்**

இங்ஙன், புதிதாகச் சேர்க்கப்பட்ட நாடுகளாலும், வெற்றிகளாலும்—தென் கன்னடம், வேணாடு, கொடுக்கப்பட்ட ஜில்லாக்கள், கர்நாடகம், தஞ்சாவூர்—சென்னை ராஜதானி தற்போதைய பரிமாண அளவு பரவியது. ஜாகீர் ஜில்லாவும், வட சர்க்காரும் முன்னரேயே கிடைத்தபோதினும், வெல்லெஸ்லியே †'சென்னை இராஜதானியை நிறுவியவர்' எனக் கூறல்தகும். பாராமஹால், சேலம், திண்டுக்கல், மலையாளம், கன்னடம், கொடை ஜில்லாக்கள் கர்நாடகம் தஞ்சாவூர் போன்ற புதிய பகுதிகளில் வரி வசூல் ஏற்பாட்டும், அரசியல் முன்னேற்றமும் ஒரு சேர ரீட், மன்ரோ, போன்ற ஆற்றல் சான்ற உத்தியோகஸ்தர்களின்கீழ் நடந்தேறின. பலவிடத்திலுமிருந்த ஜமீன்தார்களையும் பாளையக்காரர்

**சென்னை இராஜதானி முடிவில் உருவாதல்**

* Gericke.

† The Maker of the Madras Presidency.

களையும் கீழ்ப்படியச்செய்து, அவர்களிடத்திருந்த இராணுவப் பரிவாரங் களையும் சிதறவடித்தனர். முக்கியமாக அவர்கள் மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் பெருந் தொந்தரவு விளைத்து வந்தனர்; நவாபின் அதிகா ரத்தை யெதிர்க்காதவாறு அவர்களைச் செய்தற்கு ஆங்கிலத் துருப்புக்கள் பலதடவைகள் தொடர்ச்சியாகப் படையெடுத்துச் செல்ல நேர்ந்தன. இப்படிப் பாளையக்காரரோடு தெற்கிலிட்ட போர்கள் * 1801-இல், அவர்களது தலைவனுகிய **கட்ட பொம்ம நாயக்கன்** வீழ்ச்சியோடு முடிவுற்றது. பாளையக்காரர்க்குச் சாசுவத வரி விதிக்கப்பட்டது.

**பாளையக்காரரை அடக்குதல்**

ஆங்கில அரசாங்கத்தால் நிவர்த்திக்கப்பட்ட முக்கிய குறைபாடுகள் யாவையெனில்:—ஜமீன்தார்கள் பாளையக்காரர்கள் இவர்களது கீழ்ப் படியாமை; சட்டங்களும் நீதி மன்றங்களும் இல்லா திருந்தமை; நிலவரி யேற்பாட்டு முறையின் உறுதி யின்மை என்பன. † 1794-இல், செங்கற்பட்டு ஜாகீர் வட சர்க்கார் ஜில்லாக்களில் கலெக்டர்களை நிய மித்து அவர்களை 1786-இல் ஏற்படுத்திய போர்ட் அவ் ரெவின்யுவுக்குக் கீழாக்கினர். ஜாகிர்க்குக் கலெக்டராயிருந்த **லயனல் பீளேஸ்** என்பவர் கிராமங்களில் பயிலும் நிலத் திட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் அறிமுகஞ் செய்துகொள்ளப் பெரு முயற்சி யெடுத்துக்கொண்டு, ஒவ்வொரு கிராமத் திலுமுள்ள மிராசுதாரர்களுடன் ஏற்பாடுகள் செய்துகொண்டார். இந்த ஏற்பாடே வட சர்க்காரிலும் ‡ ஜமீன்தாரியல் லாத பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது. பாரமஹால் கலெக்டரா யிருந்த கர்னல் ரீட், வியவசாயிகளின்மேல் சாசுவத நிலத்தீர்வை விதிப்ப தற்குப் பெரிதும் முயன்றார். முதலில் ரீட்டின் கீழ் உதவியாளராயிருந்து, பின்னர் கன்னடத்தின் கலெக்டராகவும், கொடை ஜில்லாக்களின் பிரதம கலெக்டராகவும் திகழ்ந்த மன்ரோ, **ரயத்வாரி** முறை நாட்டிலேயே இனைத்த ஒரு முறையாகுமென்று உறுதி கூறித் தீர்வையைக் குறைக்கவேண்டு மென வாதிட்டார்; மேலும் விவசாயிகளோடு செய்துகொள்ளும் ஏற்பாட் டை நிரந்தரமாக்குவதால், அவர்களுக்குத் தமது பூஸ்திதியின்மேல் அக் கறை ஏற்படுமென்றும் வெளியிட்டார். அவர், கொடை ஜில்லாக்களி லுள்ள ஒவ்வொரு வயலின் விஸ்தீரணத்தையும் வரையறைசெய்து தீர்வை விதித்தார். இவ்விதமாக, (சென்னை) அரசாங்கம் தக்க ஒரு தீர்வை விதிமுறையை உருவாக்க முயலும்போது, கவர்னர்-ஜெனரல், வங்காளத்தில் ஜமீன்தார்களோடு செய்துகொண்ட சாசுவத நிலவரி ஏற் பாட்டு முறையையே சென்னையிலும் புகுத்தப்பலவந்தப்படுத்தினர். ஆனல், சென்னை மாகாண ஜில்லாக்களில் பெரும்பாலான வற்றில் ஜமீன்தார் வகுப்பினரே யில்லை. வட சர்க் காரிலேயே நிலப்பரப்பில் பாதிதான் ஜமீன்தார் வசமிருந்தது; மற்றையிடங்களில் ஜமீன்தார்களும்

**ஜில்லாக்களில் கலெக்டர்களை நியமித்தல்**

**ப்ளேஸ், ரீட், மன்ரோ இவர்கள் செய்த நில ஏற்பாடுகள்**

**ஜமீன்தார்களோடு ஏற்பாடு செய்துகொள்ள வேண்டியதாதல் (1800)**

* Described in detail in Caldwell's A Political and General History of the District of Tinnevelly (1888), chaps. VII, VIII, and IX; and in Col. James Welsh's Military Reminiscenee (1830) Vol. I. † J. T. Gwynn on the Madras District System in the Cambridge History of India. Vol. V. p.467,

‡ Non-zamindari tracts.

பாளையக்காரர்களும் மிகச் சிலரே. அரசாங்கமும் ஜமீன்தாரி ஏற்பாடு செய்துகொண்டு தமது பொறுப்பை நிவர்த்தித்துக்கொள்ள விரும்பிற்று. ஜமீன்தாரியல்லாத இடங்களில் கிராமங்களே ஒன்று சேர்த்துப் * பண்ணைகளாக்கி ஏலத்தின்மூலம் உயர்ந்த விலைக்கு விற்றுவிட எண்ணியது; இப்படிச் செய்யின், பிறர் கை யெகிர்பார்க்கும் நிலச் சொந்தக்காரரின் குழுவொன்று புதிதாக ஏற்படும். இம்முறைகளே யொட்டியே †பிரத்தியேகமாயமைக்கப்பட்ட கழகங்கள், வடசர்க்கார், பிராமஹால், ஜாகீர், தீண்டுக்கல், கர்நாடக பாளையங்கள் இவைகளில் ஏற்பாடுகள் செய்தன. ஜமீன்தார்களும் பாளையக்காரர்களும் தமது ¶ படைதாங்கிய பரிவாரங்களைத் தொலைக்க நேர்ந்தது; அவர்களது காவலதிகாரமும் பலவகை வருமானங்களின்மேல் கொண்டிருந்த அதிகாரமும் பிடுங்கப்பட்டன. பழைய பூஸ்திதிகளின்மேல் விதிக்கப்பட்ட வரிப்பணம் ஒழுங்காகச் செலுத்தப்பட்டு வந்தது; ஆனால், புதிதாக ஜமீன்தார்களே யேற்படுத்தும்

**இம்முயற்சி வீணாயினமை**

* இவ்வுபாயம் மிக்க கேட்டை விளைவித்தது; இவ்வுபாயத்தால் ‡வாணிபத் துணிவுடையோரும் பணம் பறிப்போரும் தோன்றினர். பாராமஹாலிலும், ஜாகீரிலும் புதிதாக இங்ஙன் உண்டாக்கப்பட்ட பூஸ்திதிகள் திரும்பவும் அரசாங்கத்திடமே திரும்பிவந்தன; இப்போதுதான் அரசாங்கத்திற்கு வங்காள ஏறிபாட்டின் கருதிமேல் சமுசயமேற்பட்டது; அது மன்ரோவின் ரயத்வாரி ஏற்பாட்டைப் பாராட்டியது. சாசுவத ஏற்பாட்டை நிறுவிய பிரதேசங்களிலன்றி, ஏனைய ஜில்லாக்களனைத்திலும் 1808-9-இல், ** கிராமங்களோடு செய்துகொள்ளும் ஏற்பாட்டு முறைமை மேற்கொள்ளப்பட்டது. தீர்வை அதிகமாக விதிக்கப்பட்டது; கிராமக் கணக்கர்கள் தங்களதிகாரத்தைத் தீய வழிகளிற் செலுத்தினர்; வறிய விவசாயிகளுக்கு மிக்க வரிச்சுமை யேற்பட்டது.

**கிராம ஏற்பாட்டு முறைமையைப் புகுத்தல் (1807)**

இதற்குள் மன்ரோ கூறிய சாசுவத ரயத்வாரி ஏற்பாட்டு முறைமை, காமன்ஸ் சபையினரின் பொறுக்குக் கழகத்தினர் வெளியிட்ட புகழ் சான்ற ஐந்தாவது அறிக்கையில் பெரிதும் பாராட்டப்பட்டது. டைரக்டர் சபையினரும் அதனையே மேற்கொள்ளத் தீர்மானித்தனர். இவ்வாறு கடைசியில் ரயத்வாரி முறையே மேற்கொள்ளப்பட்டது; ஆனால் மன்ரோ வெளியிட்டபடி சாசுவதமாக இது மேற்கொள்ளப்படவில்லை. சில்லாண்டுகள் வரை உறுதியான முடிவு ஒதுக்கி வைக்கப்பட்டது; ஏனெனில், நீதித்துறையிலும் அரசியல் நிர்வாகத்துறையிலும் உடனே சீர்திருத்தங்கள் செய்யவேண்டியிருந்தன. இக்காலத் தொடக்கத்தில், ஜமீன்தாரி ஏற்பாட்டைப் புகுத்தியதேயன்றி, ஒரு புதிய நீதித்துறை யேற்பாடும் வங்காளமாதிரியை யொட்டிய சட்டத் தொகுப்பொன்

**ரயத்வாரி ஏற்பாட்டு முறை இறுதியில் மேற்கொள்ளப்படல் (1820)**

---

*Estates † Special Commissions.

¶ Armed retainers. ‡ Speculators and extortioners.

** The System of Village Settlements

றுடன் புகுத்தப்பட்டது. ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு நீதிபதி நியமிக்கப்பட்டார்; அவர்க்குப் போலீஸ் மேல் அதிகாரமும் குற்றத் தண்டனை அதிகாரமுமுண்டு. அவருக்கு மேல் * ஊரூர் சுற்றும் மாகாண நீதிமன்றமொன்று அமைக்கப்பட்டது. இப்புதிய ஏற்பாடு கருதியபடி விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாக்கவில்லை. கலெக்டர் தனது வரி வசூல் (ரெவின்யூ) கடமையைச் செலுத்தும்போது பொது மக்களோடு நெருங்கிப் பழகுகின்றாதலின், அக்கலெக்டருக்குக் குற்றத் தண்டனை யதிகாரமும் போலீஸ் மேலதிகாரமும் கொடுக்கப்படல் வேண்டுமென மன்ரே வெளியிட்டார். 1814-இல், நிர்வாக மாறுதல்களைச் செய்வதற்காகீ மன்ரே ஒரு † பிரத்தியேக கமிஷனராக நியமிக்கப்பட்டார்; 1816-இல், பல சட்ட விதிகளேற்பட்டன; அவைகளின்படி கலெக்டர்களுக்குக் குற்றத் தண்டனை யதிகாரமும் போலீஸ் மேலதிகாரமும் * மீண்டும் கொடுக்கப் பட்டன. சிறு தொகையைப்பற்றிய ஸிவில் விவகாரங்களை விசாரிக்க இந்திய டிஸ்டிரிக்ட் முன்சீப்புக்களையும் நியமித்தார். அப்ப வழக்குக்களை விசாரிக்கவும், எல்லா வழக்குக்களிலும் ஒன்றிய மத்தியஸ்தம் செய்வதற்குப் பஞ்சாயத்தைக் கூட்டுவதற்கும் கிராமத் தலைவனுக்கு அதிகாரமீ கொடுக்கப் பட்டது. இந்தப் பஞ்சாயத்து சுதேச பழக்க வழக்கங்களோடு தோன்றியமையால் மன்ரே இதனை அதிமுக்கியமாகக் கொண்டொழுகினர்.

**புதிய நீதித்துறைச் சட்டங்களும் காவற் சட்டங்களும்**

**மன்ரே இட்ட சட்ட விதிகள்**

**கிராமத்தலைவர்களும் பஞ்சாயத்துக்களும்**

1818-க்குள், ஜமீன்தாரி முறையைப் பரப்புவதாகக் கொண்டிருந்த எண்ணங்களும், கிராம ஏற்பாட்டு முறையைப் புகுத்துவதாகக் கொண்டிருந்த எண்ணங்களும் முற்றும் விடுக்கப் பட்டன. திருத்திய ரயத்வாரி முறையொன்றை யமைப்பதற்குக் கூட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. மன்ரேவே, சென்னைக் கவர்னர் என்ற தகுதியில் (1820-27) முடிவில் இந்தச் சட்ட விதிகளையெல்லாம் அமைத்தார். அவர் தம்மாலியன்ற வரை ‡ கிராம நிலையங்களையும் பள்ளிச்சாலைகளையும் ஆதரிக்க முயன்றார்; ஆனல் பெருவெற்றி யடையவில்லை. தீர்வையின் சுமையையும் பெருவாரியில் குறைக்க அவரால் முடியவில்லை.¶ இவர்காலத்து சென்னை இராஜதானி சாதித்த புகழ்சான்ற மூன்று அரசியற் கருமங்கள் யாவையெனில்:—பாளையக் காரரைக் கீழ்ப்படியுமாறு ஒடுக்கியமை; நீதி மன்றங்களை நிறுவியமை; வரிவசூல் (ரெவின்யூ) முறையை முன்னேறச்செய்

**மன்ரேவின் கவர்னராட்சி (1820—27)**

**இக்காலத்துச் சாதித்த கருமங்கள்**

---

* Itinerant Provincial Court. † Special Commissioner. ‡ Village institutions.

¶ தீர்வையைச் சரசவதமாக்க வேண்டுமென்று மன்ரே வற்புறுத்தியது, 1862 வரையில் சென்னை யரசாங்கத்தாரால் ஆமோதிக்கப்பட்டும் பின்பு தள்ளப்பட்டது; அவ்வாண்டுக்குப் பின்னர் திரும்பத் திரும்ப நிகழ்த்திய நிலத்திட்டம் (Recurring Settlement) ஒவ்வொன்றன் போதும், பொதுமக்களின் வெறுப்பிற்குரிய அறுமானங்களையும் கொள்கைகளையும் அடிப்படையாகக்கொண்டு தீர்வையை அதிகமாக்கிக்கொண்டே வருகின்றனர்.

தமை ;‡ 1822-இல் தான் சுதேசக் கல்வி நிலைமையைப் பற்றியும் பள்ளிக் கூடங்களைப்பற்றியும் விசாரணை தொடங்க மன்ரோவால் முடிந்தது. நீர்ப் பாசன கட்டிடங்களைப் பழுதுபார்த்தல், சாலைகளைச் செவ்வனே போடல், பஞ்ச நிவாரணம், தொழிலபிவிருத்திபோன்ற இதர விஷயங்களைக் கவனிப்பதற்கு அவர்க்கு இயலாதுபோயிற்று.¶

## பகுதி 3 : சேர்த்துக்கொண்ட இதர நாடுகள் : வெல்லெஸ்லி செய்த இதர காரியங்கள்.

**சூரத்தைப் பெறுதல்**

1800-இல், சூரத்தின் நவாப் இறந்தது கண்டு, வெல்லெஸ்லி அவ்விடத்தின் அரசியலைத் தாமே சாசுவதமாக எடுத்துக்கொள்ளச் சூழ்ந்தார். புதிய நவாப் வெறும் பட்டத்தோடும், ஆண்டுதோறும் கொடுக்கப்பட்ட ஒரு லட்சம் ரூபாயோடும், மேல் வருவாயில் ஐந்திலொரு பங்கோடும் திருப்தியடைய வேண்டியதாயிற்று. • இவ்விஷயத்தில் வெல்லெஸ்லி, முகலாயப் பேரரசினதிகாரத்தை அதற்குப்பின் கம்பெனி ஏற்றுக்கொண்டதென்றும், ஆகையால், கம்பெனி தான் எண்ணியதற்குத்தக, முன்னால் முகலாயப் பேரரசுக்குக் கீழ்ப்படிந்திருந்த எவ்வித அரசாட்சியையும் பரிஷ்கரித்துவிடலாமென்றும் உறுதியுடன் கூறினர். சூரத் கோட்டை, முன்னரே கம்பெனியின் வசமாயிற்று; வெல்லெஸ்லியோ நவாப்பினிடம் புதிய சலுகைகள் அளிக்குமாறு கேட்டார். சூரத்தைச் சேர்த்துக்கொண்ட இச்செயல் மில்* போன்ற இதர ஆசிரியர்களால் ஓர் அக்கிரமச் செயலாகக் கருதப்பட்டது; ஆனால், நல்ல அரசியலே அங்ஙகரில் விரைவில் நிறுவுவதற்கு ஒருகால் இதுவே ஏற்ற வழியாயிருந்திருக்கலாம்.

**அயோத்தி விவகாரம்**

அயோத்தி நாட்டு விவகாரங்கள் இன்னும் சிக்கலாயும் கடினமாயுமிருந்தது. புதிதாக நவாபாகிய **ஸாதத் அலி** தான் நிர்ப்பந்தித்து வாங்கிய வரிகளுக்காக வெறுக்கப்பட்டான். அவனுக்கு விரோதியாகிய **வஸீர் அலி** என்பவன்—உபகாரச் சம்பளம் பெற்றுக் காசியில் தங்கியிருந்தவன்—ஆங்கில ஸ்தானீகரைக் கொலைசெய்வித்துக் கலகஞ் செய்தான். ஆனால் விரைவில் அவன் சிறைபிடிக்கப்பட்டுக் கைதியாகக் கல்கத்தாவுக்கு அனுப்பப்பட்டான். இந்த வஸீர் அலிக்குப் பயந்து, ஸாதத் அலி தன்னிடத்திருந்த

---

‡ For detailed accounts of these refer to Gleig's Life and correspondence of Sir Thomas Munro: Vol. I. Chaps 3-7; Arbuthnot's Sir Thomas Munro: Selections from his Minutes: The Fifth Report (Madras edition), Vol. II. pp. 1-137 and appendix: Kaye's History of the Administration of the East India Company, Chap. III. of Part II and Dutt's Economic History of India under Early British Rule, Chaps. VII, VIII, and IX.

¶ இக்காலத்தில்தான் பருத்தியாடைகள் ஏற்றுமதி செய்யும் நாடாயிருந்த இந்தியா இறக்குமதி செய்யும் நாடாக மாறியது. இம்மாறுதலால், தென்னிந்தியாவில் ஆடை நெய்வோர்களேபட்ட நிலைகளைப்பற்றிப் பரக்க ஒரு பிரஞ்சுப்பாதிரியார் எழுதியுள்ளார்: ஆனால், இவ்விஷயத்தைப்பற்றிச் சென்னை அரசாங்கம் பிறிதேனும் கவலிக்கவில்லை. தமிழ்நாட்டிலும் மேறகுக் கடற்கரைப் பிரதேசத்திலும் அடிமை வியாபாரம் நிலவியதைப் பற்றிச் செய்திகள் கிடட்டின; ஆனால் அதனை யொழிக்க எம்முயற்சியும் மேற்கொள்ளப் படவில்லை. See page 481 of Vol. V. of the Cambridge History.

* "இதுவரையில் ஆங்கிலேயர் செய்தறியாத மரியாதையற்ற பதவி நீக்கம் இதுவேயாகும்; ஏனெனில், இப்பதவி நீக்கத்திற்கு இரையாகியவன் மிகவும் பலங்குன்றி ஒளி மழுங்கிய ஒருவனுவன்." Vol. VI. P 208.

ஆங்கிலச் சேனையை அதிகப்படுத்துமாறு கேட்டுக்கொண்டான். அதற் கேற்ப, அவ்வமயம் காபூல் அரசனுகிய ஸமான்ஷா படையெடுத்து வரு வான்போலிருந்தமையால், அதனைத் தடுப்பதற்காகக் கவர்னர் - ஜெனரல் 20000 பேரடங்கிய சேனையொன்றை நிறுத்துவது அவசியமாகுமென எண்ணினர். ஸாதத் அலி தனது சொந்த துருப்புக்களையே நம்ப முடிய வில்லையென முறைபிட்டுத் தற்காப்புக்காக ஆங்கிலப் படையொன்றை அமைக்குமாறு வேண்டினன். வெல்லெஸ்லி, அவனை முன்னர்க் கொடுத்த தைக் காட்டிலும் அதிக உதவிப் பணம் கொடுக்குமாறு கேட்டார்; மேலும் அவனை அவனது சொந்த துருப்புக்களை யோட்டிவிடுமாறு புத்திமதி கூறி, அதன் மூலம் மேற்படக்கொடுத்த ஆங்கிலப் படைக்காகப் பணம் கொடுக்கு மாறு செய்தார். இவ்வாறு கவர்னர்-ஜெனரல் அயோத்தியின் ராணுவ அதிகாரமனைத்தையும் தாமெடுத்துக்கொள்ளச் சூழ்வது கண்ட நவாப், தானே அரசை விட்டு விலகிவிடுவதாக அச்சுறுத்தினர்; ஆனல், கவர்னர்-ஜெனரலோ, இங்ஙன் நவாப் கூறியதே ஏற்ற சமயமெனக்கொண்டு, 'புதிய நவாப் பேருக்குப் பரிபாலிப்பவனேயன்றி ஆள்பவனல்லனென்றும், நாட்டின் அரசியல் நிர்வாக முற்றும் கம்பெனியைச் சாருமென்றும்' வெளி யிட்டார். ஆனல், நவாப் ராஜிநாமா செய்யவில்லை; உடனே வெல்லெஸ்லி தோஆப்பையும் (கங்கை யமுனையின் ஆற்றிடைக்குறை), ரொஹில்கண்ட் டையும் தம்மிடம் ஒப்புவிக்குமாறு கேட்டார். இப்பிரதேசங்கள் ஒருதரம் ஆங்கிலேயர் வசமாகுமாயின், ஆங்கில நிலப்பகுதிகளால் அயோத்தி வளைக் கப்பட்டு, புற ஆபத்துக்களினின்றும் காக்கப்படும். வெல்லெஸ்லி நவாபைப் பதவியைவிட்டுப் போகச் சொல்லவில்லை; ஆங்கிலப் படையை அதிகப் படுத்துமாறுமட்டும் வேண்டிக்கொண்டார்; மேலும் அதன் பராமரிப்புக் காக உறுதியளிக்கும்படியும் வேண்டினர்; இப் போது அவர் ஆங்கிலத் துருப்புக்களால் நாட்டைப் பிடித்துக் கொள்வேனென அச்சுறுத்தினர். நவாப் இசைய நேர்ந்தது; 1801-ஆம் ஆண்டு நவம்பரில் நவாப் ஒரு புதிய உடன்படிக்கை செய்துகொண் டான். அதன்படி அவன், உதவிப் பணத்திற்காகவும் இனியுண்டாகும் காவற் செலவுக்காகவும் அவர் கேட்ட நிலப்பகுதிகளைக் கொடுத்தான். மற்றும் கங்கையாற்றிலும் இதர நதிகளிலும் சுயேச்சையாகக் கப்பற் போக்கு வரவு செய்யவும் அனுமதித்தான். நவாபின் இராணுவ பலம் மறைந்தொழிந்தது; ஆங்கிலேயர் புதிதாகப் பெற்ற பகுதிகள், நவாபின் ராஜ்யங்கள் புறப் படையெடுப்புக்களால் நலியாதவாறு பெருந்தடையாய் இடைநின்று காப்பாற்றின. வாணிபம் பெருகியது; அலஹாபாத் விளை வில் செழித்தோங்கியது. இந்தப் புதிய பகுதிகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு கவர்னர் - ஜெனரலின் தம்பியாகிய ஹென்றி வெல்லெஸ்லி என்பவர் தலைமையின்கீழமைத்த கமிஷனென்றால் கண்காணிக்கப்பட்டது; தம்பியை நியமித்த இச்செயல் தீவிரமாகக் கண்டிக்கப்பட்டது; வெல் லெஸ்லி பந்து பட்சபாதமுடையவரென அபவாதம் ஏற்பட்டது. வெல் லெஸ்லி செய்த காரியங்களில் அயோத்தி உடன்படிக்கை மிகவும் அதிக்கிர்

**ஸாதத் அலி ஒரு புதிய உடன்படிக் கை செய்துகொள் ளுமாறு ஏற்படல் (1801).**

மீத்த செயலாகுமென்பதை ஒருவரால்லும் மறுக்க இயலாது; "அவர்ர்

**இந்நடவடிக்கையின் கண்டனம்**

லேயே இதை மறுக்க இயலாது; ஆனல் தாம் செய்தது நியாயமெனச் சாதித்திருப்பர்."* இராணுவப் பாதுகாப்பெல்லையைத் திருத்தி ஒழுங்குபட அமைத்தல் ஒரு பெரிய திட்டத்தின் உட்பகுதியாயினும், நெருக்கடியான இச்சமயத்தில் அதுவே ஒரு பிரதான விஷயமாகியது. ஆனல் ஆங்கிலேயரது இத்தலையீட்டினல், நாஜுடைவில் மக்களின் நிலையிலும் யாதொரு முன்னேற்றமும் காணப்படவில்லை; நவாபின் அரசியற்றன்மையும் செம்மைப் படவில்லை.

இராஜீய விஷயமாகக் கவர்னர் ஜெனரல் மேற்கொண்ட முக்கியமான இதர நடவடிக்கைகளுள் பாரசீகத்துக்கனுப்பிய தூதும் ஒன்றாகும்.

**பாரசீகத்திற்குத் தூதனுப்பல்**

அந்நாளு, பாரசீக மன்னர் பிரெஞ்சுக்காரரோடு நட்புக்கொள்ளாதவாறு தடை செய்யவும், அவரை ஸமான்ஷாவுக்குத் தொந்தரவு விளைக்குமாறு நூண்டவும் அனுப்பப்பட்டது. ஏனெனில், அவ்வமயம் நெப்போலியன் பிரெஞ்சு ருஷிய துருப்புக்களை இணைத்து மத்திய ஆசியாவைக் கடந்து, ஹீரட் சிந்துநதி மூலம் படையெடுக்கச் சூழ்ச்சியிட்டான். அனுப்பிய தூது கோஷ்டிக்கு ஜான் மால்கோம் என்ற கீர்த்தி வாய்ந்த வீரர் தலைமை வகித்தார்: அவர் பாரசீக வளைகுடாவிலிருந்த சில தீவுகளைப் பெற முயன்றார்; மேலும், பிரெஞ்சுக்காரரும் ஸமான்ஷாவும் தாக்க நேர்ந்தால் அப்போது ஆங்கிலேயரும் பாரசீகர்களும் ஒருவர்க்கொருவர் பரஸ்பர உதவி செய்ய வேண்டுமென்றும் ஒப்பந்தஞ் செய்ய முயன்றார். ஆனல், இவ்வொப்பந்தங்களை நடைமுறையில் பயிலுமாறு செய்ய அவரால் முடியவில்லை.

1801-இல் வெல்லெஸ்லி பிரெஞ்சு போர்போன், மொரீஷஸ் தீவுகளின்மேல் படையெடுக்க எண்ணினர்; ஏனெனில், அவை இந்து மகாசமுத்திரத்தில் ஆங்கில வியாபாரக் கப்பல்களைப் பிடிக்கவரும் பிரெஞ்சுப் போர்க்கப்பல்களுக்குக் காவலிடங்களாயின; மேலும், "அமைதியான

**பிரெஞ்சுக்காரர்க்கு எதிரிடையாக மேற்கொண்ட இதர நடவடிக்கைகள்**

காலங்களில் அவை பெருவாரியான கபட சூழ்ச்சிகளுக்குப் பிறப்பிடமாகவும் போர்க் காலங்களில் கடற் கொள்ளைக்காரரது கொள்ளைகளுக்கு ஏற்ற வசதியளிக்கு மிடமாகவும்" இருந்தன. ஆனல் ஆங்கில கப்பற்படை ஒத்துழையாமையினல் வெல்லெஸ்லி தமதெண்ணத்தைக் கைவிட நேர்ந்தது. மற்றும் அவர், தன்னம்பிக்கை முனை இந்தியாவைச் சார்ந்த ஒருபுற இராணுவத் தலைமைக் கூறி அதனைக் கைக்கொள்வதற்கு ஒரு படையை அனுப்ப எண்ணினர். இன்னும் அவர் எகிப்தை ஜெயிப்பதற்கு ஒரு சிறு படையையும் சித்தஞ் செய்தார்; உண்மையில் அச்சேனை அந்நாட்டில் இறுத்தது; எனினும், பிரான்ஸோடு சமாதான மேற்பட்டமையால் அதனல் ஒன்றும் செய்ய இயலவில்லை. அவர் மொரீ

---

* ஒவன் சான்பவர், "அக்கால விவகாரங்களைக் கூர்ந்து ஆராயின், இப்படிப்பட்ட ஓர் எண்ணம் தோன்றுவதாயு முற்ற நீக்க முடியாமற் போயிறும். அவ்வெண்ணத்தின் நிஜரம் சிறிது மட்டுப்படும்" என்கின்றனர்:—(p. XVII of A Selection from the Despatches, etc of the Marquess Wellesley).

ஷஸ் தீவைப் பிடித்திருப்பாரேயாகில், அவர் அத்தீவை இந்தியக் காவல் களோடு தொடர்புபடுத்தியிருப்பர். அவர் இந்தியாவின் பாதுகாவலுக்கு ஸிலோன் ஒரு அரண் எனக் கருதி அதனைக் கவர்னர்-ஜெனரலின் நேர் கண்காணிப்பின்கீழ் அமைக்க விரும்பினர். ஏமியன்ஸ் உடன்படிக்கை யேற் பட்டபோது, ஸிலோனிலிருந்த டச்சு ஸ்தலங்கள் நீங்கலாக, ஆங்கிலேயர் வசமுள்ள டச்சு பிரெஞ்சு நிலப்பகுதிகளனைத்தும் திருப்பிக் கொடுத்து விடுமாறு கட்டளையிடப்பட்டது. ஆனால், வெல்லெஸ்லியோ மீண்டும் போர் தொடங்குமென்பதை முன்னமே யறிந்து, புதுச்சேரியை ஆங்கு வந்த பிரெஞ்சுக் கப்பற்படையின் வசம் திருப்பிக் கொடுக்க மறுத்தனர்.

கவர்னர் ஜெனரலும் தளகர்த்தருமிருந்த தம் சகோதரன் வெல் லெஸ்லி என்பானேடு ஒழுங்குபட்டுப் பரந்த முறையில் தேச முற்றும் காவல்களமைக்கச் சூழ்ந்தார். அவர் கரையோரத்

**காவல்களுக்கும் இராணுவத்தைத் திருத்தியமைத்தற்கும் செய்த சூழ்ச்சிகள்**

தையும் வடமேற்கில் ஆங்கில அதிகாரத்துக்கு அப் பாற்பட்டுள்ள எல்லையையும் தாம் பெறப் பெரிதும் முயன்றார். பெரும்பாலும் மராட்டியர் வசமிருந்த மேற்குக் கரையே தாக்குதல்களுக்குள்ளாகி யிருந்தது. ஆனால், 1802-இல் கையிக்வாரோடு செய்துகொண்ட உடன்படிக்கை யால், குஜராத்தின் இராணுவ ராஜீயத் துறைகள் ஆங்கிலேயரின் அதீன மாயின. இதனால் வடக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் நேரலாகும் ஆபத்துக் களுக்குக் காப்பு ஏற்பட்டது. அவர் இந்திய சேனையில் பெருவாரியாக ஐரோப்பியப் போர் வீரர்களைச் சேர்க்க விரும்பினர்: அவர் இந்திய சேனையைப் பெருக்கி ஒரு பேரதிகாரத்தின் கீழேயே கொணர யோசனை யிட்டார்: மூன்று இராஜதானிகளுக்கும் தனித்தனி சேனைகளை யமைக் கும் வழக்கத்தை ஒழித்தார். அவர் சேனையில் பெரும்பாலோர் சிப் பாய் களாயிருப்பதால் ஆபத்து நேரலாமென அஞ்சினர்; ஆகலின், 1801 முடி வில் டைரக்டர்கள் இராணுவப் படைகளைக் குறைக்குமாறு கட்டளையிட்ட போது அவர் அதனைப் புறக்கணித்தார். நிகழ்ந்த சம்பவங்களும் மராட்டி யப் போர்களும் அவரது தீர்மானத்தை நியாயமாக்கின.

இவ்வாண்டுகளிலெல்லாம், வெல்லெஸ்லி அரசியல் முறைமையை முன்னேற்றுவதிலும், ஊழல்களைச் சீர்திருத்துவதிலும் பெரிதும் முயன்றார். அவர் கல்கத்தாவிலிருந்த ஸதர் உயர்தர (அப்பில்) நீதிமன்றத்தைச் சீர்

**ஸதர் நீதிமன்றத்தைச் சீர்திருத்தல்**

திருத்தினர்; *கவுன்ஸிலொடு பட்ட கவர்னர்-ஜெனரலின் நேர் கண்காணிப்பிலிருந்ததை யொழித்து, அக்கண்காணிப்பைக் கம்பெனியின் திறமைவாய்ந்த ஸிவில் உத்தியோகஸ்தர்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட †பிரத்தியேகக் குழுவினராகிய நீதிபதிகளிடம் ஒப்படைத்தார். அவர், சென்னை பம்பாய் இராஜதானிகளின்மேல் பேரதிகாரம் பெற்றுச் செலுத்தவேண்டுமென பேரவா கொண்டார்; அவர் கவர்னர்-ஜெனரலுக்குச் செயல்புரிய இயலு மட்டும் பெருவாரியாகச் சுயேச்சாதிகாரம் கொடுக்கப்படல்வேண்டுமென் றும், அப்பதவியேற்பவர் உயர்குடிப்பிறப்பினராயும் ஆற்றல் சான்றவராயு

* The Governor-General-in Council. † A special body of judges.

மிருக்கும் ஆங்கிலப் பிரபுவாயிருத்தல் வேண்டுமென்றும் கூறினர். அவர் இந்தியாவையடைந்த கம்பெனியின் இளைய ஸிவில் உத்தியோகஸ்தர்கள், நாட்டைப்பற்றிய அறிவில்லாமலும், கட்டுப்பாட்டுக்கடங்காமலும் இருப்பதைக்கண்டு, அவர்களது கடமைகளில் அவர்களைப் பயிற்றுவித்து ஒழுங்கு படுத்த விரும்பினர். இதற்காக, 1800-இல், அவர் போர்ட் வில்லியம் கல்லூரியை நிறுவினர்; ஆங்கு, ஸிவில் உத்தியோகத்தைச் சார்ந்த புதியோர் அனைவரும்—இவர்கள் அக்காலத்தில் 'கைடர்கள்' என வழங்கப்பட்டனர்—மூன்றாண்டுகள் தங்கி, இந்திய பாஷைகளையும், சட்டங்களையும், சரித்திரவரலாறுகளையும் படிக்கவேண்டும். டைரக்டர்கள், அனுவசியமாகப் பெருஞ்செலவை யுண்டாக்கும் இங்கிலண்டிலிருக்கைக்காக வெல்லெஸ்லிமேல் குற்றங்கண்டு கல்லூரியினளவை மட்டுப்படுத்தி, வங்காள ஸிவில் உத்தியோகஸ்தர்களுக்குமட்டும் சுதேச பாஷைகளைக் கற்றுக்கொடுக்கும் தொழிலை மேற்கொள்ளுமாறு வரையறுத்தனர். இதற்குச் சமமாக, அவர்கள் இங்கிலாந்தில் *ஹெய்லிபரி என்றவிடத்தில் இந்தியாவில் சேவைபுரிய நியமிக்கப்பட்டோர்க்கு இந்திய பாஷைகளையும், சட்டங்கள் முதலியவற்றையும் கற்பிக்குமாறு கல்லூரியொன்று நிறுவினர். டைரக்டர்கள் வெல்லெஸ்லியோடு மாறுபட்டிருந்தபோதே, அவர்கள் போர்ட் அவ் கன்ட்ரோலோடும், †காஸில்ரீயா பிரபுவோடும் அவரவர்க்கு முறையே உரிய அதிகாரங்களைப்பற்றிச் சச்சரவிட்டனர்: மேலும், அவர்கள் போர்ட்அவ் கன்ட்ரோலுக்கு உத்தியோகங்களை நிரப்புதலிலும் சம்பளங்களைக் கொடுத்தலிலும் சிறிதேனும் அதிகாரம் இடையாதெனச் சாதித்தனர். வெல்லெஸ்லி எப்பொழுதும் தம் கீழுள்ள நம்பிக்கைக்குரிய பொறுப்புவாய்ந்த வேலைகளுக்கு மிக்க திறமைவாய்ந்தவர்களையே நியமித்து வந்தார். ஆனால் இவர்கள் அடிக்கடி ஒதுக்கப்பட்டனர்; டைரக்டர்களால் நியமிக்கப்பட்டோர் இவர்களது வேலைகளில் அமர்த்தப்பட்டனர்: அவர்கள் பெரும்பாலும் திறமையற்றவர்களாயிருந்தனர். இஃது இப்படியாக, கம்பெனியின் தனியுரிமைக்குக் கேடு விளையுமாறு ஆங்கில வர்த்தகர்களும் பிறரும் செய்த பிரத்தியேக வியாபாரத்தை வெல்லெஸ்லி அபிமானித்தாரென்று அவர்மேல் மற்றொரு குற்றம் காணப்பட்டது. அவர் இந்தியாவிலிருந்த ஆங்கில வர்த்தகர்கள் ஐரோப்பாவுக்குச் சரக்குகளை யேற்றிச் செல்ல இந்தியக் கப்பல்களையே உபயோகிக்குமாறு ஊக்கினர். அவர் ஒரு சிறந்த இந்திய வியாபாரக் கப்பற்றொகுதியை அமைத்து அதற்கேற்ப வியாபாரத்தைப் பெருக்க முயற்சித்தார்: கம்பெனியின் வர்த்தகக் கப்பற்கூட்டம், உண்மையில், செவ்வனே யமைந்த மூஸ்திபுடன் மிக்க திறமைவாய்ந்திருந்தது; ஆனால், அது *சரக்கேற்று கூலியை அதிகமாக்கியது; கம்பெனி இந்தியக் கப்பல்களை உபயோகிப்பதை அநாதரவு செய்தது; அதனால் அந்திய வியாபாரிகளுக்கு நன்மை யேற்பட்டது. போர்ட் அவ் கன்ட்ரோல் வெல்லெஸ்லியை ஆதரித்தது; எனினும், அவரது நோக்க முறைகளும் சூழ்ச்சிகளும் நன்கு நிறைவேறுதற்கு அவசியமாக

போர்ட் வில்லியம் கல்லூரியை நிறுவுதல்

கடையிலாவியர பாரத்தைப் பரிந்து போற்றல்

* Haileybury. † Lord Castlereagh. * Freight,

அவர் கருதிய அவ்வளவு ஆதரவு அது பெறவில்லை. வெல்லெஸ்லி, தடையிலா வியாபாரக்கொள்கையில் தலைநின்று, கம்பெனியோடு சரிசமமாகப் பிரத்தியேக வியாபாரஞ்செய்ய உரிமை கொடுக்கப்படல் வேண்டுமென்றார்: மற்றும், குறைந்தபட்சமுள்ள சரக்கேற்று கூலிக்குக் கப்பல் கொள்ளளவு பாரத்தை அவர்கள் ஏற்ற அனுமதிக்கப்படவேண்டுமென்றும் கூறினர். டைரக்டர்களும் நிர்வாகச் சபையினரும் [புரொப்ரைடர்கள்] இந்த முறையை மேற்கொண்டதற்காக அவரை நிந்தித்தனர். அவரும், தமது செயல்களில் அவர்கள் தலையிடுதலைப் பலமுறை எதிர்த்துள்ளனர்; 1802-இல் ராஜிநாமா செய்யவும் முனைந்துவிட்டனர்.

**டைரக்டர்களுக்கும் வெல்லெஸ்லிக்கும் ஏற்பட்ட மாறுபாடு**

வெல்லெஸ்லியிட்ட போர்களாலும் அவர் இணைத்த நாடுகளாலும் பெருத்த செலவு ஏற்பட்டுச் †செல்வக் குறைவை உண்டாக்கியது; இதனை டைரக்டர்கள் பெரிதும் வெறுத்தனர். ஆனால் மந்திரிச்சபையோ வெல்லெஸ்லியை மீட்டழைக்கச் சித்தமாயில்லை. காளில் ரியாவும் மிட்டும் புதிதாகக் கிடைத்த பகுதிகளை அனுபவமற்ற புதிய ஒரு கவர்னர்-ஜெனரலின்வசம் ஒப்புவிக்க மனமிசையவில்லை; டைரக்டர்களும், கவர்னர்-ஜெனரலின் நோக்க முறையை வீணாக ஆட்சேபிப்பினும், 1804-ஆம் ஆண்டுத் தொடக்கம் வரையில் அவரே பதவி வகித்திருக்க உடன்பட்டனர். அம்மட்டோ! அவரது ஊக்கமிகுதியையும் திறமையையும் புகழ்ந்து பாராட்டிக் கடிதமொன்றும் வரைந்தனர். கல்கத்தாவில் அவர் கட்டியுள்ள பெரிய அரசாங்க நிலையம் (கவர்ன்மெண்ட் ஹவுஸ்) அவர் ஆடம்பரத்திலும் இடம்பத்திலும் கொண்டிருந்த அவாவுக்குச் சான்றாகும்.

## பகுதி 4: பேஷ்வா உடன்படிக்கையும் மராட்டியரோடிட்ட போரும்—வெல்லெஸ்லி வேலையைவிட்டு நீங்குதல்.

ஆங்கில ராஜ்யத்தைப் பரப்பவே, அதனெல்லை மராட்டிய ராஜ்யத்தினெல்லையைத் தொட்டது; மராட்டிய ராஜ்யமோ அரபிக்கடலிலிருந்து வங்காள விரிகுடாவரை தீபகற்பத்திற்குக் குறுக்கே கச்சுக்கட்டியதுபோல் பொலிந்தது. பேஷ்வா, தூணிபுரிமுறையையேற்க மறுத்ததையும்; திப்புவினிடமிருந்து ஐயித்த நாடுகளிலொருபகுதியை ஆங்கிலேயர் கொடுத்தபோது ஏற்க மறுத்ததையும்; தமக்கும் நிஜாமுக்குமுள்ள சச்சரவுக்களில் ஆங்கிலேயரது மத்தியஸ்தத்தையேற்க மறுத்ததையும் முன்னரே கண்டோம். ஆனல், நானு பட்னவிஸோடு பேஷ்வா விரோதமொழிந்த பின்பும், அவர் தமது அவைக்களத்தில் தௌலத்ராவ் ஸிந்தியா பேரதிகாரம் வகித்திருக்குமாறு விட்டார். மராட்டிய ராஜ்யமெங்கும் குழப்பமாயிருந்தது. கோலாபூர் அரசனே பேஷ்வாவோடு வெளிப்படையாகச் சண்டையிட்டான். ஸிந்தியாவின் நாட்டுப்பகுதிகள் கலகமிட்ட ஒருவனல் பாழாக்கப்பட்டன: ஜஸ்வந்த ராவ் ஹொல்கர் மாளவத்தைச் சூறையாடினன்: ராஜபுத்திர நாடுகளும், தங்களுக்குள் நிகழ்ந்த சண்டைகளாலும், மராட்டியரும் பிறருமெடுத்த படையெடுப்புக்

**இரண்டாவது பாஜிராவ் பேஷ்வாவின் நிலைமை**

† Deficit.

களாலும் பாழாயின. இவைகளெல்லாவற்றுக்கும் மேல், 1800-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் நானுபட்னவிஸ் மரணமடைந்தார்; "அவர் பாடையேறியபோது, அவருடன் மராட்டிய அரசாங்கத்தின் அறிவும் அளவறிந்து போகும் தன்மையும் பாடையேறின". நானு இருக்கும் வரையில் பேஷ்வாவுக்கிருந்த அதிகாரத்தை ஐரோப்பியராதிக்கத்தின்கீழ் வாராதவாறு எப்போதும் விலக்கியே வைக்க அரும்பாடுபட்டார். அவர் சாகும் வரையில், பேஷ்வாவின் குடையின்கீழ் மராட்டியர் ஐக்கியப்பட்டிருத்தல் வேண்டுமென்ற கொள்கையை விடாது தழுவியிருந்தார்: [இக்கொள்கை அக்காலத்திலேயே கிழப்பேச்சாய் முடிந்தது]. அவர் தம்மாலியன்றவரையில், மராட்டியத்தலைவர்கூட்டறவு கேடுறுதவாறு செய்தார். தமது பிற்கால வாழ்க்கையில் கட்சிச் சூழ்ச்சிகளுக்கு ஆட்பட்டாராயினும், அவர் "மராட்டியத் தலைவர்கள் தங்களது பகைவர்மேலெடுக்கவேண்டிய படைக்கலங்களைத் தங்களுக்குள்ளேயே ஒருவர் மேலொருவர் எடுத்து விடாவாறு அவர்களைச் சாந்தப்படுத்தி" வந்தார். பலபடச் சொல்லியென்! உண்மையில் அவர் அக்காலத்திலோர் புகழ் சான்ற ராஜநீதி நிபுணராகத் துலங்கினர்; அவரது செயல்கள் எஞ்ஞான்றும் தாய்நாட்டன்பு தழுவிக் கிடக்கும்; அவர் ஆங்கிலேயரைப் பெரிதும் மதித்து, அவர்களது ஆட்சியின் திடத்தினை வியந்து போற்றினர்; எனினும் அவர் மராட்டிய நாட்டில் ஆங்கிலச் செல்வாக்கு காலுமிடாதவாறு வெறுத்தார்.*

**நானுபட்னவிஸ் செய்த சேவகங்கள் —அவரது மரணம் (1800)**

நானு இறந்து போகவே, பேஷ்வா தௌலத்ராவ் ஸிந்தியாவின்கீழ் அடிமைபோலாயினர். அவர் ஜஸ்வந்தராவ் ஹொல்கரி னுதவியை நாடினர். அவன் கொள்ளைக்கூட்டத்தினரடங்கிய பெருஞ்சேனை யொன்று சித்தப்படுத்தினன்; அதனில் பிலர்கள், பிண்டாரிகள், ஆப்கானியர், மராட்டியர் முதலியோர் அடங்கியிருந்தனர், பிண்டாரியர் தலைவனுகிய **அமிர் கானும்** அச்சேனையி லொருவனவன். மற்றும், நன்கு பயிற்றப்பட்ட பலத்த பிரெஞ்சு அணிவகுப்புக்களும் அடங்கியிருந்தன. ஜஸ்வந்தராவ் துகோஜியின் புத்திரனவன்; தற்போது அவன், பூனாவில் கைதியாயிருந்த தன் மருகனுகிய கண்டேராவ் ஹொல்கருக்குப் பதிலாகத் தொழில் புரிவதாக உரிமை கொண்டாடினன். அவன் ஸிந்தியாவின் நாடுகளைக் கொள்ளை யடித்து, டெர்ணாக்கையும் அவனது நன்கு பயிற்றப்பட்ட படை வகுப்புக்களையும் தன் பக்கல் சாருமாறு செய்து கொண்டான். இந்தப் பெருத்த விரோதியை யெதிர்ப்பதற்காக ஸிந்தியா

**ஜஸ்வந்தராவ் ஹொல்கர் ஸிந்தியாவோடு போரிடல்**

---

* "நானுபட்னவிஸ், உண்மையாகவே சிறந்த ஒரு ராஜநீதி நிபுணராவர்; சுயதைரியக் குறைவினலும், கோட்பாட்டுக் கடங்காத பேரவாவினலும் சில முக்கிய குறைபாடுகள் அவரிடம் தோன்றின. அவரது வாழ்க்கையின் துன்பகரமான பிற்காலப் புகுநியில், அவர் ஓர் உண்மைத் தேசாபிமானியின் பற்றுள்ளமும் உணர்ச்சிகளும் கொண்டு தொழில் நிகழ்த்தினராதலின், யாவராலும் புகழ்ந்து பாராட்டுதற் குரியராவர். இதற்கு ஆங்கிலேய மராட்டிய சரித்திர வல்லுநர் சான்று பகருவர்" p. 156 of Macdonald's Memoir of the Life of Nana Fadnavis. (reprint of 1927) and p. 250 of Vol. II of Grant-Duff: "எவ்விதத்தில் ஆராய்ந்து பார்ப்பினும் நானுபட்னவிஸ் புகழ்மலிந்த பெரியோராவர் என்பது மறுக்கலாகாததோர் உண்மையாகும்" p. 192 of Vol. III of A History of the Maratha People by Kincaid and Parasnis.

பூனாவைவிட்டு வரநேர்ந்தது; முதலில் உஜ்ஜயினிக் கருகில் நன்கு தோற் கடிக்கப்படினும், பின்னர் இந்தூரில் ஹொல்கரைத் தடுத்து நின்றான்.

பாஜிராவ் ஸிந்தியாவின் கட்டினின்று விலகித் திடீரெனச் சுதந்திர மடைந்ததற்குப் பொறாமை மகிழ்ந்து, தம் விரோதிகளைப் பழிவாங்கக் கொலைத் தொழிலை விரைவில் மேற்கொண்டார். ஜஸ்வந்தராவ் ஹொல் கரின் சகோதரனை யூனாவின் காலால் இடறவைத்துக் கொன்றார். இக் கொடுஞ் செயலால் ஜஸ்வந்தராவ் வெகுண்டு, பூனை மீன்மேல் நேரே படையொடு வந்தான்: பூனை வுக் கருகில் ஹொல்கருக்கும் பேஷ்வாவின் சேனைக் கும் போர் ஏற்பட்டது; ஸிந்தியாவின் படையி லொரு பகுதி பேஷ்வாவின் சேனையொடு கலந்து போரிட்டது. நிகழ்ந்த சண்டையில் ஜஸ்வந்தராவ் பெரு வெற்றியுற்றார். போரில் கலவாமல் விலகிய பேஷ்வா **மீன்கடு**க்கு ஓடிப்போய்ப் பின்புறெய்கடுக்கு ஓடி முடிவில் **பேஸீன்** யடைந்து, ஆங்கிலேய ராகரவின் கீழ் அமர்ந்தார். ஜஸ்வந்தராவ் பூனாவை நொறுக்கிப் பாஜிராவின் ஸ்வீகார சகோதரனாகிய **அமிருதராவ்** என்பவரைப் புது பேஷ்வாவாக நியமித்தான்.

**ஹொல்கரால் பாஜிராவ் பூனாவிலிருந்து துரத்தப்பட்டல்**

பாஜிராவ் இப்போர் தொடங்குதற்கு முன்னமே ஆங்கிலேய ருதவியை நாடினர். ஆனால் அப்போது அவர்கள் விரும்பியபடி துணேபுரி உடன் படிக்கை நிபந்தனைகளை யேற்க அவர் உடன்பட வில்லை. இப்போது அவர் **பேஸீன் உடன்படிக்கை** யைச் செய்துகொண்டார். அதன்படி, ஒரு துணைப் படை ராஜ்யத்தில் வைக்கப்படவேண்டும்; ஆங்கி லேயரின் அனுமதியின்றிப் பேஷ்வா வேறெருவருடனும் சம்பந்தங்கள் நிகழ்த்தக்கூடாது; பேஷ்வா தமக்கும் நிஜாமுக்கும், தமக்கும் கெயிக் வாருக்குமுள்ள சச்சரவுகளை ஆங்கிலேய மத்தியஸ்தர்களைக் கொண்டு தீர்த்துக்கொள்ள வேண்டும். இந்த உடன்படிக்கையால் பல விளைவுகள் ஏற்பட்டன. அது, மராட்டியக் கூட்டுறவு தலைமையின் கட்டை முற்றி லும் குலைத்தது; இப் போரிடியினின்றும் அது திரும்பத் தலேதூக்கவே யில்லை. எனினும், மராட்டியத் தலைவர்கள் இன்னும் பேஷ்வாவையே தமது தேச ஐக்கியத்தின் நடுநாயகமாகக் கருதி யிருந்தனர். ஆனல் இவ் வுடன்படிக்கையால் அவர்கள் பெரிதும் அஞ்சினர்; ஏனெனில், இவ் வுடன்படிக்கையைச் சிறிது மீறினலும் ஆங்கிலேயர் நீதிரமாக ஒறுக்கும் சக்தியும் மனேதிடமும் வாய்ந்தவரா யிருந்தனர். மேலும் பேஷ்வா ஆங்கிலேயர் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்த இச்செயலில் அவர்கள் ''மராட் டியசாம்ராஜ்யம் தன் குற்றுயிர்க்காக இடும் இறுதிப்போரின் துவக்கத்தைக்'' கண்டனர். மற்றும், தாம் தூணேபுரி உடன்படிக்கை முறையை ஏற்றுக் கொண்டால் தமது சுயேச்சாதிகாரம் அழிந்தொழிவதையும் உணர்ந்தனர்.

**அவர் பேஸீன் உடன்படிக்கை யைச் செய்து கொள்ளல் (1802)**

இனி, அவர்கள் மராட்டியக் கூட்டுறவிலிருந்து கொண்டே ஆங்கில அதிகாரத்திற்குட்படாது சுயேச் சையா யிருக்க இயலாது. **ஓவன்** என்னும் ஆசிரிய ரின் கருத்துப்படி இந்த உடன்படிக்கையால் மேற் கிந்தியாவில் ஆங்கிலேயரின் நிலேமை முற்றிலும் மாறியது; 'இந்தியாவில்

**உடன்படிக்கையின் உள்ளுறைபொருள்— அதனுலேற்பட்ட விளைவுகள்**

ஆங்கிலராஜ்யம் என்ற சொற்றொடர் இந்தியாவாகிய ஆங்கிலராஜ்யம்' என மாறியது.* வெல்லெஸ்லி இவ்வுடன்படிக்கையால் இரண்டாம் விளைவு நற்பண்பு வழியொழுகும் எனப் பெரிதும் மகிழ்ந்தார். அவர் மராட்டியத் தலைவர்களுக்குள் பொறுமையால் ஏற்பட்ட சச்சரவுகளாலும், ஆங்கிலப் படைகளிடங்கொண்ட பயத்தாலும், போரே நிகழாது போகலாமெனக் கருதினர். இந்த உடன்படிக்கை இதர மராட்டிய அதிகாரிகளுக்கு எதிரிடையாகப் பேஷ்வாவது அரசாங்கத்தின் தகுதியை மீட்டுக் கொடுப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள தென்றும், மராட்டிய ராஜ்யத்தைப் பேஷ்வாவின் மூலம் ஆங்கிலேயர் ஆள்வதற்காக இட்ட சூழ்ச்சியைக் கொண்டுள்ளது அன்றென்றும் வெளியிட்டனர். ஆனால் சரித்திர ஆசிரியராகிய மில் சொல்லுவதாவது:—வெல்லெஸ்லி இந்த உடன்படிக்கையால் ஸிந்தியா பான்ஸ்லேயோடு சண்டை யேற்படுவது நிச்சயமென்பதை யுணர்ந்திருக்கவேண்டும்; மற்றும், இவ்வுடன்படிக்கையால் இதர மராட்டிய அதிகாரங்களோடு யாதொரு ஒப்பந்தமும் ஏற்படவில்லை; இந்தியாவில் பிரெஞ்சு உதவிப்படைகளிறங்குவதால் நேரக்கூடும் ஆபத்தும் நீங்கிற்றில்லது "இந்தப் பேஸீன் உடன்படிக்கையால் மராட்டிய ராஜ்யங்களுக்கு ஏற்பட்ட கட்டுப்பாடு மிகவும் வலுத்தது: இத்தகைய கட்டுப்பாடு இதற்கு முன்னும் பின்னும் உருவெடுத்ததில்லை யெனலாம். ஆங்கிலேயர் இத்தகைய பெரும் யுகைவரை எதிரிட நேர்ந்தது"†

இப்படியிருக்க, ஹொல்கர் புது பேஷ்வாவைச் சிம்மாசன மேற்றியதை ஆங்கிலேயர் விரும்பவில்லை. ஸிந்தியாவோ, பூனாவில் தனக்கு இருந்த செல்வாக்கு ஒழிந்ததைக் கண்டு, இவ்வுடன்படிக்கையால் தனக்குக் கிட்டிய உயர் பதவியை இழக்க நேர்ந்ததென வெளியிட்டான். அவன், ஜஸ்வந்தராவை ஆங்கிலேயருக்கு கெதிராகத் தன்னுடன் சேரும்படி தூண்டினான்; ஆனால் ஜஸ்வந்தராவ் சோர்வினாலோ அல்லது முன் யோசனையின்றியோ மாளவம் சேர்ந்து விவகாரங்களின் போக்கை எதிர்பார்த்து நின்றான். அவன், ஒருகால் ஸிந்தியா ஆங்கிலேயரோடு போரில் சிக்கிக்கொண்டால், அவன் நாடுகளைக் கொள்ளையிட விரும்பினான் போலும். ஸிந்தியா நருமதை நதியைக் கடந்தான்; ஆங்கிலேயர் நாடிய உடன்படிக்கையை ஏற்க மறுத்து, பீரார் அரசனோடு அளவளாவினான். இங்ஙனம், களகர்த்தனாகிய வெல்லெஸ்லியின் ஆதரவின்கீழ் பாஜிராவ் மறுபடியும் பேஷ்வாவாகிய பிறகு, (1803, மேமீ) விவகாரங்கள் விரைவாக முற்றி அச்சத்தை விளைவித்தன. ஸிந்தியாவும் பான்ஸ்லேயும் போரிடத் துணிந்து தங்கள் படைகளைக் காண்டெஷிலுள்ள புர்ஹான்பூருக்கருகே திரட்டினர். அவர்கள் பேஷ்வா பேஸீன் உடன்படிக்கையைச் செய்துகொள்வதற்கு முன்பு, தங்களோடு ஆலோசித்து தங்களது சம்மதத்தைப் பெற்றிருக்க வேண்டுமென்று வாதித்தனர். இப்படியிருப்ப, வெல்லெஸ்லி தளகர்த்தன் விடுத்த அறிக்கைகள் அக்காலகிலைமை முற்றையும் எடுத்துக்காட்டி, ஆங்கிலேயர் மேற்

**ஸிந்தியாவும் பான்ஸ்லேயும் ஆங்கிலேயருக்கு எதிராகச் சேர்ந்து கொள்ளல்**

* Selections from the Wellington Despatches p. 46 of the Introduction.
† P. E. Roberts: India under Wellesley. Note on Chap. XVIII pp. 206-8.

கொண்ட செயலே ஆகரித்தது. இதனால் விவகாரங்கள் மிக மூற்றிப் போயின; அவன் அவர்களை நோக்கி, அமைதியுடன் திரும்பிப் போகா விடின், போர் நிகழுமென அச்சுறுத்தினன்.

**போர் தொடங்கல் (ஆகஸ்ட், 1803)**

1803-ஆம் ஆண்டு ஆகஸ்ட்மீ போர்க் கருமங்கள் தொடங்கின. ஆங்கிலேயர்கள் இந்தியாவிலிட்ட வெற்றிகரமான போர்களில் இதுவும் ஒன்றாகும்; இப்போரில் பல இராணுவத் திறமைகள் வெளிப்பட்டன. நான்கு முகங்களில் போர் நிகழ்ந்தன: அவை தக்காணத்தின் வடபகுதி, டில்லி ஆக்ராவின் அக்கம்பக்கம், குஜராத், ஓரிஸ்ஸா என்பனவாம். வெல்லெஸ்லி தளகர்த்தன் தக்காணத்திலிருந்த மூலப்படைகொண்டு போர்நடத்துமாறு நியமிக்கப்பட்டான். தெற்கிலிருந்த மராட்டியத் தலைவர்களைப் போர்க்கெழாவாறு அடக்க, ஸ்டுவர்ட் தளகர்த்தனின்கீழ் ஒரு படை நிறுத்தப்பட்டது. அதேமாதிரி வேறொரு சேனை குஜராத்திலும் நிறுத்தப்பட்டது. கிழக்கில் பான்ஸ்லேயின் வசமிருந்த கடகத்தைத் (Cuttack) தாக்குதற்கு ஒரு சேனை சித்தமாயிருந்தது. ஹிந்துஸ்தானத்தில், சேனைத்தலைவனாயிருந்த **ஜெனரல் லேக்** ஸிந்தியாவினிடமுள்ள பிரெஞ்சுத் துருப்புக்களையழித்து தோஆப்பிலுள்ள அவரது நாடுகளையும் டில்லியையும் ஆக்ராவையும் கைப்பற்றுமாறு அமைந்தான். கவர்னர்-ஜெனரல் ஆங்கில எல்லையை வடயமுனைவரையிலும் பரப்பவும், பந்தல்கண்டின் சில பகுதிகளை வெல்லவும், கூர்ஜரத்தில் புரோச்சையும், ஓரிஸ்ஸாவில் கடகம் பாலஸுர் இவைகளையும் கைக்கொள்ளவும் விரும்பினர். பூகலாய சக்கரவர்த்தி ஷாஆலத்தை ஸிந்தியாவின் அதீனத்திலிலாதபடி விடுவித்து ஆங்கிலேயர் பாதுகாப்பின் கீழ் கொணரவேண்டும்.

**ஆங்கிலேயர் போர் நிகழ்த்திய வகை**

கூர்ஜரத்திலும் கடகத்திலும் நிகழ்ந்த படையெடுப்புகள் எளிதாயிருந்தன. பந்தல்கண்டும் எளிதில் வெல்லப்பட்டது. போர்க்கருமங்களிற் பெரும்பாலன லேக், வெல்லெஸ்லி தளகர்த்தர்களால் மேற்கொள்ளப்பட்டன. வெல்லெஸ்லி அஹமத்நகரைத் தாக்குதலின்மூலம் தக்காணப் படையெடுப்பைத் தொடங்கினன். நருமதைக்குத் தெற்கேயுள்ள பகுதிகளிலிருந்த ஸிந்தியாவின் பெருத்த படைநிலையங்களொடுதான் தீவிரமாகப் போர்களிட நேர்ந்தது. அவன் பிறகு அஜந்தாக்கணவாய்க்கருகிலுள்ள அஸ்ஸேயென்ற இடத்தில் சந்தித்தான். அவ்விடத்தில் ஒரு பெரு வெற்றி யடைந்தான். 'தக்காண சரித்திரவரலாற்றில் குறிக்கப்பட்டுள்ள வெற்றிகளனைத்தினும் இவ்வெற்றியே சாலச் சிறந்ததென்று க்ராண்ட்-டப் (Grant-Duff) கூறுகிறார் (செப்டம்பர், 1803). உண்மையில், இவ்வெற்றி ஸிந்தியாவின் பிரெஞ்சுப் படைகளின்மேல் பெற்ற வெற்றியாகும். இதற்குச் சிறிது பின்பு, புர்ஹான்பூருக்குக் கிழக்கே **ஆர்கான்** என்ற இடத்தில் பான்ஸ்லேயின் படைகளின்மேல் மற்றொரு பெருவெற்றி யடைந்தனர். ஆர்கான் வெற்றிக்குச் சற்று முன்பு, ஆங்கிலப்படைகள் தக்காணத்தில் ஸிந்தியாவின்வசம் எஞ்சி

**வெல்லெஸ்லி தளகர்த்தனின் செயல்கள்—அஸ்ஸே**

யிருந்த புர்ஹான்பூரையும் அஸீர்கர் கோட்டையையும் கைப்பற்றினர். வெல்லெஸ்லி ஆர்காண் வெற்றியோடு நிற்காமல், பலத்த கோட்டையாகிய கவில்கரையும் கைப்பற்றிப் பான்ஸ்லேயின் தலைநகராகிய நாகபுரியின் மேற் செல்லத் தொடங்கினன். இவ்வமயம் ஸிந்தியா சமாதானத்தை நாடி வந்தான். அவனோடு ஒரு சமாதானம் செய்து கொள்ளப்பட்டது. அது சிறிது காலம் நிலவியது. ஓராண்டு முடிவதற்குள் பீரார் அரசனோடு தேவகான் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. அதன் படி பீரார் அரசன், ஆங்கிலப்படையொன்றைத் தன் நாட்டிலேற்றுக்கொள்ளுதல் நீங்கலாக, துணைபுரிமுறை உடன் படிக்கையின் ஏனைய நிபந்தனைகளை யெல்லாம் ஏற்றுக்கொள்ள உடன் பட்டான். அவன் நாகபுரியில் ஓர் ஆங்கில ஸ்தானிகரை வைத்துக்கொள்ள வும், தமக்கும் நிஜாமுக்கும் உள்ள வழக்குகளை ஆங்கிலேயரது மத்தியஸ் தத்திற்கு விட்டுவிடவும், ஆங்கிலேயரோடு சண்டையிடும் தேசத்தினரை வேயும் தன்கீழ் வேலையிலமர்த்தாமலிருக்கவும் ஒத்துக்கொண்டார். கடகம் பாலஸுர் பகுதிகளும், வார்தா நதிக்கு மேற்கிலுள்ள பான்ஸ்லே யின் பகுதிகளும் இப்போது ஆங்கிலேயர் கைவசமாயின. முன்னைய பகுதிகள் வங்காள சென்னை மாகாணங்களை யொன்றுயிணைத்தன. பின்னைய பகுதிகள் நிஜாமுக்குக் கொடுக்கப்பட்டன.

**பான்ஸ்லேயோடு தேவகான் உடன் படிக்கை செய்து கொள்ளல்**

ஹிந்துஸ்தானத்தில் ஜெனரல் லேக் எடுத்த படையெடுப்பும் வெற்றிக ரமாகவே முடிந்தது. அவன், விரைவில் ஸிந்தியாவினிடம் பெரான் தலைமை யிலிருந்த திறமைமிக்க பிரெஞ்சுப் படைகளை முறி யடித்தான். ஸிந்தியா தக்காணத்திலேயே நீட்டித் திருந்தமையால் பெரான் ஓர் அரசனைப்போல் அதி காரம் செலுத்தலானன். அவன் ராஜபுத்திர சமஸ்தானங்களிலிருந்து கப்பம் வசூலித்து, டில்லி, ஆக்ரா, அலிகார் இவைகளின் மேல் ஆணை செலுத்தினன். ஆனால், ஆங்கிலேயரோடு சண்டையிடத் துணியவில்லை. ஏனெனில், ஸிந்தியா இனிமேலும் தன்னை அதிகாரஞ் செலுத்த விட மாட்டானென்பது அவனுக்குத் தெரியும். லேக் அலிகாரைக் கைப்பற்றிய போது, பெரான் ஆங்கில தளகர்த்தலோடு போரிட விரும்பாது ஸிந்தியா வின் கீழ் வேலையிலிருந்து நீங்கி, ஆங்கிலேயரின் பாதுகாப்போடு லக்னே அடைந்தான். பெரானுக்குப் பின்னர் சேனைத் தலைவனுகிய *போர்க்வின் திறமையற்றவன்; அவன் டில்லிச்சண்டையில் தோல்வியுற்றான். லேக், கிழக் குருட்டு முகலாயச் சக்கரவர்த்தியை ஆங்கிலேயர் பாதுகாப்பில் வைத்தான், "இச்செயல் யாதொரு நற்பயனையும் அளிக்காமற் போயினும், இது பல தீயவினைவுகளை நேராத படி விலக்கியது" என வெல்லெஸ்லி பிரபு கருதினர். ஏனெனில், பிரெஞ்சு ஏஜெண்டுகளின் தூண்டுதலினல், முகலாய மன்னர் பிரான்ஸுக் குப் பேருதவி புரிபவனுய் ஆகக்கூடும். முகலாயச் சக்கரவர்த்திக்கு டில்லி மேலும் அதனைச் சூழ்ந்துள்ள பிரதேசத்தின் மேலும் பேருக்கு அதிகாரம்

**டில்லியைப் பிடித்தலும் முகலாயச் சக்கரவர்த்தியைக் காவற்படுத்தலும்**

**லேக்கின் படையெடுப்பு**

* Bourquin.

கொடுக்கப்பட்டது. ஆனால் உண்மையில் எல்லா அதிகாரமும் ஆங்கில் ஸ்தானீகரிடம் இருந்தது. அவர் முகலாயப் பேரரசின் நடவடிக்கைகளையே தீவிரமாக மேற்பார்வையிட்டு வந்தார்.

இப்படியிருப்ப, விரைவிலேயே லேக் பரதபுர அரசனோடு உடன் படிக்கை செய்துகொண்டு ஆக்ராவைக் கைப்பற்றினன். கீர்த்திபெற்ற லாஸ்வாரிச் சண்டையில் தீவிரமாகப் போரிட்டுப் பெருங்கொலை நிகழ்ந்த பின்பு, ஸிந்தியாவின் எஞ்சிய பிரெஞ்சுப் படைகள் முற்றிலும் முறியடிக்கப்பட்டன. ஸிந்தியா டில்லியையும், யமுனையின் இருமருங்கிலுமுள்ள தனது நாடுகளையும் இழந்தான். முகலாயச் சக்ரவர்த்தியும் அவனது பாதுகாப்பிலிருந்து நீங்கினன். தக்காணத்தில் அவனது ராஜ்யம் மறைந்தொழிந்தது. அவனது நண்பனை பான்ஸ்லே ராஜாவும் சமாதானஞ் செய்து கொண்டான். இவ்வாறு எங்கணும் பங்கப்படவே, அவன் 1803 டிசம்பரில், ஸர்ஜி அஞ்ஜன்கான் உடன்படிக்கையைச் செய்துகொண்டான். அதன்படி அவன் கங்கைக்கும் யமுனைக்கும் இடையிலுள்ள பிரதேசங்களையும், ஆமது நகரையும், கூர்ஜரத்தில் புரோச்சையும், ஜெயபுரி ஜோதிபுரி கோஹட் இவற்றிற்கு வடக்கேயுள்ள தனது பிரதேசங்களையும், ஆங்கிலேயர்க்குக் கொடுத்துவிட நேர்ந்தது. *ஆங்கிலேயரோடு பகைமை பாராட்டும் எத்தேசத்திய குடிகளையும் தன்கீழ் வேலையிலமர்த்தக்கூடாது. அவன் சிறிது மாறுதலொடுபட்ட துணைபுரிமுறை உடன் படிக்கையொன்று செய்துகொள்ள நேர்ந்தது. ஜெயபுரி, ஜோதிபுரி, *பூந்தி இவைகளை யாண்டுவந்த ராஜபுத்திர அரசர்களோடும் பரதபுர ஜாட் அரசரோடும் உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. எனினும், அவர்களிடமிருந்து கப்பமொன்றும் வசூலிக்கப்படவில்லை. உள் நாட்டு விவகாரங்களில் தலையிடும் உரிமையும் வேண்டப்படவில்லை. கோஹட் ராணுவோடு செய்துகொண்ட உடன்படிக்கையால் கம்பெனிக்குப் புகழ் பெற்ற குவாலியர் கோட்டை கிடைத்தது.

ஸர்ஜி-அஞ்ஜன் கான் உடன் படிக்கை

வெல்லெஸ்லி, தேவகான் ஸர்ஜி-அஞ்ஜன்கான் ஆகிய இவ்விரு உடன் படிக்கைகளால் முறையே பான்ஸ்லே ஸிந்தியாவின் இராணுவ பலத்தை யழித்ததாகவும், பிரெஞ்சு வலிமையை யொடுக்கியதாகவும், ஆங்கில அதிகாரத்தை டில்லி வரையில் பரப்பியதாகவும் இறுமாப்புடன் பெருமையடித்துக்கொண்டார். உண்மையில் ஆங்கிலேயர் வெற்றிக்குப் பல காரணங்கள் உள. லேக்கும், ஜெனரல் வெல்லெஸ்லியும் பகை வரை அடுத்தடுத்துத் தாக்கி அவர்களை ஒன்று சேரவோ அல்லது சமாளிக்கவோ முடியாதவாறு திணறவைத்தனர். ஸிந்தியாவே ஹொல்கரோடு இட்ட சண்டையால் மிக மெலிவுற்றான். மராட்டியரும் தமது பழைய கொள்ளைமுறைச் சண்டைகளையும் சூறைகளையும்† விடுத்தனர். "ஐரோப்பிய முறையில் அவர்களைப்பயிற்றுவித்து அணி வகுப்புகளையும்

ஆங்கிலேயர் வெற்றி பெற்றதற்குக் காரணங்கள்

*Bundi † Guerilla and predatory warfare

படைப்பிரிவுகளையும் உண்டாக்கியமையால் இதர சுதேச அதிகாரங்களால் அவர்களை வெல்லமுடியாதெனினும், ஐரோப்பிய சேனைகளுக்கெதிரே உறுதியோடு தாங்கி நின்றுலும் அவைகள் தோல்வியடைய வேண்டியதாகத்தான் ஏற்பட்டது." மராட்டிய சேனைகளும் மராட்டிய சாதியினரையே கொண்டதாக அமையவில்லை. அதற்கு மாறுக, ஆப்கானியர், பட்டாணியர், ராஜபுத்திரர், கோலர், கர்டர், பிண்டாரியர் என்ற நானுவித சாதியினரினின்றும் திரட்டப்பட்ட பேர்வீரர்களைக் கொண்டிருந்தன. காலாட்படை சூழ்ச்சிகளுக்கும் பிரங்கிப் படைகளுக்கும் மிகுந்த பிராபல்யம் கொடுத்துவிட்டமையால், "படைச் செலவும் துணைப்படைப் போக்கும் அற்றுப் போக, அவற்றிற்குப் பதிலாக யுத்தநடைமுறை ஒரே சண்டைகளாகவும் முற்றுகைகளாகவும் மாறிப் போயது" என்று மன்ரோ கூறுகிறார். அங்கியர் தொகை விரைவில் பெருகியது. இந்தியாவில் பல பாகங்களினின்றும் திரட்டப்பட்ட கூலிக்குப் போரிடும்வீரர்களே மராட்டியப்படைகளில் பெரும்பாலும் காணப்பட்டனர். அவைகளுக்குப் பெரும்பாலும் ஐரோப்பியப் பதிதர்களே தலைமை வகித்தனர். அவர்களடந்ததோல்விகளோ அவர்களைத் தலையெடாவாறு நசுக்கித் தீரக் காணுமாறு அமைந்தன.

**சுதேச அரசர்களின் படைகளினால் பயனின்மை**

அவர்களது ஒழுங்குபட்ட துருப்புக்களும் கனத்த பிரங்கிகளும் விரைந்து சென்று துணிகரமாகச் சண்டையிடாதபடி தடைகளாயிருந்தன. ஒருகரம் அவைகள் இதறுண்டோ அல்லது அழிக்கப்பட்டோ போகுமாயின், மீண்டும் அவைகளை எளிதில் நிறுவுவதென்பது அசாத்தியமாகும்; ஏனெனில், எய்ப்பினில்வைப்பாக வைத்த நன்கு பயின்ற இராணுவ அதிகாரிகளும், பிரங்கிப்படைகளும் போர்க்கருவிகளும் வெகு சொற்பமேயாகும். பிரங்கிகளையும் பயின்ற வீரர்களையும் பறிகொடுக்க நேருமாயின் எந்தச் சுதேச மன்னனலும் அவற்றை மீண்டும் அமைப்பது இயலாத காரியமே; அவனடையும் பெருத்த தோல்வியே உண்மையில் அவனுக்குக் கூற்றுவனுய் விட்டது.*

வெல்லெஸ்லி, மேற்கூறிய வெற்றிகளால் ஆங்கிலேயர் நிகரற்ற பேரதிகார நிலையையும் மந்தியஸ்தராயிலங்கும் நிலையையும் அடைந்தோங்கினர் எனக்கருதியது பொருத்தமற்றது; அவர் தாம் கொண்டாடிய உரிமைகளுக்குச் சுதேச மன்னர்கள் எளிதில் இணங்குவதென ஆலோ

---

* See Robert's Wellesley, p. 232 and Lyall's British Dominion in India (4th Edn.) pp. 225—7. **லயல்** சொல்வதாவது:—"சுதேச மன்னர்கள் ஐரோப்பிய இராணுவ முறைகளை மேற்கொள்ள முயன்றமை, புலியைப் பரத்திப் பூனை குதிக்கொண்டதுபோலாகி ஏமாற்றத்தை விளைவித்தது. அவர்கள் ஆங்கிலேயரோடு சமமாகப் போரிடுவதெனவெண்ணினர்; ஆனுல், உண்மையில் அவர்களுக்குக் கேடே விளைந்தது; தங்கள் வலிமையினளவைத் தாமேயறியாது அன்னிய உத்தியோகஸ்தர்களின்கீழ் பெருத்த இராணுவ நிலையங்களைக் கண்காணிக்க விடுத்தது பெரும் தவருகும்; இந்த இராணுவ நிலையங்களை அற அழிப்பதோ அல்லது தெதவடிப்பதோ ஆங்கில அதிகாரத்தின் முக்கிய குறிக்கோளாயிற்று." இவ்விதமாக ஆங்கிலேயர் போராதிக்கம் பெறலாயினர்: அதற்குப் பல காரணங்கள் உள:—அவர்கள் சுதேச மன்னர்களைக் சாட்டிலும் பயின்ற போர் வீரர்கள்: அவர்களது உறுதியில்லை யாதொரு அரசரையோ, தளகர்த்தனையோ, சண்டையின் முடிவையோ பொறுத்திருக்குமாறு அமையவில்லை; அவர்களது ஆக்க மூலங்களுக்கு எய்ப்பினில் வைப்பாகப் பெரும் பணமும், உபகரணங்களும் வீரர்களுமிருந்தனர்.

சீனியின்றி நிர்ணயித்தார். மேலும் ஆங்கில மந்திரிச் சபையும், 'கவர்னர் ஜெனரல் 1784, 1793 ஆண்டைய பார்லிமெண்ட் சட்டங்களுக்கு விரோதமாக வெகுதூரம் சென்றுள்ளாரென்றும், அரசியல் நிர்வாகத்தைப் பல சிக்கல்களுக்குள்ளாக்கி வீணே பெருக்கினரென்றும், சாமானிய அதிகாரிகளால் அந்நிர்வாகத்தைக் கடைபோகச் செய்யமுடியாதென்றும்' எண்ணினர். வெல்லெஸ்லி, இதுவரை தூர விலகிநின்று ஆங்கில வெற்றிகளை மனவருத்தத்தோடு பார்த்திருந்த ஹொல்கரை நொதுமலாக்கிப் பிரிக்க விரும்பினர். ஹொல்கர் சென்ற யுத்தத்தில் தன் படைகளை மிகவும் அதிகப்படுத்திக் கொண்டான். அவன் தன்னை ஆங்கிலேயர் எதிர்க்காமல் இருக்கக் காரணம், தன்னிடம் அவர்கள் கொண்ட பயமே என்று எண்ணினான். அவன் ராஜபுத்திர சமஸ்தானங்களிலிருந்து கப்பம் வசூலிக்கும் உரிமையைக் கொண்டாடினான்; தோஆப்பில் (ஆற்றிடைப் பிரதேசத்தில்) தன் குடும்பத்தினர் பழங்கால முதல் ஆண்டு வந்த பகுதிகளைத் தனக்குக் கொடுத்துவிடுமாறும் உரிமை பாராட்டினான். அவன் தீக்கொளுவியும் வாளுக்கிரையாக்கியும், ஹிந்துஸ்தானத்தை அச்சுறுத்தினான்; ஸிந்தியாவுடன் சமாதானத்தை நாடினான். ஆனால் அது பலிக்கவில்லை. அவனெடு 1804ஆம் ஏப்ரல்மீ போர் தொடங்கப் பட்டது. விரிவான முறையில் படையெடுக்கத் தீர்மானித்தனர்; அதன்படி ஹொல்கரைக் கூர்ஜரம், மாளவம், தக்காணம் இவைகளிலிருந்து தாக்கவேண்டுமென்றும், லார்ட்லேக் தோஆப்பில் இருந்து படையொடு செல்லவேண்டு மென்றும் ஆலோசிக்கப்பட்டது. முதலில் ஹொல்கர் தெற்கே துரத்தப்பட்டான்; லேக் ராம்பூரைக் கைப் பற்றினர். மழைக்காலம் தொடங்கியபோது லேக் கான்பூரைச் சேர்ந்தார்; அவரது படையிலொருபகுதி கான்பூருக்கு முன்புள்ள இடமொன்றில் பாசறையிறுத்தது. இப்படியிருக்க, கூர்ஜரத்திலிருந்து மூர்ரேயின் கீழ் வரும் சேனையோடு சேர்ந்து கொள்வதற்காகக் கர்னல் மான்ஸன் முன்பின் னலோசியாது அவசரமாக ராஜபுதனத்துள் பிரவேசித்துப் பேராபத்துக் குள்ளாகிப் பின்வாங்க நேரிட்டது. மான்ஸன் தன் மார்க்கத்தைக் கடப்பதற்கு வேண்டிய முன் ஜாக்கிரதைகள் எடுத்துக்கொள்ளவில்லை: ஆதலின், மூர்ரே திரும்பிப் போய்விட, மான்ஸன் உபகரணங்களின்றியும், வழிகாட்டுவோரின்றியும் ஒரு குறுகிய கணவாயில் ஹொல்கரின் படைகள் முழுவதையும் எதிர்க்க நேரிட்டது. ஆகையால், அவன் பின்வாங்கத் தீர்மானித்தான்; ஆனால், பகைவர்கள் விரோதத் தொந்தரவுகளால் பின்வாங்கிய சேனை, ஒழுங்கு கெட்டுச் சிதறுண்டு ஓடலாயிற்று. முன்னர், 1780-இல் வஹதர் அலிக்குக் கெட்டோடியது பெய்லியின் படையெனக் கண்டோம். அதற்குப் பின்பு பின்னிடைந்த இச்சம்பவமே ஆங்கிலேயரடைந்த பெரும் தோல்வி

**ஹொல்கரிட மிருந்து ஆபத்துண் டாதல்**

**அவனெடு போரிடல் (ஏப்ரல் 1804)**

**மான்ஸன் பின் வாங்குதல்**

யாகும்.* இங்ஙனக, ஜாட்குலத்தைச் சார்ந்த பரதபுரவரசன் பகைவரோடு பேச்சுக்கள் நிகழ்த்தலானன்; அபகீர்த்தி பெற்ற கோடா (Kotah) அரசனுகிய மகீம் சிங் மின்வாங்கிய படைகளுக்கு ஆதரவளிக்க மறுத்தான். இந்த வெற்றியால் மராட்டியரது ஒடுங்கிக்கிடந்த இறுமாப்பு கிளர்ந்தெழுந்தது.

**அதன் விளைவுகள்**

லிங்கியா ஆங்கிலேயரிடம் புதிதாக விசுவாசம் பாராட்டத் தயங்கினன். இவ்வெற்றி இறுதியில் வெல்லெஸ்லியின் நிலைமைக்கே பெருங்கேட்டை விளைவித்தது; ஏனெனில், இதைப்பற்றி டைரக்டர்கள் கேள்விப்பட்டபோது, அவர்கள் வெல்லெஸ்லியைத் திரும்ப அழைக்க முடிவுகட்டினர். மற்றும், இச்சம்பவம் போரை நீட்டிக்கச் செய்து வருந்தத்தை யுண்டாக்கிற்று.

**ஆங்கில வெற்றிகள்**

இங்ஙனிருப்பினும், ஆங்கிலேயர்க்கேற்பட்ட துரதிர்ஷ்டம் சிறிது காலமே நிலவியது: ஹொல்கரின் தலைநகராகிய இந்தூர் பிடிபட்டது. டில்லியைப் பிடிப்பதற்குச் சென்ற ஹொல்கரே பின் துரத்தப்பட்டான்; அவன் டீக், பரூக்காபாத் என்ற விடங்களில் நன்கு முறியடிக்கப்பட்டான்; 1804 முடிவில், அவன் மிக்க தாழ்நிலையை யடைந்தான். ஆனல் மறுபடியும், ஆங்கிலச் சேனைக்குப் பெருத்த அபஜெயமேற்பட்டது. லேக், ஹொல்கரைச் சேர்ந்ததற்காகப் பரதபுரவரசனைப் பழிவாங்க அக்கோட்டையை மூற்றுகையிட்டபோது அவர் பெருஞ் சேதத்துடன் துரத்தப்பட்டார். இந்த அபஜெயம் "அக் காலத்தினர் ஆங்கிலேயரைப்பற்றிக் கொண்டிருந்த அபிப்பிராயத்தை விகாரப்படுத்திக் கலக்கியது."

**பரதபுரத்துப் பெருந்தோல்வியடைதல்**

பரதபுர அரசன், தனது தலைநகர் பிடிபடாமலிருக்கச் செய்தே, சமாதானஞ்செய்து கொள்ளுமாறு விடப்பட்டான். லிங்கியாவோ அச்சுறுத்த ஆரம்பித்து, சுவாலியரைக் கோஹட் ராணுவுக்கு மாற்றிக் கொடுத்ததற்காகப் பெரிதும் எதிர்த்தான். உண்மை நோக்கின், ஆங்கிலேயர்க்கெதிராக ஹொல்கர், லிங்கியா, கொள்ளைக்கார அமீர்கான், பரதபுரவரசன் நால்வரும் சேர்ந்து இரகசிய உடன்படிக்கை செய்து கொண்டனர். லிங்கியா பெரும்படையுடன் சாம்பல் நதியையும் கடந்து வந்தான்; ஆனல், பந்தல் கண்டுள் சென்ற ஆங்கிலச்சேனை யொன்று அவனுக்குத் தடையிட்டு நிற்கச் செய்தது.

**காரன்வாலிஸ் வெல்லெஸ்லிக்குப் பதில் கவர்னர் ஜெனரலாக வருதல் (ஜூலை, 1805)**

கவர்னர்-ஜெனரல் சமாதானஞ் செய்து கொள்ள விரைந்தார்; லிங்கியாவுக்குச் சுவாலியரைத் திரும்பக் கொடுத்து அவனது கோபத்தைத் தணிக்கவும் முடிவு கட்டினர். ஆனல், மார்ஸன் பின்வாங்கியதும், லேக் பரதபுரத்தில் தோல்வியடைந்ததும் இங்கிலாந்தில் அச்சத்தை விளைவித்தன. ஆங்கு முன்னரேயே, மந்திரிச்சபை வெல்லெஸ்லிக்கு எதிரிடையாக இருந்தது. போதாத

---

* இச்சம்பவத்தைப்பற்றி இலெஸ்லி பாடல்கள் தோன்றித் தெருவெல்லாம் பாடப்பட்டன: அவற்றுள் ஒரு பாட்டின் பொருள் பின்வருமாறு:—

"நட்பரி பாடையொடு நிலைத்தன
கட்டரி கட்டியொடு கிடந்தன
நட்புட் டொடுநிசை பிடிப்பபோல
விடுபட மான்ஸனேட் டெடுக்கவே."

[படை - யசோப்பல்லணம். கேடு - சேனம்.]

தற்கு வெல்லெஸ்லியின் பெருத்த விரோதியான சார்ல்ஸ் கீராண்ட் என்பவர் டைரக்டர்களுக்குத் தலைவரானார். கம்பெனியின் கடன் மிகவும் அதிகரித்தது; இந்தியாவிலடைந்த வெற்றிகளோ இலாபகரமாகச் செவ்வனே கண்காணிப்பதற் கியலாவாறு பெருத்துக் கிடந்தன. வெல்லெஸ்லிக்குப் பதிலாகக் காரன்வாலிஸ் பதவியேற்றார். சுதேசாதிகாரங்களோடு சமாதானஞ் செய்து கொள்ளுமாறு அவருக்குக் கட்டளையிடப்பட்டது. வெல்லெஸ்லி, இக்கட்டளையால் தாம் மேற்கொண்ட நோக்கமுறை முற்றிலும் தலைகீழாகமாறிப் போதலைக் கண்ணுற்றார். ஹொல்கரின் அதிகாரம் ஒடுங்கிப்போயினமையை அவர் திடமுடன் உணர்ந்தார்; எனினும், இப்புதிய சமாதான முறைமை எதிரிகளைச் சாந்தப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது; இவ்வெதிரிகள் ஆங்கிலேயரிடம் கொண்டிருந்த வெறுப்போ, வெறுமனே கோப நிவர்த்தியினாலாவது பகையொழிவதினாலாவது தணிக்கப்படாதது. இச்சமாதான முறைமையால், பலங்குன்றிய ஜெயபுரி போன்ற சமஸ்தானங்கள் நட்டாற்றில் கைநழுவ விட்டதுபோலாகி ஆங்கிலேயர் ஆதரவை நாடிநின்றன: மேலும், இம்முறைமையால் மத்திய இந்தியா ஒரு பத்தாண்டுகள்வரை கட்டுக்கடங்காது குழப்ப நிலையில் கிடக்க நேர்ந்தது.

**வெல்லெஸ்லியின் நோக்க முறையை மாற்றியமைத்தல்**

பேஸின் உடன்படிக்கை செய்துகொண்டது முதற்கொண்டே மந்திரிச் சபை வெல்லெஸ்லிமேல் குற்றங்காணத் தொடங்கியது. அவர்கள் மராட்டியப் போர்களில் ஆங்கிலேயர் சிக்கிக்கொள்ளுதற்கு யாதொரு அவசியமுமில்லையெனக் கூறினர். அம்மும் திப்பு ஒழிந்த பின்பு, மராட்டியரது உதவியைப்பெறுவது தொலைவில் நிகழலாகும் ஆபத்துக்கொரு முன்னெச்சரிக்கையே யாகும். டைரக்டர்கள் எப்போதும் தலையிடா நோக்க முறையையே மேற்கொள்ளுமாறு வற்புறுத்தி வந்தனர். அதற்கு மாறுக, வெல்லெஸ்லியோ அத்தகைய நோக்கமுறைமை நடைமுறையில் கைகூடப் பெறுதென்றும், ஆபத்தை விளைவிக்குமென்றும் எப்போதும் உறுதியோடு கூறிவந்தனர்.

**வெல்லெஸ்லிமீது டைரக்டர்கள் கொண்ட வெறுப்புக்குக் காரணங்கள்**

கவர்னர் ஜெனரலும் அவரது சகோதரராகிய ஜெனரல் வெல்லெஸ்லியும் பேஸின் உடன்படிக்கை செய்துகொண்டது நியாயமென்றும், அதனல் போர் உண்டாகவில்லை யென்றும், ஆங்கில ஆதிக்கத்தைப் பெருக்குவதில் இத்தகைய போர்கள் விலக்கலாகாவென்றும், அங்ஙன் சிறிதுபோது விலக்கி வைத்தாலும் பின்னர் விரைவிலேயே இப்போர்கள் ஏற்பட்டே தீருமென்றும், பேஸின் உடன்படிக்கை இப்போர்களை வெற்றிகரமாக நடத்த ஆங்கிலேயர்க்குப் பயன்பட்டதென்றும் தீர்மானமாக வெளியிட்டனர்.

---

இஃதேபோன்ற பாட்டொன்று. மான்ஸன் என்ற பெயருக்குப்பதில் ஹேஸ்டிங்ஸ் என்ற பெயரைப் பெய்து, பாட்டுபடுவதுமுண்டு; அது, செமிட்கிங் கலகஞ் செய்த போது காசியை விட்டு ஹேஸ்டிங்ஸ் ஓடியதைக் குறிப்பதாகும். ஜெனரல் வெல்லெஸ்லி பின்வருமாறு எழுதியுள்ளார்:—மான்ஸன் மூன்றே இருவரும் ஹொலகரிடம் பயங்கொண்டு மூலைக்கொரு வராய் ஓடிப்போயினர்: "மான்ஸன் பட்டபாடுகள் பெருத்த மானக்கேட்டை விளைவித்து, நம் இராணுவத்திற்கே என்றுமிலாத பேரிழுக்கைத் தந்தது."—Owen's Wellesley Despatches, p. 788.

ஸிந்தியாவினிடமுள்ள பிரெஞ்சுத் தருப்புக்களும் ஆபத்து விளைக்காத வாறு ஒடுக்கப்படல் வேண்டும். காரன்வாலிஸுக்குப் பின்னல் கவர்னர்-ஜெனரலாகப் போகும் ஸர் ஜார்ஜ் பார்லோவும் அக்காலத்து இந்த உடன் படிக்கையைப் பெரிதும் ஆதரித்தார். மற்றும், அக்காலத்திருந்த பல்லோர் பிரெஞ்சுக்காரரின் எண்ணங்களைப் பழுதுறச் செய்வதற்கு இவ்வுடன் படிக்கை மிக அவசியமானதென ஆமோதித்தனர். டைரக்டர் சபையினர் வெல்லெஸ்லி ஜெயித்த நாடுகள் பெருஞ் சுமையாகுமெனப் பயந்தனர்: மேலும், போரிட்டுப்பெற்ற வெற்றிகளால் நேர்ந்த புகழனைத்தும் மன்னர்க்கும் தேச மக்களுக்கும் சேர்ந்தனவேயன்றித் தமக்குச் சேராதது கண்டு டைரக்டர்கள் மனம் புழுங்கினர். ஏனெனில் போரை நிகழ்த்துவது கவர்னர்-ஜெனரலே; கம்பெனி பண உதவிமட்டும் செய்தது. டைரக்டர்கள் ஊழியர்களின் சம்பளங்களை உயர்த்தியதற்காகவும், தங்களது அனுமதியின்றி உத்தியோகஸ்தர்களை நியமித்ததற்காகவும் வெல்லெஸ்லியொடு மாறுபட்டனர்; மேலும், வெல்லெஸ்லி தாமே விவகாரங்களைத் தொடங்கி விட்டுப் பின்னர் அவ்விவகாரங்கள் முற்றி மீட்கவோ திருத்தவோ முடியா மற்போன பின்பு, தமது சபையினருக்கோ அல்லது டைரக்டர்களுக்கோ தெரிவிக்கும் வழக்கத்தை யுடையவரென அவர்கள் முறையிட்டனர். இன்னும் பிட் சட்டத்தின்படி தங்களுக்கு உரிமையாகும் இந்திய அரசாங்கத்தின் கண்காணிப்பைத் தாங்களிழக்க நேர்ந்ததென அவர்கள் வெளியிட்டனர். மற்றும், அவர்கள் போர்ட் அவ் கன்ட்ரோலும் இரகசியக் கமிட்டியும் தங்களிடம் நடந்துகொண்ட வகையைப்பற்றியும் குறை கூறினர்.*

**அவரைத் திரும்ப அழைத்தல்**

ஹொல்கரோடிட்ட போரில் நிகழ்ந்த தோல்விகளால், வெல்லெஸ்லியின் நண்பரான லார்ட் காஸில்ரியா என்பவரே நடுங்கிப்போனர். மான்ஸன் பின்வாங்கிய செய்தி இங்கிலாந்துக்கெட்டிய வுடனே, காரன்வாலிஸ் இந்தியாவுக்கு அனுப்பப் பட்டார். வெல்லெஸ்லி வேலையை ஏற்றுச் சென்ற பின்பு, பார்லிமெண்டில் அவர்மேல் பல எதிர்ப்புகள் தொடர்ச்சியாக ஆரம்பித்தன; டைரக்டர்களும் அவர்மேல் நிந்தனை வாக்குக் கொடுத்தனர். மூப்பதாண்டுகள் கழிந்து, டைரக்டர் சபையினர் தமது தவற்றை யுணர்ந்து, நிந்தனை வாக்கை ரத்து செய்தனர்: புகழ் சான்ற † ஆட்சித் தலைவராயிலங்கிய வெல்லெஸ்லிக்குப் பணப் பரிசிலளித்து அவர் ஞாபகார்த்தமாக ஒரு சிலையும் எழுப்ப நிச்சயித்தனர். அவர் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்து, 1842-இல் புகழுடம்பை நிறுவிப் பூதவுடலை நீத்தார்.

## பகுதி 5. காரன்வாலிஸும் பார்லோவும் (1805—7)—வெல்லெஸ்லியின் நோக்க முறையை மாற்றியமை.

**காரன்வாலிஸ் வெல்லெஸ்லியின் நோக்க முறையை மாற்றியமை. (1805)**

வயது முதிர்ந்த காரன்வாலிஸ் இந்தியாவை யடைந்தபோது, அவர் தேக சௌகரியம் குன்றியிருந்தார். மேலும், 1805ஆம் கடின சிரமத்தை யுண்டாக்குகிற ஜூலைமீ வந்து சேர்ந்தார். கம்பெனி ஹொல்கரோடு மேற்கொண்ட சண்டை இன்னும் ஓய்ந்தபாடில்லை; ஸிந்தியாவோடு சமாதானமும் மேற்கொள்ளவில்லை. காரன்வாலிஸ்,

* See Chap. XXIII of Robert's India under Wellesley, entitled the Governor-General, the Court of Directors and the Board of Control † Pro. Consul

தாம் எழுதியபடியே, மராட்டிய யுத்தங்களால் பாதிக்கப்பட்ட சுதேச மன்னர்களை மீண்டும் தத்தம் பதவிகளைப் பெறுமாறு செய்யவும்; வெல்லெஸ்லியின் வெற்றிகளால் ஆங்கிலேயர் ஹிந்துஸ்தானத்திலடைந்த ஸ்திதியை நீத்துவிடவும்; எல்லா உடன்படிக்கைகளையும் கட்டுப்பாடுகளையும் ரத்து செய்யவும்; யமுனைக்கப்பாலுள்ள நிலப்பகுதிகளை விட்டுவிடவும் தீர்மானித்தனர். அவர் லார்ட் வெல்லெஸ்லியும், மால்கோம் உள்ளிட்ட உயர்தர உத்தியோகஸ்தர்களும் வெற்றி பெறுதலிஷ் கொண்ட மோகத்தையும் வெறியையும் கண்டு மனம் நொந்தார். அவர் அப்போது போரிட்டு வந்த லார்ட் லேக்குக்கு—ஸிந்தியாவுக்குக் குவாலியரைக் கொடுத்து அவனைச் சாந்தப்படுத்துமாறும், நியாயமான ஷரத்துகளுக்கு உடன்படுவதாயிருந்தால் ஹொல்கரின் நிலப்பகுதிகளனைத்தையும் அவனுக்கே திரும்பக் கொடுத்துவிடுமாறும், யமுனைக்கு மேற்கே புதிதாகக் கைக்கொண்ட பிரதேசங்களனைத்தையும் கைவிடுமாறும், டில்லியையும் கூட ஸிந்தியாவுக்குக் கொடுத்துவிடுமாறும், ஷா ஆலத்தைக் கல்கத்தாவுக்கோ அல்லது வேறு ஏதேனுமோர் இடத்திற்கோ அனுப்பிவிடுமாறும்—விரிவாக ஒரு கடிதம் விடுத்தார். இப்புதிய கொள்கையை லேக் தீவிரமாகக் கண்டித்தார். அவர் இக்கொள்கையால் ஆங்கிலேயர் ஆதரவை நாடிக்கிடந்த ராஜபுத்திர சமஸ்தானங்கள் ஹொல்கர் ஸிந்தியா இவர்களிட்ட வழக்காய் முடியுமென்றும், அமீர்கான் போன்ற துணிவாளர்களின்கீழ் கொள்ளைக் கூட்டத்தினர் பெருவாரியாக யமுனையை யடுத்த ஆங்கில எல்லையில் சுயேச்சையாகச் சுற்றித் திரிவரென்றும் வற்புறுத்திக் கூறினர். மற்றும், அவர், யமுனை நதி சாம்பல் நதியோடு சங்கமமாகும் இடத்திற்குச் சிறிது வடக்கேயுள்ள எல்லை ஒரு பலத்த எல்லையாக ஆகாது என்னவும் வெளியிட்டார். காரன்வாலிஸ், ஸிந்தியா போர்க்குக் கிளம்பிவிடுவானென்று அஞ்சி, லேக்குக்குத் தற்காப்புக்காக வன்றி மற்றைப்படி படையொடு செல்லவேண்டாமென ஆணையிட்டபோது, லேக் சேனைத் தலைமைப் பதவியை விட்டெறிந்தார். காரன்வாலிஸ் கங்கையின் வடக்காக டில்லி வரை சென்று தமது ஆணைகள் செவ்வனே நிறைவேற்றப் பெற்றனவாவென்று பார்வையிடவும், லேக்கைத் தாம் கொடுத்த ராஜிநாமாவை வாபீஸ் வாங்கிக்கொள்ளுமாறு செய்யவும் ஆயத்தமானார். ஆனால், பிரயாணஞ்செய்யும்போது நோய்வாய்ப்பட்டு காஸிபூரில் இறந்தார். (அக்டோபர், 1805).

**காரன்வாலிஸ் இறத்தல் (அக்டோபர், 1805).**

இப்போது, சபையங்கத்தினரில் மூதலவராகிய **ஸர் ஜார்ஜ் பார்லோ** சிறிதுகாலம் கவர்னர்-ஜெனரல் பதவியை வகிக்க நேரிட்டது. அவர் தொடர்ச்சியாக மூன்று கவர்னர்-ஜெனரல்களிடம் சேவை புரிந்தவர்; வெல்லெஸ்லியின் தோக்க முறையில் அவர்க்குப் பேருதவி புரிந்தவர். இப்போது அவர் ஒரு ஸிவில் உத்தியோகஸ்தனுக் கேற்ற முறையில் காரன்வாலிஸ் இட்ட கட்டளைகளையே கடைப் பிடித்துத் தொழுகினர். அவர் சுதேச விவகாரங்களில் தலையிடா நோக்கமுறையையே மேற்கொண்டார்; யமுனைக் கப்பாலுள்ள ஒவ்வொரு நாட்டின் விவகாரங்களிலும் ஆங்கிலேயர் எத்தகைய சம்பந்தமும் கொள்ளக்

**ஸர் ஜார்ஜ் பார்லோ சிறிதுகாலம் கவர்னர்-ஜெனரலாயிருத்தல் (1805—07)**


கூடாதென ஆணை பிறப்பித்தார். ஏனெனில் அஃதே "பார்லிமெண்ட் விதித்த விதிகளையும், டைரக்டர்களிட்ட கட்டளைகளையும், தமது சொந்த அனுகூல நோக்கங்களையும் ஒட்டி" யிருப்பதாகும் என்றார். "வரையறுத்த ஒரு பிரதேசத்தில் அமைதியையும் பாதுகாப்பையும் நிலவச் செய்வதற்காக, ஒரு சிறிது ராஜ்யத்தையும் அதிகாரத்தையும் வருமானத்தையும் கொடுத்து விடுதலால் யாதொரு நஷ்டமும் மடையமாட்டோம்" என்று அவர் உறுதியாக நம்பினார். தனது எல்லைக்கு அப்பாலுள்ள நாடுகளில் குழப்ப மேற்பட்டால் அதனைப்பற்றி ஆங்கில அதிகாரம் காதில் போட்டுக்கொள்ளாமல் இருக்கலாம்; மற்றும், இந்திய அரசர்களைத் தங்களுக்குள்ளேயே ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொள்ளுமாறு விட்டு விடவேண்டும். ஏனெனில் அப்போதுதான் அவர்கள் ஆங்கில ராஜ்யங்களின்மேல் படையெடுப்பதற்கு அவகாசமகப் படாது. இத்தகைய தன்மையை மேற்கொண்டதால் நேர்ந்த விளைவுகளைப் பற்றிப் பின்னர் கவர்னர்-ஜெனரலாக விருந்த **மெட்காப்** கூறுவதாவது: "இதனால் ஈடற்ற அவமானமும், காப்பற்ற உடன்படிக்கைகளும், சாந்தமற்ற அமைதியும்" ஏற்பட்டது என்பது.

**அவர் புதிய நோக்க முறையை வற்புறுத்தல்**

இதற்குள் ஸர்ட்லேக், ஸிந்தியா ஹொல்கர் விவகாரங்களில் மிகுவு விடாமல் தீரமாய் நின்றனர். அவர் ஸிந்தியாவொடு பெருந்தன்மையான உடன்படிக்கை யொன்று செய்துகொண்டார்; அது முன்னைய ஸர்ஜி—அஞ்ஜன்கான் உடன்படிக்கையை உறுதிப்படுத்தியது; ஸிந்தியாவுக்குக் குவாலியரையும் கோஹட்மேல் அதிகாரத்தையும் திரும்ப அளித்தது. கம்பெனி சாம்பல்நதிக்குத் தெற்கே எதற்கும் உரிமை பாராட்டக்கூடாது; ஜெயபுரி, ஜோதிபுரி முதலிய சமஸ்தான ராஜபுத்திர அரசர்களோடு எவ்வித உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளக்கூடாது. (நவம்பர் 1805). ஹொல்கர் சம்பந்தப்பட்டவரையில், ஆங்கிலேயரிழந்த இராணுவ மேன்மையை மீண்டும் நிறுவ லேக் பெரிதும் பிரயாசைப் பட்டார்; அவனை அமிருதஸரஸை நோக்கி வடக்குமுகமாக ஓடுமாறு துரத்தியடித்தார். ஹொல்கர் சீக்கியரது ஆதரவை நாடி முறையிட்டான்; சீக்கியர்களது தலைவர்கள் (சர்தார்கள் அல்லது மிஸில்கள் எனவும் படுவர்) ஸட்லெஜ் நதியினிருமருங்கிலும் அதிகாரத்தை நிறுவித் தங்கியிருந்தனர். ஆனால், லேக், லாஹூரிலிருந்த **ரஞ்சித்சிங்** என்ற இளைய சீக்கியத் தலைவனோடு ஒப்பந்தஞ் செய்துகொண்டார்; அதன்படி, ரஞ்சித்சிங், ஹொல்கருக்கு எவ்வித உதவியும் செய்வதில்லை யென்றும், அவனைப் பஞ்சாபை விட்டுச் செல்லும்படி வற்புறுத்துவதாகவும் வாக்குறுதி யளித்தான். ஹொல்கர் கதிகாணாது சமாதானத்தை நாடினான். லேக், கவர்னர்-ஜெனரல் வற்புறுத்தியதால் * **ராஜபுரி காட்டத்தில்** உடன்படிக்கை செய்துகொள்ள நேர்ந்தது; இவ்வுடன்படிக்கை ஹொல்கரின் சார்பாகவே நன்மை விளைத்தது. அவன் எண்ணியபடியோ அல்லது விதிக்கவேண்டியபடியோ நிபந்தனைகளிடப்படவில்லை. அவன்மேல் இலேசான நிபந்தனைகளே

**ஸிந்தியாவோடு செய்துகொண்ட உடன்படிக்கை**

* Rajpur Ghat.




சுமார் கி. பி. 1805-இல் ஆங்கிலராஜ்யத்தைக் காட்டும்

இந்தியா படம்

யிடப்பட்டன. அவனது நாடுகள் அவனுக்கே மீண்டும் கொடுக்கப்பட்டன;

**ஹொல்கரோடு செய்துகொண்ட உடன்படிக்கை (1805)**

ஆனல், அவன் பூந்தி (Bundi), . ராம்பூர், சாம்பல் நதிக்கு வடக்குள்ள பிரதேசங்கள், பந்தல்கண்ட் முதலியவைகளுக்கு உரிமை பாராட்டுதலைத் தவிர்க்க வேண்டும்; மேலும், ஆங்கிலேயரனுமதியின்றி ஒரு ஐரோப்பியனையும் தன்கீழ் வேலையிலமர்த்தக்கூடாது. இந்த உடன் படிக்கை பின்னர் கவர்னர்-ஜெனரலால் சிறிது மாற்றி யமைக்கப் பட்டது. அவர் ராம்பூரை ஹொல்கருக்கே திரும்பக் கொடுத்தார்; ஹொல்க ரின் அட்டுழியங்களினின்று தப்புவதற்கு ஆங்கிலேயராதரவைப் பேருரி மையோடு நாடிய பூந்தியரசனை விதிவழி யொழுகுமாறு கைவிட்டார்.

இதனோடு முற்றுப்புள்ளியென்று நினைக்கிறீர்களா! வெல்லெஸ்லி யோடு துணைபுரிமுறை உடன்படிக்கையைச் செய்துகொண்டவனும் ஹொல்கருக்கு எதிராக ஆங்கிலேயர்க்குப் பேருதவி புரிந்தவனுமாகிய ஜெயபுரி அரசனை நடுச்சந்தியில் அவன் விதிப்படியாகுமாறு கைவிட்டனர்: அவனைப் பாதுகாப்பதாக அளித்த வாக்குறுதி விடுக்கப் பட்டது; ஏனெனில், பார்லோ 'இனி ராஜபுத்திர சமஸ்தானங்களுக்கு ஆங்கிலேயர் பாதுகாப்பளிப்பதென்பது விடுக்கப்பட்டது' என ஒரு பிரகடனமிட்டார். இவ்விதமாக, ஆங்கிலேயர் தமது சுயநலத்தை முன் னிட்டு உண்மையான ஒரு நேசனைக் கைவிட்டனர்; இதைப்பற்றி, ஏமாற் றப்பட்ட ஜெயபுரி யரசனின் தூதுவன் கூறியதாவது பின்வருமாறு, *"ஆங்கிலேயர் சுய அக்கறை மேலிட்டுத் தம்மிடம் பிறர் நம்பிக்கை யிழக்குமாறு தம்மையே தாழ்மைப்படுத்திக் கொண்டனர்." இப்படிப் பட்ட மானக்கேடான செயலை லேக் வீணே எதிர்த்து நின்றார்; இதற்குச் சிறிது பின்பு, ஹொல்கர் ஜெயபுரியைக் கொள்ளையிட்டு அதனரசனிட மிருந்து பெரும் பணத்தொகையை வற்புறுத்தி வாங்கினன்.

**ஆங்கிலேயர் ராஜ புத்திரர்களைக் கைவிட்டுப் பிரிதல்**

ஹொல்கர், ஆங்கிலேயரது புதிய கொள்கை முறையின் தன்மையை யேறிட்டுப் பொது விரோதியாகிய கம்பெனிக்கு எதிராக மராட்டிய மன்

**மீண்டும் குழப்ப மேற்படல்**

னர்களை ஒன்று சேர்க்க முயற்சித்தான். அவன் பைத்திய வெறியால் 1811-இல் இறக்கும் வரையில் மத்திய இந்தியா முழுவதற்கும் ஒரு பேராபத்தா யிருந்தான்.† ஆங்கிலேயர் ராஜபுத்திர சமஸ்தானங்களுக்குப் பாதுகாப்பு ளித்துவந்ததை நிறுத்தியமையால், அவையனைத்தும் மராட்டிய பட்டானிய துணிவாளர்களிட்ட வழக்காய் முடிந்தன. ராஜபுத்திர அரசர்கள் தமது பொது எதிரிகளுக்கு மாறுக ஒன்றுசேர இயலவில்லை: அவர்கள், உதய புரி ராணுவுக்குப் புத்திரியாகிய கிருஷ்ணகுமாரி யென்ற பேரழகியை மணத் தற்காகத் தமக்குள்ளேயே சண்டையிட்டு வலிகுன்றிப் போயினர். இந்தக் கிருஷ்ணகுமாரி "கிரேக்க ஹெலனைப்போல, தன் குலத்திற்கும் மாற்றார்

---

* "made their faith subservient to their interest."

† ஜஸ்வந்த ராவ் "கொள்ளைக் குழுவினர்க்குத் தலைவனேயன்றி வேறில்லை: அவன் தன் அறிவு, புகழ் அனைத்தையும் அவர்களுக்கே தத்தஞ் செய்தான்....ஒழுங்குபட்ட நல்ல அரசாங்கத்தின் கோட்பாடுகளை மதியாது, அவைகளை நிறுவுவதற்குச் சிறிதுதானும் அவா கொண்டிலன்."—pp. 255—7 of Malcolm's A Memoir of Central India, Vol. I.

குலத்திற்கும் கூற்றமாயினள்."* ஜெயபுரி, ஜோதிபுரி அரசரிருவர்க்குள் இவள் மணம் குறித்துப் பெரும் போர் நிகழ்ந்தது; பட்டானிய கொள்ளைக் காரனுகிய அமீர்கான் இருவர் பக்கமும் சார்ந்து சண்டையிட்டான்: உதயபுரி ராணுவோ, ஸிந்தியாவாலும் அமீர்கானுலும் இரக்கமின்றிக் கொள்ளையடிக்கப்பட்டான்; மத்திய இந்தியா முழுவதும் பாழென்ற பரதேவதையே கொலு வீற்றிருந்தாள். இச்சிக்கலான கஷ்டங்கள் தீருவதற்கு ஒரே வழிதானுண்டு என அமீர்கான் யோசனை கூறினன்; அதாவது, கிருஷ்ணகுமாரியை இறக்கச் செய்தலே; இங்ஙன் சரித்திர வரலாற்றில் முக்காலும் காணலாகாத கொடூர கொலை யொன்று நிகழ்ந்தது; பெற்றெடுத்த தந்தையே தன் குமாரியை விஷமுண்ணுமாறு வற்புறுத்தியது என்னே! இந்தத் துக்ககரமான நிகழ்ச்சியே ஏனைய சம்பவங்களைக் காட்டிலும், அக்கால ராஜபுத்திர அரசர்களது சீர்கேட்டையும், ஆற்றலின்மையையும், குழப்பத்தையும் விளக்கி, அத்தகைய தாழ் நிலையிலிருந்து அவர்களை விடுவிக்க ஆங்கில அதிகார மொன்றினலேதான் ஆகவேண்டும் என்பதையும் தெரியக் காட்டியது.

**புதியநோக்கமுறையின் பயனின்மை**

இவ்வாண்டுகளிலெல்லாம், கோடா (Kotah) தலைவன் **ஸலீம்சிங்** உட்பட்ட ராஜபுத்திரத்தலைவர்கள் அனைவரும், ஆங்கிலேயரது பாதுகாப்பை நாடிப் பன்முறை முறையிட்டுள்ளனர். அவர்கள், இந்தியாவில் எஞ்ஞான்றும் ஒரு பேரதிகாரம் நிலவி வந்ததென்றும், அதன் பாதுகாப்பையே நோக்கி இதர மெலிந்த அதிகாரங்கள் பயின்று வந்தனவென்றும் வெளியிட்டனர். அப்படிப்பட்ட பேரதிகார நிலையைத் தற்போது ஆங்கிலேயர் வகித்தலினல் அந்நிலைக்கேற்ப அவர்கள் பாதுகாக்கும் கடமையைப் பிறழாது நிறைவேற்றக் கடமைப்பட்டவராவர். இன்னும் ஓராண்டு வெல்லெஸ்லி கவர்னர்-ஜெனரல் பதவி வகித்திருப்பாரேல், அவர் ஸிந்தியாவைச் செவ்வனே அடிப்படுத்தி, ஹொல்கர் அமீர்கான் இருவரின் ஆதிக்கத்தையும் அழித்திருப்பர். புதிய நோக்கமுறையால் கம்பெனிக்கு அமைதியேற்படினும், இந்தியாவுக்கு வியாகுலமேற்பட்டது. கம்பெனி தான் செய்து கொண்ட தற்காப்புடன்படிக்கைகளை ரத்து செய்தமையால், இந்தியாவில் ஆங்கில அதிகாரம் மேலோங்காதவாறு ஒரு பெரும் வழியடையிட முயன்றது. ஆனல், இம்முயற்சி பலிக்காததுடன் தீமை பயப்பதாகிப் பத்து வருடங்களுக்குப் பெரும்பாலான பாகங்களில் குழப்பத்தையுண்டாக்கிற்று.

---

* For a graphic and forceful account of the incident, refer to Tod's Annals and Antiquities of Rajasthan (Popular edition)—Annals of Mewar, Chap. XVII, Vol. I. pp. 366—369. டாட், (Tod), உதயபுரி ராணு வீரர்களை ஏகலிங்கத்தில் சந்தித்த போது கண்ணுற்று அவனது தோற்றமும் ஏற்றமும் கண்டு, கண்ணும் மனமும் ஒருசேர சுர்க்கப்பட்டு நின்றார்: உடனே "அவன் வீழ்ந்த தாழ்நிலையினின்று மீண்டும் அவனை நன்னிலைபெறச் செய்யுமாறு செய்ய அவருள்ளத்து ஒரு பேரவா தளர்ந்தெழுந்தது: அதற்காக, ராணுவைப்பற்றிய விஷயங்களையெல்லாம் அறிய விடாமுயற்சியுடன் முற்பட்டார்; ஏனெனில், அங்ஙன் திரட்டிய அறிவினுல்தான் அவர் ராணுவுக்கு ஏதேனும் நன்மை செய்யமுடியும்." டாட் விடாமுயற்சியின் பயன் யாதெனில் அவரெழுதிய அழியாச் செல்வமாகிய நூலேயாகும்: அந்நூலால் ஆங்கிலேயர், பெருமைவாய்ந்த ராஜபுத்திர குலத்தின் சூரத்தனத்தையும், கண்ணியத்தையும் செவ்வனே முற்றும் பாராட்டியுள்ளனர்.

See for a dramatic presentation of the Episode—Edward Thompson's Krishna Kumari (1924). [Contemporary British Dramatists, Vol. X].

மேலும் புதிய கொள்ளைக்கூட்டத்தினராய பிண்டாரிகள் தலையோங்குதற்கும் இது ஒரு நல்வாய்ப்பு அளித்தது. இந்தப் பிண்டாரிகளை நசுக்கியொடுக்குதல் பின்னர் லார்ட்ஹேஸ்டிங்ஸின் தலைவினியாய் முடிந்தது.

நொதுமலையும் தலையிடாமையும் அடிப்படையாக்கொண்டுள்ள இப்புதிய நோக்க முறை பார்லோவுக்கே தகுதியுடையதாகத் தோன்றவில்லை.

**பார்லோ நிஜாமை யடக்கல்**

நிஜாம் அலிக்குப்பின், 1803-இல் நிஜாமாகிய சிகந்தர்ஜா ஏனையோரைப் போலத் தானும் தன் னிஷ்டப்படி நடக்க வெண்ணினான். அவன் ஸிந்தியா ஹொல்கர் இருவருடனும் பேச்சுக்கள் நிகழ்த்தினன். தன் எல்லைப் புறத்தில் துருப்புக்களைத் திரட்டி ஆங்கில நிர்ப்பந்தத்தினின்று விடுதலை பெறப் பெரிதும் கவன்றான். இதனைக்கண்ட பார்லோ விவகாரம் முற்றுதலை யுணர்ந்தார். அவர் சுதேச விவகாரங்களில் மேற்கொண்ட உபேட்சையையும் உதறித்தள்ளினர். நிஜாமால் அதிகாரமிழந்த ஆங்கிலச் சார்பினராயிருந்த மந்திரியை மீண்டும் அமர்த்தினர். நிஜாமை ஆங்கில ஸ்தானீகரின் நேர் கண்காணிப்பிலிருக்குமாறு வைத்தார். அவர், பேஷ்வாவின் உடன்படிக்கையை மாற்றியமைக்க டைரக்டர்கள் செய்த முயற்சியைக் கண்டித்தார். மற்றும், மராட்டிய ராஜீய விவகாரங்களில் யாதொரு சம்பந்தமும் கொள்ளாதவாறு விலக அவர்கள் செய்த முயற்சியையும் கண்டித்தார். அவர் பேஷ்வாவின்மேல் கொண்டுள்ள கடைப்பிடியை நெகிழ்த்துதல் பெருத்த மூடச் செயலாகுமெனத் தைரியமாக வெளியிட்டார். ஏனெனில், மராட்டியர்மேல் ஆங்கிலேயர் பேரதிகாரம் வகிப்பதற்கு அது அத்தியாவசியமானது. பார்லோ, மத்திய இந்தியாவின் பேரதிகாரத்திற்காகப் பேஷ்வா பாராட்டிய பொய்யுரிமை களையேற்க மறுத்தார். அதனோடு நில்லாமல், பேஷ்வா வெல்லெஸ்லியோடு செய்துகொண்ட உடன்படிக்கையின் நிபந்தனைகளைப் பின்பற்றி நடக்குமாறு அவரைப் பின்னும் தீவிரமாக வற்புறுத்தினர்.

**பேஷ்வாவையும் அடக்குதல்**

பார்லோ செலவுகளைக் குறைத்தார். அவர் முன்னிலிருந்த வருடாந்தரப் பணக்குறையைப் பணப் பெருக்கமாக ஆக்கிவைத்தார். அவர் செல்வாதார நிலையை எளிதில் பெருகுமாறு அமைத்தார். சுமார் இருபது வருஷங்கள் வரை பணம் மிச்சப்பட்டது. முதல் பர்மாயுத்தத்தின் போதுதான் புதிய கடன்கள் வாங்கத் தேவையேற்பட்டது. புதிதாகக்கிடைத்த கடகம், பந்தல்கண்ட், தோஆப் முதலிய நிலப்பகுதிகளில் அரசியல் நிர்வாகம் ஒழுங்குபடுத்தப்பட்டுச் செம்மையாக்கப்பட்டது.

**செல்வாதாரத்தில் முன்னேற்றஞ் செய்தல்**

இப்படியிருக்க, 1806-ஆம் ஜூலைமீ வேலூரில் ஐரோப்பிய துருப்புக்களை எதிர்த்துச் சிப்பாய்கள் கலகமிட்டனர். அப்போது வேலூரில் திப்பு சுல்தானின் குடும்பத்தினர் வசித்து வந்தனர். ஜெனரல் ஜில்லெஸ்பியின் வல்லமையினால் ஐரோப்பியப்படை விடுவிக்கப்பட்டதுடன் கலக

**வேலூர் கலகம் (1806)**

மும் விரைவில் அடக்கப்பட்டது. இக்கலவரத்திற்குச் சிப்பாய்கள் மேற்கொள்ள வேண்டும்படி விதித்த சில புதிய விதிகளே பெரும் பாலும் காரணம்போலும். கவாத்து* செய்யும்போது கீறில்லா நெற்றி யோடு வருமாறும், அணல் தாடியைச் சிரைத்துக்கொண்டு வருமாறும், ஒரு தனிப்பட்ட வகையில் மீசையைக் கோலஞ்செய்துகொள்ளுமாறும், தொப்பி (Hat) போன்ற தலைப்பாகையொன்றைத் தரித்துக்கொள்ளுமா றும் இட்ட விதிகள் சிப்பாய்களின் மதவுணர்ச்சிகளுக்கு ஊறுவிளைத்தனம் இந்தப் புதிய மாற்றங்கள், சிப்பாய்களைக் கிறிஸ்தவர்களாக்குதற்கு மேற் கொண்ட முயற்சியை முன்னரே சூசிப்பன்வாகுமென வதந்தியேற்பட்டது. இக்கலகத்தில் திப்புவின் குடும்பத்தினர் கலந்துகொண்டனரெனக் கருதப் பட்டது. ஆனால், அவர்களது கொடியை மாத்திரம் கலகக்காரர்கள் காட்டிவைத்தனரேயன்றி, அவர்களுக்காக யாதோர் இயக்கமும் ஏற்பட வில்லையென்பது திண்ணம். எப்படியாயினும், தற்காப்பு குறித்து ஆங்கிலேயர் திப்புவின் குடும்பத்தினரைக் கல்கத்தாவுக்கு அனுப்பிவிட்ட னர். அக்காலத்தில் சென்னைக் கவர்னராயிருந்த வில்லியம் பென்டிங்க் பிரபுவின்மேல் இப்பழி சுமத்தப்பட்டது. அவர் நியாய விரோதமாகத் திரும்ப இங்கிலாந்துக்கு அழைக்கப்பட்டார். அவருக்குத் தாம் மேற் கொண்ட நடவடிக்கையின் தகுதியைப்பற்றி விவரிப்பதற்கும் அவகாசம் கொடுக்கவில்லை. சிறிது காலமே கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்ட ஸர் ஜார்ஜ் பார்லோ மந்திரிச் சபையினரால் ஒதுக்கப்பட்டார். ஆனால், டைரக்டர்கள் அவரைச் சென்னைக் கவர்னராக நியமித்தனர். மந்திரிச் சபையினர் **லாடர்டேல்** பிரபுவைப் புதிய கவர்னர்-ஜெனரலாக்க விரும் பினர்; ஆனால், லாடர்டேல் †தடையிலா வியாபாரத்தை ஆமோதிப்பவரா யும், ‡குடியாட்சிப் பெருமாற்றத்தை விழைவோராயும் இருந்தமையால், டைரக்டர்கள் அவரை அங்கீகரிக்கவில்லை. இறுதி யில், போர்ட் அவ் கன்ட்ரோலின் தலைவராயிருந்த **மின்டோ** பிரபு தாமே கவர்னர்-ஜெனரல் பதவியை வகிக்க இசைந்தபோது இச்சச்சரவு முடிவுற்றது. அவர், 1807-ஆம்வரு ஜூலைமாதம் கவர்னர்-ஜெனரல் பதவியையேற்று ஆருண்டுகள் ஆட்சி புரிந்தார்.

**மின்டோ கவர்னர் ஜெனரலாதல்**

* Parade † Free-trader. ‡ Pro-Jacobin.

# காலஅட்டவணை (1600—1805)

| கி.பி. | |
|---|---|
| 1600 | எலிஸபெத் மகாராக்ஞியாரின் பட்டயம். |
| 1602 | டச்சு ஐக்கிய பிரஜைக்கியக் கம்பெனி ஏற்பட்டல். |
| 1605 | டச்சுக்காரர் அம்பாய்னுவைக் கைப்பற்றுதல். |
| 1612 | ஸ்வாலிக்குடே போர்த்துகேசிய கப்பற்படையின்மேல் பெஸ்ட் வெற்றியடைதல். |
| 1615 | ஸர் தாமஸ்ரோ முகலாய சமஸ்தானத்திற்கு விஜயஞ் செய்தல். |
| 1618 | ஸர் தாமஸ் ரோவுக்கு மேலும் உரிமைகள் ஈதல். |
| 1619 | டச்சுக்காரர் பட்டவியாவை ஸ்தாபித்தல். |
| 1622 | ஆங்கிலேயர் மசூலிப்பட்டினத்தில் ஏஜென்ஸியொன்று ஏற்படுத்தல். |
| 1623 | அம்பாய்னு படுகொலை. |
| 1633 | பாலசூரிலும் ஹரிஹர்புரத்திலும் ஆங்கிலேயர் வர்த்தகசாலைகளை யமைத்தல். |
| 1639 | பிரான்ஸிஸ் டே சென்னையைப் பெறுதல். |
| 1641 | போர்த்துகேயர் மலாக்காவிலிருந்து துரத்தப்பட்டல். |
| 1651 | ஹூக்ளியில் பண்ட்கசாலையொன்று அமைத்தற்கு ஆங்கிலேயர் அனுமதி பெறல். |
| 1661 | ஆங்கிலவரசன் இரண்டாவது சார்ல்ஸ் பம்பாயைச் சீதனமாகப் பெறுதல். |
| 1664 | கோல்பர்ட் பிரெஞ்சுகிழக்கிந்தியக் கம்பெனியை ஏற்படுத்தல். |
| 1668 | கிழக்கிந்தியக் கம்பெனி பம்பாயை விலைக்கு வாங்குதல்; சூரத்தில் முதல் பிரெஞ்சு வர்த்தகசாலை யமைத்தல். |
| 1674 | பிராங்காய் மார்டின் புதுச்சேரியை ஸ்தாபித்தல். |
| 1690 | ஜாப் சார்னாக் கல்கத்தாவை ஸ்தாபித்தல். |
| 1698 | புதிய ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி பட்டயம் பெறுதல். |
| 1731 | சந்திரசகர் டுப்ளேயின் பிரிருத்தல். |
| 1740 | அலிவர்திகான் வங்காள ஆட்சியை அபகரித்தல். |
| 1741 | டுப்ளே புதுச்சேரியின் கவர்னராதல். |
| 1746—48 | பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் நிகழ்ந்த முதல் யுத்தம். |
| 1746 | பிரெஞ்சுக்காரர் சென்னையைப் பிடித்தல். |
| 1748 | அய்ஸ்லாபெல் சமாதானம்; நாஜாமுல்முல்க் இறத்தல். |
| 1749 | பிரெஞ்சுக்காரர் ஆம்பூரில் அன்வருதீனைத் தோற்கடித்தல். |
| 1749—54 | பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் நிகழ்ந்த இரண்டாம் யுத்தம். |
| 1750 | வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்தியாவுக்கு வரல். |
| 1751 | ஸலபட்ஜங் தக்காண சூபேதாராதல்; கிளீவ் ஆற்காட்டைப் பிடித்தல். |
| 1752 | கிளீவ் காவேரிப்பாக்கத்தில் வெற்றிபெறல். |
| 1754 | கோடியு டுப்ளேவுக்குப்பதில் பதவியேற்றல். |
| 1756 | சிராஜ்-உத்-தௌலா வங்காள சுவாபாதல். |
| ,, | கல்கத்தா இருட்டறை விபத்து. |
| 1757 | மினாலிச் சண்டை; மிர்ஜாபர் வங்காள சுவாபாதல். |
| 1757—61 | பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் நிகழ்ந்த மூன்றும் யுத்தம். |
| 1758 | கவுன்ட் டி லாலி சென்னையை முற்றுகையிடல்; கர்னல் போர்டு பிரெஞ்சுக் காரரைக் கண்டூரில் முறியடித்தல்; கான்பியன்விளியிருந்து மசூலிப் பட்டினத்தைக் கைப்பற்றுதல்; வங்காளத்தில் கிளீவின் முதல் கவர்னராட்சி. |

| | |
|---|---|
| 1759 | கிளைவ் சின்ஸ்ராவைப் பிடித்தல். |
| 1760 | வந்தவாசிச் சண்டை; கிளைவ் இங்கிலாந்து திரும்புதல். |
| 1761 | புதுச்சேரி பிடிப்படுதல். |
| 1761—72 | முதலாம் மாதராவ் பேஷ்வாவின் ஆட்சி. |
| 1763 | பாரிஸ் சமாதானம். |
| 1764 | பக்ஸார் சண்டை : நவாப் மீர்காஸிமிடம் ஒட்டம். |
| 1765 | கிளைவின் 'இரண்டாம் கவர்னராட்சி'; வட்டிர்க்கார் ஆங்கிலேயர்வசம் உறுதியாக்கப்படல்; ஆங்கிலேயர் வங்காள வரிவசூல் உரிமை (திவானி) யைப்பெறல். |
| 1767 | கிளைவ் இங்கிலாந்துக்குத் திரும்பிப்போதல். |
| 1768 | ஆங்கிலேயர் நிஜாமோடு உடன்படிக்கை செய்துகொள்ளல். |
| 1767—69 | முதல் மைசூர் யுத்தம். |
| 1767 | செங்கண்மா சண்டை. |
| 1770 | வங்காளத்தில் கொடும் பஞ்சம். |
| 1771 | மராட்டியர் டில்லி சிம்மாசனத்தில் ஷாஆலத்தை மீண்டும் ஏற்றல். |
| 1772 | மாதவராவின் மரணம். |
| 1772—74 | வாரன்ஹேஸ்டிங்ஸ் வங்காள கவர்னராதல். |
| 1772—73 | நாராயணராவ் பேஷ்வாவாதல். |
| 1773 | ஒழுங்கு முறைச்சட்டம் : ஹேஸ்டிங்ஸ் காசி உடன்படிக்கையைச் செய்து கொள்ளல். |
| 1773—74 | ரொஹில்ல யுத்தம். |
| 1774—85 | வாரன்ஹேஸ்டிங்ஸ் கவர்னர்ஜெனரலாயிருத்தல். |
| 1775 | நந்தகுமாரைக் குற்றவிசாரணை செய்து தூக்கிலிடல்: சூரத் உடன்படிக்கை. |
| 1776 | புரந்தர் உடன்படிக்கை. |
| 1776—82 | முதல் மராட்டிய யுத்தம். |
| 1778 | ராஜாசெயிட்சிங்கின் விவகாரம். |
| 1779 | வாட்காலில் மானக்கேடான சமாதானம் செய்தல். |
| 1780—84 | இரண்டாவது மராட்டியயுத்தம். |
| 1780 | பாப்ஹாம் குவாலியரைப் பிடித்தல். |
| 1780 | ஆங்கிலேயர் பேஸின்னைத் தம் வசப்படுத்தல். |
| 1781 | இருத்தச் சட்டம்; கூட் வந்தவாசி முற்றுகையை நிறுத்தி ஹைதரைத் தோற்கடித்தல். பசங்கிப்பேட்டை சோளங்கிபுரம் சண்டைகள்; காகப் பட்டினத்தைக் கைப்பற்றுதல்; அயோத்தி பேகங்கோ வற்புறுத்திப் பணம் பறித்தல்; சுனர் உடன்படிக்கை; காசியில் ஹேஸ்டிங்ஸ்-கலவரம் நிகழ்தல். |
| 1782 | ஸால்பாய் உடன்படிக்கை; திரிகோணமலையைக் கைப்பற்றுதல்; ஹைதரின் மரணமும் திப்பு சுல்தான் பட்டமேறலும். |
| 1783 | புஸ்ஸி கடலூரில் முற்றுகையிடப்படல்; பிரான்சோடு சமாதானம்; பாக்ஸின் இந்திய மசோதா. |
| 1784 | பிட்இந்தியச் சட்டம்; மங்களூர் உடன்படிக்கை. |
| 1785 | வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரல் பதவியினின்று விலகல். |
| 1785—86 | ஸர்ஜான் மக்பர்ஸன் கவர்னர் ஜெனரலாயிருத்தல். |
| 1785—87 | மராட்டியர் திப்புவோடிட்ட சண்டை. |
| 1786—93 | லார்ட் காரன்வாலிஸ், கவர்னர் ஜெனரலாயிருத்தல். |
| 1786 | திருத்தச் சட்டம். |
| 1788—95 | வாரன் ஹேஸ்டிங்ஸின் குற்ற விசாரணை. |
| 1788 | டில்லியில் புரட்சி. |
| 1789 | திப்பு திருவாங்கூரைத் தாக்குதல். |
| 1790—92 | மூன்றாவது மைசூர் யுத்தம். |
| 1791 | ஆங்கிலேயர் பங்களூரைக் கைப்பற்றுதல். |
| 1792 | ஸ்ரீரங்கப்பட்டண உடன்படிக்கை; மூன்றாம் அலியோடு ஒப்பந்தம். |

| | |
|---|---|
| 1793 | வங்காளத்தின் சாசுவத நிலவரி ஏற்பாடு; பார்லிமெண்டு கம்பெனியின் உரிமையைப் புதுப்பித்தல். |
| 1793—98 | ஸர் ஜான்ஷோர் கவர்னர் ஜெனரலாயிருத்தல். |
| 1794 | மஹாதஜி ஸிந்தியாவின் மரணம். |
| 1795 | கர்தா சண்டை; முகம்மது அலியின் மரணம். |
| 1796 | பூனாவில் புரட்சி—இரண்டாவது பாஜிராவ் பேஷ்வா வாதல். |
| 1797 | ஆங்கிலேயர் அயோத்தியோடு உடன்படிக்கை செய்து கொள்ளல். |
| 1798 | ஸர்ஜான் ஷோர் வேலையை விட்டுவிலகல்-மிஸ்டர்முண்ட் துணைபுரி உடன்படிக்கை. |
| 1798—1805 | வெல்லெஸ்லி பிரபு கவர்னர்-ஜெனரலாயிருத்தல். |
| 1799 | நான்காவது மைசூர் யுத்தம்: ஸ்ரீரங்கப்பட்டணத்தின் வீழ்ச்சி: திப்பு இறத்தல். |
| 1800 | கானுபட்னவிஸின் மரணம்; நிஜாமோடு புதிய உடன்படிக்கை; ஜமீன்தார்களோடு ஏற்பாடு செய்துகொள்ள வற்புறுத்தியமை. |
| 1802 | பாஜிராவுக்கு விடுத்த கடைசித் தீர்ப்பு (ultimatum): பூனாவில் சச்சரவுகள்—துல்வந்தராவ் ஹொல்கர் அதிகாரம் பீறல்; பேஸீன் உடன்படிக்கை. |
| 1803—04 | மூன்றாவது மராட்டிய யுத்தம். |
| 1803 | பூனாவை வெல்லெஸ்லி வசப்படுத்தல்; ஆங்கிலேயர் அஹமத் நகரைப் பிடித்தல்; அஸ்ஸே, ஆர்கான், அலிகார், லாஸ்வாரி சண்டைகள். தேவகான், ஸர்ஜி—அஞ்ஜன்கான் உடன்படிக்கைகள்; ஸிந்தியாவும் பான்ஸ்லேயும் பேஸீன் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளல். |
| 1804 | ஹொல்கரும் அமீர்கானும் தொந்தரவு கொடுத்தல்; டிக், பரூக்காபாத் என்ற விடங்களில் ஆங்கிலேயர் வெற்றிகள். |
| 1805 | லார்ட் காரன்வாலிஸ் இரண்டாம் முறை கவர்னர் ஜெனரலாதல்: லேக் பரதபுரத்தைப் பிடிப்பதில் அபஜயமடைதல். |
| 1805—07 | ஸர் ஜார்ஜ் பார்லோ கவர்னர்—ஜெனரலாதல். |
| 1806 | ஹொல்கர் சிறிது அடக்கப்படல்; ராஜபுத்திரர்களை ஆங்கிலேயர் கைவிடல்; வேலூர்க் கலகம். |

Commercial Printing & Publishing House
46, Muthumari Chetty Street
George Town, Madras